# "தேரோட்டம்"

## "Therrottam"



மட்டக்களப்பு - கொக்கட்டிச் சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர்
ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக
சிறப்பு மலர் - 1998

# விநாயகர் வணக்கம்



வானுலகும் மண்ணுலகும் வாழ மறை வாழ
பான்மை தரு செய்ய தமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்று விழி நால்வாய்
யானைமுக னைப்பரவி யஞ்சலி செய்கிற்போம்.

M. ARULAMPALAM
PRINCIPAL

M. ARULAMPALAM
PRINCIPAL

M. ARULAMPALAM
PRINCIPAL

M, ARULAMPALAM
PRINCIPAL

# உள்ளடக்கம்


## 1. வாழ்த்துரைகள்

- ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் – *பீடாதிபதி ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்* 1
- சுவாமி ஆத்மகானாநந்தஜி – *தலைவர், இராமகிஷ்ண மிஷன், கொழும்பு* 2
- சுவாமி ஜீவனானந்தா – *தலைவர், இராமகிஷ்ண மிஷன், மட்டக்களப்பு* 3
- ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள் – *குருமஹா சந்நிதானம்* 4
- சோ.ச. சந்திரசேகரக் குருக்கள் – *கும்பாபிஷேக பிரதம பிரதிஷ்ட குரு* 5
- சிவஸ்ரீ. வ. சோதிலிங்கம் குருக்கள் – *ஆலய பிரதம குரு* 6
- சிவஸ்ரீ. வா. கந்தசாமிக் குருக்கள் – *ஆலய பிரதம குரு* 7
- சத்திய சூபக்குருக்கள் – *தீர்கேஸி* 8
- திரு. அ. இராஜதுரை – *தேசமகா சபைத் தலைவர்* 9
- திரு. த.வ.வி. கதிராமப்போடி – *செயலாளர்* 11
- திரு. க. ஆறுமுகம் – *பொருளாளர்* 12
- திரு. அ. கி. பத்மநாதன் – *மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்* 13
- திரு.சி. தில்லைநடராஜா – *பணிப்பாளர் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்* 14
- திரு. க. தியாகராஜா – *முன்னாள் செயலாளர் கல்வி, கலாசார அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு* 15
- திரு. க. சிவநாதன் – *மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர்* 16
- திரு. சி. அகிலேஸ்வரன் – *ம. தெ. மே. பிரதேசசபை தவிசாளர்* 17
- திரு. க. மகேசன் – *மண்முனை மேற்குப் பிரதேச செயலாளர்* 18
- திரு. மு. பவளகாந்தன் – *தலைவர், இலங்கை இந்து இளைஞர் பேரவை* 19
- மலர்க்குழுவினரிடமிருந்து 20

## 2. தலவரலாறு தான்தோன்றீச்சர அந்தாதி

- தான்தோன்றி அந்தாதி – *திமிலைத் துமிலன்* 21

## 3. வரலாறும் ஆய்வுகளும்

- புராதன வரலாற்றுப் பெருமை மிக்க தான்தோன்றீஸ்வரம் – அ. கனகநாயகம் *(மலர்க் குழு தலைவர்)* 30
- **Kokkaddichcholai Sri Thanthontreechcharam** – **V. Kanapathipillai** *(மொழிப் பெயர்ப்பு)* 39
- கொக்கட்டிச்சோலைப் பதியின் தொன்மை வரலாறு – க. தங்கேஸ்வரி *(பி. ஏ. தொல்சிறப்பு)* 43
- தான்தோன்றீஸ்வரம் – அன்புமணி 50

## 4. ஆலயமும் சிறப்பும்

- ஆலயத்தின் பழைய கட்டட அமைப்பும் சிற்ப அமைப்பும் – க. தங்கேஸ்வரி *(பி. ஏ. தொல்சிறப்பு)* 53
- ஆலயத்தின் இரு தேர்கள் – செல்வி. கலைவாணி கந்தசாமி *(கிழக்கு பல்கலைக்கழகம்)* 59
- தேர்ச் சிற்பங்கள் 65

## 5. சடங்குகளும் சம்பிரதாயங்களும்

- நீண்ட காலம் சிறப்புடன் திகழ்ந்து வரும் தான்தோன்றீஸ்வரம் – ஞா. சிவசண்முகம் *J.P* 69
- மாறாது பேணப்பட்டு வரும் பாரம்பரிய சிறப்பம்சங்கள் – க.திருநாவுக்கரசு *B.A. (Hons) B.Phil* 75
- பாரம்பரிய நில உடைமை முறையும் அவற்றின் பொருளியல் வழக்காறும் – குமாரவேல் தம்பையா *(விரிவுரையாளர்)* 81
- மண்முனைப் பிள்ளையார் – க. இராசரத்தினம் *(ஸ்ரீ புஷ்பவிணி ஆலயம், ஆரையம்பதி)* 91
- பண்டாரிய வெளி ஸ்ரீநாகதம்பிரான் ஆலயம் – திரு. மூ. சிவகுமாரன் *(ஆசிரியர்)* 94

– திரு. த. சந்திரசேகரம் (ஓய்வு பெற்ற அதிபர்) 98
✧ தாந்தாமலை திருத்தலம் – க. மகேஸ்வரலிங்கம் B.A (Ceylon) 103
✧ தான்தோன்றீஸ்சரத்தின் பூசைகளும் விழாக்களும் – எஸ். தில்லைநாதன் (பிரதேச கல்விப் பணிப்பாளர்) 113
✧ வயிரவர் வழிபாடு – கலாநிதி சி. மௌனகுரு 115
✧ கிழக்கு மாகாணத்தைப் புரிந்து கொள்க........ – எஸ். எதிர்மன்ன சிங்கம் B.A. (Cey) 119
✧ அரும் கலைகளின் சிறப்பும் பண்பாட்டுப் பாரம்பரியமும் – திருமதி. இ. கருணாநிதி 128
✧ இந்து சமயத்தில் சக்தி வழிபாடு – க. சிவரெத்தினம் 134
✧ மட்டக்களப்பில் வதனமார் : – சிவஸ்ரீ. வீ.கு. கணபதீஸ்வரக் குருக்கள் 137
✧ கும்பாபிஷேக கிரியைகளும் அதன் விளக்கமும்

6. சமயமும் தற்காலமும்
– சுவாமி அஜராத்மாதனந்தா (மட்டக்களப்பு) 140
✧ இந்து சமய தத்துவம் – மா. செல்வராஜா (பணிப்பாளர் தேசிய கல்வி நிறுவனம்) 144
✧ தான்தோன்று லிங்கமும் லிங்க வழிபாடும் – சி.க. சிற்றம்பலம் (பேராசிரியர் யாழ் பல்கலைக்கழகம்) 148
✧ ஈழத்தில் இந்து சமய வரலாறும் சிவவழிபாடும் – குமாரசாமி சோமசுந்தரம் B.A (London M.A Cey) 152
✧ சிவநெறி என்னும் செந்நெறி – செல்வி. வ.விஜயலட்சுமி B.A. (Dip. in. Ed) 156
✧ கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரர் ஆலயம் – பூ. சுப்பிரமணியம் B.A. (Cey). Dip. in.Ed) 158
✧ உயிர்க்கு உயிராம் ஒளி – வ. மகேஸ்வரன் (விரிவுரையாளர்) 160
✧ வீரசைவ மரபும் யாழ்ப்பாணத்து வீர சைவரும் – வே. ச. சுப்பையா (சிவநெறிச் செல்வர் அறநெறி அன்பர்) 163
✧ விநாயகர் வழிபாடு – செல்வி. பத்மாஜனி கனகசூரியம் B.A. ( Dip. in. Ed) 166
✧ வைரவமூர்த்தமும் வழிபாடும் – சிவஸ்ரீ. முத்துலிங்கம் சச்சிதானந்தக் குருக்கள் 168
✧ இலிங்க வழிபாடும் வீரசைவமும் – திரு. மா. அமரசிங்கம் J.P 172
✧ முக்கதைகள் – சி. குருபரன் B.A. Dip. in. Ed. (NIE) Dip. in Ed. (OUSL) 174
✧ சமூகம் நோக்கிய பணியில் ஆலயங்கள் – திரு. வே. மகேசரத்தினம் B.A. (Cey) 178
✧ ஆலய அமைப்பும் வழிபாடும் – சிவஞானம் மகேஸ்வரம் B.com (Hons) 181
✧ 'சமய நம்பிக்கையும் ஆன்ம ஈடேற்றமும்'
✧ தமிழர் பண்பாட்டில் சைவசமயமும் மட்டக்களப்பில் சிவன் கோயில்களும் – காசுபதி நடராஜா B.A. (Cey) 184
✧ மண்முனைப் தென்மேற்கு பிரதேச இந்து ஆலயங்கள் – திரு. எஸ் ஜெயராஜா (ஆசிரியர்) 192
✧ அன்பே சிவம் – திரு. கோ. துரைராசசிங்கம் Bsc. (Eng) 194
✧ மண்முனைப் மேற்குப் பிரதேச இந்து ஆலயங்கள் – திரு.க. ஆறுமுகம் J.P 196

7. பதிகங்களும் பாடல்களும்
✧ திருப்படைக் களஞ்சியம் முட்டி கூறும் கல்வெட்டு வினாவிடையில் அமைந்துள்ள தர்க்கப்பாடல்கள் – ஞா. சிவசண்முகம் J.P 197
✧ கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் திருவூஞ்சல் – மகிழை மகேசன் 202
✧ ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய "காவடிச் சிந்து" – அரியரத்தினம் (அம்பிளாந்துறையூர்) 204
✧ தான்தோன்றுமீசுவரர் திருப்பதிப்பகம் – புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை 206
✧ தான்தோன்றுமீசுவரர் பதிகம் – க.உ. சின்னவப்புலவர் - செட்டிபாளையம் 208
✧ தான்தோன்றீஸ்வரர் பதிகம் – க. கணேசமூர்த்தி குருக்கள் 210
✧ திருத்தான்தோன்றீசுவரர் பதிகம் – ந. நடராஜா M.A 211
✧ கொக்கட்டிச்சோலை தான்தோன்றி ஈசுரர் திருவூஞ்சல் – பண்டிதர். செ. சிவப்பிரகாசம் 213

8.
✧ இராஜ கோபுரம் அமைத்த அமரர் பா. மயிலிப்போடி ஜே.பி
214
✧ பரிவார தெய்வங்களின் ஆலயங்களை புனரமைத்த பேரன்புக்குரிய மெய்யடியார்களின் விபரங்கள் 215
✧ ஆலய வண்ணக்குமாரின் வழிவகைப் பெயர் விபரங்கள் 216
✧ சிவஸ்ரீ சோ. க. சந்திரசேகர குரு அவர்களுக்கு பட்டம் வழங்கியமை 217
✧ நிழற்படங்கள் 218
✧ மலருக்கு நிதி உதவி செய்தோர் 227
✧ நன்றிகளும் வாழ்த்துக்களும் – க. திருநாவுக்கரசு (மலர்க்குழுச் செயலாளர்) 228

M. ARULAMPALAM
PRINCIPAL

உ

## ஸ்ரீ சந்த்ர மொலீச்சவராய நமஹ:
## ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய பரம்ப ராகத
## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
## ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்சுவாமிகள்
## ஸ்ரீ மடம் ஸம்ஸ்தானம்

எண்: 1 சாலைத்தெரு

காஞ்சிபுரம் : 631502



*நமஸ்காரம்:*

இறைவன் தானாகவே தனது லிங்கத்திருமேனி தர்சனம் அளித்து பக்த பரிபாலனம், செய்த திருத்தலங்களே சுயம்புத்தலங்கள் என அழைக்கப்படுகின்றன. அத்திருத்தலங்களுள் ஒன்றே இலங்கை மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயமாகும்.

இங்கு இப்பெருமான் ஆவிக்பவித்துள்ள ஆலயத்துக்கு ஜீரணோத்தாரணப்பணி முடித்து கும்பாபிசேகம் செய்வித்து மலரும் வெளியிடுவது அறிந்து மகிழ்கிறோம்.

கருணாசாகரனான ஸ்ரீ பரமேச்வரனது இன்னருளால் இப்புனிதப்பணி நிர்விக்கினமாக நிறைவேறவும் இம்மலர் ஆலயம் பேணுதலின் அவசியத்தை இளம் தலைமுறையினருக்கு விளக்குவதாக அமையவும் ஆசீர்வதிக்கின்றோம்.

ஸ்ரீ நாராயணஸ்ம்மிருதி

உ

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் இலங்கைக் கிளைத் தலைவர்
சுவாமி ஆத்மகனாநந்தா அவர்களின்

# ஆசியுரை



மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் அமைந்திருக்கும் ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம், கிழக்கிலங்கையின் மிகப் பழம்பெருங் கோயிலாகும். இங்கு இறைவன் சுயம்புலிங்கமாக இருந்து அருள்பாலிக்கிறான். தமிழக மன்னர்கள் இக்கோயிலுக்குத் திருப்பணிகள் செய்துள்ளனர். இக்கோயிலின் பெருமை மிகப் பழமை வாய்ந்தது.

இப்பெருமைமிக்க ஆலயத்தின் புனருத்தாரணப் பணிகள் பல ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்டன. நாட்டின் சூழ்நிலை காரணமாக திருப்பணிகள் தாமதம் பெற்றன. இருந்தும், வெகுவிரைவில் அவை பூர்த்தியடைந்து, கோயில் கும்பாபிஷேகமும் நடைபெற உள்ளது.

இக்கும்பாபிஷேக விழா இப்பகுதி மக்களது இறைபக்தியையும், சமய ஈடுபாட்டையும், விடாமுயற்சியையும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது. அவர்கள் அனைவரும் இறையருளுக்குப் பாத்திரமானவர்கள்.

கும்பாபிஷேக விழா சிறப்புற இறைவனது திருவருளைப் பிரார்த்திக்கிறோம்.

நாட்டில் சாந்தியும், சமாதானமும் பிறக்க இறைவன் அருள்புரிவாராக!

ஸ்ரீ இராம கிருஷ்ண மிஷன்
வெள்ளவத்தை,
கொழும்பு -06

சுவாமி ஆத்மகனாநந்தா

உ

ஸ்ரீராம கிருஷ்ண மிஷன் மட்டக்களப்புக் கிளைத் தலைவர்
சுவாமி ஜீவனானந்தஜி மகராஜ் அவர்களின்

# ஆசிச்செய்தி

மட்டுமாநகரின் புகழ்பெற்ற ஈச்சரங்கள் இரண்டு. ஒன்று அமிர்தகழி ஸ்ரீமாமாங்கேச்சரம்: மற்றது கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீச்சரம். முன்னையது தனது தீர்த்தத்தினால் பெருமையடைந்துள்ளது. பின்னையதில் உள்ள இறைவனார் "தேரோட்டம்" என மக்களால் பக்திபூர்வமாகக் குறிப்பிடப்படும் வருடாந்தத் தேரோட்ட வைபவத்தினால் பெருமையடைந்துள்ளது. மட்டக்களப்பில் ஸ்ரீ தான்தோன்றீச்சரத்து ஈசனார்க்கு மட்டுமே நாளிதுவரை இச்சிறப்பு நிகழ்ச்சி இப்பிரதேசத்தில் அமைந்துள்ளது. இங்கு மூலமூர்த்தியாகிய சிவன் சுயம்புலிங்கமாகத் தோன்றி அருள் பாலித்துக் கொண்டிருப்பது மற்றொரு பெருமை.



தான்தோன்றீஸ்வரரின் ஆலயம் சுமார் ஆயிரத்து ஐந்நூற்றியறுபத்தைந்து வருடங்களுக்கு முற்பட்டதென வரலாறு கூறுகிறது. இன்று காணப்படும் ஆலய அமைப்பு தமிழகத்தில் சோழ மன்னரின் ஆட்சி -புகழ்பூத்திருந்த காலகட்டத்தில், குறிப்பாக ராஜராஜ சோழன், ராஜேந்திர சோழன் ஆகியோரது ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட சைவசமயப் பேரெழுச்சியின் பிரதிபலிப்பு எனக் கொள்ள முடியுமென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இன்று மக்களால் மேற்கொண்டு பூர்த்தியடைந்துள்ள புனருத்தாரணப்பணிகள் சரித்திரப் பிரசித்திபெற்ற இவ்வாலயத்தின் அழகுக்கு அழகு ஊட்டுவனவாக அமைந்திருப்பது சைவப்பெருமக்கள் அனைவருக்கும் மனநிறைவு தருவதாகும்.

ஆலயத்தின் தினசரி நடந்தேறும் வழிபாட்டு முறைகளும், பக்தர்களின் அபிலாஷைகளைத் திருப்தி செய்யும் வகையில் மிகவும் எளிமையாக அமைந்திருப்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

நாட்டில் இன்று நிலவும் அமைதி குன்றிய சூழலில், ஸ்ரீ தான்தோன்றீச்சரப் பெருமானுக்கு நிகழவிருக்கும் மகாகும்பாபிஷேக வைபவம், இப்பிரதேச மக்கள் அனைவருக்கும் பக்திக்குச் சூட்டப்படும் ஒரு மணிமகுடம் எனலாம். தேங்கிக் கிடந்த பக்தியுணர்வு பெருகிப் பிரவாகிப்பதற்கு வாய்த்த ஒரு பொன்னான சந்தர்ப்பம் எனவும் கொள்ளலாம்.

இந்தப் புனிதமான கைங்கரியத்தில் தம்மை ஈடுபடுத்தியுள்ள அனைவரும் பாக்கியசாலிகள். பொருள் மூலம் மட்டுமன்றி, வேறு பலவகைவழிகளிலும் தங்கள் பங்களிப்பினை நல்கிய அனைவரும் போற்றுதற்குரியர். ஆலய பரிபாலன சபையினர், கும்பாபிஷேக விசேட குழுவினர், நிர்வாகிகள் அனைவரும் இப்புனிதத் திருப்பணி மூலம் கிடைக்கும் புண்ணியத்தின் பங்குதாரர்கள் ஆவர். 'தேசத்துக் கோவில்' எனக் கொள்ளப்படும் இவ்வாலயத்தின் மான்மியம் உயர்ந்து பரிணமிக்கவும், அதனூடாக, வழிபாட்டாளரின் பக்திப்பேறு குன்றிலிட்ட தீபமெனப் பிரகாசிக்கவும் வழி ஏற்படுத்தியமைக்காக ஸ்ரீ தான் தோன்றீஸ்வரப் பெருமானின் பாதக்கமலங்களைத் துதிக்கின்றேன். அவருடைய கருணைக் கடாட்சம், நம் யாவரையும், புனிதராக்கி ,வீடுபேறு நல்குவதாகுக!

*ஈசன் அடி போற்றி*
*எந்தை அடி போற்றி.*

சுவாமி ஜீவனானந்தா

ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன்
இராமகிருஷ்ணபுரம்,
மட்டக்களப்பு.

உ

# "அருளாசிச் செய்தி"

சிவனேயச் செல்வர்களே!



கிழக்கு மாகாணமாகிய மட்டக்களப்பில் கொக்கட்டிச் சோலை என்னும் பதியில் தான் தோன்றீஸ்வரராக எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் இறைவனுக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். இலங்கை என்னும் தீவை அலங்கரிக்கும் பல ஆலயங்களில் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீச்சரமும் ஒன்றாகும். மற்றைய ஆலயங்களில் இறைவனுடைய திருவுருவத்தை நாங்களே அமைத்துக் கொள்வதுவழக்கமாகும். இந்த ஆலயத்தில் இறைவன் தானகவே வந்து உதித்து மக்களுக்கு அருளுவதால் மக்கள் நிறைவான அருளைப் பெறக் கூடியதாகவுள்ளது. இப்படிப்பட்ட இறைவனுக்கு நடைபெறும் மகாகும்பாபிஷேகம் எல்லா மக்களினுடைய மனதிலும் இறை சாந்தியையும், தெய்வ நம்பிக்கையையும் கொடுக்கக் கூடியதாக அமைகின்றது. மகாகும்பாபிஷேகம் என்பது ஓர் ஆலயத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுவதாகும். இப்படிப்பட்ட அபிஷேகத்தைக் கண்ணாரக்கண்டு மனதார அனுபவிக்கும் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வர மக்கள் புண்ணியம் செய்த மக்களாகும்.

அவ்வகையில் தான் இந்துமத ஆலயங்கள் நகரங்கள் தோறும், கிராமங்கள் தோறும் இந்நாட்டில் தலைநிமிர்ந்து நிற்கின்றன. எல்லாம் வல்ல இறைவனுக்குச் செய்கின்ற ஒவ்வொரு காரியங்களும் சிவபுண்ணியத்தைத் தரக் கூடியது. இக் கும்பாபிஷேக நிகழ்ச்சியையொட்டி சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்படுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். ஆலய பரிபாலன சபையினருடைய பணி ஓங்கி வளரவும், இக்கும்பாபிஷேகத்தை நடாத்தி வைக்கும் சிவாச்சாரியப் பெருமக்களுக்கும், அவ்வூர் மக்களுக்கும் எல்லாம் வல்ல இறைவனின் இஷ்ட சித்திகளும் கிடைக்க ஆசீர் வதிக்கின்றோம்.

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு."**

குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள்

உ

வேதாகம மாமணி, சிவாகம கிரியா ரெத்தினம் தான் தோன்றீஸ்வரர் ஆலய புனராவர்த்தன
கும்பாபிஷேக பிரதம பிரதிஷ்டா குரு சோ. ச. சந்திரசேகரக் குருவின்

# ஆசிச் செய்தி



உலக முவப்ப வுறைதரு மூர்த்தி
தலமது தீர்த்தம் தரணியி லமைபு
மீழ நகரா மிருங்கதிர்த் திசையிற்
சூழு மருதம் துகழறு வாவி
நெய்தல் குறிஞ்சி நெருங்கிய சோலை
மைதிகழ் காட்டா மாவின மானினம்
செறிந்திடு கிராமம் செம்மான் பண்தி
யுறைதரு மூரா முவமை யிலதாய்
நாரணன் மருகன் நலந்தரு விநாயகர்
காரணங் கொண்ட கண்ணகி யம்ம
னாலயம் பலவு மாவுள தேசம்
மாநடு வதனில் வதிந்திடு மீசன்
மக்கள் வளமுறு மண்முனை நாடு
திக்குப் பெருமை திகழ் ராஜ யோகம்
கல்விச் சிறப்பு கலைமகள் கொடுக்கும்
ஆங்கில நாட்டார் தேங்கியே வந்து
பாங்கா யுருத்துப் பழித்துக் கூறிட
நந்தியம் பெம்மா னந்தி வேளையிற்
சந்தி விலகிச் சரேலென வெழுந்து
முந்திச் சாணமும் முறைத்த பார்வையாய்
புல்நுனி தின்று கல்லா யமர்ந்தனன்
நன்புக ழெங்கும் நாடிய தம்மா
தேசம் போகிய தீங்கறு பக்தர்கள்
பாச முடனே பதியை வணங்குவர்
சங்கம குலத்துச் சால்புறு மந்தணர்
பங்க மிலாது பரிவுடன் பூசனை
செய்து மகிழ்ந்து செழிப்புற வாழ்வார்
பரம்பரை யாகவே பணிவுடன் தொண்டு
நிரந்தர மாற்றியே நீள்பணி செய்வார்
விடமுண்ட கண்டன் குடமுழுக்குக் கண்டார்
திடமுடன், ஞானமும் திருவுமாய் வாழ்வார்
பெருஞ்சாந் திகாணும் பெருமக்கள் எல்லா
மிருவினை நீங்கி இறையுல கிருப்பார்
இறை பணி செய்து நிறைவுடன் மகிழ்வார்
அடியேன் பணியு மன்புட னேற்பான்
சரியை, கிரியை சால்புறு தொண்டுகள்
பரிவுடன் செய்தவர் பாரினிற் சிறந்தே
தெரிவுறு புண்ணியம் தெளிந்திடு வாரே
தான தருமங்கள் தண்ணளியுள்ளம்
ஏனவு முற்றி யின்புடன் வாழ்வர்
மானுடன் மழுவுங் கூன் பிறை முடி யுடைத்
தான்தோன்றி யீஸ்பரன் கொக்கட்டிக் காவிலே
யான்றுயர் நீங்கி யருள்பெற
மான்றேர் ஏறியே வலம்வரு வானே

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான் தோன்றீஸ்வரர் ஆலய பிரதமகுரு
சிவஸ்ரீ வ. சோதிலிங்கம் குருக்கள் அவர்களின்

# ஆசிச்செய்தி

மட்டுநகர் வாவிக்கப்பால் மண்முனை தென்மேற்கினிலே சிட்டு விளையாடுமந்தச் செந்நெல் விளை நிலத்தின் மத்தியிலே,



உண்டி கொடுக்கும் உழவர் பரம்பரையினர் வாழும் தம்மை அண்டினோர் தன்னை ஆதரிக்கும் அவனியின் மத்தியிலே கொக்கட்டிச்சோலைப் பதியில் கோயில் கொண்டெழுந்தருளி ஆண்டாண்டு காலமாய் அடியார்க்கு அருள்பாலித்து வரும் தான்தோன்றியப்பரின் தவப் பெருமை ஓங்க வேண்டுமென்று ஆங்கவனின் பாதங்களை அடியேன் இறைஞ்சுகின்றேன்.

மெய்யன்பர்களே!

மட்டுநகர் வாவிக்குத் தென்பால், செந்நெல் விளைநிலத்தைத் தன்வசமாகக் கொண்ட பிரதேசத்தில் - கொக்கட்டிச்சோலைக் கிராமத்தில் தாமாகத்தோன்றித்தம் அடியார்களுக்கு அருள்பாலித்துக்கொண்டிருக்கும் ஸ்ரீ தான்தோன்றீஸ்வரரின் ஆலயம் பல நூறு ஆண்டுகள் பழமையும், பெருமையும், வரலாற்று முக்கியத்துவமும் வாய்ந்தது.

இது கிழக்கிலங்கையிலே தன்னிகரில்லாத் தனிச்சிறப்பு வாய்ந்த தொன்மையான திருத்தலமாகும். இங்கு கோயில் கொண்டிருக்கும் மூர்த்தியின் கீர்த்தியும், தலத்தின் சிறப்பும், தீர்த்தத்தின் மகிமையும் மென்மேலும் இத்திருத்தலம் வளர உறுதுணையாக அமைகின்றன.

இவ்வாலயம் கடந்த 1978 ஆம் ஆண்டு இப்பிரதேசத்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தினால் (சூறாவளி) பாதிப்படைந்தமையினால் ஆலயக் கட்டிடப் புனர் அமைப்புப் பணியினைச் செய்வதில் ஆலய வண்ணக்குமாரும், நிருவாகமும், இப்பிரதேச மக்களும் மேற்கொண்டுள்ள அயரா முயற்சியின் பயனாக ஆலயக் கட்டிடப் பணி நிறைவு பெற்றுக் கும்பாபிசேகச் சிறப்புக் கைங்கரியம் தங்கு தடையின்றி இனிது இடம்பெற எல்லாம் வல்ல ஸ்ரீ தான் தோன்றீஸ்வரரின் திருவருளை உளமாரத் தியானித்து அவரது பாதக்கமலங்களைப் பணிந்து எமது மனமார்ந்த நல்லாசிகளை வழங்குகின்றோம்.

" பொங்கும் மங்களம் எங்கும் தங்குக "

சிவஸ்ரீ வ. சோதிலிங்கம் குருக்கள்
ஸ்ரீ தான் தோன்றீஸ்வரர் தேவஸ்தானம்,
கொக்கட்டிச்சோலை.

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பிரதம குரு
சிவஸ்ரீ வா. கந்தசாமிக்குருக்கள் அவர்களின்

# ஆசிச்செய்தி

மட்டுநகர் வாவிக்கு அணிந்தாய், மண்முனைப் பிரதேசத்தின் மகுடமாய் விளங்கும் தான்தோன்றீஸ்வரர் ஆலயம், பலவருட காலத் திருப்பணிக்குப்பின் இன்று குடமுழுக்குக் காணுகின்ற வரலாற்றுப் பெருமை மிக்க இத்திருத்தலம் தேசக் கோயிலாகவும், புகழ்பெற்ற சிவத்தலமாகவும் விளங்குகிறது. இத்திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் தான்தோன்றீஸ்வரப் பெருமான், இத்தேச மக்கள் அனைவரையும் தன் அருட்கரத்தினால் அரவணைத்துக்கொள்கிறார். ஆண்டாண்டு காலமாக இக்கோயிலை நாடி வரும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் எம்பெருமானின் அருளை நேரடியாக அனுபவத்தில் காண்கிறார்கள்.



ஆண்டுதோறும் நடைபெறும் தேரோட்ட உற்சவத்தில் பக்தகோடிகள் சமுத்திர அலையாகத் திரண்டு நின்று எம்பெருமானின் அருள் வெள்ளத்தில் முழுக்காடுகின்றனர். அப்பெரும் பாக்கியம் பல வருடங்களுக்குப்பின் மீண்டும் கிடைக்கவிருக்கிறது.

அதற்கு முன்னோடியாக இவ்வாலயத்தின் கும்பாபிஷேகம் 1998 ஜூன் 7ம் திகதி நடைபெறுகிறது. இத்திருவருள் கடாட்சத்திற்காக எம்பெருமானின் திருவடிகளைச் சிரமேல் கொண்டு, மக்கள் எல்லா நலங்களும் பெற வேண்டும் என நல்லாசி கூறுகின்றேன்.

**சிவஸ்ரீ வா. கந்தசாமிக் குருக்கள்**
ஸ்ரீ தான் தோன்றீஸ்வரர் தேவஸ்தானம்,
கொக்கட்டிச்சோலை.

உ

சிவமயம்

# வாழ்த்துச் செய்தி

சிவபக்தர்களே!

திருக்கோவில்லாத திருவிலூரும்,



என்பது தமிழ்வேதம். ஏழு திருவூர்கள் விதந்து பாடப்பட்டன. கோவில் இல்லாத திருவில் ஊர் அடவி காடே. மனிதன் உட்புக முடியாத நெருங்கிய பல்வகை மரங்களுஞ் செறிந்திருப்பது. சப்த புரீஸ்வரர் என்றும் திருநாமம் உண்டு. சப்த தாதுக்களால் உண்டாகும் உடம்பு எடுக்கிற ஜீவராசிகளை யெல்லாம் உள்நின்று இயக்குபவர். இன்னும் பல கருத்துக்களுள. இறைவன் நம்மைப் பக்குவப் படுத்த இரண்டு வகையான சித்த யோகம் செய்வார். ஒன்று மார்சாரச் சம்பந்தமாக வருதல். மற்றொன்று மற்கட சம்பந்த மாக விருத்தல். மார்ச்சாரம் என்றால் பூனை. பூனை, குட்டிகள் அழுமிடந்தேடிப் போய்ப் பால் கொடுக்கும் மற்கடம் (குரங்கு) என்றால் குட்டி தேடிப் போய் தாயை இறுகப் பற்றிக் கொள்ளும் பால்குடிக்கும் குட்டி பிரிந்தால் பிரிந்ததே ஆகும். நாங்களாக ஆலயத்திற்குச் சென்று திருநாமங்களைச் சொல்லி காலந்தவறாது திருந்தொண்டு செய்து வழிபடுதலேயாம். என கிராமங்கள் தேசங்கள் தோறும் ஆலயங்கள் நிர்மாணிக்கப்பட வேண்டும் என்று சொல்லுகின்றது இந்து மதம். ஈசுவரப் பெருமான் பூனை குட்டிகளிருக்குமிடம் போவது போல் தானாக இக்கொக்கட்டிச் சோலைக் கிராமத்தில் மூர்த்தி தலம் தீர்த்தம் என்ற சிறப்பம் சங்களுடன் தோன்றியிருந்து திருவருள் பாலித்துக் கொண்டிருக்கிறாரென்றால் அக்கிராமம், தேசத்து மக்கள் முன் னைய பல பிறவிகளில் செய்து கொண்ட தவத்தின் பயனேயாம். இவ்வாலயத்தில் பல அருளற்புத நிகழ்ச்சிகள் அன்னிய ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்ததாக வரலாறுகள் உண்டு. தற்போது ஜீரண நிலையில் இருந்த ஆலயம் புதுப்பிக்கப்பட்டு ராஜ கோபுரத்திருபணி பிரிவார மூர்த்திகள் ஸ்த்தாபனம் இவைகளுடன் வெகுதானிய வருடம் வைகாசித் திங்கள் 24ம் நாள். 7.6.98 மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இது ஈஸ்வரப் பெருமானின் திருவருள் துணையுடன், அக்கிராமத்து மக்களின் இடைவிடாத முயற்சியும் தர்மகர்த்தாக்களின் பெருமுயற்சியுமே என்று கூறலாம். சிவபிரான் உமைஅம்மைக்கு உபதேசம் செய்த பாடல் ஒன்று உண்டு. பெருமானே தேவரீர் கைலைமலையி எழுந்தருளியிருக்கிறீர். மக்கள் ஆலயங்களைக் கட்டி தங்களை வணங்குகிறார்கள் அவர்கட்கு வரும் இன்ப துன்பங்களை நீக்குகின்றீர்களா? என்று வினாவ அவர் உமையே,

புல்லினா லைந்து கோடி (வருடம் கைலையில் வாழ்வார்)<br>
புது மண்ணாற் பத்துக் கோடி (வருடம் கைலையில் வாழ்வார்)<br>
கல்லினாற் சமைத்த பேர்கள் (கைலை விட்டகால் சாமீப பதவி பெறுவார்கள்)

பூலோக பிறவி ஜன்மம் இல்லையே? எனப் பகர்ந்தார்.

ஆகவே இக்கும்பாபிஷேகக்கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அழைத்துப் பாராட்டுத் தெரிவித்துக் கொண்ட ஆலய அறங்காவலர் சபையார்க்கு எனது நன்றியைத் தெரிவித்து தான்தோன்றி ஈசுவரப் பெருமானின் திருவருட் கருணையினால் கிராமத்து மக்களும் தேசமும் நாடும் சாந்தியும் சமாதானமும் பெற்று மகிழ்ச்சியுடன் பல்லாண்டு காலம் வாழ வேண்டு மென்று எம் பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

சர்வே லோகா சுகினோ பவந்து

சத்திய ரூபக்குருக்கள்<br>
நீர்வேலி.

சிவமயம்

## கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் தேவஸ்தான தேச மகா சபைத் தலைவர் திரு. அ. இராஜதுரை வண்ணக்கர் அவர்களது

### வாழ்த்துச் செய்தி



ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய புனருத்தாரண பிரதிஷ்டா மாக கும்பாபிஷேக நிகழ்வையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலராகிய 'தேரோட்டத்திற்கு' வாழ்த்துச் செய்தியொன்றை வழங்குவதில் பேருவகை கொள்கின்றேன்.

அமைதியற்றதும், துன்பதுயரங்கள் அதிகரித்து விட்டதுமான இன்றைய கால கட்டத்தில் வரலாற்றுப் பெருமையும், திருவருட் சிறப்பும் மிக்க எம் பெருமானது ஆலயத்திற் குடமுழுக்குக் காணும் பேரதிஷ்டம் கிடைக்கப் பெற்றமை நமது மக்கள் அனைவருக்கும் கிடைக்கும் பெரும் பேறாகும். ஆன்மாக்களது நலனே குறியாக எம் பெருமான் இத்தலத்தில் சுயம்புலிங்கமாக எழுந்தருளி அருள் பாலிக்கும் கருணையை எண்ணும் தோறும் உள்ளம் நெகிழ்கின்றது; பக்தியுணர்வு மேலிடுகின்றது.

ஆன்மாக்களது நலனையே எப்பொழுதும் கருதும் எம்பெருமான் நன்மையையே செய்வதால் சங்கரன் ஆயினன். இத்தகைய பெருமை மிக்க இறைவனது ஆலயத்திலிடம் பெறும் நித்திய, நைமித்திய வழிபாடுகள், உத்சவங்கள் அனைத்தும் உலக நன்மைக்கும், உலக சமாதானம் என்பனவற்றுக்காகவும், உலக நாடுகளின் தலைவர்களது பரஸ்பர நல்லெண்ணத்திற்காகவும் எமது இலங்கை மணித்திரு நாட்டின் சகல மக்கள் பிரிவினர்களதும் பரஸ்பர நல்லுறவு, ஐக்கியம், சமாதானம், ஆன்ம ஈடேற்றம் என்பனவற்றுக்காவும் அமைதல் வேண்டும்; நமது மக்களிடம் உயரிய சிந்தனையும், செயற்பாடுகளும் பல்கிப் பெருக வேண்டும்; உழவுத் தொழில் மேன்மையுற்று நலன் பெருக்க வேண்டும்; நாட்டில் பல்வகைத் தொழில்களும் பெருகி வளமூட்ட வேண்டும். மக்களிடம் ஞானமும் பக்தியும், கல்வியும், கலாசாரமும் மேன்மேலும் விருத்தி பெற வேண்டும். இவற்றுக்காக நமது ஆலயக் கிரியைகளும் வழிபாடுகளும் அமைய வேண்டும்.

ஏறக்குறைய 1800 ஆண்டுகள் பழமை வாய்ந்த இவ்வாலயத்திற்கு எத்தனையோ மன்னர்கள், பெரியோர்கள், கொடை வள்ளல்கள் பொதுமக்கள் ஆகியோர் தொண்டாற்றியுள்ளனர். லிங்கம் கண்ட திடகன், எம்பெருமானுக்கு முதல் ஆலயம் அமைத்த

கலிங்க இளவரசி உலக நாச்சி, அரன் ஊழியம் வகுத்து ஆலயக் கிரியைகள் பல நூற்றாண்டு காலம் வழுவாது நடைபெறச் செய்த கலிங்க மாகோன், மட்டக்களப்பு மன்னர்கள், கண்டி மன்னர்கள், ஆகியோரையும் இராஜகோபுரம் அமைத்துக் குடமுழுக்குக் காணாமலே இறைவனடி யெய்திய அமரர் பா. மயிலிப்போடி ஆகியோரையும் நினைவு கூர்வதுடன் அவர்களது ஆத்மா எவ்வுலகிலிருப்பினும் இறை சிந்தனையுடன் இருக்கப் பிரார்த்திப்போம்; அவர்களது திருப்பணிகளை நன்றிக் கடனுடன் நினைவு கூருவோம்.

மேலும் இக்கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ்வதற்குப் பரிவாரக் கோயில்களை அமைத்த அடியார்கள், இரவு பகலாக நிகழ்ச்சிகள் சிறப்புறத் தம்கடின உழைப்பை வழங்கிய பொதுமக்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள, மாணவர்கள், அரச திணைக்களங்களைச் சேர்ந்த பல தரப்பிலான அதிகாரிகள் அனைவருக்கும் எம் பெருமானது திருவருள் கிடைப்பதாகுக.

> "கொக்கட்டிச் சோலையுறை தான் தோன்றீஸவரனார்
> திக்கெட்டும் புகழ்பரப்பி தேசம் சிறப் புறவே
> தக்க தருணத்தில் குட முழுக்குச் செய்த மலர்
> இக்கணமே எத்திசையும் மணம் பரப்ப வாழ்த்துகிறேன்.

அ. இராஜதுரை வண்ணக்கர்
(தலைவர்)
ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் தேவஸ்தானம்,
கொக்கட்டிச் சோலை.

உ

# ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் தேவஸ்தான மகாசபைச் செயலாளர் "சிவநெறிச் செம்மல்" திரு. த. வ. வி. கதிராமப்போடி வண்ணக்கர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

திருச்சிற்றம்பலம்
நம்கடம்பனைப்பெற்றவள்பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன்னடி யேனையுந் தாங்குதல்
என்கடன்பணி செய்து கிடப்பதே.

பழமை, பெருமை, பாரம்பரியங்களைத் தன்னகத்தே கொண்ட ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திற்கு 37வருடங்களுக்கு மேலாகப் பணிசெய்யும் பாக்கியத்தினைப்பெற்ற அடியேனுக்குச் சலிக்காது செயற்படும் ஆற்றலை அளித்த இறைவனின் கருணை அளப்பரியதாகும். இவ்வாலயத்தின் வண்ணக்கராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியேன் பல சோதனைகளுக்கும், வேதனைகளுக்கும் மத்தியில் உறுதியாகவும், உற்சாகமாகவும், தைரியத்துடனும் செயற்பட்டேன். சகலருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகினேன். எல்லோருடனும் சேர்ந்து உழைத்தேன். இதன் பலனை அனுபவிக்கும் பாக்கியத்தை இன்று இறைவன் எமக்கு அளித்துள்ளான். அழகிய மூலஸ்தானம், உயர்ந்த இராஜகோபுரம், மூலமூர்த்தியைச் சுற்றிவரப் பரிவார மூர்த்திகள், அழகிய மணித்தூண்கள், பார்த்தோரைப் பரவசப்படுத்தும் வண்ணம் காட்சிதரப் பல இலட்சம் மக்கள் கூட்டத்துடன் மகாகும்பாபிஷேகம் நிறைவுற்றுள்ளது.



இத்துடன் எமது கடமை முடிந்து விட்டதென்று இறுமாப்பில் களிப்படையாது மேலும் நாம் செய்ய வேண்டிய கடமைகள் பல உண்டு என்பதை, சிந்தித்துச் செயற்பட வேண்டும். எம்பெருமானின் இரு தேர்களும் புதுப் பொலிவுடன் தேரோட்டம் காண வேண்டும். ஆலயத்தைச் சுற்றி அன்னதான மடங்களும் தாக சாந்தி நிலையங்களும் உருவாக்கப்பட வேண்டும். அனாதையாகும் எமது சைவக் குழந்தைகளைப் பேணிப் பாதுகாக்க சிறுவர் பராமரிப்பு நிலையங்களும், அறநெறிப் பாடசாலைகளும் இவ்வாலத்தினால் நடாத்தப் படவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக எம்மக்களது பெருமைகள் திக்கெட்டும் பரவ வழி செய்ய வேண்டும். அதுகண்டு உலகிலுள்ளோர் வியக்க வேண்டும்.

ஆலய புனருத்தாரணப்பணிகள் சிறப்பாக நிறைவுறத் தம்பங்களிப்பை நல்கிய குடி மக்கள், நிருவாகிகள், நுண்கலைஞர்கள், பணியாட்கள், பரிவார தெய்வங்களுக்கான ஆலயங்களையும், இராஜகோபுரம், மணித்தூண்கள் போன்றவற்றையும் அமைத்துத்தந்த தனவந்தகர்களுக்கும், மகா கும்பாபிஷேகம் சிறப்புற குழுக்களாகப் பிரிந்து பணிகளைச் சிறப்பாக நிறைவேற்றிய சகல குழு உறுப்பினர்களுக்கும் கும்பாபிஷேகத்தை மிகச் சிறப்பாக நடாத்திய பிரதம குருவுக்கும் ஏனைய குருமார்களுக்கும், சகல ஸ்தாபனங்கள், நிறுவனங்கள், விசேடமாகக் கும்பாபிஷேக சிறப்புமலரை இவ்வாலயத்தின் பாரம்பரிய பண்புகளையும், இப்பிரதேச மக்களின் பெருமையினையும் உலகிற்கு உணர்த்தும் ஆவணமாக்கி எமக்களித்த மலர்க்குழுவினர் ஆகியோருக்கும் நன்றியினையும் பாராட்டையும் இவ்வாலய நிருவாக சபை, தேசமகாசபை சார்பில் தெரிவிக்கின்றேன்.

சகல மக்களும் துன்ப, துயரங்கள் நீங்கி, சாந்தி சமாதானத்துடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ தான்தோன்றீஸ்வரனை இறைஞ்சுகின்றேன்.

*ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி!*

த. வ, வி. கதிராமப்போடி
வண்ணக்கர் (செயலாளர்)
ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் தேவஸ்தானம்
கொக்கட்டிச் சோலை.

உ

## கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் தேவஸ்தான மகாசபைப் பொருளாளர் திரு. க. ஆறுமுகம் (வண்ணக்கர்) அவர்களிடமிருந்து

இனிமையான மொழியையும், பழமையான பண்பாட்டு விழுமியங்களையும் தனக்கேயுரிய எமது தமிழ் இனம் பலவழிகளிலும் தளர்ந்து நலிந்து கலங்கித் தத்தளிக்கின்றது. அதிலும் கொக்கட்டிச்சோலைப் பிரதேச மக்கள் அனுபவிக்கும் துயரங்கள் கணக்கில் அடங்காதவை. இருந்தும் இம்மக்களின் இறைபணிக்கும் விடாமுயற்சிக்கும் இவ்வாலயத் திருப்பணி ஓர் எடுத்துக்காட்டாகும். பழமையும், தமிழரின் கலைப் பொக்கிசமுமான இவ்வாலயத்தின் புனருத்தாரணத் திருப்பணி பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவில் நிறைவுற்றுள்ளது. வானளாவ உயர்ந்த இராஜ கோபுரமும் சுற்றிவரக் காட்சி தரும் பரிவார தெய்வங்களுக்கான கோயில்களும் தான் தோன்றீஸ்வரர் ஆலயத்திற்கு மெருகூட்ட, இச்சுயம்புலிங்கத்தின் குடமுழுக்கு வைபவம் 1998.06.07 ஞாயிற்றுக்கிழமை மிகக் கோலாகலமாக நடைபெற்றது.



இப்பணி பல ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்டு இறையருளால் எமது நிருவாகக் காலத்தில் குட முழுக்குக் காண்பதனை நினைக்கும் போது, இறைவன் தனக்குப் பணி செய்ய எமக்களித்த வாய்ப்பினை நாம் பெரும் பேறாகவே கருதுகின்றோம். இவ்விறைபணிக்குப் பொருளுதவி மட்டுமின்றி மனத்தினாலும் வாக்கினாலும் தமது ஆதரவுகளை வழங்கிய மதப்பற்றுள்ள சகல உள்ளங்களுக்கும் தான்தோன்றீஸ்வரர் அருள்பாலிக்க வேண்டுகின்றோம்.

பாண்டியர் கால சிற்பக்கலையம்சத்தையுடைய அழகிய இரண்டு சித்திரத் தேர்களும் உற்சவத்தின் போது வருடா வருடம் இறைவனைத் தாங்கிக் கொண்டு உலா வந்து கொண்டிருந்த தேரோட்டம் பார்த்தோரைப் பரவசப்படுத்தும் காட்சி. இவ்விரு தேர்களும் தற்போது இயங்க முடியாமல் கோயிலின் முன்னால் நிறுத்தப்பட்டிருக்கின்றன.

ஆலயத்தின் பெரும் கலைப் பொக்கிசமான இத்தேர்களின் திருத்த வேலைகளுக்குப் பல இலட்சம் ரூபா தேவைப்படுகின்றது. இப்பணி முடிந்து மீண்டும் இவ்வாலய வீதியில் தேரோட்டம் காண வேண்டியது மதப் பற்றுள்ள ஒவ்வொரு தமிழ் உள்ளங்களினதும் கடமையாகும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் கூறிவைக்க விரும்புகிறோம்.

சிறப்பாக நடைபெறும் இப்பெருமானின் பெருஞ்சாந்தி விழா இப்பகுதி மக்கள் அனுபவிக்கும் பெருந்துயரங்களிலிருந்து விடுபட்டு சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ வழிவகுக்கும் என்பதை நாங்கள் திடமாக நம்புகின்றோம். அவ்வாறே இத்தான் தோன்றீஸ்வரரின் பேரருளால் இலங்கை வாழ் சகல இன மக்களுக்கும் சாந்தியும், சமாதானமும், சுபீட்சமும் கிடைக்க எம்பெருமானை இறைஞ்சி நிற்கின்றோம்.

**க. ஆறுமுகம் J.P**
வண்ணக்கர்
*(பொருளாளர்)*
*ஸ்ரீ தான் தோன்றீஸ்வரர் தேவஸ்தானம்.*

உ

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்

திரு. அ. கி. பத்மநாதன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

சிவபூமி எனத் திருமூலரால் வர்ணிக்கப்பட்ட இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தில் பல சிவன் கோயில்கள் உள்ளன. இவற்றுள் திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயமும், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயமும் தனித்துவமானவை.

இவை இரண்டும் தேசக் கோயில்கள் மட்டுமல்ல. நீண்ட வரலாற்றுத் தொன்மையும் கொண்டவை. கிழக்கிலங்கையின் புகழை நிலை நிறுத்திய வரலாற்று இரட்டையர்களான மாகோன், குளக்கோட்டன் ஆகியோர் இவ்விரு கோயில்களுடனும் சம்பந்தப்படுகின்றனர்.

திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்குத் திருப்பணி செய்து புகழ்பெற்றவன் குளக்கோட்டன். அவ்வாறே தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்குத் திருப்பணி செய்தவன் மாகோன். மாகோன் வகுத்த வன்னிமையே இன்றும் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் பின்பற்றப்படுகிறது. இதன் முழு விபரமும் "மட்டக்களப்பு மான்மியம்" என்னும் வரலாற்று ஆவணத்தில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

போர்த்துக்கேயர் கோட்டை அமைத்து மட்டக்களப்பு என்னும் நகரை உருவாக்குமுன், மண்முனைப் பிரதேசமே பெரிய நகராக விளங்கிய தென்பதும், புகழ்பெற்ற முற்குகர் பரம்பரையைச் சேர்ந்தவர்களின் ஆட்சியே இங்கு நிலவியதென்பதும் வரலாற்றுத் தகவல்கள், எனினும் இப்பிரதேசத்தின் வரலாற்றுத் தொன்மைக்கான சான்றுகள் நிறைய உள்ளன. போர்த்துக்கேய, ஒல்லாந்த ஆட்சியில் மண்முனைப்பற்று முக்கிய பிரதேசமாகக் கருதப்பட்டு, அதற்குத் தலைவனாக "போடி" நியமிக்கப்பட்டது நாம் அறிந்த அண்மைக்கால வரலாறு.

இவ்வாறு புகழ்பெற்ற கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த உற்சவமான "தேரோட்டம்" காண கிழக்கிலங்கையின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக் கணக்கான பக்தர்கள் இங்குவந்து கூடுவர். தான் தோன்றீஸ்வரர் மீது மக்கள் கொண்ட பக்தியும், விசுவாசமும் இன்றும் அவர்களைப் பாதுகாப்புடன் வழிநடாத்தி வருகின்றன.

இத்தகைய பெருமைமிகு ஆலயம் இறையருளால் புனரமைக்கப்பட்டு முன்னரிலும் பார்க்கப் பெரிய அளவில் நிர்மாணிக்கப்பட்டு கம்பீரமான ராஜகோபுரத்துடன் இன்று காட்சியளிக்கிறது.

ஜுன் மாதம் 7ம் தேதி நடைபெற்ற இவ்வாலயத்தின் குடமுழுக்கு வைபவம், இப்பிரதேச இந்துமக்கள் அனைவருக்கும் புதிய உற்சாகத்தையும், உத்வேகத்தையும் அளித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் இன, மதப்பேதங்களுக்கு அப்பாற்பட்டு சமயசமரச மனோபாவத்துடன் வாழ்வது ஏனைய பிரதேசங்களுக்கு ஒரு முன்னுதாரணமாக அமைகிறது. அந்த வகையில், இந்தக் குடமுழுக்கு வைபவம் சகல இன மக்களிடையேயும், சௌஜன்யத்தையும், புரிந்துணர்வையும், சுமுகமான நல்லுறவையும் வளர்க்க வேண்டும் என்பது எனது ஆழ்ந்த நம்பிக்கையாகும்.

அ. கி. பத்மநாதன்

*அரசாங்க அதிபர்,*

*மாவட்டச் செயலாளர், மட்டக்களப்பு மாவட்டம்.*

# வாழ்த்துச் செய்தி

வரலாற்றுச் சிறப்பும் தொன்மையும் மிக்க மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேகம் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்வது பற்றியும், அதனையொட்டிக் கும்பாபிஷேக சிறப்பு மலர் ஒன்று வெளிவருவது குறித்தும் அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். வடமாகாணத்தில் ஒட்டிசுட்டான் பகுதியில் கோவில் கொண்டு எழுந்தருளியுள்ள ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம் அங்குள்ள மக்களுக்கு அருள்பாலிப்பது போல் கிழக்கு மாகாணத்தில் கொக்கட்டிச்சோலையில் இன்னுமொரு ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் கோவில் கொண்டு அப்பகுதி மக்களுக்கு அருள்பாலித்து வருவதை அனைவரும் அறிவர். பழைய நூல்கள் பலவற்றிலும் பலவாறு சிறப்பித்துக் கூறப்படும் ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம் கிழக்கிலங்கையில் இடர்கள் ஏற்படும் பொழுது மக்களின் இன்னல்களை அகற்றும் அற்புத ஆலயமாக விளங்குவதை சூறாவளியை அடுத்துள்ள நாட்களில் அப்பகுதிக்குச் சென்ற பொழுது அறியக்கூடியதாக இருந்தது. அதேபோல் வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் மக்கள் மனக்கவலையை மறந்து மகிழ்ச்சியுடன் குழுமும் இடமாக ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம் திகழ்கின்றது என்று சொன்னால் அதனை எல்லோரும் ஏற்றுக் கொள்வர். புதிய பொலிவுபெற்றுக் கும்பாபிஷேகம் காணும் ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம் மென்மேலும் வளர்ந்து எல்லா மக்களுக்கும் அருள்புரிய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சி. தில்லைநடராஜா
*பணிப்பாளர்*
*இந்துசமய கலாசார அலுவல்கள்*
*திணைக்களம்.*

உ

சிவமயம்

# திரு.க. தியாகராஜா, முன்னாள் செயலாளர் கல்வி, கலாசார அலுவல்கள் விளையாட்டுதுறை அமைச்சு, வடக்குக் கிழக்கு மாகாணம் அவர்களது

## வாழ்த்துச் செய்தி

கொக்கட்டிச் சோலைத் தான்தோன்றீஸ்வர ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நிமித்தம் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு, இவ்வாழ்த்துச் செய்தியினை வழங்குவதை பெரும் பேறாக நினைத்து மகிழ்ச்சி அடைகின்றேன். கிழக்கு இலங்கையின் மிகப்பிரசித்தி பெற்றதும் வரலாற்றுச் சிறப்புமிக்கதுமான இவ்வாலயம் அண்மையில் பெரும் செலவில் புனரமைக்கப் பெற்றதுடன் மகா கும்பாபிஷேகமும் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்று முடிந்துள்ளது.

வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட புராண இதிகாச காலங்களிலேயே இந்து சமயம் ஈழநாட்டில் சிறப்புற்று விளங்கியதற்கு பல ஆதாரங்களையறியக் கூடியதாயுள்ளது. திருமூல நாயனார் இலங்கையைச் சிவ பூமி என்று குறிப்பிடுகின்றார். சிவ வழிபாடும் சிவனுக்கான கோயில்களும் இலங்கையின் சகல பாகங்களிலும் சிறப்புற்று விளங்கியுள்ளன. கிழக்கிலங்கையிலும் பாடல் பெற்ற சிவாலயங்கள் பல அமைந்திருக்கின்றன. திருக்கோணேஸ்வரம், மாமாங்கேஸ்வரம், திருக்கோவில் ஆகியவை சிறந்த உதாரணங்களாகும். இவற்றுள் தனித்துவம் மிக்க சிவன் கோவில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயமாகும். காத்திரமான வரலாற்றுத் தொடர்புகளை இவ்வாலயம் உடைத்தாயினும் இது சம்பந்தப்பட்ட வரலாற்று ஆக்கம் இதுவரை தெளிவாக ஆராயப்பட வில்லையென்ற ஆதங்கம் உள்ளத்தை நெருடவே செய்கின்றது. கலிங்கத்திலிருந்து இங்கு வந்து மண்முனை இராச்சியத்தை ஸ்தாபித்து ஆட்சி செய்த அரசி உலக நாச்சியினால் இவ்வாலயம் அமைக்கப்பட்ட தென்பதும் பின்னர் மாகோன் ஆட்சிக் காலத்தின் போது இவ்வாலயத்திற்குப் பல பணிகள் அவனால் செய்யப்பட்டதென்றும், வன்னிமை முறை, முற்குகர் வன்னிமை முறை போன்றவை அவனால் ஏற்படுத்தப் பட்டதென்றும் நாம் அறியக் கூடியதாயிருக்கின்றது.

இவ்வாலயத்துடன் சம்பந்தப்பட்ட தனித்தன்மைகள் ஒவ்வொன்று பற்றியும் பெறக்கூடிய வரலாற்றுச் சிறப்புக்களையும் குறிப்பிட்டாக வேண்டும். ஆலயமூர்த்தியாக அமைந்துள்ள சிவலிங்கம், சிறந்த சித்திர வேலைப்பாடுகளுடன் அமைந்துள்ள இரண்டு தேர்கள், ஆலய மண்டபத்தினுள் காணப்படும் நந்தி, அதன் சுற்றுமதில்கள் ஆகியவை பற்றிய வரலாற்றுச் செய்திகள் வியப்பூட்டுவனவாகும். கொக்கட்டி மரம் வெட்டுண்ட போது இரத்தம் வடிந்தமை, கல்லாலான நந்தி போர்த்துக்கீசர் இடிக்க வந்தபோது எழுந்து புல் உண்டமை மெய்சிலிக்க வைக்கும் செய்திகளாகும்.

பல வருடங்களின் முன்னர் இத்திருத்தலத்தின் புனரமைப்பு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இடையில் இப்பிரதேசத்தில் ஏற்பட்ட நெருக்கடி நிலை நிதிப்பற்றாக்குறை போன்ற காரணங்களினால் இத்திருப்பணி தாமதமடைந்த போதிலும் அண்மைக்காலத்தில் ஆலயத் திருப்பணிச் சபையினர் மேற்கொண்ட பெரு முயற்சி காரணமாக இவ்வாலயம் இன்று புதுப்பொலிவுடன் குடமுழுக்குக் கண்டுள்ளது. ஆனித்திங்கள் 7ம் நாளன்று மகாகும்பாபிஷேகமும், அதனைத் தொடர்ந்து மண்டலாபிஷேக திருவிழாக்களும் நடைபெற்று ஆடித்திங்கள் 21ம் நாள் சங்காபிஷேகமும் நடந்து முடிந்துள்ளது. இரண்டு திருத்தேர்களையும் செப்பனிடும் வேலை நடைபெறவுள்ளது. இப்பெரும் கருமங்களின் சார்பாக காத்திரமான முறையில் சிறப்பு மலரொன்றும் வெளிவருகின்றது. இந்து மதம், சிவவழிபாடு, தான்தோன்றீஸ்வரர் ஆலயம் பற்றிய செய்திகளை இம் மலர் தாங்கிவருவது பாராட்டுதற்குரியது. நடந்து முடிந்த திருப்பணிகளைப் பாராட்டுவதுடன் தொடர்ந்தும் நிறைவுள்ள திருப்பணிகள் அனைத்தும் எம்பெருமான் அருளால் சிறப்புற நிறைவுற வாழ்த்துகின்றேன்.

"தியாகம்",
கல்லடி,
மட்டக்களப்பு,

அன்புடன்
க. தியாகராஜா

மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் திரு.க. சிவநாதன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேகம் என்ற செய்தி மட்டக்களப்பு மாவட்ட மக்கள் அனைவரையும் தெய்வீக இன்பத்துள் ஆழ்த்துகின்ற தேனினும் இனிய செய்தியாகும். இக் கும்பாபிஷேகத்துக்குத் தேதி தீர்மானித்ததை அடுத்து இவ்வாலய நிருவாகிகள் என்னைச் சந்தித்துச் செய்தியைக் கூறிய போது மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன்.

இலங்கையிலுள்ள வரலாற்றுப் பெருமையும், திருவருள் சிறப்பும் மிக்க பிரசித்தி வாய்ந்த சிவாலயங்களுள் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரமும் ஒன்று. இவ்வாலயத்தை அழிக்க வந்த அன்னியனை விரட்டி அடித்தது போல இங்கு பல தெய்வீக அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன. உலகநாச்சி, மாகோன், குளக்கோட்டன், கண்டி மன்னர்கள் என பல ஆட்சியாளர்கள் இவ்வாலயத்தோடு தொடர்பு கொண்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. இத் தொடர்புகள் பற்றியும் இவ்வாலயத்தோடு தொடர்புடைய இனக் குழுக்கள், இன்று பேணப்படும் வழிபாட்டு முறை, தேர் முதலிய நுண்கலைப் பொருட்கள் பற்றியும் விரிவான ஆய்வு செய்யப்படவேண்டியது மிக அவசிய கடமையாகும். இவ்வாய்வுகள் பண்டைய மட்டக்களப்பு மாநிலத்தின் வரலாற்றை அறிந்து கொள்ளுவதற்குப் பெருதவியாக அமையுமென்பது எனது நம்பிக்கை.

பழமை வாய்ந்த இவ்வாலயத்தின் கட்டிடங்கள் கடந்த 1978ஆம் ஆண்டு வீசிய சூறாவளியினாலும், தொடர்ந்து நடைபெற்று வந்த வன்செயல்களாலும் பாதிக்கப்பட்டு முற்றிலும் புதுக்க அமைக்க வேண்டிய நிலையை எய்தியது. இப் புனரமைப்புத் திருப்பணி கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாகப் பாரிய செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவ்வாலய நிருவாகிகள் இத் திருப்பணியை நிறைவேற்றுவதில் எதிர் நோக்கிய பிரச்சினைகளை நான் அறிவேன். போதிய நிதியைப் பெறுவதிலும் தகுதி வாய்ந்த கட்டிடக் கலைஞர்களை வரவழைப்பதிலும் தேவையான கட்டிடப் பொருட்களைக் கொண்டு சேர்ப்பதிலும் இவர்கள் முயற்சி காலத்தை வென்ற ஓர் எதிர் நீச்சலாகவே இருந்தது.

இப் புனரமைப்பில் சுற்றுப் பிரகார கோயில்களையும், மணித்தூண்களையும், இராஜ கோபுரத்தினையும் அமைத்துக் கொடுத்த அன்பர்கள் பெரிதும் பாராட்டப்பட வேண்டியவர்கள். பல இலட்சம் ரூபா செலவில் உயர்ந்த பெரிய இராஜ கோபுரத்தை அமைத்துக் கொடுத்த அமரர் பாலிப் போடி மயிலிப்போடி அவர்கள் என்றும் இப்பிரதேச மக்களால் நினைவு கூரத்தக்கவர்.

இவ் ஆலய மகா கும்பாபிஷேகம் இப்பிரதேச மக்களுக்குப் பூரண திருப்தியை அளிப்பதாக உள்ளது. இங்குள்ள ஒவ்வொரு குடும்பத்தினரும் இத்திருப்பணிக்காக இயன்ற பங்களிப்பு செய்து வருகின்றனர். இவர்கள் மனநிறைவு காணக்கூடிய வகையில் மகா கும்பாபிஷேகம் நிறைவேற எல்லாம் வல்ல தான்தோன்றீஸ்வரர் அருள்பாலிப்பாராக. மேலும் இக் கும்பாபிஷேகம் தொடர்பாக வெளியிடப்படவுள்ள சிறப்புமலர் பூரண நிறைவுள்ளதாகவும் நித்திய ஜீவனுடையதாகவும் அமையப் பேரன்போடு வாழ்த்துகின்றேன்.

க. சிவநாதன்
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
பட்டிப்பளை.

## மண்முனை தென்மேற்குப் பிரதேச சபை தவிசாளர்
## திரு. சி. அகிலேஸ்வரன் அவர்களின்

# வாழ்த்துரை

மட்டுமாநகருக்குத் தெற்கே வரலாற்றுப் புகழ் பெற்ற கொக்கட்டிச் சோலை ஸ்ரீ தான் தோன்றீஸ்வரர் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடந்தேறியதை யாம் அனைவரும் அறிவோம். இச்சிறப்பு நிகழ்விற்கு இப்பிரதேச மக்களது ஒற்றுமையும், நற்பண்பும் இறை தொண்டில் உள்ள ஆர்வமும் முக்கிய காரணமாக அமைந்துள்ளன. என்பதை இச்சந்தர்ப்பத்தில் கூறிவைக்க விரும்புகின்றேன். எதிர்வரும் காலங்களில் இப்பிரதேச ஆலயங்களின் வளர்ச்சிக்கும் இறைபணிக்கும் எமது இளஞ்சந்ததியினரை ஊக்குவிப்பது அவசியமானதொன்று. இக்கும்பாபிஷேக நிகழ்வை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலர் சிறந்ததோர் ஆவணமாக அமைய இறைவனை வேண்டுகின்றோம்.

சி. அகிலேஸ்வரன்
தவிசாளர்,
ம.தெ.மே. பிரதேசசபை,
கொக்கட்டிச் சோலை.

மண்முனை மேற்குப் பிரதேச செயலாளர் திரு. க. மகேசன்
அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பு மாவட்டத்தின் பாரம்பரிய சமூக, கலை, கலாசார ஆன்மீகத் துறைகளைப் பறைசாற்றி நிற்கும் தொன்மைமிக்க வரலாற்றுச் சிறப்பம்சங்களில் கொக்கட்டிச் சோலை தான் தோன்றீஸ்வரர் ஆலயமும் குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

கி.பி. 3ஆம் நூற்றாண்டில், வளங்கொழிக்கும் மண்முனைப் பிரதேசத்தில் உலக நாச்சி எனும் பெருமை மிகு பெண்மணியினால் தோற்றம் பெற்ற இவ்வாலயம் தேசத்துக் கோயில் என்ற பெருமையை இன்னும் தங்கவைத்துள்ள தன்மையும், இலங்கையில் வேறெங்குமில்லாத வகையில், குலவிருது முறைகள், குடிப்பாரம்பரிய முறைகள் என்பவை இணைந்த வகையில் இவ்வாலயத்தின் உற்சவ விழாக்கள் கொண்டாடப்படுவதும், இவ்வாலயத்தின் பாரம்பரிய சிறப்பம்சங்களாகும்.

கடந்த கால வரலாற்றில்பல மன்னர்களது திருப்பணியைக் கண்ட இவ்வாலயம் வரலாற்றுச் சாதனை படைத்துத் தற்போது புனர் நிருமாணம் செய்யப்பட்டுப் பொலிவுற அழகுபடுத்தப்பட்டுக் குடமுழுக்குக் காணும் வாய்ப்பை எமக்கு அளித்துள்ளதானது தான் தோன்றீஸ்வரனது அருளேயாகும்.

இச்சிறப்பு மலருக்கு, தான்தோன்றீஸ்வரனது கிருபையினால் மண்முனை மேற்குப் பிரதேச மக்கள் சார்பில் ஆசிச் செய்தியினை வழங்கி, இக் குடமுழுக்கினை வாழ்த்துவதில் மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றேன்.

க. மகேசன் (இ. நி. சே)
*பிரதேச செயலாளர், பிரதேச செயலகம்*
*மண்முனை மேற்கு,*
*வவுணதீவு.*

உ

# வாழ்த்துரை

நிலவளம், நீர்வளம் கொழிக்கும் மீன்பாடும் தேன்நாடாம் மட்டு மாநகரின் கண்ணே சைவ மரபைப் பேணிப் பாதுகாத்து வருகின்ற கொக்கட்டிச்சோலைப் பகுதியிலே எழுந்தருளியிருந்து மனிதகுலம் ஈடேற அருள் பாலிக்கும் தான்தோன்றீஸ்வரப் பெருமானுக்குத் திருக்குட முழுக்கு வைபவம் நிகழத் திருவருள் பாலித்திருப்பதையிட்டு நாம் பெருமிதமும், பெருமகிழ்ச்சியும் அடைகின்றோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பழம்பெரும் மரபைப் பேணிப் பாதுகாத்துவரும் அரும்பெரும் தாபனங்களில் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீயீசுவரர் ஆலயமும் ஒன்றாகும். மட்டக்களப்புத் தமிழகத்தின் புகழ் பாடும் திருத்தலங்களில் பழமை மிக்கதொன்றான இவ்வாலயமும், இப்பகுதி மக்களும் தழைத்தோங்க எம்பெருமான் தான்தோன்றீஸ்வரரைப் பிரார்த்திக்கின்றேன்.

இன்றுள்ள சூழ்நிலையிலும், பல நெருக்கடிகள் மத்தியிலும் ஆலயத் திருப்பணி இனிதே நிறைவுற முன்னின்று அயராது உழைத்த பரிபாலன சபையினர்க்கு இறைவன் நல்லருள் புரிவானாக என வாழ்த்தி, இவ்வாலயத்தின் பணிகள் மேலும் சிறப்புற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*''வாழ்க அறநெறி*
*வளர்க இந்துமதம்".*

அடியார்க்கு அடியன்
மு. பவளகாந்தன்
தலைவர் : இலங்கை இந்து இளைஞர் பேரவை
தலைவர் : மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம்

## மலர்க் குழுவினரிடமிருந்து....

மண்முனைப் பிரதேச மக்களைத் தனது மணியோசையால் துயிலெழுப்புவதுமின்றி சகல இந்துக்களினதும் பக்திப் பசியினைப் போக்கும் திருத்தலமாக விளங்கும் ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம் இப்பிரதேசமக்கள் வாரிவழங்கிய நிதியினைக் கொண்டு உயர்ந்த இராஜகோபுரத்தையும் அழகிய பரிவார தெய்வங்களுக்கான கோயில்களையும் கொண்ட ஒரு பெரும் ஆலயமாகத் திகழ்வதுடன் பல லட்சம் மக்கள் கூட்டத்துடன் மகாகும்பாபிஷேக விழாவினையும் பூர்த்தி செய்துள்ளது.

இப்பெருவிழாவினைக் காலந்தோறும் நினைவுபடுத்த வேண்டும் என்ற நோக்கமும் இவ்வாலயத்தினதும், இப்பிரதேசத்தினதும் பாரம்பரிய சிறப்பம்சங்களையும், மறைந்து கிடக்கின்ற பண்பாடு, கலை கலாசாரங்களையும் வெளிக் கொணர வேண்டும் என்ற நோக்கத்தினையும் கருத்திற் கொண்டு இவ்வாலய தேசமகாசபை ஒரு சிறப்பு மலரை வெளியிட வேண்டுமென்று கருதி, இந்நல்லெண்ணத்தை நிறைவேற்ற ஒரு மலர்க்குழுவையும் தெரிவு செய்தது. இறைவனது அருளினாலும், நல்லெண்ணங் கொண்ட பல அன்பர்களின் அனுசரணையாலும் இப்புனித பணி இனிது நிறைவுற்று, இவ்வழகிய மலர் உங்கள் ஒவ்வொருவரது கரங்களையும் வந்தடைந்துள்ளது. இப்பணியைச் செய்வதில் பல கஷ்டங்கள் ஏற்பட்ட போதிலும் தான்தோன்றீஸ்வரனது பெருங்கருணையினால் சகல காரியங்களும் தடையின்றிச் சிறப்பாக நிறைவு பெற்றுள்ளன. இம்மலரிலே வெளிவரும் ஆக்கங்கள் இவ்வாலயத்தினதும், இப்பிரதேசத்தினதும் வரலாறு, நிர்வாக அமைப்பு இப்பிரதேசத்தில் பின்பற்றப்படும் வழிபாட்டு முறைகள், சமூக அமைப்பு, கலைகள், போன்றவற்றை உள்ளடக்கிய ஓர் ஆவணமாக இருக்குமென்பது எமதுதிடமான நம்பிக்கை. இத் தகவல்களைக் குறிப்பிடும் பல கட்டுரைகள் எமது பிரதேசத்தைச் சேர்ந்த சாதாரண படிப்பறிவுள்ள எழுத்தாளர்களால் எழுதப்பட்ட காரணத்தினால் இலக்கண இலக்கிய அமைதிகள் வழுவுடையதாக இருக்கலாம். இருப்பினும் இவற்றில் கூறப்படும் விடயங்கள் புதுமையானதும், எதிர்கால ஆராய்ச்சிக்கு உதவக் கூடியதுமாக இருக்கும் என நாம் நம்புகின்றோம். எனவே இம் மலரைப் படிக்கும் அறிஞர்களும் நண்பர்களும் இவ்வாறான கட்டுரைகளில் ஏற்பட்டுள்ள இலக்கண, இலக்கிய வழுக்களைப் பெருமனதோடு மன்னித்து இப் பிரதேசத்தில் மறைந்து கிடக்கின்ற சுவையான கலை, கலாசார பாரம்பரியங்களை அறிந்து கொள்ள முன் வருவீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

மலர்க் குழு
ஸ்ரீ தான் தோன்றீஸ்வரர்
ஆலய மகா கும்பாபிஷேக சிறப்பு மலர்.

சிவமயம்

# தான்தோன்றீச்சர அந்தாதி

- " திமிலைத்துமிலன்" -

**கட்டளை** *(குறள் வெண்பா)*

அம்மையுமாய் அப்பனுமாய் அன்பர்க்கருள் புரியும்
பெம்மான் பெரும்புகழே பேசு

**காப்பு** *(நேரிசை வெண்பா)*

பேச்சுக் கரியான் பெறற்கரியான் தான்தோன்றும்
ஈச்சரத்தான் காதை எடுத்தியம்ப – பூச்சியத்துள்
வீற்றிருந்து ஆட்சிசெய்து விக்கினங்கள் தீர்த்தருளும்
காற்பதுமக் காரணத்தான் காப்பு

*(இன்னிசை வெண்பா)*

காப்புவளை யாபதியும் காதொளிரும் குண்டலமும்
கோப்புடைசிந் தாமணியும் கொஞ்சுதுடிப் பொற்பொளிரும்
காதமணி மேகலையும் காற்சிலம்பும் கொண்டதமிழ்
மாதரசே நல்காய் வரம்

*(சிந்தியல் வெண்பா)*

வரம்பிகந்த சூரன் வழியடைத்து விண்ணவரின்
அரந்தைக் காத்திட்ட அறுமுகனே – நறும்பாக்
கரந்தருள நீயே துணை

*(பஃறொடை வெண்பா)*

துணையிழந்த சீதா துயர்துடைக்க ஈழம்
அணைகடந்து சென்ற அச்சுதனே, நச்சரவ
மீமிசைநின் றாடி வியன்குழலூ மூதியன்று
பூமியினைக் காத்தருளும் புண்ணியனே வெண்ணெயொடு
கன்னியரும் கொண்டு கமகவிளை யாட்டயரும்
தன்னிகரே யில்லாத் தயாபரனே, பொற்பார்
துகில்வளரச் செய்து துரோபதியின் மானம்
பகல்முழுதுங் காத்த பனகரங்கா, வேண்டுபவர்
தீவினைகள் தீர்க்கும் திமிலைதீ வாளும்
முகில்வண்ணா என்னுள் முகிழ்ந்துவரு தீஞ்சொற்
கவிகனிய நீயே கதி.

*(வெண்டாழிசை)*

கதியார் கொழுந்தே, கவினார் கலைக்குயிலே,
பொதியார்ந்த தென்றல் புதிதலர்ந்த தண்ணிலவே,
விதிபார்த் தருள்கென து மேல்.
அம்புலிக்கே இன்பம் அளிக்கும் கலைக்குயிலே,
வம்பலர்பொற் றோகை விரிக்கும் மடமயிலே,
வெண்பதுமம் வீசென து மேல்.
அகத்தொளியை யூட்டும் அமுதே கலைக்குயிலே,
இகத்தின் இயக்கமெலாம் இன்பமெழச் செய்பவளே,
மிகக் கனிந்து நோக்கென து மேல்.

**அவையடக்கம்** *(வெண்செந்துறை)*

மேற்குலத்துக் கற்றோரே மற்றோரே கவிதை
வெறிகொண்ட பாவலரே மிகக்கவனம் கேண்மின்
சாற்றிடுநான் பற்றில்லாத் தவமுனிவ னல்லேன்
சமமான மனிதருளே தனியொருவன் அதனால்,

அதனாலே தான்தோன்றும் ஈசனது சரிதை
அதில்ஏதும் சலனங்கள், தவறுவரல் கூடும்
எதனாலே ஏனென்று கேட்டீரேல் உம்முள்
இருக்குதொரு விடையதனை ஏற்றிடுதல் வேண்டும்.

ஏற்கவில்லை யென்றால்நீர் வள்ளுவனா ? அன்றி
ஈடற்ற கம்பனா ? இளங்கோவா ? யாரும்
போற்றுகின்ற நால்வரா? வாசகனா ? எங்கள்
புலவன்நவ பாரதியா ? புகன்றிடுதல் வேண்டும்.

## நூல்

**கொக்கொட்டிச்சோலை** *(நேரிசை ஆசிரியப்பா)*

வேண்டும் வளங்கள் மிகப்பொலி வுற்று
ஈண்டிய செல்வம் எலாம்நிறை வுற்ற
மட்டக் களப்பெனும் மாபெரும் நாடு
எட்டுத் திக்கிலும் இதன்பெயர் பரவக்
கொட்டும் செந்நெலும் குடப்பால் தயிரும்
வட்டக் களரியில் வடக்கூத் தாட்டும்
கொட்டும் கும்மியும் குரவைப் பாட்டும்
கிட்டிப் புள்ளும் தட்டுக் கோடதும்
வசந்தன் ஆடலும் வழிவழி தொடர
இசைந்துவாழ் தமிழர் இல்லறம் என்னும்
நல்லறம் பூண்டு நனிமகிழ் நாடு
அல்லல்கள் இன்றி ஆண்டுதோ றனுகும்
சித்திரை மருவும் நற்புத் தாண்டில்
புத்தணி பூண்டு பூவையர் ஆடவர்
ஊஞ்சற் கவிதைகள் வாஞ்சையோ டிசைத்து
பூஞ்சரம் நுடங்கப் பொலிவுற் றாடத்
தேன்இறால் மீது மீனிறால் பாயும்
வான்உயர் கமுகில் வரால்குதித் துழக்கும்
மீன்இசை முழக்கும் வியன்தமிழ் நாடு
மட்டுமா நகரின் வழிதெற் காக
எட்டொடு இரண்டு இயன்றகல் தொலைவில்
மண்முனைத் துறையின் வளர்மேற் காக
அண்ணலின் ஆலயம் அமைந்ததோர் தொல்பதி
கொக்கொட்டிச் சோலைக் குளிர்நிழற் கொள்ளிடம்
மிக்கவெண் குருகுகள், மிழற்றும் கிள்ளைகள்
குக்கூ வென்றே குலவும் குயிலினம்

தக்கசெண் பகப்புள், தருக்கும் நங்கணம்
அனைத்தும் குலவி அகமகிழ் பொழிலில்,
எனைத்துயிர் களுக்கும் இன்னருள் பொழிய
சுயம்பு லிங்கமாய்த் தோன்றும் முழுமுதல்
வயம்முழுப் புவனமும் வாழிய
இயம்புதும் தொல்மறைக் கினியநற் பேறே.

ஈழம் - மண்முனை - முற்குகர் (நிலைமண்டில ஆசிரியப்பா)
பேறுற் றாண்ட பெருவிறற் றிராவிடன்
வீறுற றிருந்த வியநிலம் எல்லம்
எல்லம் என்பதை ஈழமாய்க் கொண்ட
வல்லவ னாக வாழ்ந்தவன் இராவணன்
இராவணன் என்பவன் இரவின் வண்ணன்
அராவணி ஈசனின் அற்புதத் தொண்டன்
தமிழிசை யாலே சிவனையே கவர்ந்த
அமிழ்த வாருதி அவனிலங் கேசன்
இலங்கா புரியில் இருந்தர சாண்ட
கலங்கா நெஞ்சன் கறைமிடற் றோனை
கோணேச் சரத்திலும் கேதீச் சரத்திலும்
முன்னீச் சரத்திலும் முறைப்படி தொழுபவன்,
வான்ஊர் தியிலே வலவனாய் ஊர்ந்திம்
மூன்றீச் சரத்திலும் முழுமுதற் கடவுளைத்
தொழுதுநீ றணிந்த தூயனாம், ஆதலால்
பழுதறு தமிழ்மறை பகர்ந்தசம் பந்தரும்,
இராவணன் மேலது நீறென இசைத்தனர்.
இராவணன் துதித்த இன்னுமோர் லிங்கம்
திருக்கோ யிலிலே திகழ்ந்திருப் பதுவாம்
திருக்கோ யிலதன் திசைநேர் கிழக்கே
இராவணன் ஆண்ட இலங்கா புரியது
ஆழ்கடற் கீழே அமிழ்ந்துள தென்பர்
ஆழ்கடற் கீழே ஆய்வுகள் நிகழ்த்தின்
உண்மை புலப்படும் உயரும் தமிழினம்
தொன்மையோர் தகவல் துலங்கிடக் கூடும்
தமிழர்தம் வேந்தன் தான்தோன் றீச்சர
அமிழ்திலே எழுந்த ஆலமுண் டோனை
பூசித் ததிலே புதுமைகள் இல்லை
ஆசித் தெழுதிய ஆரியர் கதைகளால்
தூசிப் புற்றான் தொல்சீர் இராவணன்
இராக்கதன் என்று இகழ்ந்துநிற் கின்றோம்.
இராக்கதர் இல்லை இங்குவாழ்ந் தவர்கள்
தமிழர்கள் என்று சான்றுகாட் டிடுவோம்.
இமிழ்கடல் கடந்து இன்றாள் பவர்கள்
வருமுனர் இங்கு வாழ்ந் தவர் தமிழர்
உரிமைகள் முற்ற உறைந்தவர் தமிழர்
மண்முனை முழுக்க வாழ்ந்திருந் தவர்கள்
பண்ணமை முத்தமிழ்ப் பாங்கின ராவர்.
சிந்து தீரத் திராவிடர் குலத்தை
நிந்தை செய்து நீடழித் ததுபோல்
ஈழத் தமிழரை இங்கும் அழித்தனர்.
வாழத் துணியார் மறுதிசை போகக்
காடு மண்டிக் கழனிகள் தூர்ந்தன

தேடியாங் காங்கே சிற்சிலர் வாழ்ந்தனர்
வாழ்ந்தவர் ஆங்கே மண்முனை வடபால்
ஆழ்கடல் ஓடும் அணிசால் திமிலர்கள்
திமிலர்கள் என்போர் தமிழரே யாவர்
அமிழ்தினும் இனிய அருந்தமிழ் மொழியினர்
பாண்டியர் வம்சப் பரம்பரை சார்ந்தவர்
பாண்டியன் கூட்டிய பைந்தமிழ்ச் சங்கம்
தென்மா மதுரையில் திகழ்ந்ததென் றறிவோம்
தொன்மா நிலத்தைச் சூழ்கடல் கொண்டபின்
எஞ்சிய தமிழர் ஈழத் துறைந்தனர்
கொஞ்சும் தமிழ்க்கவிக் குவையும் தந்தனர்
புகழார் ஈழப் பூதன்தேவனார்
இகழாப் புலமை இதற்கொரு சான்று
திமிலர்கள் என்ற செந்தமிழ்க் குலத்தார்
திமிலதீ வதிலே சிற்றர சமைத்து
திரைகட லோடித் திரவியம் சேர்த்து
வரையிலா மீன்பிடி வளமதும் பெற்று
மட்டக் களப்பு வாவிச் சார்பெலாம்
கட்டியாண் டிட்ட காலத்தேதான்
முற்குகர் என்போர் மோதவந் திட்டனர்
முற்குகர் யார்? இவர் முதலில்எங் கிருந்தனர் ?
இராச ராசனும் இராசேந்திரனும்
முரசறை தானையின் முழுப்பல ... ருக்கி
கங்கை முதலாக் கடாரம் வரையில்
தங்கைக் கொண்டர சாண்டகாலத்தே
சோழப் பேரர துள்மா நிலமாய்
ஈழம் இருந்தது எமக்குத் தெரியும்
அந்தநாள் வந்து அமர்ந்த தமிழ்க்குடி
இந்தநா டெங்கணும் இருந்ததும் அறிவோம்.
குலோத்துங் கனது பலத்தால் கலிங்க
நிலப்பரப் பனைத்தும் நேராய்ச் சோழர்
ஆட்சியில் வீழ்ந்ததை அறையும் பரணி
மாட்சி மிக்கவிவ் வரலா றனைத்தும்
முற்குகர் யாரென முறைப்படி புகலல்
அற்புதம் இல்லை; அந்தக் கலிங்கத்
தமிழரே மாகன் தனிப்போ ரெழுச்சியால்
இமிழ்கடல் கடந்தும் ஈழம் வந்தனர்
வந்தவர் இங்கு வாழ்ந்தவ ரோடு
பந்தம் கொண்டு பாங்குறக் கலந்து
குகனை வணங்கும் கூட்டத் தாயினர்
சிவனது புதல்வன் குகனே யானதால்
முற்குகன் அவனே; பிற்பட வந்த
விற்குகன் கங்கை வேடனே யாவான்
முற்குகன் என்பவன் முருகனே யென்பதை
பொற்புறு சங்கப் புலவரே புகல்வர்
மண்டூர்ப் பதியில் மகிழ்ந்தெழுந் தருளும்
அண்டர் முதல்வன் ஆயிழை கணவன்
முருகனே தக்க முழுமுதற் சான்றாம்.
முருகனை வணங்கும் முற்குகர் களிலே
கலிங்கத் தவரே காலிங்க குடியாம்
கலிங்க மன்னரின் கால்வழி வந்த

அவரே முதலிடம் அடைந்திருந் தனராம்
கவரும் தானைக் கடமையில் இருந்தோர்
படையாள் குடியெனப் பகரப் பட்டனர்
தடைஇல் இத்தகு தகும்ஏழ் குடியினர்
முற்குக ராகமண் முனைக்கு வந்தனர்
விற்கலை தெரிந்த விறலார் திமிலர்கள்
ஒன்னார் தமக்கென உடன்போர்க் கெழுந்தனர்
பன்னாள் நடந்த படைப்பல மோதலில்
திமிலரை வெல்லும் திறனற் றவராய்
தமிழர் – முற்குகர் தம்போர்க் குதவியாய்
வாணிகத் துக்கு வந்தமுஸ் லிம்களை
பேணி அழைத்துப் பெரும்படை வகுத்து
திமிலரை அழித்துத் திசைகெட ஓட்டினர்
திமிலதீ வதிலும் சென்றமர்ந் திட்டனர்.
கைம்மா றாகக் காத்தான் குடியையும்
பைங்கூழ் விளையும் பதிஏர் ஊரையும்
சோனகர்க் கீந்து சுந்தரத் தமிழ் இளம்
மானனை யாரையும் வதுவையாய்க் கொடுத்து
நன்றிக் கடனதை நனிநிறை வேற்றினர்
என்றிவ் வாறு இயம்பிடும் மான்மியம்.
மான்மியம் கூறும் வரலா றென்பதை
வீணிலே உதறி விடுதல்சா லாது
குகசே னனது குலத்தவர் முற்குகர்
என்று மான்மியம் இயம்பலும் அறிவோம்
அன்றைய நிலையினை அறிவினால் உன்னி
நின்றா கித்து நிறுத்துதல் உத்தமம்
தத்துவ னாகிய தான்தோன் றீச்சரன்
பழம்பதி இனிநாம் பாடுதும் பணிந்தே.

தான்தோன்றீச்சரம் *(கலிவெண்பா)*

பணிந்தேத்தும் எங்கள் பார்வை இனிக் கூர்மைபெற
துணிந்தேபின் நோக்கித் தூரத்தே கால்பதிப்போம்
பத்து முடிவேந்தர் பதியனைத்தும் பாலித்து
நித்தியனாய் ஈசன் நிறைவரங்கள் பெற்றிருந்த
ஈழத் தமிழ்வேந்தன் இலங்கா புரித்தலைவன்
பூசித்த ஈச்சரத்துள் புகழ்பூத்த ஈச்சரமாம்
தான்தோன்றும் ஈச்சரத்தைத் தமிழ்க் குலத்தோர் காணாமல்
போர்க்களத்தால் நாடு புழுதிக்கா டாகியபின்
காடு வளர்ந்து கானகமே யாகியது
பல்லாண்டு பல்லாண்டு பறந்து முடிந்ததன்பின் ....
அனுரார, தபுரியை ஆண்டிருந்தான் மேகவர்ணன்
மட்டக் களப்பை மாட்சியுடன் ஆண்டிருந்தான்
குலஅமர சேனனது குணசிங்கன் என்ற மகன்
காலம் இதேதருணம் கலிங்கத்தி லேஒரிசா
நாடதனை ஆண்டான் நற்குக சேனனவன்
அரசனின் புத்திரியோ அரியபுத்த தசனத்தை
கூந்தலுள்ளே தான்மறைத்துக் கொண்டுவந்தாள் ஈழத்தே
மேகவர்ணன் ஏற்று விலையுயர்ந்த ஓர்சிமிழுள்
அதனை அடைத்து அருமை பெருமையோடு
நந்த வனத்தினிலே நன்கமைந்த மாளிகையில்
சேமித்து வைத்துத் திருப்தியொடு வீற்றிருந்தான்
மகாவம்சம் இந்த வரலாற்று மாளிகையை
தாலத மாளிகையாய்த் தான்புகலக் காண்கின்றோம்
இதையொத்த செய்தியதை இங்குள்ள கல்வெட்டு
வரலாற்று ஏட்டில் வரைந்திருக்கக் காண்கின்றோம்
குகசேனன் புத்திரியைக் குறிப்பிட்ட கல்வெட்டு
உலகத்து நாச்சியென உரைப்பதனைப் பார்க்கின்றோம்
கைலாய பர்வதத்தில் கண்டெடுத்த லிங்கத்தை
குகசேனன் வம்சத்தார் கொண்டுவந்து வைத்திருந்தார்
அதையும் எடுத்தே அவள் வந்தாள் என்பதனை
கல்வெட்டுக் கூறிக் கதையைத் தொடர்கிறது.
வர்த்தகரின் கப்பலிலே வந்து மணிபுரத்தில்
இறங்கி விசய துபீவத் தினையடைந்து
தசனத்தை யீந்தாள்; சந்தோசம் கொண்டவனாய்
மேகவர்ணன், "உன்றனுக்கு வேண்டியதைக் கேள்" என்றான்
அரச குமாரி "ஆட்கள்குடி வாழாத
கிராமமொன் றீய்க கிருபையொடே" என்றிசைத்தாள்.
மேகவர்ணன் தன்நண்பன் மிகுந்தகுண சிங்கனுக்கு
மடல்எழுதி ஈயு மாறு அனுப்பிவைத்தான்
குணசிங்கன் ஏற்றுக் குதுகலித்துக் கொண்டாடி
மட்டக் களப்பில் மண்ணேறி மாமுனையில்
காடு செறியக் கண்டதொரு நல்லிடத்தை
நிரந்தமா யீந்து நிமிர்காடு வெட்டுவித்து
மாளிகையும் கட்டி வழங்கினான் நாச்சிக்கு
உலகத்து நாச்சியவள் உடன் ஒரிசா நாடிருந்து
குகக்குடும்பத் தாரைக் கொண்டுவந்து ஆங்கிருத்தி
ஆலயம் கட்டி அவள் கொணர்ந்த லிங்கத்தை
தாபிதம் செய்து தக்கபடி பூசித்தாள்
களப்பு முனைக்காட்டைக் காடுவெட்டிச் செப்பனிட்டு
அனேக குடும்பங்கள் அழைத்துக் குடியேற்றி
மண்முனை என்ற வளமான பேர்சூட்டி
அரசியா யாகி ஆண்டிருந்த வேளையிலே
களப்புமுனைத் தென்பால் காடழிக்கும் வேளையிலே
கொக்கொட்டி யாம்மரத்தை வெட்டின னாம்திடகன்
திடகன் அதிரத் தெறித்தது செங்குருதி
வெட்டுவாய் தன்னை மிகுதுணியால் கட்டிவிட்டு
திடகன்நாச் சிக்குத் தெரியப்ப டுத்த அவள்
சென்றதனை நோக்கிச் சிவலிங்கம் என்றறிந்து
அவ்வனத்தை வெட்டி ஆலயமும் கட்டுவித்து
பட்டர்கள் மூவரினைப் பத்தியுடன் பூசைசெய்ய
திட்டமும் பண்ணித் திருத்தொண்டு செய்வதற்கும்
ஆரங்கள் கட்டி ஆண்டவனுக் கீவதற்கும்
பதின்மரையும் கூட்டிப் பக்தியொடு ஆண்டிருந்தாள்
கழனி திருத்திக் கனவளங்கள் கண்டிருந்து
குணசிங்கன் உடன்பிறந்த கிரசரணன் தனைமணந்து
புத்திரனைப் புத்திரியைப் பொன்போலப் பெற்றெடுத்தாள்
உலகிப்போ டிகுடியாய் உலகறியப் பட்டவர்கள்
இவர்கள்எனக் கல்வெட்டு எடியம்பிச் செல்கிறது.
சைவமும் செந்தமிழும் தழைத்தினிது ஓங்குகின்ற
மட்டக் களப்பினது வரலாற்றுப் போக்கினிலே
இடம்பெற்று வந்திருக்கும் இனிதாம்தொல் கோயில்களை
திருப்படைக் கோயிலெனச் செப்புதலே நம்மரபு
இந்த வரிசையிலே இடம்பெறும் ஆலயத்துள்
தான்தோன்றும் ஈச்சரத்தான் தனித்தலமும் ஒன்றாகும்

கொக்கொட்டி மரத்தடியில் கோயில் கொண்டு வீற்றிருந்த
தான்தோன்றும் ஈச்சரத்துத் தவப்பேறாய் ஆளவனை
கொத்திட்ட பந்தரது கொழுநிழலின் கீழாக
மிகநீண்ட காலம் வேடர்களே ஆதரித்தார்
உலவும் கதையினிலும் உண்மையுள தாயிருக்கும்
அதன்பின்னே நாச்சியரே ஆலயத்தைக் கட்டினளாம்
என்பதுவும் கூட இயல்பாய் இருந்திடலாம்
நிலையான ஆலயத்தை நேராய் நிறுத்தியவர்
எவரெனக் கொள்ளவொண்ணா எத்தனையோ ஐதீகம்!
மட்டக் களப்பு மான்மீயக் கூற்றுக்கள்
பெரியகல் வெட்டினிலும் பிறிதா யிருப்பதனால்
உண்மையினைக் காண்போம் உணர்ந்து

தருமசிங்கன் திருப்பணி (தரவுகொச்சகக் கலிப்பா)

உணர்வரிய இயற்கைவளத் துயர்ந்ததுவாம் மட்டுநகர்
இணரெரிபோற் பலவருண எழில்மலர்க்கா மட்டுநகர்
குணமினிய குமரரெலாம் குலவிடுங்கா மட்டுநகர்
மணமினிய மருதநில மருவிடுங்கா மட்டுநகர்.

மட்டுநகர் நிதிபதியாம் வளரிலங்கைச் சிங்கனுக்கும்
கட்டழகு திகழ்மனைவி கமழ்சோப(ன) முத்துவுக்கும்
பட்டொளிசேர் திருமேனிப் பகர்தரும சிங்கனெனும்
வட்டவிழி வதனமதி மகன்பிறந்த னன்இளங்கோ.

கோப்புடைய தாமமணி குமரனென வேவளர்ந்து
நாற்படையின் தளபதியாய் நவநிதியத் ததிபதியாய்
தோப்பானவச் சேனனது துவரிதழ்வாய்க் குலமகளாம்
பூப்பவள முத்தவளை புரிந்தனனாம் புணர்மணமே.

மணம்புரிந்து பல்லாண்டு மறைந்திடினும் மகவுஇலாக்
குணமுணர்ந்து குறைநிறையக் கொக்கொட்டிச் சோலைவளர்
கீணங்கள்தொழும் தான்தோன்றும் கண்ணுதற்காம் ஆலயத்தை
இணங்குமதில் மண்டபத்தோ டியற்றினனாம் கற்கொண்டே.

கற்கொண்டு ஆலயத்தைக் கட்டியதோ டந்தணரின்
பத்ததியின் படியெல்லாம் பகுதிகளும் தாபித்து
புத்தழகுக் கலைமிளிரும் புகழ்சோழ நாடிருந்து
வித்தகத்துச் சிற்பமிகு வியப்புடைத்தேர் மூன்றழைத்தான்.

அழைத்தெடுத்து அபிடேகம் அது முடித்துச் சிறைக்குடிகள்
உழைத்திடற்கு வகுத்தமைத்து உடனிருந்து வாழ்ந்திடுநாள்
இழைத்தவருந் தவப்பயனால் இளியமகன் வந்துதித்தான்
தழைத்தகுலப் பரம்பரையே தான்தோன்றி யப்பனருள்

அப்பனருள் பாலித்த அருங்குமர சிங்கனெனும்
ஒப்பரிய நற்புதல்வன் உயர்ந்தழக னானவுடன்
செப்பரிய சோதிமதிச் சின்னஇடைப் பொன்னவளை
குப்பெனவே முகஞ்சிவக்கக் கொண்டுமணம் கூட்டினராம்.

கூட்டுமண பந்தமொரு கொழும்பட்டக் களப்பினையும்
வேட்டபடி பட்டமது விருப்போடு கட்டியபின்
தேட்டமெலாம் புடைசூழச் சிறப்போடு வாழ்ந்திருந்து
தாட்கமலம் சென்றடைந்தான் தருமசிங்கன் தான்தோன்றி.

தான்தோன்றி யப்பனுக்குத் தகும்கோயில் எடுத்தவனாய்
தேன்தோன்றும் சோலையிலே திருக்கோயில் வகுத்தவனாம்
மான்தோன்றும் ஈசனுக்கு வளர்கோட்ட மமைத்தவனாம்
வான்தோன்றும் அண்டருளே வளர்தருமன் வாழியரோ.

வாழ்ந்தாண்ட மேகவர்ண மகாராசன் காலமது
சூழ்ந்துலக நாச்சியவள் தொடுதசனங் கொணர்ந்தனளேல்
ஆழ்ந்தாய்ந்து பார்ப்பதற்கு அவசியமே இல்லை அது
நான்தோய்ந்த கிறிஸ்தூழி நனிமூன்றாம் நூற்றாண்டே.

ஆண்டிருந்த குணசிங்கன் அரசனது காலமதும்
ஈண்டுலக நாச்சிவந்து இனிதிருந்த காலமதும்
பூண்டுவரு மொரேயாண்டாய்ப் புகன்றுவரும் கல்வெட்டால்
தோன்றுவழி பாடுகுமார் ஆயிரத்தைந் நூறாண்டாம்.

ஐந்நூறு அதுபோக அதன்பின்னே தருமசிங்கன்
கந்தழிக்குக் கற்கோயில் கட்டியின்று ஆயிரத்து
ஐம்பதுநல் லாண்டுகளே ஆகிறதென் றும்புகலும்
விந்தைதருங் கல்வெட்டின் வெளிச்சநிலை இவ்வியல்பே !

இயல்பினிலே இக்கோயில் எழிற்சிகு கோபுரமாம்
அயலில்இரு சுற்றுமதில் அழகாகக் கொண்டதுவாம்
செயலமைந்த உள்மதிலின் திகழ்நடுவண் சிவகோட்டம்
கயல்நயனப் பார்வதித்தாய்க் காம்கோயில் அதனிடமாம்.

மாதுமையாள் கோயில்மகா மண்டபத்தி னோடிணைந்து
வேதமுறைத் தென்திசையில் வெளிவாயில் கொண்டதுவாம்
ஓதுமகா சக்தியெதிர் உள்ளமகா மண்டபத்துள்
பாதமடக் கொடுநந்தி படுத்திறையை நோக்கிடுமால்.

நந்தி - பறங்கித்தளபதி *(கட்டளைக் கலிப்பா)*

மாவி னோடு மலரவ னும்புவி
மண்ண ளந்தும்விண் வாகன மேறியும்
ஆலி நின்றும டிமுடி காணொணா
அண்ண லெங்க ளானுறை யாலயம்
நாலு காலின்பு ரவியி லேறியே
நண்ணணி வந்தப றங்கித்த ளபதி
சூல பாணிசு மந்திடு நந்தியைச்
சுட்டி நின்றுது ரைத்தனம் பேசினான்.

"பேச டாஅட பூசக னேஎன்ன
பேத லிக்கிறா யிப்பெரு மாடது
ஆசை யோடுகொ டுத்தபுல் தின்னுமா?
அச்ச மாபதில் சொல்லடா !" என்றனன்
யோசி யாதுகு ருக்களும் "ஓம்" என
வோதி னாரவன் "நாளைம றுதினம்
பூசை வேளைவ ருகுவ னில்லையேல்
போகு முன்தலை" என்றனன் போயினான்.

போகு முன்பே குலைநடுக் குற்றது
புத்தி சித்த மனைத்து மடைத்தது
சாதல் திண்ணமே யென்னவ ழுந்தினார்
சாமி யேசர ணாயுடல் வீழ்த்தினார்
பாதி ராத்திரி யாகிய வேளையில்
"பயப்ப டாதே" யெனக்குரல் கேட்டது
ஆதி நாதன் அருளினை நம்பினார்
அறுகு மஞ்சள்நீர் கொண்டுக ழுவினார்.

கழுவி வைத்தஅ றுகொடு பூசனைக்
கான வேளைப றங்கித்த ளபதி
பளப ளத்தசப் பாத்தொடு வந்தனன்
'பட்பட்' டென்று படிமிசை ஏறினான்
வழமை போலவே பூசை முடிந்தது
வந்து நந்திமுன் புல்லினைக் காட்டினார்
செழுமை வாலைமு றுக்கியெ ழுந்தது
தின்று சாணமு மிட்டுப்ப டுத்தது !

படுத்தல் கண்டத ளபதி வேர்த்தனன்
நாக்கு ளறந மோநம வென்றனன்
இடத்தில் அப்படி யேவிழுந் திட்டனன்
எழுந்து கூப்பிய கையொடு நின்றனன்
கொடுத்த வெண்பொடி கொண்டுபொ லிந்தனன்
கூட்ட மோடுதி ரும்பிந டந்தனன்
அடுத்த நாள்முதல் பூசனைக் காகவே
ஆன தாம்நிதி பேணிய ளித்தனன்.

தேர்தாழ்ந்த பள்ளம் *(வெண்கலிப்பா)*

அளித்தருளும் தான்தோன்றி அப்பனது ஆலயத்தை
கொழுத்தியுடன் கொள்ளையிட்டுக் கொண்டுசெல வந்தவனை
விழிப்படையச் செய்ததொடு விரும்பிநிதி ஈவதற்கும்
வழிப்படுத்தி வைத்தபெரு மானுறையும் கோட்டமதில்
வெளிமதிலுக் குள்ளிட்ட வீதிவெளி வீதிஅது
தேரோடும் வீதியதாம்; தேரோடும் நாளொன்றில்
நேராக முத்தேரும் நெடுவீதி, வந்தனவாம்
முத்தேர்கள் தருமசிங்கன் முன்கொணர்ந்தான் என்றுணர்வோம்
அத்தேரில் ஆனைமுகன் அமர்ந்தரதம் முன்செல்ல
மற்றிரண்டு தேருமதன் வழி தொடர்ந்து சென்றனவாம்
கற்றவரும் மற்றவரும் களிப்போடு வடம்பிடிக்க
வன்னமணித் தேர்களெலாம் வழிநடந்து செல்கையிலே
தென்மேற்கு மூலையதில் சென்றதுமே இறுதிரதம்
அசையாது பெயராது அப்படியே நின்றதுவே
இசைந்தபல பெருமுயற்சி எத்தனைதான் எடுத்திடினும்
தேர்அசைய மறுத்திடவே செய்யவழி வேறின்றி
ஊர்ந்தஇரு தேர்களையும் உரியஇடத் தேநிறுத்தி
அடுத்தநாள் பார்ப்பமென்ற அனைத்தவரின் முடிவோடும்
விடுத்தனை அகன்றனராம் விடிந்துபொழு தாகியதும்
காலைவந்து பார்த்தவர்கள் கதிகலங்க லானார்கள்
மூலையிலே நின்றிருந்த முழுரதத்தைக் காணவில்லை
தேர்சென்ற தடவழியில் திசையறிந்து சென்றவர்கள்
நேராக அதுநகர்ந்து நெடிதாழ்ந்த வாவியுள்ளே
வீழ்ந்தமிழ்ந்த உண்மையினை மிகுவியப்போ டறிந்தனரே.
ஆழ்ந்த கவலையொடு அடியார்கள் அன்றுமுதல்
தேர் ஆழ்ந்த பள்ளமதைத் திசைநோக்கிப் பார்க்கின்றார்
ஆர்வ மிகுபக்தி, அரும்விரதம் நோற்றிருந்து
பார்ப்பவர்கள் தேரின் பளபளக்கும் தங்க முடி
காண்பரெனப் பேசும் கதை.

எம்பாவாய் ! *(கலித்தாழிசை)*

கதைபுகலும் கோயிற் கர்ண பரம்பரைகள்
எதையெதையோ கோயிற் கியம்பினவாம் எம்பாவாய்
எதையெதையோ கோயிற் கியம்பினவே யாமாகில்
அதை யதைநாம் சீர்தாக்க அறிவிலையோஎம்பாவாய் ?
அவற்றிலும் உண்மைசில அமைந்துளவே எம்பாவாய் !

அமைந்தகுழைப் பந்தலிலும்அரனருளைக் கண்டவர்கள்
சுமந்தசிலை வேடரெனச் சொல்லுகின்றார் எம்பாவாய்
சுமந்தசிலை வேடரெனச் சொல்லுகின்ற செய்தியிலும்
எமக்குகந்த உள்ளுறைகள் இருக்கலையோ எம்பாவாய் ?
இறைவனுக்கு உகந்ததுநல் இதயமதே எம்பாவாய் !

இதயமதில் கோயில்கொளும் இலிங்கேசன் கொக்கொட்டித்
தவசியரின் சமாதியினைச் சார்ந்துளனாம் எம்பாவாய்
தவசியரின் சமாதியினைச் சார்வனென்ற கூற்றினிலும்
பதிபசுவின் பாங்குநிலை பதிந்திலதோ எம்பாவாய் ?
பக்குவத்தால் முத்திநிலைப் பாடுயரும் எம்பாவாய் !

பாடுபட்ட வடகலிங்கப் பதியுலக நாச்சியரின்
ஊடுவந்த லிங்கத்தும் உட்பொருளாம் எம்பாவாய்
ஊடுவந்த லிங்கத்தும் உட்பொருளொன் றுள்ளதெனும்
பீடுயர்ந்த கொள்கையிலும் பேறுளதோ எம்பாவாய் ?
பேறுசிவன் கோட்டமெழும் பெருமையதாம் எம்பாவாய் !

பெருந்தரும சிங்கனவன் பின்னுகற்குக் கோயில்கட்டும்
அருமைமிகு தொண்டே ஆற்றினனாம் எம்பாவாய்
அருமைமிகு தொண்டே ஆற்றியதா லேநிலைத்து
உருவப்பெ ருங்கோட்டம் உண்டாச்சோ எம்பாவாய் ?
ஊழிப் பெரும்பயனை உடையோமே எம்பாவாய் !

உடையானின் கோட்டம் உயர்ந்த வரலாற்றின்
இடையே குளக்கோட்டன் இருக்கின்றான் எம்பாவாய்
இடையே குளக்கோட்டன் இருப்பதற்குக் காரணமாய்
கொடையும் திருத்தொண்டும் கூடியதோ எம்பாவாய் ?
கோமான் புனரமைத்த கோயில்களே எம்பாவாய் !

மாகோன் திருப்பணி *(குறளடி வஞ்சிப்பா)*

எம்மான்எனும் எழில்சாயலார்
பெம்மானுயர் பேறாதிட
பதின்மூன்றெனும் நூற்றாண்டிலே
அதிவெந்திறற் கொடிநாட்டினன்
ஒளி நாட்டினைச் செறுவென்றனன்
பழிபட்டபேர் வழிதேய்த்தனன்
தோப்பாவையில் அரசோச்சினன்
நாற்பாங்கிலும் கல்நட்டனன்
அடங்காதவர்க் கனலாயினன்
மடங்கல் என வழிகாட்டினன்
முழுலங்கையும் கலிங்கக்குலம்
உயர்கோக்குல விருதேற்றினன்
கதிர்காமமும் விச(ய)துபீவமும்
சிவக் கோட்டமுன் வீடுன்றினன்
சதாகாலமும் கலிங்கக் குலம்
தேனாட்டிலே மேலோச்சவும்
வங்கத்தவர் பணையாட்சியர்
திறல்மந்திரத் தவிசேற்கவும்
திட்டப்படி திடம்செய்தனன்
மட்டக்களப் புலகெங்கனும்
தமிழ்சைவமே தழைத்தாளவும்
சட்டங்களை வித்திட்டனன்
கண்டன்முதல் வயித்திவரை
பண்டுமுறை தவறாமலே
பகுத்தீசனார் பணியாற்றவே.
கோவைசியர் குலமக்களின்
குடியேழென உருவாக்கினன்
விறற் சங்கமர் இறைத்தொண்டினில்
சிறப்பாய் நனி பொறுப்பேற்றனர்
எனவாங்கு
செய்வகை எல்லாம் செய்தனன் ஆதலின்
மட்டுமா நாட்டின் மாகோன் ஆட்சியில்
தான்தோன் றீச்சரம் தழைத்தோங் கியதே.

பூசை - திருவிழா. *(வெளிவிருத்தம்)*

நான்தொறு மூன்று பூசைகள் நன்றே – நிறைவேறும்
சாலவும் நல்ல விரத தினங்கள் – தனிப்பூசை
கோள்நிலை கொள்ளும் சீர்த்திரு நாளில் – கொடியேற்றம்
ஆலமுண் டோனின் தேர்த்திரு வோட்டம் – அளவுண்டோ ?

*(அம்மானைச் சிந்து)*

அளவிறந்த ஆன்மாக்கட் கானபுகலிடமாம்
புகழுடைய முக்கணற்காம் பூசனைகேள் அம்மானை
சித்திரைப்புத் தாண்டும் சித்திரைச் சீர்ச்சித்திரையும்
புத்தெழில்வை காசிப் புலர்விசாகப் பொன்நாளும்
ஆனிவரும் உத்திரமும் ஆடிப்பூம் பூரமதும்
தேனனைய ஆவணியின் திகழ்ஓண நல்நாளும்
நவராத் திரிவிரதம் நல்லகே தாரகௌரி
தவமிகுந்த கந்தசட்டி தக்கதொரு கார்த்திகை நாள்
கார்த்திகைத் தீபம் கருதும் விநாயகர் நோன்(பு)
மார்கழி ஆதிரைநாள் மறக்கவொணாப் பொன்னூஞ்சல்
தைப்பொங்கல், பூசம் தக்கதொரு மாசிமகம்
மகாசிவ ராத்திரியாம் மகத்தான நல்விரதம்
பங்குனி உத்தாநாள்; பாங்குடை இத்தினங்கள்
மங்களஞ்சேர் நல்விழவும் மாவிசேட பூசைகளும்
இங்கிதமாய்த் தான்தோன்றும் ஈசனது ஆலயத்தில்
எங்கணும் போற்ற எடுப்பதுண்டு அம்மானை.
பண்டைய நாள்களிலே பங்குனித் திங்கள்வரும்
உத்தாநட் சத்திரமும் உயர்பௌர்ண மித்திதியும்
சேர்ந்துவரு நாளில் திருவிழா, தேரோட்டம்
நடந்துவந்த தன்றோ நடைமுறைகாண் அம்மானை
நடந்துவந்த தந்த நாள்களிலே நெல்லறுத்தல்
தொடர்ந்து வருமுச்சத் துள்ளதன்றோ அம்மானை
மக்கள் நலமும் வசதிகளும் காரணமாய்
தக்கதொரு மாற்றம் தான்நிகழ்ந்த தம்மானை
தேச மகாசபையார் தீர்மானத் தின்படியே
ஈசன் திருவிழநாள் இயம்பக்கேள் அம்மானை
ஆவணித் திங்கள் அபரபக்கப் பிரதமையும்
உத்தரநட் சத்திரமும் உதித்தசுப வேளையதில்
கொடியேற்றப் பட்டுக் கூடிவரு நாள்களின்பின்
பூரணைக்குப் பின்னர் புலர்ந்துவரும் ஞாயிறிலே
தேரோட்டம் நடைபெறுமத் தேரோட்டத்தின் பின்னே
திங்கட் கிழமை செகதலத்தோர் உய்திபெறும்
சூரகவேட் டைக்குச் சுவாமி எழுந்தருள்வார்
இளைப்பாறும் வேளையிலே இரத்தின மாலைகளை
களவெடுத்த செட்டிகளைக் கட்டியடித் தல்நிகழும்
சூரக வேட்டையது தொடர்ந்து நடந்ததன்பின்
விமலன் களைப்பாற வீற்றிருப்பார் அப்போது
குடுக்கைகூ றும்நிகழ்ச்சி குடிவழி மரபினரை
கௌரவிக்கு மாறு கச்சித மாய்நிகழும்
அத்தோடு சுவாமி ஆலயத்தே போந்தருள
தீர்த்தோற் சவம்நடந்து சிறப்படையும் அம்மானை
சிறப்படையும் அந்தச் செயல்எமது சித்தமெலாம்
உறக்கலந்தான் தான்தோன்றும் ஒருவனருள் அம்மானை

திருவாகம் *(காவியச் சிந்து)*

தான்தோன் றும் ஈசனது தலத்துநிர் வாகம்
தக்கபடி பண்டுமுதல் முற்குகவம் சத்துத்
தோன் றுலகிப் போடிகுடி காலிங்க குடியார்
தொடர்பான படையாண்ட குடியாகி யோராம்
மூன்றுகுடி வண்ணக்கு மார்கள்செய லாலும்
முறையாக நடைபெற்று வந்துகொண் டுளதைச்
சான்றினொடு மாகோனும் திட்டம்செய் துளதாய்த்
தகவல்தரு கிறதுதிருப் படைக்களஞ் சியமே.

களஞ்சியம் சொன்னபடி கத்தசன் மார்க்கத்
தகையர்களே வண்ணக்க ராகவர வேண்டும்
வழக்கமது ஆனாலும் வழிவழிபூ சைக்கு
வைத்துவரு தங்கமுடி வகையறாப் பொருள்கள்
இழக்கநேர்ந் ததுகண்டு பொதுமக்கள் கூடி
இதிலுமொரு சீராக்கம் இனிவேண்டு மென்று
முழுக்கவொரு மாற்றமதை முன்மொழிந் திட்டார்
முறையான நிருவாக முண்டுபண் ணிடவே.

பண்டுதொண் டதுபூண்ட வண்ணக்கு மாரின்
பண்போடு நேர்மையது பலர்நினைவு கூர்ந்தார்
கண்டிமன் னவர்களது செல்வாக்கில் மட்டக்
களப்பன்று இருந்தபொழு தேதலைமை யேற்ற
அண்டர்தொழு மீசனுக் கரியபணி யாளன்
அயல்தீவில தீவிலுறைந் தப்போது வாழ்ந்த
எண்டிசை புகழ்ந்தநிலா மைப்பதவி கொண்டோன்
இகலுறுவே லாப்போடி என்றபெய ரோனே.

பேர்பெற்ற வண்ணக்கு மார்களுக் குள்ளே
பெரியமுதல் வண்ணக்க னாயிருக் கையிலே
ஏர்பெற்ற தான்தோன்று மீசனது கோயில்
எக்காலும் முக்காலப் பூசைநிகழ் போதும்
ஊர்தியில தீவுவரை தவிலோசை கேட்கும்
ஒருவேளை கேளாது போனாலும் போதும்
நேராக மட்டுநகர் வாவியது தாண்டி
நிற்பராம் கொக்கொட்டி யப்பன்நற் பதியே.

அப்பாது நற்பதியை எப்படிய டைந்தார் ?
அற்புதமே யானாலும் அது உண்மை யென்பார்
செப்பரிய மாந்திரிக வித்தைவல் லாளன்
சிறியகணப் பொழுதிலொரு முதலையைய ழைப்பார்
அப்படியே அவரேறி அதன்மேலே நிற்பார்
அவர்சால்வை அதன்மேலே மேற்கட்டி யாகும்
எப்படியோ தேசிக்காய் நான்குஅதைத் தாங்கும்
எல்லோரும் பயபக்தி யோடியங் குவரே.

இயங்கவைப் போரெதிரே இயங்காதோர் யாரே ?
இறைவனது நிருவாகம் இனிதாக நிகழ
தயங்காது பொதுமக்கள், இளைஞர்முன் வந்தார்
தலாஇருவர் திருவிழாக் காரர்தெரி வானார்
மயங்காத மனமுடைய வண்ணக்கர் மூவர்
வரலாறு காணாத நிருவாக சபையில்
வயம்கொண்ட பத்தோடு ஒன்பதே நபர்கள்
வருங்கால நிருவாகப் பொறுப்பாள ராமே.

பொறுப்பான காலிங்கா குடிதலைவ ராக
புகழ்உலகிப் போடிகுடி பொருளாள ராக
சிறப்பான படையாண்ட குடிசெயல ராக
செயலாற்று மாறுசபைத் தீர்மான மாகி
விரைப்பான கலங்காத நிருவாக பீடம்
விதியொன்று மாக்கியது நடைமுறைக்காக
மறுப்பேது மில்லாது தேசமா சபையும்
மனமகிழ்ந் தேற்றதது வழங்குமுப விதியே.

தேசவன்னிமை

விதிப்படி தேசத்து வன்னிமை யாக
விளங்குபவர் பூபால கோத்திரத் தவராம்
உதிப்பான கலிங்கவே ளாளர்பரம் பரையில்
உள்ளஅவர் சந்ததிகள் அற்றுவிட் டதனால்
கதிப்பான அத்தியா குடிவேளா ருக்கே
காலத்தின் பின்பதவி சென்றடைத லாச்சு
மதிப்பான தான்தோன்று மீசர்கல் வெட்டில்
மாண்புபெறு வன்னிமைகள் இருவமிச மாமே.

வமிசமதில் குகராச வன்னிமைகள் ஒன்றாம்
மற்றையது பூபால வன்னிகோத் திரமாய்
அமிச,அதி காரமிவர் அந்நியரின் கால
ஆட்சியொடு போய்விடினும் ஆலயத் துரிமை
தமதுவழி யாகநிலை தொடர்ந்துவர லாச்சு
தற்காலப் போக்கினொடு மெலவிலக லாச்சு
எமதிறைவன் தொண்டுழி யங்களெலா மின்று
இருந்து பணியாற்றுவதை இயம்புதல் நங் கடனே.

கோயிற்குருமார்

கடனாற்றப் புவனேய கயபாகு மன்னன்
காலத்தில் திருக்கோயிற் பணியினுக் காக
திடமான சங்கமக் குருமாரை யிங்கு
சீருடன் வரவழைத் தெடுத்திடுத லானான்
வடஉலக நாச்சியும் சிவபூசைக் காக
வரவழைத் திட்டனள்பட் டர்களைப் பின்னர்
இடமாண்ட மாகோனும் இவ்வீர சைவர்
இங்குற்று நிலைபெறத் தொண்டுசெய் தனனே.

செய்திட்ட தொண்டாலே இவ்வீர சைவர்
சிறந்தவழி காட்டலொடு குருகுலக் கல்வி
பொய்யற்ற ஆன்மீகக் கல்வியத னோடு
போதனைகள் வைத்தியம் மாந்திரிக மென்ற
உய்வுக்கு வழிகாட்டும் மக்கள்பணி செய்து
ஒவ்வொருவர் உளத்தினையும் தொட்டனரே எனலாம்
அவ்வளவில் நில்லாது திருமணத் தொடர்பும்
அயற்குடிக ளொடுவைத்து அருகலா யினரே.

அருகியதன் காரணமோ பிறிதுளதோ அறியோம்
        அவர்களது நிலைஇன்று முன்போல இல்லை
பெருகிவரும் பிரச்சினைகள் சூழல்நிலை யெல்லாம்
        பெரியவர்கள் தூய்மையொடு வாழவழி யில்லை
தருணமிதில் இறையருளில் தக்கநிலை பெற்று
        தமிழரது துயாகலத் தருமவழி நின்று
அரியவழி காட்ட அவர் தகுதிபெற வேண்டும்
        ஆண்டவனின் தொண்டுவழி அமரவழி அதுவே.

புத்தமைப்பு - குடமுழுக்கு    எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்

அமரர்களின் ஒரேதலைவன் அவன்தான் எங்கள்
        அருள்கொஞ்சும் தான்தோன்றி அப்ப னாவான்
எமதிறைவன் ஆலயத்தே கால மெல்லாம்
        எத்தனையோ புதுக்குதல்கள் இயைந்த துண்டு
இமையவரே காணரிய இறைவன் வந்து
        எழுந்தருளும் தான்தோன்றும் ஈசன் கோயில்
குமைந்தடித்த சூறையினால் கோபுரத்தின்
        கோப்பதிலே பெருஞ்சிதைவு குலைவுண் டாச்சே.

உண்டான பெருஞ்சிதைவைக் கண்ட மக்கள்
        ஒரே குரலில் ஆலயத்தைப் புதுக்கிக் கட்ட
கொண்டதொரு ஆர்வத்தால் பொதுக்கூட் டத்தைக்
        கூட்டியதன் ஒப்புதலை உறுதி செய்தார்
அண்டருக்கும் எட்டாத ஐயன் தன்னை
        அடிதொழுது வாலஸ்தா பனமும் செய்து
தொண்டரெலாம் சேர்சிரய தானத் தாலே
        துப்புரவாய்த் தூர்த்தடிக்கல் ஊன்றி னாரே.

ஊன்றினர்கல் புதுராச கோபு ரத்தை
        உருவாக்க முன்வந்த மயிலிப் போடி
வான்உயரும் கோபுரத்தை உயர்வ மைத்து
        வடிவாக நிறைசெய்து மகிழு முன்னர்
கோன் சிவனின் அடிமலரை அவர்அ ணைந்தார்
        குறையதனைக் குடும்பத்தார் நிறைவு செய்தார்
தான்தோன்றி அப்பனுக்குத் தீர்த்த மள்ளும்
        தனிக்கிணறும் புதியஉருத் தாங்க லாச்சே.

ஆனபுதுக் கொடித்தம்பம் மூல லிங்கத்
        தரன்பக்க லாய்நகர்த்தி அமைத்த தோடு
வானமரும் பரிவார மூர்த்திக் கெல்லாம்
        வகைவகையாய்ப் பொற்கோயில் வகுத்திட்டார்கள்
ஞானவழி நின்றுவரும் அடியார் பல்லோர்
        நற்பணியில் பங்கேற்றுப் புனித ரானார்
ஏனையநல் மடப்பள்ளி அறைகள் சாலை
        எழிலார்ந்த செயலகமும் எழுந்த தாமே.

எழுந்தபுது ஆலயங்கள் பழமை தொட்டு
        இருந்துவந்த ஆலயத்தின் இன்னோர் தோற்றம்
பழந்தமிழும் சைவமதும் தொன்று தொட்டு
        பல்லாற்றால் வளர்ச்சியுற்ற படிகத் தோற்றம்
அழுந்துகின்ற தமிழர்இனம் எழுச்சி காணற்
        கரியதொரு குறியீட்டின் அழகுத் தோற்றம்
கொழுந்துவிடும் விடுதலைக்காம் ஒளிப்பி ழம்பு
        கொக்கொட்டிச் சோலைவளர் கோட்டம் தானே.

அடியேன் சரணம்    *(ஒயிற்கும்மி)*

கோட்டம் புதுக்கிய கொக்கொட்டிச் சோலைவாழ்
கோமானின் மேற்கும்மிப் பாட்டிசைக்க
        குமரற்குயர் அமரர்க்கிறை
        கொழுமற்புத எழிலுற்றுயர்
குஞ்சர நாயகன் காப்பாமே.

காப்பும் கருணையும் நோக்கும் குளுமையும்
காதலும் அற்புதக் காட்சியுமாய்
        கனகக்குவை ஒளிகக்கிடு
        பனகத்தினை அணிதற்பரன்
காலடி யேசர ணாய்ப்புகுவோம்.

ஓம்எனும் தத்துவன் உள்ளுறை வித்தகன்
உற்பவ மூர்த்தியாய் வித்திடுவோன்
        உதகப்பணி யதுகட்டியே
        மகரக்குழை யதுநக்கியே
ஊழிக்கூத் தாடிடும் உத்தமனே.

உத்தம னாயுறை தத்துவ ஞாயொளிர்
ஓங்கிய காலத்து உத்தமனாய்
        ஒருகைப்பிடி நிறைப்பிட்டுண
        ஒறுவாய்ப்பிரம் படிவாங்கிய
ஒண்டொடி நாயகன் நம்கதியே.

நம்பினர்க் காக நடனம் புரிந்திடு
நாயகன் தான்தோன்றி யான் பதியில்
        நளினத்தொடு பொழிநற்றமிழ்
        நவினக்கவி யதுசொற்றிடு
நாவினார்க் கில்லை நலக்குறைவே.

நல்லவை கெட்டவை நன்குண ராத
நடுக்க முறுத்துவோர் நாட்டினி லே
        நரகத்துறு விரககக் கொலை
        நவை கற்பழி வெனமுற்றிடு
நாட்கள் தொடருமோ நாயகனே ?

### தூது

*(கலி...)*

நாயகன்தான் தோன்றியப்பன்
நலமுரைக்கும் பூங்குயிலே
பாயில்விழு முன்னரவன்
பாதம்தரக் கூவுதியோ ?

கூவும் குயிற்குலமே,
குஞ்சுவைக்கும் நங்கணமே,
ஆவி கலங்குமுன்னென்
அருகுவரச் சொல்லியளோ?

சொல்லுக்குச் சொல்கதைக்கும்
தோப்பிலுள்ள பூங்கிளிகாள்,
மல்லல்முலை யானிடம்என்
வாஞ்சையினைப் பேசுவிரோ ?

பேசிவந்து நார்கிழித்துக்
கூடுகட்டும் தூக்கணங்காள்
வாசமுள்ள கூந்தலுமை
மன்னன்வரக் கூறுவீரோ ?

கூறுகெட்ட குப்பையெலாம்
கொத்துகின்ற காக்கைகளே
ஆலமுண்ட கண்டனைஎன்
அருகுவரக் கோருவிரோ ?

கோரிச் சிறகடித்துக்
கொக்கரிக்கும் கோழிகளே
காலத்தீ மூளுமுன்என்
கண்ணில்வரக் காட்டுவிரோ ?

காட்டுப் பறவைகாள்என்
காதல் சொலக் கூசிடினும்
ஈழத் தமிழர்படும்
இன்னலெடுத் தோதிடுங்கோ.

### பிழிவும் பேறும்

*(அகவல்)*

எல்லம்; ஆண்டவன் இராவணத் தமிழன்
இலிங்க வழிபாட்டு இயல்பினை யுடையான்
தான்தோன்றி லிங்கமும் தனித்ததில் ஒன்றே
காட்டில் மறைந்தது கானவன் வெட்டினன்
கொக்கொட்டி மரத்தில் குருதி வழிந்தது
கொத்துப் பந்தல் இட்டு வணங்கினர்
செட்டியார் வந்தார் திருக்கோயில் கட்டினார்
உலக நாச்சியும் மண்முனை வந்தனள்
கோயில் கட்டினள் குலமொன் றெழுந்தது
தரும சிங்கனின் தனிப்பெருங் கோட்டம்
குளக்கோட் டனது கோயிற் பணிகள்
மாகோன் வருகை மட்டுமா நகரம்
முற்குகக் குடிகள் – முழுமுதற் பணிகள்
வீர சைவர் மிகுசிறப் படைதல்
வண்ணக் கர்களும் வன்னிமைமாரும்
சூறா வளியால் கோபுரம் சிதைதல்
புதியநிர் வாகமும் புனருத் தாரணமும்
புதுக்குட முழுக்கும் பொலிவும் சிறப்பும்
படிக்கும் திறத்துப் பாட்டிலே தந்தவன்
திமிலைத் துமிலன் தமிழைப்
பார்; தாந் தோன்றியைப் பார்த்திடல் சாலுமே.

### வாழ்த்து

தான்தோன்று மீச்சரத் தனிப்பெருமை வாழி
தக்கபடி தொண்டுசெயும் தக்கோர்கள் வாழி
வானுயரும் ஈசனது வளர்கோட்டம் வாழி
வந்துவழி படுபவர்கள் சந்ததமும் வாழி
ஊனுருகி நின்றுதமிழ் உரைப்பவர்கள் வாழி
உள்ளன்பு மிக்கவர்கள் ஊழிதொறும் வாழி
தேன்மருவு கொக்கொட்டிச் சோலை யுகந்துறையும்
சிவன் – ஈழத் தமிழ்த் தெய்வம் சிறந்துவா ழியவே.

*திருச்சிற்றம்பலம்.*

# புராதன வரலாற்றுப் பெருமைமிக்க தான்தோன்றீச்சரம்

க. கனகநாயகம்
*ஓய்வு பெற்ற அதிபர்*
*(மலர்க்குழுத் தலைவர்)*

நீராருங் கடலுடுத்த நிலமடந்தையெம் மீழமாதா. சீராரும் வதனமெனத் திகழ்வது வடயாழ்புலம். பாராண்ட வன்னியர் வாழ்ந்தது வன்னி, திருநிறைந்த திரிகோணம், மான்புறுமட்டு நன்னாடு. இவையனைத்துமே வடக்கு கிழக்கு என வர்ணிக்கப்படுகின்றது. தொன்று தொட்டுச் சைவமும் தமிழும் வளர்த்த புண்ணிய பூமி இவை. இவற்றில் நெல், பால், தேன், பாடும் மீன் என்பவற்றிற் புகழ்பெற்றது மட்டக்களப்புத் தமிழகம் இன்றும் விவசாயத்தை அடிப்படைப் பொருளாதாரமாகக் கொண்டு திகழ்கின்றது. இதன் வரலாற்றில் முதன்மை பெற்று விளங்குவது மண்முனைப் பகுதி. இதன் உள்ளமைந்ததே மண்முனை தென்மேற்குப் பிரதேசமாகும். இம்மானிலத்தின் சிறப்பையுஞ் செழிப்பையும் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளைப் பண்டிதர் அவர்கள்;

*"பால் பெருகுந் தேன் பெருகும் பண்புடைய மன்னவர் செங்*
*கோல் பெருகும் படிவயற் பைங்கூழ் பெருகும் புனல் பரந்து*
*கால் பெருகுங் கல்லார்க்குஞ் சொல்லாட்சி மிகப் பெருகும்*
*நூல் பெருகும் இடையர்க்கு நலவறங்கள் பெருகுமால்."* என்றும்,

*"மோட்டெருமை வெண்டயிரும் முட்டழுங் கற்கண்டும்*
*போட்டினிய சீனிதேன் பொருந்து செந்நெல் வெண்சோற்றைக்*
*கூட்டி பொன்றாய்க் குழைத்ததனைக் குலக்குமரர் தமைக்கூவிக்*
*கூட்டுணுவார் அமிர்த மொக்குறைவில் செல்வமவர்க்கமரா.'* என்றும் பாடி நயந்துள்ளார்.

செழிப்பும் வனப்பும் மிக்க மருதநிலச் சார்புடைய மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் மிகப் பிரசித்தி பெற்ற மிகப்பழமை வாய்ந்த மூன்று பெருந் தேவஸ்தானங்கள் உள்ளன. அவை, பண்டாரியா வெளி நாகதம்பிரான் கோயில்; தாந்தா மலை ஸ்ரீ முருகப் பெருமான் ஆலயம், கொக்கட்டிச் சோலைத் தான்தோன்றீஸ்வரர் ஆலயம் என்பனவாகும். இம்மூன்று பெருந்தேவாலயங்களும் ஆங்காங்கே உரிய இடங்களில் அமையப் பெற்றிருப்பதால் மண்முனை தென் மேற்குப் பிரதேசம் சிறந்தவொரு புண்ணிய பூமியென்று கூறலாம். இப்பிரதேசத்தின் நடுவணமைந்தது கொக்கட்டிச் சோலைக் கிராமம் . இது மட்டு நகரிலிருந்து தெற்கே மண்முனைத் துறையினூடாகச் சுமார் பதின்மூன்று கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. கொக்கட்டி மரங்கள் நிறைந்த சோலையாக இருந்தமை இப்பெயருக்குக் காரணமாகலாம். அத்தோடு கொக்கட்டி மரத்தில் எமதிறைவன் சுயம்புலிங்கமாக எழுந்தருளியிருந்தமையும் இதனை உறுதிப்படுத்துவதாயிற்று. இது சுயம்புலிங்கமாக இருந்தமையினாற் தான்தோன்றுலிங்கம் என வழங்கப்பட்டது. தான்தோன்றுலிங்கம் அமைந்த புண்ணியஸ்தலம் தான்தோன்றீச்சரம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை பொருத்தமானதேயாகும். இவ்வாலய வரலாற்றினைப் பல செவிவழிக் கர்ண பரம்பரைக் கதைகளும் மற்றும் மகாவம்சம் என்ற புராதன வரலாற்று நூலிலும், கல்வெட்டு என்ற புராதன தமிழ் வரலாற்றேடுகளிலும், கல்வெட்டுகளை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட மட்டக்களப்பு மான்மியம் என்னும் மட்டக்களப்பு வரலாற்று நூலிலும் கூறப்பட்டவற்றை ஆதாரமாகக் கொண்டு ஆராய்வோம். ஸ்ரீ மேகவர்ணன் அனுரதபுரியை ஆண்டகாலத்தில், மட்டக்களப்பை அமரசேனனது மகன் குணசிங்கன் ஆட்சி செய்திருந்தான். இலங்கையின் இக்காலப் பகுதி சுலுவம்ச காலமெனப்படும்.

ஸ்ரீ மேகவர்ணன் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 311) கலிங்க ஒரிசா நாட்டையாண்ட குகசேனன் என்னும் அரசனின் புத்திரி தலைநகராய தந்தபுரத்தினின்றும் தன்சகோதரனோடு புத்த தசனத்தை இலங்கைக்குக் கொண்டு வந்தாள். கொண்டு வருகையில் அதை அவளெவருங்காணாதபடி தன்னெடுங் கூந்தலுள் மறைத்து வந்தாளாம். அதனை அரசன் மகிழ்ச்சியோடேற்று விலை பெற்ற சிமிழொன்றிலடைத்து இராசாங்க நந்தவனத்தில் அதற்கென எழுப்பிய ஓர் மனையிற் சேமித்து வைத்தான். அது சேமிக்கப்பட்ட மனை அன்று முதல் தலதாமாளிகை யென்றழைக்கப்படும். இது இலங்கைப் புராதன வரலாற்று நூலான மகா வம்சத்திற் குறிப்பிடப்பட்டுள்ளது. இதை யொத்தபடி பெரியகல் வெட்டெனும் வரலாற்றேட்டிலும் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. அதாவது;

குணசிங்கனும் மட்டக்களப்பைப் பரிபாலித்து வருங்காலம் கலிங்க ஒரிசா தேசத்தரசன் குகசேனனுடைய புத்திரி உலகநாச்சி என்பவள் கௌதம புத்தனுடைய தசனத்தை எடுத்துத் தனது நெடுங் கூந்தலுள் மறைவாய் வைத்துக் கைலயங்கிரியில் குகவம்மிசத்தார் முற்காலத்திலெடுத்துக் கொண்டு வைத்த சிவலிங்கத்தையும் எடுத்துக் கொண்டு தனது சகோதரன் உலகநாதனுடன் தன் தந்தை குகசேனனிடம் விடைபெற்று

வர்த்தகருடைய படகிலேறி மணிபுரத்திலிறங்கி விசயதுவீபத்துக்கு வந்து மேகவர்ணனைக் கண்டு குலங்கோத்திர மெல்லாம் விளங்கப்படுத்திப் புத்தருடைய தசனத்தைக் கொடுத்தாள். மேகவர்ணனும் இலங்கை முற்றும் புத்த மதத்துக்கு இனி அபாயமில்லையென்று மிகச் சந்தோஷங் கொண்டு, உலக நாச்சியிடம் "உமக்குவேண்டியதைக்கேள்" என்றதும் உலக நாச்சியும் , 'அரசனே! இலங்கையிற் காடு செறிந்து குடி வாழ்வில்லாத கிராம மொன்றீயும் " என்று வேண்டினாள். அதைக்கேட்ட மேகவர்ணன் மட்டக்களப்பை அரசாளும் குணசிங்கன் தன் சிநேகிதனாதலால் ஒரு திருமுகம் வரைந்து, மட்டக்களப்பு, உன்னரசுகிரி இவைகளிற் காடு செறிந்து குடிவாழ்வில்லாத பதியொன்று இந்த உலக நாச்சிக்குக் கைலஞ்சமாகக் கொடுக்கும் படியும், இரத்தினமாலையொன்றுங் கொடுத்து மந்திரியுடன் மட்டக்களப்புக்கு அனுப்பிவிட்டான்.

குணசிங்கனும் திருமுகத்தை வாசித்துச் சந்ததி உரிமை கொண்டாடி மட்டக்களப்புக்கு வடபால் மண்ணேறி முனைவளர்ந்து காடு செறிந்து குடிவாழ்வற்ற பகுதியை நிந்தமாயீந்து, குடிகளையனுப்பிக் காடுகளை வெட்டித் தூர்த்து, மாளிகையுமுண்டாக்கி உலக நாச்சிக்குக் கொடுத்தான். உலகநாச்சியும் தன் தம்பியைத் தந்தையிடத்தனுப்பிக் குகக் குடும்பம் நூற்றாறும் சிறைக்குடும்பம் முப்பதும் எடுப்பித்து அருகிருத்தி ஆலயமியற்றிச் சிவலிங்கத்தையும் ஸ்தாபித்து வணங்கி வந்தனள்.

பின்பு இன்னும் ஒரிசா நகரமிருந்து அநேக குடும்பங்களை அழைத்துக் காப்பு முனைக்காட்டை அழித்துச் செப்பனிட்டுக் குடியேற்றி அப்பதிக்கு அரசினளாகி மண்முனையென நாமஞ்சுட்டி வாழுங்காலம்; காப்பு முனைக்குத் தென்பாகமாயுள்ள காடுகளை அழிப்பிக்கும் போது திடகன் என்பவன் கொக்கட்டி மரத்தை வெட்ட உதிரம் பாய்ந்தது. அதைக் கண்ட திடகன் தனது உடைத்துகிலால் மரத்து வெட்டு வாயைக் கட்டிவைத்து விட்டு வந்து உலகநாச்சியிடம் செய்தியைக் கூறினான். உலக நாச்சியும் அந்த இடத்துக்குச் சென்று பார்த்தபோது மரத்தடியில் ஒரு லிங்கம் இருந்தது. மற்றவர் கண்ணுக்குப் புலப்படாதபடியால் உலகநாச்சியும் சிவலிங்கமெனத் திட்டஞ் செய்து அவ்வனத்தை அழிப்பித்துத் தூசிநீக்கி ஆலயமியற்றி வடநாட்டுக் கொல்லடத்திலிருந்து பட்டர் மூவரை வரவழைத்துப் பூசை புரியும்படி திட்டஞ்செய்து அதிக கழனிகள் திருத்திக் குணசிங்கனுடன் பிறந்தானாகிய கிரசரன் என்பவனை மணந்து ஒரு புத்திரனையும் ஒரு புத்திரியையும் பெற்று வாழ்ந்து வருங்காலம் தந்த புரத்திலிருந்து ஆரந்தொடுக்குங்குடிகள் பதின்மரையழைத்துத் தனது பதிக்கருகாயிருத்திப் பத்தனென்பவனை அவர்களுக்குத் தலைவனாய் வைத்து இரண்டு ஆலயங்களுக்கும் ஆரங்கட்டுங் குடிகளாய் வகுத்தனள்.

பின்பு கலிபிறந்து மூவாயிரத்தைந்நூற்று முப்பதாம் வருடம் குணசிங்கனின் புத்திரன் கனகசேனனுக்கு மட்டக்களப்பையும், உலகநாச்சியின் புத்திரன் அதிகதன் என்பவனுக்கு மண்முனையையும் இருதினங்களிற் பட்டங்கட்டினர். அதிகுதன் மனைவி நாமவல்லி. கனகசேனனுடைய மனைவி அருந்தாள். இவர்கள் இலங்கையிலுள்ளவர்கள், இவர்களின் சந்ததிகளே மட்டக்களப்பு மண்முனை இருபகுதிகளையும் இருநூறு வருடங்களாக ஆண்டு வந்தனர். அதன் பின் கலிங்க குலத்து வங்கலாடன் என்பவன் ஆட்சிக்கு வந்தான் என்று தொடர்கின்றது. இவ்வரலாற்றினை நோக்குமிடத்துக் காலம், வரலாறு என்பவற்றைக் கொண்டு சரியெனக் கொள்ளலாம்.

கிழக்கிலங்கையைப் பொறுத்தமட்டில் சைவமும் தமிழும் தொன்றுதொட்டு நிலை பெற்றுள்ளதென்பதற்குக் காலத்தாற் றொன்மைவாய்ந்த பிரசித்தி பெற்ற கோயில்கள் இப்பகுதிகளிற் காணப்படுகின்றமையும், இவை "திருப்படைக்கோயில்கள்" அல்லது "தேசத்துக் கோயில்கள்" என வழங்கப்படுவனவுமாகும். இந்த வரிசையிலே தான்தோன்றீச்சரமும் வழங்கப்படுவதேயாகும். வேடராற் கொத்துப் பந்தலிட்டு நீண்டகாலமாக வழிபட்டு வந்ததென்பதும் கதை. அதன்பின் உலகநாச்சி ஆலயமியற்றினாள் என்பது வரலாறு. அதேயிடத்தில் நிலையான கோயில் கட்டியது யார் என்பதிற் பல ஐதீகங்கள். ஆனால் மட்டக்களப்பு மான்மீயம் என்னும் வரலாற்று நூலிலும் வேறுபட்ட கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

ஆனாற் பெரிய கல் வெட்டெனும் வரலாற்றேட்டில்; மட்டக்களப்பு நாட்டின் நிதியதிபனாகிய இலங்கைச் சிங்கனுக்கும் மனைவி சோபன முத்துவுக்கும் மகனாகத் தருமசிங்கன் என்பவன் கலிபிறந்து மூவாயிரத் தெண்ணூறெண்பத்தைந்திற் பிறந்தான் என்றும்; வளர்ந்து மட்டக்களப்பின் நிதியதிபனும் வீரம்மிக்க படைத்தளபதியுமான இவன் தோப்பாவை அரசன் சேனனது புத்திரி பவளமுத்து என்பவளை மணமுடித்தான் என்றும் இவனுக்கு நீண்ட காலமாகப் புத்திரரில்லாத குறையை நீக்கக் கருதிக் கொக்கட்டிச் சோலைத் தான்தோன்றீசுரர் ஆலயத்தைக் கல்லினாற் கட்டி அந்தணர் பத்ததியின் படி மதில் மண்டபங்களுமியற்றி மூன்று இரதங்களுஞ் சோழதேசமிருந்து அழைப்பித்து அபிசேகங்களுஞ் செய்து சிறைக்குடிகளும் வகுத்து வாழுங்காலம் ஒரு புத்திரன் பிறந்தான். அப்புத்திரனுக்குக் குமாரசிங்கன் என்னுந் நாமஞ்சூட்டி வளர்த்துப் பருவகாலமானபோது சேனனது புத்திரனின் புத்திரி சோதிமதியைப் பாணிக்கிரகணஞ் செய்து மட்டக்களப்பையும் பட்டங்கட்டிச் சில காலத்தின் பின் பரமபதமடைந்தான் என்றுங்கூறப்பட்டுள்ளது. ஆகவே தான்தோன்றீஸ்வரர் கோயிலைக் கட்டியவன் தருமசிங்கன் எனக் கூறுவதே பொருத்தமானதாகும். உலகநாச்சியின் வருகையும், மட்டக்களப்பிற் குணசிங்கன் ஆட்சிக்காலமும் கலிபிறந்து மூவாயிரத்தைந்நூறு என்பதால் இவ்வாலய வழிபாடு சுமார் ஆயிரத்தைந் நூற்றறுபது ஆண்டுகளுக்கு மேற்பட்டதென்றும்; அதன்பின் தருமசிங்கன் என்பவனாற் கற்கோயில் ஆயிரத்தைம்பது வருடங்களுக்குமுன் கட்டப்பட்டதென்பதும் கல்வெட்டுக் கூற்றுக்களாகும்.

நடந்த தேசமகாசபைப் பொதுக்கூட்டத்தில் இவ்வாண்டு (1911) தொடக்கம் ஆவணி மாதம் வளர்பக்கப் பிரதமையும் உத்தர நட்சத்திரமுங் கூடிய சுபவேளையிற் கொடியேற்றப்பட்டுப் பௌர்ணமியையடுத்து ஞாயிறு வாரம் தேரோட்டமும் திங்கள் தீர்த்தோற்சவமும் நடைபெற வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டு நடைபெற்று வந்தது. கடைசியாக1978ம் ஆண்டு ஆவணியிற் திருவிழாவும் தேரோட்டமும் நடந்தது.

## வருடாந்த உற்சவம்

ஆவணி மாதம் வளர்பக்கப் பிரதமையிற் கொடியேற்றத்துடன் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகும். அதையடுத்த ஐந்து திருவிழாக்கள் பொதுவாகக் கோயில் நிதியில் நடக்கும். அடுத்துத் தேசவன்னிமை, கோயிற்தொண்டுழியகாரர், வேளாளர், பெத்தாங்குடியார், கோப்பிகுடியார், கச்சிலாகுடியார், பணிக்கனார் குடியார், படையாண்டகுடியார், காலிங்கா குடியார், உலகிப்போடி குடியார், செட்டிப்பிள்ளைகள் என்ற தொடர்ச்சியிற் திருவிழாக்கள் நடந்து வந்தன. எனினும் பணிக்கனார் குடியினர் வெகுகாலத்துக்குமுன்பு திருவிழா நடத்தாது விட்டனர். அதே போன்று தேசவன்னிமை, வேளாளர், செட்டிப்பிள்ளைகள் ஆதியோருந் திருவிழாச் செய்யாது விட்டதனால் அவையாவும் கோயில் நிதியில் செய்யவேண்டியதாயிற்று. ஆயினும் 1969ம் ஆண்டிலிருந்து சட்டி குடியாருக்குத் திருவிழா கொடுக்கப்பட்டது. இறுதியாக எட்டுத் திருவிழாக்கள் மட்டுமே நடந்து வந்தன. அவ்வமுறையே கோயிற் தொண்டுழியகாரர், சட்டிகுடியார், பெத்தாங்குடியார், கோப்பிகுடியார், கச்சிலா குடியார், படையாண்டகுடியார், காலிங்காகுடியார், உலகிப் போடி குடியார் ஆகியோராற் திருவிழாக்கள் நடைபெற்றன.

இந்தத் திருவிழாக்களையடுத்து ஞாயிறுபகல் தேரோட்டத் திருவிழா நடக்கும். இது அன்று பிற்பகல் இரண்டு மணியளவில் ஆரம்பித்து மாலை ஆறுமணிவரை நடக்கும். தற்போது இரண்டு பெருந்தேர்கள் உள்ளன. கல்வெட்டுக் கூற்றுப் படி மட்டக்களப்பு மன்னன் தருமசிங்கன் என்பவன் இவ்வாலயத் திருப்பணியை நிறைவேற்றிச் சோழ நாட்டிலிருந்து மூன்று இரதங்களை வரவழைத்து இரதோற்சவம் நடத்தினான் என்பதும் யாம் முன்பு கண்டோம். அவ்வாறே மூன்று தேர்கள் இருந்தமைக்கான கர்ண பரம்பரைக் கதையும் ஒன்றுள்ளது. அதாவது முன்பு ஒரு உற்சவத்தின் போது வழமை போல மூன்று தேர்களும் அலங்கரிக்கப்பட்டு வீதிவலம் வர, ஆயத்தமாகி முதலில் விநாயகப் பெருமான் ஆரோகணித்த தேர் சென்றது. அதனையடுத்து ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு தேர்களும் செல்ல, இறுதியிற் சென்றதேர் வீதியின் தென்மேற்கு மூலையையடைந்ததும் அசையாது நின்றது. எவ்வளவோ முயற்சித்தும் முடியாமற் போகவே, மற்றிரு தேர்களையும் உரிய இடத்தில் விட்டு விட்டு அந்தத் தேர் நின்ற இடத்தில் அப்படியே விட்டு, அடுத்தநாள் இழுக்கலாம் எனவும் மக்கள் கலைந்து சென்றனர். அடுத்தநாட் காலை பார்த்தபோது தேர் அவ்விடத்தில் இல்லை. தேர் சென்ற தடத்தின் வழியாகச் சென்றபோது மேற்கே மட்டக்களப்பு வாவியில் விழுந்திருந்ததாகவும், அந்த இடம் அன்றுதொட்டுத் "தேர்தாண்ட (தாழ்ந்த) பள்ளம்" என இன்றும் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிகின்றது.

மற்ற இரண்டு தேர்களும் உள்ளனவெனினும் சித்திரத்தேர் எனப்படும் பெரிய தேர்முற்றாகப் பழுதடைந்துள்ளது. இது ஆறு பெருஞ் சில்லுகளையுடையதும் மரத்தாலான அழகான சிற்பங்களையுங் கொண்டது. காண்போர் மனதைப் பரவசத்திலாழ்த்துவன வாய இவ்வழகிய சிற்பங்கள் தற்போது அடையாளங்காண முடியாதவாறு சிதைந்து உருக்குலைந்த நிலையில் உள்ளனவென்பதை வேதனையுடன் குறிப்பிட வேண்டியுள்ளது.

அடுத்ததாகவுள்ள சின்னத்தேர் அல்லது பிள்ளையார் தேர் எனப்படுவது அவ்வளவு சேதத்துக்குள்ளாகவில்லையெனினும், தேர்கள் புதிதாகச் செய்யவேண்டிய மிக அவசிய தேவையுண்டென்பதையும் குறிப்பிட்டாகத்தான் வேண்டும்.

தேரோட்டம் முடிந்து தேர்கள் நிலையத்துக்கு வந்ததும் சுவாமிகள் தேர்களினின்றும் இறக்கி முகப்பு என்னும் மண்டபத்துள், பட்டுப்பீதாம்பரத்தில் வீற்றிருக்கச் செய்யப்படும். அன்றிரவு முழுவதும் அங்கேய சுவாமிகள் இருக்கத் தேரோடும் வீதியிற் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். அதிகமாக நாட்டுக்கூத்து நிகழ்ச்சிகளே இடம்பெறும்.

அடுத்தநாள் விடிவதற்கு ஆறு நாழிகைக்கு முன் பிரம்ம முகூர்த்தத்தில் இடபரூடராய்ச் சிவனார் எழுந்தருளப்பட்டுக் கொக்கட்டிச் சோலைக்கு வடக்கே முனைக்காட்டுக் கிராம எல்லையில் வீரபத்திர சுவாமி கோயிலுக்கு முன்பாக பெருநாவல் மரங்கள், சுரபுன்னை மினாட்சி, கரையாக்கு, காயான், மருங்கை ஆகியமரஞ் செடிகள் செறிந்த இயற்கையழகு மிளிர் காட்டுப் பகுதியில் அரனார் திருவேட்டை நடைபெறும். ஆணவ மலமாய பன்றியை எம் பெருமான் வேட்டையாடி ஆன்ம வீடேற்றந்தருவர் என்பது இதன் தத்துவமாகும். இதனை இப்பிரதேசமக்கள் புளகாங்கிதத்துடன்; 'பன்றிதின்றவன் பரமஞானி' எனத் தம்மிடையே கூறிக் கொள்வர். இத்திருவேட்டையின் போது. பாடப்படும் பாடல்கள் வருமாறு :

*திருச்சிற்றம்பலம்*

1 *சீராருஞ் செங்கமலக் கண்ணினானுந்*
*திசைமுகனு மிந்திரருந் தேவர்தாமும்*
*ஏராருங் கமல பத மிறைஞ்சி யேத்த*
*இலங்குசெந் திருக்கரத்தி லேந்தி யென்றும்*
*பாரேழும் வாழ்க மறைநான்கும் வாழ்கப்*
*பலவுயிரும் வாழ்க மிகப் பவுசுண்டாக*
*ஆராரும் போற்றுந் திருக்கோயில் வாழும்*
*அரனாருந் திருவேட்டை யாடினாரே.*

இக்கோயில் சிகரகோபுரமாக அமைந்து அழகாகக் காட்சியளித்திருந்தது. இது சுண்ணச்சாந்தினாற் கோளாங்கற்களைக் கொண்டு கட்டப்பட்டிருந்தது. இது இரு சுற்று மதில்களைக் கொண்டது. உட்புற மதிலின் நடுவண் சிவன்கோயில், அதனிடப்பாகமாகப் பார்வதியம்மன் கோயில் சிவாலய மகா மண்டபத்துடன் இணைந்ததாகத் தென்றிசை வாசல் கொண்டுள்ளது. பார்வதியம்மனுக்கெதிரே சிவாலய மகா மண்டபத்துட் கோயிலைக் கொள்ளையிட வந்த போர்த்துக் கீசத் தளபதியை விரட்டியோடச் செய்த நந்தி மூலலிங்கத்தை நோக்கியவாறு படுத்திருக்கிறது. இதுபார்ப்போரைப் பரவசப்படுத்தும்.

நான்காவது மண்டபம் பெருஞ்சுவர், பழைய ஓடுகளால் வேயப்பட்டிருந்தது. இதனுட்புறத்தே இருவரிசையாக அழகிய சித்திர வேலைப்பாடுகளைக் கொண்ட பெரிய முதிரைத்தூண்கள் அமைந்திருந்தன. இந்த மண்டபத்தினுள் நவவயிரவர் பலிபீடம் அமைக்கப்பட்டிருந்தது. மண்டபத்துக்கு வெளியே நந்திபலிபீடம் அறுபதடி உயரமுள்ள நாகமரத்திலான கொடிமரமும் அடியில் தண்டேஸ்வரும் அமையப் பெற்றிருந்தது. வாயிலில் முகப்பு என்ற பழைய மண்டபம் போன்றமைக்கப்பட்டிருந்தது. 1952ஆம் ஆண்டில் ஐந்தாவது மண்டபம் அமைக்கப்பட்டது. சிவாலயக் கர்ப்பக் கிருகத்தைச் சுற்றி அட்டபாலகர் பீடங்களும் அமைந்திருந்தன. இன்னும் உட்புற மதிலுக்குள் தென்மேற்கே பரிவார மூர்த்திகளாக விநாயகர் கோயில், வடமேற்கே முருகப்பெருமான் கோயில் அதன் இரு மருங்கும் வள்ளி, தெய்வானை கோயில்களும் வடபுறம் நவக்கிரக கோயில் அதனையடுத்துத் தீர்த்தக்கிணறு– வடகிழக்கே யாகசாலை, வாகனசாலையென்பனவும் அதனையடுத்துக் கிழக்கே வயிரவர் கோயிலும் மணித்தூணும், முகப்பையடுத்து மேற்குமுகமாக விஷ்ணுகோயில் அதற்கெதிராகக் கிழக்கு முகமாக முள்ளாலையடிப்பிள்ளையார் கோயிலும், தென்கிழக்குமூலையில் நெற்குத்துஞ்சாலையும் தென்புறமாக வடக்கு வாயிலைக் கொண்ட நாகதம்பிரான் கோயிலும், அதனையடுத்துத் தென்புறமாக விநாயகர் கோயிலுக்கிடையே களஞ்சிய அறைகள் மடப்பள்ளியென்பன ஒரே அமைப்பில் இருந்தன. இவையனைத்தும் உள்வீதியெனப்படும் உட்புற மதிலினுள்ளடங்கியவை. அத்துடன் உட்புறமாக வமைந்த சிவன், பார்வதியம்மன், விநாயகர், விஷ்ணு கோயில்களின் சிகரகோபுரங்களில் அழகாக நந்திகளே அமைக்கப்பட்டிருந்தன.

முகப்பு எனப்படும் முன்புறமண்டபம் உள்மதிலுக்கு வெளியே மதிலோடு ஒட்டியதாக இருமேடைகளை இருபக்கமுங் கொண்டிருந்தது. இந்த முகப்புமேடைகளில் தேரோட்டம் முடிந்ததும் சுவாமிகள் தேரினின்றும் இறக்கி வைக்கப்படுவர்.

வெளிமதிலுக்குள்ளிட்ட பகுதி வெளிவீதியெனப்படும். தேரோடும் வீதி, திருவிழாவலம்வரும் வீதியு மிதுவேயாகும். இவ்வீதியின் முன்பக்கம் வடபுறமாகச் சித்திரத்தேர் எனப்படும் பெரியதேரும் தென்புறமாகப் பிள்ளையார் தேர் எனப்படும் சிறியதேரும் இருக்கும். பிள்ளையார் தேருக்கு மேற்காகத் திருக்கொன்றை மரத்தடியில் திருக்கொன்றையடிப்பிள்ளையார் கோயில் அமைந்திருந்தது. இவ்வாலயத்தில் நந்தி பலிபீடம் என்பன இவ்விரண்டு அமைந்திருப்பதும் சிந்தனைக்குரியதேயாம். முதலாவது நந்தி மகா மண்டபத்துள் இருப்பது பொலன்னறுவை இரண்டாஞ் சிவாலயத்தில் இருக்கும் நந்தியை யொத்திருக்கின்றது. கட்டிடமுமவ்வாறேயமைதிருந்தது. காலத்துக்குக் காலம் புனருத்தாரண வேலைகள் நடந்து வந்துள்ளன. அதனிமித்தமாகச் சில மாற்றங்கள் கட்டிட அமைப்பில் ஏற்பட்டிருக்கலாம் என எண்ண இடமுண்டு. அதனடிப்படையிற்றான் இவ்வாலயப் புனருத்தாரண வேலைகள் செய்யப்பட்டுக் கடைசியாக 1947ம் ஆண்டு ஆவணி மாதத்தில் மகா கும்பிஷேகமும் நடைபெற்றது.

## பதிய கட்டிடங்கள்

1978.12.23ந் திகதி இப்பிரதேசத்தில் வீசிய பெருஞ்சூறாவளி இவ்வாலயத்தின் சிகரகோபுரத்திற் பெருஞ்சிதைவுகளையேற்படுத்தியது. இதனிமித்தமாகக் கோயிற் கட்டிடத்தை முற்றாக இடித்துப் புதிதாகக் கட்டப்பட வேண்டுமெனப் பொதுமக்கள் கருதினர். இதற்காக 1979.01.29ம் திகதி தேசமகா சபைப் பொதுக்கூட்டத்தில் ஆலயம் முற்றாக இடித்துக் கட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் முன்னாள் கி. த. பா. மயிலிப்போடி அவர்கள் இராஜகோபுரத்தைப் புதிதாகத் தமது சொந்தச் செலவிற் கட்டி ஒப்படைப்பதாகவும் தேசமகாசபைப் பொதுக்கூட்டத்தில் கேட்டு அங்கீகாரத்தையும் பெற்றுக் கொண்டார்.

அதன்படி 1979.06.11ந் திகதி அதிகாலை சுவாமி வாலஸ்தாபனம் ஸ்ரீலஸ்ரீ க. தியாகராசாக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. அதனையடுத்துப் பொதுமக்களால், சிரமதான அடிப்படையிற் கோயில் முழுமையும் இடிக்கப்பட்டு அப்புறப்படுத்தித் துப்புரவு செய்யப்பட்டது. ஏற்கனவே 1979.04.22ந் திகதி, கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஸ்தபதி கோண்டாவில் தங்கவேல் ரமணனின் கர்ப்பக்கிருக வரைபடத்திற்கமைய 1979.08.27ந் திகதி நள்ளிரவு சுபவேளையில் புதிய கட்டிடத்துக்கான அடிக்கல் வண்ணக்குமாரால் வைக்கப்பட்டது.

1979.09.07ந் திகதி காலை சுபவேளையில் புதிய இராஜகோபுரத்துக்கான அடிக்கல் முன்னாள் கி. த. பா. மயிலிப் போடி அவர்களால் வைக்கப்பட்டது. இவைகளைத் தொடர்ந்து கட்டிட வேலைகள் நடைபெற்றன. ஆயினும் முன்பிருந்த சிற்பங்களுக்கு, இப்போதுள்ள சிற்பங்கள் முற்றிலும் மாறுபட்டவையாகவேயமைந்துள்ளன.

இராஜகோபுரம் முடிவுறும் வேளை திரு. பா. மயிலிப்போடி அவர்கள் இறைவனடி சேரவே; அவரது குடும்பத்ினர் செய்து முடித்தனர். தீர்த்தக்கிணறும் இடிக்கப்பட்டு இருந்த இடத்துக்கப்பால் மேற்காக செங்கல், சீமெந்து கொண்டு

கட்டப்பட்டுள்ளது. முன்பு இருந்த தீர்த்தக் கிணறு தனித்தனிக் கருங்கற்கள் செதுக்கப்பட்டுச் சதுரமாகக் கட்டப்பட்டிருந்தது. அந்தத் தீர்த்தத்தின் தன்மை, மகிமையென்பன பற்றி யறிந்தவர்கள் வித்தியாசங்கண்டு கொள்வர். இதே போன்று புதிய கொடிமரமும் மூலலிங்கத்தின் பக்கமாக ஆறுமீற்றர் அளவில் நகர்த்தி நடப்பட்டுள்ளது.

நவக்கிரக கோயில் இலுப்பையடிச் சேனை, திரு. க. ஞானமுத்துப்போடியவர்களாற் கட்டப்பட்டிருந்ததை இடித்து அதற்குக் கிழக்குப்புறமாகக் கட்டப்பட்டுள்ளது.

சண்டேஸ்வரர் ஆலயம் முதலைக்குடா திரு. ஆ. சிவஞானம் அவர்களாற் கட்டப்பட்டுக் குடும்பத்தினரால் முடிக்கப்பட்டது.

மணித்தூண்கள் வடபுறமாக அரசடித்தீவு திரு. வே. தம்பிராசா அவர்களாலும் தென்புறமாக முதலைக்குடா திரு. க. விநாயகமூர்த்தி அவர்களாலும் கட்டப்பட்டுள்ளன.

சிவாலயத்தின் கர்ப்பக் கிருகத்துக்குத் தென்மேற்குப்புற உள்வீதியில் விநாயகர் ஆலயம் முதலைக்குடா திரு. சி. பாலசுந்தரம், திரு. மு. கருணாநிதி ஆகியோராற் கட்டப்பட்டுள்ளது. அதே வரிசையில் விஷ்ணு கோயில் உலகிப் போடி குடியின் ஒரு பகுதியினரான சங்கையன் கூட்டத்தினராற் கட்டப்பட்டுள்ளது. அதையடுத்து நாகதம்பிரான் ஆலயம் முனைக்காடு திரு. தே. சீனித்தம்பி உடையாரின் குடும்பத்தினராற் கட்டப்பட்டுள்ளது. அடுத்து முருகப் பெருமான் ஆலயம் படையாண்ட குடியினராற் கட்டப்பட்டுள்ளது. மூலலிங்கத்துக்கு வடகிழக்கே உள்வீதியில் வயிரவர் ஆலயம் திரு. சி. கனகசூரியம் பண்டிதர் அவர்களின் குடும்பத்தினராற் கட்டப்பட்டுள்ளது.

உள்வீதியில் வடகிழக்கே வாகனசாலை, நூல் நிலையம், யாகசாலையென்பன அமைக்கப்பட்டுள்ளன. உள்வீதியின் தென்கிழக்காக நெற்குத்தும் சாலை இருந்த இடத்தில் காரியாலயம், களஞ்சிய அறைகள், மடப்பள்ளியென்பன தொடர்ச்சியாக அமைக்கப்பட்டுள்ளன.

## ஆலய நிர்வாகம்

இவ்வாலய நிர்வாகம் தொன்றுதொட்டு முற்குகவம்சத்தைச் சேர்ந்த உலகிப்போடி குடி, காலிங்காகுடி, படையாண்ட குடி ஆகிய மூன்று குடி வண்ணக்குமாரின் பரிபாலன சபை அமைப்பில் நடைபெற்றுவந்துள்ளது. வண்ணக்குமார் அவ்வக் குடிப் பொது மக்களாற் தெரிவு செய்யப்படுவர். பதவி ஆயுட்காலம் வரை நீடிக்கும். இந்த மூன்று குடியினர் கலந்த சம்பந்த முள்ளவர்களே வண்ணக்குக்குத் தகுதியுடையவராவர். அதாவது தாய்வழி குடிவழியும் தகப்பன் மற்ற இரு குடிகளில் ஒன்றிற்கலந்து பிறந்தவராக இருக்கவேண்டும் என்பது நியதி. இந்தப் பாரம்பரிய முறைப்படியே ஒவ்வொரு குடி வண்ணக்கரும் தெரிவு செய்யப்படுவர். இதில் மாற்றம் ஏற்படாதென மாகோனுந் திட்டஞ் செய்துள்ளாரெனத் திருப்படைக்களஞ்சியம் கூறுகிறது. வேறும்பல, சுத்த சத்திய சன்மார்க்கநெறிகள் கொண்ட தகைமைகளும் வண்ணக்கராக வருபவர்க்கிருக்கவேண்டு மெனவும் கூறப்பட்டுள்ளது.

ஆயினும் நிர்வாகச் சீர்கேடுகள்; சிறப்பாக நிதிநிர்வாக ஊழல்கள் காலத்துக்காலம் ஏற்பட்டதும் நிர்வாகச் சீர்திருத்தங்கள் நடைபெற்று வந்துள்ளன. அதன்படி இந்த நிருவாகத்தைப் பரவலாக்கக் கருதிய பொதுமக்கள் 1930.08.06ந் திகதி நடந்த தேசமகாசபைப் பொதுக்கூட்டத்தில் பழைய நடவடிக்கைகளைத் திருத்தியமைத்து வண்ணக்குமாரை இணைக்காரியதரிசிகளாக வைத்து நிருவாக சபை பிரதேசவாரியாக உறுப்பினர்களைக் கொண்டதாக அமைத்து நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. அதுவும் தொடர்ந்து செயற்படாமற் போகவே, மீண்டும் வண்ணக்குமாரின் நிர்வாகம் நடந்து வந்தது. அவ்வேளை 1976.11.24ந் திகதி புதன்கிழமையிரவு கள்வர் கோயிலினுட் புகுந்து ஸ்ரீதான் தோன்றுலிங்கத்துக்குத் தொன்று தொட்டுப் பூசைக்கு வைத்துப் பூசித்து வந்த தங்கத்திலான, லிங்கத்துக்கு அணியும் முடி, தங்கத்தாற்புஷ்பம், தங்கத்தாலான அரிசி (ஒரு சிறங்கையளவு) வேல்கள் என்பன களவாடப்பட்டு விட்டதாகக் கதையடிபட்டது. ஆனால் எப்போ, எப்படி, யாராற் களவாடப்பட்டதென்பது தெரியாது. காரணம் மேற்படி பொருட்கள் எவருங்காணாதபடி லிங்க பூசைக்கு முடி, புஷ்பம், அரிசி, வேல்கள் என்பன வைத்துப் பூசை முடிந்தபின் அவற்றையெடுத்து அதற்கென அமைக்கப்பட்ட பித்தளைத் தட்டில் வைத்து அதன் மூடியினால் மூடி வைப்பதும் நேரந்தவறாது பூசைக்கு மட்டுமே எடுப்பதும் வைப்பதும் வழமையாக நடப்பது. குருக்கள்மாருக்கும் அமுது வைக்கும் பையனுக்கும், வண்ணக்குமாருக்கும் மட்டுமே இப்பொருட்கள் பற்றிய விபரம் தெரியும். மற்றவர்களுக்குத் தெரிவதற்குச் சந்தர்ப்பங்க ளேதுவுமில்லை.

இதைக் கேள்விப்பட்ட பொதுமக்கள், விசேடமாக இப்பகுதி இளைஞர்கள் பெரும்பாலானோர் கிளர்ந்தெழுந்து பரந்த அளவில் அறிவித்தல் கொடுத்துப் பொதுக்கூட்டம் 1976.11.26ந் திகதி கூடியபோது, கூட்டத்துக்கு அப்போதிருந்த வண்ணக்குமார் மூவருமே சமூகந்தராதபடியால் மீண்டும் ஒலிபெருக்கி மூலம் எங்கும் அறிவித்தல் கொடுத்துப் பொதுக்கூட்டம் 1976.11.28ந் திகதி ஞாயிறன்று கூடியபோது ஏராளமான பொதுமக்கள் கூடியிருந்தனர். வண்ணக்குமாருஞ் சமூகமளித்திருந்தனர். இந்த நிருவாகம் முற்றாக மாற்றியமைக்கவேண்டும் என்ற வாதப் பிரதிவாதங்களின் பயனாக ஒரு சமரச முடி வெடுக்கப்பட்டது. அதன்படி 1976.11.28ந் திகதியன்றே தேச மகாசபைப் பொதுக்கூட்டத்தில் எட்டுத் திருவிழாக்காரரிடையேயிருந்து தலா இருவர் வீதம் தெரிவு செய்யப்பட்ட பதினாறு பேர் கொண்ட நிருவாக சபை உறுப்பினர்களுடன் மூன்று வண்ணக்குமாரும் மொத்தம் பத்தொன்பது பேர் கொண்ட நிருவாக சபை அமைக்கப்பட்டது. அதிற் காலிங்காகுடி வண்ணக்கர் தலைவராகவும் உலகிப்போடி குடி வண்ணக்கர் பொருளாளராகவும் படையாண்ட குடி வண்ணக்கர்

செயலாளராகவும் இருந்து செயற்படவேண்டும் எனவுந் தீர்மானிக்கப்பட்டது. இதற்கென ஒரு உபவிதியும் ஆக்கப்பட்டு 1978.09.24ந் திகதி தேசமகா சபைப் பொதுக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறையிலுள்ளது.

## தேசவன்னிமை.

தேச வன்னியமை யாகப் பூபாலகோத்திரத்தவர்களே இருப்பர். இவர்கள் கலிங்க வேளாளர். அந்தப் பரம்பரையிலுள்ள வன்னியர் வம்சம் சந்ததியற்றுப்போனதால் அப்பதவி பிற்பட்டகாலத்தில் அத்தியாகுடி வேளாளருக்கு வழங்கப்பட்டது. தான் தோன்றீஸ்வரம் பற்றிய கல்வெட்டுப் பாடல்களிற் கோயிலுடன் தொடர்பு கொண்டிருந்த குகன் இராசவன்னிமை; பூபாலகோத்திரவன்னிமையென்னும் இரு வன்னிமை வம்சங்களை யறிய முடியும். அந்நியராட்சிக் காலத்தில் தங்கள் அதிகாரப் பொறுப்பினையிழந்தனரெனினும் ஆலயங்கள் தொடர்பான அவர்களது மரபு வழியான உரிமைகள் தொடர்ந்தும் நிலைபெறலாயிற்று. அதுவும் நவீன காலத்தில் அதிகாரமற்றனவாயின. முற்காலத்திற் தேசவன்னிமை யென்பவரதும் கடமை முக்கியமானதும், முதன்மையானதுமாக இவ்வாலயத்தில் வேரூன்றியிருந்த தெனலாம். காலப்போக்கில் அது மெல்ல மெல்ல அருகிப் போயிற்று. அத்தோடு வேளாளரும் தம் கடமைகளை விட்டு விலகிக் கொண்டனர். மிக அண்மைக் காலத்தில் 1962 களில் முற்றாக விலகிக் கொண்டனர் எனலாம்.

## கோயிற்குருமார்

தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின்ஆரம்பத்திலிருந்தே சங்கமக் குருக்கள்மார் பூசை செய்து வந்துள்ளனர். அதனையுஞ் சுருக்கமாகக் குறிப்பிடவேண்டியுள்ளது. சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுவர் சைவ சமயத்தவர் ஆவர். சைவம் ஆறு பிரிவுகளையுடைது. அவற்றுளொன்று வீரசைவம். வீரசைவர் மூன்று காலமும் சிவலிங்க பூசை செய்பவராவர். இவர்களிலும் மூன்று பிரிவினருளர்.

இந்தியாவிலே தோன்றிய வீரசைவம் இலங்கைக்குவந்த தெவ்வாறெனின், திருக்கோயிற் திருப்பணியை நிறைவேற்றிய புவனேய கயபாகு தன் மனைவியின் தந்தை திருச்சோழனுக்குத் திருமுகமனுப்பிச் சிற்பிகளையும் திரவியங்களையும் வரவழைத்ததோடு நாகார்ச்சுன புரத்திலிருந்து சங்கமக் குருமார் பலரை வரவழைத்துக் குடமுழுக்குச் செய்வித்து அரனூழியமும் வகுத்தமைத்து மட்டக்களப்பு மன்னன் பிரசன்ன சித்துவிடம் ஒப்படைத்தான் என்பது வரலாறு. இது நடந்தது கலிபிறந்து 3110 ஆகும்.

அதன்பின் பிரசன்ன சித்துவின் மகன் தாசகன் காலத்திலும் சங்கமக் குருமார் தம்பட்டர் என வழங்கப்பட்டனர். இவர்கள் குடியிருந்த இடம் தம்பட்டையென வழங்கலாயிற்று. அதன்பின் உலகநாச்சியும் தான்தோன்றீஸ்வர ராலயத்துக்குப் பூசை செய்ய வட நாட்டுக் கொல்லடத்திலிருந்து பட்டர்கள் மூவரையும் வரவழைத்துப் பூசகர்களாக நியமித்திருக்கிறார். இப்படிக் காலத்துக்குக் காலம் வீரசைவப் பரம்பரையைச் சேர்ந்த சங்கமக் குருமார் வரவழைக்கப்பட்டிருக்கின்றனர். இலங்கையில் மாகோனாட்சிக் காலத்திலும் வீரசைவம் சிறப்புற்றிருந்த தென்பதும் யாமறிந்ததேயாம்.

இவர்கள், வீரசைவர், சங்கமர், லிங்கதாரிகள், தம்பட்டர், பண்டாரம், இருபாகையார் என இடத்துக்கிடம் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுவர். ஆசாரி அபிசேகம் பெற்று இலிங்கத்தை மார்பிலணிபவர் இலிங்க தாரிகள் எனப்படுவர். இலிங்கதாரிகளல்லாதவர் சிவாலயங்களிற் பூசை செய்யத் தகுதியற்றவராவர். இருபாகையார் என்பதும் இவர்களேயாகும். அதாவது பதவி வழியாக ஒரு பாகையும் குலத்தின் வழியாக ஒருபாகையுமாகச் சேர்ந்து இருபாகையாராகவிருக்கலாம்.

பிற்பட்ட காலத்தில் இவர்களுடைய கோத்திர வழிமுறையின்படியன்றி விவாகத் தொடர்புகள், காலதேச வர்த்தமானங்களுக்கியைய வீரசைவப் பரம்பரையினர் வேளாளருட் கண்டங்குடியாருடனும் முற்குக வம்சத்தவருள்ளே பணிக்கனார்குடி, மழுவரசன் குடி என்பவரிடையே வைத்திருந்தனர். இக்கலப்புத் திருமணமுறையால் வீரசைவப் பரம்பரையற்றுப் போகலாயிற்று. இச்சிவாலயக்குருமார் நிலையு மஃதேயாம்.

சிறப்பாக மாகோன் காலத்திற் தான்தோன்றீஸ்வரர் ஆலயக் குருமார் இவ்வாலயத்தில் அக்கறையுடையவராகவும் வழிபடுவோர்க்குச் சிறந்தவழிகாட்டிகளாகவும் இருந்திருக் கின்றனர். அவை தொடர்ந்திருந்து வந்தது. இக்கோயிற் குருமார் சைவ சமயக் கொள்கைகளைப் பரப்புபவர்களாகவும் அதன் பொருட்டுச் சமய போதனைகள், கடவுள் வழிபாட்டு முறைகள் என்பவற்றைக் கற்பிப்பவர்களாகவும் இருந்தனர். குருகுலக் கல்விமுறையிற் கல்வி வளர்ச்சி, ஆன்மீக வளர்ச்சி என்பவற்றைப் போதித்தனர். அத்துடன் சோதிடம், சித்தவைத்தியம், விஷவைத்தியம், மாந்திரீகம் என்பவற்றிலும் திறமையுடையராயிருந்து மக்கட் பணி செய்தனர் என்பதையும் அறியக் கிடக்கின்றது.

மக்கள் தமக்கு எக்குறையானாலும் எந்தத் தீராத நோயானாலும் எம் பெருமானாலயத்துக்குச் சென்று அவரையே நம்பிப் பழிபடுத்துக் கொள்வர். அவற்றுக்கான தீர்வுகளை, எம்பெருமான் கனவிற் தோன்றி இக் குருமாருக்குணர்த்தியதன் பொருட்டு மக்களது துன்ப, துயர் நீங்கியமையும் நாமறிந்ததேயாம். ஆனால் இன்று அந்நிலை முற்றாக இல்லாமற் போயின. இப்படி இவ்வாலயத்தின் பூசகர்களாக இருந்தவர்களையும் இப்போதுள்ள குருக்கள்மாரையும் நாம் இச்சந்தர்ப்பத்தில் நோக்க வேண்டியதுமுண்டு.

ஆலயத் தொழும்புகள், அன்றிருந்தே வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டுவந்துள்ளது. இவர்கள் கோயில்களிலே தொண்டு செய்பவர் என்று குறிப்பிட முடியாது. அவர்கள் தம் சேவைகளுக்கேற்ப ஊதியம் பெறுபவராவர். இவர்களது சேவையும் காலத்துக்குக் காலம் உறுதிப்படுத்தப்பட்டு வந்துள்ளது. இவர்கள் முன்பு ஒரு காலத்திற் தேவாலயக் கடமைகளை உதாசீனஞ் செய்து அந்நியருக்காட் பட்டிருந்த போது கலிங்கமாகன் ஆட்சிக்கு வந்தான். அவன் மட்டக்களப்பு நாட்டிலே அரசியல், சமயம் (வீரசைவம்) பொருளாதாரம் என்பவற்றிற் கண்டிப்பான விதிகளை நடைமுறைப்படுத்தினான் என்பது பெரியகல்வெட்டு. இவன் கலிங்க மன்னன் மனுவரதனின் மூன்றாவது மகன் மாகோன் என்பவனாகும். இவன் கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோப்பாவை (பொலன்னறுவை)யில் இருந்து அரசு செய்தான். இலங்கை முற்றிலுமுள்ள கலிங்க குலத்தவருக்குத் தேச இராசகுலமென விருதுகளுயர்த்திக் கதிர்காமத்திலும், விசய துவீபத்திலும் (அனுராதபுரத்திலும்) சிவாலய முன்னீடும் பெற்று மட்டக்களப்பிற் கலிங்கரே எக்காலமும் இராசகராகவும் படையாட்சி, வங்கர் இருகுலத்தவரும் மந்திரிகளாக வரவேணும் எனத் திட்டஞ்செய்து, வட இலங்கையென இராமேஸ்வரத்தை இலங்கையோடு சேர்த்து தோப்பாவையில் இருந்து அரசு செய்தான் என்றும், மட்டக்களப்பு முற்றுந்தமிழ் மதமே வழங்கச் செய்து ஆலயநடைமுறைகளையும் வகுத்தான் என்பதுவுமாகும். அவற்றைப் பின்வருங் கல்வெட்டுப் பாடல்கள் விளக்குவனவாகும்.

1. *அந்தணர்கள் மாகோனைக் கண்டு போற்றி*
   *அரனகத்து ஊழியர்கள் பண்டு நாகர்*
   *பந்தமதிற் சேர்ந்து கயல்பிடித்து உண்டு*
   *பண்டுநாள்கலிங்கனிட்ட கடமைமாற்றிச்*
   *சந்தியந்தி நாமமிட்டு அரனைத் துதித்துத்*
   *தசரதன்றன் மகன் ராமன்றன்னைப் போற்றி*
   *இந்து தமிழில்லை யென எங்கள் முன்பு*
   *ஈட்டிதரும் பூட்டி தந்து மிகழ்ந்து சொல்வார்.*

2. *இகழ்ந்தவர்களனைவரையும் மாகோன்கண்டு*
   *இருவிழியை யெடுத்தடித்து மிடுக்கண்செய்து*
   *மகிழ்ந்து அரிநாம மிட்டோர் தமைக் கழுவில்*
   *வைத்தபின்னர் சைவ மதம் வளர்ந்து ஓங்க*
   *புகழ்ந்து சிவ ஆலயங்கள் பூத்திலங்க*
   *பூசுரர்கள் சொற்படியே ஊழியங்கள் புரிவோர் தம்மைச்*
   *செகந்துதிக்கக் கோவைசியர் தன்னிலேழு*
   *சிறைபாக்கித் திருநாமஞ் செப்பக் கண்டார்.*

3. *கண்டனொடு சருகு பில்வி கட்டப்பத்தன்*
   *கருதரிய கவுத்தனு மத்தியாயன்*
   *மண்டலத்திற் பொன்னாச்சி வயித்தி யென்று*
   *கோவைசியர் மக்களிலே வருணமாக்கி*
   *பண்டுமுறை தவறாம லெழு குடியாய்ப்*
   *பகுத்தீசர் பணிபுரியப் பரவணியாய்*
   *அண்டர் தமைச் சாட்சிவைத்துத் தத்தம் வாங்கி*
   *ஆலயத்து ஊழியராய் அமைத்துச் சொல்வான்*

4. *சொல்லரிய விளக்கேற்றல் பூவெடுத்தல்*
   *தூரசுற்றல் சாணமிடல் பணிவிளக்கல்*
   *நல்ல மலர் மாலைகட்டல் மேளமீட்டல்*
   *நற்சந்தன மரைத்திடுதல் நெல்லுக்குத்தல்*
   *துல்லியமாய் விழாச்சிவிகை ஏந்திச் செல்லல்*
   *தூளிகட்டி அமுது வைத்தல் முதன்மை பார்ப்பான்*
   *நல்லபதம் நீர்வார்த்தல் அகத்திற் தொண்டு*
   *நடத்துமென்று மாகோனும் நவில்வான் பின்னும்*

5. *பின்னாக வரு மரசனிதனை மாற்றப்*
   *பிடித் தடித்துத் துலங்கிலிட்டு வருத்தினாலும்*
   *உன்னாணை உங்களெழு வகுப் போர்க்கிட்ட*
   *உத்தரவு மாற்றி லெழு நரகில் வீழ்ந்து*
   *என்னாணை உங்கள் பிற்சந்ததிகள்*
   *எண்ணூளிகால மட்டும் வறுமையுற்றுத்*
   *தன்னாணைச் சதாசிவனார் பாதத் தாணைச்*
   *சங்கரனார் ஊழியராய்த் தரிப்பீரென்றான்.*

இது இவ்வாறிருக்க வேளாளர் இச்சிவாலயத்துக்கான தொண்டூழியங்களையும் மற்றுஞ் சேவைகளையும் விட்டு விலகிக் கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக ஒதுங்கிக் கொண்டனர். ஆனாற் கோயிற் தொண்டூழியகாரரான பொன்னாச்சி வயிற்றுவார், கங்காணி கூட்டம், மம்மாலி கூட்டம், வேடகத்தன்ற ஆகிய குடிப்பிரிவினர் தத்தங் கடமைகளைத் தொடர்ந்து செய்து வருகின்றனர் என்பது பாராட்டுக்குரியதேயாம்.

## நித்திய நைமித்திய பூசை விழாக்கள்

தொன்று தொட்டுத் தினமும் மூன்று வேளை பூசை நடைபெறுகின்றது. மேலும் சித்திரை வருடப் பிறப்பு, சித்திரைச் சித்திரை, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆடிப்பூரம், ஆவணி ஓணம், நவராத்திரி விரதம், கேதாரகௌரி விரதம், ஸ்கந்த ஷஷ்டி விரதம், கார்த்திகைக் கார்த்திகை, தீபம், விநாயக விரதம், மார்கழி ஆதிரை, பொன்னூஞ்சல், தைப்பொங்கல், தைப்பூசம், மாசிமகம், மகாசிவராத்திரி விரதம், பங்குனி உத்தரம் என்பன விசேட பூசை விழாக்களாக நடைபெற்று வருகின்றன.

வருடாந்த உற்சவம் தொன்றுதொட்டுப் பங்குனி மாதத்தில் வரும் உத்தர நட்சத்திரத்தையும் பௌர்ணமித் திதியையும் மையமாகக் கொண்டு திருவிழா தேரோட்டம் என்பன நடைபெற்றன. ஆயினும் இப்பிரதேச மக்களின் பிரதான தொழில் விவசாயமொன்றேயாதலாற் பெரும்போக வேளாண்மை அறுவடை பங்குனி மாதத்தில் உச்சக்கட்டத்திலிருக்கும். அதன் காரணமாகப் பொதுமக்கள் தம்வசதி கருதி, 1911.06.04ந் திகதி

2. *சீதமதி முகத்தரிவை மாதர்சூழத்*
*தேவர்கள் பூமழை பொழியத் தேசம்வாழ்க*
*வேதநெறிமுறை தவறாநீதி யோங்க*
*மேதினியோர் ஈடேறக் கலிகள் தீரத்*
*தீதகலக் கொடிய சத்துரு ஏனம் வீழ்கச்*
*செங்கையிற் பொற்றங்க வரிச் சிலையை யேந்தி*
*ஆதவனார் மறைந்த விருளூடே யேகி*
*அரனாருந் திருவேட்டை யாடினாரே.*

3. *சீரிலங்கு ரெட்ணமணி முடியிலங்கத்*
*திகழ்கரமோ டிரண்டிலங்கச் செவியிலங்க*
*மேரிலங்கு தோளிலங்க மார்பிலங்க*
*விபூதிபணி நுதலிலங்க விழியிலங்க*
*வாரிலங்கு தனமிலங்க இடையிலங்கு*
*வளர்மதிபோல் உமையவளும் இடமருங்கிலங்க*
*ஆரிலங்கு இடபமதிலங்கச் சுவாமி*
*அரனாருந் திருவேட்டையாடினாரே.*

4. *கார்மேவு கரித்தோலு மசைந்தேயாடக்*
*கங்கை தனைத்தரித்த திருச்சடையுமாட*
*மார்மீதி லெழும் பணிந்த மாலையாட*
*மான் மழுவுங் கைதனிலே மகிழ்ந்தேயாடப்*
*பாரேழுங்காத்த திருப்பாத மாடப்*
*பார்வதியு மிடப்பாகம் பரிந்தேயாட*
*ஆர்மேவு மழகான நந்தியாட*
*அரனாருந் திருவேட்டை யாடினாரே.*

5. *முப்புரத்தை நீறெனவே எரித்த கோலம்*
*முயலகனை நெறு நெறென மிதித்த கோலம்*
*சுப்பிரமணியர் தமைத் தந்த கோலம்*
*சுடலைதனில் நடனமது கொண்ட கோலம்*
*தைப்பூசமாடிச் சந்தோஷித்த கோலம்*
*சாட்சாதி சாத்வீக மானகோலம்*
*அப்பரென அனைவருக்கும் அமைந்தகோலம்*
*அரனாருந் திருவேட்டையாடினாரே.*

6. *மாமனென வழக்குரைத்த ஆதிமூர்த்தி*
*வாணிச்சி பிட்டையுண்ட வரியமூர்த்தி*
*சோமசேகர னாமம் பூண்ட மூர்த்தி*
*சோதியை யருணாசலத்திற் றந்த மூர்த்தி*
*தேமருவுந்திரு வாரூருறைந்த மூர்த்தி*
*செப்பவேட னெச்சி லுண்ட மூர்த்தி*
*ஆவிடை மேலமர்ந்தருளு மாதிமூர்த்தி*
*அரனாருந் திரு வேட்டை யாடினாரே.*

7. *ஆதிவேதாந்த மதி லமர்ந்தாய் போற்றி*
*அருச்சுனர்க்குப் பாசுபதமளித்தாய் போற்றி*
*காதில் வெண்குழை தோடுங் கலந்தாய் போற்றி*
*காலனையும் முன்னாளிலுதைத்தாய் போற்றி*
*பாதிமதி தனைச் சடையில் வைத்தாய் போற்றி*
*பச்சைமால் மைத்துனனாய் வந்தாய் போற்றி*
*சோதியாய்ச் சுடரொளியாய் நிறைந்தாய் போற்றி*
*சொம்பாதியிலங்கு உமை சதா சிவமே போற்றி போற்றி*

*திருச்சிற்றம்பலம்*

இப்பாடல்களொவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பாவனையில் வளைந்து வளைந்து வேட்டையாடப்படும். விடியுமட்டும் சூகரவேட்டைத்திருவிழா நடைபெறும்.

அடுத்து வீரபத்திர சுவாமி கோயிலுக்குத் தென்புறமாக வெண்பட்டுவிரித்தது போன்ற வெண்மணற் பரப்பிலேயமைக்கப்பட்ட அலங்காரப் பந்தலினூடே சுவாமி இளைப்பாறி வீற்றிருக்கக் குடுக்கை கூறும் நிகழ்ச்சியிடம் பெறும். இதைக் கஞ்சிமுட்டி, வரிசை முட்டியெனக் கூறப்படும். இந்த வரிசை முட்டி மட்டக்களப்பு நாட்டில் வாழும் பல்வேறு வகுப்பினரும் குடிவழி மரபினரும் பதினெண் சிறைகளாக வகுக்கப்பட்டுத் தொண்டூழியப் புரிபவரும் வரையறுக்கப்பட்டுள்ளமை; இவ்வாலயத்திற்கான தனிச் சிறப்பாகும். இதனடிப் படையிற்றான் குடுக்கை கூறும் நிகழ்ச்சியின் மூலம் அவரவர் மரபுக்கேற்ப மக்கள் கௌரவிக்கப்படுகின்றனர். இது பற்றி, பங்கு கூறும் விதம், சீர்வரிசையென்பன பற்றிய விரிவான விளக்கம் திருப்படைக் களஞ்சியம் என்னுங் கல்வெட்டு ஏட்டுப் பிரதியில் உள்ளது.

பங்கு கூறும் நிகழ்ச்சியையடுத்துச் சுவாமி ஆலயத்துக்கெழுந்தருளுவார். அன்று பகல் பன்னிரண்டு நாழிகைக்குள் தீர்த்தம் நடைபெறும். ஆனால் இவ்வாலயத்தின் தீர்த்தோற்சவம் அவ்வளவு முக்கியத்துவம் பெறவில்லையென்பது பலாதும் கருத்தாகும். தொன்றுதொட்டு இவ்வாலய வருடாந்த உற்சவம் பங்குனி உத்தரத்தில் நடந்து வந்துள்ளமை நாமறிந்ததேயாம். அப்போது இச் சிவாலயத்துக்குக் கிழக்கே "சுவாமி தீர்த்தமாடுகிறவில்லு" என்று இன்றும் அழைக்கப்படுவதான பரந்தகுளம் உண்டு. இக்குளம் அன்று இயற்கைச் சூழலுடன் அழகு பொலிய நீர் நிறைந்து தாமரைபூத்த தண்தடாகமாக இருக்கும். அதிலே தான் சுவாமி தீர்த்தம் நடைபெற்றது. இக்குளமும் அண்டியுள்ள நிலப்பரப்பும் இச் சிவாலயத்துக்கென அரசினராலொதுக்கப்பட்டவையாகும். முன் குறிப்பிட்டபடி வருடாந்த உற்சவம் ஆவணி மாதத்துக்கு மாற்றம் பெற்றபோது, வரட்சியான முதுவேனிற் காலமான ஆவணிமாதம் இக்குளத்தில் நீர்வற்றிச் சேறாகித் தீர்த்தமாட வசதியற்றதாய் இருந்ததாற் கிணற்றிற் தீர்த்த மாடப்பட்டது. குளத்தை யாழமாக்கி நீர்த்தடாகமாக்க எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. காரணம் இக்குளத்தையும் பரந்த நிலப்பரப்பையும் அயலிலுள்ள பொதுமக்கள் வயல் நிலங்களாக்கி வேளாண்மை செய்வதேயாகும். அதேபோன்று ஆலயத்தைச் சுற்றியுள்ள ஆலய வீதியென அரசாங்கத்தாலொதுக்கியளித்த நிலத்தையும் பொது மக்கள் குடியிருப்பு நிலங்களாக்கித் தம் வசப்படுத்திக் கொண்டனர். இன்றுள்ள சூழ்நிலையில் ஆலய வழிபாட்டுக்கென

வரும் பக்தர்களுக்கு இடவசதி கொஞ்சமேனுங் கிடையாத துர்ப்பாக்கிய நிலையுமுருவாகியுள்ளது. அவ்வாறே சுவாமி சூகர வேட்டையாடுமிடம், கஞ்சி முட்டி கூறுமிடம் என்பன போன்ற இவ்வாலயத்துக்குரிய இடங்களெல்லாமே அழகான இயற்கைச் சூழலை மாற்றி வயல்நிலங்களாக்கப்பட்டுவிட்டன.

தீர்த்தத்தையடுத்து வழமைபோல மதிய பூசையும் நடக்கும் அதன்பின்பு நேர்த்திக் கடனாகச் சுவாமிக்குவந்த அசையும் பொருட்கள் ஏலத்தில் விற்கப்படும். அன்றிரவே கொடியிறக்கப்படுவதுடன் வருடாந்த உற்சவம் நிறைவு பெறும்.

ஆலயத்தின் அசைவற்ற சொத்துக்களாக நெல்வயல்கள், வளவுகள் என்பன உள்ளன. இவை குத்தகைக்கு விடுவதன் மூலம் வருடாந்த வருமானத்தையீட்டித் தருவனவாகும். இவ்வாலயத்துக்குப் பழங்கால மன்னர்கள் மானியங்களை வழங்கினர் என்பது மரபு வழியாகக் கூறப்பட்டு வருகின்றது.

குருக்கள்மாருக்குரிய மானியமாகத் தேவிலா முனை பள்ளி கொண்டான் வெளியென்ற நெற்காணியும் சுவாமிக்குத் தொண்டு செய்பவர்களுக்காக அத்தியா முன் மாரி நெற்காணிகளும் இக் கோயிலுக்கென அரசர்களாற் கொடுத்த மானியங்களேயாம். இவைகளும் இப்போது இக்கோயிலின் வசமில்லை. இக்கோயிற் திருப்பணியினின்று தாம் விலகிக் கொண்டதுடன் இதிற்சம்பந்தப்பட்டோர் காணிகளையும் தம்வசமாக்கிக் கொண்டனர். இப்போது இவ்வாலயத்துக்கென நூற்றைம்பது ஏக்கர் அளவில் நெற்காணிகளுள்ளன. இவை இக்கோயிலில் ஈடுபாடுள்ள போடிமாரால் மனமுவந்தளித்தவையாகும்.

ஆரம்ப காலத்தில் வருமானங்கள் காணிக்குத்தகையுட்பட நெல்லாகவே பெறப்பட்டன. ஆயினும் அவற்றுக்கான களஞ்சியங்கள் எதுவும் இல்லை. வண்ணக்குமார் தம் பொறுப்பிலே பணம், பொருள் என்பவற்றை வைத்திருப்பதும், கையாள்வதும் வழமையாகவிருந்து வந்தது. அதனாற் பல தவறுகளும் முறைகேடுகளும் ஏற்பட்டு, அதனிமித்தமாக நிர்வாக மாற்றங்களும் உண்டாயின. இதனால் நிதிநிர்வாகம் சீரானதாகவில்லை. அண்மைக் காலமாக எல்லாவருமானங்களும் பணப்பரிமாற்ற முறையில் வங்கியிலிடப்படுகின்றது.

தான்தோன்றீஸ்வரர் மேற்பாடப்பட்ட பழைய நூல்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. நாட்டுக்கூத்துக்கள் கிராமிய இலக்கியங்கள் என்பவற்றிற் காப்புச் செய்யுள்களாகத்தான் தோன்றீஸ்வரர் பேரிற் பாடப்படுவதுண்டு. இவற்றைவிடப் பிற்பட்ட காலத்தில் செட்டிபாளயம் சின்னவப்புலவர், புலவர்மணி, பெரிய தம்பிப்பிள்ளைப் பண்டிதர் ஆகியோர் தான்தோன்றீஸ்வரர் பேரில் பதிகங்கள் பாடியுள்ளனர்.

கோணேசர் கோயிலை அடிப்படையாக் கொண்டு கோணேசர் கல்வெட்டு, இலக்கிய மரபுச் செய்யுள் வடிவத்தை யொப்பத் தான்தோன்றீச்சரத்தை ஆதாரமாகக் கொண்டு பல பாடற்றொகுதிகள் காலத்துக்குக்காலம் உருவாகின. இவை ஏட்டு வடிவிலே தொன்று தொட்டு இருந்து வந்துள்ளன. இவற்றைக் கல்வெட்டு என்னும் இலக்கிய வகை எனக் கூறுவர். அவை பெரிய கல்வெட்டு, குளிக்கல் வெட்டு; பங்கு கூறுங்கல் வெட்டு, தாதன் கல்வெட்டு, ஆசாரிகள் கல்வெட்டு திருப்படைக் களஞ்சியம் என்பனவாகும். இவை மட்டக்களப்பு மான்மியம் என்னும் நூலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. எனினும் முழுமையாக இன்னும் பல கல்வெட்டு இலக்கியங்கள் வெளிவராதுள்ளன ஆகவே இவற்றையாராய்ந்து பதிப்பித்து வெளியிடுதல் மிக அவசியமானதாகும்.

இறுதியாக, எது எவ்வாறாயினும் பழம்பெருமையும் பெருஞ்சிறப்பும் பெற்ற இச்சிவாலயம், இந்நாட்டிற் பிரசித்தி பெற்றிருந்தமையும், சைவமுந் தமிழும் தொன்று தொட்டு வளர்க்கப்பட்டு வந்தமைக்குச் சான்றாகும். எனினும் பழம் பெரும் புராதன கட்டிடம் முற்றாக இடித்துக் கட்டப்பட்டுப் புதுப் பொலிவுடன் மிளிர்கின்றது. பத்தொன்பது வருடங்களாகியும் கட்டிட வேலைகள் பூரணத்துவமுடையதாயில்லை. இன்னுஞ் சில வேலைகள் செய்யவேண்டியும் உள்ளன. ஆயினும் இந்த அளவிலாவது கும்பாபிஷேகம் நடப்பதும் எம்பெருமானருளேயாம். இதற்காகப் பலவழிகளிலும் உதவிய பெ துமக்களையும் நிர்வாக சபையினரையும் முன்னின்று பல வழிகளிலும் அரும்பாடுபட்டுழைத்த வண்ணக்குமார்களையும் நன்றிப் பெரு நோக்கோடு பாராட்ட வேண்டும். அதிலும் நிர்வாக சபைத் தலைவரும் காலிங்காகுடி வண்ணக்கருமான திரு. அ. இராசதுரை அவர்கள் பதவியேற்று மிகக் குறுகிய காலத்துள் மிகத் தீவிரமாகச் செயற்பட்டமைக்கு விசேடமாகப் பாராட்டுக்குரியவரேயாம்.

அடுத்து இராஜகோபுரத்தைத் தனிப்பட்ட முறையிற் பாரிய செலவினைச் செய்து அமைத்து முடியுந்தறுவாயில் இறைவனடி சேர்ந்த புண்ணியவான், முன்னாள் கி. த. திரு. பா. மயிலிப்போடி அவர்களை எல்லாவற்றுக்கும் மேலாகப் போற்றிப் பாராட்டவேண்டியதும் நம் கடனேயாம். அன்னாரது இப்பாரிய திருப்பணியைச் சைவ உலகு என்றும் நன்றியுடன் நினைவு கூரும். மேலும் முடிக்க வேண்டியிருந்த குறை வேலைகளைத் திறம்பட முடித்துச் சைவ உலகினுக்கீந்த அன்னாரது குடும்பத்தினரையும் மிகநன்றியுடன் பாராட்டுவதுடன் அவர்களனைவருக்கும் தான்தோன்றீஸ்வரர் தண்ணருள் பாலிப்பாராக. அத்துடன் இவ்வாலயத்தின் செயற்பாடுகள் சகலவற்றுக்கும் உறுதுணையாக விருந்து பலவழிகளிலும் உதவிய பெருமக்கள் அனைவருக்கும் அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகராகிய ஸ்ரீ தான்தோன்றீஸ்வரப் பெருமான் அருள் பாலிப்பாராக.

*"மெய்ம்மை யாமுழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்*
*பொய்ம்மை யாங்களையை வாங்கிப் பொறையெனு நீரைப்பாய்ச்சித்*
*தம்மையு ணோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டுச்*
*செம்மையுணிற் பாராகிற் சிவகதி விளையுமன்றே"*

*திருச்சிற்றம்பலம்.*

# KOKKADDICHCHOLAI SRI THANTHONTREECHCHARAM

## The Hindu Temple of Historic Significance

*English Translation:*
**V. Kanapathipillai**

The present North - Eastern Sri Lanka consists of the northern Jaffna, the Vanni of the Vanniyas, the triangular Harbour - Town of Trincomalee and the popular productive land of Batticaloa. This contiguous land mass has, throughout centuries, been the abode of Saivaism and Tamil. And Batticaloa, popularly called the "Mattakalappu Thamilagam", has earned a name and fame for its abundance in paddy, milk, honey, and its internationally - reputed "Singing Fish". The economy of Batticaloa rests mainly on agricultural pursuits. The Manmunai Region includes the Manmunai South - Western Division where centrally situated is the village of Kokkaddichcholai. Cholai in Tamil means jungle and Kokkaddi is the name of a particular variety of dicotyledonous plant, the Botanical name being Garcinia Spicata; Family: Guttiferae.

In this region of fertile land resources, natural beauty and prosperity, there are three famous and ancient Hindu Devasthanams : the Nagathambiran Temple at Pandariyaveli, the Murugan Temple at Thanthamalai and the Than - Thontri - Eeswarar Temple at Kokkaddichcholai. As these three temples are well - spaced and are of great historic significance, attracting devotees throughout the year, the Hindu devotees call this Division " Punniya Bhoomi", meaning Sacred Land. Kokkatichcholai is at a distance of about 13 Km from the Batticaloa town, through the Manmunai Ferry.

As mentioned earlier, the plant Kokkatti grows wild in jungles, and the Hindus of Batticaloa attach a certain amount of sanctity to this plant. It is usually used to erect pandals and small shrines in temple premises. As far as this Devasthanam is concerned, there is another special reason for the coupling of the names Kokkatti and Than - Thontri - Eeswarar. It is described in a subsequent paragraph.

Stories relating to the temple refer to ancient rock inscriptions, to Maha Vamsa, and to connotations made in "Mattakalappu Manmiyam". Let us consider a few of them briefly. When Anuradhapura was ruled by Sri Megavarnan, Batticaloa was ruled by Gunasingan, the son of Amarasenan. During this period (A.D. 311), Ulaganachchi, the princess, the daughter of King Kugasenan of Kalinga (Orissa) visited Ceylon, with her brother Ulaganathan. She brought with her the sacred Tooth relic of the Buddha, and to ensure its safety, she had it hidden in her hair. The king received the Relic with due reverence and had it enshrined in the Dalada Maligawa . This story finds a place in the historic inscription called "Periya Kal Vettu", where it is stated that Sri Megavarnan, in a mood of ectasy asked Ulaganachchi as to how he could repay her for her act of benevolence. He was prepared to offer her anything she could ask. She requested him to donate her a lonely village with jungles, but devoid of any habitation. He readily acceded to her request. He presented her a valuable golden chain studded with gems, and sent her with a letter, to his friend king Gunasingan, the ruler of Batticaloa, with an earnest request to fulfil her cherished desires. Gunasingan did the needful by getting a plot of virgin land cleared, had a palace built for her occupation and attended to every other requirement. Ulaganachchi sent her brother to Kalinga with a request to her father to send her one hundred and sixty families of the Kuga clan and thirty families of the Sirai clan. A Sivalingam was established in a temple, and normal worships went on. She got down from Orissa several more families, had them settled in cleared lands, and declared herself the ruler of the Manmunai area. One day while jungle - clearing was in progress, at a point south of Kaappu munai, a strange thing happened. A man named Thidakan was engaged in cutting down a kokkatti tree, to his utmost surprise, observed the tree

bleeding profusely at the point where the cut was made. He promptly sent words to the ruler who arrived at the spot to see for herself what actually had occurred. To everybody's astonishment, they all saw a holy Siva Lingam partly hidden. They were overtaken by a feeling of piety, obeisance, and submission, marvelling at the great compassion Lord Shiva had bestowed on them through his unique presence at the foot of a Kokkatti tree. They offered Him prayers, and decided on the spot to build a magnificient temple worthy of this " Than - Thontri - Eeswarar", meaning the "Lord who sprang into being on his own".

A great temple was duly established, and daily poojas were performed by three Putters got down from northern Kolladam. During this period, Ulaganachchi got married to Kirasaran, a brother of Gunasinkan. They were blessed with a son and a daughter. Later she got down ten families from Thanthapuram, solely for the purpose of making garlands of flowers to be offered at the two temples. Pathan was made their chief. In the year 428 A.D., Kunasingan's son Kanagasenan was declared king of Batticaloa; and Ulaganachchi's son Athisuthan was made king of Manmunai. The crowning ceremonies were held on two different dates. Athisuthan got married to Namavalli, and Kanagasenan found his partner in Arunthal. They were all Ceylonese, and their descendants ruled Batticaloa and Manmunai for two hundred years thereafter. The history proceeds further.

Let's now come back to our Than - Thontri - Eeswarar. This temple dedicated to Lord Shiva, in the form of Maha Lingam, is one of the important holy institutions that stand in testimony to buttress that Saivaism and Tamil have occupied positions of eminence and prominence, as factors concerning the day - to -day life of the people. Such temples also go by the names " Thiru Padai Kovils" and " Thesathu kovils", the latter one meaning temples belonging to the whole country.

There is also another story to narrate that worship at this temple was initiated first by the veddas, and later handed over to Ulaganachchi. Regarding the person who got the permanent temple erected, there are different stories too. There is reference to one Tharumasingan (783 A.D. ) who got the temple constructed according to Brahmanic specifications. He also got down three chariots from the Chola Kingdom of South India. He is said to have had a son Kumarasingan by name. By comparing these parallel stories, it appears more tangible to conclude that the permanent temple was constructed by Tharumasingan. With evidence of rock inscriptions, it is quite reasonable to conclude that worship at this temple had commenced some 1560 years ago, and that the temple structure was further strengthened some 1050 years back.

This temple had a lovely dome behind (Sigara - Gopuram), and was surrounded by two walls - one, inner one and the other, outer one. Inside the inner wall was the main temple dedicated to Lord Shiva and on its left was the one dedicated to his Shakthi, Parvathi Devi. Facing the Moola - Lingam was the bull, Nandhi, which has a popular story behind it. The bull is said to have chased away the Portuguese General who entered the temple surreptitiously to plunder its valuable belongings. Since then this Bull has become a cynosure.

The fourth Hall had decorated pillars, carved in excellent satin timber, and it housed the Nava Vairavar Pali Peedam, the Nandhi and the 60 feet high Kodisthambum with Sandeswarar at its foot. The fifth Hall was erected in the year 1952. Within the inner wall are the " Theerthakinaru", Yagasalai, Vakana Salai, Clock - tower, stores, kitchen, etc.

Then you find the outer Veethi, popularly called "Ther Odum Veethi". This is also the Veethi used to carry the images of deities during annual festivals. The greatest attraction and assets of the temple are two 'Thers' - Chariots of exquisite workmanship, carved in selected timber, depicting legendary and puranic stories, and high philosophies of Saivaism. The smaller chariot is called 'Pillayar Ther' and the bigger one 'Chithira Ther', meaning

the chariot with the finer aspects of craftsmanship, with a larger number of images. On the final day of the annual festival, hundreds and hundreds of able - bodied lads stand in line holding the unusually thick coir rope in their hands, and draw the chariots around the temple. This they do in fulfilment of a vow they have pledged earlier, in the way they perform a fast in prayer to the Lord.

**New buildings.** The disastrous cyclone which ravaged Batticaloa on 1978.11.23, caused minor damages to the gopuram of the temple. At a Thesa Maha Sabai Meeting held on 1979.01.29, it was unanimously resolved to destroy the existing buildings and construct new ones in their place. At the same meeting, a former V.H., Mr. P. Mylipody, volunteered to get the Raja Gopuram constructed at his own expense. The offer was gladly accepted. Accordingly on 1979.06.11, in the early hours of the morning, Balasthapana kriyas were performed by Sri K. Thiagaraja Kurukkal and his group of highly qualified priests. Bala sthapanam means putting the Lord in a temporary abode till the permanent one is ready. A mass Shramadana, on an unprecedented scale, was organised, and within about two months, all debris - clearing operations were over. At an auspicious time in midnight on 1979.08.27, the foundation for the new temple was laid by the temple trustees. The foundation for the new Raja gopuram was laid by the former V.H. Mr. P. Mylipody in the morning hours of 1979.09.07. Building activities progressed thereafter, of course with intermittent intervals, and the new temple we see today has come into existence.

**Temple Administration:** From the very inception of the temple, administration has been with the 'Ulagipody kudy', the 'Kalinga kudy', and the 'Padayanda kudy' of the 'Mutkuga Caste'. Trustees called 'Vannakkus' were elected by the respective kudys. Each member enjoys a full life - time membership. Nobody outside the above three kudys is eligible to serve on the Board of Trustees. If maternity is from one particular kudy, paternity should be from any one of the other two. This has been the tradition and it has been put into effect without the slightest exception. It has also been laid down in the constitution that the Vannakkus should be of excellent moral character, and their strict adherence to Saiva religious precepts and practices unquestionable. In spite of all these precautions and guidelines, irregularities could not be prevented, now and then, from encroaching into the smooth administration of the temple. The last Board of Trustees was set up on 1976.11.28. This Board consists of 16 members, selected 2 each from the eight Thiruvila - Assignees, plus 3 vannakkus from the three kudys mentioned earlier. The total number is 19. It was also resolved at this Thesa Maha Sabai that the Vannakku from the Kalinga kudy should be the president, that from the Ulagipody kudy should be the Treasurer and the representative from the Padayanda kudy to be the Secretary. Laws and by -laws were formed and the final constitution was approved and accepted at the These Maha Sabai General Meeting held on 1978.09.24.

**Thesa Vannimais** : A person from the 'Kalinga Vellalar kudy' of the Poopala Kothram is to hold the post Thasa Vannimai. As this particular clan was later found to have lost its continuity of generation, this post was subsequently transferred to the Athiya Kudy Vellalas. Reference is made to the Kugan Raja Vannimai and the Poopala Kothra Vannimai in the hymns relating to the Than - Thontri - Eeswarar temple where their services are described. Though they lost their recognition under foreign rule, their legitimate rights and privileges continued to be preserved. Their rights and duties were given paramount importance in temple circles of the past, but gradually they lost their relevance. The Vellala caste also had itself removed from responsibilities. They served only upto 1962.

**Temple Priests** : From the very inception of this temple, priesthood has been with the Sangama Kurukkals. They are Veera - Saivas - Lingatharis. Especially during the reign of Mahon, this brand of priests were highly respected as they were noble men well - versed in their religious duties, and were fully

qualified to preach the lofty principles of religion to the devotees. They distinguished themselves as experts in the Gurukula system of education, and functioned as authorities in matters divine. They also served society in several other associated fields such as astrology, Siddha school of medicine, snakebite treatment and chanting of manthras.

**Other Servants:** There are other families that perform daily obligations on a paid basis. They get their payments for services rendered by them in the smooth functioning of the temple. Their services have been duly mentioned in the constitution and put into practice, especially during the reign of King Mahon, in the 13th Century. Though the Vellalas have taken themselves away from temple obligations and duties, well over 40 years, it is creditable that the servants from the Ponnachechi, Kangani Mammali and Veda Katharai families continue to perform their well - defined duties.

**Daily Poojas and Special Festivals**: Regular poojas are held thrice daily, and special poojas held on important occasions that occur monthly and during periods of fasting .

The Annual Festival was originally held in the Tamil month of Pankuni (March) associated with the Uthara 'Natchethram" and the Powrnami (full moon) 'thithy'. Besides the Thiruvila, the ' Ther ottam, (The chariot function) is the popular event of attraction. But this time - schedule had to be altered later, in consideration of the sole occupation of the people, that is paddy cultivation. They found it rather difficult to hold the Annual Thiruvila in March, when agricultural activities of the whole Division would be at a climax and almost all of them would be too busy in their fields. So at a These Maha Sabai General meeting held on 1911.06.04, they decided to commence the Annual festival by, hoisting the flag' in the Tamil Month of Avani (August) at the auspicious time associated with Prathamai Thithy and Uthara Natchethram, have the chariot ceremony on the Sunday following the full moon and hold the Theertham (water - cutting ceremony) on the next day (Monday). The last annual Thiruvila Festival was held in August 1978.

**The Annual Festival:** The annual festival takes place as indicated in the previous paragraph. On the final day of the festival, Monday, the Eeswarar takes part in a special event called "Sookara Vettai" ('Hunting down the pig'), a hunting activity where He is supposed to gain victory over the evil. This will be followed by an event called "Varisai Mutti Kooruthal", a feature to ensure the strict adherence of the devotees to their caste traditions. The whole function concludes with the water - cutting ceremony at noon, and the flag that was hoisted on the commencement of the function is brought down. An Auction sale of cows, goats, fowls and other materials offered by devotees, will also take place.

In conclution, it must he stated in unambiguous terms that it is a great relief to the devotees to ponder over this great achievement - that they have been able to destroy the old damaged building and build a much bigger and more exquisite building in its place. The whole affair has consumed many years, but it affords them the utmost satisfaction in the Lord's service. Their only grievance is that the two chariots are in a highly dilapidated state, deserving urgent repairs; but they are consoled that with His Blessings, nothing will remain an impossibility, and are convinced that it will be done expeditiously through His Grace.

" Om, Sivaya Nama"

Let the mighty Grace of Lord Than - Thontri Eeswarar protect every one of us, and grant us Eternal Bliss.

*"Om Shanthi! Shanthi! Shanthi!*

# கொக்கட்டிச்சோலைப் பதியின் தொன்மை வரலாறு

க. தங்கேஸ்வரி
பி. ஏ. (தொல்) சிறப்பு

1. தெட்சணாபதி என அழைக்கப்பட்ட கிழக்கிலங்கை

கிழக்கிலங்கை, தென்கிழக்கிலங்கை உட்பட கிழக்குப் பிரதேசம் ஆதிமனிதன் வாழ்ந்த இடம் என்பதற்குப் பல்வேறு சான்றாதாரங்கள் உள்ளன. உலகின் ஆதிக்குடிமக்களை "ஒஸ்ரலோயிட்" இனம் என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவர். இந்த 'ஒஸ்ரலோயிட்' இனமக்களின் வழித்தோன்றல் கிழக்கிலங்கையில் வாழும் வேட இன மக்கள் என்பதைப் பல வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இவர்களுள் பிரபல வரலாற்றாசிரியர்களான மஜூம்தார் செலிக்மன், பானர்ஜிபோன்றோர் குறிப்பிடத்தகவர்கள். (பார்க்க)

i. Heritage and life of Ceylon - majumdar - pp, 8, 40, 235
ii. The Veddah by C. G. Sheligman, pp - 419, 430
iii. History and culture of Indian People by Banerjee

தென்கிழக்கு, கிழக்குப் பிரதேசம் என்பது கதிர்காமம் முதல் திருக்கோணேமலை வரை உள்ள நீண்ட கரையோரப் பகுதியைக் குறித்துநிற்கிறது. இப்பிரதேசத்தில் திருக்கோணேஸ்வரம், தம்பலகாமம், வெருகல், சித்தாண்டி மாமாங்கேஸ்வரம், கொக்கட்டிச்சோலை, தாந்தாமலை, போரதீவு மண்டூர், உகந்தை திருக்கோயில், கதிர்காமம் முதலிய தலங்கள், ஒரேநிலக் கோட்டில் (Belt) அமைந்திருப்பதை அவதானிக்கலாம்.

இத்தலங்களுள் பெரும் பாலானவை முருகன் தலங்களாகவும் ஒரு சில தலங்கள் சிவத்தலங்களாகவும் அமைகின்றன. மேற் கூறிய பழம்பெரும் பதிகளை உள்ளடக்கிய பிரதேசம் "தெட்சணபதி" என அழைக்கப்பட்டது. (தட்சண கைலாசம் என வழங்கப்படும் திருக்கோணேஸ்வரத்தையும் இப்பெயர் குறிப்பிடும்)

2. சிவபூமி

திருமூலர், இலங்கையை 'சிவபூமி' எனக் குறிப்பிட்ட போதும், கிழக்குப் பிரதேசத்திலேயே சிவவணக்கம் அதிகம் நிலவியது என்பதை நாம் கருத்திற் கொள்ள வேண்டும். இப்பிரதேசத்தின் தொன்மையும் இதற்கு ஒரு சான்றாகும்.

மக்களின் ஆதிவணக்கம் லிங்கவணக்கமாக இருந்து, பின்னர் அது சிவவணக்கமாக மாறியது. மிகவும் தொன்மைத்தான சிவ வணக்கம், கிழக்குப் பிரதேசத்தில் நிலவுவது ஆழ்ந்த சிந்தனைக்குரியது. இப்பிரதேசத்தில் வாழ்ந்த ஆதிக்குடிகளின் மூலம் சிவவணக்கம் இப்பிரதேசத்தில் நிலைபெற்று, இன்று வரை தொடர்ந்து வந்துள்ளது. ஆதிக்குடிகளின் வழித்தோன்றல்களான வேடர்கள் இன்றும் கொக்கட்டிச்சோலையை அண்மிய தாந்தமலை, சிப்பிமடு, தும்பாலை, றூகம், முதலிய இடங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

ஆதிக்குடிகளின் வணக்கமுறை நடுகல் வணக்கத்திலிருந்து ஆரம்பிக்கிறது. ஆதியில் இவர்கள், கல்லையும், வேலையும் வணங்கினர். பின்னர் இது லிங்கவணக்கமாகவும், முருகவணக்கமாகவும் மாறியது என்பது வரலாறு.

இதிகாச பாத்திரமாக உள்ள இராவணன், வெறும் கற்பனைப் பாத்திரமல்ல. நிஜமாகவே இலங்கையில் வாழ்ந்த ஒரு மன்னன் என்னும் கருத்து அண்மைக் காலமாக வலுப்பெற்று வருகிறது. இந்த இராவணன் சிறந்த சிவபக்தன், புகழ் பெற்ற சிவத்தலங்களான திருக்கோணேஸ்வரம், மாமாங்கேஸ்வரம் திருக்கோயில் என்பவற்றுடன் இராவணனைத் தொடர்பு படுத்தும் கர்ணபரம்பரைக் கதைகள் அதன் பின்னணியில் உள்ள வரலாற்று உண்மையைச் சூசகமாக உணர்த்துகின்றன (மாமங்கேஸ்வரமும், திருக்கோயிலும் ஆதியில் சிவத்தலங்களாகவே இருந்தன) இவற்றைத் தொகுத்து நோக்கும் போது கிழக்குப் பிரதேசமே திருமூலர் குறிப்பிட்ட சிவபூமி எனக் கொள்வதில் தவறில்லை.

3. கொக்கட்டிச் சோலையில் நிலவிய தொன்மை வணக்கமுறை

உலகெங்கிலும் ஆதிமனிதனின் வழிபாடு மரவழிபாடாக இருந்தது என்பது ஆய்வாளர் கூற்று. மட்டக்களப்பு பிரதேசத்தில், மண்டூர், கொக்கட்டிச்சோலை, உகந்தை, வெருகல், திருக்கோயில், என்பன மரவழிபாட்டுடன் தொடர்புபட்டதாக இருப்பதை நாம் அவதானிக்கலாம். இத்தலங்களின் தலவிருட்சங்களாக சில விருட்சங்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. ஆதியில் மரங்களை வழிபட்ட மக்கள் பின்னர், மரங்களின் அடியில் தெய்வம் உறைவதாக எண்ணி மரத்தின் அடிப்பகுதியை வழிபட்டனர். அவ்வழிபாட்டுமுறை, கொடிநிலை, கந்தழி, வள்ளி என மூன்று வகையில் அமைந்தது. அவற்றின் விளக்கம் வருமாறு:-

(i) கொடிநிலை - மரக்கொடியினால் சூழப்பெற்ற மரத்தை வணங்குதல்
(ii) கந்தழி - பட்டுப்போன மரத்தின் அடிப் பகுதியை வணங்குதல்.

(iii) வள்ளி – மரம் பட்டபின் தனியே நின்ற கொடியை வணங்குதல்.

மொட்டைமரம் பட்டுப்போக, அவ்விடத்தில் கல் ஒன்று வைக்கப்பட்டது (இன்றும் தெருவோரங்களில் மரங்களின் அடியில் ஒரு கல்லை வைத்து அதற்கு விபூதி சாத்தி கடவுளாக வழிபடுவதைக்காணலாம்) பின்பு அக்கல், மெருகேற்றப்பட்டு லிங்கமாக மாறியது.

கொக்கட்டி மரத்தின் அடியில் சிவலிங்கம் கண்டெடுக்கப்பட்ட கதையை இங்கு நினைவுகூருவோம். ஆதிகால வணக்க முறையின்படி மரத்தின் அடியில் லிங்கம் இருந்து, பலநூறு வருடகால ஓட்டத்தில் மண்ணால் மூடப்பட்டு, காலமும் நேரமும் கனிந்ததும், அந்த லிங்கம் வெளிப்பட்டது. பக்தர்கள் அச்சம்பவத்தைச் சுற்றி ஒரு கதையை உருவாக்கி விட்டனர். அது கதையாக இருந்தாலும், அதன் பின்னணியில் உள்ள ஆதிவணக்க முறையை நினைவு கூர்ந்து, கொக்கட்டிச் சோலைப்பதியின் தொன்மையை உணர்ந்து கொள்வோம்.

4. லிங்க வணக்கம் சுட்டும் தொன்மை

சிந்து வெளியிலும், தமிழகத்திலும், பெலாரி மாவட்டம் போன்ற இடங்களிலும், மிகவும் தொன்மைத்தான, புதியகற்காலப் பகுதியிலும், பெருங்கற் காலப்பகுதியிலும் லிங்க வழிபாடே முக்கியத்துவம் பெற்றிருந்தது. இன்று தமிழகமெங்கும் காணப்–படும், பாரிய லிங்கங்களும், லிங்கக் கோயில்களும், இதற்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைகின்றன.

இவ்வாறே, கிழக்கிலங்கையில் காணப்படும் லிங்கக் கோயில்கள், கிழக்கிலங்கையில் நிலவிய லிங்க வணக்கத்தையும் அதன் தொன்மையையும் சுட்டுவதாக அமைந்துள்ளன.

இலங்கைக்கு விஜயன் வந்தபோது (கி. மு. 543) லிங்க வணக்கம் இங்கு நிலவியது. அப்போது இலங்கையில் ஐந்து ஈச்சரங்கள் (லிங்கக் கோயில்கள்) இருந்ததாக சிங்கள வரலாற்று ஆவணமான மகாவம்சமே குறிப்பிடுகிறது. அவையாவன:–

(i) வடக்கே திருத்தம் பலேஸ்வரம் (வடக்கு)

(ii) மன்னாரில் திருக்கேதீஸ்வரம், (வடமேற்கு)

(iii) திருக்கோணமலை– திருக்கோணேஸ்வரம் (கிழக்கு)

(iv) சிலாபத்தில் – முன்னீஸ்வரம் ( மேற்கு)

(v) யாழ்ப்பாணம் (நகுலேஸ்வரம்)

இவ்வாறு மகாவம்ச ஆசிரியர்கள் அறிந்தவரை ஐந்து ஈஸ்வரங்கள் இருந்ததாகக் குறிப்பிட்டாலும், அதே காலப்பகுதியில் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரம், மட்டக்களப்பு மாமங்கேஸ்வரம் திருக்கோயில் வெள்ளை நாவற்பதி முதலிய இடங்களிலும், லிங்கக் கோயில்கள் இருந்தன என்பதை, வரலாற்றுத் தகவல்களின் துணை கொண்டு நாம் அறியக் கூடியதாக இருக்கிறது.

திருக்கோயிலும், மாமாங்கேஸ்வரமும் ஆதியில் லிங்கக் கோயில்களாகவே இருந்தன என்பதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்.

5. இராவணன் ஆட்சிக்காலத்தில் கொக்கட்டிச் சோலை.

இராவணன் ஒரு கற்பனைப்பாத்திரம் அல்ல என்பதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். இராவணன் ஆட்சி செய்த இடம் தென்னிலங்கை என்று தமிழக நூல் ஆசிரியர்கள் குறிப்பிடுவார்கள். அது இலங்கையின் தென்புறத்தைக் குறிப்பதல்ல. தமிழகத்துக்குத் தெற்கே உள்ள இலங்கையையே குறிப்பதாகும்.

இராவணன் பெயர் திருக்கோணேஸ்வரம், மாமாங்கேஸ்வரம் திருக்கோயில் ஆகிய மூன்று தலங்களுடன் தொடர்புறுவதிலிருந்து கிழக்கிலங்கையில் அவன் ஆட்சி நிலவியதை ஊகிக்கலாம். இராவணன் காலத்தில் இப்பகுதி 'தெட்சணாபதி' எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பகுதியிலேயே கொக்கட்டிச்சோலை அமைந்துள்ளது. இராவணன் இயக்கர் தலைவன். மகாவம்சம் குறிப்பிடும் இயக்கர் தெய்வங்களான இராவண, விபூஷண, குபேர, மகேஸ, வைஸ்ராவன பச்சிமாமணி, என்னும் பெயர்களிலிருந்தும், இதை அறியலாம். இயக்கர்கள் சிவணக்கம் உடையவர்கள். அமானுஷ்ய சக்தி பெற்றவர்கள், அதை மிகைப்படுத்தி இயக்கர்கள் இராட்சதர்கள் எனக் கதை கட்டியது மகாவம்சம். இந்த இயக்கர்களின் வழிவந்தவர்கள் பின்னால் வேடர்கள் எனப்பட்டனர்.

கொக்கட்டிச்சோலையில் இவ்வேடர்கள் பழங்காலத்தில் வாழ்ந்தனர் என்பதை 'திடகன்' என்னும் வேடர் தலைவன் உலகநாச்சியிடம் கொக்கட்டி மரத்தில் இரத்தம் வழிவது பற்றிக் கூறிய கதையில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

6. தென்னிலங்காபுரியில் கொக்கட்டிச் சோலை

இலங்கையின் வரலாறு கூறும் மகாவம்சம் விஜயன் இலங்கைக்கு வந்த காலத்திலிருந்து (கி.மு 543) ஆரம்பிக்கிறது. ஆனாலும் அது சிங்கள மன்னர் ஆட்சிபற்றியே விரிவாகக் கூறுகிறது. விஜயன் வருகைக்கு முன்பிருந்த இலங்கை பற்றியோ, மகாவம்சம் கூறும் காலப்பகுதியில் இலங்கையின் ஏனையபகுதிகளில் நிலவிய திராவிடமக்கள் ஆட்சிபற்றியோ எதுவும் கூறவில்லை. ஆனால் பல்வேறு தொல்லியல் தடயங்கள் மூலம், இலங்கையில் நிலவிய பெருங்கற்காலப் பண்பாடுகள், இடைக்கற்காலப் பண்பாடுகள் வெளிப்பட்டுள்ளன. இவை ஆதித்திராவிடர்க்கே உரியவை என்பது வரலாற்றாசிரியர்கள் கண்டறிந்த உண்மை. அவ்வாறே கதிர்காம கஷ்த்திரியர்

M, ARULAMPALAM
PRINCIPAL

காலத்தில் தென்னிலங்கை முழுவதும், தமிழர் ஆட்சியில் இருந்து பின்னர் அது கிழக்கிலங்கைவரை பரந்துள்ளது. மட்டக்களப்புப் பிரதேச வரலாறுபற்றி "மட்டக்களப்பு மான்மியம்" ஓரளவு கோடி காட்டுகிறது. ஆனால் 'தென்னிலங்காபுரி' என்பது வடக்கே வெருகல் முதல் தெற்கே குமுக்கன் ஆறுவரை பரந்திருந்த பெருநிலப்பிரதேசமாகும். அது தற்போதைய, மட்டக்களப்பு, கல்முனை அம்பாறை மாவட்டங்களை உள்ளடக்கியிருந்தது. இந்நிலப்பரப்பில் நாகர்முனை (திருக்கோயில் பிரதேசம்) உன்னரசுகிரி (உகந்தை பாணமைப் பிரதேசம்) உறுகுணை (கதிர்காமப் பிரதேசம்) மட்டக்களப்பு (சம்மாந்துறை, வீரமுனைப் பிரதேசம்) மண்முனை (அம்பிளாந்துறை கொக்கட்டிச் சோலை, தாழங்குடா ஆரையம்பதி பிரதேசம்) முதலிய ராச்சியங்கள் இருந்தன இந்நகரங்களில் பிற்காலத்தில், கலிங்கர், வங்கர், முதலியோரும் ஆட்சி செய்திருக்கின்றனர். இவர்கள் திராவிட இனத்தவர்கள். கொக்கட்டிச் சோலைத் திருநகர் பெற்றிருந்த முக்கியத்துவம் காரணமாகவே பிற்காலத்தில் (கலிங்கர் ஆட்சியில்) மண்முனை ராச்சியம் உருவாகியது.

7. மண்முனை ராச்சியமும் கொக்கட்டிச் சோலையும்

கி. பி. 3ம், 4ம் நூற்றாண்டளவில் கொக்கட்டிச் சோலையை உள்ளடக்கிய மண்முனை ராச்சியம் புகழ்பெற்றிருந்தது. மண்முனை ராச்சியம் உருவான வரலாற்றை, மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது (பக் : 42) இவ்வரலாற்றில் இடம்பெறும் கற்பனைகளையும், கதைகளையும் விடுத்து வரலாற்றுத் தகவல்களை மட்டும் நாம் கருத்திற் கொள்வோம். அவ்வரலாறு வருமாறு.

மட்டக்களப்பில், குணசிங்கன் கலியாண்டு 3500 ல் ஆட்சி செய்தபோது, கலிங்க ஒரிசா தேசத்தை அரசு புரிந்த குகசேனனுடைய மகள் உலகநாச்சி என்பவள் கௌதம் புத்தரின் தசனத்தைக் தனது நெடுங்கூந்துலுள் மறைத்துக் கொண்டு கைலயங்கிரியில் குகவம்சத்தார் முற்காலத்தில் எடுத்து வைத்திருந்த சிவலிங்கத்தையும் எடுத்துக் கொண்டு தனது சகோதரன் உலக நாதனுடன் வர்த்தகரின் கப்பலேறி இலங்கை வந்து, இலங்கை அரசன் மேகவர்ணனிடம் (கி. பி. 301 – 382) புத்த தசனத்தைக் கொடுத்து அதற்குப்பரிசாக, மட்டக்களப்பு மன்னன் குணசிங்கன் மூலம், மண்முனைப் பிரதேசத்தைப் பெற்றான். அப்பிரதேசத்தின் காடுதிருத்தி, நகரமைத்து, கலிங்கதேசத்திலிருந்து, குகவம்சக்குடும்பம் 106, சிறைக் குடும்பம் (பணியாட்கள்) 30, தருவித்து, மண்முனைப் பிரதேசத்தை உருவாக்கினாள். மேற்படி கதை, மகாவம்சத்திலும் கூறப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் குணசிங்கன் ஆட்சிபுரிந்த காலம் கலி : 3500 என மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகிறது. இது கி.பி. 398 ஆகிறது (3500 – 3102 - 398) மேகவர்ணன் காலம் கி.பி. 301 – 382 என மகாவம்சம் குறிப்பிடுகிறது. சில வருட வித்தியாசம், காலக்கணிப்பில் ஏற்பட்ட தவறு என எடுத்துக் கொண்டால், உலகநாச்சியின் இலங்கை வருகை பற்றிய வரலாற்றில் மகாவம்சமும், மட்டக்களப்பு, மான்மியமும் ஒத்துப் போவதைக் காணலாம்.

7. உலக நாச்சி அமைத்த கோவில்குள லிங்கேஸ்வரர் ஆலயம்.

உலக நாச்சியின் அரண்மனை இருந்த இடம் தற்போது, தாழங்குடா என அழைக்கப்படும் கிராமத்தில் உள்ளது. அவ்விடத்தை மாளிகையடி என இப்போது மக்கள் அழைக்கின்றனர்.

உலக நாச்சி அமைத்த இரு ஆலயங்கள் பற்றிய குறிப்புக்கள் மட். மான்மியத்தில் இடம் பெறுகின்றன. ஒரு குறிப்பு பின் வருமாறு கூறுகிறது.

"........... சிலகாலம் சென்றபின், தனது தம்பி சிவநாதனைத் தந்தையிடத்திலனுப்பிக் குகன் குடும்பம் நூற்றாறும், சிறைக் குடும்பம் முப்பதும் எடுப்பித்துக் குகக் குடும்பங்களைத் தன் அருகாயிருத்தி அந்த இடத்தில் ஆலயமியற்றிச் சிவலிங்கத்தை ஸ்தாபித்து வணங்கி வந்தாள். (பக்: 43) இக்குறிப்பிலிருந்து மேற்படி ஆலய சிவலிங்கம் கொக்கட்டிச் சோலையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட தான்தோன்றிலிங்கம் அல்ல என்பது தெளிவாகிறது.

இச்சிவலிங்கம், உலகநாச்சி தன்னுடன் எடுத்து வந்த காசிலிங்கம் (படிகலிங்கம்) இந்த லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆலயம் கோவில்குளம் என்று தற்போது அழைக்கப்படும் இடத்தில் அமைந்திருந்தது. உயரமான கோபுரத்துடன் இவ்வாலயம் அமைந்திருந்ததால், அவ்விடம் சிகரம் என அழைக்கப்பட்டது. பிற்காலத்தில் அவ்வாலயம், போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட பின்னரும், அவ்விடம் சிகரம் என அழைக்கப்பட்டு வந்தது.

இவ்வாலயத்தின் இடிபாடுகளில் இருந்து எடுக்கப்பட்ட கருங்கல்லாலான நிலைகள், ஆரையம்பதி கந்தசுவாமி கோயிலிலும் ஆரையம்பதி திருநீலகண்டப்பிள்ளையார் ஆலயத்திலும் வைத்துக் கட்டப்பட்டுள்ளன. பல வருடங்களுக்குப்பின், இவ்வாலய இடிபாடுகளிலிருந்து கண்டெடுக்கப்பட்ட படிகலிங்கம், (சுமார் 6" உயரம்) தியான புத்தர் (புடைப்புச் சிற்பம்) உடைந்த கந்து விளக்கின் பாகங்கள் இன்றும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இவ்விபரம் எனது "மாகோன் வரலாறு" நூலிலும் (பக்: 97 ) இடம் பெறுகிறது.

9. உலக நாச்சி அமைத்த "தான்தோன்றீஸ்வரம்" ஆலயம்

கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரமும் உலக நாச்சியால் அமைக்கப்பட்ட தென்பதற்கான குறிப்புகளும் "மட். மான்மியத்" தில் இடம் பெறுகின்றன. அக்குறிப்பு வருமாறு:

"பின்பு இன்னும் ஒரிசா நகரமிருந்து அநேக குகக் குடும்பங்களை அழைத்து காப்புமுனைக் காட்டை அழித்துச் செப்பனிட்டுக் குடியேற்றி அப்பகுதிக்கு அரசியாகி, "மண்முனை" என நாமம் சூட்டி வாழுங்காலம் காப்பு முனைக்குத் தென்பாகமாக

உள்ள காட்டை அழிப்பிக்கும் போது திடகன் என்பவன் கொக்கட்டி மரத்தை வெட்ட, உதிரம் பாய்ந்தது. அதைக் கண்ட திடகன், உலகநாச்சியிடம் போய்ச் சொல்ல உலகநாச்சி, அந்த இடத்தைப் போய்ப் பார்த்த போது, அம்மரத்தின் அடியில் ஒரு லிங்கம் மண்ணுள் மறைந்திருக்கக் கண்டு, அவ்விடத்தில் ஆலயமியற்றி, வடநாட்டு கொல்லடத்திலிருந்து பட்டர் மூவரை அழைத்துப் பூசைபுரியும்படி திட்டம் செய்து........ (பக் : 43)

இக்கதையில், மரத்தில் இரத்தம் வந்தது, மறுபேர் கண்ணுக்குப் புலப்படாது லிங்கம் இருந்தது என்ற வர்ணனைகளை ஊடுருவி நோக்கினால், மரத்தின் அடியில் ஆதிக்குடிகளால் வழிபட்ட லிங்கம் மண்ணுள் புதையுண்டு இருந்தது என்றும் வெட்டிய மரத்தில் சிவப்பு நிற சாறு வந்தது என்றும் கொள்ளலாம்.

ஆனால் இந்த லிங்கம் கருங்கல்லாலானது என்பதும், அளவில் மிகப் பெரியது என்பதும் கருத்தில் கொள்ளத்தக்கது. இந்தலிங்கம், திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் ஆலயங்களில் உள்ள லிங்கங்களைப் போன்று இருப்பது சிந்தனைக்குரியது.

எவ்வாறாயினும், கோயில்குளம் லிங்கேஸ்வரர் ஆலயமும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயமும் உலக நாச்சியால் அமைக்கப்பட்டவை என்பதும், இவை இரண்டுக்கும் இடையே நிலைத்த தொடர்பு இருந்தது என்பதும் மனங் கொள்ளதக்கது.

## 10. கொக்கட்டிச்சோலை, கோயில்குளம், தாந்தாமலை:

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்கும் கோயிற்குளம் லிங்கேஸ்வரர் ஆலயத்துக்கு மிடையே ஆரம்ப காலம் முதல் நெருங்கிய தொடர்பிருந்தது. உற்சவ காலங்களில், கோயில்குளம் ஆலயத்திலிருந்து, தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்கு வேல் கொண்டு செல்லும் சம்பிரதாயம் இருந்தது. கோயில்குளம் ஆலயம் அழிந்தபின், அவ்வழக்கம் ஆரையம்பதி கந்தசுவாமி ஆலயத்துக்கு மாற்றப்பட்டு, உற்சவ காலங்களில், ஆரையம்பதி முருகன் ஆலயத்திலிருந்து, தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்கு வேல் கொண்டு செல்லும் வழக்கம் இன்றும் நடைமுறையில் இருக்கிறது.

கொக்கட்டிச்சோலையில் இருந்து சுமார் 10 மைல் தொலைவில் தாந்தமலை என்ற இடத்தில் ஒரு முருகன் ஆலயம் இருக்கிறது. இவ்வாலய உற்சவம் கதிர்காம உற்சவம் நடைபெறும் காலத்தில் இடம் பெறுவதால், தாந்தாமலைப்பதியை சின்னக்கதிர்காமம் எனவும் அழைப்பர். இவ்வாலயத்துக்கு சிங்கள மன்னர்கள் அடிக்கடி வருகைதருவது வழக்கம். அதற்குச் சான்றாக பௌத்த எச்சங்கள் இங்கு காணப்படுகின்றன.

கொக்கட்டிச்சோலை ஆலயத்தின் பொக்கிஷங்கள் இங்குள்ள ஒரு மலைக்குகையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டதால் தாந்தா மலை தாண்டவகிரி என்றும், பொக்கிஷமலை என்றும் அழைக்கப்பட்டது. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய நிர்வாகத்தில் தாந்தாமலை ஆலய நிர்வாகமும் சம்பந்தப்படுவது கவனத்திற் கொள்ளத்தக்கது. மாகோன் வகுத்த வன்னிமை நடைமுறை இவ்விரு ஆலயங்களிலும் இன்றுவரை கடைப்பிடிக்கப்படுவது இங்கு நினைவு கூரத்தக்கது.

## 11. மட்டக்களப்பு ராச்சியமும் மண்முனை ராச்சியமும்:

உலகநாச்சியின் வரவாற்றை மகாவம்சமும் அத் 37 குறிப்பு 92 இந்தியக் கல்வெட்டும் (Epigraphic India xv 246) உறுதிப்படுத்துகின்றது. இவ்வாறு கி.பி. 4ம் நூற்றாண்டில், உலகநாச்சியால் உருவாக்கப்பட்ட மண்முனை ராச்சியம் தோன்றியபின் மட்டக்களப்பு ராச்சியத்தின் (சம்மாந்துறை, வீரமுனைப் பிரதேசம்) ராஜதானிக்கும் மண்மனை ராஜ தானிக்கும் இடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.

மட்டக்களப்பு, மண்முனை ராச்சியங்களை ஆட்சி செய்த மன்னர்களின் விபரங்கள் மட்டக்களப்பு மான்மியத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இவர்களின் ஆட்சிக் காலம் கலியாண்டுக் கணக்கில் கொடுக்கபட்டிருக்கிறது. கலியாண்டு கி.மு. 3102 ல் ஆரம்பம் என்ற அடிப்படையில் பார்க்கும் போது, சிலரது ஆட்சிக்காலம் மாறுபடுகிறது. எவ்வாறாயினும், இம்மன்னர்கள் பற்றிய விபரம், கிழக்கிலங்கையிலும், தென்னிலங்கையிலும் நிலவிய தமிழர் ஆட்சியை உறுதிப்படுத்துகின்றது. அதுமட்டுமல்ல, சிங்கள வரலாறு கூறும் மகாவம்சம் இப்பாரிய பிரதேசத்தையிட்டு எதுவும் கூறாதிருப்பது, இந்த உண்மையை மேலும் வலுப்படுத்துகிறது.

உலகநாச்சிக்குப்பின், மண்முனைராச்சியத்தை கலிங்ககுலத்தவர் ஆட்சி செய்தனர். அவர்களுள், மட்டக்களப்பை ஆட்சிசெய்த குணசிங்கனின் மகன் அதிசுதன் (கலி : 3530) வங்கலாடன் (கலி : 3735) முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இக்காலகட்டத்தில் தட்சண கைலாயம் (திருகோணமலை) மட்டக்களப்பு, மண்முனை, நாகர்முனை (திருக்கோயில்) உன்னரசுகிரி (உகந்தை, பாணமைப் பிரதேசம்) என்பன தமிழ் ராச்சியங்களாக விளங்கின. சிவவணக்கம் பரவியது; சிவலாயங்களில் திருப்பணிகள் நடைபெற்றன. ஆனால் இவைபற்றிய முழுவிபரங்களையும் அறியக் கூடியதாக இல்லை.

## 12. பாண்டிய, சோழர் ஆட்சிக்காலம்

பிற்காலத்தில் அவ்வப்போது, பல்லவ, பாண்டிய, சோழர் படையெடுப்புகள் இலங்கைமீது ஏற்பட்டன. பல்லவர் (கி.பி. 7ம் நூற்றாண்டு) பாண்டியர் (கி.பி. 8ம் நூற்றாண்டு) சோழர் (கி.பி. 10ம் நூற்றாண்டு) படையெடுப்புகளின் போது, அவ்வப்போது இவர்களது செல்வாக்கு, கிழக்கிலங்கையிலும் ஏற்பட்டது.

இப்பாதிப்புகளுள், சோழர் காலத்தில் ஏற்பட்ட படையெடுப்பு கிழக்கிலங்கையில், பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது எனலாம். முதலாம் ராஜ ராஜ சோழன் (985 – 1014) காலத்திலும், இவனது மகன் முதலாம் ராஜேந்திரன் (1014 – 1044) காலத்திலும், இலங்கை சோழர் ஆட்சியில் இருந்தது. இக்காலத்தில் இலங்கை 10வது சோழ மண்டலமாக, மும்முடிச்சோழ மண்டலம் என்ற பெயருடன் சோழசாம்ராஜ்யத்துடன் சேர்க்கப்பட்டிருந்தது.

இக்காலத்தில், பொலன்னறுவை, ஜனனாதமங்கலபுரம் எனப் பெயர் மாற்றப்பட்டு, முற்று முழுதாகச் சோழர் ஆட்சியின் கீழ் இருந்தது. இக்காலகட்டத்தில், சோழர்பரம்பரையினர் பெரும் அளவில் கிழக்கிலங்கையில் குடியேறினர். இவர்கள் அங்கிருந்த குடிமக்களை அடக்கி ஒடுக்குவதில் முனைப்பாக இருந்தனர். இவர்களால் கலிங்க மக்கள் மிகவும் துன்புற்றனர்.

அடிக்கடி இவ்வாறு ஏற்பட்டதால், கிழக்கிலங்கையிலும் சோழர் செல்வாக்கு ஓங்கியது. அதனால், கலிங்கரின் ஆட்சிக்குப் பல பின்னடைவுகள் ஏற்பட்டன. சிங்கள மன்னர்களுக்குச் சோழர்களின் தயவு வேண்டியிருந்ததால், அவர்களும் சோழர்களுடன் சேர்ந்து கொண்டனர். எனவே கலிங்கரின் துயர் துடைக்க யாரும் இருக்கவில்லை.

மட்டக்களப்பு ராச்சியத்தின் மன்னனான தனசிங்கனும் (கலி. 4120) பொலன்னறுவை மன்னனான, அவனது மைத்துனன் அணிகங்கனும் சேர்ந்து சிவாலயங்களைக் கொள்ளையடித்து, அவற்றின் நிதியங்களைக் கப்பல்களில் ஏற்றிச் சோழநாட்டுக்கு அனுப்பி வைத்தனர் என மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது (பக். 51).

## 13. மாகோன் ஆட்சியில் தான்தோன்றீஸ்வரர் ஆயலம்

கலிங்கருக்கெதிரான அட்டூழியங்கள் பற்றிய செய்திகள் கலிங்க நாட்டுக்குச் செல்ல, அங்கிருந்து கலிங்கமாகன் பெரும் படையுடன் புறப்பட்டு இலங்கைக்கு வந்தான். பொலன்னறுவையிலும் ஏனைய பிரதேசங்களிலுமிருந்த சிங்களவர்களைத் துரத்தி விட்டுப் பொலன்னறுவையில் இருந்து ஆட்சி செய்தான். இவனது உபராஜனான சோழகங்கன் (குளக்கோட்டன்) இவனுக்கு வலது கரமாக விளங்கினான். இவ்விருவரும் இணைந்து, ராஜரட்டை, உறுகுணைரட்டை ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய இலங்கையில், கலிங்கர் ஆட்சியை ஸ்திரப்படுத்தியதுடன், பாதிக்கப்பட்ட ஆலயங்களைப் புனருத்தாரணமும் செய்தனர். பல ஆலயங்களில் திருப்பணி செய்தனர்.

இவர்கள் காலம் கிழக்கிலங்கையில் ஒரு பொற்காலமாகும். மாகோன் கி.பி. 1215 – 1255 வரை இலங்கையில் கட்டுக்கோப்பான ஆட்சி செய்தான். (40 வருடங்கள்) திருக்கோணேஸ்வரம், வெருகல் ஆலயம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம், கோவிற்போரதீவு சித்திரவேலாயுதர் ஆலயம், முதலியவற்றிற்குத் திருப்பணிகள் செய்து நிவந்தங்களை வழங்கினான். குளக்கோட்டன் திருகோணமலைப் பிரதேசத்திலும், மாகோன், மட்டக்களப்பு, திருக்கோயில் பிரதேசங்களிலும் மகத்தான பணிகளை ஆற்றினர். மாகோன் விஜயபாகு எனவும் குளக்கோட்டன் ஜயபாகு எனவும் சிறப்புப் பெயர் பெற்றிருந்தனர். மகாவம்சம், ராஜவலிய, பூஜாவலிய முதலிய பல சிங்கள வரலாற்று ஆவணங்கள் இவர்கள் செயற்பாடுகளைப் பற்றிக்கூறுகின்றன. இவை மாகோனை ஒரு கொடுங்கோலானாகக் காட்டினாலும், இவனது நீண்ட கால ஆட்சி (40 வருடம்) இவனது சிறந்த தலைமைத்துவத்துக்கு ஒரு எடுத்துக்காட்டாகின்றது.

மாகோன் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்குச் செய்தபணிகள் விசேடமாகக் குறிப்பிடப்படவேண்டியவை ஆகும். (மேலதிகவிபரங்களுக்குப் இக்கட்டுரையாசிரியரின் குளக்கோட்டன் தரிசனம்(1994) மாகோன் வரலாறு (1995) பார்க்கவும்.

## 14. கொக்கட்டிச் சோலையில் மாகோன் வகுத்த வன்னிமை.

மாகோன், இப்பகுதி ஆலயங்களில் நிர்வாக நடைமுறைகளை வகுத்து, நடைமுறைப்படுத்தினான். இன்றுவரை அவை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. இவன் வகுத்த முற்குகர் (முக்குவர்) வன்னிமை, கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய நிர்வாகத்துக்குப் பொறுப்பானவர்களை விபரமாக எடுத்துக் கூறுகிறது.

*"சீர்தாங்கு வில்லவரும் பணிக்கனாரும்*
*சிறந்த சட்டிலான், தனஞ்சயன்றன்*
*கார்தாங்கு மாளவன், சங்கு பயத்தன்*
*கச்சிலாகுடி முற்குகரின மேழேகாண்"*

ஆகவே முற்குகரின் ஏழுகுடிகளாவன – வில்லவன்குடி, பணிக்கன்குடி, சட்டிலான்குடி, தனஞ்சயன்குடி, மாளவன்குடி சங்குபயத்தன்குடி, கச்சிலாகுடி என்பனவாகும்.

"மட்டகளப்பு மான்மியத்"தில் இடம்பெறும் சில கல்வெட்டுப் பாடல்கள் மேலும் விபரங்களைத் தருகின்றன. அவற்றின் விபரம் வருமாறு

(i) குளிக்கல் வெட்டுமுறை – சாதியியல், ஆலயவியல் பற்றியது.

(ii) பெரிய கல்வெட்டு – கிழக்கிலங்கையில் மாகோன் பணிகள் பற்றியது.

(iii) பங்கு கூறும் கல்வெட்டு – ஆலயங்களில் குடுக்கை கூறுவது பற்றியது.

(iv) தாதன் கல்வெட்டு – விஷ்ணு ஆலய வணக்கமுறை பற்றிக் கூறுவது.

(v) போடிகல்வெட்டு – அறுமக்குட்டிப் போடி நியமனம் பற்றியது.

(vi) குலவிருதுகள் – குலங்களுக்குரிய சின்னங்கள் பற்றியது

(vii) சாதித் தெய்வக்கல்வெட்டு – ஒவ்வொரு சாதிக்குரிய தெய்வ மூர்த்தம் பற்றியது.

(viii) பங்கு தடுக்கும் முறை – குடுக்கை தடுக்கும் முறைபற்றியது.

இவை எதுவுமே மாகோன் காலத்தில் எழுதப்பட்டவை அல்ல. கோயில் நடைமுறைபற்றிக் கூறுவதாக, பிற்காலப் புலவர்கள் 18ம் நூற்றாண்டுகளில் எழுதியவையே இக்கல்வெட்டுப் பாடல்கள். கண்டி மன்னன் விமலதர்மனை விளித்துக் கூறுவதாகவும், ஒல்லாந்த மன்னனை விளித்துக் கூறுவதாகவும் இப்பாடல்கள் புனையப்பட்டுள்ளன. இப்பாடல்களின் மொழிநடைகூடச் செழுமை அற்றதாக, புலமை குறைந்த கிராமத்துப் புலவர்களால், பாடப்பட்டவையாக இருப்பதும் கவனத்திற் கொள்ளத்தக்கது.

15. ஆலய நிர்வாகத்தில் சம்பந்தப்படும் அரசப் பிரதி நிதிகள்.

முற்குகர் இனத்தில் இடம்பெறாத கலிங்கர் குடியினர் படையாட்சி குடியினர் உலகிப் போடி குடியினர் ஆகிய மூன்று குடியினர் இவ்வாலய நிர்வாகத்தில் சம்பந்தப்பட்டுள்ளனர். அதற்கான காரணத்தை நாம் இலகுவாக ஊகிக்கலாம்.

கலிங்க வம்சத்தினர், எல்லா ஆலயங்களிலும், எல்லா சமூக நடவடிக்கைகளிலும் முன்னுரிமை பெற்று முதன்மை வகித்தனர். மாகோன் கலிங்கனாக இருந்தபடியால் இத்தகைய நிலைப்பாடு அன்று இருந்தது. அதனால் இவர்கள் அரச செல்வாக்குடன் ஆலயநிர்வாகத்தில் பங்கு பற்றினர்.

அவ்வாறே படையாட்சி குடியினர் கலிங்க மாகனின் படையாட்சி வன்னிமைகளாக ஆலய நிர்வாகத்தில் பங்குபற்றினர். அரச அனுசரணை இல்லாது இவ்வாறு செய்ய முடியாது என்பது தெளிவு. உலக நாச்சிகுடி (பின்னர் உலகிப் போடிகுடி என அழைக்கப்பட்டவர்) கோயில் நிர்மாணித்த உரிமையிலும், ஆலய நிர்வாகத்தில் பங்குபற்றினர்.

எவ்வாறாயினும், இந்த மூன்று குடியினரும் கலிங்கர் இனத்தைச் சேர்ந்தவர்கள். எனவே இவர்கள் அரசனின் அனுசரணையுடன் – அரசப்பிரதிநிதிகளாக ஆலய நிர்வாகத்தில் பங்கு பற்றினர் எனலாம். இத்தகைய ஒரு நடைமுறையில் மாகோனின் மதி நுட்பத்தை ஒருவாறு ஊகிக்கலாம். ஆலய நிர்வாகத்தை முற்குகர்களான ஊர்மக்களிடம் கொடுத்தாலும், அரசசார்பிலான உரிமையும், கண்காணிப்பும் இத்தகைய ஏற்பாட்டில் தொக்கி நிற்பதை நாம் அவதானிக்கலாம்.

பிற்காலத்தில் முற்குகர் (முக்குவர்) இனத்தில் உள்ள ஏழுகுடிகளில் சில குடிகள் அருகிப்போய்விட்டன (வில்லவன் மாளவன், சங்குபயத்தன்,) அதனால் அக்குடிகள் இப்போது நிர்வாகத்தில் இல்லை.

16. தான்தோன்றீஸ்வரத்தின் இருதேர்கள்:

இத்தேர்கள் தொடர்பாக மட்டக்களப்பு மான்மியத்தில் ஒரு குறிப்பு இடம் பெற்றுள்ளது. (பக். 46) இதில் குறிப்பிடப்படும் பாண்டிய மன்னன், மாறவர்மன் ஸ்ரீ பல்லவன் (1145 – 1162) எனக் கொண்டு அவ்விபரத்தைக் கீழே தருகின்றோம்.

பாண்டியர்கள் மதுரையிலிருந்து ஆட்சி செய்த காலத்தில் மாறவர்மன் ஸ்ரீ பல்லவன் (1145 – 1162) என்னும் மன்னனின் முதலாவது மனைவியின் மகன் பட்டத்துக்குரிய பாண்டிய இளவரசன் புனந்துறுவன் (வரகுணன்) என்பவனுக்கு அரசுரிமை மறுக்கப்பட்டு, இரண்டாவது மனைவியின் மகனுக்குப் பட்டம் கட்டப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த புனந்துறுவன், இலங்கைக்கு வந்து தோப்பாவையை (பொலன்னறுவை) ஆண்டு கொண்டிருந்த சேனன் என்பவனிடம் படை உதவிகோரினான்.

சேனன் அவன் கோரிக்கையை ஏற்று, மூவாயிரம் படைவீரர்களைக் கொடுத்து உதவினான். மட்டக்களப்பு மன்னன் தருமசிங்கன் படைநடாத்திச் சென்று, புனந்துறுவனை ஆட்சியில் அமர்த்தி நாடு திரும்பினான். இவன் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தைக் கல்லால் கட்டியதுடன், ஆலயத்துக்கான மண்டபங்களும் கட்டி சுற்றுமதிலும் அமைத்துக் கொடுத்தான்.

மேலும், இவன் சோழநாட்டிலிருந்து மூன்று தேர்களும் வரவழைத்து, ஆலயத்துக்கு வழங்கினான். இத்தேர்கள் தான் தற்போது தான்தோன்றீஸ்வரத்திலிருக்கும் தேர்கள் என அனுமானிக்கலாம். (3வது தேர் – தேரோட்ட வைபவம் ஒன்றின் போது, தெய்வ குற்றம் காரணமாகத் தவறான பாதையில் ஓடி ஆற்றில் விழுந்து விட்ட தென்பர்) பாண்டிய இளவரசன் புனந்துறுவனுக்கு உதவியாக ஈழப்படைகள் மதுரைமேல் படை எடுத்த சம்பவத்துக்கு வேறு ஆதாரங்களும் உள்ளன. எனவே இச்சம்பவத்தை வரலாற்று ரீதியாக ஏற்றுக் கொள்வதில் தவறில்லை எனலாம்.

17. சில விளக்கங்கள்:-

இக்கட்டுரையில் பலவிடயங்கள் மிகச் சுருக்கமாகவே கூறப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டுக்கள், சான்றாதாரங்கள் முதலியவை பூரணமாக இடம் பெறமுடியவில்லை. ஆனாலும் வாசகர் மனத்தில் இருத்த வேண்டிய சில முக்கிய குறிப்புகள் வருமாறு:

(i) இலங்கையின் ஆதிக்குடிகளான இயக்கர், நாகர் என்போர் திராவிட இனத்தவர்கள். இலங்கை வேந்தன் இராவணன் இலங்கையில் ஆட்சி செய்த ஒரு திராவிட மன்னன்.

(ii) இவர்கள் மத்தியில் மிகவும் தொன்மைக்கால வணக்கமாகிய சிவவணக்கம் நிலவியது. திருமூலநாயனாரால் "சிவபூமி" எனக்குறிப்பிடும் அளவு அவ்வணக்கம் இலங்கையின் ஆதிக்குடிகளிடம் பரவியிருந்தது.

(iii) இலங்கையின் கிழக்குப்பிரதேசத்தில் சிவாலயங்கள் பல இருந்தன. மாமாங்கேஸ்வரம், திருக்கோயில் சித்திரவேலாயுதர் ஆலயங்கள், ஆரம்பத்தில் சிவாலயங்களாகவே இருந்தன.

(iv) திராவிடமக்கள் வாழ்ந்த தென்னிலங்காபுரியில் நாகர் முனை (திருக்கோயில்) உன்னரசுகிரி (உகந்தை) மட்டக்களப்பு (சம்மாந்துறை) மண்முனை (கொக்கட்டிச் சோலை) முதலிய தமிழ் ராச்சியங்கள் இருந்தன, பல சிற்றரசுகள் இருந்தன, பல சைவாலயங்கள் இருந்தன.

(v) மண்முனை ராச்சியம், கலிங்கத்திலிருந்து இலங்கைக்கு வந்த உலக நாச்சி என்பவளால் கி.பி. 4ம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்டது. இவளே, கோயில்குளம் லிங்கேஸ்வரர் ஆலயத்தையும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தையும் அமைத்தாள்.

(vi) கி.பி. 13ம் நூற்றாண்டில், கலிங்கத்திலிருந்து இலங்கை வந்த, மாகோன், குளக்கோட்டன் ஆகியோர் தான்தோன்றீஸ்வரர் ஆலயம் உட்படக் கிழக்கிலங்கையில் உள்ள பல ஆலயங்களுக்குத் திருப்பணி செய்தனர். 40 ஆண்டுக்காலம் நிலையான ஆட்சி செய்தனர். ஆலய நடைமுறைகளை வகுத்தனர். இவ்வாறு மாகோன் வகுத்த வன்னிமை இன்றும் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் பின்பற்றப்படுகிறது.

## ஆத்ம சக்தி

1. 'என்னால் இது முடியாது, நான் பலவீனமானவன்' என்று ஒரு போதும் நினைக்காதீர்கள். சோர்வுற்ற நேரங்களிலெல்லாம், அர்ஜுனனுக்கு உற்சாகமூட்டி போர் செய்யத் தூண்டிய அந்தக் கண்ணனின் வார்த்தைகளை நினைவில் கொள்ளுங்கள்.

2. "இறைவா ! எனக்குச் சொர்க்க போகங்கள் எதுவும் வேண்டாம். நீ மட்டுமே எனக்கு வேண்டும்" - இப்படி இறைவனிடம் சொல்லிக் கொண்டே இருங்கள்.

3. சுயநலம் இருக்கும் இடத்தில் ஆன்மாவின் முழுமையை, விசாலத்தை உணர முடியாது.

சிறிதளவு புலனின்ப நாட்டம் இருந்தாலும் ஆன்மாவை உணர முடியாது.

# தான் தோன்றீஸ்வரம்

-அன்புமணி

## 1. அறிமுகம்

"சிவபூமி" எனத் திருமூல நாயனாரால் குறிப்பிடப்பட்ட பூமி நமது இலங்கை. இதற்குத் தகுந்த காரணங்கள் உள. இலங்கையின் வரலாற்றைத் துருவி ஆராய்ந்தவர்கள் இந்த உண்மைகளை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இலங்கைத் தீவு சிதறிப்போன குமரிக் கண்டத்தின் (லெமூரியா) ஒரு துணிக்கை என்பதும் இங்கு வாழ்ந்த பூர்வ குடிகளின் சமயம், சிவலிங்க வணக்கத்தைக் கொண்ட சிவசமயம் என்பதும் வரலாற்றாசிரியர்களின் தீர்க்கமான முடிவு. அக்காலத்தில் (கி.மு.6000) இலங்கையில் ஆட்சி செய்த இராவணன் ஒரு சிவ பக்தன். பின்னர் எழுந்த இராமாயணத்தில் இராவணன் ஒரு இதிகாச பாத்திரம் ஆக்கப்பட்டுள்ளான்.

இலங்கைக்கு விஜயன் வருவதற்கு முன்பே (கி.மு.543) இலங்கையில் ஐந்து முக்கியமான ஈச்சரங்கள் இருந்துள்ளன. அவை முனீஸ்வரம், திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், திருத்தம்பலேஸ்வரம், நகுலேஸ்வரம் ஆகியன என்பதற்கு, இலங்கையின் வரலாற்று ஆவணமான "மகாவம் சத்தில்" ஆதாரங்கள் உள்ளன.

இந்த ஐந்து ஈச்சரங்களுடன் ஆறாவதாகக் கொள்ளப்பட வேண்டிய ஈச்சரமே தான்தோன்றீஸ்வரம் எனலாம். இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பது தான் இணைக்க தான்தோன்றிகளும் தோன்றி சிவலிங்கம். இது ஒரு மிகத் தொன்மையான சிவத்தலம் என்பதை எடுத்துக் கூறுவதான கர்ணபரம்பரைக் கதை, இத்தலத்தின் சிவமகிமையை எடுத்துக் காட்டுவதான வேறு பல கற்பனைக் கதைகளும் உருவாகி, அவை இப்பிரதேச மக்களிடையே ஆழமாக வேரூன்றியுள்ளன.

இன்றைய பார்வையில் அவை "கதை"களாக இருந்தாலும் அவற்றின் பின்னே அன்றைய வரலாற்றின் இழைகள் பின்னிக் கிடக்கின்றன என்பதை நாம் மிக இலகுவாக ஊகித்துக் கொள்ளலாம்.

## 2. கர்ண பரம்பரைக் கதைகள்

கிழக்கிலங்கையில் முக்கிய நகரமாக ஒரு காலத்தில் இன்றைய மண்முனைப் பிரதேசம் விளங்கியது. அக்காலத்தில் இப்பிரதேசத்தை உலக நாச்சி என்பவள் ஆட்சி செய்தாள் என்பது "மட்டக்களப்பு மான்மியம்" கூறும் கதை. அவள் ஆட்சிக் காலத்தில் மண்முனைக்காட்டில் விறகு வெட்டச்சென்ற வேடர்கள் ஒரு கொக்கட்டி மரத்தை வெட்டிய போது அதிலிருந்து செந்நிறமான சாறு வடிந்தது. அதை இரத்தம் என்று எண்ணிய வேடர் தலைவன் திடகன் உலக நாச்சியிடம் சென்று சொல்ல; உலகநாச்சி தன் பரிவாரங்களுடன் சென்று பார்த்த போது அவ்விடத்தில் ஒரு சிவலிங்கம் புதையுண்டு இருக்கக் கண்டு அதைப் பக்தி சிரத்தையோடு எடுத்து, அவ்விடத்தில் ஒரு சிறுகோயில் அமைத்து வழிபாட்டை ஆரம்பித்து வைத்தாள். காலக்கிரமத்தில் அவ்விடத்தில் ஓர் ஆலயம் அமைக்கப்பட்டு, அது இன்றைய தான் தோன்றீஸ்வரம் ஆலய மாகியது.

இக்கதையில் மண்ணில் புதையுண்ட சிவலிங்கம் வெளிப்பட்டதையும், அதற்கு முன் அங்கு ஒரு புராதன சிவாலயம் இருந்தது என்பதையும் நாம் மனங் கொள்ளலாம். இவ்வாறே, போர்த்துக்கீசர் காலத்தில் இவ்வாலயத்தை அழிக்க வந்த போர்த்துக்கீசத் தளபதி அசவிடோவுடன் ஆலயப்பூசகர் தர்க்கம்செய்து, அவன் சவாலுக்கு விடையாக, அங்கிருந்த கல் எருது ஐயர் கொடுத்த புல்லைச் சாப்பிட்டு, சாணம் போட்டது என்றும் அதைக் கண்ட தளபதி கோயிலை அழிக்காமல் சென்றான் என்றும் மற்றொரு கதை மக்கள் மத்தியில் உலவுகிறது.

இக்கதையில் இறைவன் திருவருளால், ஆலயம் போர்த்துக்கேயரின் அட்டூழியத்திலிருந்து தப்பியது என்ற வரலாற்று உண்மையை மனதில் பதித்துக்கொள்ளலாம். எவ்வாறாயினும் இச்சிவதலம் இன்று தேசக் கோயிலாகி வருடாந்த உற்சவத்தின் போது (தேரோட்டம்) நாடு முழுவதிலுமிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்களை ஈர்த்து அம்மக்கள் வெள்ளம்

பக்திவெள்ளத்தில் மூழ்கித் திளைக்க வைக்கிறது என்ற உண்மையை நாம் மறுப்பதற் கில்லை.

### 3. மட்டக்களப்பு மான்மியம் தரும் தகவல்கள்

கிழக்கிலங்கைக் கோயில்கள் பலவற்றில் மாகோன் வகுத்த வன்னிமைகோயில் நடைமுறை, இன்றும் நடைமுறையில் இருப்பதைப் பலர் சுட்டிக் காட்டியுள்ளனர். அவற்றுள் கொக்கட்டிச் சோலைத் தான் தோன்றீஸ்வரர் ஆலயம் முக்கிய இடம் பெறுகின்றது. இதற்கு ஆதாரமான பல தகவல்கள் "மட்டக்களப்பு மான்மியம்" என்ற நூலில் இடம் பெறுகின்றன. (நீண்ட காலம் ஏட்டுப் பிரதியாக இருந்த இந்த ஆவணம் மகாவித்துவான் F.X.C. நடராசா அவர்களால் நன்கு பரிசீலனை செய்யப்பட்டு நூலாகப் பதிப்பிக்கப்பட்டது)

இந்நூலில் இடம் பெறும் "பங்கு கூறும் கல்வெட்டு", "சாதித் தெய்வக் கல்வெட்டுப் பாடல்கள்", " போடி கல்வெட்டு", "முற்குகர் வன்னிமை" முதலிய கல்வெட்டுப் பாடல்கள் கொக்கட்டிச்சோலையோடு தொடர்புள்ளவை. அக் கல்வெட்டுப் பாடல்களின்படி, இவ்வாலயத்தில் தொண்டு செய்வதற்காக, காளிட்டம், காரைக்கால், மருங்கூர் போன்ற இடங்களிலிருந்து வன்னியரைக் கொண்டு வந்து இங்கு குடியமர்த்தியதாக அறிய முடிகிறது.

"முற்குகர் வன்னிமை" என்பது முற்குகரின் தலைமைத்துவம் என்பதைக் குறிக்கும். "முற்குகர்" தற்போது "முக்குவர்" என அழைக்கப்படுகின்றனர். இவர்களே இன்று இவ்வாலயத்தின் நிர்வாகத்தைக் கவனித்து வருகின்றனர். ஒருகாலத்தில் மண்முனைப் பிரதேசத்தின் சிற்றரசர்களாகவும், பின்னர் வன்னிமைகளாகவும் ஆட்சிப் பொறுப் பேற்றிருந்த இவர்கள் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் மத்தியில் உள்ள ஏழுகுடிகளும் "மான்மியக் கல்வெட்டுப் பாடலில் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றனர்.

> "சீர்தங்கு வில்லவன், பணிக்கனாரும், சிறந்த சட்டி,
> கச்சிலான் தனஞ் செயன்றான்
> கார் தங்கு மாளவன், சங்குப்பத்தன், கண்டகுடி
> முற்குகரிலேழேகாண்"

இப்பாடலின்படி வில்லவன் குடி, பணிக்கன்குடி, சட்டிலான் குடி கச்சிலான் குடி, தனஞ்சயன் குடி, மாளவன்குடி, சங்குபத்தன் குடி என்பன முற்குகரின் ஏழு குடிகள் என அறிய முடிகிறது.

### 4. கோயில் குளம், கொக்கட்டிச் சோலை, தாந்தாமலை.

இம்மூன்று கோயில்களுக்கும்' ஒரு வகைத் தொடர்பு உண்டு. கோயில்குளத்தில் உலக நாச்சி காலத்தில் ஒரு பிரம்மாண்டமான ஆலயம் இருந்திருக்கிறது. இக்கோயிலில் படிகலிங்கம் (சிதம்பரத்தில் உள்ளது போல்) பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடு செய்யப்பட்டது. இக்கோயிலும் உலகநாச்சியால் உருவாக்கப்பட்டது என்பதற் போலும் அக்காலத்தில் கோயில் குளத்திலிருந்து சூலம் ஒன்று கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுத் தேரோட்ட உற்சவம் ஆரம்பமாகும் எனப்படுகின்றது.

கோயில்குளம் கோயில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டபின் அதன் இடிபாடுகளில் அகப்பட்ட சில கந்தசுவாமி கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டன. அது முதல் இக் கந்தசுவாமி கோயிலில் இருந்து வேல் ஒன்று கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரர் ஆலயத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுத் தேரோட்ட உற்சவம் ஆரம்பமாகு வழக்கம் கைக் கொள்ளப்பட்டது.

தாந்தாமலை முருகன் கோயில் கொக்கட்டிச்சோலையில் இருந்து சில மைல்களுக் கப்பால் உள்ள ஒரு பாறைப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. இப்பிரதேசத்தில் இடிபாடுகளுள் பல சிவசின்னங்கள் பின்னர் கண்டெடுக்கப்பட்டன. இப்பிரதேசத்தில் மலையடி வாரத்தில் யாரும் புகமுடியாத ஒரு குகை உண்டு. இக்குகையில் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் பொக்கிஷங்கள் பாதுகாத்து வைக்கப்பட்டன என்றும் அதனால் இத்தாந்தாமலை தான் தோன்றீஸ்வரர் ஆலயம் போன்றே தாந்தாமலை முருகன் ஆலயமும் மிகவும் புராதனமானது என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

### 5. ஆலய உற்சவங்கள்

இவ்வாலயத்தின் வருடாந்த உற்சவம் மிக முக்கியமானது. "தேரோட்டம்" என அழைக்கப்படும் நிறைவு நாள் உற்சவத்தில் கலந்து கொள்வதற்காக ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டு மக்கள் வெள்ளமாக ஆலயத்தைச் சூழ்ந்து நிற்பர்.

மிக நுணுக்கமான சிற்ப வேலைப்பாடமைந்த புராதனமான இருதேர்கள் இவ்வாலயத்தில் உள்ளன. மரத்தினால் ஆன

இத்தேரின் மரச் சிற்ப வேலைகள் பல புராணக் காட்சிகளைச் சித்தரிப்பதாக அமைந்துள்ளன. இத்தனை வருடங்களாகியும் அழிந்து போகாத இம்மரவேலைச் சித்தரிப்புகள் அவற்றைச் செதுக்கிய சிற்பியை நினைவு கூர வைக்கின்றன. இத்தேர்களுக்கான சக்கரங்கள் ஆள் உயரத்தில் ஒரு அடி தடிப்பும் ஐந்து அடி விட்டமுங் கொண்ட வட்டமான மரக்கட்டையினால் ஆனவை. இத்தேர்களை இழுப்பதற்கு பத்து அங்குலச் சுற்றளவும் நூறு அடி நீளமுங் கொண்ட தும்புக் கயிற்று வடம் உபயோகிக்கப்படுகின்றது. நூற்றுக்கணக்கான பக்தர்கள் இவ்வடக்கயிற்றைப் பிடித்து இழுத்துத் தேரை நகர்த்துவார்கள். உரிய முறைப்படி சகல குடிமக்களும் இதில் பங்கு பற்றாவிட்டால் தேர் நகராது என்பது ஐதீகம். அதை உண்மை என்று நிரூபிப்பது போல் பல மணித்தியாலங்கள் முயன்றும் இம்மியும் அசையாத தேர், திடீரென்று மிகவேகமாக நகர ஆரம்பிக்கும். மக்கள் வெள்ளத்தைப் பிளந்து கொண்டு இத்தேர்கள் நகர்ந்து செல்லும்.

இருதேர்களின் பின்னால் கொதிக்கும் மணலையும் பொருட்படுத்தாது நூற்றுக் கணக்கான பக்தர்கள் பூமியில் உருண்டு அங்கப்பிரதட்சணம் செய்வர். சனசமுத்திரத்திலிருந்து "அரோகரா" ஒலி இடைவிடாது ஒலிக்கும். பக்தி பரவசத்தில் மூழ்கிய மக்கள், ஒருவிதமான சிறியவர் பெரியவர் என்றில்லாது அனைவரையும் ஒருபாந்த சமுத்திரத்தில் நாம் காணலாம்.

## 6. இன்றையநிலை

மிகத் தொன்மைத்தான இச்சிவாலயம் மாகோன் காலத்தில் (1215 – 1255) திருப்பணி செய்யப்பட்ட பெருமையுடையது. அன்று மாகோன் வகுத்த வன்னிமை (ஆலய நிர்வாகமுறை) இன்றும் மிகவும் இறுக்கமாகப் பின்பற்றப் படுகிறது.

கொக்கட்டிச்சோலையில் அமைந்துள்ள இவ்வாலயம் அண்மைக்கால இனக் கலவரத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டுப் பல வருடங்களாக வருடாந்த உற்சவமான தேரோட்ட வைபவம் இடம் பெறவில்லை. இப்பணி வேலைகள் தொடர்கின்றன. மூலஸ்தானத்துச் சிவலிங்கம் மூடிவைக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் ஆலயத்தின் ஒருபகுதியில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள சிவமூர்த்தங்களுக்கு நாள் தோறும் பூசைகள் செய்யப்படுகின்றன. வெள்ளிக்கிழமைகளில் பக்தர்கள் திரளாக இன்றும் கூடுகின்றனர். தங்கள் குறைகளை இறைவனிடம் முறையிடுகின்றனர். நேர்கடன்களை நிறைவேற்றுகின்றனர்.

ஆலயத்தின் அர்த்த மண்டபம், மகாமண்டபம், என்பன நவீன முறையில் அமைக்கப்பட்டு, முன் கோபுரமும் மிகுந்த பொருட் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. இப்பகுதி மக்களின் வாழ்வுடன் இவ்வாலயம் இரண்டறக் கலந்திருப்பதால் ஊரில் உள்ள ஒவ்வொருவரும் இவ்வாலயத்தின் கும்பாபிஷேகத்தைக் காணத் துடித்துக் கொண்டிருக்கின்றனர். ஆலயப் புனரமைப்பு வேலைகளில் ஒவ்வொருவரும் பெரும்பங்களிப்புச் செய்துள்ளனர்.

ஆலயத்தில் முன்போல வருடாந்த உற்சவத்தையும் தேரோட்டத்தையும் காண, நாட்டில் உள்ள சைவப் பெருமக்கள் அனைவரும் பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர்.

## மனத்தைக் கழுவுதல்.

அறையில் படிந்திருக்கும் தூசியை விளக்குமாற்றாலும், தண்ணீராலும் போக்குகிறோம். மனதில் தோன்றும் சில எண்ணங்களை வலுக்கட்டாயமாக மனதிலிருந்து நீக்கிக்கொள்ள வேண்டும். சில எண்ணங்களை மனம் வருந்தி சிந்தும் கண்ணீரால் போக்கிக் கொள்ள வேண்டும். "இறைவா ! எனக்கு ஏன் இப்படிப்பட்ட எண்ணங்கள் தோன்றுகின்றன ? இவை இருந்தால் அங்கு நீ இருக்க மாட்டாயே ! என்னுடைய மனதைத் தூய்மையாக்கு" – என்று இப்படி கண்ணீருடன் இறைவனிடம் பிரார்த்தனை செய்யுங்கள்.

# கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வர ஆலயத்தின் பழைய கட்டிட அமைப்பும் சிற்ப அமைப்பும்

க. தங்கேஸ்வரி, பி.ஏ. (தொல்) சிறப்பு.

1. ஆலய வரலாறு

கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வர ஆலயத்தில் காலத்துக்குக் காலம் திருப்பணிவேலைகள் நடைபெற்று வந்துள்ளன. அதனால் அதன் கட்டிட அமைப்பும் சிற்பவேலைப் பாடுகளும் அவ்வப்போது மாற்ற மடைந்துள்ளன. பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த இவ்வாலயத்தில் மகோன் காலத்தில் (கி.பி. 1215 – 1255) திருப்பணிகள் நடைபெற்று, ஆலய நிர்வாகம் தொடர்பான சட்டதிட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன என்பதை மட்டக்களப்பு, மான்மியம் வாயிலாகவும் ஏனைய சான்றுகள் மூலமும் அறிய முடிகிறது.

எனவே இன்று நாம் பார்க்கின்ற ஆலயக் கட்டிடம் அதன் பழைய கட்டிடம் அல்ல என்பதை நாம் அறிவோம்.

கலிங்கத்திலிருந்து வருகைதந்த உலக நாச்சியால் இவ்வாலயம் நிறுவப்பட்ட தென்றோ, புதுப்பிக்கப்பட்ட தென்றோ கொண்டால் அதன் காலம் கி.பி. 4ம் நூற்றாண்டு வரை செல்லும்.

எவ்வாறாயினும் தற்போதுள்ள ஆலயக் கட்டிடம் அதன் பழைய கட்டிடம் அல்ல என்பதை ஏற்றுக் கொண்டு அதன் பழைய கட்டிட அமைப்பும் சிற்பவேலைப் பாடுகளும் எவ்வாறு அமைந்திருந்தன என்பது பற்றி ஆராய்வாம்.

2. ஆலயக் கட்டிட வரலாறு

மிகத் தொன்மையான வரலாற்றினையுடைய இவ்வாலயம் ஆரம்பத்தில் அழியும் பொருட்களால் கட்டப்பட்டிருந்தது என்பதை இலகுவாக ஊகித்துக் கொள்ளலாம். தெய்வச் சின்னம் ஒன்று கண்டெடுக்கப்பட்டதும், முதலில் கொத்துப் பந்தலில் அதைவைத்து வணக்கம் செய்து காலப்போக்கில் படிப்படியாக ஆலயத்தை விஸ்தரித்துச் செல்லுதல் மரபு. சுட்ட செங்கற் கட்டிடமோ, கருங்கல் கட்டிடமோ புழக்கத்தில் இல்லாத காலத்தில் கம்பு, தடி போன்ற அழியும் பொருட்களைக் கொண்டே ஆலயங்கள் அமைக்கப்பட்டன. பொதுவாக தமிழகத்திலிருந்து இலங்கைக்கு வந்த தமிழ் மன்னர் காலத்திலேயே இலங்கையில் காணப்படும் சைவ ஆலயங்கள் அமைக்கப்பட்டன என்பதை வரலாற்று ரீதியாக நாம் அறிகிறோம்.

அந்த வகையில் சோழர் காலத்தில் (கி.பி.10ம் நூற்றாண்டு) பொலன்னறுவை திருக்கோணமலை, தம்பலகாமம் முதலிய இடங்களிலும் பாண்டியர்காலத்தில் (கி.பி.12ம் நூற்றாண்டு) கிழக்கிலங்கை தென்னிலங்கை முதலிய இடங்களிலும் கலிங்கர் காலத்தில் (13ம் நூற்றாண்டு) திருகோணமலை, மட்டக்களப்பு, திருக்கோயில் முதலிய இடங்களிலும் சுட்டசெங்கல், கருங்கல் கொண்டு ஆலயங்கள் அமைக்கப்பட்டன.

3. பாண்டியர் காலக் கட்டிட அமைப்பு

கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வர ஆலயக் கட்டிட அமைப்பு பாண்டியர் காலப் பாணியில் அமைந்துள்ளதாக வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். பாண்டியர் காலக் கோயில்களான திருக்கோயில் சித்திர வேலாயுதர் ஆலயம் பொலன்னறுவை சிவதேவாலயம் (2) கட்டிட அமைப்பை ஒத்ததாகக் காணப்படும். கொக்கட்டிச் சோலைத் தான்தோன்ஸ்வர ஆலயக் கட்டிட அமைப்பு (அ) கர்ப்பக்கிரகம் (மூலஸ்தானம்) (ஆ) அந்திராளம் (இடைகழி) (இ) அர்த்த மண்டபம் என்னும் பகுதிகளைக் கொண்டு அமைந்திருந்தது. இத்தகைய கட்டிட அமைப்பு பாண்டியர் காலத்துக் குரியது என டாக்டர் கா. இந்திர பாலா இனங் காண்கிறார்.

மேலும் இங்குள்ள மரத்தாலான இருதேர்களில் காணப்படும் சிற்ப வேலைப்பாடுகள் பாண்டியர் காலத்துக்குரியன என்பதும் வரலாற்றாசிரியர்கள் கருத்தாகும்.

எனவே கொக்கட்டிச் சோலைத் தான்தோன்றீஸ்வர ஆலயத்தின் நிலையான கட்டிடம் பாண்டியர் காலத்தில் (கி.பி. 11ம் 12ம் நூற்றாண்டு) அமைக்கப்பட்டதாகக் கொள்ளலாம்.

4. தான்தோன்றீஸ்வரர் ஆலயக் கட்டிட அமைப்பு

தான்தோன்றீஸ்வர ஆலயத்தின் ஆரம்பக் கட்டிட அமைப்பு பின்வரும் அம்சங்களைக் கொண்டிருந்தது.

அ. கர்ப்பக் கிரகம் (மூலஸ்தானம்)
ஆ. அந்திராளம் (இடைகழி)
இ. அர்த்த மண்டபம்

இவற்றுள் கர்ப்பக் கிரகமும், அந்திராளமும் கருங்கல்லினால் ஆக்கப்பட்டு சாந்து பூசப்பட்டிருந்தது.

பிற்காலத்தில் மகாமண்டபம், நிருத்தமண்டபம், ஸ்நானமண்டபம், ஸ்தம்பமண்டபம் முதலியன அமைக்கப்பட்டன. ஸ்தம்ப மண்டபத்தில் 60 அடி உயரமான கொடித்தம்பமும்

பலிபீடமும் உள்ளன. இவையாவும் பிற்காலத்தில் அவ்வப்போது அமைக்கப்பட்டவை ஆகும். 1946ம் ஆண்டில் ஆலயம் புனரமைப்புச் செய்யப்பட்ட போது மேற்படி அமைப்புகளில் எவ்விதமாற்றமுஞ் செய்யப்படவில்லை.

1977ல் இவ்வாலயத்தை நான் பார்வையிட்டேன். எனவே புயல் அழிவுக்கு முன் இவற்றைப் பார்வை யிட்டு முழு விபரங்களும் சேகரிக்கக் கூடியதாக இருந்தது.

– அப்போது இவ்வாலயத்தில் மேற் குறிப்பிட்ட கட்டிட அமைப்புக்கள் இருந்தன. இவை தவிர பின்வரும் மூர்த்தங்களும் இக்கோயிலில் இடம் பெற்றிருந்தன.

i. சிவன் கோயிலுடன் சேர்ந்து வடக்கு முகவாயிலைக் கொண்ட அம்மன் கோயில், மற்றும் விநாயகர் கோயில்.

ii. பரிவாரமூர்த்திகளான முருகன், வள்ளி, தெய்வானை, விஷ்ணு.

iii. நவக்கிரகங்கள், மற்றும் வைரவர், நாகதம்பிரான்

இப்பரிவார மூர்த்தங்கள் பிற்காலத்தில் அவ்வப்போது அமைக்கப்பட்டிருக்கலாம்.
(பழைய ஆலயத்தில் இரண்டு சுற்றுமதில்கள் இருந்ததாகவும் தெரிய வருகிறது)

## 5. பழைய ஆலய அமைப்பு

இலங்கைக் கட்டிடக் கலை வளர்ச்சியை நோக்குமிடத்து இது பெரும்பாலும் பின்வருமாறு அமைகின்றது.

i. அநுரதபுரம் – பல்லவர் காலப் பாணி
ii. பொலன்னறுவை – சோழர் காலப் பாணி

சோழர் காலத்துக்குப்பின் பாண்டியர் சிறிது காலம் தமது செல்வாக்கைச் செலுத்தினர். பாண்டியர் புதிதாகக் கட்டிடங்களை அமைக்கா விட்டாலும், கட்டிடக் கலையில் சில புதிய அம்சங்களைப் புகுத்தியுள்ளனர்.

இவற்றை இந்துக் கோயில்களில் அதிகமாகக் காணலாம். இவை திருக்கோயில் சித்திரவேலாயுதர் ஆலயம், கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் ஆகியவற்றில் நன்கு பிரதிபலிக்கின்றன. அந்த வகையில் தான் தோன்றீஸ்வரர் ஆலயம் பின்வரும் அம்சங்களைக் கொண்டிருந்தது.

i. அதிஷ்டானம் அல்லது அடித்தளம்
ii. பாதம் அல்லது கம்பம்
iii. தேவகோஷ்டம் அல்லது தெய்வ வரிசை
iv. மஞ்சம் அல்லது தளவரிசை
v. கூடங்கள் அல்லது ஒடுக்கங்கள்
vi. சாலை அல்லது இணைப்பு
vii. கோஷ்ட பஞ்சரம்
viii. கழுத்து அல்லது கண்டம்
ix. சகரம் அல்லது விமானம்
x. ஸ்தூபி அல்லது கலசம்

இவை ஒவ்வொன்றையும் தனித்தனியாக அவதானித்தல் தகும்.

## 6. அதிஷ்டானம் அல்லது அடித்தளம்

இவ்வாலயத்தின் அடித்தளம் பல்லவர் காலக்கட்டிடப் பாணியில் அமைந்துள்ளது. அடித்தளத்திலிருந்தே தூண்கள் எழுவது இப்பாணிக்கு மற்றொரு சான்றாகிறது. இதன் எளிமையான அமைப்பு தேர்ச்சி பெறாத சிற்பிகளின் கை வண்ணத்தைக் காட்டுகின்றது.

இந்த அடித்தள அமைப்பில் உபானம், கம்பு, குமுதம், கொடுங்கை முதலான உறுப்புகள் இடம் பெறுகின்றன. ஆனால் இவ்வுறுப்புகள் அலங்காரத்துக்காக இல்லாமல் அடித்தளத்தின் உறுதிக்காகவே அமைக்கப்பட்டுள்ளன. இதில் சிற்ப வரிசைகளோ வேறு அலங்காரங்களோ இடம் பெறவில்லை. ஆனால் இதில் உள்ள கொடுங்கை என்னும் அமைப்பில் "கூடு" அலங்காரவேலைப்பாடுகள் இடம் பெற்றுள்ளன. தென் இந்தியக் கோயில்களில் இக் 'கூடு' கீர்த்தி முகம் போன்ற அலங்கார வேலைப்பாடுகளுடன் காணப்படுகின்றன. ஆனால் அவை இதில் இடம் பெறவில்லை இக் 'கூடு' அமைப்பு பல்லவர் சோழர் காலத்தன்மை போலன்றி எளிமையாக அமைந்துள்ளது.

## 7. பாதம் அல்லதுகம்பம்

இக்கோயிலில் அடித்தளத்திலிருந்து எழும்புகின்ற அரைத்தூண்கள் தனியான அடித்தளத்துடன் இல்லாமல் கோயில் அதிஷ்டான மட்டத்திலிருந்து எழும்புகின்றன. கர்ப்பக்கிரகத்தின் பின் புறத்தில் எட்டு வடக்குத் தெற்குச் சுவர்களில் முறையே பத்து என மொத்தம் இருபத்தெட்டு அரைத்தூண்கள் அமைந்துள்ளன. இவை அடித்தளத்துடன் ஒட்டினாற் போன்று புடைப்புருவமாகக் காணப்படுகின்றன. இத்தூண்கள் யாவும் ஐந்து பக்கங்களுடன் உள்ளன. இத்தகைய அமைப்பு பாண்டியர் காலத்துக் குரியது எனக் கலாநிதி இந்திரபாலா கூறுவது கவனத்திற் கொள்ளத்தக்கது.

## 8. தேவ கோஷ்டம்

இது களத்துவாரம் எனவும் வழக்கப்படும். இந்துக்கோயிகளில் கர்ப்பக் கிரக வெளிப்புறச் சுவர்களிலும், மண்டபச் சுவர்களிலும் அமையும் சிற்ப அலங்காரங்களையே தேவ கோஷ்டம் எனக் குறிப்பிடுவர்.

இவ்வாலயத்தில் கர்ப்பக்கிரகச் சுவரின் பின்புறத்திலும் வடக்குத் தெற்குப் புறங்களிலும் பக்கங்களுக் கொன்றாக மூன்று தேவ கோஷ்டங்கள் அமைந்துள்ளன.

இத்தேவ கோஷ்டங்கள் இருபுறமும் அரைத்தூண்களில் இருந்து எழுப்பப்பட்ட விமானம் போன்ற அமைப்பினைக் கொண்டு பிரஸ்தாரத்தின் மேல் சீர்த்தி முகம் ஒன்றினைக் கொண்டதாக உள்ளது. இவற்றில் சிகரம் தூபி என்பன இல்லை. இந்துக் கோயில் கட்டிடக் கலையின் ஆரம்பப்படியில் இப்படி அமைவது குறிப்பிடத்தக்கது.

### 9. மஞ்சம் அல்லது தளவரிசை

இது பிரஸ்தரம் கொடுங்கை எனவும் அழைக்கப்படும். இதில் கூடங்கள், சாலைகள், கோஷ்ட பஞ்சரம், நந்தி போன்ற சிற்ப வேலைப்பாடுகள் இடம் பெறும். இக்கோயிலின் கொடுங்கையில் வரியானம் ஒன்று காணப்படுகிறது. பொதிகைமீது எழுப்பப் பட்டுள்ள கொடுங்கைத் தளவரிசை இங்கு ஒரு புதிய பாணியில் அமைக்கப்பட்டுள்ளது. பல அடுக்கடுக்கான வரிசை அமைப்புடன் கம்பங்களைத் தாங்கு வது போன்று அது காணப்படுகின்றது. சிற்ப நுணுக்கங்கள் இல்லா விட்டாலும் இதன் மீது அமைக்கப்பட்டுள்ள யாழி வரிசை சிறப்பானது. இவ்வமைப்பு திருக்கோயில் சித்திரவேலாயுதர் ஆலயத் தளவரிசையிலிருந்து வேறுபடுகிறது.

### 10. கூடங்கள்

இக்கோயில் விமானத்துக்குரிய மேற் தளத்தில் ஒவ்வொரு கோணத்திலும் சம சதுரக் கூடங்கள் அமைந்துள்ளன. மூலைகளில் சற்சதுர தள அமைப்பும் அதன்மேல் கோள வடிவிலான சிகரத்தையும் கொண்டதாக இவை அமைந்துள்ளன. இங்கு அமைக்கப்பட்டுள்ள கூடங்கள் ஒவ்வொரு பக்கமும் நான்கு தூண்களைக் கொண்டது. அதன் மேல் நான்கு பக்கங்களைக் கொண்ட சிகரமும், கலச வடிவிலான தூபியும் அமைந்துள்ளன.

ஆனால் கோயிலின் பிரதான சிகரம் (விமானம்) பக்கங்களற்ற கோள வடிவத்தைக் கொண்டுள்ளது. கூடத்தின் சிகரமானது விமானத்தின் சிகர அமைப்பினின்றும் வேறுபட்டு அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கது.

### 11. சாலை

மேல் தளத்தின் மேல் இரு கூடங்களுக்கிடையே அமைந்துள்ள நீள் சதுரமான அமைப்பு 'சாலை' எனப்படும்.

இது கர்ப்பக் கிரகத்தின் மேல் எழுப்பப்படும் விமானத்தின் நாற்புறமும் காணப்படும். இவற்றின் சிகரங்கள் வண்டிக் கூரை போன்ற வடிவில் அமையும். இச் சாலைகள் அரைத்தூண்கள் மேல் அமைக்கப்பட்டு, சீர்த்தி முக அலங்கார சிற்பங்களைக் கொண்டிருக்கும் இவை விமானத்தின் நான்கு பக்கங்களிலும் பக்கத்துக் கொன்றாக அமைந்துள்ளன.

பின்புறம் அமைந்துள்ள சாலையின் நடுவில் விஷ்ணு ஒரு ஆசனத்தில் அமர்ந்த நிலையில் வடிவமைக்கப்பட்டுள்ளார். அவரது இருபுறமும் தேவியர் இருவரும் கூப்பிய கரங்களுடன் நிற்கின்றனர்.

வடபுறம் உள்ள சாலையில் முருகக் கடவுள் மயில்வாகனத்துடன் காட்சி தருகிறார். தென்புறம் உள்ள சாலையில் நடராஜப் பெருமான் ஆனந்தத் தாண்டவம் ஆடும் நிலையில் காட்சி தருகிறார். அவரது காலின் கீழ் முயலகன் மிதிபட்டும் கிடக்கிறான். நடராஜப் பெருமானின் இருகைகளில் ஆயுதங்கள், ஒரு கையில் தீ, மறு கையில் அபய முத்திரை காணப்படுகின்றன.

முன்புறம் உள்ள சாலையில் சிற்பங்கள் எதுவும் இல்லாமல் வெறுமையாக விடப்பட்டுள்ளது.

இந்த நான்கு சாலைகளினதும் மேற்புறங்களில் நந்தி வடிவங்கள் அமர்ந்தநிலையில் அமைக்கப்பட்டுள்ளன. இதுபோன்று திருக்கோயில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்திலும் காணப்படுவது குறிப்பிடத் தக்கது.

### 12. கோஷ்ட பஞ்சரம்

அணியாகப் பயன் படும் தனி கோஷ்ட பஞ்சரம் எனப்படும். இது இருவகைப்படும்.

(அ) தம்ப பஞ்சரம் (நடுவில் கும்பம் போன்ற அமைப்பினையுடையது)

(ஆ) கோஷ்ட பஞ்சரம் (நடுவில் கோஷ்டம் உள்ளது)

இக்கோஷ்ட பஞ்சரம் தளவரிசையில் உள்ள சாலைக்கும் கூடத்துக்கும் இடையில் அமையப்பெறும் விமானத்தின் நாற்புறமும் பக்கத்திற்கு இரண்டிரண்டாக எட்டு கோஷ்ட பஞ்சரம் இவ்வாலயத்தில் அமைந்துள்ளன.

ஒவ்வொரு கோஷ்ட பஞ்சரமும் இரண்டு அரைத்தூண்களுடன் வில் மாடங்களைக் கொண்டதாகக் காணப்படுகிறது. நான்கு கோஷ்ட பஞ்சரங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு சிற்ப வடிவம் காணப்படுகிறது. அவை பிரம்மாவின் புத்திரர்களான சனகர், சனந்தனர், சனாதனர் சனத்குமாரர் எனச் சொல்லப்படுகிறது. இச்சிற்பங்கள் நான்கும் நிர்வாண நிலையில் உள்ளன.

### 13. கழுத்து அல்லது கண்டம்

விமானத்தின் அடிப்புறம், உட்சென்று ஒடுங்கிக் காணப்படும் பகுதி கழுத்து, கக்கலம் எனப்படும். இக்கழுத்தில் விமானத்தைச் சுற்றி, விமானத்தைத் தாங்குவதுபோல் அரைத்தூண்கள் காணப்படுகின்றன. இந்த அரைத் தூண்களுக்கிடையில் சிற்ப உருவங்கள் விமானத்தைத் தாங்குவது போன்று பெரிய மனித உருவத்தின் குனிந்த நிலையில் அமைக்கப்பட்டுள்ளன.

இச் சிற்பங்களுக் கிடையில் சிறிய மனித உருவச் சிற்பங்களும் காணப்படுகின்றன. விமானத்தைத் தாங்கும் உருவங்கள் பக்கத்துக்கு இரண்டு வீதம் எட்டு உள்ளன. இவை தமது கைகளைத் தொடையில் ஊன்றிய படி கம்பீரத்துடன் விமானத்தைத் தாங்குவது போன்று காணப்படுகின்றன.

### 14. சிகரம் அல்லது விமானம்

மேற்புறம் அமைந்துள்ள கோள வடிவம் சிகரம் எனப்படும். இதுவே கர்ப்பக்கிரகத்தின் கூரையாக அமைகிறது. இதற்குப் பண்டிதை, தலை, மஸ்தகம் என்ற பெயர்களும் உள.

சிகரங்கள் அல்லது விமானங்கள் கோளவடிவில் அல்லது பக்கங்களைக் கொண்டதாக அமைகின்றன. தான் தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இச்சிகரம் கோளவடிவில் அமைக்கப்பட்டுள்ளது. அதில் சீர்த்தி முகங்களுடன் கூடிய எட்டு மகாநாசிகளின் உருவங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வுருவங்கள் ஆண்களாகவும் பெண்களாகவும் உட்கார்ந்த நிலையிலும் நிற்கும் நிலையிலும் அமைக்கப்பட்டுள்ளன. சிகரத்தின் நான்கு பக்கங்களிலும் சக்கரம் போன்ற வட்டமான சிற்பவேலைப் பாடுகளும் காணப்படுகின்றன. சிகரத்தின் உச்சியில் மகா பதுமம் என்ற தாமரை வடிவம் பதினெட்டு இதழ்கள் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கைகள் வேதாகமங்களில் காணப்படும் தத்துவங்களுக்கேற்ப அமைகின்றன.

### 15. தூபி அல்லது கலசம்

இதுமுடி எனவும் அழைக்கப்படும். இத்தூபி சிகரத்தின் உச்சியில் இடம் பெறும். கோயில் கும்பாபிஷேகத்தின் போது இத்தூபிக்கே அபிஷேகம் செய்யப்படுகிறது.

இந்து தர்மப்படி ஒரு ஆலயம் மனிதனின் உடல் அமைப்பைக் கொண்டுள்ளது. எண் சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம். அது போலவே கோயிலுக்கும் தூபி அல்லது கலசம் அமைகிறது. வெண்கலம் ஐம்பொன் (பஞ்சலோக) முதலிய உலோகத்தால் தூபி செய்யப்படும். கொக்கட்டிச் சோலை ஆலயத்தின் தூபி வெண்கலத்தால் ஆனதாகும்.

### 16. பாண்டியர் காலப் பாணிக்கான சான்றுகள்

மேலே குறிப்பிட்ட கட்டிட அம்சங்களைக் கொண்டு இவ்வாலயம் பாண்டியர் காலத்துக் குரிய தென நிர்ணயிக்கப் படுகிறது. அக்காலம் 11ம் 12ம் நூற்றாண்டுக் காலப்பகுதியாக அமைகிறது. இதே சிற்ப அமைதி திருக்கோயில் சித்திர வேலாயுதர் ஆலயத்திலும், பொலன்னறுவை சிவ தேவாலயத்திலும் காணப்படுகிறது. ஆகவே இம்மூன்று ஆலயங்களும் பாண்டியர் காலத்தவை என வரலாற்றாசிரியர்களால் கணிக்கப்படுகின்றன.

எனவே ஏற்கனவே அழியும் பொருட்களால் கட்டப்பட்ட தான்தோன்றீஸ்வரம், பாண்டியர்காலத்தில் கல்லால் அமைக்கப்பட்ட தெனக் கொள்ளலாம்.

1978, நவம்பர் மாதம் வீசிய சூறாவளியில் பாதிப்படையும் வரை இக்கோயில் மேற் குறிப்பிட்ட நிலையிலேயே இருந்தது. அத்துடன் பல்வேறு பரிவாரத் தெய்வங்களுக்கான கோயில்களும் இவ்வாலயத்தில் இடம் பெற்றிருந்தன. அவையாவும் பிற்காலத்தில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அவை பற்றியும் சுருக்கமாகப் பார்ப்போம்.

### 17. சக்தி ஆலயம்

பிரதான ஆலயமான சிவன் கோமிலுடன் சேர்ந்து தெற்கு வாசல் கொண்டதாக இக் கோயில் அமைந்துள்ளது. இதன் அமைப்பு ஆரம்ப கால இந்துக் கோயில் கட்டிடப் பாணியிலே உள்ளது குறிப்பிடத்தக்கது. அடித்தளம், உபபீடம் அதிஷ்டானம் ஆகிய அம்சங்கள் இக்கோயிலிலும் காணப்படுகின்றன. அடித்தளத்தில் இருந்து எழும் தூண்கள் சிற்ப நுணுக்கங்களின்றி எளிமையாக அமைக்கப்பட்டுள்ளன. சுற்றுப்புறச் சுவரில் ஒவ்வொரு பக்கத்திலும் தேவகோஷ்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் சிற்பங்கள் எதுவுமில்லை. சுவர்த்தூணில் பலகையில் கொடுங்கைத் தளவரிசைகள் எழும்புகின்றன. கொடுங்கையில் கூடு அலங்காரங்கள் காணப்படுகின்றன. விமானத்தின் மேற் தளத்தில் சாலைகள், கூடங்கள் கோஷ்டபஞ்சரங்கள் முதலிய எதுவுமே இல்லை. விமானத்தில் தூபி அமைந்துள்ளது. சிகரத்தில் உள்ள மகாநாசிகன் சீர்த்தி முகங்களையும், சக்தியுடன் தொடர்புடைய தேவதைகளைக் கொண்டதாகவும் காணப்படுகின்றன.

### 18. பிள்ளையார் கோயில்

இக்கோயில் பிரதான கோயிலின் உட்பிரகாரத்தில் வலதுபக்கமூலையில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் கர்ப்பக்கிரம், அந்தராளம், அர்த்தமண்டபம் யாவும் அமைந்துள்ளன. கருவறை மீதும் பிரதான கோயிலின் கட்டிட அமைப்பே காணப்படுகிறது.

இதிலும் அடித்தளம் தூண் தளவரிசை, கழுத்து, சிகரம், தூபி முதலிய அம்சங்கள் உள்ளன. மூலக்கோயிலில் உள்ளது

போலவே அடித்தளமானது உபானம், கம்பு, குமுதம் முதலிய உறுப்புகளுடன் அமைந்துள்ளன. அடித்தளம் உயர்ந்து காணப்படுகின்றது.

அடித்தளத்திலிருந்து எழும்புகின்ற தூண்கள் பக்கத்துக்கு நான்குவீதம் மூன்று பக்கங்களிலும் பன்னிரண்டு உள்ளன. மூன்று தேவகோஷ்டங்கள் உள்ளன தூண்கள் யாவும், மேடை,கண்டம்,கலசம்,பலகை முதலிய சகல உறுப்புக்களுடனும் அமைந்துள்ளன.

தளவரிசை சிற்ப நுணுக்கங்கள் இன்றி புடைப்பு அமைப்பாகவே காணப்படுகின்றது. ஆனால் தளவரிசையில் சுற்றி வர, சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விமானத்தின் நாற்புறத்திலும் நான்கு சாலைகள் அமைக்கப்பட்டு சிற்ப உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. சாலைகளின் அருகில் மனித உருவங்கள் அமைந்துள்ளன. சிகரம் கோளவடிவில் அமைந்துள்ளது. சிகரத்தின் நாற்புறமும் சீர்த்தி முகங்களுடன் கூடிய மகா நாசிகள் காணப்படுகின்றன. சிகரத்தைச் சுற்றிவர அண்டத்தில் நெல்லிக்காய் வடிவில் கொத்து வேலைகள் காணப்படுகின்றன. உச்சியில் வெண்கலக் கலசம் உள்ளது.

## 19. முருகன் கோயில்

இது பிரதான கோயில் உட்பிரகாரத்தில் இடது பக்க மூலையில் அமைந்துள்ளது. இது ஒரு சிறிய கோயில் ஆகையால் மூலஸ்தானம் முகமண்டபம் மட்டுமே இதில் உள்ளன. கருவறையின் மேல் விமான அமைப்பு இல்லை. கூரை மட்டும் உள்ளது. மூலஸ்தானத்தில் முருகன், வள்ளி, தெய்வானை விக்கிரகங்கள் உள்ளன.

## 20. கிருஷ்ணன் கோயில்

இக்கோயில் பிரதான கோயிலின் உட்பிரகாரச் சுற்றுமதிலுடன் சேர்ந்து சிவன் கோயிலை நோக்கிய வாறு அமைந்துள்ளது. மூலஸ்தானமும் சிறிய முன் மண்டபமும் உள்ளன. அடித்தளம் உபானத்துடன் கூடியதாக உள்ளது. மூலஸ்தானத்தின் மேல் சிறிய விமானம் அமைந்துள்ளது. இதில் கூடு, சாலை, கோஷ்ட பஞ்சரம் முதலியவை இல்லை. ஆனால் விமானத்தின் மேல் சிறிய கோளவடிவுடைய அண்டம் உள்ளது. அண்டத்தில் சீர்த்தி முகத்துடன் கூடிய மகா நாசிகள் அமைக்கப்பட்டுள்ளன. விமான தேவதைகளின் உருவங்களும் இதில் பொறிக்கப்பட்டுள்ளன. சிகரத்தில் சுற்றிவர நெல்லிக்காய் வடிவில் கொத்து வேலை செய்யப்பட்டுள்ளது. விமானத்தின் முன்புறம் விஷ்ணுவின் உருவம் பாற் கடலில் பள்ளிகொள்ளும் நிலையில் அமைந்துள்ளது. அவரது கால்பக்கம் மகாலெட்சுமி தேவி அமர்ந்திருக்கிறார்.

## 21. நாக தம்பிரான் கோயில்

உட்புறச் சுற்று மதிலுடன் தொடுத்து நாகதம்பிரான் கோயில் அமைந்துள்ளது. மூலஸ்தானத்தின் மேல் தட்டையான கூரை அமைக்கப்பட்டுள்ளது. உள்ளே உயரமாக அமைக்கப்பட்ட மேடையில் நாக தம்பிரான் உருவம் உள்ளது.

## 22. வள்ளி, தெய்வானை கோயில்

பிரதான கோயிலுக்கு இடப்புறம், முருகன் கோயிலுக்கு அருகாமையில் வள்ளி, தெய்வானை கோயில்கள் உள்ளன. இக்கோயில்கள் இரண்டிலும் மூலஸ்தானம், முகமண்டபம் ஆகியவை உள்ளன. விமானம் இல்லை. ஓடு வைத்த கூரை உள்ளது. உள்ளே வெண்கலத்தாலான விக்கிரகங்கள் உள்ளன.

## 23. நவக்கிரக கோயில்

வள்ளி, தெய்வானை கோயில்களுக்கிடையில் நவக்கிரகக் கோயில் அமைந்துள்ளது. உள்ளே நவக்கிரகங்களின் கருங்கற் சிலைகள் உள்ளன. தட்டையான கூரை உள்ளது.

## 24. வைரவர் கோயில்

உட்புறச் சுற்றுமதிலுடன் தொடுத்து முன்புறமாக இக்கோவில் அமைந்துள்ளது. வலப்புறம் விஷ்ணு கோயிலும் இடப்புறம் வைரவர்கோயிலும் உள்ளன. இக் கோயிலிலும் மூலஸ்தானம் முகமண்டபம் ஆகியவை மட்டுமே உள்ளன. அடித்தளத்தில் உபானம் மட்டும் உள்ளது.

மூலஸ்தானம் சிறிய விமானத்தைக் கொண்டுள்ளது. ஆனால் அதில் சிற்ப வேலைப்பாடுகள் இல்லை. ஒரு சிறிய கோள வடிவிலான அண்டம் உள்ளது. அண்டத்தின் நாற்புறமும் சீர்த்திமுக மகாநாசிகள் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிகரத்தில் நெல்லிக்காய் வடிவில் அலங்கார வேலைகள் செய்யப் பட்டுள்ளன. கலசம் மண் கதையினால் அமைக்கப்பட்டுள்ளது. உள்ளே திரிசூலம் வைக்கப்பட்டுள்ளது.

## 25. பிற்காலத்துப் பணிகள்

இப்பரிவாரமூர்த்திகள் கோயில்கள் யாவும் பிற்காலத்தில் தனிப்பட்டவர்களின் உபயமாக அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கலாம். சிவன் கோயில் விமான அமைப்பும் பிள்ளையார் கோயில் விமான அமைப்பும் ஒரே மாதிரியாக உள்ளன. இவை ஒரேகாலத்தில் அமைக்கப்பட்டதா? அல்லது பிற்காலத்தில் பிரதான கோயிலின் விமான அமைப்பைப் பின் பற்றிப் பிள்ளையார் கோயிலுக்கு விமானம் அமைக்கப்பட்டதா என்பதை நிச்சயிக்க முடியவில்லை.

## 26. தற்போதைய ஆலயக் கட்டிடம்

தற்போதைய ஆலயம் சகல வகையிலும் புதுப்பித்துக்கட்டப்பட்டுள்ளது. எனவே மேலே நாம் குறிப்பிட்ட பிரதான கோயில் அம்சங்கள் தற்போது முற்றாக மாறியுள்ளன. பரிவார மூர்த்திகளின் கோயில்களிலும் பலமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

பழைய கோயில் பாண்டியர் காலப் பாணியில் அமைந்தது என்பதைத் தெளிவு படுத்து முகமாகவே கோயிலின் சிற்ப வேலைப்பாடுகள் நுணுக்கமாக ஆராயப்பட்டன. சிற்ப சாஸ்திர சொற்பிரயோகங்கள் சிலவேளை மயக்கந்தருவதாக அமைந்திருக்கலாம். ஆனால் வேறு வார்த்தைகளில் அவற்றைக் குறிப்பிடுவது பொருத்த மற்றது. விளக்கப்படத்தைப் பார்த்து இச்சொற்கள் குறிக்கும் ஆலயப் பகுதிகளை அறிந்து கொள்ளலாம்.

சிற்ப சாஸ்திரக் கலையில், ஆலய அமைப்புக்குச் சாஸ்திரோக்தமான சில விதிமுறைகள் உள்ளன. இவற்றிற்கமையவே ஆலயத்தின் பல்வேறு அம்சங்கள், தூண்கள், சிற்பங்கள் சில எண்ணிக்கைகள் என்பன அமைகின்றன. இவற்றில் தவறு ஏற்பட்டால் தெய்வகுற்றம் ஆகும் என்பது பொதுவான நம்பிக்கை.

தற்போதைய ஆலயத்தில் ஏராளமான பொருட் செலவில் முன்வாயில் கோபுரம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே காலத்திற் கேற்பச் சில விஸ்தரிப்பு வேலைகளும் நடந்துள்ளன. ஆலய அலுவலகம் மடப்பள்ளி என்பன அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாலயத்தில் இருந்த கல்வெட்டுப் பொறித்த கருங்கல் நிலைப்படியும் தனியாக எடுத்து வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதில் உள்ள எழுத்துக்கள் அழிந்த நிலையில் காணப்படுவதால் அதன் வாசகத்தைச் சரியாக அறிய முடியதில்லை.

## 27. ஒழிபு

இலங்கையில் கிழக்குக்கரையோரமாக; திருக்கோணேஸ்வரம் முதல் திருக்கோயில் வரை அமைந்துள்ள நீண்ட நிலப்பகுதியில் தொன்மைக்காலச் சிவவணக்கம் நிலவியதற்குச் சான்றாகப் பலசிவன் கோயில்கள் அமைந்துள்ளன.

பல சிவன் கோயில்கள் பிற்காலத்தில் விநாயகர் அல்லது முருகன் கோயில்களாக மாறியுள்ளன.

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயம் ஆரம்பத்தில் சிவன் கோயிலாக இருந்து பின்னர் விநாயகர் ஆலயமாக மாறியது. அவ்வாறே திருக்கோயில் சித்தரவேலாயுதர் ஆலயம் ஆரம்பத்தில் சிவன் கோயிலாக இருந்து பின்னர் முருகன் கோயிலாக மாறியது.

இவ்விரு ஆலயங்களுடனும், சிவபக்தனாக, லிங்க வணக்கம் செய்த இராவணன் பெயர் தொடர் புறுவது இங்கு நினைவு கூரத்தக்கது. அவ்வாறே திருமூலநாயனார் இலங்கையை, "சிவபூமி" எனக் குறிப்பிடுவதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

இலங்கையில் ஐந்து புகழ் பெற்ற ஈச்சுரங்கள் (சிவலிங்கக் கோயில்கள்) இருந்தன என்பது வரலாற்றுச் செய்தி.

இதில் : (அ) திருக்கேதீச்சரம். (ஆ) திருக்கோணேஸ்வரம்
(இ) முனீஸ்வரம் (ஈ) நகுலேஸ்வரம் என்பன

இனங்காணப்பட்டுள்ளன. ஆனால் ஐந்தாவது ஈச்சுரத்தின் பெயர் திருத்தம்பலேஸ்வரம் என்பது. அது இருக்கும் இடம் இன்னும் சரியாக அறியப்படவில்லை. தான்தோன்றீஸ்வரமே அந்த ஐந்தாவது ஈச்சரம் என்று கொள்வதில் தவறில்லை எனலாம்.

தொகுத்துக் கூறுவதாயின்:

(அ) தான்தோன்றீஸ்வரம் ஆலயம் தொன்மைக் காலத்த தாக இருந்தாலும் அதன் நிரந்தரக் கட்டிடம் பாண்டியர் காலப் பாணியில் அமைந்திருப்பதால் கி.பி. 11ம் 12ம் நூற்றாண்டிலேயே இவ்வாலயக் கட்டிடம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(ஆ) திருக்கோயில் சித்திர வேலாயுதர் ஆலயம், பொலன்னறுவை சிவதேவாலயம் (இல.2) கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் ஆகியவற்றில் ஒற்றுமைகள் உள.

(இ) இலங்கையின் ஐந்தாவது ஈச்சரம் தான்தோன்றீஸ்வரமாக இருக்கலாம். புதிய ஆலயக் கட்டிடம் நவீன முறையில் அமைந்துள்ளது.

# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் இரு தேர்கள்

செல்வி. கலைவாணி கந்தசாமி
கிழக்குப் பல்கலைக்கழகம்

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரத்தல உற்சவத்தில் உச்சக்கட்டமாக அமைவது "தேரோட்டம்" நிகழ்ச்சி ஆகும். இத்தேரோட்டத்தில் இழுக்கப்படும் இரு தேர்களும் அபூர்வமான சிற்பவேலைப்பாடுகளைக் கொண்டவை: பல்வேறு புராண நிகழ்வுகளைச் சித்தரிக்கும் காட்சிகள், இச்சிற்ப வேலைகளில் இடம் பெற்றுள்ளன. இச்சிற்ப வேலைப்பாடுகள் பாண்டியர் பாணியில் அமைந்துள்ளன. அத்தேர்களைப் பற்றிய கட்டுரை இது.

## 1. மரச் சிற்பங்கள்

மரச் சிற்பங்களையுடையதாய் கொக்கட்டிச் சோலைச் சிவாலயத்தின் சித்திரத் தேரும், பிள்ளையார் தேரும் அமைகின்றன. இதில் சித்திரத் தேர் ஆறு சில்லுகளைக் கொண்டுள்ளது. அவை ஆறடி (6') விட்டங் கொண்டவை. அவற்றில் இரண்டு தேரின் அடித்தளத்தில் நடுவில் உள்ளது. இவ்வாறு சில்லுகளை உடைய தேர் நித்தியோற் சவத்திற்குரியதென சைவத் திருக்கோயிற் கிரியை நெறி என்ற நூலில் கூறப்படுகின்றது. இத்தேரானது பதினாறடி நீளமும், அதே அளவு அகலமும் உடையது. அதன் மேல் சித்திர வேலைப்பாடுகளோடு அமைந்த ஐந்து தளங்கள் உள்ளன. இத்தேர் சோடனைகளால் அலங்கரிக்கப்பட்ட நிலையில், இவ்வாலயத்தில் காணப்படும் அறுபதடி உயரமுள்ள கொடிக்கம்பத்தின் உயரத்தை ஒத்திருப்பதாகக் கூறப்படுகின்றது. இத்தேரில் பல சிற்பங்கள் அழிந்து இல்லாமல் போய்விட்டன. இவற்றில் காணப்படும் ஒரு சில சிற்பங்களைக் கொண்டே இந்த ஆய்வை மேற்கொள்ளக்கூடியதாக உள்ளது. பிள்ளையார் தேரானது பன்னிரண்டு அடி நீளமும், அதே அளவு அகலமும் உடையது. இதன் மேல்தட்டு, பதினாறடி உயரத்தில் அமைந்துள்ளது. அதன் மேல் மூன்று விதானங்கள் உள்ளன. இத்தேர் சோடனைகளால் அலங்கரிக்கப்பட்ட நிலையில் உயரத்தில் விமானத்தை ஒத்திருக்கும். (சி. பத்மநாதன் : 1994 : 42 – 43) இத்தேரிலுள்ள சிற்பங்கள் அநேகமாக அப்படியே காணப்படுகின்றன. சில சிற்பங்கள்தான் சிதைவுற்ற நிலையில் உள்ளன. இவ்விரு தேர்களைச் சுற்றியும் சிற்பங்கள் காணப்படுகின்றன. அத்தோடு இத்தேர்களில் சித்திர வேலைப்பாடுகளும் அலங்காரங்களும் இல்லாத இடமே இல்லை எனலாம்.

## 1. சித்திரத்தேர்:

இத்தேரில் முன்பக்கமாக விளங்கும் மேற்குப் பக்கத்தில் யாளிவடிவமுடைய ஐந்து உருவங்கள் காணப்படுகின்றன. இவ்வைந்துயாளி உருவங்களும் முறையே நடுவில் சிறிய யாளி உருவமும் அதன் மேல் ஒருவன் மேற்குப் பக்கத்தை நோக்கியிருந்து இவ்வியாளி உருவின் தலைமேல் அம்பு போன்ற அமைப்பை வைத்துக் கொண்டிருப்பதுபோலும் இவருடைய பார்வை கீழ் நோக்கிய விதத்தில் உள்ளதுபோலும் இச்சிறிய யாளி உருவங்களின் இரு மருங்கிலும் பெரிய யாளி உருவங்கள் இரண்டாக நான்கு உருவங்களும் அமைந்துள்ளன. இக்காட்சி அமைப்பில் யாளி உருவத்தின் மேல் அமைந்துள்ள மனித உருவம், அரசனுடைய தோற்றத்தைக் காட்டுவதாகவும், இவ்வரசன் தான் ஏறி இருக்கும் அவ்வியாளி போன்ற உருவமைப்பைச் செலுத்துவதாகவும் அமைந்துள்ளது. இக்காட்சியை இணைக்கப்பட்டுள்ள புகைப்பட இலக்கம் (1) குறிக்கின்றது.

அத்தோடு தெற்குப் பக்கத்தில் கீழ்ப்பாகத்தில் குதிரைப் படை, யானைப்படை, காலாட்படை போன்றன காணப்படுகின்றன. இதில் போருக்கு செல்வதற்குரிய தன்மையுடைய குதிரைகள் ஓடுவது போன்றும், போருக்குச் செல்வதற்கு குதிரைப்படை போர்வீரர்கள் அமர்ந்திருக்கக்கூடியவிதத்தில் முதுகின் மேல் ஆடை விரித்துக் கடிவாளம் பூட்டி முன்னங் கால்களை உயர்த்திய நிலையில் வரிசைக் கிரமமாக நிற்பது போன்று செதுக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்துப் பிளிறும் யானைகள் துதிக்கையை உயர்த்திப் பிடித்தபடி குதிரைப்படை போன்றமைப்பைப் போன்றே செதுக்கப்பட்டுள்ளன. மற்றும் சில யானைகள் மரக்கட்டைகளையும், இலைகுழைகளையுடைய மரத் துண்டங்களையும் துதிக்கையினால் தூக்கிக்கொண்டு ஒவ்வொன்றும் எதிர்த்திசையை நோக்கியபடி வரிசைக்கிரமமாகச்

செல்வது போன்றும் செதுக்கப்பட்டுள்ளது. இதைத்தவிர காலாட் படை வீரர்கள் அவர்களுக்கேற்ற (வீரர்களுக்குரிய) ஆடையணிந்து தலையில் மகுடம் கைகளில் வாள், கேடயம் போன்றன உடையவர்களாய் ஆவேச முகபாவத்துடன் நிற்பவர்களாயும் யுத்தத்திற்கு ஆயத்தமாக சங்கு ஊதுவது போன்று நிற்பவர்களாயும் குதிரை மீதேறி வாள் ஈட்டி கொண்டு சண்டை செய்பவர்களாயும் மற்றும் சில வீரர்கள் நிராயுதபாணியாக நிற்பவர்கள் போன்றும் சித்தரிக்கப்பட்டுள்ளது. இப்போர்க்காட்சி அமைப்பானது அக்காலத்தில் நாட்டு மன்னர்களிடையே நடந்த போர்ச் சம்பவத்தையும் அவர்களிடமிருந்து யானைப்படை, குதிரைப்படை போன்ற படைகளையும் நினைவுபடுத்துவதாக உள்ளது. இக்காட்சி அமைப்பை பின் இணைக்கப்பட்டுள்ள புகைப்பட இலக்கம் (2) குறித்து நிற்கின்றது.

இச் சித்திரத் தேரின் வடக்குப் பக்கத்தில் விஷ்ணு சிவன் போன்ற தெய்வங்களின் பல்வேறு வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. நான்கு கைகளுடன் விளங்கும் விஷ்ணு வலது பக்கக் காலை வலது மேற் கையால் பிடித்திருப்பதுபோன்று இடது கீழ்க்கை தண்டாயுதத்தை ஊண்டிய படியும், இடது மேற் கை வாள் ஏந்தியபடியும் கால் ஒன்றைத் தூக்குவதும், அக்காலுக்கு கீழ் ஒருவன் நிற்பதும் போன்ற காட்சி விஷ்ணு 3 அடி மண் கேட்டு ஓரடி விண்ணிலும், ஓரடி மண்ணிலும், மற்றடியை வைப்பதற்கு இடமில்லாமல் மாபலிச்சக்கரவர்த்தியின் தலையில் காலை வைப்பதற்கு தூக்கும் கதையை நினைவுபடுத்துவதாக உள்ளது. அதனை அடுத்த இதே பக்கத்தில் குதிரை முகயாளி, யானை முக யாளி, சிங்க முக யாளி வடிவங்களும் பூவலங்காரங்களும், நெளிவு சுழிவுகளை உடைய பல்வேறு அலங்கார வடிவங்களும் காணப்படுகின்றன. இவற்றுடன் சிவபெருமானின் பல்வேறு மூர்த்தங்கள் திருவிளையாடல்கள் போன்றன காணப்படுகின்றன. இதில் சிவனின் நடராஜ மூர்த்தம் வலது கீழ்க் கையில் துடியும், வலது மேறக் கை சூலமும், இடது கீழ்க்கை அக்கினியும் இடது மேற்கை மானும் ஏந்தியபடி ஒரு காலைத்தூக்கி ஒரு காலை ஊன்றியபடி ஆடும் நடனக் கோலம் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளது. இதன் இடது பக்க முலையில் சிவன் இடபாரூடராகச் சித்தரிக்கப்பட்டுள்ளார். இதன் அருகில் சிவனது வீரபத்திர உருவம் சித்தரிக்கப்பட்டுள்ளது. இதில் வீரபத்திரர் வலது காலை ஊன்றி, இடது காலைத் தூக்கிய நிலையில் வலது கை கேடயத்தை ஊன்றியும் இடது கை மேலே தூக்கியபடியும், கழுத்தில் பூமாலை சுழன்றாடத் தலையை இடப்பக்கம் சரித்து அகோர முகப் பாவத்துடன் ஆடும் நடனக் கோலத்தில் அமைந்துள்ளார். தேரின் மேற்குப் பக்கத்தில் விஷ்ணுவின் நரசிங்கவதாரம் காணப்படுகின்றது. நரசிங்கர் வாயைப் பிளந்தவாறு வெளித்தள்ளிய கோரப் பற்களுடன் வீராசனமிட்டு இரணியனை மடியிற் கிடத்தி அவனது வயிற்றைப் பிளந்து குடலை வலது கையில் எடுத்தபடியும் இடது கையால் இரணியன் வயிற்றைப் பிளந்தபடியும் காணப்படும் காட்சி அகோர முகபாவத்தின் தத்துவரூவத் தன்மையை இச் சிற்பத்தின் ஊடாகக் காட்டுவதாக உள்ளது. இக்காட்சியைப் பின் இணைக்கப்பட்டுள்ள புகைப்பட இலக்கம் (3) குறிக்கின்றது.

தேரின் மேற்குப் பக்க மூலை ஒன்றில் ஒருத்தியின் உடை தளர்கின்றது. மறுகணமே இடது கையால் கீழிறங்கும் ஆடையை பிடித்துக் கொள்கின்றாள். வலது கையில் மலர் ஏந்தியபடி காணப்படுகின்றாள். இப்பெண்ணிற்குக் கீழே நிர்வாண கோலத்தில் தலையில் இருகரகங்களையும் கூப்பியபடி நிற்கும் ஆணின் உருவம் காணப்படுகின்றது. இவற்றுடன் இன்னும் சில பல பாலுணர்வுச் சிற்பங்கள் இம் மேற்கு மூலைப்புறத்தில் செதுக்கப்பட்டுள்ளன.

தேரின் கிழக்குப் பக்கத்தில் பூவலங்கார வேலைப்பாடுகளும் நடனநிலை உருவங்களும் உடலாலும், கைகளாலும் பாரத்தைக் தாங்குவதுபோன்ற உருவங்கள் தேரின் பாகத்தைத் தாங்கியபடி சிறிய உருவங்களாக தேரின் மையத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் இப்பக்கத்தில் சுகாசனமிட்டு இலக்குமி நாராயணனாக கிருஷ்ணர் இரு கரகங்களாலும் புல்லாங்குழலைப் பிடித்து வாசிப்பவராகவும் அதனை அவரே ரசிப்பது போன்ற உணர்வை வெளிக்காட்டுவதாகவும் படைக்கப்பட்டுள்ளது.

இவை தவிர இத்தேரின் நான்கு பக்கங்களிலும் பல்வேறு அம்சங்களை வெளிப்படுத்தும் கடவுளின் மூர்த்தங்களும் திருவிளையாடல்களும் சிறிய சிற்பங்கள் மூலமாகவும், பெரிய சிற்பங்கள் மூலமாகவும் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் அநேகமானவை சிதைவுள்ள நிலையில் உள்ளன. பலவற்றை இங்கு காணவில்லை. இவற்றின் முழுமைத் தன்மையுடைய சிற்பங்கள் சொற்பமாகவே உள்ளன. இதனைக் கொண்டே இந்த ஆய்வினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இத்தேரின் அமைப்பின் இடைப்பாகத்தை புகைப்பட இலக்கம் (4) அடி பாகத்தை புகைப்பட இலக்கம் (5) குறித்து நிற்கின்றன.

## 2. பிள்ளையார் தேர்

எண்கோண வடிவினையுடையதாக பிள்ளையார் தேர் தெற்குத் தென்கிழக்கு, கிழக்கு, வடகிழக்கு, வடக்கு, வடமேற்கு மேற்குத் தென்மேற்கு இவ்வாறு எண்கோண அமைப்பில்

சிற்பங்களைக் கொண்டு விளங்குகின்றது இந்த அமைப்பில் தெற்குக்கும் தென்கிழக்குக்கும் இடையில், தென்கிழக்கிற்கும் கிழக்கிற்கும் இடையில், கிழக்கிற்கும் வடகிழக்கிற்கும், இடையில் வடகிழக்கிற்கும் வடக்கிற்கும் இடையில், வடக்கிற்கும் வடமேற்குக்குமிடையில், வடமேற்கும் மேற்கிற்குமிடையில், மேற்கிற்கும் தென்மேற்கிற்குமிடையில், தென் மேற்கிற்கும், தெற்கிற்குமிடையில் என யாளி வடிவங்கள் வெவ்வேறானதாகவும், ஒன்றுபடும் அம்சத்தினை உடையனவாகவும் ஒவ்வொரு திசைகளையும் பிரிப்பனவாகவும் அமைந்துள்ளன. சைவத் திருக்கோயில் கிரியை நெறி என்ற நூலானது "தேரின் அமைப்புகளில்" சதுரவடிவான தேர் நாகரம், எண்கோண வடிவிலான தேர் திராவிடம், வட்டவடிவிலான தேர் வசரம், அறுகோண வடிவிலானதேர் அத்திரம் என தேர்களின் பலவகை உண்டு எனக் கூறுகின்றது. "பிள்ளையார் தேர்" இந்நூலில் கூறப்பட்டுள்ள எண்கோண வடிவினையுடையதாக இருப்பதால் திராவிட அமைப்பை வெளிப்படுத்துகின்றதெனலாம். இதனை இத்தேரில் நடுப்பகுயிலிருந்து அடிப்பகுதிவரை காட்டும் புகைப்படம் மூலம் விளங்கிக் கொள்ளவாம். இவ்வமைப்பு பின் இணைக்கப்பட்டுள்ள புகைப்பட இலக்கம் (6) குறித்து நிற்கின்றது.

இத்தேரின் தெற்குப் புறத்தில் இலக்குமி கணபதி ஆறு கைகளை உடையவராய் விசாரனமிட்டு அமர்ந்துள்ளார். இப்பிள்ளையாரின் இடப்பக்கத்தில் சிவன் ஆலிங்கன மூர்த்தத்தில் எருதின் மேல் சுகாசனமிட்டு காணப்படுகின்றார். சிவனுக்கு நான்கு கைகள் வலது கீழ்க்கை அபயஉறஸ்த முத்திரையும் வலது மேல் கை பாசம் ஏந்தியும் இடது கீழ்க்கை உமையை ஆரோகணித்தபடியும், இடது மேல் கீழ்க்கை மானேந்தியபடியும் காணப்படுகின்றது. சிவனின் ஆரோ கணித்தலில் அமைந்துள்ள உமை சிங்க கர்ண ஹஸ்தத்தை மலரேடந்தியபடி வலக்கரம் காட்டியும் இடதுகரம் கெஜ உறஸ்கத்தை உடையதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. உமைக்கிடப்பக்கம் அதிபங்க நிலையில் நான்கு கைகளை உடையதாக ஓர் உருவம் காணப்படுகின்றது. இதற்குத் தெற்குப் பக்கத்தில் பிள்ளையார் உருவம் நடுவில் அமைக்கப்பட்டுள்ளது. பிள்ளையாரின் வலப்பக்கம் விஷ்ணு சமபவிக் நிலையில் நான்கு கைகளையுடையவராயும் இடப்பக்கம் ஆண்டாள், வலப்பக்கம் முனிவர் போன்ற உருவத்தையும் கொண்டு விளங்குகின்றார். விஷ்ணுவின் அருகில் உள்ள இரு உருவங்களும் அபளீக் அமைப்பில் காணப்படுகின்றன. தென்கிழக்கு மூலையில் நடுவில் முருகன் நான்கு கைகளை உடையவராக ஸ்தானக நிலையில் மயிலின் மீது சித்தரிக்கப்பட்டுள்ளார். மயிலின் காலின் கீழ் பாம்பு காணப்படுகின்றது. முருகனது வலப்பக்கத்தில் முனிவர் அல்லது அரசர் என்று கூறத்தக்க வகையில் ஓர் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வுருவத்தைப் போன்ற அமைப்பு தென்னிந்திய சிற்ப வடிவங்கள் என்ற நூலில் காணப்படும் இலக்கம் முப்பத்தெட்டுடைய படம் குறித்து நிற்கின்றது. இந்நூலில் அவ்வுருவம் அகத்திய முனிவரைக் குறிப்பதாகக் குறிக்கப்பட்டுள்ளது. (பின்னிணைக்கப்பட்டுள்ள பட இலக்கம் (XXIV) நூலில் உள்ள உருவத்தைக் குறித்து நிற்கின்றது.) தேரில் காணப்படும் உருவத்திற்கும் நூலில் காணப்படும் உருவத்திற்கும் கையமைவு முறையில்தான் வித்தியாசம் தென்படுகின்றது. நூலில் கூறப்பட்டுள்ள உருவத்தின் கைகள் இரண்டும் மணிக்கட்டுடன் முறிந்த நிலையிலும் தேரில் அமைந்துள்ள உருவத்தின் கையமைப்பு முழுமையானதாகவும் உள்ளது. முருகனுக்கு இடப் பக்கத்தில் வலது காலை மடக்கி இடது கால் மடித்து ஊன்றி இடக்கையில் தழுவும் வலக்கை இடது கணைக்காலில் படும்படி தொங்கவிட்டு ஓர் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. தென்கிழக்கு முலையிலுள்ள இம்மூன்று உருவங்களையும், பின் இணைக்கப்பட்டுள்ள புகைப்பட இலக்கம் (7) குறித்து நிற்கின்றது

இத் தென்கிழக்கு மூலையில் மேலே குறிக்கப்பட்டுள்ள உருவங்கள் மூன்றின் வலப் புறத்தில் யாளி வடிவமைப்பு காணப்படுகின்றது. இவ் யாளியின் வலப் புறத்தில் நிமிர்ந்து படுத்திருக்கும் ஓர் மனித உருவத்தின் மீது இன்னோர் மனித உருவம் நெஞ்சில் வலக்காலும் தொடையில் இடக்காலும் ஊன்றியபடி வலதுகை சூசிமுத்திரை காட்டவும் இடது கை தண்ட உறஸ்தத்துடனும் விளங்குகின்றது. இவற்றில் படுத்திருக்கும் மனித உருவம் அதன்மேல் ஏறி நிற்பவரின் பக்கத் தொடையை பிடித்திருக்கின்றது. இவ் ஏறிநிற்கும் உருவத்தின் வலப்பக்கத்துக்கருகில் மேலுடம்பிலிருந்து கணைக்கால்வரை ஆடையணிந்து தலையில் தொப்பி நீண்ட காது, மீசை போன்ற அம்சங்களையுடையவராய் அரசனின் சேவகன் என்று கூறத்தக்கவகையில் வலது கையால் வாளேந்திய படி இடது கையை நெஞ்சில் வைத்தபடியும் கம்பீரத் தோற்றத்துடன் சித்தரிக்கப்பட்டுள்ளார். இதன் இடப்புறத்தே சிங்கத்தின் மீது நடனமாடும் காளியின் வடிவைக் குறிக்கின்றது இடக்கை வியாக்கியான முத்திரையும் வலக்கை லோல உறஸ்தத்தையும் குறிப்பதோடு முகத்தில் கோப உணர்வு பிரதிபலிப்பதாகவும் உள்ளது. இந்த உருவங்களின் வெளிப்பாட்டில் அச்சுறுத்தும் தன்மையும் காமகக் குணத்தை உள்ளடக்கிய நிலையையும் காணக்கூடியதாகவுள்ளது இதனை பின் இணைக்கப்பட்டுள்ள புகைப்பட இலக்கம் (8) குறிக்கின்றது.

இத்தேரின் கிழக்குத் திசையில் பாலகிருஷ்ணரின் பல்வேறு வடிவங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன. நடுவில்

இறக்கைகளையுடைய ஒரு பெண் முழந்தாளில் நின்று நமஸ்காரம் செலுத்தும் பாவனையில் இன்னொரு பெண்ணை இரு கரங்களாலும், மேலே ஏந்திய நிலையில் உள்ளாள். மேலே உள்ள பெண்ணுக்கு நான்கு கைகள் முகத்தில் புன்னகையுடையவளாய் காணப்படுகின்றாள். கீழே உள்ள பெண் ஏதோ ஒன்றை ஏற்க செயல்படுவது போன்று பொறுப்புணர்வு மிக்க உணர்வை வெளிப்படுத்துபவளாய் சித்தரிக்கப்பட்டுள்ளாள். இப்பெண்களின் வலப்பக்கம் பாலகிருஷ்ணர் ஒருதலை நாகத்தின் மீது நின்று நடனமாடுகின்றார். இக்காட்சி, வாசுகி என்ற பாம்பின் செருக்கை அடக்குவதற்காக அதன் தலையில் காலை வைத்துக் வாலைக் கையால் பிடித்து நடனமாடிய நிலையை வெளிப்படுத்துவதாக உள்ளது. தேரில் உள்ள சிற்பத்தில் பாலகிருஷ்ணர் வலது காலை பாம்பின் தலையிலும், இடது காலை பாம்பின் முதுகிலும் வைத்து நடனமாடுகின்றார். முகத்தில் புன்னகை வெளிப்படுகின்றது. அச்சத்தை அகற்றி அன்பர்க்கு அருள் பலிக்கும் சாத்வீகத் திருவுருவமாகக் காட்சியளிக்கின்றார். இத்திருவுருவத்திற்கு வலப்பக்கத்தில் பாலகிருஷ்ண திருவுருவமொன்று ஒரு பசுங்கன்றுடன் வலது கை சூசி, முத்திரை காட்டவும், இடது கை கடி உறஸ்தத்துடனும், அமைந்துள்ளது. இவருக்குப் பின்னால் நிற்கும் இப் பசுங்கன்று அவரின் சைகையை அண்ணாந்து பார்த்து நாக்கை நீட்டி அன்பாய் அவ்வேண்டுகோளைச் செவி சாய்ப்பது போலவும், புன்னகை முகத்தில் ததும்ப பசுங்கன்றைதன் சைகைக்கு உட்படுத்துவது போலவும் சித்தரிக்கப்பட்டுள்ளது. நடுவிலுள்ள பெண்களுக்கு இடப்பக்கத்தில் இடுப்பிலிருந்து கால் சிதைவுற்ற ஓர் உருவம் காணப்படுகின்றது. இதன் இடப்பக்கத்தில் இரு கரங்களாலும் புல்லாங்குழலைப் பிடித்து கண்களை மூடித் தான் வாசிக்கும் இசையைத் தானே ரசித்து வாசிப்பது போன்ற பாவனையில் நின்ற கோலத்தில் பாலகிருஷ்ண உருவம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக் கிழக்குத் திசையில் அமைந்துள்ள பாலகிருஷ்ணர் உருவங்கள் அனைத்தின் உடம்பிலும் ஆடைகளில்லை. அத்தனையும் குழந்தை வடிவில் நிர்வாண கோலத்தில் அதன் செயல்கள் ஒவ்வொன்றுக்குமுரிய உணர்வை பிரதிபலிக்கின்ற முகபாவத்துடன் படைக்கப்பட்டுள்ளன. இக் காட்சியைப் பின் இணைக்கப்பட்டுள்ள புகைப்பட இலக்கம் (9) குறிக்கின்றது.

வடகிழக்குத் திசையில் நடராஜப் பெருமானின் நடராஜத் தாண்டவம். காணப்படுகின்றது. நான்கு கைகளை உடையவராய் இடது மேல் கை அக்கினியும், வலது மேல் கை உடுக்கையும் வலது கீழ்க்கை அபயஉறஸ்தமும் இடது கீழ்க்கை வீசிய கரமுமாகக் காணப்படுகின்றது. வலது கால் முயலகன் மீதூன்றியும், இடது கால் தூக்கிய திருவடியாகவும், நடன நிலை சித்தரிக்கப்பட்டுள்ளது. சிவனின் இடப்பக்கம் இருகரமும், தலையின் மேல் கூப்பி இடுப்பிலிருந்து முழந்தாள்வரை ஆடையுடுத்தித் தியான நிலையில் நிற்கும் முனிவர். இதனையடுத்து சிவனின் வலப்பக்கம் இருகரங்களையும் நெஞ்சில் இணைத்தபடி இடுப்பிலிருந்து கணைக்கால்வரை ஆடையும் மேற்சட்டையும் அணிந்து பயந்த சுபாவ நிலையுடன் விளங்கும் பெண் உருவம் இப்பெண்ணிற்கு நான்கு கரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வடக்குத் திசையில் நடுவில் பிள்ளையார் உருவம் தொந்தி ஆசனத்தில் படும்படியும் நான்கு கைகளையுடையவராயும் அமைக்கப்பட்டுள்ளது. சுகாசன மூர்தத்தில் விளங்கும் இப்பிள்ளையாரின் திருவுருவம் உஹரித்திர கணபதி என்றழைக்கப்படுகிறது. இவர் இடது மேல் கை பாசம் இடது கீழ்க்கை மோதகம், வலது மேல்கை அங்குசம், இடது மேல்கை ஒற்றை மருப்பிடையவராய் சித்தரிக்கப்பட்டுள்ளார். பிள்ளையாரின் இடப்பக்கம் கெளரி சகித மூர்த்தி காணப்படுகின்றார். இவரிற்கு நான்கு கைகள் வலது கீழ்க் கைஅபய முத்திரை, இடது கீழ்க்கை கெளரியை ஆரோகணித்தபடி வலது மேல் கை மழு இடது கீழ்க்கை பாசம் போன்றவற்றை உடையவராய் சுகாசன மூர்த்தத்தில் அமர்ந்துள்ளார். சிவனின் இடப்புறத் தொடையில் கெளரியமர்ந்தவளாய் வலது கையில் நீலோற்பவ மலரையும், இடது கை தொங்கவிட்டுக் கொண்டும் காணப்படுகின்றாள். சிவன், கெளரி இருவர் முகத்திலும் புன்னகை மின்னிடுகின்றது. கெளரி சகித மூர்த்தியின் இடப்புறம் ஆஸனத்தில் அமர்ந்த இரு கால்களையும், குறுக்காகக் பின்னிக்கொண்டு வலக்கை அபய முத்திரை காட்டவும் இடது கை ஏதோ ஒரு பொருளை ஏந்தியவாறும் தாடியுடன் தியான நிலையில் இருப்பதாக ஓர் உருவம் சித்தரிக்கப்பட்டுள்ளது. பிள்ளையாரின் வலப்பக்கம் உத்குடி ஆசனத்தில் வலக்காலை மடித்து இடது காலைக் தொங்கவிட்டு அபஸ்மாரபுரஷன் மீது ஊன்றியவராய் நான்கு கைகளுடனும், மரத்தின் கீழ் தியான தட்சிணாமூர்த்தி உருவம் அமைக்கப்பட்டுள்ளது. இத்தியான தட்சிணாமூர்த்தியின் உருவத்தின் வலப்பக்கத்தில் கெளரி சகித மூர்த்தியின் இடப்புறம் இருக்கும் அதே தியான உருவம் காணப்படுகின்றது (கிழக்குத் திசையில் குறிப்பிட்டுள்ள வடிவங்களை பின் இணைக்கப்பட்டுள்ள புகைப்பட இலக்கம் (10) குறித்து நிற்கின்றது.

வட மேற்குத் திசையில் வலது காலை மடித்து இடது காலைத் தொங்கவிட்டு தலையை விரித்தபடி அகோர முகத் தோற்றத்துடன் உடம்பில் ஆடைகள் எதுவுமின்றிய சிறு குழந்தையின் இருகால்களையும், வலது கையால் இறுகப் பற்றிக் கொண்டு இடது கையால் தலையை ஏந்தி முலைப்பாலூட்டும் காட்சியைக் காணக்கூடியதாகவுள்ளது. இதில் அரக்கியன்

அகோர முகபாவம் அரக்கியின் கடைவாய் பற்கள் வெளியே தெரியும்படியும் நாக்குத் தொங்கிய படியும் வெளிப் படுத்தப்படுகின்றது. இக்காட்சியானது பாலகிருஷ்ணருக்கு நச்சுப் பாலூட்டிய பூதச்சியை நினைவுபடுத்துவதாக அமைந்துள்ளது. அரக்கியின் வலப்பக்கத்தில் தலையின் மேல் இரு கரங்களையும் தாங்கி வணங்கியபடி நின்ற நிலையில் ஓர் உருவம் காணப்படுகின்றது. அரக்கியின் இடப்பக்கத்தில் கோப முகபாவத்துடன் நின்ற நிலையில் ஓர் அம்பாள் உருவம் அமைந்துள்ளது. (இக்காட்சியை பின் இணைக்கப்பட்டுள்ள புகைப்பட இலக்கம் (11) குறித்து நிற்கின்றது) அம்பாளின் இடப்பக்கத்தில் யாளி வடிவம் காணப்படுகின்றது. இவ்யாளி வடிவத்தின் இடப்புறத்தில் சூலாயுதமும், ஏந்தியபடியும் அபய உறஸ்தத்துடனும் நிர்வாணக் கோலத்தில் இடுப்பில் வில்லும் கடைவாயிரண்டிலும் இரு பற்கள் வெளியே தள்ளியபடி வெளித்தள்ளிய கண்கள் நீண்ட காதுகளுடன் ஓர் உருவம் நின்ற நிலையில் அமைந்துள்ளது. இவ்வுருவம் வைரவ மூர்த்தியின் திருவுருவமாக இருக்கலாம் என்று கூற முடிகின்றது. இவ்வைரவ மூர்த்தியின் இடப்பக்கத்தின் முறையே பெண், ஆண், முனிவர் போன்ற உருவங்கள் காணப்படுகின்றன. பெண் உருவம் வலது கை கடி ஹஸ்தமாகவும், இடது கை அபய ஹஸ்தயாகவும் விளங்க நின்றநிலையில் கச்சுபந்தனம் மார்பிலும், இடுப்பில் ஆடையும் அணிந்து அரசுக்குரிய அம்சங்களுடன் ஆணின் வலப்புறத்தில் காணப்படுகின்றாள். ஆண் தலையில் தொப்பியும், உடல் நிறைந்தாடையும் கம்பீரத்தோற்றமும் மீசையுமுடையவராய் இரு கரங்களையும் நெஞ்சில் கூப்பியபடி நின்ற நிலையில் காணப்படுகின்றார். இவரிற்கருகில், தாடியுடன் தியான நிலையில் இடுப்பில் இருந்து தொடைவரை ஆடை அணிந்தவராய் இரு கரங்களிலும் ஏதோ பொருட்களை ஏந்தியவாறு நின்ற நிலையில் முனிவர் போன்ற உருவம் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்குத் திசையில் ஐந்து முகபாவங்களை வெளிப்படுத்தும் ஐந்து தேவிகளின் உருவங்கள் அமைந்துள்ளன. இத்தேவிகள் ஐந்தும் இடது காலை மடக்கி வலது காலைத் தொங்கவிட்டு ஆசனத்தில் ஊன்றியபடி உத்குடியாசனமிட்டு அமர்ந்துள்ளன. நடுவில் வீரத்தன்மையை வெளிப்படுத்துவதான நான்கு கைகளை உடையதான தேவி உரு ஒன்று காணப்படுகின்றது. இத்தேவியின் இடது கைகளில், உடுக்கையும், வர ஹஸ்தமும் வலது கைகளில் அங்குசமும், கத்தியும் காணப்படுகின்றது. இத்தேவியின் இடப்புறம் மெல்லிய சிரிப்புடைய சாந்தமான முகத்தோற்றத்தையும் வலது கைகள் குடையும் அபய ஹஸ்தத்துடனும் இடது கைகள் குடையும் வரத ஹஸ்தத்துடனும் நான்கு கைகளை உடையவராய் தேவியின் உரு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்தேவியின் இடப்புறம் சரஸ்வதி தலையைச் சற்று சரித்து வலது கரங்கள் ஜெபமாலையும் வீணை வாசிக்கும் தன்மையையும் பெரிய இடது கரங்கள் புத்தகமும் வீணையையும் தாங்கி இருக்க தான் வாசிக்கும் வீணையை இரசித்து வாசிப்பது போன்ற முகபாவத்தையும் அருள்பாலிக்கும் அம்சத்தையும் நான்கு கைகளையும் கொண்டு விளங்குவதாக உள்ளது. வீரத்தன்மையையுடைய தேவியின் இடப்புறத்தில் நான்கு கைகளை உடையதாகவும், முகத்தில் புன்னகை மின்னிட அமைந்திருக்கும் தேவியின் உருவம். இத்தேவி உருவத்தில் வலப் புறத்தில் கரங்கள் கமலமும் அபயமும் உடையதாகவும் இடது கரங்கள் கமலமும் வரதமும் உடையதாகவும் கீர்த்தி தரும் அம்சத்துடன் வீற்றிருக்கும் இன்னோர் தேவியின் உருவத்தைக் காணக்கூடியதாக உள்ளது. இதிலமைந்துள்ள ஐந்து தேவிகளின் உருவங்களிலும் ஐவகை உணர்வை சிற்பி தன் செதுக்கல் கலை மூலம் வெளிப்படுத்தியுள்ளமை மிகவும் சிறப்பாகக் காணப்படுகின்றது. (ஐந்து தேவிகளும் வீற்றிருந்த கோலத்தை பின் இணைக்கப்பட்டுள்ள புகைப்படம் (12) குறிக்கின்றது.

தென்மேற்குத் திசையில் முப்பரிமாணத் தன்மையுடைய ஓர் உருவம் குந்திக் கொண்டு இரு கரங்களையும் குறுக்காகப் பின்னி இடது முழந்தாளில் இரு கைகளையும் ஒன்றன் மேல் ஒன்றாய் அமர்த்திப் பிடித்த வண்ணம் அதன் மேல் வலப்பக்கம் தலையைச் சரிந்து படுத்திருந்து ஏதோ ஒன்றைக் கற்பனை செய்து அதன் மூலம் வரும் இன்பத்தை எண்ணிச் சிரிப்பது போன்ற மனப்போக்குடன் தத்துவரூபமாகப் படைத்துக் காட்டப்பட்டுள்ளது. உடம்பில் எதுவித ஆடையுமின்றி நிர்வாணக் கோலத்தில் பின்பக்கம் தெரியக்கூடிய வகையில் குந்திக் கொண்டிக்கின்றது. இதன் விலா என்புகள் எல்லாம் அப்படியே படைத்துக் காட்டப்பட்டுள்ளது. இவ்வுருவம் ஆணா அல்லது பெண்ணா? என்று குறிப்பிட்டுக் கூற முடியாத வகையில் உள்ளது. எனினும் பெண்ணிற்குரிய அம்சத்தைப் பிரதிபலிக்கின்றது எனலாம். இவ்வுருவத்தின் செவி நீண்டு அமைந்துள்ள முறைமையானது இத்தேரிலுள்ள ஏனைய சிற்பங்களின் செவிகளில் காணப்படாத ஓர் அம்சமாக உள்ளது. இச்சிற்பத்தின் இடது புறத்தில் நிர்வாண கோலத்தில் நின்று காதல் லீலை புரியும் இரு தம்பதிகளின் உருவம் காணப்படுகின்றது. இத்தம்பதிகளின் முகத்தில் ஓர்வகை இன்ப உணர்வைக் காணக்கூடியதாக உள்ளது. (தென்மேற்குத் திசையில் குறிப்பிடப்பட்டுள்ள சிற்ப வெளிப்பாட்டை பின் இணைக்கப்பட்டுள்ள புகைப்பட இலக்கம் (13) குறிக்கின்றது) இத்திசையின் இடப் புறத்தில் யாளி வடிவம் காணப்படுகின்றது. இவ் யாளி வடிவத்தில் அருகில் சிதைவுண்ட சிற்பம் ஒன்றும், இதன் இடப்புறத்தே தியான நிலையில் அமர்ந்திருக்கும் உருவம் ஒன்றும் காணப்படுகின்றது.

பிள்ளையார் தேரில் நான்கு திசைகளிலுமுள்ள சிற்ப அமைவுகளை நோக்கின் இத்தேரின் தெற்குத் திசையிலும் வடக்குத் திசையிலும் நடுவில் பிள்ளையாரும், இவரின் அருகாமையில் சிவன், பார்வதி போன்றோரும் காணப் படுகின்றனர். அத்தோடு கிழக்குத் திசையில் பாலகிருஷ்ண வடிவங்களும் மேற்குத் திசையில் தேவிகளின் வடிவங்களும் காணப்படுகின்றன. சித்திரத் தேரைப் போன்றே பாலுணர்வுச் சிற்பங்கள் இத்தேரிலும், தென்மேற்குத் திசை நோக்கி அமைந்துள்ளது. மற்றும் சித்திரத் தேரில் அலங்காரங்களும் செதுக்கு வேலைப்பாடுகளும் இல்லாத இடமே இல்லை எனலாம். ஆனால் இத்தேரில் செதுக்கு வேலைப்பாடென்பதும் அலங்காரமென்பதும் இங்கு அமைந்துள்ள சிற்பங்களிலேதான் அதிகம் காணப்படுகின்றது. சித்திரத் தேர் போன்ற செதுக்கு வேலைகள் அலங்காரங்களை இத்தேரில் எல்லா இடங்களிலும் காண முடியாது. இதனை இத்தேரின் இடப்பாகத்தைக் குறிக்கும் பின் இணைக்கப்பட்டுள்ள புகைப்பட இலக்கம் (14) மூலம் விளங்கிக் கொள்ளலாம். சித்திரத்தேர், பிள்ளையார் தேர் ஆகிய இரு தேர்களிலும் அமைந்துள்ள சிற்பங்கள் பெரும்பாலும் உயர்புடைப்புச் சிற்பங்களாகவே இவற்றில் முழு வடிவ சிற்பங்களாக குறிப்பிடக்கூடியதாக யாளி வடிவங்களைக் காணலாம். இவ் யாளி வடிவங்கள் பின்புறம் சற்றுப் பெரியவனாகவும் இரு பக்கங்களிலும் முன் புறம் முழுமையாகத் தெரிவனவாகக் காணப்படுகின்றன. யாளி வடிவங்களில் சிங்க முகயாளி, குதிரை முக யாளி, யானை முகயாளி போன்ற இரு தேர்களிலும் காணப்படினும் இவற்றில் சற்று வித்தியாசமான அம்சமும் வெளிப்படுகின்றது. சித்திரத் தேரில் அமைந்துள்ள மேற்குறிப்பிட்ட யாளி வடிவங்களின் தன்மையை பிள்ளையார் தேர் உள்ளடக்கியுள்ள போதிலும் யாளியின் மேல் பெண் உருவம் போன்ற ஓர் உருவம் யாளியின் கீழ் உள்ள மனித உருவத்தை ஆயுதமொன்றால் ஏந்தி நிற்பது போன்று அமைக்கப்பட்டுள்ளது. சித்திரத் தேரில் அமைந்துள்ள உடலால் கைகளால் பாரம் தாங்குவது போன்ற உருவ அமைப்புக்கள் பிள்ளையார் தேரில் இல்லை. அத்தோடு சித்திரத் தேரில் அதிகளவு மிகச் சிறிய சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்தகைய சிற்பங்களை பிள்ளையார் தேரில் காண முடியவில்லை. இவ்விரு தேர்களும் அளவைகளிலும் அமைப்பு முறைகளிலும் வித்தியாசப்படுகின்றன. எனினும் திராவிடத் தன்மையை வெளிப்படுத்தும் எண்கோண அமைப்பாகவே இவ்விரு தேர்களும் உள்ளன. இத்தேர்களின் வடிவங்களுக்கும் சிறிய தேர் பெரிய தேர்களின் தன்மைக்கேற்ப சிற்ப வகைகள் சிற்பங்களின் எண்ணிக்கைகள் அதிகமாகவும் குறைந்தும் காணப்படுகின்றன. சிற்ப அமைவுகளும் தன்மைக்கேற்பவே அமைந்துள்ளது. இவ்விரு தேர்களிலுமுள்ள சிற்பங்களிலும் அதிக வித்தியாசங்களைக் காண முடியாது. இச் சிற்பங்களில் அனேகமானவை அவ்வவ் உருவங்களுக்கேற்ப உணர்வு வெளிப்படுத்துகின்ற முறையில் சிறப்பிடம் பெறுவதே குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பிள்ளையார் தேரில் ஓர் சில சிற்பங்கள் இந்த ஆய்வில் உள்ளடக்கப்படவில்லை. காரணம் அவற்றில் தெளிவின்மையும், சிற்பங்கள் சிதைவுற்ற நிலையிலும் காணப்படுவதேயாகும். இதிலுள்ள மற்றைய சிற்பங்கள் இந்த ஆய்வில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்டுள்ள மரத்தினால் செய்யப்பட்டுள்ள தேர்கள் இரண்டும் இலுப்பை மரத்தினால் செய்யப்பட்டுள்ளன. ஏனெனில் இலுப்பை மரம் தண்ணீரிலிருந்தும் மரம் அரிக்கும் பூச்சி வண்டுகளிலிருந்தும் பாதுகாப்பைப் பெறக்கூடியது காரணம் இவ் மரத்திலுள்ள ஓர் வகை எண்ணெய் தன்மையேயாகும். அதனால் இன்றுவரை இத்தேர் பாதுகாப்பான நிலையில் பேணப்பட்டுள்ளன. இத்தேரை இணைக்கப் பயன்படுத்தியுள்ள இரும்புக் கம்பிகள் வலிமை குன்றியதால் இத்தேர்களின் செயல்பாடு நின்றுவிட்டதோடு இவற்றில் உள்ள சிற்பங்கள் உடைந்து கழன்று விழுந்து நிலையிலேயேதான் சிதைவுற்றும் அழிவுற்றுமுள்ளதே தவிர பூச்சிகளோ வண்டுகளோ துளைத்த நிலையைக் காணக்கூடியதாக இல்லை. சோழர்கள் இலங்கையை ஆட்சிக்கு உட்படுத்தியபோது இலங்கையில் இருந்து இலுப்பை எண்ணெய் கொண்டு சென்று தமிழ்நாட்டில் தெய்வங்களுக்கு விளக்கேற்றியதாகக் கூறப்படும் போரசிரியர் கா. சிவத்தம்பியின் கருத்தும் இலுப்பை மர பயன்பாட்டை நிருபிப்பதற்கு சான்றாதாரமாகவுமுள்ளது. புராதன ஆலயமான கொக்கட்டிச் சோலை சிவனாலயத்தில் மரத்திலான தேர்களிலுள்ள சிற்பங்கள் எவ்வெவ் நிலைகளில் எப்படி அமைந்துள்ளன என்ற விபரணம் மூலம் மரச் சிற்பங்களின் புராதன நிலையைக் குறிப்பிடத்தக்கதாகவுள்ளன.

# தேர்ச் சிற்பங்கள்



1. யாளிகள் பூட்டிய தேரில் அரசன் ஒருவன் ஆரோகணித்து வில்லில் அம்பு தொடுக்கும் காட்சி



2. போர்க் காட்சிகளைச் சித்திரிக்கும் சிற்ப வடிவங்கள்



3. இரணிய சம்ஹாரம் இச் சிற்ப வரிசையில் நடுநாயகமாக உள்ளது.



4. வலப்புறம் குதிரை ஒன்று பாய்ந்து செல்கின்றது (அதன் முன்னங் கால்கள் மட்டுமே படத்தில் தெரிகிறது) இடப்புறம் - தியான வடிவில் அமர்ந்த தெய்வ வடிவங்கள் (நடுவில் வேலுடன் முருகன்)



5. அதே காட்சி மற்றொரு கோணத்தில் இடப்புறம் குதிரை பாயும் தோற்றம் வலப்புறம், தெய்வ வடிவங்கள்.



6. பாலகிருஷ்ணனின் பல்வேறு தோற்றங்கள் வலப்புறம், புல்லாங்குழலுடன் தோற்றம்



7. தெய்வ மூர்த்தங்கள்
1. தெட்சணாமூர்த்தி 2. விநாயகர் 3. பார்வதி பரமேஸ்வரர்




8. அதே சிற்ப வரிசையில் வலப்புறக் காட்சிகள் பாலகிருஷ்ணனுக்குப் பூதகி நச்சுப் பால் ஊட்டும் காட்சி நடுநாயகமாக உள்ளது.



9. துன்பக உணர்வுகளைப் பிரதிபலிக்கும் தேவியரின் தோற்றங்கள் ஐந்து.





10. இடப் புறம்: தியான நிலையில் உள்ள சிற்பங்கள் வலப்புறம்: காதல் லீலைக் காட்சிகள்



11. சிற்ப வேலைகள் எதுவும் இல்லாத பகுதி. கீழ்ப்புறத்தில் சிற்பவரிசைகள் காட்சியளிக்கின்றன.



12. கீழ்ப்புறத்தில் உள்ள சிற்ப வரிசையின் அண்மிய தோற்றம்












# மட்டக்களப்பு நாட்டின் திருப்படைக்கோயிலாக நீண்ட காலம் சிறப்புடன் திகழ்ந்து வரும் தான்தோன்றீச்சரம்

ஞா. சிவசண்முகம். J.P

மட்டக்களப்புப் பண்டைய கோயில்களான கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம், திருக்கோயில் சித்திர வேலாயுத சுவாமி கோயில், போரதீவு சித்திரவேலாயுத சுவாமி கோயில் என்பன திருப்படைக் கோயில்கள் அல்லது தேசத்துக் கோயில்கள் என்றே அழைக்கப்பட்டு வந்தன. தேசத்துக் கோயில்கள் என்பது மட்டக்களப்பு நாடு (தெற்கே பாணமை இருந்து வடக்கே வெருகல் ஆறு வரை) முழுமைக்கும் சொந்தமான கோயில் என்று பொருள்படுவதாகும். தான்தோன்றீஸ்வரர் கோயிலில் கூட்டப்படும் கூட்டங்களை இன்றும் தேசத்துக் கூட்டம் என்று கூறப்படுவதை காணக்கூடியதாயிருக்கிறது. மட்டக்களப்புத் தேசத்தின் எல்லாப் பகுதிகளிலுமிருந்தும் வந்து மக்கள் கூடுவதனால் இவ்வாறு அழைக்கப்பட்டு வந்தது. போர்த்துக்கீச மிலேச்சர்களின் தளபதியான டீஅசிவிடோ என்பவனால் 17ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திருக்கோயில் அழிக்கப்பட்ட போதும் தான்தோன்றீச்சரம், அவர்களால் அழிபடாது தப்பியது, மட்டக்களப்பின் திருப்படையின் சிறப்பினை பேணிக் காக்கவென்று கூறினால் அதுமிகையாகாது.

பண்டை நாட்களில் மட்டக்களப்பின் பல பிரிவுகளிலும் சிற்றரசர்களாக ஆட்சி செலுத்திய முக்குக வன்னியர்களே தேசத்துக் கோயில்களின் பாதுகாவலர்களாகவும் திகழ்ந்தனர். தான்தோன்றீச்சுரர் கோயில் தேசத்துக் கூட்டம் கூடும் போது மட்டக்களப்பிலிருந்த எல்லா வன்னியர்களும், அதிகமான மக்களும் வந்து கூடுவதே அன்றைய மரபாக இருந்து வந்தது. தேசங் கூடும் போது தேசத்து வன்னிமையின் தலைமையிலேயே கூடி வந்தது. இவர் பூபால கோத்திரத்தைச் சேர்ந்தவர் என்று முட்டி கூறும் கல்வெட்டிலே கூறப்படுகின்றது.

மட்டக்களப்பு நாட்டில் இருந்த எல்லா சாதியாரும் கோயில் திருப்பணியிலும், (திருத்தொண்டில்) ஊழியங்களிலும் பங்குபற்றக் கூடியவாறு திருப்படையில் வகுக்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்புத் திருப்படைக் கோயில்களில் திருப்படை முறைமையை வகுத்த பெருமை இலங்கையைக் கைப்பற்றி ஆண்ட கலிங்க மாகோனுக்கே (காலம் கி. பி. 1215 – 1256) உரியதென்று திடமாகக் கூறலாம்.

மட்டக்களப்பினை ஆண்ட முக்குகர் குல வன்னியர்கள் திருப்படை முறைமையினை கண்ணெனப் பேணிக் பாதுகாத்து வந்தனர். பண்டைய மண்முனை இராசதானிக் கருகில் கொக்கட்டிச்சோலை இருப்பதால் மண்முனையில் (இது மட்டக்களப்பு வன்னியப்பிரிவு என்று போர்த்துக்கீச டச்சுக்கால சரித்திரராசியர்களால் அழைக்கப்படுகின்றது). இருந்த வன்னியராசாரிடமே கோயிலின் திருப்படை முறைமையை பேணிக்காக்கும் பெரும் பொறுப்பு இருந்திருக்க வேண்டுமென நம்பலாம். மேலும் இலங்கையின் மற்றைய பாகங்களில் உள்ள கோயில்களைப் போலன்றி மட்டக்களப்புத் திருப்படைக் கோயில்களில் பிராமணரன்றி லிங்கதாரிகளான சங்கமர்களே ஆலயக்குருக்கள்மாராயிருந்து வருகின்றனர். மட்டக்களப்பை யாண்ட முக்குக வன்னியரகளெல்லாம் வீர சைவ மரபைக் கைப்பற்றியமையால் அவர்களது பரிபாலனத்தின் கீழ் இருந்த திருப்படைக் கோயில்களுக்குப் பூசை செய்வதற்கு சங்க மக்குருமார் கொண்டு வரப்பட்டனர் என்று கூறுதலே பொருத்தமானதாகும்.

கோயிலின் அன்றாட நடைமுறைகளைச் செயல்படுத்துவதற்காக முக்குகர் குல வண்ணக்கர் மூவர் தொன்று தொட்டு நியமிக்கப்பட்டு வருகின்றனர். இவர்கள் ஆயுட்கால வண்ணக்கர்களாவே இருந்து வருகின்றனர். தேவையான போது நடைபெறும் தேசத்துக் கூட்டம், கோயிலோடு தொடர்புடைய எல்லா விடயங்களையும் பற்றித் தீர்மானம் எடுக்கும். இப் பொதுக்கூட்டத்திற்குத் தேசத்து வன்னிமை தலைமை தாங்குவார். வண்ணக்குமார் தேசம் தீர்மானிப்பதற்கிணங்க தமது கோயில் அலுவல்களைக் கண்காணித்து நடத்துவதுடன் கோயில் ஊழியர்களின் பணியையும் மேற்பார்வை செய்து நடப்பிப்பர். கோயில் ஊழியர்களின் பணிகள் சிலவற்றைப் பற்றிய கல்வெட்டுப்பாடல் ஒன்றை இங்கு நோக்குதல் பொருத்தமானதாகும்.

*சொல்லரிய விளக்கேற்றல் பூவெடுத்தல்*
*தூ சகற்றல் சாணமிடல் அணிவிளக்கல்*
*நல்ல மலர்மாலை கட்டல் மேளமீட்டல்*
*நற் சந்தனமரைத்தல் நெல்லுக்குத்தல்*
*துல்லியமாய் விழாச் சிவிகை ஏந்திச் செல்லல்*
*தானி கட்டல் அமுது வைத்தல் முதன்மை பார்ப்பான்*
*வல்ல பதம் நீர் வார்த்தல் அகத்தில் தொண்டு*
*புரியுமென்று மாகோனும் வகுத்து பின்னும்*

மாகோன் அரன் ஊழியம் வகுத்தல்

மட்டக்களப்பின் சிவலாயங்களுக்குரிய அரன் ஊழியங்களை மாகோன் மன்னனே வகுத்தான் என்று பின்வரும்

பாடல் கூறுகிறது. சைவ மதத்தை மதியாது பலர்நடந்தமையால் மாகோன் இவ்வாறு செய்ய வேண்டிவந்ததென கல்வெட்டில் கூறப்படுகின்றது.

*"இகழ்ந்தவர்களனைவரையும் மாகோன் கண்டு*
*இருவிழியை எடுத்தடுத்து இடுக்கண் செய்து*
*மகிழ்ந்துஅரிநாமமிட்டோர்தமைக் கழுவில்*
*வைத்த பின்னர் சைவ மதம் வளர்ந்து ஓங்க*
*புகழ்ந்து சிவலாயங்கள் பூத்திலங்க*
*பூசுரர்கள்சொற்படியே ஊழியங்கள்*
*செகந்துதிக்க கோவசியர் தன்னிலேழு*
*சிறையாக்கி திருநாமம் செப்பக்கண்டான்"*

மட்டக்களப்பில் உள்ள எல்லாச் சாதியினரும் கோயிலுக்குத் தொண்டு செய்யக் கூடியவாறு தான்தோன்றீச்சுரர் திருப்படை வகுக்கப்பட்டிருந்தது.

திருப்படைப் பத்ததியிலே சுவாமி சூகரவேட்டைக்குப் போகுதல், பன்றிகுத்தல் பின் அவ்விடத்திலே மட்டக்களப்பின் எல்லாச் சாதிப் பிரிவினர், சில சாதிகளின் உட்குடியினர் ஆகியோரின் சேவைகளை நினைவு கூரும் முகமாக நடைபெறும் கஞ்சிமுட்டி கூறுதல் என்பன தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தைப் பொறுத்தவரை ஒரு முக்கிய நிகழ்ச்சியாகவே சமீபகாலம் வரை நடைபெற்று வந்தது. என்பது இங்கு நினைவு கூர வேண்டியதொன்றாகும்.

சுவாமி சூகரவேட்டைக்குச் செல்லல்.

தேரோட்டம் முடிந்த பின் சுவாமி ஆலயத்தினுள் எழுந்தருளுவார். அடுத்த நாள் (திங்கள்) அதிகாலை சிவவிக்கிரகத்திற்கு பட்டாடையுடுத்தி இரத்தின மாலையணிந்து தங்கப் பல்லக்கில் வைத்து வேளாளர் சுமந்து வர சுவாமி சூகர வேட்டையாடப் புறப்படுவார். பன்றி வேட்டையாடும் வேலாயுதமும் இன்னொரு பல்லக்கில் வைத்து எடுத்துச் செல்லப்படும். தேசத்து வன்னிமை முன் செல்ல மற்ற வன்னியர்கள் பின் செல்ல அடியார் கூட்டம் பின் தொடர, மேளம் முதலிய வாத்தியங்கள் முழங்க சுவாமி எழுந்தருளிச் செல்வர். பின் தற்போதுள்ள வீரபத்திர சுவாமி ஆலயத்திற்கு அருகில் உள்ள இடத்தில் அலங்கரிக்கப்பட்ட பந்தலில் சுவாமி இளைப்பாறி இருப்பார். இவ்விடத்தில் முன்பு நடந்ததாகப் பேசப்படுமொரு கதையையும் குறிப்பிட வேண்டியது அவசியமாகும்.

இப்படி சுவாமி இளைப்பாறி இருக்கும் வேளையில் ஆரிய நாட்டுச் செட்டிகள் வேளாளரைத் துணைக்கொண்டு சுவாமியின் இரத்தினமாலையைக் களவெடுத்தனர். இதனைக் கண்ட பண்டாரங்கள் தேசத்து வன்னிமையிடம் சொல்ல வன்னிமையும், செட்டியையும், வேளாளரையும் பிடித்துக்கட்டி பண்டாரங்களைக் கொண்டு அடிப்பித்தனர். இதன்பின் இறைவன் பன்றி வேட்டையாடுதலைப் பற்றிய திருவேட்டைக் கவி பாடப்படும்.

திருவேட்டைக் கவி.

01. சீராரும், செங்கமலக் கண்ணினானும், திசைமுகனும் இந்திரரும், தேவர்தாமும், ஏராரும் கமலபதமிறைஞ்சி ஏற்ற இலங்கு செங்கைத் திருக்கரத்தில் ஏந்தியென்றும்,

பார் ஏழும் வாழ்க மறை நான்கும் வாழ்க பல உயிரும் வாழ்க மிகப்பவுசுண்டாக

ஆராரும் போற்றும் திருக்கோயில் வாழும் அரனாரும் திருவேட்டையாடினாரே.

02. சீதமதிமுகத்தரிவை மாதர் சூழத் தேவர்கள் பூமழை பொழியத் தேசம் வாழ்க.

வேத நெறிமுறை தவறா நீதி ஓங்க மேதினியோர் ஈடேறக் கலிகள் தீர

தீதகலக் கொடிய சத்துரு ஏனம் வீழ்க செங்கையிற் பொற் தங்க வரிச்சிலையை ஏந்தி

ஆதவனார் மறைந்த இருளூடே ஏகி அரனாரும் திருவேட்டையாடினாரே.

03. சீரிலங்கு ரெட்ணமணி முடிபிலங்கத் திகழ் கரமோர் தன்னிலங்கச் செவியிலங்கப்

பேரிலங்கு தோழிலங்க மார்பிலங்க வீபூதி அணி நுதலிலங்க விழியிலங்க

வாரிலங்கு தனமிலங்க இடையிலங்கு வளர்மதி போல் உமையவளு மிடமருங்கிலங்க

ஆரிலங்கு இடபமதிலங்கச் சுவாமி அரனாரும் திருவேட்டையாடினாரே.

04. கார்மேவு கரித்தோலும் அசைந்தேயாடக் கங்கை தனைத் தரித்த திருச்சடையுமாட,

மார் மீதில் எலும்பணிந்த மாலையாட, மான் மழுவும் கைதனிலே மகிழ்ந்து ஆட,

பார் ஏழும் காத்த திருப்பாதமாட பார்பதியும் இடப்பாகம் பரிந்தே ஆட

ஆர்மேவு அழகான நந்தி ஆட அரனாரும் திருவேட்டை ஆடினாரே.

05. முப்புரத்தை நீறெனவே எரித்த கோலம், முயலகனைநெறு நெறு என மிதித்த கோலம்,

சுப்பிரமணியர் தன்னைத் தந்தகோலம்சுடலையிலே நடனமது கொண்ட கோலம்,

தைப்பூசமாடிச் சந்தோஷித்த கோலம்சாட்ஷாதி சாட்சதீகமான கோலம்,

அப்பனென அனைவருக்குமர்ந்த கோலம் அரனாரும்திருவேட்டை ஆடினாரே.

06. ஆதி வேதாந்தமதில் அமர்ந்தாய் போற்றி அருச்சுனர்க்குப் பாசுபதமளித்தாய் போற்றி,
காதில் வெண்குழை தோடும் கலந்தாய் போற்றி,
காலனையும் முன்னாளில் உதைத்தாய் போற்றி,
பாதி மதிதனைச் சடையில் வைத்தாய் போற்றி,
பச்சைமால் மைத்துனனாய் வந்தாய் போற்றி,
சோதியாய்ச் சுடரொழியாய் நிறைந்தாய் போற்றி,
இடமது இலங்கு உமை சதாசிவமே போற்றி போற்றி,

கஞ்சி முட்டி கூறல்.

திருவேட்டைக் கவி பாடப்பட்ட பின் சுவாமிஅங்கு ஆறி இருக்கும் வேளையில் கஞ்சி முட்டி கூறும் நிகழ்வு தொடங்கும். குடுக்கை கூறுவதற்கு இருபாகை என்னும் பரமபார்ப்பான் குடுக்கை கூற சூத்திர சாதிகள் சகலரும் எழுந்து இருபாகை முதன்மை என்னும் கலிங்கராசனை வணங்கிக் கூறியதாவது.

இந்த இருபாகையார் தருமம், தானம் பண்ணாதவர், தருமதானம் வாங்குபவர். விருந்தினருக்கீயாது மறைந்திருந்து அன்னபானாதி ஆகாரம் அருந்துபவர். உபதேசங் கொடுத்து மனுக்குலத்தவருக்கு அறிவூட்டாதவர். சீவகாருண்ய மில்லாதவர்கள். பிறருக்கு ஈயாதவர்கள். இவர்களிடத்திலே அமிர்தம் போன்ற பிரசாத முட்டியை வாங்கி அருந்தினால் தருமதோசம் வரும் என்று சூத்திர சாதிகளான வேளாளர் முதலான பதினெட்டுச் சிறைகளும் அரசனிடம் விண்ணப்பம் செய்தனர். அரசனும் அவர்கள் கூறுவது உண்மை என்று மனமகிழ்ச்சி கொண்டு அவர்களை நோக்கி உங்களுக்கு யார் பங்கிட வேண்டுமென்று வினவ சூத்திரர் அரசனை நோக்கி அரசருக்கரசனே! தேசமென்னும் திருநாம குலத்தானே! எங்களில் முதற் குலத்தவராகிய காரளார் சரித்திரம் கூறுகின்றோம்.

முற்காலத்தில் சேரன், சோழன், பாண்டியன் இவர்களைப் பிள்ளைக்குலமென்றும், நாயர் குலமென்றும் காராளர் வமிசமென்றும் விருது கொடுத்து வந்தவர்கள். இவர்கள் பசுபதி சிந்தனையுடையவர்கள். தேவருக்குத் தொண்டூழியர். மாசிலா மரபிற் பிறந்தவர்கள். மாமிச போசனமுண்ணாதவர்கள், பண்டு தொட்டுப் பெருமையுடையவர்கள். சிவவணக்கமுடையவர்கள். உழுது தானியம் உற்பத்தி செய்து யாவருக்குமாதாரமான தொழிலால் ஊண் உண்பவர்கள். தருமதானம் செய்பவர்கள். தேவசேவகமே கைக்கொண்டவர்கள். தாவர போசன முண்பவர்கள். தேவலாயத்தில் ஏவற் தொண்டு செய்பவர்கள். கொலை, களவு, காமம், குருநிந்தை செய்யாதவர்கள். இவர்களுடைய கையினாலேயே இந்தப் பெருமானுடைய திருவிளையாடல்களைச் செய்து யாவும் சித்தி முத்தி பெறுவதற்குக் கொண்டுள்ள வரிசை முட்டியைத் தந்தால் எக்காலமும் சிவமதத்திலேயிருந்து குகன் குலத்து வன்னிமைகள் சொற்படி அரசனிட்ட கட்டளை தவறாமல் தேவாலய ஊழியம் செய்வோமென்று பதினெட்டுச் சிறைகளும் கைகட்டி, வாய்பொத்தி நின்று கூறினார்

அரசன் அவற்றைக் கேட்டு பிரம்மசத்திரிய வைசியரென்னும் முக்குலத்தாரும், சூத்திரனுடைய கையினால் பங்கு முட்டியை வாங்க மாட்டார்கள். ஆனால் முட்டியில் பட்டுப் போட்டு எக்காலமும் வரிசை முட்டி கூற வேண்டும் என்றும், சூத்திரசாதியில் வேளாளர் முதலான பதினெட்டுச் சிறைகளுக்கும் பட்டுப் போடக் கூடாதென்றும் கட்டளையிட்டு வரிசை முட்டி கூறும்படி கூறினான்.

பின்பு செட்டிகள், வேளாளர் இவர்களை அவிழ்த்து விட்டு மஞ்சல் நீர் தெளித்து வரிசைமுட்டி கூறும்படி செய்தனர். வோளரும் சங்கச் சபையை வெகு வந்தனம் பண்ணி வரிசை முட்டியை இரு கரங்களாலும் எடுத்து முதல் யாருக்குக் கூற வேண்டும் என்று கேட்க அரசன் மகிழ்ந்து சொன்னது. பெரிய திருவாசல் என்று முன்பு கூறி, பின் வேதம் என்று கூறி, அதன்பின் நம்பி என்று கூறி, அதன்பின் திருப்பாட்டு என்று கூறி, அதன்பின் வன்னிபமென்று கூறி அதன்பின் உலககுருநாதர் என்று கூறி, அதன்பின் பூபாலகோத்திரமென்று கூறி, அதன்பின் பூவசியரென்று கூறி, அதன்பின் புன்னாலையென்று கூறி, அதன்பின் மண்முனையென்று கூறி அதன்பின் மட்டக்களப்பு என்று கூறி, அதன்பின் நாடு என்று கூறி, அதன்பின் நகரம் என்று கூறி, அதன்பின் கண்டி என்று கூறி, அதன்பின் கதிரை என்று கூறி, அதன்பின கந்தளை என்று கூறி, அதன்பின் மாவலியென்று கூறி, அதன்பின் அயோத்தி என்று கூறி, அதன்பின் தேவாலயத்தூழியர்களுக்கு அவரவர் கையில் பங்கிடுமென்று கலிங்க குமாரன் கட்டளையிட்டான். அதன்படியே பங்கிட்ட பின் சுவாமியை ஆலயத்திற்கு எழுந்தருளச் செய்து மஞ்சல் நீராட்டி மகிழ்ந்தனர். (மேலே கூறப்பட்டவற்றிற்குரிய விளக்கம் பின்னால் காட்டப்பட்டுள்ளது).

பிற்காலத்தில் விமலதருமன் கண்டிக்கு அரசனான போது திருப்படையில் எழுந்த ஒரு சிக்கலைத் தீர்த்து வைத்தான் என்று திருப்படைக் களஞ்சியத்தில் கூறப்படுகின்றது. இதனையிட்டு நோக்குமுன் கண்டி தனி அரசாக வலுப்பட்ட கால கட்டத்தில் 15ம் நூற்றாண்டின இறுதியில் முதலாம் விமலதருமன் கண்டிக்கு அரசனாக முடிசூடிக்கொண்டான். (இவன் ஆட்சிக் காலம் கி. பி. 1592 – 1604) கண்டி வலுவான தனி அரசனானதும் மட்டக்களப்பு வன்னிமைப் பற்றுக்களெல்லாம் கண்டி அரசனின் மேலாதிக்கத்தின் கீழ் வந்தன. கி.பி. 1603 இல் விமலதரும சூரியன் மட்டக்களப்பின் முக்கிய கோயில்களுக்கும் சம்மாந்துறைப் பட்டினத்திற்கும் விஜயம் செய்தான் என்று பிரபல சரித்திராசிரியர். பீ. ஈ. பீரிஸ் கூறுகின்றார்.

கொக்கட்டிச்சோலை கோயில் திருப்படை சம்பந்தமாக அந்த ஆண்டில்தான் வன்னிமைகளுக்கும், வேளாளருக்கும் பிணக்கு ஏற்பட்டதென்று கூறலாம். திருப்படையிற் கலந்துகொண்ட விமலதருமனும் அவற்றையிட்டு வினாவினான். வன்னிபங்களும் செப்பேட்டை எடுத்து வாசித்துக் காட்டினர். பின் விமலதருமன் கலிங்கராசன் பண்டைக்காலத்தில் நடத்தியபடி சூகரவேட்டையாடி நடத்திக் காட்டுங்கள் என்று கூற, வன்னிபங்களும் வேளாளரைக் கட்டிப் பண்டாரங்களைக்

கொண்டு அடித்துப்பின் அவிழ்த்து மஞ்சல் நீர் தெளித்து முன்முதன்மை சொற்படி முட்டி கூறுமென்ன வேளாளர் வரிசைமுட்டி கூறும் போது அரசன் மகிழ்ந்து மட்டக்களப்புத் திருப்பணி ஆறுக்கும் வெகுமதிகள் ஈந்து வேளாளரையும், சிறைகளையும் நிறுத்தி வன்னிபம் முதன்மைகள் சொற்படி உங்கள் பண்டுழியம் செய்யும்படி திட்டம் புரிந்து அதற்குத் தவறினால் கொடிய தண்டனை கிடைக்குமெனவும் கட்டளையிட்டான்.

இனி முட்டி கூறும் கல்வெட்டினையிட்டு விரிவாகக் கவனிப்போம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | பெரிய திருவாசல் | – | கைலயங்கிரி |
| 2. | வேதம் | – | பிரமன் |
| 3. | நம்பி | – | விஷ்ணு |
| 4. | திருப்பாட்டு | – | சிவன் |
| 5. | சரிகை சன்யாசம் | – | கிரியை |
| 6. | தேசம் | – | கலிங்கர் |
| 7. | வன்னியம் | – | படையாட்சிகுலம் |
| 8. | உலககுருநாதர் | – | ஆதிகுரு |
| 9. | பூபால கோத்திரம் | – | கலிங்க வேளாண் |
| 10. | பூவைசியன் | – | வணிகன் |
| 11. | புன்னாலை | – | பணிக்கனாகுடி |
| 12. | மண்முனை | – | உலகிப்போடிகுடி |
| 13. | மட்டக்களப்பு | – | தனஞ்சனாகுடி |
| 14. | நாடு | – | இராம நாட்டு வேடன் |
| 15. | நகரம் | – | வவுனியா வேளாளர் |
| 16. | கண்டி | – | நிலமை |
| 17. | கதிரை | – | வேடப்பெண் |
| 18. | கந்தளை | – | மலையாள முக்குவர் |
| 19. | மாவலி | – | இடையர் |
| 20. | அயோத்தி | – | மறவர் |

தான்தோன்றீஸ்வரர் திருவேட்டைக்கு எழுந்தருளி சூகர வேட்டையாடிய பின் அங்கு ஆறி இருக்கையிலேயே முட்டி கூறும் கல்வெட்டு படிக்கப்படும். இக் கல்வெட்டு வாசித்தலை படையாண்ட குடியைச் சேர்ந்த ஒரு பெரியவரே நீண்டகாலமாகச் செய்து வந்தார். முட்டிகூறலின் முன்பகுதியைப் பார்த்தோம். தொடர்ந்து மீதிப் பகுதியையும் நோக்குவோம்.

| | | |
|---|---|---|
| தேசத்து வன்னிமை | – | தேசவன்னிமை |
| உட்கடம்பை அதிகாரம் | – | வேளாளர் |
| பள்ளக்கடம்பை அதிகாரம் | – | உலகிப்போடிகுடி |
| நாடுபெற்ற திசையினார் | – | காலிங்காகுடி |
| ராசபத்துமுதலி | – | படையாண்டகுடி |
| நாட்டுச்செட்டி | – | செட்டி |
| இளநாடு பெற்ற விதானை | – | வேளாளர் |
| கடைக்குட்டி விதானை | – | உலகிப்போடி குடி |
| ராசக்கோன்முதலி | – | காலிங்காகுடி |
| பண்டித முதலி | – | பணிக்கனார்குடி |
| கல்மடு முதலி | – | தனஞ்சனா குடி |
| சங்கதி சமயம் | – | சங்கதி குடியார் |
| மண்முனை | – | உலகிப்போடி குடி |

வேளாளர்

அத்தியாகுடி வேளாளர்
வச்சினாகுடி வேளாளர்
பெரிய கவுத்தன்குடி வேளாளர்
சின்னக்கவுத்தன் குடி வேளாளர்
கண்டன்குடி வேளாளர்
சருவிலிகுடி வேளாளர்
சிங்களக்குடி வேளாளர்
கல்மடுக்குடி வேளாளர்

மூன்று போடிமார்

| | | |
|---|---|---|
| திமிலதீவுப் போடியார் | – | உலகிப்போடி குடி |
| கிரான்குளத்துப் போடியார் | – | காலிங்காகுடி |
| படையாண்ட வெளிப்போடியார் | – | படையாண்ட குடி |

கண்டி ராசாவால் பட்டையம் பெற்ற வன்னிபங்கள்.

| | | |
|---|---|---|
| அரசு நிலைகாத்த வன்னிமை | – | உலகிப்போடி குடி |
| போர்வீரகண்ட வன்னிமை | – | படையாண்ட குடி |
| காலிங்கராய வன்னிமை | – | காலிங்காகுடி |
| தண்டவாலமுண்ட | – | பணிக்கனாகுடி |
| புன்னாலைகண்ட வன்னிமை | – | கச்சிலாகுடி |
| குளுப்பை வன்னிமை | – | கோப்பிகுடி |
| இராசக்கோன் வன்னிமை | – | பெத்தான்குடி |
| தானரசுகண்ட வன்னிமை | – | தனஞ்சனாகுடி |
| தேசவன்னிமை | | |
| வேளாளர் வண்ணக்கு | – | |

உலகிப்போடிகுடி வண்ணக்கர்
காலிங்காகுடி வண்ணக்கர்
படையாண்ட குடி வண்ணக்கர்
திருத்தோணிமுகத்துவாரம்
வருணகுல ஆதித்தன்
கரை ஊரவர்கள்
கொக்கட்டிச்சோலை ஊர்ப்போடியார்
வனத்து வேடுவர்
ஊறணி வேடுவர்
முத்திரைச்சங்கு –கோயிலார்

வேளாளர்

மருங்கூர் வேளாளர்
காரைக்கால் வேளாளர்
தொண்டைமண்டல வேளாளர்
சோழிய வேளாளர்

குச்சிக் குடுமி வேளாளர்
தையத்தூர் வேளாளர்
சவன வேளாளர்
கொடிக்கட்டி வேளாளர்
அருளூர் வேளானர்
இளநாட்டு வேளாளர்

செட்டிகள்

வேளாளச் செட்டி
இலைவாணிபச் செட்டி
பூநூல் செட்டி
எண்ணெய் வாணிபச் செட்டி
வியாபாரச் செட்டி
பைவாணிபச் செட்டி
பட்டணச் செட்டி
அரச வீரத்துச் செட்டி
குச்சர தேசத்துச் செட்டி
கவறைச் செட்டி

## முக்குகர் திமிலருடன் சண்டை செய்யும் போது உதவிபுரிந்தவர்கள்

செட்டிக்கவறை
நாய்க்கவறை
வளையற்கவறை
இரட்டினக்கவறை
குங்குமக்கவறை
ஏற்றுக்கவறை
தொட்டில்கவறை
கம்மலக்கவறை
சிற்றூர்கவறை
சாலிக்கவறை
பட்டுநூல்கவறை
வரிசைக்கவறை
தையற்கவறை
எண்ணெய்கவறை
சங்குக்கவறை

தெய்வேந்திரன்முனை ஆசாரி
சூரிய அடப்பன் ஆசாரி
தானக் கொல்லன் ஆசாரி
எருவிற் கம்மாளன்
ஈழநாட்டுப் பெரியகாரியப்பர் வாங்கிஷம்
மாந்தறா குடியார்
பிரபுக்கள் – சோனகர்
பண்டாரி
ஆண்டி
கபடாக்காரன்
கணக்கப்பிள்ளை
கங்காணி
கொட்டுக்காரன்
குழல்க்காரன்

பகுதிகள் கூறுதல்

மண்முனைப்பகுதி
போரதீவுப்பகுதி
எருவிற்பகுதி
ஏறாவூர்ப்பகுதி
கோறளைப்பகுதி
காரவாகுப்பகுதி
நிந்தவூர்ப்பகுதி
அக்கரைப்பற்றுப்பகுதி
சம்மாந்துறைப்பகுதி
திருக்கோயிற்பகுதி
நாடுகாட்டுப்பகுதி
பாணகைப்பகுதி

பகுதிகள் கூறும் போது ஊழியக் குடிகள் வாங்கக் கூடாது. முற்குகக்குடியாரோ வாங்க வேண்டும்.

ஆரியநாடு திருவொற்றியூர் – சிர்பாதக்காரர்
மட்டக்களப்பு சொர்ண காவல் வேடுவர்
பெரியண்டார வீட்டு சொர்ணகாவல் வேடுவர்
மண்புளக்க மனைபுளக்க இருந்த மணற்காட்டு வேடுவர்
பிள்ளைமார் – பண்டாரப்பிள்ளை
செங்குந்தமுதலி – கைக்கோளர்
மண்உடையார் – குயவன்
வெல்லமிறக்கிப் பணிக்கர் – சாண்டார்
மயிர்க்கொடி வீரன் – பரவர்
நளுவர்கள் – நளவர்
பிராண உபகாரி – மயிர்வினைஞன்
ஈரங்கொல்லியன் – வண்ணான்
தேசத்து வண்ணான்
தண்டைக்காரன்
பரிவேட்டை வண்ணான்
கோயில் வண்ணான்
கடையர்
பெரும் பறையாளன் – பறையர்
வெட்டியான்
மூப்பன்

மேலே கூறப்பட்டவாறு திருப்படைக் களஞ்சியத்தின்படி முட்டி கூறும் போது அதை வாங்குவதற்குச்சரியான உருத்துடையவர்களே வாங்க வேண்டும். அப்படியில்லாது வேறு யாரும் வாங்க முயன்றால், சபையோரால் தடுக்கப்படுவார்கள். இவ்வாறு நடக்கும் போது, பங்கு தடுப்பது பற்றியும், வாங்குபவர் தமக்கு உருத்து இருக்கின்றது என்பதைக் காட்டுவதற்குமான பல

பாடல்கள் முட்டி கூறும் கல்வெட்டில் உள்ளன. இவற்றில் சிலவற்றையிட்டு இங்கு நோக்கலாம். இவற்றில் பலவும் கேள்வி, பதில் என்னும் முறையில் அமைந்திருப்பதால் தர்க்கப்பாடல்கள் என்று அழைக்கப்படுகின்றன.

## திருப்படைத்தர்க்கம்

1. *குலம் கோத்திரம் சைவமதம் பெருமை வாழ்வு,*
*குவலயத்தில் விளங்கி வரக் கொற்றவர்கள் சிவனுடைய*
*தலங்கள் செழித்தோங்கி வரத்திருப்படைதாவி*
*வெகுசன்மானம் தழைத்தோங்க இலங்கையெனும்*
*மட்டமுறு களப்பிலீசர் ஈட்டி கொண்டு*
*பன்றி குத்துமியல்பைக் காட்டியென்றென்றும்*
*குடுக்கை வைத்து துலங்கு குலவரிசைமுட்டி கூறும் போது*
*சொல்வேன் திருச்சபையைத் துதித்துமிப்போ.*

2. *வரிசை முட்டி வாங்குவோரே உன் குலமும் கோத்திரமும்*
*மணந்த மங்கை மைத்துனராய் வந்த வாறும்*
*சரிகையொடு சைவநெறி தந்தார் பேரும்*
*சாதி விட்டுக் கலக்காமல் தரிக்குமாறும்*
*கிரிகை முறைப்படி நடந்துலகோர் வாழ்த்த*
*கொடுமுறை அகற்றி ஈசன் இல்லம் வந்து*
*பருதி குலக்கலிங் கன்முன்னாள் செய்த*
*பண்டு முறைதனைக் கூறி பங்கு வாங்கேன்.*

3. *கூறுமுறை அறியாதார் எழுந்தால் தோசம்*
*குலமறியாதார் தான் செய்த குற்றம் காணார்*
*நீறணியும் சைவமுறை நீக்கி வாழ்வோர்*
*நிலையகன்று பிறர் குலத்தில் மணந்து கொள்ளார்.*
*ஆறுபணி தாரமென்னும் ஆலயத்தில்*
*அனுதினமும் வந்து மலரிட்டுண்ணார்*
*வேறு குல மக்கள் மனை விருந்து உண்போர்*
*விறல் வரிசை முட்டி பெற விடேன் நீகேள்.*

4. *நீங்கி நீ தேச சங்கம் தன்னிற் சொல்லும்*
*நின்னையும் என்னையும் நிலை நிறுத்தி வைத்து*
*பாங்குடனே குலங் கோத்திரம் சைவமுறை*
*பண்டு பண்டு குற்றமில்லாத்து யோனாற் பங்கு*
*வாங்குமென்று விருந்தளிப்பார் எனக்கு குற்றம்*
*வகுத்திடுவார் உன் தகுதி மங்குமாகில்*
*தாங்கி எனை அச்சபையோர் புகழ்வார்.*
*உன்னைச் சங்கமதால் அகற்றி வைப்பார் தகுதி பாரேன்.*

இவ்வாறு தொடர்ந்து செல்லும் பாடல்கள் தேசமென்ற சொல் பற்றிக் கூறும் போது:-

*தேசமென்ற வரிசை*
*முட்டி வாங்க வந்தீர் உன் திறமை என்ன*
*செங்கோலாச்சம் திசைதானெங்கே?*
*பாசமெறியமன் குலத்தோர் தன்னைக்கொன்று*
*பசுபதியாய் உலகமதை வைத்ததெங்கே?*
*தூசகற்றி உனது முன்னோர் சுகித்ததெங்கே?*
*தொன்று தொட்டுன் சுயதிறமை சொல் வீரானால்*
*கூசாமல் வரிசை முட்டி வாங்கலாகும்.*
*குறியறியார் கரம் நீட்டிற் குலத்திற்கீனம்*

என்று கூறுகிறது. இதற்கு விடையாக,

*பேர் பெரிய எனது முன்னோரிருந்த தேசம்*
*பிரம்ம புத்திரா நதி தனக்குப் பக்கமாகும்.*
*ஆரெதிரி இல்லாமல் அயோத்தி வங்கம்*
*அரி புரமும் அசோகொறிசா காளி கூட்டம்*
*தேரணிகள் ஊர் முன் பின் படைகள் சூழச்*
*சிவகோத்திரம் திறமையுடன் செங்கோ லோச்சும்*
*நீர்சூழ் இலங்கை முற்றும் இராவணன் பின்*
*நிலையரக புரி கலிங்க ராசன் நானே.*

எனும் பாடல் வருகிறது.

## வன்னிமை

*வன்னியங்கள் குலவரிசை முட்டி கூற*
*மகிழ்ச்சி கொண்டு எழுந்திடு முன் மரபும் நாடுமெந்த*
*மன்னருன்னை வனனியமாய் வைத்ததென்றும்*
*மாநிலத்தில் உங்கள் முன்னோர் வாழ்ந்த ஊரும்*
*துன்னு புகழ் கோத்திரமும் தொன்று தொட்டுத்*
*துணையரசன் பேரும் சொன்னால் இந்த*
*பன்னு புகழ் சபையோாகள் மகிழக் கூறி*
*பங்கு பெறு மறியாயானாற் பாவமாமே.*

இதற்கு விடையாக.

*அறியாதான் இச்சபைக்கு அகல நிற்பான்*
*பரன்றொழும்பர் பழித்துரைப்பார் அறைவேனெங்கள்*
*நெறி தவறார் கயநாடு காளி கட்டம்*
*நீள் குலமே படையாட்சி உழுதா ணுண்டோன்*
*வெறி மகழுமா கலிங்க வாசனெங்க திறத்தோரைப்*
*படைத்துணைக்குத் தலைவனாக்கி*
*குறியறிந்து வன்னியங்கள் குலமேயென்றும்*
*குகப் பட்டத்தரசு கொண்டோன் நானே.*

எனும் பாடல் அமைந்துள்ளது

இவ்வாறு பங்கு கூறும் கல்வெட்டுக்குரிய கருத்துக்களைக் காட்டுவதாக அமையும், முப்பத்தாறு பாடல்கள் இக்கல்வெட்டிலே காணப்படுகின்றன. இவை மட்டக்களப்பு நாட்டின் திருப்படைக் கோயிலாக நீண்ட காலமாகத் திகழ்ந்து வரும் தான்தோன்றீச்சுரப் பெருமான் கோயிலின் பெருமையை மேலும் பெருமைப் படுத்துவதாகவும், திருப்படைப் பத்ததியின் சிறப்பினை சைவ உலகிக்கு காட்டுவதாகவும் உள்ளன.

M. ARULAMPALAM
PRINCIPAL

# தான்தோன்றீஸ்வரர் ஆலய நிருவாக செயற்பாட்டிலும் மக்கள் வாழ்விலும் மாறாது பேணப்பட்டு வரும் பாரம்பரியச் சிறப்பம்சங்கள்

க.திருநாவுக்கரசு
*B.A. (Hons) B.Phil*

மட்டக்களப்பு நகருக்குத் தெற்கே மண்முனை ஆற்றுக்கு அப்பால் அழகிய பல கிராமங்கள் சேர்ந்து மண்முனைப் பிரதேசம் என அழைப்படுகிறது. இப்பிரதேசத்தின் மத்தியில் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. கொக்கட்டி மரங்கள் சோலையாக இருந்த காரணத்தினால் இது கொக்கட்டிச் சோலை எனவும் கொக்கட்டி மரத்தில் சிவன் சுயம்புலிங்கமாகத் தோன்றியதனால் இவருக்கு கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் எனவும் பெயர் வழங்கலாயிற்று என்று கூறப்படுகின்றது. இக்கோயில் உலக நாச்சி என்ற இளவரசியால் கி.பி. 398ஆம் ஆண்டு அளவில் கட்டப்பட்டதாகவும், இதற்கு மாகோன் என்ற மன்னன் அரன் ஊழியம் வகுத்தாகவும் கூறப்படும் தகவல்களைக் கொண்டு நோக்குமிடத்து இக்கோயில் மிகப் பழமைவாய்ந்தது மட்டுமன்றி பல சிறப்புக்களைக் கொண்டது என்பதும் புலனாகும். இக்கோயிலில் காணப்படும் கட்டிட சிற்ப அமைப்பு முறைகள் பல்லவர்கால இறுதிப் பகுதி அல்லது சோழர் கால முற்பகுதி கட்டிட சிற்ப முறைகளை ஒத்திருப்பதாக வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். இவ்வாலயத்திலே காணப்படும் இரண்டு சித்திரத்தேர்களும் அவற்றில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்களும் இது காலத்தால் முந்தியது என்பதற்குச் சிறந்த ஆதாரமாக அமைந்துள்ளது.

நீர்வளமும் நில வளமும் கொண்ட செழிப்பானதும் தொழில்கள் எல்லாவற்றிலும் உயர்ந்தது எனப் போற்றப்படும் மேழித் தொழிலைச் செய்கின்ற இப்பிரதேச மக்கள் இவ்வாலயத்தினை இன்றும் பழைய மரபுகள் பாரம்பரியங்கள் மாறாத வண்ணம் நிர்வகித்து வருவது போற்றத்தக்கதாகும். இதற்கு இப்பிரதேச மக்களின் செல்வச் செழிப்பும், சமய நம்பிக்கையும், கடவுள் பக்தியும், பிறமத ஊடுருவல் இல்லாமையும் பெரிதும் துணைபுரிந்து வருகின்றதென்றால் அது மிகையாகாது. பல சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்ட இவ்வாலயத்தின் நிர்வாக அமைப்பு முறை, மக்களுக்கும் இக்கோயிலுக்குமுள்ள உறவுகள், தொண்டுகள், செயற்பாடுகள் போன்றவற்றை நாம் ஆராய்ந்து பார்த்தால் பலசிறப்பம்சங்களைக் காணலாம். நடைமுறையில் பின்பற்றப்படும் பராம்பரிய வழக்காறுகளுக்கும், வாய் மொழியாகக் கேட்கப்பட்டு வருகின்ற கதைகளுக்கும் முற்றுமுழுதாக கல்வெட்டு ஆதாரங்கள் இல்லாதிருந்த போதிலும் பலசிறப்பம்சங்களை ஆதார பூர்வமாக நிறுவக் கூடிய ஏட்டுப் பிரதிகள் இன்றும் எம்மவர் மத்தியில் காணப்படுகின்றன. இக்கோயிலுக்கான கல்வெட்டுக்கள், வேறு ஆதாரங்கள் போன்றவை நன்கு பராமரிக்கப்படாமையால் அல்லது திட்டமிட்டு அழிக்கப்பட்டமையால் ஆதாரங்கள் பெற முடியாதுள்ளது. எவ்வாறிருப்பினும் கிடைக்கின்ற கல்வெட்டுப் பாடல்களைக் கொண்டு இக் கோயிலின் செயற்பாடுகளிலும் இக்கோயிலின் கட்டுப் பாட்டு விதிகளிலும் கோயிலில் மட்டுமன்றி இக்கோயிலால் கட்டுப்படுத்தப்படுகின்ற குடிமக்கள் வாழ்விலும் ஊடுருவி நிலைத்து நிற்கின்ற பல சிறப்பம்சங்களை காணமுடிகிறது.

இக்கோயிலின் செயற்பாட்டை எடுத்து நோக்குவோமானால் இதனை இருபிரிவுகளாக ஆராயலாம்.

1. நிர்வாக முறை
2. தொண்டூழியமுறை

நிர்வாக முறையை ஒருவர்க்க மக்கள் கவனிக்க, தொண்டூழிய முறையை இன்னொரு வர்க்க மக்கள் கவனித்து வருகின்ற ஒரு அமைப்பு முறையைக் இங்கு காணமுடிகின்றது. சகல வர்க்க மக்களுக்கும் ஆலயச் செயற்பாட்டில் பங்களிப்பு பகிர்ந்தளிக்கப்பட்டுச் சிறப்பாகவும் கட்டுக்கோப்பாகவும் பேணப்பட்டு அவரவர்க்குரிய கடமைகளும் உரிமைகளும் வகுக்கப்பட்டிருப்பதே இக்கோயில் நிர்வாக முறையின் மற்றய ஒரு சிறப்பம்சமாகும்.

## நிர்வாக முறை

இக்கோயிலின் நிர்வாக அமைப்பை நோக்கினால் இங்கு பல குறியீட்டுச் சொற்கள் பயன்படுத்தப்படுவதனைக் காணலாம். தேசம், வன்னிமை குடி, போன்ற சொற்கள் ஒரு மாறுபட்ட கருத்தில் இவ்வாலய நிர்வாக அமைப்பில் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

தேசம் : தேசமென்பது ஒரு நாடு என்ற கருத்தில் அமையாது இக்கோயிலின் பொதுக் கூட்டத்தில் பங்குபற்றும் ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தைக் குறிக்கின்றது. அதாவது மட்டக்களப்புப் பிரதேசத்தில் இருந்து இக் கோயிலின் நிர்வாக வேலையைக் கவனிக்க ஒன்று கூடுகின்ற ஒரு குறிப்பிட்ட பொதுமக்களை தேசம் என்றும் இவர்கள் ஆலயத்தில் கூடும் கூட்டத்தை தேசத்துக் கூட்டம் என்றும் தேசமகாசபை என்றும் வழங்கி வருவதை இன்றும் நாம் காண முடிகிறது. தான் தோன்றீஸ்வரர் ஆலயப் பொதுக் கூட்டத்தை மக்கள் இப்போதும் தேசத்துக் கூட்டம் என்றே அழைக்கின்றனர்.

**வன்னிமை** : வன்னிமை என்பது ஒரு பதவிப் பெயராகவே பாவிக்கப்பட்டிருக்கின்றது. தேசத்துக் கூட்டம் நடைபெறும் போது தேசத்து வன்னிமையின் தலைமையில் இவ்வாலயத்தின் பொதுக்கூட்டம் நடைபெற்று வந்துள்ளது. இவர் பூபாலகோத்திரத்தைச் சேர்ந்தவராவார். காலப் போக்கில் இக்குல மக்கள் இல்லாது போக கலிங்க, உலகிப்போடி, படையாட்சி குடி வண்ணக்குமார்கள் தலைமையிலேயே நடைபெற்று வந்துள்ளது. இவர்களும் வன்னிமை போன்று மதிப்பு மிக்கவர்களாக இருந்து வந்திருக்கின்றர். பங்கு கூறும் கல்வெட்டில் வன்னிமை என்ற பகுதியில் படையாட்சி குடியைச் சேர்ந்தவர் தான் வன்னிமை என நிருபிக்க பின்வருமாறு கூறுகின்றார்.

> "நெறிதவறார் சுயநாடு காளியாட்டம் நீர் குலமே
> படையாட்சி யுழுதூண்டோர்
> வெறி கமழு மாகலிங்க வாசனெங்கள் திறத்தோரைப்
> படைத் துணைக்குத் தலைவனாக்கி
> குறியறிந்து வன்னிபங்கள் குலமே என்றும்
> குசுப்பட்டத்தரசு கொண்டோனானே."

இம் மூன்று குலமக்களும் ஆலய நிருவாகத்தில் மட்டுமன்றி இப்பிரதேசத்திலும் மிகவும் உயர்ந்தவர்களாகக் கருதப்பட்டு மதிப்பு மரியாதையுடன் பலவரிசைகள் பெற்று வந்திருக்கின்றனர் என்பதை நன்மைக்கும் தீமைக்குமான கும்பவரிசை பற்றிக் கூறும் கல்வெட்டுப் பாடலை நோக்கினால் புலனாகும்.

## நன்மைக்கும் தீமைக்கும் கும்பவரிசை

*சீர் பெற்றிலங்கு வுயர்வாழீழ நகர் மேவு தென்னவன் சென்னிகொங்கள்*
*தீரரென மூவரரசாண்டு வருநாளிலே திறமை நலமேவு*
*வரிசை செய்திட்டமர பெக்காலமும் பூசுரன் திறலரசன் வணி கருழவர்*
*சிறைகள் பதினெட்டுடனவர்கள் பெறுவரிசை தீர்த்திட்ட செய்தியதுகேள்.*

*பார்பெற்ற பரிதிகுல கலிங்கமரபிவோர் பதின்மூன்று கும்பமும்*
*தேங்கினுயர் பாளைதனிப்பாவாடை மேற்கட்டி தாரை தவில் குழல் வீணை பவனிபெறு பந்தலுள்ளிரண்டு நிறைகுட முயரவும் பஞ்சமலர்*
*தூலவுங் கஞ்சமலர் மேவவும் பாவாணர் பாடிவரவும் பட்டாடை*
*பதின்மூன்று கொய்து மனைமே லெறிதல் பலகிரண தீபமிடுதல்*
*ஏர் பெற்றிலங்கு நவதானியங் கொட்டுதல் பதினெட்டு வரிசை யெழுதல்*
*ஏதிருழவர் தங்களுக்கீந்த சிறை பதி னெட்டு மியல் தொண்டு செய்து வரவும்*
*இலகு வெண்குடை தவளமேவு பூபாலனென வேற்றுநரர் துதிபுரியவும்*

*ஏத்திருப்பதியாலும் முகமென முன்னீடிட்டு நன்முறைகள் முதலாய்*
*ஏற்றெவர்முன் தேசமென்று பணி செய்து வரவும்.*
*தார் பெற்றிலங்குபுவி வேளாளர் தன வணிகர் சுந்தர மரபர் தக்க கொடை யீந்து*
*மகிழ மூன்றுகுகர் முறை கூறும் சாதி சிறையாதி முதலாய்த் தக்க படியிம் முறைகள்*
*தவறாதிருத்தி முன்சாதியென ஏற்றுவரவும் இதுதவறினோர் ஏழ் நரகு*
*வீழ்வரென மலையமான் சாற்றி வைத்திட்ட திதுவே–*
*இது முறைமை தவறாது மூன்று குகமரபினோரி டுவரிசை பெறு முதன்மைகேள்.*

*ஏர்சாலி கொடுவந்த படையாட்சி குலமுடையினர் இடுகும்ப மொன்பதும்*
*இடுசீலை கொய்தெறிதலி யல் தேங்கு மலர்கள் முதல் இசைகள் தருபறை*
*மேளமொலி குரவைமேற்கட்டி இரு பந்தரெதிரிலிடுதல் முதுமை தரு முழவர்*
*சிறையெழுவர் பணிசெய்யவும் முகமலர்த்துண்டு வரவும் முறைமை தவறாது*
*நிலபாவாடை பலகிரண தீபமும் முன்கூரை முகடுதனில் முன்சொன்ன*
*பந்தலிலெந்தமலர் குவியினு முலருள்ளோர் ஏற்று வரவும் முற்கால*
*குகனென் குலமென்று மற்றுமுள்ளோர் முன்குகனென்று வரவும்*
*ஏதுகால பரியந்தும் செய்யென்று சோறுமிட்டே முதி வைத்த தருணம்.*
*எதிர் நின்ற பணிக்கர் குலம் இவ்வரிசை செய்யென்று மிடது வலமாக வரவும்*
*எஞ்ஞான்று காலமும் உழவு தொழில் புரியவும் நல்தான மீந்து வரவும்.*
*இன்பமுறுமிருது வதுவை கொண்டாட்ட முயரவுமின்றென்று மேற்று வரவும்*
*பொதுவாக வுலகினுயர் போடி குலஞ் செய்வரிசை பூம்பந்தர் பறைமேளம்*
*வெடி குரவை ஆலாத்தி புலவர்கவி பாவாடையும் புவிதேங்குமலர் மேவு கூரைமுடி*
*பன்னொன்று புதிய துயிலொன்பது கொய்தெறிதல் மேற் கட்டியும் புகழத்*
*தங்குவெள்ளார் கொண்ட சிறை பன்னிரெண்டு பொதுத் தொண்டு செய்து வரவும்*
*புவனமணி முடிகளணி புரவலன் செய்தானதே.*

*ஆன திருமரபிலுயர் வணிகர் வேளாளர் அவரவர்களுயர் வரிசைகேள்*
*ஆடலொடு பாடலும் நாகதொனி தாரை தவில் அழகெறி பந்தலெழவே*
*அட்ட திக்கோர் புகழ வரு கூரைமுடியேழு ஆடையேழ் கொய்துவளைதல்*

*ஆங்குதேங்கு மலரணைதல் வெகுபட்டபமிடுதல்.*
*தானமேழீதலோடு சிறைகள் பதினெட்டுடன் தனது தன் தொழில் புரிகுதல்*
*தம்பட்டம் வெடிகுரவை ஆலாத்தி தீவட்டி பாவாடை சங்கு தொனி மேற்கட்டியும் தானவரி பந்தரிலையிடுதலியல் தொண்டு முறை தப்பாமல்*
*செய்து வரவும் தக்கபடி மிக்கோர் பதினேழு சிறையினோடுமிவர் சாற்று தொழில் செய்து வரவும்.*

*ஞானமொடு ஏழுஞாண்டு வில்வரிசை தப்பாமல் நன்கு வரவேணுமெனவே*
*நகரிலுயர் வெள்ளாளர் தங்கள் சிறை பதினெட்டும் மூன்று முடிநன் பூக*
*மலரிடுதலும் நற்றுயில் முன்றெறிதல் மேற்கட்டி ஒன்றியது முன்னவில்*
*வரிசையில்லை யெனவே நன்கு முறையாகவே வருவரென நாடியறயென்று*
*நவில நாகநரர் தாகமெழ யேககுருவாதினோடு நடுவரெனவைத்தெழுதினார்*
*வானவர்களொப்பிடுதல் செய்முறைகள் குன்றாதவணிகர் வெள்ளாளர் மறையோர்*
*மகிழ்வுதரப் பரிதிகுல மன்னவன் நல்தீய வரிசை தீரத் திட்ட முறையே*
*மானிலந்தன்னிலே வேரொடு மரபு மாற்றினும் வருநாகு எய்வரெனவே*
*மன்னுலகில் முற்குகரென்னுகத் துயர்வரென வைத்தெழுதி யிட்ட முறையே.*

இப்பாடல்களை நோக்கும் போது இப்பிரதேசங்களில் நடை பெறும் திருமணம், மரணவீடு ஆகிய நிகழ்வுகளின் போது இம்மக்கள் தங்கள் தங்கள் குலப் பெருமைக்கேற்ப எத்தனை கும்பங்களை வைக்க முடியும் யார்யார் இவர்களுக்கு கடமை செய்ய முடியும் என்பது மிகத் தெட்டத் தெளிவாகக் காட்டப்படுகின்றது. கலிங்க குல மக்களுக்குப் பதின்மூன்று கும்ப முடிகளும் உலகிப்போடி குடி மக்களுக்கு பதினொரு கும்ப முடிகளும் படையாட்சி குலமக்களுக்கு ஒன்பது கும்ப முடிகளும் வேளாளருக்கு ஏழு கும்பமுடிகளும் ஏனைய சிறைக் குடிகளுக்கு மூன்று கும்ப முடிகளும் என்று இந் நன்மைக்கும் தீமைக்குமான கும்ப முடிக் கல்வெட்டு அவரவர் குலப் பெருமைக்கேற்ப வைக்கப்பட வேண்டு மென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அது மாத்திரமன்றி மட்டக்களப்பு மான்மிய ஆசிரியர் கூறுவது போன்று கலிங்க குலமக்களின் நன்மை தீமை நடைபெறும் வீட்டிற்கு பதினெட்டு சிறைக் குடிகளையும் வேளாளர் கொண்டு போய் விட்டு ஊழியம் செய்விக்க வேண்டும் என்றும் உலகிப் போடி குடிமக்களுக்கு பன்னிரெண்டு சிறைக் குடிகளும் படையாட்சி குடி மக்களுக்கு ஒன்பது சிறைக் குடிகளும் ஊழியம் செய்ய வேண்டுமென்று இக்கல் வெட்டு கூறுகிறது.

தற்போது இந்த முறைகள் மிகவும் அருகி விட்டது என்றே கூறவேண்டும். ஆனால் இன்றும் இக் கும்ப முடிவைக்கின்ற மரபும் ஒரிரு குலமக்கள் வந்து கடமை செய்யும் முறையும் இம்மக்கள் மத்தியில் காணப்படுகின்றது.

குடி : குடி என்ற ஒரு குறியீட்டுச் சொல் இம்மக்களிடையே அதாவது இந்த ஆலயத்தின் நிருவாக அமைப்பு முறையில் மிகவும் முக்கிய இடம் பிடித்துள்ளமையைக் காணலாம். ஔவையார் கூறும் குடியுயரக் கோனுயரும் என்பதில் வரும் குடி என்றால் மக்கள் என்ற பொருள் படாது இவ்வாலய நிர்வாகத்தோடு தொடர்புபட்ட ஒவ்வொரு வர்க்க மக்களைக் குறிக்கின்றது. குடிபற்றிக் கூறும் பின்வரும் கல்வெட்டுப் பாடலின் ஏழு குடிகள் குறிப்பிடப்பட்டு முக்குகர் இனமேழேகாண் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

*சீர்தங்கு வில்லவரும் பணிக்கனாரும் சிறந்த சட்டி கச்சிலான் தனஞ்சயன்றான்*
*கார்தங்குமாளவன் சங்கு பத்தன் கண்டகுடி முற்குகரிலேனே காணேன்*

தற்போது இப்பிரதேசத்தில் காணப்படும் குடிகளில் இந்தப் பாடலிலே குறிப்பிடப்பட்ட ஏழுகுடிகளில் சிலகுடிகள் இல்லாதிருக்கின்றன. இதனைவிட கோப்பி குடி, பெத்தான் குடி என்ற இரண்டு குல மக்கள் இவ்வாலய நிர்வாகத்திலும் இப்பிரதேசத்திலும் செல்வாக்குப் பெற்ற குடிகளாக இருக்கின்றனர். கிடைக்கப் பெறுகின்ற கல்வெட்டுப் பாடல்களில் இவ்விரு குடிகள் பற்றி தகவல் பெற முடியாதிருந்த போதும் இவர்களும் இக்குடிமக்களோடு சமமான உரிமைகள், சலுகைகளே அனுபவித்து வருகின்றனர். எனவே இவர்களுடைய வருகை இவர்கள் கல்வெட்டுப் பாடல்களில் குறிப்பிடப்படாமைக்கான காரணங்கள் ஆராய்ச்சி செய்யப்பட வேண்டியவை. தற்பொழுது இப்பிரதேசத்தில் மரணவீடுகளில் நடைபெறும் "(கடமை செய்தல்)" என்ற நிகழ்வின் போது இந்த ஏழு குடிமக்களின் பிரதி நிதிகள் இறந்தவரைக் கௌரவிக்கும் பொருட்டு கடமை செய்வதைக் காணலாம்.

இந்த நிகழ்விலே கலிங்க, உலகிப்போடி, படையாட்சி குலமக்களும் சீர்தங்கு வில்லவரும் என்ற பாடலில் கூறப்பட்ட ஏழு குடியும், கோப்பி குடி, பெத்தான் குடி மக்களும் சேர்ந்த பன்னிரெண்டு குடிகளில் சில குடிகள் இல்லாது போக நடைமுறையில் உள்ள குடிகளில் ஏழு குடிகளை அழைத்து இறந்தவர்களைக் கௌரவப்படுத்தும் நோக்கில் கடமை செய்கின்ற மரபு இன்றும் இப்பிரதேசத்தில் இருந்து வருகின்றது.


தற்போது இவ்வாலய நிர்வாக சீரமைப்பில் மூன்று குல வண்ணக்குமாரும் (கலிங்க, படையாட்சி, உலகிப் போடி) தலைவர், செயலாளர், பொருளாளராக இருக்க குடிக்கு இரண்டு பேர்களை

அங்கத்தவர்களாகத் தெரிந்து அவர்களுடன் கோயிலின் உட்கடமை புரிகின்ற மக்களிடமிருந்து இருவரையும் தெரிந்து நிர்வாகம் செயற்பட்டு வருவதையும் காணமுடிகின்றது.


கூரை முடி : கூரைமுடி என்பது இவ்வாலயத்துடன் தொடர்புடைய சகல மக்களதும் இல்லங்களில் நடை பெறும் நன்மை, தீமைகளின் போது கூரையின் மேல் வைக்கப்படும் கும்பத்தினைக் குறிக்கும். அதாவது வீட்டுக் கூரையின் முன்புறமாக சிறிய பெட்டிகளில் நெல்நிரப்பி அப்பெட்டியினுள் நிறை குடத்தை வைத்து மேற்கூறியபடி ஒவ்வொருகுல மக்களுக்கும் அவரவர் உயர்விற்கேற்ப எண்ணிக்கையில் கூடியோ குறைத்தோ வைத்து சோடனை செய்யப்படும் ஒரு முறையாகும். இன்றும் இப்பிரதேச மக்களிடம் நடைபெறும் திருமணவீடுகளிலும் மரணவீடுகளிலும் முக்கியமாக பின்பற்றப்படும் ஒரு பாரம்பரிய முறையாக இது இருந்து வருகின்றது.

குறி : இவ்வாலய கட்டுக் கோப்பிற்குள் வாழும் மக்கள் இவ்வாலய செயற்பாடுகளில் மட்டுமன்றி தமது அன்றாட வாழ்விலும் சில பாரம்பரிய பண்புகளைப் பின்பற்றுகின்றனர். உழவுத் தொழிலையும் மாடுகளைத் தமது சொத்தாகவும் பேணிவரும் இம்மக்கள் தமது சொத்தினை இனம் காண வேண்டி இடுகின்ற அடையாளமே குறி எனப்படுகின்றது. இந்தக் குறியடையாளம் கூட ஒவ்வொரு குடிமக்களுக்கும் ஒவ்வொரு அடையாளமெனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்தக் குறி அடையாளங்களைக் கொண்டே இது யாருடைய சொத்து என்பதனை அடையாளங் காண்பதற்கும் நிரூபிப்பதற்கும் முடிகின்றது. இன்றும் இப்பிரதேசத்தில் நாம் காணக்கூடிய பின்வரும் குறியடையாளங்களோடு மாட்டுப்பட்டிகள் வைத்துப் பராமரிப்பதனை அவதானிக்க முடிகின்றது.

## குடிகளும் குறியடையாளங்களும்


செங்கோலும் வாளும் – கலிக்குடி



எட்டுக்கால் – உலகிப் போடி குடி


பட்டுச்சங்கு முடியெழுத்தாணி – படையாண்ட குடி


மந்து வளையம் – பணிக்கனார் குடி


வட்டச் சக்கரம் – கச்சிலாகுடி


ஆறுகால் – கோப்பிகுடி


களிச்சங்கு காக்காக்கால் – பெத்தாங்குடி



செல்ல – சட்டிகுடி


பசும்ப தாமரைப்பூ – கோயிலார்


கைச்சங்கு – பண்டாரப்பிள்ளை


பால்முட்டி – திமிலர்


நூலச்சு – சேணியர்


தேர்க்கொடி – கோயிற்பூசகர்


கத்தரிக்கோல் – நாவிதர்


மத்து – இடையர்


பூணூல் – வேதியர்க்கு


கல்லு – வண்ணார்


செக்கு – வாணியர்


கூடை – கடையர்



மேளம் – பறையர்


கும்பகுடம் – குயவர்


குறடு – தட்டார்


கத்தி – சாணார்


தராசுபடி – செட்டிகுலத்தார்


தோணி – கரையார்


மேழி சூழி – வேளாளர்


வில்லம்பு – வேடுவர்க்கு

தொண்டுழியமுறை :

முக்குகன் அல்லது முற்குகர் என்ற மக்கள் நிர்வாகக் கடமைகளைச் செய்து வர, கோயிலின் உட்கடமை, வெளிக் கடமைகளை வேளாளரும் அவர்களோடு கூடிய ஏனைய சிறைகளும் மிகக்கட்டுக் கோப்புடனும் திறமையாகவும் செய்து வந்திருக்கின்றனர். கல்வெட்டுப் பாடல்களை நோக்கும் போது மாகோன் என்ற மன்னனே இக்கோயிலுக்கு அரன் ஊழியத்தை வகுத்துக் கொடுத்தமை தெரியவரும். உண்மையிலேயே இந்த அரன் ஊழிய ஒழுங்கு முறையைப் பார்க்கும் போது இக்கோயிலின் நடை முறைகள் மிகவும் கட்டுக் கோப்பாக இருந்தமை புலப்படும். இந்தப் பாரம்பரிய முறையை நோக்கினால் ஒவ்வொரு வர்க்க மக்களுக்கும். கடமைகள் வகுத்துக் கொடுக்கப்பட்டது மட்டுமன்றி அவர்கள் அனைவரும் இக்கோயிலின் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்தமையும், மதிக்கப்பட்டமையும் புலனாகும். இப்பதினெட்டுச் சிறைகள் பற்றிக் கூறும் பங்கு கூறல் கல்வெட்டு பின்வருமாறு கூறுகின்றது.

"கலிங்கனே உனது கட்டளைப் படியே
இலங்கை மாநகரில் ஈசராலயத்தில்
வீதி துலக்கும் வேளாளர்க் கடிமைகள் மாதுலர் கோயிலார்
வரிசைப் பண்டாரம்
குசவர் கொல்லர் கோனார் தொழுவர்
திசை புகழ் முதலி செக்கன் சாணான்
வீரங்கொல்லி வீட்டியன் பள்ளு
வாரந்தட்டி மாலை தொடுப்போன்
கடையன் துரும்பர்க்குக் காராளனீந்து"......

இந்தப் பாடலிருந்து இந்தக் கோயிலின் வெளிக்கடமை உட்கடமைகளை மேற்குறிப்பிட்ட மக்களே செய்துவர வேண்டு மென்பது கட்டாயமானதாகும்.

வேளாளர் கோயிலார் :இக்கோயிலின் உட்கடமை, வெளிக் கடமைகளைப் பொறுத்தவரையில் வேளாளர், கோயிலார் என்ற இரண்டு வர்க்க மக்களும் மிக முக்கியமானவர்களாகும். வீதி துலக்கும் வேளாளர் என்று கூறப்படுவதிலிருந்து இவர்களுடைய கடமை வெளிக்கடமை என்பது தெளிவாகும். ஆனால் கோயிலாரைப் பொறுத்தவரையில் இவ்வாலயத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் முக்கியத்துவம் மிகவும் சிறந்த தென்றே கூற வேண்டும். அரன் ஊழியத்தை வகுத்த மாகோன் "கோவசியர்" என்ற மக்களை அழைத்து அவர்களை ஏழு வர்ணமாக்கியிருக்கிறார். அதாவது

*"கண்டனோடு சருகு பில்லி கட்டப்பத்தன்*
*கருதரிய கவுத் தனுமத்திபாயன்*
*மண்டலத்தில் பொன்னாச்சி வயித்தியென்று*
*கோவசியர் மக்களிலே வருணமாக்கிப்*
*பண்டு முறை தவறாமல் ஏழு குடியாய்ப்*
*பகுத்தீசர் பணிபுரியப் பரவணியாய்*
*அண்டர் தமைச் சாட்சி வைத்துத் தத்தம் வாங்கி*
*அரனகத்து ஊழியராய் அமைத்துச் சொல்வார்."*

இப்பாடலிலே கூறப்பட்ட ஏழு பிரிவினரும் இக்கோயிலில் செய்ய வேண்டிய அகக் கடமைகள் என்ன வென்பதையும் எடுத்துக் கூறுகின்றார்.

*"சொல்லரிய விளக்கேற்றல் பூவெடுத்தல்*
*தூசகற்றல் சாணமிடல் அணி விளக்கல்*
*நல்ல மலர்மாலை கட்டல் மேளமீட்டல்*
*நற்சந்தன மரைத்திடுதல் நெல்லுக் குத்தல்*
*துல்லியமாய் வளர்ச்சிவிகை ஏந்திச் செல்லல்*
*தானிகட்டல் அமுது வைத்தல் முதன்மையாப்பான்*
*வல்லபதம் நீர் வார்த்தல் அகத்தில் தொண்டு*
*புரியுமென்று மாகோனும் வகுத்துப் பின்னும்"....*

இந்த உட்கடமை செய்கின்ற மக்களை நாம் நோக்குமிடத்து இவர்கள் செய்கின்ற இப்பணி மிகவும் புனிதமானது மட்டுமன்றி இறைவனுக்குப் பக்தி சிரத்தையோடு செய்ய வேண்டிய கடமையாகும். இறைவனோடு நெருங்கித் தொண்டு செய்யும் வாய்ப்புப் பெற்ற இம்மக்கள் ஆலயத்தில் செய்யும் உட் கடமைகளின் சிறப்புக்கருதி கோயிலார் என்று பெருமையாக அழைக்கப்பட்டிருக்க வேண்டும். தமிழ் மொழியில் காரணப் பெயர்கள் ஏற்படுவது வழக்கம். இல்லத்திலே உட்கடமைகளைச் சிறப்பாகச் செய்கின்ற பெண்ணை இல்லாள் என அழைத்தது போல இவ்விறைவனுக்குரிய கோயிலில் உட்கடமைகளைச் சிறப்பாகச் செய்தமை கருதி இவர்கள் கோயிலார் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றிருக்க வேண்டும். இவர்களைப் பொதுவாக மக்கள் இறைவனின் குழந்தைகள் என்று கூடக் கருதுகின்ற அளவுக்கு கோயிலாரின் பங்கு இவ்வாலயத்தில் இருந்து வருகிறது.

இன்று கூட இக்கோயிலின் உட்கடமைகளை நோக்குமிடத்து வேறு ஆலயங்களைவிட மாறுபட்ட ஒரு தன்மையைக் காண முடிகின்றது. இவ்விறைவனுக்குப் படைக்க சமைக்கும் அமுதுக்கு அரிசு கொடுக்கப்படாது. நெல்லே கொடுக்கப்படுகின்றது. உட்கடமை செய்யும் மக்களே இந்நெல்லைக் குற்றி அரிசியாக்கி அந்த அரிசியிலேயே அமுது செய்து வைக்கும் பண்பு இன்றும் பேணப்பட்டுவருவதை நாம் காணக் கூடியதாக இருக்கின்றது.

மேற்கூறிய விடயங்களை நோக்குகின்ற பொழுது இவ்வாலய செயற்பாடும் இவ்வாலயத்தால் கட்டுப் படுத்தப்படும் மக்களது பழக்கவழக்கமும் பண்பாடும் ஏனைய ஆலயங்களில் காணப்படுவது போலன்றி மாறுபட்டதொரு பண்பாட்டைத் தன்னகத்தே கொண்டு செயற்பட்டு வந்தமை புலனாகும். பலமாற்றங்கள் அடைந்த இந்தக்கால கட்டத்தில் கூட இப்பாரம் பரியப் பண்புகள் இன்றும் பேணப்பட்டு வரும் தன்மையை இவ்வாலய உற்சவங்களின் போதும் தேரோட்டம், திருவிழாக்களின் போதும் கண்டு கொள்ள முடிகின்றது.

இக்கட்டுரை ஆக்கத்திற்கு உதவியவை

1. *மட்டக்களப்பு மான்மியம்*
   வித்துவான் F.X.C நடராசா

2. *மாகோன் வரலாறு*
   செவி. க. தங்கேஸ்வரி B.A. (HONS)

3. *ஏட்டுப் பிரதிகள்*

4. *பெரியார்களிடம் கேட்டுத் தெரிந்தவை*

## சிவபெருமான் உருவ வருணனை

நுதலது இமையா நாட்டம்
வான் இலங்கு பிறை அன்ன விலங்குவால்வை எயிறு
எரி அகைந்தன்ன அவிர்ந்து விளங்கு புரிசடை
முதிராத் திங்களொடு சுடரும் சென்னி
யாழ் கெழ மணிமிடற்று அந்தணன்
செவ்வான் அன்ன மேனி
மார்பினஃதே மையில் நுண்ஞாண்
கொன்றைத் தாரான் மாலையன் கண்ணியன்
கையது கணிச்சி மழுவேல்
சேர்ந்தோன் உமையே
வரிகிளர் வயமான் உரிவை உடுத்தவன்
ஊர்ந்தது ஏறே

(அகநானூறு. கட வா.)

# மட்டக்களப்புப் பிரதேசத்தின் பாரம்பரிய நில உடைமை முறையும் அவற்றின் பொருளியல் வழக்காறுகளும்

குமாரவேல் தம்பையா
விரிவுரையாளர் பொருளியல்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

## அறிமுகம்

எந்த ஒரு பிரதேசத்தினதும், வழக்காறுகள், பண்பாட்டியல் அம்சங்கள் மரபுகள் பற்றி ஆய்வு செய்யும் போது அப்பிரதேசத்தில் நிலவிய, நிலவுகின்ற பொருளாதார வாழ்வியல் பண்புகள் பற்றி கவனத்திற் கொள்ள வேண்டியது அவசியமாகும். மறுபுறத்தில் ஒரு பிரதேசத்தின் பொருளியல் அம்சங்களும் அதன் கட்டமைப்புமே அப்பிரதேசத்தின் வாழ்க்கை முறை, தொழில், சமூகக் கட்டமைப்பு, சாதிமுறை, கலை, கலாசாரப் பண்புகள் என்பவற்றை தீர்மானிப்பவையாக உள்ளன. இங்கு குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தின் வன்மையும் தொன்மையும் இப் பண்புகளை மேலும் இறுக்கமுடையதாக்குகின்றன. இது தொடர்பாக மௌனகுரு பழையதும் புதியதும் என்ற தனது நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

'சமூக அமைப்பினை நிர்ணயிப்பது அச்சமூக அமைப்பின் அக்கறையாக விளங்கும் பொருளாதார வாழ்க்கை முறையே ஆகும். உற்பத்தி முறைகளையும் அதனால் ஏற்படும் உற்பத்தி உறவுகளையும் கொண்டே இச்சமூக அமைப்பு நிர்ணயிக்கப்படுகின்றது.'[1] (மௌனகுரு – 1992)

இந்த அடிப்படையில் மட்டக்களப்புப் பிரதேசத்தின் வரலாற்றையும் அதன் தொன்மை சார்ந்த மரபுகளையும் ஆய்வு செய்ய முற்படுவதனால் இப்பிரதேசம் கொண்டுள்ள நிலவுடமை முறையும் அது கொண்டுள்ள தனித்துவமான பொருளாதாரப் பண்புகளும், தவிர்க்க முடியாதவாறு எடுத்துக் காட்டப்பட வேண்டியுள்ளன. ஆயினும் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை உள்ளிட்ட வரலாறு, ஈழத்து வரலாற்றுப் பாரம்பரியத்தில் முனைப்புப் பெறாமையால் ஈழத்தமிழர்களின் பண்பாட்டின் ஒரு கூறு ஆய்வு செய்யப்படாமல் இடைவெளி மிக்கதாய் உள்ளது. இந்த வகையில் மட்டக்களப்புப் பற்றி ஆய்வு செய்தோர் பலரது பார்வையில் மட்டக்களப்பின் பாரம்பரிய நில உடைமை முறையும் அது கொண்டிருந்த உயர்ந்த பொருளாதார தனித்துவங்களும் வெளிக்கொணரப்படாமை துரதிஸ்டவசமானதே. ஏனெனில் மட்டக்களப்பின் பாரம்பரிய நிலவுடைமை முறையும் அது தமிழ்ப் பிரதேசங்களோடு ஒப்பிடுமிடத்துக் கொண்டிருந்த மானியமுறையின் வேறுபட்ட பண்புகளும் மட்டக்களப்பைத் தனித்துவமான பிரதேசமாக படம் பிடித்துக் காட்ட முற்படுகின்றன. இக்கட்டுரையானது கடந்த 500 வருடங்களாக மட்டக்களப்பின் நிலஉடைமை முறையை அடையாளம் காண முற்படுகின்றது. அத்துடன் இம்முறை இலங்கையின் ஏனைய பாரம்பரிய தமிழ் பிரதேசங்களில் இருந்து வேறுபடும் தன்மையையும் இந்நிலவுடமை முறையின் பின்னணியில் இருந்து வந்த பொருளியல் வழுக்காறுகளையும் சமூகப் பெறுமானங்களையும் கோடிட்டுக் காட்டுவதாகவும் இருக்கும்.

## பிரதேசம் பற்றிய வரலாற்றுப் பின்னணி

மிகப் பண்டைய காலம் தொட்டு (800 வருடங்கட்கு முன்) மட்டக்களப்பு பற்றிய பூர்வீக வரலாற்றைக் காட்டும் பல வாய்மொழிக் கதைகளும், கல்வெட்டுக்களும், ஏட்டுச் சுவடிகளும், தொல்பொருட் சான்றுகளும் செப்பேடுகள் மற்றும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் கால எழுத்து மூல ஆவணங்கள் மூலமும் அறியக்கிடக்கிறது. எவ்வாறாயினும் நில உடைமை தொடர்பானதும் அதனோடு தொடர்பான மானியமுறைப் பண்புகளை வெளிப்படுத்துவதிலும் மட்டக்களப்பு மான்மியம், முற்குகச் சாதி முறைமை, நாடுகாட்டு பரவணிக்கல் வெட்டு, போடிக் கல்வெட்டு, முற்குகச் சட்டம், போர்த்துக்கேய, ஒல்லாந்த கால பல்வேறுபட்ட ஆவணங்கள் ஆகியன குறிப்பிடத்தக்கவை.

மட்டக்களப்பின் பொதுவான வரலாற்றையும் குறிப்பாக நிலஉடைமை, மானியமுறை, பொருளாதாரக் கட்டமைப்பு என்பவற்றையும் கவனத்திற் கொள்ளும் போது வெளியாகும் வரலாற்று உண்மையாதெனில் மட்டக்களப்பு பல சிற்றரசர்களாலும், மன்னர்களாலும் ஆளப்பட்டு வந்துள்ளதுடன் 1803 ஆம் ஆண்டு வரை அவை தலைசாய்க்காத சுதந்திர அரசுகளாக இருந்து வந்துள்ளதை அறியமுடிகிறது. குறிப்பாகக் கண்டி ராச்சியமோ அன்றேல் போர்ததுக்கேய ஒல்லாந்த அரசுகளோ முழுமையாக அடிமைப்படுத்தாத சுதந்திர அரசுகளாக இருந்து வந்துள்ளன. வரலாற்று பாரம்பரியத்தில் நில உடைமை தொடர்பான தெளிவான பொருளாதாராகக் கட்டமைப்பு வன்னிமைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னரே உருவாவதையும் காணக் கூடியதாக உள்ளது. கல்வெட்டுக்களில் தொன்மை வாய்ந்ததாக உள்ள நாடுகாட்டு பரவணிக் கல்வெட்டு வன்னியர்கள் ஆதிக்கம் பெறுவதற்கு முன்னர் முதலிமார் ஆதிக்கம் பெற்றிருந்ததைக் காட்டுகின்றது. இது பற்றி பேராசிரியர் பத்மநாதன் மேற்படி கல்வெட்டில் இருந்து பின்வருமாறு எடுத்துக் காட்டுகின்றார்.

'பட்டங் கட்டின முதலிமார், பட்டங்கட்டாத முதலிமார், தலைமைப் போடிமார், இறைகாறப் போடிமார் போன்ற பதவிகளைப் பெற்றிருந்தோர் பலரின் பெயர்கள் இக்கல்வெட்டில் வருகின்றன. இப்பதவிகள் என்ன வகையான அதிகாரங்களையும் உரிமைகளையும் குறித்தன என்பதைப் பற்றிய ஆராய்ச்சி பிரதேச வரலாற்றை அறிந்து கொள்வதற்குத் துணை புரிகிறது.'[2] (பத்மநாதன் – 1976)

மேற்படி நாடுகாட்டுப் பரவணிக் கல்வெட்டிலேயே வன்னியர் பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன. பொதுவாகவே ஈழத்தமிழர்களது வரலாற்றில் வன்னியர்களது ஆட்சி பரந்த அளவில் இருந்ததைக் காணமுடிகின்றது. தமிழர்களது ஆட்சிப்பிரதேசங்களில் மாத்திரமன்றி சிங்களப் பிரதேசங்களில் கூட சிங்க வன்னிமைகள் இருந்தமைக்கு வரலாற்றுச் சான்றுகள் உண்டு. எவ்வாறாயினும் மாகோன் என்ற மன்னனால் இலங்கையின் வேறு தமிழ் பிரதேசங்களிலும் உருவாக்கப்பட்ட வன்னிச் சிற்றரசுகள் பல ஆங்கிலேய ஆட்சி வரை அவர்கட்கு அடிபணிந்து திறை செலுத்தி வந்தன. இந்த வகையில் திருகோணமலை வன்னிமை, மட்டக்களப்பு வன்னிமை, அடங்காப்பற்று வன்னிமை, ஆகியன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. இதில் அடங்காப்பற்று வன்னிமை பண்டாரவன்னியன் தலைமையில் அன்னியருக்கு எதிராக 1803 வரை நிலைத்து இருந்தது.

மட்டக்களப்பு வன்னிமை பற்றிய வரலாற்றுத் தகவல்கள் மட்டக்களப்பு மான்மியத்திலும், நாடுகாட்டுப் பரவணிக் கல்வெட்டிலும் கூறப்படுகின்றது. கலிங்க மாகன் இந்தியாவின் காளி கட்டத்தில் இருந்து முற்குகரை அழைத்துவந்து அவர்களின் படைத்தலைவர்களை மட்டக்களப்பின் வன்னியர்களாக நியமித்ததாக மான்மியம் கூறும் அதே வேளை நாடுகாட்டுப் பரவணிக்கல்வெட்டானது இராசபக்க முதலி சீதாவக்கையில் இருந்து ஏழு வன்னியர்களை அழைத்து அவர்கட்குரிய நிலபுலன்களும் வழங்கப்பட்டன எனவும், வேடர்களைக் கொண்டு ஏழு வெளிகளை வெட்டித் திருத்தி வன்னியர்கட்கு இராசபக்க முதலி கொடுத்ததாக மேற்படி கல்வெட்டு எடுத்தியம்புகிறது. இத்தகைய வன்னிமைகள் அன்று பாணமை தொடக்கம் ஏறாவூர் வரை இருந்ததோடு தனிச் சிற்றரசுகளாகவும் இருந்தமை கண்கூடு. குறிப்பாக பாணமை, அக்கறைப்பற்று, திருக்கோவில், சம்மாந்துறை, மண்முனை, ஏறாவூர், பொத்துவில் உட்பட்ட ஏழு வன்னிமைகள் இருந்ததையும் இதில் ஏறாவூர் வன்னிமை 1675 ஒல்லாந்தரின் இறுதிக்காலம் வரை நீடித்ததையும் ஏனைய வன்னிமைகள் சிறைப்பிடிக்கப்பட்ட போதிலும், இளஞ்சிங்க வன்னியன் தலைமையிலான சிற்றரசாக ஏறாவூர் வன்னிமை சுதந்திரமாக இயங்கி வந்தமையையும் மட்டக்களப்பு மான்மியம் காட்டுகின்றது.

வன்னிமை என்ற சிற்றரசுகள் கோலோச்சத் தொடங்கிய பின்னரே மட்டக்களப்பில் முறையான நிலபிரபுத்துவமுறை அல்லது நில மானியமுறை ஆரம்பித்தது. ஆயினும் அதற்கு முன்னர் மட்டக்களப்பின் வரலாற்றில் பழங்குடி மக்கள் வாழ்ந்ததையும் அவர்கள் நிரந்தரமாக நிலங்களைப் பயன்படுத்தக் கூடிய வகையில் தமக்கெனச் சிறிய சிறிய அரசுகளை நிறுவி வாழ்ந்ததாகவும் கூறப்படுகிறது. அரசுகளை நிறுவுவதில் ஆதிக்கச் சண்டைகள் நிகழ்ந்த போதிலும் இறுதியில் செல்வாக்கும், பலமும் மிக்க குடிகள் நிரந்தர அரசுகளை நிறுவ முற்பட்டன. இதன் வழி வந்த அரசுகளால் நீண்டகாலம் மட்டக்களப்பில் அரசோச்சிய சிற்றரசுகளாக வன்னிமைகளைக் காண முடிகின்றது. முற்குகக் குடிகள் தலைமைக் குடிகளாகவும், எழுச்சி பெற்ற அரசுகளாகவும் இப்பிரதேசத்தின் நிலவுடைமையின் தனித்துவ முறையான போடிமார் என்ற நிலப்பிரபுத்துவ அமைப்பிற்கு வழிவகுத்த முறையாகவும் இவ்வன்னிமைகளை இனங்காண முடிகின்றது.

இப்பிரதேசத்தின்பொருளாதாரக் கட்டமைப்பை நிலமானிய முறையாகப் பல ஆய்வாளர்கள் அடையாளப்படுத்துகின்றனர். அதற்குப் பிரதான காரணம் வன்னிமைகள் செழிப்புற்ற காலத்தில் இருந்து இன்றைய போடிமார் வரை பல்லாயிரக்கணக்கான நிலங்களும் அவற்றின் பாரம்பரிய வெளிப்பாடுகளுமே இப் பிரதேசத்தை தனிப்படுத்தி ஆராய உதவுவன ஆகும். அத்தகைய ஒரு முறையை ஆரம்பித்து வைப்பதில் மாகோன் என்ற மன்னனும் அவன் வழிவந்த வன்னிமைகளும் பிரதானமானவையாகும். இவை மட்டக்களப்பின் நிலமானிய அமைப்பினைக் கட்டிக் காக்கவும் அதன் மூலமாக இறுக்கமானதொரு சமூக அமைப்பை நிறுவுவதிலும் ஒவ்வொருவரும் தனித்துவமாக வாழத்தக்க வகையிலும் மாகோன் வழிசமைத்ததை மட்டக்களப்பு மான்மியம் விதந்துரைக்கின்றது. வன்னிமைகள் சிறப்புற்று இருந்த காலத்திலேயே மட்டக்களப்பில் இன்று நிலைபெற்று விளங்கும் குடிமரபுகளும், சாதி முறையும் படிப்படியாக வளர்ச்சியடையத் தொடங்கின. இவற்றின் பின்னணியிலும் நில உடைமையே பிரதானமான காரணியாக இருந்து வந்துள்ளது.

## போடி முறையின் தோற்றமும் வளர்ச்சியும்

மட்டக்களப்பின் பொதுவான பாரம்பரிய வரலாற்றிலும், சிறப்பான நிலமானிய முறை நடவடிக்கைகளிலும் போடிமார் பற்றிய தகவல்களும் நிகழ்வுகளும் தவிர்க்க முடியாதவையாகும். இந்த வகையில் இவர்கள் பற்றி அறிவதற்கு போடிக்கல்வெட்டு பிரதான ஆதாரமாகக் காணப்படுகின்றது. போடி என்பது மலையாளத்தில் இருந்து மட்டக்களப்பிற்கு கொண்டுவரப்பட்ட ஒரு முறையாகும். இது அவர்கட்கே உரிய ஒரு கௌரவ பட்டம் எனவும் போக்தா என்ற மலையாளச் சொல் நிலச் சொந்தக்காரர், உடைமையாளர், அனுபவிப்பவர் என்ற பொருளில் பயன்படுத்தப்படுவதாகவும் கலாநிதி. ஆ. வேலுப்பிள்ளை குறிப்பிடுகின்றார்.[3] (வேலுப்பிள்ளை 1993)

மட்டக்களப்பு பற்றிய வரலாற்றுச் சான்றுகளின்படி போடி என்ற வழக்கமுறையை ஒரு சாதிக்கோ, அன்றேல் குலமரபிற்கோ உரித்தான ஒன்றாகக் கருத முடியாத அளவிற்கு நீண்டதொரு காலப்பகுதியில் இப்பிரதேசத்தின் சிறப்பான வழக்காறுகளுடனும் குலமரபுகளுடனும் பொருளாதாரக் கட்டமைப்புடனும் இறுக்கமாக பின்னிப் பிணைந்துள்ளது. மட்டக்களப்பு மான்மியம் பற்றிய ஆராய்ச்சி நூல் ஒன்று போடியார் என்பதைப் பின்வருமாறு விளக்க முற்படுகின்றது.

'போஷி' என்னும் வடமொழிச் சொல்லின் பேச்சு வழக்கு உழவர், பெருமக்கள், குடிமக்களைத் துணைகொண்டு, உழுது வேளாண்மை செய்து தம்மையும் பிறரையும் போஷித்துத் தலைமை பெற்று வாழ்ந்தவர்கள். பிற்காலத்திய மானிய அரசில் போடி ஒரு பட்டமாக நிலப்பிரபுக்களுக்கு வழங்கப்பட்டது. மலையாள நாட்டில் முற்குகர்களின் தலைவர்கட்கு இப்பட்டம் வழங்கப்பட்டதாகத் தெரிகின்றது. மட்டக்களப்புப் பிரதேசத்தில் இப்பட்டத்தைக் கொண்டோர் அதிக நிலபுலன்களையும், மந்தைகளையும் வைத்திருந்தனர். போடிக்கல்வெட்டு மண்முனைப் பற்றிற்கும், தென்பகுதிக்கும் ஒல்லாந்தர் போடிமாரை நியமித்தமை பற்றி விபரிக்கின்றது.[4] (தனபாக்கியம் – 1993)

போடிமுறை வன்னிமைகள் அழிவுறத் தொடங்கிய பின்னர் தோற்றம் பெற்றிருக்கலாம் என்பது பல வரலாற்று நூல்களில் காணப்படும் ஊகங்களாக உள்ளன. எவ்வாறாயினும் வன்னிமைகளால் கட்டிக்காக்கப்பட்ட நிலபுலன்களை உடைமை ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் கட்டிக் காக்கும் பொறுப்பு போடிகளது கைக்கு மாற்றப்பட்டுள்ளதை ஒல்லாந்தர் காலத்தின் பல சான்றுகள் நிலை நிறுத்துவதாய் உள்ளன. குறிப்பாக போர்த்துக்கேயர் காலத்தில் போடிமார் பற்றியும் அவர்களது அதிகாரம் பற்றியும் தகவல்கள் போதுமானதாக இல்லை. அதற்கு ஒரு காரணமாக போர்த்துக்கேயர் ஆட்சியில் முழுமையாக மட்டக்களப்பை அவர்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முடியாமல் இருந்ததுடன் இங்கு காணப்பட்ட வன்னிமைகளாகிய சிற்றரசுகள், சுதந்திர அரசுகளாகவும் தம்மளவில் பலம் பொருந்திய அரசுகளாகவும் காணப்பட்டன. ஆனால் ஒல்லாந்தர் காலத்தில் போடிமார் நில உடைமைக்காரர்களாகவும் நிர்வாக அதிகாரம் படைத்தவர்களாகவும் காணப்பட்டதோடு முறைப்படுத்தப்பட்ட அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு நிலமானிய அமைப்பு ஒன்றும் தோற்றம் பெற்றதையும் காணக்கூடியதாக உள்ளது. ஒல்லாந்தர் கால போடிமார் பற்றிய பரந்த அடிப்படையிலான தகவல்களைத் தருவதால் போடிக் கல்வெட்டு பிரதான இடத்தைப் பெறுகின்றது. போடிக் கல்வெட்டுப் பற்றி சரியான காலப்பிரிவு இல்லாவிடினும் கூட இது மண்முனைப்பற்றிற்குத் தலைமைப் போடியாக அறுமக்குட்டிப் போடி 1766 இல் நியமிக்கப்பட்டது என்ற தகவல் ஒல்லாந்தர் காலம் என்பதை தெளிவுபடுத்துகின்றது. இதனை த. சிவராம் தனது கட்டுரை ஒன்றில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

'அறுமக்குட்டிப்போடி மண்முனைப் பகுதிக்கு தலைமைப் போடியாக நியமிக்கப்பட்டதும், அதற்குரிய பொருத்தனை எழுதியதும் போடிக்கல் வெட்டில் கூறப்படுகின்றது. அறுமக்குட்டி நியமிக்கப்பட்டது 1766 இல் ஆகும். இவ்வாண்டிலேயே கண்டி மன்னனுடன் ஒல்லாந்தர் இலங்கையின் கரையோரங்கள் பற்றிய ஒரு உடன்படிக்கையை மேற்கொண்டனர். இதன்படி மட்டக்களப்பு பரிபாலனத்தின் முழுப்பொறுப்பும் ஒல்லாந்தர் வசமாயிற்று. ஒல்லாந்தர் காலத்தில் நடைபெற்ற அறுமக்குட்டிப் போடியின் நியமனம் பற்றி எடுத்துக் கூறி அவருடைய காலிங்க குல மரபில் வந்தவன் நான் என ஒருவன் எடுத்துக் கூற அவனை ஆட்சியாளர் வன்னிமையாய் வைத்தனர் எனக்கல்வெட்டு கூறுகின்றது.'5 (த. சிவராம் – 1993)

இவ்வாறு ஒல்லாந்தர்களால் வகுக்கப்பட்ட போடிமரபும் அவர்கட்கான குடி, சாதிமரபும் ஒல்லாந்தர்கட்குப் பின் ஆங்கிலேயர் காலத்திலும் மாற்றமின்றி பின்பற்றப்பட்டுள்ளது.

### சாதியும் குடியும்:

மட்டக்களப்பின் நில உடைமைவாதிகளான போடிமார் மரபு பெரும்பாலும் முக்குக சாதியைப் பின்பற்றியதாகவே காணப்படுகின்றது. இதனால் மட்டக்களப்பின் நிலவுடமையில் அவ்வப்போது குடியும், சாதியும் குறிப்பிடத்தக்க பங்கு பற்றியிருப்பதைக் காண முடிகின்றது. பொதுவாக இலங்கையில் உள்ள தமிழர்களிடையே சாதிமுறையும் அது தொடர்பான வழமைகளும் அவர்களது சமூகக் கட்டமைப்பையும் பொருளாதாரக் கட்டமைப்பையும் தீர்மானிப்பவையாக இருந்தன. இந்த அடிப்படையில் மட்டக்களிப்பில் பெரும்பாலானதாகவும் பொதுவானதுமாக முற்குக வழமைகள் பின்பற்றப்படுகின்றன.

மட்டக்களப்பில் முற்குகர் சாதியமைப்பையும் குடியமைப்பையும் நிலைநிறுத்துவதற்கு முன் குழுக்களாகவும் பின்னர் குலமரபின் அடிப்படையிலும் தமது சமூக, பொருளாதாரக் கட்டமைப்பை வகுத்து இருந்தனர். பின்னர் இக்குல மரபைப் பின்பற்றியே சாதிகளும், குடிகளும் வகுக்கப்பட்டன. இலங்கையில் முற்குகக் குடிகள் புத்தளத்திலும், மட்டக்களப்பிலும் அதிகம், காணப்படுவதாக உள்ளது. மலையாளத்திலும், இலங்கையின் தமிழ்ப் பகுதிகளிலும் முற்குகர் நீண்டகாலமாக வாழ்ந்து வந்தமையை வரலாற்று ஆதாரங்கள் காட்டுகின்றன. ஆயினும் மரபுகள், வழமைகள், சாதியின் முதன்மை நிலை என்பவற்றைப் பொறுத்தவரை முற்குக சாதியமைப்பு மட்டக்களப்பு வாழ் தமிழர்களிடையே தனித்துவம் பெற்று இருந்ததைக் காண முடிகின்றது. மேலும் முற்குகத் தலைவர்களே மட்டக்களப்பின் நிலவுடைமை முறையிலும், அரசியலிலும் பலநூறு ஆண்டுகள் தொடக்கம் இன்று வரை ஆதிக்கம் செலுத்தி வருவதைக் காண முடிகின்றது. இது பற்றி கலாநிதி சி. பத்மநாதன் அவர்கள் 'முற்குகன் சாதி வளமை' என்ற தனது கட்டுரையில்.

'கிழக்கு மாகாணத்திலே நிலமும், வேளாண்மையும் முற்குகரின் வாழ்க்கைக்கு ஆதாரமாகியுள்ளன எனக்குறிப்பிடுகின்றார்.'[6]

இக்காலப்பகுதியில் மட்டக்களப்பில் முற்குகர், வெள்ளாளர் ஆகியோரிடையே பல்வேறுபட்ட குடிமரபுகள் வழங்கி வந்தன. அவற்றில் முற்குகரிடையே நிலவிய காலிங்க குடி, படையாட்சி குடி, உலகிப்போடி குடி ஆகிய மூன்று குடிகளுமே மிக உயர்ந்த சாதிகளாகவும், சிறந்த குடிகளாகவும் கருதப்பட்டன. இதுபற்றி

மகேஸ்வரலிங்கம் அவர்கள் தனது கட்டுரை ஒன்றில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

'கலிங்க மன்னருக்கு மிக நெருங்கியோராய் பணிபுரிந்தோரின் சந்ததியார் பிற்காலத்தே காலிங்க குடி முற்குகர் எனவும் படைத்தலைவர் போன்று பணி புரிந்தோரின் சந்ததியார் படையாட்சி குடி முற்குகர் எனவும் அழைக்கப்பட்டனர். மண்முனை என்ற சிற்றரசினை அமைத்து ஆண்ட உலகநாச்சி என்பவரால் ஒரிசாவில் இருந்து கொண்டு வரப்பட்டோரே பிற்காலத்தில் உலகநாச்சி குடி அல்லது உலகிப்போடி குடி முற்குகர் எனப்பட்டனர். இக்குடிப்பிரிவின் மூவருக்கும் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் கோவில் பரிபாலனம் சொந்தமாய் இருந்து வருகின்றது. இம்மூன்று குடிப்பிரிவுகளிலும் இருந்து பதவி பெறும் வண்ணக்கர்மார் ஆயுள் முழுவதும் பதவியில் இருப்பர். இவர்களின் பொறுப்புக்கள் கலிங்க குடி தலைமைப்பதவிக்கும் உலகிப்போடி பொருளாதார அலுவல்களுக்கும் படையாண்ட குடி நிர்வாக அலுவல்களுக்கும் பொறுப்பாக இருந்து வருகின்றனர்'' (மகேஸ்வரலிங்கம் – 1976)

இன்றுவரை இம்முறைகள் சிறிதும் பிறழாது இம்மரபுகள் பின்பற்றப்படுவதுடன் கோவில் நிலஉடைமை தொடர்பாகவும் மட்டக்களப்பின் நிலஉடைமை அடிப்படையிலும் இம்மூன்று முற்குகக் குடிகளுமே முதனிலை பெறுவதைக் காணமுடிகின்றது. மட்டக்களப்பில் முற்குகர், வேளாளர், சங்கமர் ஆகிய மூன்று குடிகளும் உயர் குடியினராகவும் 65 வீதமான அளவினராகவும் காணப்படுகின்றனர். ஆயினும் இவர்களில் முற்குகரே பெரும்பான்மையினராக இருப்பதோடு நீண்டகாலம் குறுநில அரசுகளாக இருந்த வன்னிமைகளின் வாரிசுகளாகவும் காணப்படுகின்றனர். மட்டக்களப்பில் காணப்படும் நிலஉடைமை முறையும், போடி முறையும் இவர்களிடையே வழக்காறு பிசகாது கடைப்பிடிக்கப்படுவதையும் காணக் கூடியதாக உள்ளது. முற்குகர் தம்மை முதன்மைச் சாதியினராக மூன்று பண்புகளின் அடிப்படையில் முதன்மைப்படுத்துகின்றனர்.

1. முற்குகர்க்கென தனி மரபும் சட்டமும் காணப்படுவது
2. நிலவுடமையில் பரவலாக முற்குகரே ஆதிக்கம் கொண்டுள்ளமை
3. தேசத்துக் கோவில் என அழைக்கப்படும் கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரர், சித்திரவேலாயுத சுவாமி கோவில் ஆகியன இவர்களால் பராமரிக்கப்படுவது.

இது தொடர்பாக பண்டைய ஏடு ஒன்றில் உள்ள குறிப்பானது பின்வருமாறு காட்டுகின்றது.

பழுகாமம் போன்ற பிரதேசங்களில் அத்தியா குடியில் வந்த வேளாளர் குடியேறியுள்ளனர். இவர்களிடையே போடி மரபு இல்லை. அத்துடன் இவ்வேளாளர்கள் நீண்ட காலமாக கொக்கட்டிச்சோலை கோவிலில் சுவாமியை தூக்கி ஊர் சுற்றும் உரிமையைக் கொண்டிருந்தனர். இவர்களது சேவைக்காக அன்றைய கலிங்க குடிகளைச் சேர்ந்த கதிர்காமப் போடி என்ற தலைமை வண்ணக்கரால் 60 ஏக்கர் பூமி இவர்களுக்கு வழங்கப்பட்டது. பின்னர் கோவில் பிரச்சனை காரணமாக பூமியைத் திருப்பி வழங்காது தம்வசப்படுத்தினர் என அத்தகவல் தெரிவிக்கின்றது.

இதன் வழியான வாய்மொழித் தகவல் ஒன்று முற்குகர் எந்த ஒரு சாதியிலும் ஊழியம் செய்வதாக இல்லை என்றும் பெரும்பாலான சாதிகளின் பராமரிப்பும் அவர்கட்கான ஊழியமும் முற்குகர்களாலேயே வழங்கப்பட்டன எனவும் குறிப்பிடுகின்றது.

மட்டக்களப்பின் பொதுவான சாதியமைப்பு தமிழ் சாதியமைப்பை ஒத்ததாக இருந்த போதிலும் யாழ்ப்பாண சாதியமைப்பைப் போன்று அடக்கு முறை கொண்டதாகவோ அன்றேல் அதிகளவு இறுக்கத் தன்மை கொண்டதாகவோ காணப்படவில்லை. கிழக்கிலும் வன்னியிலும் தமிழரிடையே இத்தகைய சாதிகுலத் தன்மை குறைவாக இருப்பதற்கு நிலப்பகிர்வையும், நிலஉடைமையையும் ஒரு காரணமாகக் குறிப்பிடலாம். யாழ்ப்பாணத்தில் நிலஉடைமை கோவில் என்பன பெரும்பான்மையான வெள்ளாள சாதியின் கீழ் காணப்படும் போது வன்னியிலும் கிழக்கு மாகாணத்திலும் இத்தகைய உடைமை முறை எல்லாச் சாதியினரிடமும் காணப்பட்டுள்ளது. குறிப்பாக மட்டக்களப்பில் நிலமும் மூலவளங்களும் வெவ்வேறு சாதியின் மத்தியிலும் பகிரப்பட்டுள்ளதுடன் இம்மாவட்டத்தின் பல கிராமங்களில் நில உடைமையாளர்களும், நிலமற்ற விவசாயக் குடிகளும் ஒரே சாதியைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். மட்டக்களப்பில் சாதியமைப்பைத் தீர்மானிப்பதில் அரசியல் தலைமைத்துவம், நில உடைமை என்பவற்றிகுப் புறம்பாக மதம் செல்வாக்கு மிக்க காரணியாக விளங்குகின்றது.

## முற்குகச் சட்டமும் நில உடைமையும்

இலங்கை வாழ் தமிழரிடையே தேச வழமைகள் அவர்கட்கான பொதுவான சட்ட முறை என ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அவை யாழ்ப்பாணத்து தேசவழமை, வன்னி தேச வழமை, மட்டக்களப்பு தேச வழமை என தனித்தனியே காட்ட முற்பட்ட போதிலும் பொதுவான பல பண்புகளையும் கொண்டுள்ளது. ஆனால் ஒரு சாதியின் பெயரால் வழங்கும் முறையாக உள்ள சிறப்பும், பெருமையும் மட்டக்களப்பில் நிலவி வரும் முற்குகச் சட்டத்திற்கு உண்டு. இந்த மரபு வழி அல்லது வழமை அடிப்படையில் வழங்கி வரும் நடைமுறைகளில் நிலஉடைமை தொடர்பான வரையறைகளே அதிகம் செல்வாக்கு வாய்ந்தவைகளாக் காணப்படுகின்றன. இது தொடர்பாக குறிப்பிடும் மட்டக்களப்பு மான்மியம்.

'முற்குகச் சட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தின் சாதியமைப்பையும், முற்குக மேலாதிக்கத்தையும் காட்டுகின்றது. மாவட்டத்தில் உள்ள திருப்படைக்

> கோவில்கள் அனைத்திலும் பராமரிப்பு உரிமை முற்குகர்களிடமே காணப்பட்டது. மன்னர்களின் மதிப்பும், மானியமும், சீர்வரிசையும் பெற்ற கோவில்கள் திருப்படைக் கோவில்கள் எனப்பட்டன.'[8]

ஆரம்பத்தில் முற்குகச் சட்டங்கள் பொருளாதார சமூக கலாசார பண்பாட்டு வழமைகள் பற்றி வலியுறுத்திய போதும் காலப்போக்கில் அது சொத்துடமை, நிலஉடைமை, சொத்துமாற்றம் என்பனவற்றையே அதிகம் வலியுறுத்துவதாய் உள்ளது. குறிப்பாக சீதனம் கொடுக்கிறவகை, காணி பூமி என்பன ஆட்சிப்படும் விதங்கள், நன்கொடை வகை, காணி ஒற்றி பிடிக்கும் வகை, வட்டிக்குப் பணம் கொடுக்கும் வகை, கொள்வனவு விற்பனை வகை போன்றன தெளிவாகவும் விரிவாகவும் கூறப்படுகின்றன.

இச்சட்டத்தின் பிரகாரம் பெண்வழி முதுசம் என்பதே பிரதானமாகப் பின்பற்றப்பட்டது. முற்குகர் சட்டத்தின் பிரகாரம் சொத்துடமைகள் 'சோம்' என்றும், தாய்வழிச் சொத்துக்கள் 'முதுசம்' எனவும் அழைக்கப்பட்டது. சொத்துக்களைப் பராமரிப்பதிலும் மாற்றிக் கொடுப்பதிலும் பெண்வழி உரிமையே பின்பற்றப்பட்டது. உதாரணமாக பாட்டியின் நில உடைமை, சொத்துடமை என்பன அவரது மகளுக்கு சோம் ஆக அமையும். ஆனால் பாட்டியின் பேத்திக்கு (மகளின் மகளுக்கு) முதுசம் என வழங்கப்படும். பேத்தியின் மகள் (நான்காம் தலைமுறையில்) அதனை மூதாக்கள் முதுசம் என அழைப்பர். இங்கு நேரடியாகத் தாய்வழியாக வரும் போது மாதாக்கள் முதுசம் என அழைக்கப்பட்டு நான்கு ஐந்து தலைமுறைமாற்றத்தின் பின் அவை மூதாக்கள் முதுசம் என அழைக்கப்படுகிறது. முற்குகச் சட்டத்தில் தந்தையினால் சேகரிக்கப்பட்ட சொத்துடைமைகள் நான்கு ஐந்து தலைமுறையின் பின்னரும் கூட தாதாக்கள் சோம் என்றே அழைக்கப்படுகின்றதே தவிர அது முதுசம் என அழைக்கப்படுவதில்லை.

நில உடைமை தொடர்பான பராமரிப்புப் பலன்களும், மாற்றமும் பெண்வழி உரிமையே பின்பற்றபட்டதுடன் இன்றும் பின்பற்றப்பட்டு வருகின்றது. போடியார் உடைமை முறையின் கீழ் அவர் இல்லாத பட்சத்தில் அவரது நில உடைமையைப் பராமரிக்கும் பொறுப்பு அவரது மூத்த மகனைச் சேரும். அவ்வாறு ஆண் சகோதரம் பொறுப்பேற்ற பின்னர் அந்நிலத்தை பராமரிப்புச் செய்து தனது பெண் சகோதரர்கட்கு அவற்றைப் பகிர்ந்து கொடுக்க வேண்டும். அவ்வாறு பராமரிக்கும் ஆண் சகோதரர் வசதி குறைந்தவராக இருந்தால் மாத்திரமே பராமரிப்புச் செலவுகளை பெற முடிந்தது. இதனை மான்மியத்தின் ஒரு பகுதி பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

ஒரு தலைமைக்காரனுக்கு இராசாக்களாலே கிடைத்திருக்கின்ற உறுதி ஒப்பந்தங்களும், முதுசமான காணி உடைமைகளும் அந்தத் தலைமைக்காரனுக்குப் பிற்காலம் அவன் சகோதரங்களுக்கும் மருமக்களுக்கும் அவன் தாய் வழிச் சனத்திற்கும் சேரும். அவன் தானாகத் தேடிய சோம்கள் அவன் பெற்ற பிள்ளைக்குச் சேரும். அவன் சீதனம் பெற்ற சோம்களிருந்தால் அவன் பிள்ளைகளுக்குச் சேரும். அவன் பிள்ளைகள் இல்லாமல் இருந்தால் அவன் முதுசமாகக் கொண்டுவரப்பட்ட சோம்கள் அவன் சகோதரத்திற்கும் மருமக்களுக்கும் சேரும். அவன் பெற்றிருந்த சீதனமான சோம்கள் அவன் பெண் சாதி வழிச் சனத்திற்குச் சேரும். அவனால் தேடப்பட்ட சோம்களிருந்தால் அவன் வழிச் சனமும் அவன் பெண்சாதி வழிச் சனமும் சரிபங்காகப் பிரித்தெடுத்துக் கொள்கிறது.

முற்குகச் சட்டங்களின் மரபு பேண் வழிமுறை இன்றுவரை பல இடங்களில் சற்றும் பிறழாத வகையில் பின்பற்றப்படுவதைக் காண முடிகின்றது. அவற்றால் பெருமளவு பெண்ணின் தனித்துவத் தன்மை பேணப்படுவதையும், பெண்ணின் பாதுகாப்பு முன்னிலைப்படுத்தப்படுவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதுபற்றி சித்திரலேகா மௌனகுரு அவர்கள் தனது கட்டுரையொன்றில்,

> 'மட்டக்களப்பு சமூக அமைப்பின் இன்னொரு முக்கிய அம்சம் குடிமரபு, கோவில் உரிமை, சொத்துக்கள் ஆகியவை பெண்வழியாகத் தொடர்ந்து செல்லுதல் ஆகும். இவ்வகையில் பெண்வழிச் சமூக அமைப்பின் அம்சங்களை இங்கு தெளிவாகக் காணலாம். கணவன் மனைவியின் வீட்டில் வதியும் பெண்வழி வதிதலும் இங்கு நடைமுறையில் உண்டு.'[9]

முற்குகச் சட்டம் தனது செல்வாக்கை நிலைக்க வைத்திருப்பதற்கு இன்று வரை மட்டக்களப்பில் காணப்படும் நில உடைமை முறையும் அது தன்னகத்தே கொண்டுள்ள போடியமைப்பும் இவற்றின் திரட்சியான மானியமுறையும் பின்பற்றப்படுவதே காரணமாகும். மட்டக்களப்பின் தனித்துவமான முற்குகச் சட்டம் பலகாலங்கட்கு முன் திருகோணமலை, அம்பாறை, போன்ற கிழக்கின் ஏனைய பகுதிகளிலும் தனித்துவமான தேசவழமைச் சட்டமாக இருந்தமையை பிரபல சட்ட அறிஞரான எச். டபிள்யு. தம்பையா அவர்கள் தமது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

### நிலப்பயன்பாட்டில் - ஊழியமுறை:

மட்டக்களப்பின் நில உடைமையும் அதன் மானியமுறை அமைப்பும் எவ்வாறு ஏனைய தமிழ் பிரதேசங்களில் இருந்து வேறுபட்ட வகையில் அமைந்துள்ளனவோ அதே போன்று நிலத்தின் பிரதான செயற்பாட்டுக் காரணியான ஊழியமும் அதன் பயன்படுத்தல் முறையும் வேறுபட்டதாகவே காணப்படுகின்றது. மட்டக்களப்பின் நிலப்பயன்பாடு முழுவதும் நெல் விவசாயத்தையும் அதன் சுய நிறைவையும் அடியொற்றியதாகவே இருந்தது. இங்கு பயன்படுத்தப்பட்ட ஊழிய முறை மானிய முறையை ஒத்ததன்மை வாய்ந்தவைகளாகவே செயற்பட்ட போதிலும் போடியார் அமைப்பு முறையின் கீழ் ஊழியக்குடிகள் என்ற அடிப்படையிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய ஊழியக்குடிகள் ஒரு போடியாரின் கீழ் விவசாய ஊழியக் குடிகள், கோவில் ஊழியக்

குடிகள், வேறுவகையான ஊழியக் குடிகள் என இனம் காணக் கூடியவாறு பிரிக்கப்பட்டு இருந்தது. விவசாயத்திற்கென போடிமார் ஊழிக் குடிகளைத் தெரிவு செய்தபோது தமது முற்குக இனத்தைச் சேர்ந்த வசதி குறைந்தவர்களையே பயன்படுத்தி வந்தனர். ஆனால், கோவிற் பராமரிப்பின் பொருட்டும் அதன் செயற்பாடுகளைப் பொறுத்தும் வெவ்வேறு குடிகளைச் சேர்ந்தவர்களை ஊழியத்திற்கு பயன்படுத்தியுள்ளதைக் காண முடியும். உதாரணமாக பழுகாமத்தில் வேளாளர் இனத்தைச் சேர்ந்த அத்தியா குடியினரே கொக்கட்டிச்சோலை கோவில் சாமியை தூக்கிச் செல்வதற்கு பயன்படுத்தப்பட்டனர். இவற்றைத்தவிர போடியாரின் குடும்பத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வெவ்வேறு வகையான சாதியைச் சேர்ந்தவர்கள் பயன்படுத்தப்பட்டனர். இவர்களில் வண்ணார் (ஈரங்கொல்லியர்) நாவிதர், பறையர் போன்றோரும் பண்டார இனத்தைச் சேர்ந்தவர்களில் குருத்துக் கட்டிப் பண்டாரம், எச்சில் கல்லைத்தூக்கிப் பண்டாரம் என்ற அடிப்படையிலும் பயன்படுத்தப்பட்டனர்.

இத்தகைய ஊழிய முறைக்கு கூலி வழங்கிய முறையும் வேறுபட்டதாகவே இருந்து வந்துள்ளது. நிலப்பயன்பாட்டுக்கு பயன்படுத்தப்படும் ஊழியத்தைப் பொறுத்தவரையில் காணி உரிமையாளர்களாகிய போடிமார் வட்டை என்றழைக்கப்படும் (ஒரு வட்டை 500 ஏக்கர் தொடக்கம் 1100 ஏக்கர் வரை) பாந்த நிலஉடைமையில் வெவ்வேறு வகையான உழவர் குழுக்களை நியமிப்பர். அவர்களுள் அனுபவமும் ஆற்றலும்உடைய ஒருவன் முல்லைக்காரன் என அழைக்கப்படுவான். (முன்னிலைக்காரன் என்பது திரிந்து நாளடைவில் முல்லைக்காரனாக மாறியது). இம்முல்லைக்காரன் விவசாய வேலைகள் முழுவதற்கும் பொறுப்புள்ளவனாக இருப்பான். இங்கு நிர்ணயிக்கப்பட்ட வயலின் அளவு 10 ஏக்கர் என கருதிக் கொண்டால் இவ்வளவிற்கு இரண்டு சோடி மாடும் (இரண்டு புணையல்) ஒரு முல்லைக்காரனும் இரண்டு ஊழியமும் பயன்படுத்தப்படுவர். இங்கு தேவையான மாடுகள் போடியாருக்குச் சொந்தமான பண்ணையிலிருந்து வழங்கப்படும். இந்த விவசாய ஊழியக் குடிகளுககு ஊதியமாக ஆரம்பத்தில் நெல்லு வழங்கப்பட்டது. 10 அல்லது 15 நாட்களுக்கு ஒரு முறை இவர்கட்கான ஊதியம் வழங்கப்பட்டது. அது படி என அழைக்கப்பட்டது. இது தவிர கோவில் காலங்களிலும் ஏனைய விசேட காலங்களிலும் விசேட படியும் வழங்கப்பட்டு வந்தது. இவற்றைத் தவிர முல்லைக்காரருக்குப் படி அதிகளவு வழங்கப்பட்டதுடன் அவர்கட்கெனத் தமது காணியில் செய்கை பண்ணுதற்கான உரிமையும் வழங்கப்பட்டு இருந்தது.

போடிமார் வேறுவகையான ஊழியம் செய்தவர்கட்கு (வண்ணார், நாவிதர், பறையர் ஆகியோருக்கு) அவர்களது தேவையினைப் பொறுத்து நிலங்கள் சொந்தமாக வழங்கியிருந்தனர். இவர்கட்கு மாதப்படி வழங்கப்படவில்லை. அவர்கள் தமக்கு வழங்கப்பட்ட நிலத்தைப் பயன்படுத்துவதன் மூலம் தமது வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தனர். ஆனால் போடியார் அல்லாதோர் இவர்கட்கு வருடப்படி வழங்கி வந்தனர். இந்த ஒரு நடவடிக்கையானது ஆரம்பகால மானியமுறையைப் போன்றோ அல்லது யாழ்ப்பாணத்து மானிய சமூக அமைப்பில் காணப்பட்டதைப் போன்றோ அடிமை முறைக்கு வழிவகுக்காததுடன் சாதிக்கட்டுப்பாடுகள் தீவிரத்தன்மையை அடையாமலும் இறுக்கத் தன்மை பேணப்படாமலும் இருந்தமைக்கும் காரணமாக இருந்தது. இது பற்றி வ.ஐ.ச. ஜெயபாலன் தனது கட்டுரை ஒன்றில்

> 'மட்டக்களப்பின் சாதியமைப்பு தமிழ் சாதியமைப்பை அடிப்படையாகக் கொண்டதாக இருந்த போதிலும், யாழ்ப்பாண அமைப்பிற்கு ஒத்ததாக இருக்கவில்லை. யாழ்ப்பாண சாதியமைப்பின் உள்ளார்ந்த ஒடுக்கு முறையின் கூறுகள் கிழக்கு மாகாண வன்னி மை சாதியமைப்புகளில் காணப்படவில்லை. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை பெரும்பாலான நிலமூலவளங்கள் வெள்ளாள சாதியினரின் தனிப்பட்ட உடைமையாக இருந்ததுடன் மட்டக்களப்பில் போன்று அது ஊழியத்திடையே பகிரப்பட்டும் இருக்கவில்லை. கலாசார ரீதியிலும் யாழ்ப்பாணத்தில் வெள்ளாள சாதியினரே ஆதிக்கம் செலுத்தி வந்தனர். குறிப்பாக முக்கியமான கோவில்களும் இவர்களது கட்டுப்பாட்டின் கீழேயே இருந்து வந்தது. யாழ்ப்பாணத்துக் கிராமங்கள் பல சாதியினரைக் கொண்ட கிராமங்களாக இருந்ததுடன் பொருளாதார ரீதியிலும் எண்ணிக்கை அடிப்படையிலும் வெள்ளாளர்களால் கட்டுப்படுத்தப்பட்டும் வந்தன. ஆனால் மட்டக்களப்பில் நிலமும் மூலவளங்களும் பல்வேறு சாதியினரிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான கிராமங்களில் நில உடைமையாளர்களும் நிலமற்ற விவசாய குடிகளும் ஒரு சாதியைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.'[10] (ஜெயபாலன் – 1991)

மட்டக்களப்பின் போடியார் முறையில் தோற்றுவிக்கப்பட்ட கோவில் ஊழியக் குடிகளும் நில உடைமையுடன் பிணைக்கப்பட்டவர்களாகவே இருந்து வந்துள்ளனர். இத்தகைய கோவில் ஊழியத்தில் சங்கமர் என அழைக்கப்பட்ட பூசகர்கட்கு (இது மட்டக்களப்பின் பாரம்பரிய பழைய கோவில்களின் முறையாகும்) போடிமார் அவர்களது தேவையின் பொருட்டு காணிகளை உடைமையாக வழங்கினர். இவ்வாறு இவர்கட்கு வழங்கப்பட்ட நிலங்கள் போடிமாரால் கோவில்கட்கான நன்கொடையாக வழங்கப்பட்ட நிலங்களுக்கு மேலதிகமாக வழங்கப்பட்டதாகும். கோவில்கட்கு வழங்கப்பட்ட பெருமளவு நன்கொடையான நிலங்கள் போடியாரால் மரபுவழியாக வழங்கப்பட்டவையாகவோ அல்லது முறைப்படி எழுத்து மூலம் வழங்கப்பட்டவையாகவோ இருந்து வந்தன. மரபுவழியாக வழங்கப்பட்ட நிலங்களாயின் அவற்றை போடியாரே தமது ஊழியக்குடிகளைப் பயன்படுத்தி அதன் பயன் முழுவதையும் கோவிலுக்கென வழங்கியிருந்தனர். ஆனால் கோவிலுக்குரிய நில உடைமைகள் எழுத்து மூலம் வழங்கப்படும் பட்சத்தில் அதனைப் பராமரிக்கும் பொறுப்பை கோவில் வண்ணக்கர்

பெற்றுள்ளார். இது தவிர கோவிலுக்கென நிர்ணயிக்கப்பட்ட ஏனைய ஊழியர்கட்குப் போடிமார் பின்பற்றும் அதே மாதிரியான ஊழியக் கொடுப்பனவுகள் இடம் பெற்றன.

## நில உடைமையும் - நிர்வாகமும்:

வன்னிமை என்ற சிற்றரசுகள் கால்கோள் கொள்ளத் தொடங்கியதில் இருந்தே நிலஉடைமை முறைக்கும் அதன் மானிய மரபுகட்கும் ஏற்ற விதத்தில் அமைப்புடன் கூடிய ஒரு நிர்வாக முறை பேணப்பட்டு வந்தது. இத்தகைய நிர்வாக முறை உத்தியோகபூர்வமானதாகவோ அன்றேல் சட்டமுறைக் குட்பட்டதாகவோ இல்லாவிடினும் மரபுவழி நிலவிய முறைகளுக்கு ஏற்ப இத்தகைய நிர்வாக முறை காணப்பட்டது. இவற்றில் நில உடைமை முறையில் பின்பற்றப்பட்ட நிர்வாக முறைகள் இன்றும் குலையாத வகையில் காணப்படுவனவாக உள்ளன. குறிப்பாக முல்லைக்காரனின் நியமனம், அவரின் பிரதான கடப்பாடுகள், அவருக்கும், நிலப்பிரபுவான போடியாருக்கும் இடையிலான உறவுநிலை போன்றவையும் மரபுபிறழாத கட்டமைப்பைப் பேணி வந்துள்ளமையைக் காண முடிகின்றது. பிரிட்டிஸ் ஆட்சியில் வயல் பராமரிப்புக்கென அதிகாரிகள் நியமிக்கப்படும் வரை வட்டவிதானை என்கின்ற வயல் கண்காணிப்பாளர் முறை நடைமுறையில் இருந்தது. வட்டவிதானையின் கண்காணிப்பை இலகுபடுத்துவதற்காக வயல்கள் கண்டங்களாக பிரிக்கப்பட்டு இருந்தன. கண்டத்தின் அளவு அப்போது இடத்திற்கு இடம் வேறுபட்ட அளவுடையதாக இருந்த போதிலும் கண்ட முறையின் கீழ் சில இடங்களில் 300 ஏக்கர் தொடக்கம் 500 ஏக்கர் வரையான நிலங்களும் இருந்தமையைக் காண முடிகின்றது. சில இடங்களில் வட்டை என்ற அடிப்படையிலும் உண்டு. ஆகக் கூடிய வட்டை கன்னன்குடாவில் இலுப்படிச்சேனையில் உண்டு (1104 ஏக்கர்.)

"சான்றாக 1658 இல் கன்னன் குடா பிரதேசத்தில் குமரப்போடி என்பவருக்கு 100 ஏக்கர் நிலம் இருந்தது. இவர் ஆங்கிலம் ஓர் அளவு கற்றதன் காரணத்தால் சம்பளம் வழங்கப்படாத வகையிலான பொலிஸ் தலைமைக்காரனாக நியமிக்கப்பட்டிருந்தார். இவரது மகன் கனகசபைப் போடி மிக உயர்ந்த நில உடைமைவாதியாக இருந்தார். இவருக்கு 700 ஏக்கர் நிலம் இருந்தது. இவர் மிகவும் உயர்கல்வி பெற்ற ஒருவராக இருந்தார். அக்காலத்தில் மட்டக்களப்பில் உள்ள ஒல்லாந்தக் கோட்டையில் ஆங்கிலப் பாடசாலை ஒன்றில் கற்பதற்கு வந்து சென்றமையினால் கோட்டைப்போடி என்ற பட்டமும் உண்டு. இவர் இரண்டு கண்டங்களை தன் ஆட்சிக்குட்படுத்தி இருந்ததாக வாய்மொழித் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது."

ஒல்லாந்தர் காலத்தில் அவர்களால் காணிப்பங்கீட்டு முறை ஓர் அளவிற்கு கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. 'தோம்பு' என்ற எழுத்து மூல ஆவணங்கள் வழங்கும் முறையையும் இவர்கள் கொண்டிருந்தார்கள். ஆனால் இம்முறை முறையாக விரிவுபடுத்தவும் போடியார் முறையை சிதைவுறச் செய்யவும் பிரிட்டிசாரால் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்துள்ளன. அவற்றில் நிலமற்றவர்கட்கு நிலம் வழங்கவும் குடியேற்றத்திட்டங்களை நிறுவவும் அவர்கள் எடுத்த பல நடவடிக்கைகளைக் குறிப்பிடலாம். சான்றாக உன்னிச்சை போன்ற பிரதேசங்களில் பலருக்கு உத்தரவுப்பத்திரங்கள் வழங்கியதன் மூலம் அரசுக்குரிய காணிகள் பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அதே சமயம் இவ்வுத்தரவுப் பத்திரக் காணிகட்கு மத்தியில் உறுதிக்காணிகளும் காணப்படுகின்றன. இது பற்றிய விசாரணையானது இத்தகைய உறுதியுடைய காணியின் உடைமையாளராகப் போடிமார் காணப்படுகின்றார்கள். எனவே ஆங்கிலேயர் மேற்கொண்ட காணிப்பங்கீட்டின் போது போடிமாருக்குப் காணிகளை விற்றுள்ளனர், என்பதும் ஆங்கிலேய அரசிடம் பணம் செலுத்தி நிலங்களை உடைமையாக்குவதில் போடிமார் அக்கறை கொண்டிருந்தனர் என்பதும் வெளிப்படை.

## போடிமுறையும் - மானியப் பொருளாதாரமும்:

உலகின் மானிய முறையும் அது தோற்றுவித்த பொருளாதாரப் பண்புகளும் பன்னூற்றாண்டுகட்கு முன் பிரதான பொருளாதார செயன்முறையாக இருந்ததையும், அதன் படிமுறை வளர்ச்சியே இன்றைய நவீன பொருளாதார முறையுமாகும் என்பதை அறியலாம். மேலைத்தேச நாடுகளும் சரி கீழைத்தேச நாடுகளும் சரி இம்மானியமுறையின் கருப்பொருளாக நிலமே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமையையும் காண முடியும். ஆயினும் எல்லா மானிய முறைகளிலும் நிலம் பயன்படுத்தப்பட்ட முறையும் அதற்காக ஊழியம், மூலதனம், முயற்சி ஆகிய உற்பத்திக் காரணிகள் பயன்படுத்தப்பட்ட முறையும் வேறுபட்ட முறையினதாகும். அத்துடன் இப்பொருளாதாரங்கள் மானிய முறைப் பொருளாதாரத்தை உடைத்து வெவ்வேறு காலப்பகுதிகளில் தம்மை நவீன பொருளாதாரத்துடன் இணைத்துக் கொண்டன. இதற்கு மிகச்சிறந்த சான்றாக பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா போன்ற மேலைத் தேச நாடுகளையும், இந்தியா, பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளையும் எடுத்துக் காட்ட முடியும். இவ்வாறான ஒரு நிலைக்கு அந்தந்த நாடுகளின் மானிய முறையும் அதன் பொருளாதாரக் கட்டமைப்பும் கொண்டிருந்த இறுக்கத்தன்மையுமே காரணமாகும். இந்தப் பின்னணியில் இலங்கையினதும் குறிப்பாக தமிழ் பிரதேசங்களினதும் மானியப் பண்புகளை மட்டக்களப்புப் பிரதேசத்துடன் ஒப்பிட்டு நோக்கும் போது மட்டக்களப்பு மானிய முறையினதும் நில உடைமையினதும் மேலான பண்புகளையும், அதன் சிறப்புத் தன்மைகளையும் வலியுறுத்தக் கூடியதாக இருக்கும்.

மேலைத்தேச மானிய முறைப் பொருளாதாரமானது நிலத்தை அடியொற்றிய பிரதான பொருளாதார செயற்பாடுகளையும் கொண்டிருந்தது. சான்றாக சிறியளவிலான கைத்தொழில் முறையில் 'கில்ட்' என அழைக்கப்பட்ட தொழிற்

பயிற்சி முறை, பண்ணைமுறை வேளாண்மை பிரதானமாக இருந்தமை, மன்னனே நிலவுடைமையை முழுமையாகத் தீர்மானிக்கும் சர்வாதிகாரம் கொண்டிருந்தமை, சமூகம் மன்னர், சுதந்திரக் குடிகள், அடிமைகள் என்ற பகுப்பைக் கொண்டு காணப்பட்டமை, நிலம் பயன்படுத்தப்பட்டபோது மூவகை முறை (தரிசுநிலம், பயிர் செய்கை நிலம், மேய்ச்சல் நிலம்) பேணப்பட்டமை போன்ற பல வேறுபாடுகளைக் காண முடியும். அத்துடன் பிரித்தானியா, பிரான்ஸ் போன்ற நாட்டின் நில உடைமை முறை அரசியல் உறுதியையும், அரசியல் அதிகாரத்தையும் தீர்மானிக்கும் வகையிலான கட்டமைப்பை அதிகம் வலியுறுத்துவதாய் இருந்தது. இவற்றில் பலவற்றை இலங்கையிலோ அன்றேல் மட்டக்களப்பின் மானிய அமைப்பிலோ நில உடைமை முறையிலோ காண்பது அரிது.

இலங்கையின் பொதுவான மானிய முறையில் சிங்கள மக்களிடையே அவர்களது மரபு, வழக்கம் என்பவற்றின் பிரகாரம் கோட்பாட்டின் அடிப்படையில் மன்னரே நிலத்துக்கான முழு உரிமையாளனாக இருந்தார். மக்கள் வழங்கும் சேவைகளின் பொருட்டு அவர்கட்கான சேவைக்கான உபகாரமாக நிலம் வழங்கப்பட்டு இருந்தது. இதனால் நிலம் சம்பந்தப்பட்ட அதிகாரங்களையும் மன்னனே கொண்டிருந்தான். ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களது மரபின் பிரகாரம் மக்களுக்கு உடைமையாக இருந்த நிலத்தின் மீது மன்னன் கொண்டிருந்த அதிகாரம் குறைவாக இருந்தது அல்லது எந்த உரிமையும் இருக்கவில்லை. நிலத்தில் இருந்து பெறப்படும் உற்பத்தி மீதிருந்தே அவனுக்கு ஒரு பகுதி வழங்கப்பட்டு வந்தது. சில இடங்களில் உற்பத்தியில் ஒரு பங்கினை அரசருக்கு வரியாக வழங்கினார்கள். சிங்கள பிரதேசத்தில் காணப்பட்ட நிலப்பயன்பாட்டு முறையை ஒப்பிடும் போது தமிழ் பிரதேசத்தில் மிகச்சிறந்த முறையில் இடம் பெற்றமைக்கு இது காரணமாகும். யாழ்ப்பாணம், வன்னிப்பிரதேசங்களது மானிய முறையில் மட்டக்களப்பைப் போன்ற வகுக்கப்பட்ட பிரபுத்துவ சமுதாயமாக போடியார் முறை இருக்கவில்லை. ஆனால் நில உடைமை வர்க்கம் ஒன்று காணப்பட்டது. அவ்வர்க்கம் சாதியின் அடிப்படையில் உயர்சாதியினராகக் காணப்பட்டனர். ஆயினும் வன்னிப் பிரதேச மானிய முறை அமைப்பிற்கும் மட்டக்களப்பின் மானிய முறை அமைப்பிற்கும் இடையே பல ஒற்றுமைகள் காணப்படுவதனால் இங்கு ஆரம்பத்தில் இருந்து வன்னிச் சிற்றரசுகட்கும் வன்னிப் பிரதேசத்தில் நீண்ட காலமாக நிலைத்து நின்ற சிற்றரசுகட்கும் இடையே உறவுநிலை பேணப்பட்டதைப் போன்ற ஒரு தன்மை காணப்படுகின்றது. குறிப்பாக நிலங்களின் அளவு, பயன்பாட்டு முறை நிலப்பயன்பாட்டிலும், விவசாயத் தொழில் முறையிலும் பயன்படுத்தப்பட்ட வழக்காறுகள், சொற்பிரயோகங்கள், குழுக்குறிகள் ஆகியன பொருளாதாரங்களில் ஒத்திருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

அத்துடன் முக்கிய விவசாய உடைமை முறைகளான குத்தகை, வாரம், ஒற்றி, ஈடுவைத்தல் போன்றனவும் இவற்றிற்கான கொடுப்பனவு முறையும் வன்னியிலும் மட்டக்களப்பிலும் ஒரே மாதிரியாக இருந்து வந்துள்ளன. குறிப்பாக ஊழியக் குடிகள் என்ற பிரிவு இல்லாவிடினும் விவசாய ஊழியமும் அவை அமைக்கப்பட்ட முறையும் ஒத்தனவாகவே இருந்தன. அதே போன்று நிலஉடைமையும் கிராம அமைப்பும் அவை சாதியின் அடிப்படையில் கலவாத தூய்மைத் தன்மையும் வன்னியைப் போன்றதாகவே உள்ளது. ஆனால் யாழ்ப்பாணத்து மானியமுறை உயர் வர்க்க ஆதிக்கம், சாதி ஒடுக்கு முறை, அடிமை முறையில் பயன்படுத்தப்பட்ட ஊழியம் அல்லது நன்கு பராமரிக்கப்படாத ஊழிய வர்க்கம், நிலப் பிரபுத்துவாதிகளின் மேலாதிக்கம் என்பவற்றைக் கொண்டதாக காணப்பட்டது. அத்துடன் கீழ்மட்ட சமூக அமைப்பிற்கும் மேல்மட்ட சமூக அமைப்பிற்கும் இடையே பாரிய இடைவெளியும் காணப்பட்டது. இத்தகைய இடைவெளியை வன்னியிலோ அன்றேல் மட்டக்களப்பு மானியமுறையிலோ காண முடியாதிருப்பதுடன் சமூக அமைப்பிலும் சாதியமைப்பிலும் ஒரு ஒருங்கிசைவுத்தன்மை காணப்பட்டதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அத்துடன் வன்னியில் பின்பற்றப்பட்ட சாதி முறையிலும் மட்டக்களப்பின் சாதிமுறைக்கும் இடையே பலவகையிலான இடைத்தொடர்புகள் காணப்படுகின்றன. பின்தங்கிய சாதியினருக்கு வருசக் கூலி வழங்கல், அவர்களுக்கெனத் தனியாகக் கிராமங்களை உருவாக்கிக் கொடுத்தல், அவர்களது வாழ்க்கைக்குத் தேவையான நிலபுலன்களை வழங்கல் என்பவற்றிற்கிடையே மிகுந்த ஒற்றுமை காணப்படுகின்றது. அதேபோல் கோவில்கட்கான நில உடைமைகளை வழங்கல் கோவில்களைப் பராமரிப்போர் என்பவற்றிற்கும் அதிக ஒற்றுமை உண்டு. ஆகம விதிப்படி அமைக்கப்படாத கோவில்களே பெருமளவிற்கு வன்னியிலும் மட்டக்களப்பிலும் காணப்படுகின்றன. மட்டக்களப்பில் நில உடைமை அதிகமான போடிமார் கோவில்கட்கு நிலபுலன்களை வழங்கி அவற்றைச் செய்கை பண்ணி அதன் மூலம் கிடைக்கும் வருவாயைக் கோவிலுக்கு வழங்குவதுடன் கோவில் விழாக்களை முறைப்படி நடத்த உதவி வந்தனர். அல்லது அவற்றை நியமிக்கப்பட்ட

வண்ணக்கர்மாருக்கு வழங்கியிருந்தனர். சில காலங்களில் மாரி பொய்த்ததனாலோ அன்றேல் விவசாயம் சீர் கெட்டதனாலோ வருவாய் இழக்கப்படும் போது போடியார் தனது சொந்தப் பணத்தில் கோவில் உற்சவத்திற்கான முழுச்செலவையும் செலவிடும் பாங்கு இன்று வரை மட்டக்களப்பில் இருந்து வருகின்றது. இது போன்ற ஒரு சிறப்பு வன்னியிலும் காணப்படுகின்றது. வன்னிக் கோவில் பராமரிப்பாளரை மணியகாரர் என வழங்கும் தன்மை காணப்படுகின்றது. இங்கு கோவில் உரிமையாளர்கள் தாமே தமது கோவிலின் காணியை பராமரிப்பதும் அதனை முழுமையாக செலவிடும் வழக்கமும் இருந்து வருகின்றது. பொதுவாக நில உடைமை, கோவில் மரபு, சமூக வழக்கங்கள், சடங்கு முறைகள் போன்ற பலவற்றில் வன்னியின் மரபுகளும் மட்டக்களப்பின் மரபுகளும் ஒத்தனவாவே காணப்படுகின்றன. இதே போன்று மட்டக்களப்பின் போடிமார் மரபிலும் பெண்களை விவசாயத்துக்கென அமர்த்துவது இல்லாமல் இருந்துள்ளது. இந்த வழக்கம் வன்னியிலும் உண்டு. கடந்த 30 அல்லது அதற்குக் குறைவான காலங்களிலேயே பெண்கள் விவசாய முயற்சிகளில் ஈடுபடும் வழக்கம் காணப்படுகின்றது. வன்னியிலும், மட்டக்களப்பிலும் காணப்பட்ட நில உடைமையும் அது தொடர்பான பொருளியல் வழங்கங்களையும் நோக்கும் போது இங்கு ஒரு மரபு தொடர்ந்தேர்ச்சியாகப் பின்பற்றப்படும் போது அது ஏற்கனவே உள்ள இன்னொரு மரபோடு இயைந்து அதன் விருத்திக்கும் உயர்ச்சிக்கும் உதவுமே தவிர ஒரு மரபு இன்னொரு மரபை ஈடுசெய்வதாக எப்போதும் அமைவதில்லை. இந்தக் கருத்து நிலவாதத்தின் அடிப்படையே மட்டக்களப்பின் நில உடைமை முறையும் அதன் பிரதான வழக்காறான போடிமார் முறையும் இன்று வரை அழியாமல் நிலைத்து நிற்பதற்குக் காரணமாய் அமைந்துள்ளது.

## முடிவுரை:

வன்னிமை என்ற சுதந்திரச், சிற்றரசுகள் செழிப்புற்று இருந்த காலப்பகுதியில் தோற்றுவிக்கப்பட்ட நிலவுடைமை முறையும் அதன் கட்டமைப்பு வளர்ச்சியும் மட்டக்களப்புப் பிரதேசத்தின் நீண்ட மரபுகட்கும், வழக்காறுகட்கும் காரணமாய் அமைந்திருந்தன. இத்தகைய பின்னணியில் தோற்றுவிக்கப்பட்டு விருத்தியடைந்த இப்பிரதேசத்தின் மானிய முறைப் பொருளாதாரமானது ஏனைய பாரம்பரிய தமிழ்ப்பிரதேசங்களைப் போல், பாரம்பரிய மானிய முறை அமைப்பை ஒத்ததாகவும் நிலமே பிரதான பொருளாதார மூலமாக பயன்படுத்தப்பட்டும் வந்துள்ளது. ஆனால் ஏனைய மானிய முறைகளில் காணமுடியாத அளவிற்கு நில உடைமையையும், அதன் ஒழுங்குபடுத்தல்களும் அவற்றினால் உருவாக்கப்பட்ட சமூக விழுமியங்களையும் அடியொற்றிய போடியார் முறை இப்பிரதேசங்களில் காணப்பட்டது. இம்முறை இப்பிரதேசத்திற்கே உரிய பாரம்பரிய வழக்காறுகளின் உயர் நிலைப்படுத்தப்பட்ட ஒன்றாகக் காணப்படுகின்றது. ஏனைய பாரம்பரிய தமிழ்ப்பிரதேசங்களில் நிலப்பிரபுத்துவ முறையும், அதனோடு இயைந்த மானிய முறைப்பண்புகளும் காணப்பட்ட போதிலும் மட்டக்களப்பின் இப்போடியார் முறை உருவாக்கிய மானிய முறையின் வழக்காறுகள் சமூகப் பெறுமானங்களையும், பொருளியல் விருத்தியையும் அடியொற்றியவையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. சான்றாக ஏனைய மானிய முறைப் பொருளாதாரங்களில் ஊழியம் அடிமை முறையாக அல்லது கீழ்நிலைப்படுத்தப்பட்ட சாதாரண கூலித் தொழிலாளர்களால் பயன்படுத்தப்பட்டதை நேரடியாகக் காணக்கூடியதாக உள்ளது. ஆனால் மட்டக்களப்பின் போடியார் மரபுமுறையின் கீழ் இவ்வாறு கூலித் தொழிலாளர்களைப் பயன்படுத்தப்பட்ட ஊழியம் சாதாரண கூலித் தொழிலாளர் என்பதை விட மனித நேயம் மிக்க மனித உழைப்பையும் இப்போடியாரால் தோற்றுவிக்கப்பட்டிருந்தமை மேலான சிறப்பம்சமாகக் காணப்படுகின்றது. பிரித்தானிய காலப்பகுதியில் சட்டரீதியான முறையிலும் (நேரடியாகவும்) சட்டரீதியற்ற மறைமுகமான வழிகளிலும் இப்போடிமார் மரபை உடைத்தெறிவதற்கு எடுத்த பல முயற்சிகள் போடியார் நில உடைமையில் வீழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. இதே போல் 1948 ஆம் ஆண்டின் பின் இலங்கையின் சுதந்திர அரசுகள் நில உடைமை முறையிலும், நிலப்பகிர்விலும் சமத்துவத்தைப் பேணி கிராமிய நெற் செய்கையையும் விவசாய நடவடிக்கைகளைப் பாதுகாக்கும் பொருட்டும் நில உடைமையில் குறிப்பாக பெருந்தோட்ட நில உடைமையில் காணப்பட்ட ஏகபோக முதலாளித்துவ முறையை இல்லாதொழிக்கவும் பல சட்ட ஏற்பாடுகளைச் செய்தது. குறிப்பாக 1958 ஆம் ஆண்டின் நெற்காணி மசோதா, 1960 ஆம் ஆண்டின் குடியேற்றச் சட்டம், 1972 ஆம் ஆண்டின் நில உச்ச வரம்புச் சட்டம் போன்றவற்றை இந்த வகையில் குறிப்பிடலாம். இச்சட்ட ஏற்பாடுகளில் போடியார் முறையின் கீழ் இருந்த நில உடைமை முறையில் வீழ்ச்சியை ஏற்படுத்திய ஒரு பிரதான சட்டமாக 1972 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த சட்டத்தைக் குறிப்பிடலாம். 25 ஏக்கருக்கு மேல் தனி ஆள் ஒருவர் நெற் செய்கை நிலங்களைக் கொண்டிருக்க முடியாது என இச்சட்டம் வலியுறுத்தியமையானது பலநூறு ஏக்கர்களைக் கொண்டிருந்த போடியார் நில உடைமை வகுப்பினை படிப்படியாக உடைக்க முற்பட்டது. இவ்வாறு ஆங்கிலேய அரசும், சுதேசிய இலங்கை அரசும் பல நடவடிக்கைகளை போடியார் முறைக்கு எதிராக மேற்கொண்ட போதிலும் மட்டக்களப்பின் முழுப்பிரதேசத்திலும் இருந்து இப்போடியார் முறை முற்றாக அழிக்கப்பட்டு விடவில்லை. அதற்குப் பிரதான காரணம் இப்போடியார் முறை பராம்பரியமாகக் கொண்டிருந்த பல பொருளாதார வழக்காறுகள் சமூகங்களில் உள்வாங்கப்பட்டமையானது புதிதாக உள்வாங்கப்பட்ட கலாசார

வழக்காறுகளோடு ஒப்பிடும் போது பழையவை மேலானவையாகவும் மானுட நேயத்தை அங்கீகரிப்பவையாகவும் சமூகவிழுமியங்களைக் கொண்டவையாகவும் இருக்கின்றமையால் பல பிரதேசங்களில் இன்று வரை இப்போடியார் நில உடைமை முறையும் அது உருவாக்கிய வழக்காறுகளும் நிலைத்து நிற்கும் தன்மை கொண்டனவாகக் காணப்படுகின்றன.

## சான்றாதாரம்:

1. கலாநிதி மௌனகுரு – சி. (1992) பழையதும் புதியதும் விபுலம் பதிப்பு பக். 82
2. பேராசிரியர் பத்மநாதன் – சி. நாடுகாட்டுப் பரவணிக்கல் வெட்டு – மட்டக்களப்பு மகாநாடு நினைவு மலர் – 1976
3. கலாநிதி வேலுப்பிள்ளை – ஆ. (1993) மட்டக்களப்பு தமிழும் மலையாளமும் – மட்டக்களப்பு பிரதேச சாகித்திய விழா மலர் – (1993) – ஆவணி பக் .14
4. தனபாக்கியம் குணபாலசிங்கம் – (1993 மட்டக்களப்பு மான்மியம் – ஓர் ஆராய்ச்சி பக் 198)
5. சிவராம் – த. (1993) 16ஆம் நூற்றாண்டில் மட்டக்களப்பு – பிரதேச சாகித்திய விழா மலர் ஆவணி – 1993 – பக். 13.
6. பத்மநாதன் – சி. (1976) முற்குகன் சாதி வழமை மட்டக்களப்பு மகாநாடு நினைவு மலர் – 1976 பக் 3.
7. மகேஸ்வரலிங்கம்– க. கொக்கட்டிச் சோலை தான் தோன்றீஸ்வரர் கோவில் – திருக்கேதிச்சரம் திருக்குடத்து மஞ்சனமலர் – 1976 – பக். 198.
8. நடராஜா எப். எக்ஸ். சி. – மட்டக்களப்பு மான்மியம் பக். 20.
9. சித்திரலேகா. மௌ – (1980) இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல் – கருத்தரங்குக் கட்டுரைப் பதிப்பு கா. சிவத்தம்பி – யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பக். 179.
10. ஜெயபாலன் வா. ஐ. சே. (1991) மட்டக்களப்பு மாவட்டத்தின் சமூக – பொருளாதார, கலாசார பின்னனி – பொருளியல் நோக்கு ஏப்பிரல் – 1991 பக். 19.
11. சிவசன்முகம் போடியார் அவர்கள் ஏடுகளின் உதவியுடன் வழங்கிய வாய்மொழித் தகவல்.


## நூற்பட்டியல் :

1. நடராஜா எப். எக்ஸ். சி. (1980) மட்டக்களப்பு மக்களின் வாழ்வும் வாழ்கையும் – இந்து வாலிபர் சங்கம் – மட்டக்களப்பு
2. மட்டக்களப்பு மான்மியம் நடராஜா. எப். எக்ஸ். சி. 1962 கொழும்பு.
3. கலாநிதி மௌனகுரு – சி. (1980) பழையதும் புதியதும் – விபுலம் வெளியீடு
4. கந்தையா, வீ. சி. மட்டக்களப்புத் தமிழகம் (1983)
5. மௌனகுரு. சி. மட்டக்களப்பு மரபுவழி நாடகம் – யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
6. தனபாக்கியம். கு. (1993) மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி – மட்டக்களப்பு (1996)
7. மருத நிலா – வடக்கு கிழக்கு இலக்கிய விழா மலர் 96 – வவுனியா
8. வயல் – (1993) கலை இலக்கிய இதழ் (1993 ஜனவரி)
9. வயல் – கலை இலக்கிய இதழ் 1993 ஏப்பிரல் – செப்
10. சாருமதி – வாசுதேவாவின் (1996) பூவரசு
11. தேசவளக் காட்சி – (1970) – தேசிய பொருட்காட்சி மலர் – மட்டக்களப்பு.
12. விஸ்வலிங்கம் – வி(1970) மட்டக்களப்பு நெற்செய்கையின் பண்டைய மரபு – மட்டக்களப்பு
13. மட்டக்களப்பு மகாநாடு நினைவு மலர் (1976) அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம், மட்டக்களப்பு.
14. மட்டக்களப்புப் பிரதேச சாகித்திய விழா மலர் (1993) மட்டக்களப்பு 1993 – ஆவணி
15. மகேஸ்வரலிங்கம் க. (1976) கொக்கட்டிச் சோலை தான் தோன்றீஸ்வரர் கோவில் – திருக்கேதீஸ்வரம் திருக்குடத் திரு மஞ்சன மலர் (1936)
16. சிவத்தம்பி . கா (1980) (பதிப்பாசிரியர்) இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல் – கருத்தரங்குக் கட்டுரைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் – 1980.

# மண்முனைப் பிள்ளையார்

க. இராசரத்தினம்,
முன்னாள் செயலாளர் ஸ்ரீ பரமநயினார் ஆலயம்
ஆரையம்பதி

"பிரவணப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரவணற் புதமலர் தலைக் கனிவோமே"

மண்முனைப் பிள்ளையார் ஆலயம் மட்டக்களப்புக்குத் தெற்கே ஆறு மைல் தொலைவிலுள்ளது. இக் கோயில் மண்முனைத் துறைக்குக் கிழக்கே சிறிது தூரத்தில் அமைந்துள்ளது. இது பிள்ளையார் கோயில் எனக் கூறினாலும் இங்கே பிரதிஷ்டை செய்யப் பெற்றிருப்பது சிவலிங்கமேயாகும். மாமாங்கப் பிள்ளையார் கோயிலிலும் பிரதிஷ்டை செய்யப்பெற்றிருப்பது சிவலிங்கமாகும். இருந்தும் இக்கோயிலைப் பிள்ளையார் கோயில் என்றே அழைக்கின்றார்கள்.

திருக்கோணமலை முத்துக்குமார கோயிலிலும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பது சிவலிங்கமே ஆகும். ஆனாலும் அதை முத்துக்குமார சுவாமி கோயில் என்றே அழைக்கின்றார்கள். சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப் பெற்றிருக்கும் கோயிலை பிள்ளையார் கோயில் என அழைக்கும் மரபு மட்டக்களப்பில் காணப்படுகிறது. சிவன் உக்கிர மூர்த்தி என்ற ஒரு காரணத்தாற் சிவனைச் சாந்த மூர்த்தமான பிள்ளையாரின் பெயரால் அழைக்கின்றார்கள் போலும். பிள்ளையாரைச் சிவசொரூபமாக வழிபடவேண்டுமென ஒரு சைவப் பெரியார் கூறியிருக்கிறார். அப்படியானால் சிவனைப் பிள்ளையார் என அழைப்பது சாலுமன்றோ'.

மண்முனைப்பிள்ளையார் கோயில் 1700 வருடங்கள் பழமை வாய்ந்தது. மாமாங்கப் பிள்ளையார் கோயிலை இராமாயணத்துடன் தொடர்பு படுத்திப் பேசுகிறார்கள். இதனை ஒரு புறம் தள்ளி வைத்துப் பார்த்தால் மட்டக்களப்பு மாவட்டத்தில் தோன்றிய முதலாவது கோயில் மண்முனைப் பிள்ளையார் கோயிலாகும்.

கலிங்க தேசத்திலிருந்து வந்து இலங்கையை ஆட்சிபுரிந்த விஜயனின் பின் இந்த ராச்சியத்தை ஏற்க வாரிசுகள் இல்லாமல் இருந்த காலத்தில் கலிங்கத்தினின்றும் மன்னர்கள் வந்து இலங்கா புரியை ஆட்சி செய்துள்ளனர். கலிங்கதேசத்தை ஆண்டு வந்த சிறிகுலசேனன் தனது அரசை சுமித்துவின் மகன் பந்துவாசனுக்குக் கையளித்துவிட்டு விஜயதுவீபமிருந்தும் இதன் மேற்குத் தொடங்கி தென் கிழக்கிலங்கை வரையுமுள்ள பிரதேசத்தைத் தனது மகன் கூத்திகனுக்குக் கொடுத்து அவனுக்குப் பட்டமும் கட்டி வைத்தான். இதன் காரணமாக கலிங்கருக்கென ஒரு ராச்சியம் தென் இலங்கையில் ஏற்படலாயிற்று. கூத்திகன் காலம் கி. மு. 400 எனக் கணக்கிடப்படுகிறது.

கிழக்கிந்தியாவில் மகாநதிவரையும் கலிங்க தேசம் இருந்தது. இந்நாட்டைக் கலிங்கரே ஆட்சி செய்து வந்தனர். இந்து வெளியில் வாழ்ந்த பலி என்பவனின் புதல்வர்களிலொருவரான கலிங்கன் என்பானாலே இக் கலிங்கதேசம் தோற்றுவிக்கப் பெற்றதாக விஷ்ணு புராணம் கூறுகிறது.

கலிங்கர் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வரும் வேளையில் இமயம் சார்ந்த கணவாய்கள் வழியாக ஆரியர்கள் இந்தியாவுட்புகலானார்கள். இவர்கள் அங்கு வாழ்ந்த சுதேசிகளுக்குத் தொல்லை கொடுத்து அவ்விடங்களிலிருந்து

அவர்களைத் துரத்தவும் முற்பட்டனர். இக்காலை கலிங்க தேசத்திற்கு விதிவிலக்கிருக்கவில்லை. ஆன காரணத்தினால் இத்தேச மக்களும் புலம் பெயரலானார்கள். அக்காலத்தில் அரசனாகவிருந்த குகசேனனின் மகள் உலகநாச்சியும் அவளது சகோதரன் உலகநாதனும் கலிங்கராச்சியத்துக்குட்பட்ட தென் கிழக்கிலங்கையை நோக்கி ஒரு வர்த்தகப் படகில் இலங்கை வந்தனர். வரும்பொழுது உலக நாச்சி, குகன் வம்சத்தாரால் திருக்கைலாயத்தினின்றும் கொண்டு வந்திருந்த சிவலிங்கம் ஒன்றையும் புத்த தசனம் ஒன்றையும் கரவாகக் கொண்டு வந்தாள்.

இவர்கள் மணிபுரத்தீவிலிறங்கி விஜயதுவீபத்தை அடைந்து அந்நாட்டின் தலைநகரான அனுராதபுரத்துக்குச் சென்றனர். அப்போது அனுராதபுரத்தை ஆண்டு கொண்டிருந்தவன் மேகவண்ணன் (கி.பி.362–380) ஆவான். உலக நாச்சியும் அவளது சகோதரனும் இம்மன்னனிடம் சென்று தங்கள் முகமன் கூறி புத்த தசனத்தையும் அரசன் கையில் கொடுத்தனர். அரசன் வெகுசந்தோஷத்துடன் அதனை வாங்கிக் கொண்டு, அவர்களை உபசரித்து அவர்கள் வேண்டுவது யாதென வினவினான். உலகநாச்சி தாங்கள் இருக்க இடம் வேண்டுமெனக் கேட்டுக் கொண்டாள். மன்னன் அவர்களை மட்டக்களப்புக்குச் செல்லுமாறு சொல்லி மட்டக்களப்பு மன்னன் குணசிங்கனுக்கும் ஓர் ஓலை எழுதிக் கொடுத்தான்.

ஓலையைப் பெற்றுக் கொண்ட உலகநாச்சி சகோதரர்கள் மட்டக்களப்புக்குப் பிரயாணமானார்கள். இவர்களது வருகையை

இந்தியாக் கல்வெட்டு (EP IND XV 246,) மகாவம்சம் (அத்.246 / 37) என்பன ஊர்ஜிதம் செய்கின்றன.

அக்காலம் மட்டக்களப்பு சம்மாந்துறை வீரமுனைக் கணித்தாய் இருந்தது. வீரமுனைக்கல்வெட்டு, சீர்பாதர் வரன் முறைக்கல்வெட்டு, கண்ணகி வழக்குரைக்கதை – தூரியோட்டு படலம் ஆகியன கூறும் மட்டக்களப்பு இதுவேயாகும். இம் மட்டக்களப்பைப் போர்த்துக்கீசர் 1624ல் தற்போதிருக்கும் இடத்திற்கு நகர்த்தினர்.

உலக நாச்சியும் சகோதரனும், கொங்குகாசி அம்பன் பிட்டியூடாகச் சென்று மட்டக்களப்பை அடைந்து குணசிங்க மன்னனைக் கண்டனர். குணசிங்கனிடம் தங்கள் வரலாறு கூறி மேகவண்ணன் கொடுத்த ஓலையையும் கொடுத்தார்கள். அரசன் மனமிக மகிழ்ந்து அவர்கள் வேண்டுவது யாதென வினவினான். உலகநாச்சி தாங்கள் வசிக்க மக்கள் குடியிராத ஒரு பிரதேசம் வேண்டுமென்று கேட்டுக் கொண்டாள். இவர்களுக்கிரங்கிய அரசன், அவர்களுக்கு மண்முனை என்னும் காட்டையும் கொடுத்து பொருள்களும் ஈந்தான். தனது பணியாட்கள் சிலரையும் காடு திருத்த உதவி புரியுமாறு அனுப்பி வைத்தான்.

அரசனது பணியாட்களும், உலகநாச்சியும் சகோதரனும் மண்முனைக்கு வந்து காடு திருத்தி தனக்கொரு மாளிகையையும் கட்டிக் கொண்டாள். இவள் மாளிகை கட்டி வாழ்ந்த இடம் இன்றும் மாளிகையடி என வழங்குகிறது. இந்த இடம் தற்போது தாழங்குடா கிறிஸ்தவ கோயிலுக்குத் தென்புறத்தேயுள்ளது.

பின்பு ஒறிசா தேசத்திலிருந்து குகன் குடும்பம் நூறும், சிறைக்குடும்பம் முப்பதும் எடுப்பித்து மண்முனையில் குடியமர்த்தினாள். குகன் குடும்பத்தைத் தன் அருகில் அமர்த்தினாள். அந்த இடத்தில் களிமண், தடிகள், கிடுகுகளால் ஒரு கோயிலைக்கட்டி அதிலே தான் கொண்டு வந்த சிவலிங்கத்தையும் நிறுவி வழிபட்டு வரலானாள். இந்தச் சிவலிங்கம் உருவத்தில் கையடக்கமான சிறியதாகும். இதன் ஆவுடையார் விசாலமானது. ஆவுடையார் இப்பிரதேசத்திலே வடித்தெடுத்திருக்கவேண்டும்.

தான் குடியேற்றிய மண்முனைப் பிரதேசத்திற்கு 'கலிங்க நகர்' எனப் பெயர் சூட்டியதாக அறியமுடிகிறது. பிற்காலத்தில் இப்பெயர் மருவி கைதை நகராயிற்று. தாழங்குடா கண்ணகையம்மன் காவியத்தில் "கைதை நகர்" என ஒரு பெயர் காணப்படுகிறது. இது ஒரு சான்றாகும். காலப்போக்கில், இக்கிராமத்தின் மருங்கில் தாழைகள் அதிகம் காணப்பட்டதால் இவ்வூருக்குத் தாழங்குடா என்னும் காரணப் பெயர் உண்டாயிற்று.

மண்முனையில் குடியேற்றம் நடந்த காலத்தில் கொக்கட்டிச் சோலையில் வேடர்கள் காடுகளை வெட்டித் துப்புரவு செய்தனர். அப்பொழுது திடகன் என்னும் வேடன் கொக்கட்டி மரத்தடியில் சுயம்புலிங்கமொன்றைக் கண்ணுற்றான். ஆச்சரியமடைந்து இச்செய்தியை உலகநாச்சிக்கு அறிவித்தான். உலகநாச்சி அந்த இடம் வந்து சுயம்புலிங்கத்தை தரிசித்து, அந்த இடத்தை மேலும் துப்புரவு செய்து ஒரு பந்தலும் கட்டிக் கொடுத்து சிவ வழிபாடு செய்யவும், வேண்டுவன செய்து கொடுத்தாள். இவள் வடநாட்டுக் கொல்லடத்திலிருந்து பட்டர் மூவரை அழைத்துப் பூசைகளுக்குத் திட்டம் வகுத்துக் கொடுத்தாள். தந்த புரத்திலிருந்து பூமாலை கட்டும் குடிகள் பதின்மரை வரவழைத்து இரண்டு ஆலயங்களுக்கும் ஆரம்கட்டும் குடிகளாக அமர்த்தினாள்.

8ம் நூற்றாண்டில் தருமசிங்கனென்னும் மன்னன் கொக்கட்டிச்சோலை சுயம்புலிங்க ஆலயத்தையும் அமைத்து அதற்கு மண்டபங்களும் மதில்களும் கல்லால் கட்டிக் கொடுத்து சோழ நாட்டிலிருந்து மூன்று தேர்களும் தருவித்துக் கொடுத்து இப்பிரதேசத்தை ஆண்டு வந்தான்.

உலகநாச்சியின் காலத்தின்பின் அவளுக்கு வாரிசு இன்மையால் மண்முனைப்பிரதேசம் மீண்டும் மட்டக்களப்பு அரசின் கீழ் சென்றது. இக்காலத்தில் மண்முனைப் பிரதேசக் குடிமக்களை ஆதரிக்கவோ பராபரிக்கவோ யாரும் இல்லாத நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக அங்கு குடியிருந்த மக்கள் புலம்பெயர்ந்து புதுக்குடியிருப்பில் சென்று குடியேறினர். புதிதாக குடியேறிய இடம் ஆதலால் அந்த இடத்திற்குச் புதுக்குடியிருப்பு எனப் பெயர் உண்டாயிற்று. புதுக்குடியிருப்பு கமச் செய்கைக்கும் கால் நடைவளர்ப்புக்கும் ஏற்ற இடமாகவிருந்தது.

பராமரிப்பு இல்லாத தன்மையால் மண்முனை செடி கொடி மரம் அடர்ந்த காடாயிற்று. இந்த நிலையில் பலதசாப்தங்கள் சென்றன. ஏறக்குறைய 1500 வருடங்கள் இந்த இடம் காடாக இருந்திருக்க வேண்டுமெனக் கருதமுடியும்.

12ம் நூற்றாண்டளவில் கலிங்க அரசன் மாகோன் கொக்கட்டிச் சோலைக்கு வந்து சிவன் கோயிலைப் புதுப்பித்து பூசை காரியங்களை நிலைப்படுத்தி தொழும்பு ஊழியர்களையும் வகுத்துக் கொடுத்தான். அப்போது அவன் மண்முனைக் கோயிலைப் பற்றி அறிந்திருக்கவில்லை. அவ்வாறு அறிந்திருப்பானேயாகில் இக்கோயிலையும் புனரமைத்துச் சிறப்புச் செய்திருப்பான் என்பதில் ஐயமில்லை.

மண்முனை மேற்கு, வாவிக்கப்பால் பண்டாரியா வெளி என ஒரு கிராமமுண்டு. அக்கிராம மக்கள் மண்முனை வாவியில் மீன்பிடிப்பது வழக்கம். ஒருநாள் இவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருக்கையில் மண்முனைக் காட்டுடே தீச்சுவாலையையும், புகையையும் கண்டனர். முதலில் இவர்கள் இதனைப் பொருட்படுத்தவில்லை. மறுநாளும் இக்காட்சியைக் கண்டனர்.

ஏதோ அதிசயம் இருக்க வேண்டும் எனக்கருதி அக்கிராம மக்கள் சிலர் திரண்டு இந்த இடத்திற்கு வந்து செடி, கொடிகளை வெட்டித்துப்புரவு செய்து புகை எழும்பிய இடத்திற்கு வந்தனர். அங்கே ஏதோ ஒரு கட்டிடம் மணலினுட் புதைந்திருப்பதான தடையங்களைக் கண்டனர். அந்த இடத்தை அகழ்ந்து பார்த்த பொழுது ஆழத்தில் சிவலிங்கமும் ஆவுடையாரும் இருக்கக் கண்டு ஆனந்த மேலீட்டினால் தான்தோன்றீஸ்சரனைக் கூவி அழைத்தனர்; மகிழ்ந்தனர். இந்த இடத்தில் கோயில் கட்ட வேண்டுமெனத் துணிந்தனர்.

பண்டாரியா வெளி மக்கள் முன்னின்று ஒரு கோயிலை முன்னர் கோயில் இருந்த இடத்தில் கட்டினர். கோயில் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபங்களைக் கொண்டதாக அமைந்தது. இது கிழக்கு நோக்கிய கோயில். கர்ப்பக்கிரகம் சிகரம் இல்லாது அம்மன் கோயில் கர்ப்பக்கிரகச் சாயலை ஒத்ததாகவிருக்கிறது. இக் கோயிலின் அர்த்த மண்டபத்தின் நிலையில் "சித்திரை கூ தே அள அ௪ ஆ" என்னும் எழுத்துக்கள் காணப்படுகின்றன. இதனை யுகிக்கு மளவில் 1884 சித்திரை 3ம் திகதி இக்கோயில் குடமுழுக்குச் செய்யப்பெற்றுச் சிறப்பிக்கப்பட்டிருக்கலாம். எனவே தற்போதையக் கட்டிடத்தின் அகவு 200 வருடங்களைக் கணிக்கலாம்.

நாகதம்பிரான், முருகன், வயிரவர் பரிவார மூர்த்திகளாக விருக்கின்றனர். தல விருட்சம் ஆலமாமாகும். எழுந்தருள் மூர்த்தியாக விநாயகப் பெருமான் வீற்றிருக்கிறார்.

இக் கோயிலில் தினமும் ஒரு நேரப் பூசை நடைபெற்று வருகிறது. வெள்ளிக் கிழமைகளில் விசேட பூசைகள் நடைபெறுகின்றன. இக் கோயிலுக்கு ஆதன வருமானங்கள் இல்லை. இக்கிராம வியாபாரிகள் கொடுக்கும் நன்கொடையைக் கொண்டே கோயில் பராமரிக்கப்படுகிறது.

பண்டாரியாவெளி மக்களே இக் கோயிலின் தலைமை நிர்வாகிகளாக இருந்து வருகிறார்கள்.

கந்தசஷ்டி விரதம், கேதார கௌரி விரதம் விநாயக சஷ்டி விரதமாகியன இங்கே அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. பண்டைய காலத்தில் இக்கிராமத்தின் சூழலிலுள்ள கிராமங்களில் கோயில்கள் இருக்கவில்லை. ஆனகாரணத்தால் அக்கிராம மக்கள் இக் கோயிலுக்கே வந்து வழிபாடு செய்தும், விரதங்கள் அனுஷ்டித்தும் வந்ததாக முன்னோர்கள் கூறியுள்ளனர்.

பிள்ளையார் ஓங்கார வடிவமானவர். ஐந்து கைகளும், யானை முகமும் இளம்பிறை போன்ற வெண் கொம்பு ஒன்றுடையவராக ஞானக் கொழுந்தாக விளங்குபவர். பாசம், அங்குசம், கலசம், ஒடிந்த கொம்பு, மோதகம் என்பன இவரது ஆயுதங்கள். இவ்வாயுதங்களைக் கொண்டு ஆன்மாக்களைப் பிணித்துள்ள ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதானம் என்னும் மாயைகளைக் களையும் தொழிலைச் செய்கிறார். இவரை விநாயகர் எனவும் அழைப்பதுண்டு. தனக்கு மேலான தலைவன் வேறு எவருமில்லை என்பது இதன் பொருளாகும். விநாயகரின் வயிறு பெரியது. இது சகல பிரமாண்டங்களையும் தன்னுள் அடக்கும் தன்மையைக் குறிப்பிடுகிறது. இந்தளவு பெரிய கடவுளுக்கு மூஞ்சுறு வாகனம். இது சிறியரிற் பெரியோன் என்பதை விளக்கும். யோகிகளுக்கு சத்திநிபாதம் பாயும் காலை குண்டலினி கனல் குடு குடு குறு குறு வென்று மூஞ்சுறுபோல சத்தமிட்டு மேல் ஏறிப் பாயும். அக்குண்டலியின் ஓட்டத்தால் பிரணவம் உதயமாகும். இவ்வோட்டத்தையே மூஞ்சுறாகப் பெரியோர் காட்டியுள்ளனர்.

படம் வரைவோரும், உருவம் சமைப்போரும் விநாயகரது தத்துவம் விளங்காமல் அவரின் படங்களிலும் உருவங்களிலும் தும்பிக்கையை இடப்புறமாகவும் வலப்புறமாகவும் இன்னும் வேறு பல வடிவங்களிலும் வரைந்து விடுகின்றனர். உடம்பிலுள்ள ஆறாதாரத்தின் வழியாக குண்டலினி சக்தி மேலேறி இருதயத்தை அடைந்து அதனுள் புகுந்து இருதய சுத்தி செய்துவிட்டு திரும்பி வந்து அநாகதம் விசுத்தியாகிய இடங்களை நாடும். குண்டலி என்னும் பிரணவத்தின் பாதையே தும்பிக்கையின் தத்துவமாகும். மோதகம் இருதய கமலத்தைச் சுட்டும், இந்தப் பாதை மேல்பக்கம் சுவாசப் பையை நோக்கிச் செல்வதல்ல. ஆனால் படவரைஞர்கள் வியாபார நோக்கம் கருதி சைவக் கடவுளரின் படங்களை ஆபாசமாகவும், கவர்ச்சியாகவும் வரைந்து விடுகின்றனர். இதே போல் சோதியே சுடரே அலகில் சோதியனே, பால் வெண்ணீற்றனே என்று அழைக்கப்பட்டும் சிவபெருமானுக்கு நீல வர்ணம் தீட்டிவிடுகின்றனர். சிவபெருமான் எப்போ நீல நிறமானாரோ தெரியவில்லை. இப்படியாகச் சைவத் தெய்வங்களைக் கொச்சைப்படுத்தும் காரியங்களைச் சைவ மக்கள் சிவாச்சாரியர்கள், அறங்காவலர்கள் கண்டிக்கத் தவறுகின்றனர். இது கண்டு நாம் மிகவும் வேதனை அடைகின்றோம்.

உமையிசை இபமென உருவுகொள் பரனை உமை திருமகனை அழகெறி வரதனை முறை முறை பணிவாம்.

# பண்டாரியா வெளி ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம்

திரு. மூ. சிவகுமாரன் *ஆசிரியர்*

**சை**சவம் மிகவும் தொன்மை வாய்ந்தது. யாரால்? எப்போது? தோற்றுவிக்கப்பட்டது என்பது வெளிப்படாத வரலாறு கடந்த மதமாகும். சைவ சமயிகள் ஆரம்பகாலங்களில் இயற்கையை வழிபட்டார்கள் என்பது ஆய்வுகள் மூலம் அறிய முடிகின்றன. அத்துடன் அகழ்வாராய்ச்சிகளின் போது நாகசிலைகள் மற்றும் பல படிமங்களும் கண்டெடுக்கப் பட்டதிலிருந்து நாக வழிபாடும் ஆரம்பகாலங்களில் இருந்தன வென்பது தெளிவாகும். தொன்மை வாய்ந்த இந்து நதிக்கரை நகரங்களான மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய நகரங்களில் நாக வழிபாடு இருந்துள்ளன என்பதை அங்கு கண்டெடுத்த படிமங்கள் புலப்படுத்துகின்றன. பண்டைய இலங்கையின் அரசர்கள் கூட குளங்களைக் கட்டி குளக்கட்டின் ஒரு இடத்தில் நாக சிலைகளை வைத்துக் கட்டியுள்ளார்கள். இதற்குக் காரணம் குளத்தைப் பாதுகாப்பதோடு குளத்து நீரை நாகம் வற்றாமல் வைத்திருக்கும் என்பதும் அவர்களது நம்பிக்கையாக இருந்தது. இவை போன்ற பல வரலாறுகள் நாகவழிபாடு ஆரம்ப காலங்களிலிருந்தே இருந்து வருகின்றது என்பதற்கு உதாரணங்களாகும்.

## ஆலயத்தின் அமைவிடம்

மட்டக்களப்பில் தனிச்சிறப்புடையது மண்முனை. இதனை மையமாக வைத்தே பிரதேசப் பிரிவுகள் பிரிக்கப்பட்டுள்ளன. அதன்படி மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் பண்டாரியாவெளிக் கிராமம் அமைந்துள்ளது. இவ்வாலயம் மட்டக்களப்பில் இருந்து தெற்கே மண்முனைத்துறையினூடாக சுமார் 16 கிலோ மீற்றர் தூரத்தில் பண்டாரியா வெளிக் கிராமத்துக்கு மேற்கே பரந்த நெல்வயல்கள் சூழ்ந்த பெருநிலப்பரப்பின் மத்தியில் படையாண்ட குளத்து வயல்களின் கிழக்கு எல்லையில் நாககட்டு என்று அழைக்கப்படும் பரந்த கட்டில் அமைந்துள்ளது.

## நாகம் பிறந்த கதை

மட்டக்களப்பு நாட்டை குணசிங்க மன்னன் கி.பி. 398 இல் ஆட்சி செய்தான். அக்காலத்தில் கலிங்க ஒரிசா தேசத்தில் இருந்து உலகநாச்சி என்ற பெண்ணரசி வந்து மண்முனைப் பகுதியை குணசிங்க மன்னனிடம் நிந்தகமாய்ப் பெற்று குடியேற்றத்தை அமைத்து ஆட்சி செய்தாள் எனக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காலத்தில் தான் மண்முனையில் இருந்த கலிங்க குலப் பெண்ணொருவருக்கு ஐந்து பெண்பிள்ளைகள் பிறந்தனர். ஐந்தாவது பெண்குழந்தையுடன் ஒரு சத்திரிய வம்ச நாக பாம்பும் இரட்டையாகப் பிறந்தது. பிள்ளைக்கு முலையில் பால் கொடுத்தும்; நாகத்துக்கு பால் கறந்து ஊட்டியும் வளர்த்தனர். நாகத்துடன் பிறந்த அந்தப்பிள்ளைக்கு நாகம்மை எனும் பெயரிட்டனர். மூத்த நான்கு சகோதரிகளும் திருமணம் முடித்துத் தத்தம் கணவன் தாய்வீட்டில் வாழ்ந்து வந்தனர். நாகம்மை திருமணம் முடித்து ஒரு குழந்தைக்குத் தாயானாள் எனினும் இல்வாழ்க்கை தொடரவில்லை. கணவன் இறந்ததும் தாயுடன் விதவையான நாகம்மையும், குழந்தையும் நாகமும் வாழ்ந்து வந்தனர். சில நாட்களின் பின் வயது முதிர்ந்த தாயும் மரணமானார்.

தாய் இறந்ததும் தாயரிச் சாமான்களான வெண்கலம், வெள்ளி, பொன் முதலிய வீட்டுப் பொருட்களைப் பங்கிடுவதற்காக மூத்த சகோதரிமார் நால்வரும் வந்தனர். வீட்டில் இருந்த எல்லாப் பொருட்களையும் ஐந்து பங்காகப் பிரிக்க முற்பட்டனர். அப்போது பாம்போடு கூட இரட்டையாகப் பிறந்த விதவையாகிய நாகம்மை தனது மூத்த சகோதரிமார்களிடம் "தான் இவ்வளவு பொருட்களையும் பாதுகாத்து, தாயையும் பராமரித்து வந்ததாகவும், கணவனை இழந்தவளாதலாலும், நாகத்தோடு கூடப் பிறந்தவளாதலாலும் அது இன்னும் தன்னோடு வாழ்வதாலும் நாகத்துக்கும் ஒரு பங்கு கிடைக்கும் வகையில் சமமாக ஆறுபங்கு போட வேண்டும் எனவும்; அந்தப் பங்கு தனக்கே சேர வேண்டும் எனவும், நாகமும் தனது உடன்பிறப்பு என்றும் வாதாடினாள். ஆனால் மூத்தவர்கள் நால்வரும் பாம்புக்கு பொருட்கள் எதற்கு என மறுத்துவிட்டனர். அதை உணர்ந்தது போல் நாகம் வீடடில் இருந்து வெளியே வந்து சீறிக் சினந்து படமெடுத்தாடியது. அதையும் கவனியாமல் அவர்கள் பொருட்களை ஐந்து பங்கு போட்டுப் பிரித்தனர். இதனால் மூத்த சகோதரிமார்களுக்கும் நாகம்மைக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு பெரிய கலவரமாக மாறியது. இதனால் மனமுடைந்த நாகம்மை தான் குல தெய்வமாக வழிபட்டு வந்த கண்ணகையம்மன் சிலையை மட்டும் ஒரு ஓலைப் பெட்டியில் வைத்து தலைமீது சுமந்த படி தனது மூன்று வயதுக்குழந்தையுடன் மண்முனையில் இருந்து வாவியைக் கடந்து இக்கரையில் கல்லடித்துறையென இன்றும் அழைக்கப்படும் துறையூடாக வந்தாள். உடன் பிறந்த நாகமும் பின்னால் தொடர்ந்தது.

தற்போது மகிழடித்தீவு சேவகப்பற்று எனும் வயல் நிலம் அப்பொழுது குளமாகவும் அதற்கு வடக்கேயுள்ள பகுதியே (இறால் பண்ணையாக இருந்து 1987 இல் அழிக்கப்பட்ட பிரதேசம்) சேவகப்பற்று வயல்நிலமாகவும் இருந்தது. சேவகத்துக்காக (வேலைக்காக) கொடுக்கப்பட்ட வயல்நிலம் சேவகப்பற்று வயல் என அழைக்கப்படுகிறது. அச்சேவகப்பற்று உவர்களரச்சையாக மாறியமையால் விளைவு குன்றியது. இதனால் குளத்தை வயலாக்கி சேவுகப்பற்று என அழைத்தனர். மகிழடித்தீவுக் கிராமத்துக்குத் தெற்கே கட்டுக்கட்டி குளம் அமைத்துக் கொண்டனர்.

மண்முனையில் இருந்து கல்லடித்துறையில் வந்திறங்கிய நாகம்மையும், பிள்ளையும் சேவகப்பற்று வயலினூடாக நடந்து வந்து கொண்டிருந்தனர். மகிழடித்தீவுக் கிராமம் அப்பொழுது குடியடர்த்தி அற்றதாகவும் இடையிடையே காடுகள் செறிந்தும் கிராமத்தைச் சுற்றி நீர்நிலைகளும் இருந்ததால் காட்டெருமைகள் ஒரு பருவகாலத்தில் கூடுதலாக நடமாடுவது வழக்கம். அப்பருவகாலமே நாகம்மையும் வந்த காலமாகும். இப்பெண்ணும் முன்சொன்ன சேவகப்பற்று வயலினூடாக வந்து கொண்டிருந்தாள். மகிழடித்தீவு கிராம வாசிகள் காட்டெருமைக் கன்றுகளைப் பிடித்துப் பெருமரநிழல்களிற் கட்டிவைத்து மரத்தின் மேல் ஏறியிருந்து எருமைகள் கன்றுக்குப் பால் கொடுக்க வந்ததும் கயிறுபோட்டுத் தாய் எருமைகளைப் பிடிப்பதும் வழக்கம். அந்த வழியாக இப்பெண், பிள்ளையுடன் வருவதை மாடு பிடிக்க மரத்தின் மேல் ஏறி இருந்தவர்கள் கண்டு அவ்வழியே வரவேண்டாம் என்றும் எருமைகள் குத்திக் கொன்றுவிடும் விலகி வேறு வழியால் வருமாறும் சத்தமிட்டு சைகை காட்டினார்கள். நாகம்மை சகோதரிகளிடம் சண்டையிட்டு வெளியேறி வந்ததால் சாவைப் பொருட்படுத்தாமல் எவர் சொல்வதையும் செவி சாய்க்காமல் முன்னேறி நடந்து வந்தாள். அப்பொழுது ஒரு பெரிய காட்டெருமை அப்பெண்ணை எதிர்த்து வந்தது. உடனே அப்பெண் கண்ணகை அம்மன் சிலையிருந்த பெட்டி தலையிலே இருக்க தன் இடுப்பில் இருந்த குழந்தையை கீழே இறக்கி விட அக்குழந்தையும் பயத்தினால் தாயின் கால்களை கட்டிப் பிடித்தது. தாய் தன்னை நெருங்கிவந்த காட்டெருமையின் கொம்புகளிரண்டையும் தனது இரு கைகளாலும் பிடித்தாள். எருமை அப்படியே அசையாமல் நின்றது. உடனே மரத்திலிருந்த, மாடுகளைப் பிடிப்பவர்கள் ஓடி வந்து எருமையின் கால்களைக் கட்டிப் போட்டுவிட்டு ஒரு சாதாரண பெண்ணால் காட்டெருமைக் கொம்புகளைப் பிடிக்க முடியுமா எனச் சந்தேகித்து இது ஒரு தெய்வச் செயலாக இருக்க வேண்டும் அல்லது இப்பெண் ஒரு தெய்வப் பிறவியாக இருக்க வேண்டும் என நினைத்து தலையில் இருக்கும் பெட்டிக்குள் என்ன இருக்கிறது என வினவினர். அப்பெண் பெட்டிக்குள் இருந்த கண்ணகையம்மன் சிலையைக் காட்டினாள். இக்கண்ணகையம்மன் அருளே இச்செயல் என அவர்கள் முற்றாக நம்பி கண்ணகையம்மன் சிலையை மகிழடித்தீவுக் கிராமத்திலே வைத்து வழிபடுவதற்குத் தந்துதவுமாறு கேட்டனர்.

அப்பெண்ணும் அதற்கிணங்கி கண்ணகையம்மன் சிலையை அவர்களிடம் ஒப்படைத்துச் சென்றார். அன்றிலிருந்து அப்பெண்ணின் சந்ததியினருக்கு கொம்பிக் கிழவி வயிற்றுவார் என அழைக்கப்படுவதாகக் கருதப்படுகிறது. அப்பெண்ணுடன் கூட வந்த நாகமும் நேராகச் சென்று படையாண்ட குளத்து வயல்களின் கிழக்கு எல்லைக் கட்டிலே உள்ள ஒரு புற்றில் புகுந்து கொண்டது. அதன் காரணமாகவே இக்கட்டு நாகக்கட்டு என இன்றும் அழைக்கப்படுகிறது. நாகம்மையும் பிள்ளையும் கடுக்காமுனையில் கிராமத்தவர் உதவியுடன் வீடு அமைத்து வாழ்ந்து வந்தனர்.

## நாகதம்பிரான் ஆலயம் அமைக்கப்படல்

புற்றில் புகுந்த நாகத்துக்கு நாகம்மை நாள்தோறும் அதற்குரிய உணவாக கோழிமுட்டை, பால் என்பன வைத்துப் பராமரித்து வந்தாள். அவ்வழக்கம் இன்றும் நாகதம்பிரானுக்குரிய பொங்கல் பூசைகள் முடிந்ததும் பூசகர் மேற்படி பொருட்களை வைப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. அந்த நாளான ஆனிமாதத்தில் வரும் உத்தர நட்சத்திரத்தில் பொங்கல் பூசைகள் செய்து பால் பழங் கரைத்து வைத்தல் என்னும் நிகழ்ச்சி வருடந்தோறும் நடைபெறுகின்றது.

இவற்றை ஆரம்பத்தில் நாகம்மைதான் செய்து வந்தார். அதனடிப்படையில்தான் இன்றும் அந்நிகழ்ச்சி அச் சந்ததியினராலேயே செய்யப்பட்டு வருகின்றது. இதனைக் கண்ணுற்ற ஏனைய மக்களும் தமக்கு எதுவித இடையூறும் வாராமல் நேர்த்தி வைத்து நாகதம்பிரானுக்கு பொங்கல் செய்து வந்தனர். அதன்பின் அப்புற்றாருகில் பந்தலிட்டு ஆனி உத்தரத்தில் பொங்கல் பூசைகள் செய்து அதனையடுத்து வரும் வெள்ளிக்கிழமை பொதுவான தேசத்துப் பொங்கல் என பொதுமக்கள் பொங்கல் செய்து படைத்துப் பூசித்து வந்தனர். இது "நாககட்டுப் பொங்கல்" என இன்றும் நடைபெற்று வருகின்றது.

நாகங் குடிகொண்ட புற்று, மக்கள் மத்தியில் மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தியதால் நாகதம்பிரானுக்குச் சிலைவைத்து கோயில் அமைத்து விழாவெடுக்க முற்பட்டனர். அதனால் 1903 ஆம் ஆண்டில் நாகதம்பிரான் கோயில் மடாலயமாகக் கட்டப்பட்டு பசுமை வெள்ளியினாற் செய்யப்பட்ட நாகமும் பிரதிஷ்டை பண்ணப்பட்டது. இது சுமார் 9 அங்குல உயரமும் மிக அழகாகவும் அமைக்கப்பட்டிருந்தது. இதற்கு இன்றும் பூசைகள் நடைபெறுவதுடன் நேர்த்திக்கடன் கட்டுதல் என்பதையும் விசேடமாகக் கைக்கொள்கின்றனர்.

அதனைத் தொடர்ந்து இருபது ஆண்டுகளின் பின் படையாண்ட வெளி அ. பொ. த. தம்பிமுத்துப்போடி அவர்களால்

விநாயகர் கோயிலும் வயிரவர் மேடையும் கட்டப்பட்டன. அதன் பின் விஷ்ணு ஆலயம் கட்டப்பட்டது. அதன் பின் நாகதம்பிரான் ஆலயம் இடிக்கப்பட்டு சிகர கோபுரமாக கட்டிக் கருங்கல்லினால் நாக சிலை வைத்து 1970. 07.10 ஆந் திகதி ஆனி உத்தரத்தன்று கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து மதில்கள், மணித்தூண்கள், கிணறுகள் என்பன அமைக்கப்பட்டும் உள்ளன. எனினும் 1973 ஆம் ஆண்டு முன்பு கட்டப்பட்டிருந்த விநாயகர் ஆலயம் இடிக்கப்பட்டு வேறு இடங்களில் விநாயகர் ஆலயமும் கந்தசுவாமி ஆலயமும் கட்டப்பட்டன. இது இவ்வாறிருக்க 1993 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் மீண்டும் நாகதம்பிரான் கோயில் மூலஸ்தானம் இடிக்கப்பட்டு புதிதாக மூலஸ்தானமும் அர்த்தமண்டபமும் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. மேலும் 1997 ஆம் ஆண்டு தங்குமடம் ஒன்றும் கட்டப்பட்டு முடிவுறாமல் உள்ளன. எதிர்வரும் ஆண்டுகளில் கும்பாபிஷேகம் நடை பெறவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## நாகதரிசனமும் மக்கள் நம்பிக்கையும்

இப்பிரதேச மக்கள் இவ்வாலயத்தின் மீது மிகுந்த பயபக்தியுடையவர்களாக அன்றுமுதல் இன்றுவரை இருந்து வருகின்றார்கள் என்பதை மக்கள் மத்தியில் காணப்படும் பல நடைமுறைகள் மெய்ப்பிக்கின்றன. கிராம மக்கள் தங்கள் வீடுகளில் தென்னம்பிள்ளைகள் நடும்போது ஒரு தென்னம்பிள்ளையை நாகதம்பிரானுக்கு என்று நடுவார்கள். அதில் காய்க்கும் தேங்காய்கள் அனைத்தையும் அவ்வாலயத்திற்கே கொடுப்பர். இந்நடைமுறை அண்மைக்காலம் வரை இருந்தது. அத்துடன் வருடாந்த பொங்கல் அன்று எல்லோரும் பொங்கல் செய்வர். ஆலயவெளி வீதிகளெல்லாம் ஆயிரமாயிரம் பொங்கல் பானைகளைக் காணலாம். அன்றைய தினம் பொங்கல் செய்ய முடியாது போனால் அடுத்து வரும் வெள்ளிக்கிழமை கட்டாயம் பொங்கல் செய்தேயாகுவர். அதேபோல் நெல்பயிரிடும் விவசாயிகள் அனைவரும் கட்டாயம் இவ்வாலயத்தில் பொங்கல் செய்வதும் வழக்கமாகும். இவ்வாறு செய்யாமல் விட்டால் 'கலியுகத்தில் கண்கண்ட தெய்வம்' தம்மை கொத்திக் கொன்றுவிடும் என்ற நம்பிக்கை மக்களிடையே இன்றும் உறுதியாக இருக்கிறது.

இவ்வாலயத்தில் புதிதாக கல்லினால் செய்யப்பட்ட ஐந்து தலை நாக விக்கிரகம் சுமார் 11/2 அடி உயரமுடையது. இதற்கு மூன்று மட்டங்களாகச் சிங்காசனம் அமைக்கப்பட்டு அதன்மேல் விக்கிரகம் வைத்து மருந்து சாத்தப்பட்டுள்ளது. விக்கிரகத்துக்கு பின்புறமாக மருந்து சாத்தப்பட்டபகுதியில் இரு துவாரங்கள் உள்ளன. அதன் கீழ் உள்ள படியில் விக்கிரகத்துக்கு முன்புறமாக ஒரு துவாரம் உண்டு. இத்துவாரங்கள் நிலத்தை நோக்கியே செல்கின்றன. மேலும் மூலஸ்தானத்தில் கோமுக வாயிலின் கீழாக சுவரோடு சேர்ந்து அடித்தளத்தில் பெரிய துவாரம் அமைந்துள்ளது. இது சுவர் கட்டும் போது வைக்கப்பட்டதோ என்பதைத் திட்டவட்டமாக கூற முடியாதுள்ளது. அத்துவாரத்துள் தான் நாகங்கள் இருக்கின்றன. வருடாந்த உற்சவ காலங்களில் மூன்று நாகங்களுக்கு மேல் வெளிப்படுகின்றன. இவற்றை பயமின்றிப் பார்க்கவும் முடியும். சில வேளைகளில் விக்கிரகத்தை வளைந்தபடி படுத்திருக்கும். பூசகர் பூசைக் கிரியைகளில் ஈடுபடும் போது தலையை மட்டும் வெளியே வைத்து துவாரத்தினுள் நாகங்கள் படுத்திருக்கும். மற்றைய நேரங்களில் கோயிற் கதவு அடைக்கப்பட்டதும் வெளியில் வந்து மூலஸ்தானத்தில் உள்ள விளக்கு முதலிய பொருட்களை புரட்டியடித்தும் விளையாடித் திரிகின்றன.

பூசை முடிந்ததும் பூசகரினால் கோழிமுட்டைகள் வைக்கப்படும். முட்டைகளில் வெள்ளைக்கரு மட்டும் குடிக்கப்பட்டு மஞ்சட்கரு எஞ்சியிருக்கும் அம்முட்டைகளைக் குடிப்பதற்கு நாகங்கள் பூசை வேளைகளில் வருவது வழக்கமாக உள்ளது. உற்சவ காலங்களைத் தவிர மற்றைய பூசைக்காலங்களில் நாகங்களை அரிதாகவே காண முடிகின்றது. ஆனால் ஆனி உத்தரா தரிசனம் மட்டும் நிச்சயம் நாகங்களைக் காணலாம். எனினும் நாகங்கள் இருக்கின்றன என்பது மட்டும் உண்மை.

நாகதம்பிரான் ஆலயம் வடக்கு வாசலையுடையது மூலஸ்தானத்தில் இருந்து வடகிழக்காக 50 அடிதூரத்தில் நாகதம்பிரான் புற்று இருக்கிறது. இதுவே நாகம் புகுந்த புற்று எனப்படுகிறது. இந்தப் புற்றினுட்தான் பால், பழம் கரைத்து ஊற்றப்படுகிறது. இந்தத் துவாரத்திற்கும் மூலஸ்தானத்திற்கும் தொடர்பு உண்டெனவும் கூறுகின்றனர். மூலஸ்தானத்தில் இருக்கும் நாகங்கள் வெளியில் சென்றுவர இது ஏதுவாக அமைந்துள்ளது என எண்ண இடமுண்டு. இந்தப் புற்றில் இத்தி, வேம்பு என்பன இணைந்தபடியுள்ளன. இதைச் சுற்றி மேடையமைக்கப்பட்டு மதிலும் ஒரு வாசலும் புற்று வாய் மூடப்படாமலும் புனிதமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

## ஆலய பூசகர்கள்

இவ்வாலயத்தின் பூசகர்களாக நாகம்மையின் சந்ததியினரே ஆதியிலிருந்து உரிமையுள்ள பூசகர்களாக இருந்து வருகின்றனர். ஆரம்பத்தில் இவ்வாலயத்தின் பூசகர்களாக இருந்தவர்களின் பெயர்களை அறிய முடியவில்லை. ஆயினும் "நாகநம்பி" என்பவர்; அவரையடுத்து 1802 இல் நம்பியார் என்பவர் இவரது இயற்பெயர் கணபதிப்பிள்ளை. அதன் பின் மா. சின்னத்தம்பி என்பவர் பூசை செய்தார், இவர் நாட்டுக் கூத்தில்

தச்சன் என்ற பாத்திரமேற்று நடித்தமையால் "தச்சர்" என அழைக்கப்பட்டார். நீண்டகாலமாக இவர், தமது இறுதி வரை பூசகராக இருந்தார். பின் தெ. சின்னத்தம்பி, க. தாமோதரம், மா. தன்மப்போடி, ம. இராசையா, ஆகியோர் பூசகர்களாக இருந்து வந்தனர். அதன் பின் பூ. சதாசிவம் என்பவர் பூசகராக இருக்கும் போது 1978.11.23 ஆந் திகதி வீசிய பெரும் புயலில் சிக்குண்டு அகாலமரணமானார். அதன் பின்னர் கி. சாம்பசிவக் குருக்கள் பூசகராக இருந்து வருகின்றார்.

## நித்திய நைமித்திய பூசை விழாக்கள்

ஒரு குறிப்பிட்ட காலத்திலிருந்து வெள்ளி வாரத்தில் மதிய பூசை மாத்திரம் நடைபெற்று வந்தது. வருடாந்த உற்சவம் ஆனி உத்தரத்தில் கலிங்க கொம்பிக் கிழவி வயிற்றுவார் மக்களே பொங்கிப் பூசித்து பால் பழம் கரைத்து புற்றில் ஊற்றியதும் அதனையடுத்து வரும் வெள்ளிவாரத்தில் தேசத்தவர், பொங்கல், பெருவிழாவாக நடந்து வந்தது. இப்பொழுது செவ்வாய், வெள்ளி வாரங்களில் மதிய பூசை மட்டும் நடைபெற்று வருகின்றது. வருடாந்த உற்சவம் ஆறு திருவிழாக் கிராமங்களினால் நடாத்தப்பட்டு இறுதித் திருவிழா பொதுத் திருவிழாவாக நடைபெறுகின்றது. இவையும் ஆனி உத்தரமும் அதனையடுத்து வரும் வெள்ளிவாரத்தையுமே அடிப்படையாக வைத்து நடைபெறுகின்றது. 1982 ஆம் ஆண்டு தொடக்கம் வெளிவீதியிற் திருவிழா நடைபெற்று வருகின்றது. 1983 ஆம் ஆண்டு தொடக்கம் கிருஷ்ண ஜெயந்திப் பூசைகள் நடைபெறுகின்றன. மேலும் ஐப்பசியில் ஸ்கந்தசஷ்டி, கார்த்திகைதீபம், கார்த்திகை விநாயகர் சஷ்டி, மார்கழித் திருவாதிரை, தைப்பொங்கல், தைப்பூசம், சிவராத்திரி, சித்திரை வருடப் பிறப்பு ஆகிய விசேட பூசைகளும் நடைபெற்று வருகின்றன.

## நிதிநிருவாகம்

ஆரம்பத்தில் வண்ணக்கு முறையோ அல்லது நிருவாக அமைப்போ தர்ம கருத்தாக்கள் என்பவர்களோ இருக்கவில்லை. ஆலயத்தின் பிரபல்யம் வளர வளர அயற்கிராமத்தவர் ஆலய நிதிக்கு பொறுப்பாக முற்பட்டனர். ஆயினும் இக்கோயிலின் நிதி நிருவாகம் சரியாக நடக்க வேண்டும் என்று பொதுமக்கள் கேட்டுக் கொண்டதற்கமைய ஆங்கிலேயர் ஆட்சியின் போது; அன்று இப்பிரதேச வன்னிமை முதலியாராக இருந்தவர், இக்கோயிலின் வரவு செலவுகளையும் நிருவாகத்தையும் ஒழுங்காக நடத்துவதற்காக அக்காலத்தில் பொலிஸ் தலைமைக்காரராக இருந்த கிராம அதிகாரிகளை நியமித்தார். அவர்கள்படையாண்டவெளி அ. பொ. த. தம்பிமுத்துப்போடி விதானையார், கடுக்காமுனை செ. பொ. த வேலாப்போடி விதானையார், பண்டாரியாவெளி உ. பொ. த. தம்பிமுத்துப் போடி விதானையார் ஆகியோர் ஆவர். இவர்கள் இக் கோயிலின் மிக அண்மையில் உள்ள கிராம விதானைமார் என்ற ஒரே காரணத்துக்காக அரசினால் 1901 இல் நியமிக்கப்பட்டனர். தொடர்ந்து கிராமத் தலைவர்களது நிருவாகம் திரு. வே. கந்தப்போடி கி. த அவர்களது காலம்வரை நீடித்தது. 1963 இல் கோயில் நிருவாகம் பொதுமக்கள் கைக்கு மாறியது. 1967. 08. 04 ஆம் திகதி பொதுக்கூட்டத்தில் ஒரு நிருவாகசபை அமைக்கப்பட்டது. அம்பிளாந்துறை, கடுக்காமுனை, பண்டாரியாவெளி, படையாண்டவெளி, மகிழடித்தீவு, அரசடித்தீவு, பட்டிப்பளை ஆகிய ஆறு கிராமங்களில் இருந்து கிராமத்துக்கு மூவர் வீதம் நிருவாக சபை உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுட் தலைவர், செயலாளர், பொருளாளர், எனவும் தெரிவு செய்யப்பட்டனர். அந்த நிருவாக அமைப்பும் காலப் போக்கில் திருப்தியற்றதாகக் கருதப்பட்டு கடந்த 1987 ஆம் ஆண்டு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபையென நிருவாக சபை அமைக்கப்பட்டது. இதற்கு பொதுச்சபையிலிருந்து தலைவர், செயலாளர், பொருளாளர், உபதலைவர், உபசெயலாளர் ஆகிய ஐவரும் ஆறு திருவிழாக் கிராமங்களில் இருந்து கிராமத்துக்கு இருவர் வீதம் 12 பேருமாக மொத்தம் 17 பேர் கொண்ட நிருவாகசபை அமைக்கப்பட்டது. இவ்வாலய பரிபாலன சபைக்கு ஒரு யாப்பு விதி அமைக்கப்பட்டு பொதுச் சபையில் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

1987 ஆம் ஆண்டில் நிருவாக சபை, வெளிவீதி போதாததால் 4 ஏக்கர் நிலம் தனியாரிடமிருந்து விலைக்கிரயமாகவும், நன்கொடையாகவும் பெற்று இடவசதி ஏற்படுத்தியது. எனினும் நீண்ட காலமாக இருந்து வரும் குடிநீர்ப் பிரச்சனை தொடர்ந்தும் இருந்து வருகின்றது. 4 கிணறுகள் மட்டும் பாவனைக்குள்ளது. இதனால் உற்சவ காலங்களில் நீரைப் பெறுவதில் மிகுந்த சிரமங்கள் ஏற்படுகின்றன. அத்துடன் பக்தர்கள் தங்கியிருப்பதற்கு தங்குமிட வசதிகளும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கனவாகும்.

# தாந்தாமலை திருத்தலம்

தொகுப்பு : திரு.ச. சந்திரசேகரம்
*(ஓய்வு பெற்ற அதிபர்)*

தாந்தாமலைத் திருத்தலம் மட்டு நகரிலிருந்து மண்முனைத் துறையினூடாக சுமார் இருபத் தொன்பது கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. மண்முனைத் துறையைக் கடந்து கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய தரிசனம் பெற்று அங்கிருந்து புறப்பட்டால் சுமார் பதினாறு கிலோ மீற்றருக்கு அப்பால் நெல்வயற் பரப்புகளைக் கொண்ட மருதமும், குறிஞ்சியும், முல்லையும் சூழத் தாந்தாமலைத் திருத்தலம் அமையப் பெற்றுள்ளது. வயற் பிரதேசத்தினூடாகச் செல்லும்போது வாழைக்காலை என்னும் வயற்பிரதேசத்தை அடைந்ததும் தாந்தாக் குன்றில் எழுந்தருளியிருக்கும் பிள்ளையார் ஆலயத்தின் காட்சி கிடைக்கும். மட்டு – கல்முனை பிரதான வீதியில் இருந்து பட்டிருப்பு ஊடாகவும் தாந்தாப் பதிக்கு வரலாம். இது தவிர உன்னிச்சையினூடாகவும் இத்தலத்திற்கு வரலாம்.

## வரலாற்றுச் சுருக்கம்

தொன்று தொட்டு இருந்து வந்த மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்றும் உள்ள மூன்று மலைக்கோயில்கள் பற்றி "மட்டக்களப்புச் சைவக்கோயில்கள்" என்னும் நூலிற் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. இவை, உகந்தைமலை முருகன் கோயில் சங்குமண்கண்டிப் பிள்ளையார்கோயில், தாந்தாமலை முருகன் கோயில் என்பனவாகும். இம்மலைக்கோயில்கள் மூன்றும் ஒன்றோடொன்று தொடர்புடைய சரித்திரச் சான்றுகளைக் கொண்டுள்ளன என்பதை அறியமுடிகின்றது.

உகந்தைமலை முருகன்கோயில் மிகப் பழமை வாய்ந்தாகும். இது அக்காலத்தில் உன்னரசுகிரியெனப் பெயர் பெற்று விளங்கிய தென்றும், மிகப் பழங்காலத்தே மட்டக்களப்பு நாட்டின் இராசதானியாக இருந்தென்றும், கலிபிறந்து 3130ம் ஆண்டில் நகராக்கி அரண் செய்யப்பட்டதென்றும் 'மட்டக்களப்பு மான்மியம்' என்னும் வரலாற்று நூல் வாயிலாக அறிய முடிகின்றது. சங்கு மண்கண்டி மலைக்கோயிலும் பழமை வாய்ந்ததெனக் கூறப்படுகின்றது. சங்குமண்கண்டி மலை தலையாகவும், அக்காலத்தே தாண்டகிரி என அழைக்கப்பட்டதும் தற்காலத்தில் தாந்தாமலை என அழைக்கப்படுவதுமான மலையைக் காலாகவும் கொண்டு பரந்துபட்ட மட்டக்களப்புப் பிரதேசத்தில் நெல் விளைநிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்யப் பல குளங்களையும் அமைக்க எண்ணங் கொண்டு, இவ்விரு மலைகளுக்குமிடையே பரந்திருந்த பிரதேசத்தில் பல குளங்களை அமைக்குந் திட்டத்தினை, அக்காலத்தே உன்னரசுகிரியை (உகந்தை மலை) இராசதானியாகக் கொண்டு மட்டக்களப்பு நாட்டை ஆட்சி செய்த மேகவர்ணன் என்னும் அரசனும், அவனுக்குப் பின் அவனது மகள் ஆடகசவுந்தரியும், அவள் கணவன் மகாசேனன் என்னும் மன்னனும் திட்டமிட்டுச் செயற்பட்டுவரலாயினர். தாண்டகிரி (தாந்தாமலை) உன்னரசு கிரிக்கு (உகந்தை மலை) மிகத் தொலைவில் உள்ளதால் தாண்ட கிரியிற் தங்கியிருந்து பணிகளைக் கவனிக்கவேண்டிய அவசியம் ஏற்படவே, அரசனும் அரசியின் விருப்பத்திற்கமைவாக தாண்டகிரியிற் தமக்கென அரண்மனை அமைத்துக் கொண்டதோடு பரிவாரங்களுக்குத் தங்குமிடவசதிகளும் சபா மண்டபங்களும் அமைத்தான். இவற்றை ஆதாரமாகக் கொண்டு அரசியற் கருமங்களையும், குளங்கள் அமைத்தல், கால்வாய்கள் அமைத்தல் முதலான வேலைகளையும் அரசி கவனித்து வந்தாள் எனக்கூறப்படுகிறது.

இதற்கு முன்னரே மட்டக்களப்பு நாட்டை ஆட்சி செய்த ஆடக சவுந்தரியின் தந்தையான மேகவர்ணன் – உன்னரசுகிரி மன்னன், சங்குமண் கண்டிக்கும் தாண்டகிரிக்கும் இடையேயுள்ள பரந்த நெல் விளை நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகளுக்காக இருபத்து நான்கு ஏரிகளை இயற்றுவித்தான் என்றும் அறிய முடிகின்றது. இவன் மழைக்காகத் தெய்வங்களை வணங்கி மழை பெய்விப்பதும், வேண்டிய இடங்களில் குளங்களை அமைப்பதும் ஆகிய விவசாயத்திற்கான ஊக்கமும் ஆக்கமுமே தனது இலட்சியமாகக் கொண்டு ஆட்சி செய்து வந்தான். அவ்வாறே மட்டக்களப்பு நாட்டின் வடபுறத்தே தாண்டகிரியில் மழைக்காகப் பொங்கல் பூசைகள் செய்து மழை பெய்வித்து விவசாயிகள் வளம்பெற ஆண்டு வந்தான் என்பதும் வரலாறாகும்.

தந்தையைப் போன்று மகள் ஆடகசவுந்தரியும் அவளது கணவன் மகாசேனன் மன்னனும் தமது பணிகளைச் செய்வாராயினர். அத்தோடு தாந்தாமலையில் ஒரு லிங்கம் வைத்து வழிபாடு செய்து வந்தனர் என்றும் மழை குறைந்த காலங்களில் பொங்கல் வைத்துப் பூசைகள் செய்து மழை பெய்வித்து நாடு செழித்து வளம்பெற நல்லாட்சி செய்து வந்தனர் என்றும் கூறப்படுகின்றது. இதனை அடியொற்றி இப்பிரதேச மக்கள் பரம்பரை பரம்பரையாக மழை வேண்டிப் பொங்கல் பூசைகள் செய்து, மழை பெய்ய, வளம் பெற்று வாழ்ந்து வருவராயினர்.

மகாசேனன் மன்னனே குளக்கோட்டன் என அழைக்கப்பட்டான். இவனே கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தையும் அமைத்தான் என்பது

வரலாறாகும். தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திற்கும் தாந்தாமலைத் திருப்பதிக்குமிடையே தொடர்புகள் இருந்திருக்க வேண்டும் என்பதை அறிய முடிகின்றது.

காலப்போக்கில் நாட்டில் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டதால், ஆட்சி மையங்கள் இடம்மாறவேண்டியதாயிற்று. இதனால் தாந்தாத் திருப்பதி அதன் முன்னைய செல்வாக்கை இழந்தது. தாந்தாமலைக் குன்றின் மீதமர்ந்த பிள்ளையாருக்கு மழைவேண்டிப் பொங்கல் பூசை செய்வதோடு மட்டும் வழிபாடு குறுகியது.

## தாந்தாமலைத் திருத்தலத்தின் மறுமலர்ச்சி

விவசாயிகள் தமது பயிர்ச்செய்கைக்காகவும் மந்தை வளர்ப்புக்காகவும் மழை கிடைக்கப் பெறுவதற்காகவும் தாந்தாமலைப் பிள்ளையாருக்குப் பொங்கல் பூசை செய்து வழிபட்டு வந்தனர். 1956ம் ஆண்டு காலத்தில் நாட்டில் நிலவிய இனக்கலவரங் காரணமாக கதிர்காமக் கந்தன் ஆலயம் சென்று வழிபாடு செய்வதற்குத் தடை ஏற்பட்டது. இதனால் இப்பிரதேச மக்கள் தாந்தாப் பதியை மீண்டும் அபிவிருத்தி செய்து முருக வழிபாடு செய்வதற்குத் திட்டமிட்டனர். இதற்கு முன்னராக தாந்தாக் குன்றின் உச்சியில் இருந்த சிலிந்தி மரத்தடியில் (இன்றும் இம்மரம் அதே நிலையிற் காணப்படுகின்றது) வீற்றிருந்த கல்லாலான பிள்ளையார் முன் பொங்கிப்படைத்து வழிபட்டு வந்தனர். பின்னர் மகிழடித்தீவைச் சேர்ந்த வே. உ. குமாரசிங்கம் என்னும் அடியவர் பிள்ளையாருக்கான ஆலயத்தை முதலில் அமைத்தார் என அறிய முடிகின்றது. இதன் பின்னர் காலப்போக்கில் நிரந்தரமான கல்லாலான ஆலயம் அமைக்கப்பெற்று இன்றைய நிலையில் உள்ளது.

தாந்தாப் பதியில் முருகன் ஆலயம் ஒன்றினை அமைப்பதற்காக முனைக்காடு கிராமத்தைச் சேர்ந்த அடியார்கள், திருவாளர்கள் கு. வ. வி. சின்னத்தம்பி, க. மாமாங்கப்பிள்ளை, கா. பாலிப்போடி வைத்தியர், தா. பிள்ளையாப்போடி, பெ. பொன்னம்பலம், சீ.பூபாலபிள்ளை வெ. கனகசபைப்போடி ஆகியோரின் வழி நடத்தலில் பல அடியார்களும் கிராமமக்களும் சென்று இடத்தைப் பார்த்து பழையபடி மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன பொருத்தமாக அமையும் வண்ணம் குன்றினுக்கு மேற்காக அடிவாரத்தில் அடர்ந்திருந்த பெருங்காட்டை வெட்டி துப்புரவு செய்து, பாதையும் அமைத்து நிலத்தையும் செப்பனிட்டுக் கொத்துப் பந்தரினாற் கோயிலும் அமைத்தனர். வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் இத்திருத்தொண்டில் மகிழத்தீவு திரு வே. உ. குமாரசிங்கம், திரு. கதிரவேலாப்போடி, திரு. ந. கனகசபை ஆகியோர் தம் ஒத்துழைப்பை நல்கினர்.

1956ம் ஆண்டு முதன்முதலாக ஆறு திருவிழாக்களுடன் ஆடிப் பௌர்ணமித் தீர்த்தோற்சவமும் நடந்தேறியது. இதற்கான செலவினங்கள் எல்லாம் முனைக்காடு மக்களால் செய்யப்பட்டதாக அறிய முடிகின்றது. கொத்துப் பந்தரினுள் மிகப் பழமையானதும் அப்பகுதித் திருத்தவேலைகளின் போது கண்டெடுக்கப்பட்டதுமான விக்கிரகமும் வேல் ஒன்றும் வைத்துப் பூசிக்கப்பட்டது. இரண்டடி உயரத்திற்கு அளவைக் கொண்டதும் வெண்கலத்தினால் செய்யப்பட்டதுமான மேற்குறிப்பிடப்பட்ட வேலினை முனைக்காடு திரு. கா. பொன்னம்பலம் அவர்கள் உபயமாகக் கொடுத்துதவினார். திருவிழாவிற்கான வாகனங்கள் எதுவுமில்லாத காரணத்தினால் உடனடியாக ஏடகம் ஒன்று செய்யப்பட்டது. இது தற்போதும் ஆலயத்தில் உள்ளது. இவ்வேடகத்துள் வெள்ளியினால் செய்யப்பட்ட பேழைக்குள் தங்கத்தினால் ஆன வேல் ஒன்றும் அதைத்தாங்கியபடி பொன்னாற் செய்யப்பட்ட தாமரைப் பூவும் வைக்கப்பட்டுத் திருவிழா நடத்தப்பட்டது. கப்புகனாராக திரு. கா. பாலிப்போடி வைத்தியர் முன்னின்று நடத்தி முடித்தார். இந்த உற்சவமானது அவ்வாண்டு ஆடிப் பௌர்ணமியில் தீர்த்தோற்சவத்துடன் நிறைவடைந்தது. தீர்த்தக்குளம் தூர்ந்து கிடந்த காரணத்தினாலும் கிணறுகள் ஏதும் இல்லாமையாலும் தண்ணீர்க் கஷ்டம் (தட்டுப்பாடு) வெகுவாகப் பாதித்தது. கோடைகால வெப்பம் அடியார்களைப் பாதிக்காதிருக்க அக்காலத்தில் பட்டிருப்புத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. சோ. உ. எதிர்மன்னசிங்கம் அவர்கள் தமது சொந்தச் செலவிலும் முயற்சியிலும், அரச அதிகாரிகளின் உதவியைப் பெற்றும் தண்ணீர் ஏற்றிக் கொடுத்து பெருந் தொண்டாற்றினார்கள். இவ்வாண்டில் அவர், அடியார்களுக்கு தமது செலவில் பெரிய அன்னதானத்தினையும் வழங்கி உதவினார். மேலும் தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு அன்னதானப் பணியை திருவிழாக் காலத்தில் நடத்தி உதவினார். மேலும பலர் இவ்வருடம் தண்ணீர்க் கஷ்டத்தைக் குறைக்கு முகமாக தம்மாலான உதவிகளைச் செய்தனர். அவ்வாறு குறிப்பிடக் கூடியவர்களில் திரு .சீனிவாசகம் பூபாலபிள்ளை அவர்கள் தமது இரட்டை மாட்டு வண்டியில் தண்ணீர்க் குடங்களைத் தூர இடங்களிலிருந்து ஏற்றிவந்து இராப்பகலாக அடியார்களுக்கு நீர் வசதி செய்தார் என்பதையும் அறிய முடிகின்றது. இவரது சேவையினையும் தாந்தாமலை அப்பனிடத்திலுள்ள மேலான பக்தியையும் கண்ணுற்ற தேசத்து மக்கள் முதன்முதலாக முதன்மை வண்ணக்கராக நியமித்தனர். 'தாந்தாமலைத் தொண்டன்' என்றும் அழைக்கப்பட்ட இவர் தாந்தாமலை வண்ணக்கர் என்ற பதவிப் பெயரோடு இறுதி வரை வாழ்ந்தார்.

## ஆலய நிருவாகசபை அமைப்பு

1956 – 12 – 09 திகதியில் கூட்டப்பட்ட தேச மகாசபைக் கூட்டத்தில் ஆலயத்திற்கான முதலாவது நிருவாக சபை அமைக்கப்பட்டது. தலைவராக திரு. க. மாமாங்கப்பிள்ளை உப

தலைவராக திரு. வெ. வ. வி. கனகசபை, காரியதரிசியாகத் திரு. சீ. பூபாலபிள்ளை, உப காரியதரிசியாக திரு. பெ. வ. வி. பொன்னம்பலம், தனாதிகாரியாக திரு. தா. பிள்ளையாப்போடி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் நிருவாகசபை உறுப்பினராக ஆறுபேர் தெரிவு செய்யப்பட்டனர். இச்சபையை, "தாந்தாமலை முருகன் ஆலயம் சாது சங்க சேவை" என அழைக்கப்படவும் முடிவு செய்யப்பட்டது. நிருவாக சபையிடம் நிதி இல்லாத காரணத்தினால் நிருவாகசபை உறுப்பினர் ஒவ்வொருவரும் ஆளுக்குப் (10) பத்து மரைக்கால் நெல் வருடாவருடம் கொடுத்து மூலதனத்தைப் பெருக்கிச் செலவினங்களை ஈடுசெய்ய வேண்டுமெனவும் தீர்மானிக் கப்பட்டது. இப்பணம் திருப்பணிவேலைகளுக்காகவே செலவிடப்படவேண்டுமெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1957 ம் ஆண்டு உற்சவத்தை நிருவாக சபையினரே நடத்த வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. ஆசாரியபிசேகம் பெற்ற குருக்களைக் கொண்டு கிரியைகள் செய்து கொடியேற்றித் திருவிழா தீர்த்தம் என்பன நடத்தப்பட வேண்டுமெனவும் முடிவெடுக்கப்பட்டது. இத்தகைய குரு ஒருவரை வெளியிலிருந்து தருவித்து உற்சவத்தை நடத்துவதற்குப் போதிய நிதிவசதி யில்லாமையால், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயக் குருக்களின் சேவை பெறப்பட்டது.

தனித்துவமாக இவ்வாலயத்தின் நிருவாகத்தினை முன்னெடுத்துச் செல்வதில் பலகஷ்டங்களும் இடர்பாடுகளும் நிதி நெருக்கடியும் இருந்த காரணத்தினால் 1959 ம் ஆண்டில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய நிருவாகத்தின் கீழ் தாந்தாமலை ஆலயம் ஒன்றிணைக்கப்பட்டது. தான்தோன்றீஸ்வரர் ஆலய வண்ணக்குமார் இரு ஆலயங்களினதும் நிருவாகத்தையும் நிதிப்பொறுப்புகளையும் ஒன்றாக நடத்தினர்.

இம்முறையான நிருவாகத்தில் பொதுமக்கள் திருப்திப்படாத காரணத்தினால் தாந்தாமலை ஆலயத்திற்கெனத் தனியான ஒரு நிருவாகம் அமைக்கப்படவேண்டுமெனத் தேசமகாசபையில் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி தாந்தாமலை ஆலய நிருவாக அமைப்புக்கான விசேட பொதுக் கூட்டம் 1962 ம் ஆண்டு ஆனி முற்பகுதியில் கூட்டப்பட்டது. "தாந்தாமலை ஆலய பரிபாலன சபை" என்னும் பெயரோடு ஒரு நிருவாகசபை அமைக்கப்பட்டது. மகிழடித்தீவு திரு. தி. பொன்னம்பலம் அவர்கள் சபைத் தலைவராகவும் அரசடித்தீவு திரு. த. வ. வி. கதிராமப்போடி அவர்கள் செயலாளராகவும் இலுப்படிச்சேனை திரு. செ.வ.வி வேலாப்போடி அவர்கள் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் பரவலாக பல ஊர்களிலிருந்தும் பத்து நிருவாகசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அவ்வாண்டு கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரர் ஆலயக்குருக்கள் மற்றும் தொண்டூழியர்களினதும் சேவை கிடைப்பதற்கு வழியில்லாமற்போனதால் தேசமகாசபையின் தீர்மானப்படி மகிழடித்தீவு ஆலயக் குருக்களாகவிருந்த திரு. க. கணேசமூர்த்தி குருக்கள் தலைமையில் குருக்கள்மாரும் மகிழடித்தீவு அடியார்கள் சிலரும் முன்வந்து ஆலய வருடாந்த உற்சவ நிகழ்ச்சிகளை திறம்படச்செய்து உதவ அவ்வாண்டு உற்சவம் சிறப்பாக நிறைவடைந்தது.

இவ்வாறு தாந்தாமலை ஆலய நிருவாகம் தனித்தியங்கி வரும் போது, தாந்தாமலை ஆலய நிருவாக சபைச் செயலாளர் திரு. த. வ.வி. கதிராமப்போடி அவர்கள் ஸ்ரீதான்தோன்றீஸ்வரர் ஆலயத்திற்குப் படையாண்டகுடி வண்ணக்காரகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் வண்ணக்கர் என்ற அடிப்படையிலேயே ஏனைய இரு வண்ணக்குமாருடன் இணைந்து செயலாற்றவே தாந்தாமலை ஆலய நிருவாகசபையின் தனித்துவம் அற்றுப்போய் விட்டது. ஆயினும் திருப்பணிவேலைகள் நிறைவேற்றப்பட்டு வந்தமையால் பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்கி வந்தனர்.

ஆயினும் தேசமக்கள் தாந்தாமலை ஆலய நிருவாகசபை புனரமைக்கப்படவேண்டுமென வலுவான கோரிக்கை விடுத்ததன் காரணமாக 1981ம் ஆண்டு ஆவணி மாதத்தில் தேசமகாசபை என்னும் பொதுக் கூட்டம் கூட்டப்பட்டது. இக்கூட்டத்திலே தாந்தாமலை ஆலய நிருவாகத்திற்கென ஒரு யாப்பு தாயாரிக்கப்படவேண்டும் என்னும் தீர்மானம் எடுக்கப்பட்டு, அதன்படி பொதுச்சபையிலே இருந்து தலைவர், உபதலைவர், செயலாளர், உபசெயலாளர் பொருளாளர் என்னும் ஐந்துபேரும் தெரிவு செய்யப்படுவர். நிருவாகசபை உறுப்பினர்களாக ஒவ்வொரு திருவிழா நடத்தும் கிராமத்திலிருந்தும் இருவர் தெரிவு செய்யப்படுவர். இவ்வாறு பரந்த அடிப்படையிலான நிருவாக அமைப்பினைக் கொண்ட ஆலய நிருவாகம் நடைபெறவேண்டுமென பொதுச்சபையில் தீர்மானிக்கப்பட்டது. இவ்வமைப்பின் முதலாவது தலைவராக பா. மயிலிப்போடி அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். இவ்வமைப்பு முறையிலேயே தொடர்ந்து ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நிருவாகசபை புதுப்பிக்கப்பட்டு, ஆலயம் நிருவகிக்கப்படுகின்றது. இதுவே இன்றுள்ள நிருவாக அமைப்பாகும்.

*தற்போதுள்ள ஆலய நிருவாகிகள்:– (1998 ம் ஆண்டு)*

| | | |
|---|---|---|
| தலைவர் | – | திரு ஞா. துரையப்பா |
| உபதலைவர் | – | திரு. க. தாமோதரம் |
| செயலாளர் | – | திரு சி. புஸ்பலிங்கம் |
| உப செயலாளர் | – | திரு. ந. சிவநாயகம் |
| பொருளாளர் | – | திரு. ந. தாமோதரம் |

இவர்களுடன் திருவிழா நடத்தும் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் இருவர் நிருவாகசபை உறுப்பினர்களாகக் கடமையாற்றுகின்றனர்.

### தாந்தாமலை திருப்பதியில் வருடாந்த உற்சவம்

ஆடி மாதம் பூர்வபட்சப் பிரதமை திதியில் கொடியேற்றம் ஆரம்பமாகி - ஆடிப் பௌர்ணமித் திதியும் திருவோண நட்சத்திரமும் கூடிய சுபநேரத்தில் தீர்த்தோற்சவம் நடைபெற்று வருடாந்த உற்சவம் நிறைவடையும்.

### திருவிழா ஒழுங்கு:-

1 ம் திருவிழா - கொடியேற்றம் - ஆலய நிதியில் நடைபெறும்
2 ம் திருவிழா - தாந்தாபுரம் பொதுமக்கள்
3 ம் திருவிழா - இலுப்படிச்சேனை, கொத்தியாபுலை மக்கள்
4 ம் திருவிழா - புதுக்குடியிருப்பு கிராம மக்கள்
5 ம் திருவிழா - அம்பிளாந்துறை கிராம மக்கள்
6 ம் திருவிழா - மண்முனை கிழக்கு கிராம மக்கள்
7 ம் திருவிழா - 40 வட்டையும் அயற் கிராமங்களும்
8 ம் திருவிழா - பனிச்சையடி முன்மாரியும் அயற்கிராமங்களும்.
9 ம் திருவிழா - எருவில் மக்கள்
10ம் திருவிழா - மகிழடித்தீவு, பண்டாரியாவெளி, தாழங்குடா மக்கள்.
11ம் திருவிழா - அரசடித்தீவு, கடுக்காமுனை மக்கள்
12ம் திருவிழா - முதலைக்குடா மக்கள்
13ம் திருவிழா - கன்னன்குடா, மண்டபத்தடி, குறிஞ்சா முனை மக்கள்.
14ம் திருவிழா - கொக்கட்டிச்சோலை மக்கள்
15ம் திருவிழா - முனைக்காடு மக்கள்
16ம் திருவிழா - தீர்த்தத் திருவிழா - ஆலய நிதியில் நடைபெறும்.

### ஏனைய நித்திய நைமித்திய பூசைகள் விழாக்கள்

தினப்பூசை மதியத்தில் நடைபெறுகின்றது. விசேட காலங்களில் விசேட பூசைகள் நடைபெறுகின்றன. ஆடி அமாவாசை, ஆவணிச் சதுர்த்தி, புரட்டாதி நவராத்திரி, ஐப்பசி ஸ்கந்தசஷ்டி, சூரன்போர், திருக்கல்யாணம், திருப்பொன்னூஞ்சல், கார்த்திகைத் திருவிழா, கார்த்திகை விரதம், மார்கழித் திருவாதிரை, தைப்பொங்கல், தைப்பூசம், மாசிமகம், சிவராத்திரி, பங்குனி உத்தரம், சித்திரை வருடப்பிறப்பு, சித்திரைச் சித்திரை வைகாசி விசாகம், ஆனி உத்தரம் என்பன விசேட விழாக்களும் பூசைகளுமாகும். இவற்றுள் ஸ்கந்தசஷ்டியும் சூரன் போரும் கார்த்திகைத் திருவிழாவும் தீர்த்தமும் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன.

### முருகன் ஆலயத்தைச் சூழ்ந்துள்ள பரிவாரக் கோயில்கள்

விஷ்ணு, வள்ளியம்மன், முத்துலிங்கேஸ்வரர், வைரவர் நாகதம்பிரான், தெய்வானை அம்மன் அகிய மூர்த்திகளுக்கான திருக்கோயில்கள் முருகன் ஆலயத்தைச் சூழ்ந்து அமைக்கப்பட்டுள்ளன. தாந்தாமலை ஆலயத்தின் முதலாவது நிருவாக சபையில் தனாதிகாரியாகச் செயலாற்றிய திரு. தா. பிள்ளைபாப்போடி அவர்களால் விஷ்ணு ஆலயம் உபயமாக அமைத்துக் கொடுக்கப்பட்டதென அறியமுடிகின்றது. மூலவரான முருகப்பெருமானுக்கு பூசைகள் நடைபெறும் போது இப்பரிவார மூர்த்திகளுக்கும் பூசைகள் நடைபெற்று வருகின்றன.

### தாந்தாமலை அப்பனின் மகிமையும் அற்புதங்களும்

1957 ம் ஆண்டு வருடாந்த உற்சவத்திற்கு வந்திருந்த மட்டக்களப்பு தாண்டவன்வெளியை பிறப்பிடமாகக் கொண்ட இலட்சுமி என்னும் பெண்மணி தலத்தில் கிணறு அமைப்பதற்கு ரூபா 300/- நிருவாகத்திடம் வழங்கி வேலைகளை கோயில் நிருவாகமே கவனித்துக் கிணற்றைக்கட்டி முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க கிணறு அமைக்கும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது இரண்டு பீப்பாக்கள் சீமேந்து கொண்டு செல்ல வேண்டியேற்பட்டது. கொக்கட்டிச் சோலைவரையும் கொண்டு வரப்பட்ட சீமேந்துப் பீப்பாக்களை தாந்தாவரை கொண்டு செல்வதற்கு, சீரான பாதையில்லாத காரணத்தினால் மிகச்சிரமமாக இருந்தது. மாட்டு வண்டிமூலமே ஏற்றிச் செல்லும் வாய்ப்பு இருந்தது. இரண்டு சீமேந்துப் பீப்பாக்களையும் ஏற்றிச் செல்ல இரண்டு வண்டில்கள் தேவைப்பட்டன. ஆயினும் கோயில் நிருவாக சபைத் தலைவரிடம் ஒரு வண்டி மாத்திரம் இருந்தது. இன்னுமொரு வண்டி தேடி பல இடங்களில் அலைந்தும் முயற்சி கைகூடாமையினால் நிருவாகத்தினர் மனமுடைந்து, ஒரே வண்டியில் இரு பீப்பாக்களையும் ஏற்றி மாடுகளோடு சேர்ந்து தாமும் தள்ளியும் இழுத்தும், கஷ்டம் எது வந்தாலும் எதிர்கொண்டு, சேர்ப்பதென முடிவு செய்தனராம். இதன்படி அன்றிரவு வண்டியை எடுத்துக் கொண்டு முனைக்காட்டில் இருந்து புறப்பட்டு சிவாலயம் சென்று வணங்கிவிட்டுப் பீப்பாக்களை ஏற்றுவதற்குச் சென்றனர். ஒரு சீமேந்துப் பீப்பாவை ஏற்றிக் கொண்டிருக்கும் போது, தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில், வாய்பேச முடியாத ஊமையென்ற பழிச் சொல்லுக்கு மனம் வருந்திப் 'பழிகிடக்கச்' சென்றிருந்த முனைக்காடு சிதம்பரி பாலிப்போடி என்பவருக்குக் கனவில், "தாந்தாவுக்குச் சீமேந்து ஏற்றுவதற்கு வண்டியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள் வண்டியொன்று வருகிறது என்று உரத்த குரலில் கூவென்று சொல்" எனப் பணிவிடையானது. அதன்படி அவர் தனது வாயாற் சொல்லிக் கூவென்று சத்தமிட்டாராம். அன்று தொடக்கம்

அவரது நிலைமாறி வாய்பேசக் கூடிய வரத்தையும் பெற்றார். இவரது கூவென்ற சத்தம் கேட்டுச் சிறிது நேரத்தில் தாழங்குடாவிலிருந்து ஒருவர் வண்டியோடு வயலுக்குப் போக வந்தார். அவரிடம் சீமேந்துப் பீப்பாவை ஏற்றிக் கொண்டு தரும்படி கேட்டபோது அவர் மிகச் சந்தோசத்தோடு ஏற்றிக் கொடுத்துதவினார். இந்நிகழ்ச்சியானது தாந்தாமலை அப்பனின் அற்புதத்தினைக் குறிக்கின்றது.

ஆரம்ப காலத்தில், தாந்தா மலைப் பதியினை காடு வெட்டிக் துப்பரவு செய்து செப்பனிடும் வேலை ஆரம்பமான ஒருநாள் இடம்பெற்ற மெய் சிலிர்க்கும் நிகழ்வினை இங்கு குறிப்பிடுதல் பொருத்தம். காடுவெட்டித்துப்புரவு செய்யும் வேலைக்காக ஒரு குழுவினர் பதியைச் சென்றடைந்து, சமைக்கும் பொருட்களை ஒரு மர நிழலில் வைத்துவிட்டு அவ்விடத்தில் ஒருவரைச் சமையல்வேலைகளுக்காக விட்டுவிட்டு ஏனையோர் காடு வெட்டும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். அந்த நேரம் பகல் மதியநேரம். சமையல் பொருட்கள் இருந்த இடத்தில் என்றுமே கேட்டிராத இடிபோன்ற பெரிய ஓசை ஒன்று உண்டாயிற்றாம். காடுகள் முழுவதும் அதிர்ந்தது போன்றிருந்ததாம். சமையலுக்காக இருந்தவர் செய்வதறியாது திகைத்து அப்படியே குந்தியிருந்தாராம். காடுவெட்டக் காட்டினுட் புகுந்தவர்கள் வெளியேறி ஓடிச் சமையலுக்காக விட்டுச் சென்ற இடத்திற்கு வந்து பார்த்தபோது சமையலுக்கு நின்றவர் மரக்கட்டை போல் விறைத்துப்போய் இருப்பதைக் கண்டு, சமையல் சாமான்களையும் எடுத்துக் கொண்டு மலையில் உணவு தயாரித்து உண்டு, காடுவெட்டித் துப்பரவு செய்தனராம். இதனை ஒரு அதிசய நிகழ்வாக நேரில் அனுபவித்தவர்கள் கூறியுள்ளனர்.

தாந்தாப் பதியின் மகிமைபற்றியும் தாந்தாமலை அப்பனின் அருட்கருணை பற்றியும் அறிஞர்கள், அடியார்களால் ஆய்வுரைகளும், கட்டுரைகளும், பாடல்களும் ஆக்கப் பெற்றுள்ளன. குறிப்பாக, திரு. ந. நடராசா அவர்கள் "தாந்தாமலை மகிமை" என்னும் ஒரு நூலினை வெளியிட்டிருந்தார். அவர் தமது ஆய்வு நூலில், கண்ணகி வழிபாடு கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் ஆரம்பமானதென்றும் அதன்பின் 'கண்ணகி வழக்குரை' எழுதப்பட்ட காலத்திலே தாந்தாமலை, கதிர்காமம், திருக்கோயில், மண்டூர் என்பன சிறப்பாக சைவர்களால் வழிபட்டு வந்தன என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் இராவணனின் மைந்தன் இந்திரசித்து இலக்குவனோடு போர் செய்து தோற்றோடிச் சென்று நிகும்பலை யாகம் செய்து போரிலே மரணித்த அரக்கர்களை உயிர்பிழைக்க வழி அமைத்தான் என்றும் அவ்வேளை இலக்குவன் அவ்விடம் சென்று அவனுடன் யுத்தம் செய்து கொன்றதாகவும் அவ்விடம் நிகும்பலை யாகம் செய்த இடமே தாந்தாமலை ஆலயத்திற்கு மிக அண்மையில் உள்ள அடைச்சகல் என்னுமிடமாகுமென்றும் கர்ண பரம்பரைக் கதை இப்பகுதியிலே நிலவி வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இத்தலம் பற்றி எழுதப்பட்ட "தாந்தாமலை ஸ்ரீ முருகப் பெருமான் ஆலய வரலாறு" என்னும் நூல் குறிப்பிடத்தக்கதாகும். இந்த நூலினை ஆக்கியவர் மகிழடித்தீவு, பிறப்பு இறப்பு, விவாகப் பதிவுகாரரும் முன்னைநாள் அதிபருமாகிய திரு. க. கனகநாயகம் அவர்களாகும். தாந்தாமலைத் திருப்பதியின் பழைய வரலாறு, தற்கால வரலாறு, பற்றிச் சிறப்பாக எழுதியுள்ளார்.

தாந்தப்பதிபற்றிப் பல பாடல்கள் காலத்துக்குக் காலம் பாடப் பெற்று வந்துள்ளன. எடுத்துக்காட்டாக பழுகாமம் திரு. ஐ குழந்தைவேல் பண்டிதரால், தாந்தாமலைப் பதிகம், காவடிப்பாட்டு என்பனவும் திரு. வ. வி. செம்பாப்போடி ஆசிரியரால், தாண்டவமலைச் சக்தி வேலவர் பெயரிற் பதிகம் என்னும் பாடல் நூல் ஒன்றும் வெளியிடப்பட்டது. மட்டுநகர் திரு. ந. நடராசா எம்.ஏ. அவர்களால் ஆக்கப்பட்ட தோத்திரமாலை என்னும் நூலில், தாந்தாமலைப் பதிகம், தாந்தா மலைச் சாழல், தாந்தாமலைச் சிந்து, தாந்தாமலைக் கும்மி, தாந்தாமலைத் தெம்மாங்கு, தாந்தாமலைப் பிடித்த பத்து, தாந்தாமலை முருகன் புகழ்மாலை, தாந்தாமலை முருகன் காவடிச்சிந்து, தாந்தாமலை ஆற்றுப்படை என்பன பாடப்பட்டுள்ளன.

'தா' என்று இரந்து கேட்போர்க்கு 'இந்தா' என்று வரமளிக்கும் தாந்தா மலை அப்பன், வழி தவறியோர்க்கு வழிகாட்டியும், நோய் பிணி தீர்த்தும், வாழ்வளித்தும் அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றான். அவன் தாள் வணங்கி அவன் அருள் பெற்றுய்வோமாக.

*குறிப்பு:*

இத்தொகுப்பினை ஆக்குவதற்கு பின்வருவன எடுத்தாளப்பட்டன.

1. மகிழடித்தீவு திரு. க. கனகநாயகம் அவர்களால் எழுதப்பட்ட 'தாந்தாமலை ஸ்ரீ முருகப்பெருமான் ஆலய வரலாறு' என்னும் மூல நூல்.
2. தாந்தாமலை முருகப் பெருமான் ஆலய நிருவாக ஆவணங்கள்.
3. ஆலய நிருவாகத்தினருடனான நேரடிப்பேட்டி.

# தான்தோன்றீச்சரத்தின் பூசைகளும் விழாக்களும்

க. மகேஸ்வரலிங்கம் B.A. (Cey).
*கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்.*

ஸ்ரீ சைவத்திருக் கோயில்களில் வழிபடுவோருக்கு இறைதரிசனமும், மெய்யுணர்வும் நல்குவதற்காக பூசைகளும், விழாக்களும், விரத நிகழ்ச்சிகளும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. திருக்கோயில்களில் இவற்றை எவ்வாறு செய்தல் வேண்டும் என்பது பற்றி ஆகமங்களும், பிற சுருதிகளும் பொதுவாக விதி அமைத்துத் தந்துள்ளன. எனினும் வரலாற்றுத் தொன்மை மிக்க கோயில்களில் அனுபவத்தால் சில தனித்தன்மைகளும், சிறப்பியல்புகளும், பூசைகளிலும், திருவிழாக்களிலும் தோன்றி வளர்ந்து வந்துள்ளமையைக் காணலாம். இவ்வகையில் ஓர் ஆயிரம் ஆண்டிற்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரத்தின் அனுபவத்தில் பூசை விழாக்களில் பல தனித்தன்மைகளும், சிறப்பியல்புகளும் தோன்றி வளர்ந்து வந்துள்ளமையை அவதானிக்கலாம். இவற்றை இயன்ற அளவு சுருக்கமாக எடுத்துக் காட்ட இங்கு முயற்சிப்போம்.

தான் தோன்றீச்சரத்தின் அனுபவத்தில் பூசைகள், திருவிழாக்கள், விரத நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் தனித்தன்மையும், சிறப்பியல்புகளும் தோன்றுவதற்கு ஏதுவாக இருந்த காரணிகளைப் பின்வரும் முறையில் வகைப்படுத்திக் காட்டலாம்.

1. சுற்றாடலில் இயற்கை அமைவும் செய்தொழிலும்
2. குடியேற்றமும், சாதிப்பிரிவுகளும்
3. காலத்துக்குக் காலம் மாறிவந்த வழிபாட்டு முறைகள்
4. தொண்டூழிய முறை
5. பெருமாற்றம் காணாத வரலாறு
6. அறிவுத்துறையில் புரட்சிகர மாறுதலின்மை

### 1). சுற்றாடலில் இயற்கை அமைவும் செய் தொழிலும்

மட்டக்களப்பு வாவியாலும், அடர்ந்த காட்டாலும், நீரோடைகளாலும் குழப்பட்டிருந்த கொக்கட்டிச் சோலைக் கிராமத்தை அந்த நாட்களில் வந்தடைவதென்பது அயலில் வாழ்ந்த மக்களுக்கு இலகுவாக இருக்கவில்லை. ஆரம்ப காலங்களில் தான்தோன்றீச்சரத்தில் பூசை செய்த பூசகர் கூட மணற்பிட்டிக் கிராமத்தில் இருந்து வாவியைக் கடந்து வந்து பூசை செய்து சென்றார் என்று கூறப்படுகின்றது. எழுவான்கரை மக்கள் மண்முனைத் துறையினூடாக வாவியைக் கடப்பதில் பல சிரமங்களை எதிர்நோக்கினர். இத்தகைய சிரமங்களால்தான் ஆரைப்பற்றைக் கிராமத்தைச் சேர்ந்த தீவிர பக்தர் ஒருவர் தான் தோன்றீச்சரத்தின் தேரோட்டத் திருவிழாவில் வடம் தொடுக்கும் உரிமையைக் குருகுலக் கரையாருக்குப் பெற்றுக் கொடுத்தாரெனக் கூறப்படுகின்றது.

இச்சுற்றாடலில் வாழும் மக்கள் நெற்பயிர்ச் செய்கையையும், சேனைப் பயிர்ச் செய்கையையும், மந்தை வளர்ப்பதையும் தம் பரம்பரைத் தொழிலாகக் கொண்டவர்கள். இதனால் தான்தோன்றீச்சரத்தில் பொருளாதார மாற்றீடகமாக இன்றும் நெல் இருந்து வருகிறது; விழாக்காலங்களில் பல நூறு மாடுகள் நேர்த்திக் கடனாக இவ்வாலயத்திற்குக் கிடைக்கும் வாய்ப்பிருந்து வருகிறது. இத்தோடு புதிரெடுத்தல், புதிருண்ணல் ஆகிய நிகழ்ச்சிகள் பெருவிழாவாக நடைபெறுவதற்கும் மழை வேண்டிச் செய்யும் பூசைகள், கிரிகைகள் செய்வதற்கும் இவ்விவசாய சூழல் காரணமாயிற்று. மேலும் சித்திரை முதல் ஆவணியீறாக உள்ள மாதங்களில் பெருவிழாக்கள் இங்கு திட்டம் செய்யப்படுவதற்கு இச் சூழலே வழிவகுத்தது. இம் மாதங்கள் இங்கு வாழும் விவசாய மக்களுக்கு ஓய்வுள்ள காலமாகவும், கையில் பணப்புளக்கமுள்ள காலமாகவும் இருந்து வந்துள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

### குடியேற்றமும், சாதிப்பிரிவுகளும்:-

தான்தோன்றீச்சரம் மட்டக்களப்பின் பண்டைய குடியேற்றங்களையும் சாதிப் பிரிவுகளையும் அறிந்து கொள்ள உதவும் ஓர் ஆய்வுக்கூடமாக விளங்குகின்றதெனலாம். இங்குள்ள திருவிழா வைப்பு முறை சாதிக்குழுக்கள் குடியேறிய காலத்தின் மூப்பினையும் கோயிலில் கொண்ட தொடர்பின் இறுக்கத்தையும் எடுத்துக் காட்டுவதாகவுள்ளன. பண்டைய நாளில் சாதிகள் பெற்ற முதன்மை காரணமாக சில பிரதேசங்கள் சாதிப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டமையைக் காணமுடிகிறது. கிழக்கிலங்கையின் திருகோணமலை மாவட்டம் சிந்துநாடு, குருநாடு என இருபிரிவுகளாகவும், மட்டக்களப்பு முற்குகதேசம் என்றும் அழைக்கப்பட்டமையை அறியமுடிகிறது. முற்குகர் என்னும் சாதியினர் இலங்கையிலும் இந்தியாவிலும் இடத்திற்கிடம் வேறுபட்ட தன்மையினராக நோக்கப்படுகின்றனர்.

மட்டக்களப்பு முற்குகர் பற்றி அறிந்து கொள்வதற்கு பொதுவாக இலங்கையினதும், குறிப்பாக மட்டக்களப்பினதும் பூர்வீக வரலாற்றைச் சற்று நோக்குவது அவசியமாகின்றது. அனுராதபுரத்திலும், பின் பொலனறுவையிலும், இலங்கையின் மேற்குக் கரையோரப்பகுதிகளிலும் கி.பி. 7ம் நூற்றாண்டில் இருந்து மலையாளிகளினதும், தமிழர்களினதும் செல்வாக்கு படிப்படியாக அதிகரித்து வந்தமை வரலாற்றில் அவதானிக்கத்தக்கவொன்று. கி.பி 10 ம் நூற்றாண்டளவில் அரேபிய நாட்டுப் பட்டாணிகள் இலங்கையின் மேற்குக் கரைப் பகுதிக்கு வந்தபோது அங்கு மலையாளிகள் மிக்கசெல்வாக்கோடு இருந்தமையை அறியக் கிடக்கின்றது. இப்பட்டாணிகளோடு சேர்ந்து வர்த்தகம் செய்யும் முயற்சியில் மலையாளிகள் குறிப்பாக மலையாளத்து முற்குகர் பெரிதும் ஈடுபட்டனர். பட்டாணிகளும், முற்குகரும் ஈடுபட்ட இவ்வர்த்தக முயற்சிகள் கி.பி 14ம், 15ம் நூற்றாண்டுகளில் இருந்து கிழக்கிலங்கையிலும் படிப்படியாக அதிகரித்து வந்தது. இத்தொடர்பு இலங்கையின் மேற்குக் கரைக்கு போர்த்துக்கேயர் வந்ததையடுத்துப் பெரிதும் அதிகரித்தது. இதன் பின் இலங்கையில் தொடர்புபட்ட கேரளத்து முற்குகர் கண்டிராச்சியத்தில் மிக்க செல்வாக்குப் பெற்றவராயினர்.

மட்டக்களப்பில் முற்குகர் செல்வாக்கு அதிகரிப்பதற்கு முன்னமே பல சமுகக் குழுக்கள் இங்கு குடியேறியிருந்தனர் எனலாம். மட்டக்களப்பு தென்பகுதிகளில் மலையாளத்து யானை கட்டும் பணிக்கரும், தொண்டை மண்டலத்து முல்லை நில மறவரும் குடியேறியிருந்தனர். இவர்கள் வழித்தோன்றல்களே பணிக்கனா குடியார் என்னும் குழுவினர் எனக்கருதலாம். இவர்கள் திருக்கோயில், பாண்டிருப்பு முதலிய இடங்களில் உள்ள கோயில்களில் முன்னோடி முகனையாக இருந்து வருகின்றனர்.

மண்முனை இராச்சியம் தோற்றுவிக்கப்படும் முன்னரே அம்பிளாந்துறை, மணல்பிட்டி, பங்குடாவெளி, முதலிய கிராமங்களில் மக்கள் குடியேறியிருந்தனர் என மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது. இக்குடியேற்றங்களை அமைத்திருந்தவர்கள் வன்னியன் குலத்தவராகிய படையாட்சி குடியினரென கொள்ளுதல் பொருத்தமுடையதாகத் தெரிகிறது. மண்முனையில் உலகநாச்சி தலைமையில் கலிங்கர் குடியேற்றமொன்று நிகழ்ந்தது. இவ்வாறு குடியேறியவர்கள் தங்களை பிற்காலத்தில் உலகநாச்சி குடியார் அல்லது உலகிப்போடி குடியார் எனத் தலைப்பட்டனர். இவர்கள் மண்முனையின் வீழ்ச்சியின் பின் கன்னன் குடா, சோதயன்கட்டு, முதலைக்குடா, ஆகிய இடங்களில் வாழ்ந்து வரலாயினர்.

கி. பி. 13 ம் நூற்றாண்டில் பொலநறுவையின் வீழ்ச்சியையடுத்து மாகனோடு சேர்ந்த கலிங்கர்கள் ஏறாவூரிலும், சத்துருக்கொண்டானிலும் ஏனைய இடங்களிலும் குடியேறியிருந்தனர். இவ்வாறு குடியேறியிருந்த இனக்குழுக்களை ஒன்றுபடுத்தித் தம் வசப்படுத்தக்கூடிய அளவு முற்குகர் செல்வாக்கு இங்கிருந்தது. அக்காலத்தில் முற்குகருக்கு பட்டாணிகள் உறவும், பிற்பட்ட காலத்தில் கண்டி மன்னரின் உறவும் இருந்து வந்தமையைத் தெரிந்து கொள்ளலாம். முற்குகருக்கு முன் இங்கு குடியேறியிருந்த இனக்குழுக்களெல்லாம் முற்குகர் மயவாக்கதிற்கு உட்படுத்தப்பட்டனர் என கருதுவதில் தவறில்லை. தந்தை வழியைப் பேணிய இவர்கள் முற்குகரைப்பின் பற்றி தாய்வழியைப் பேணுபவர்களாகவும், முற்குகர் சட்டதிட்டங்களையும் வாழ்க்கைமுறையையும் பின்பற்றுபவர்களாகவும் மாறினர். இவற்றால் இங்கு வெளிப்படுத்துவது யாதெனில் மட்டக்களப்பு முற்குகர் பல இனக்குழுக்கள் இணைந்த ஒரு கூட்டுச் சாதியென்பதாகும்.

நாம் முன்னர் குறிப்பிட்ட இனக் குழுக்களைவிட முற்குகரில் கச்சிலாகுடி, தனஞ்சனா குடி, சட்டிகுடி ஆகிய பிரிவினர் கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் முக்கியம் பெற்றவர்களாக வாழ்ந்து வந்திருக்கின்றனர். மேலும் கோப்பி குடியார் என்னும் ஒரு பிரிவினரும் இங்குள்ள முற்குகருள் காணப்படுகின்றனர். கோபி குடியார் என்பது கோப்பிகுடியாகிற்று. இவர்கள் மலையாளத்து வேளாளர். வேளாண்மை செய்வதற்காகவே மலையாளத்தில் இருந்து இலங்கையில் மேற்குக் கரையோரங்களுக்கு இவர்கள் வந்தார்கள். இவர்கள் இலங்கையின் உட்பகுதிகளிலும் செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். நிசங்கமல்லன் கல்வெட்டுக்களிலும் இவர்கள் பற்றிய குறிப்புண்டு. போத்துக்கேயர் ஆட்சியில் வெறுப்புற்ற இவர்களில் ஒரு பகுதியினர் முற்குகரோடு இணைந்து கண்டி இராச்சியத்தினூடாக மட்டக்களப்பு வந்தனர். மட்டக்களப்புக்கு இவர்கள் வந்தது பற்றி நாடுகாட்டு பரவணிக் கல்வெட்டு எடுத்துக் கூறுகிறது. இங்கு இவர்கள் முற்குகரோடும், வேளாளரோடும் இரு குழுக்களாக இணைந்து வாழ்ந்து வந்தனர். முற்குகருள் கோப்பிகுடியிருப்பது போலவே வேளாளருள் கோப்பி குடியிருப்பதைக் காணலாம். பெத்தாங்குடி என்னும் ஒரு குடியினரும் இங்கு முற்குகருள் காணப்படுகின்றனர். இவர்கள் மட்டக்களப்பிலேயே தோற்றம் பெற்ற ஒரு பிரிவினராவர். படையாண்ட குடியாரின் வளர்ப்பு மகளின் சந்ததியாக இவர்கள் கொள்ளப்படுகிறார்கள். கோளாவில் கோயிலில் படையாண்ட குடியாருக்கும், பெத்தாங்குடியாருக்கும் ஒரே வண்ணக்கு இருப்பதைக் காணமுடிகிறது. இது இவர்களின் இறுகலான உறவுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். இவ்வாறு முற்குகரில் ஒன்பது பிரிவினர் தான்தோன்றீஸ்வரன் கோயிலோடு தொடர்பு பட்டிருந்தமை அறிய முடிகின்றது. இவர்களுள் ஏழு குடியினர் மாத்திரமே தொடர்ந்து இவ்வுறவைப் பேணிவருகின்றனர்.

தான்தோன்றீச்சரத்திற்கும், செட்டிமாருக்கும் மிக நெருக்கமான உறவு இருந்து வந்துள்ளது. செட்டிகளில் பல்வேறு உட்பிரிவினரும் இவ்வாலயத்தில் திருக்குடுக்கை கூறும் போது

கௌரவிக்கப்படுவதை அவதானிக்கலாம். இவ்வாலய இறுதித் திருவிழாவைச் செட்டிமாரே நடத்தி வந்தனர். காலத்துக்குக் காலம் இத்திருக்கோயிலைப் புதிப்பித்தலும், தேர்கள் அமைத்துக் கொடுப்பதிலும் செட்டிமார் பெரும் பங்களிப்புச் செய்திருக்க வேண்டும். இப்பரம்பரையினர் முற்றிலும் இங்கில்லாமையால் இவ்வாலயத்தோடு இவர்கள் கொண்ட உறவுகள் பற்றித் தெளிவாகக் கூறமுடியாதுள்ளது. இவ்வாலயத் திருக்குடுக்கை கூறலில் வேளாளரின் பல்வேறு பிரிவினர் கௌரவிக்கப்படுவதையும் அவதானிக்கலாம். நிரந்தரமாகவும், தற்காலிகமாகவும் சில பொறுப்புக்களை ஏற்று வேளாளர் இக்கோயிலுக்குச் செய்த சேவைகள் நினைவு கூரத்தக்கவை. இவற்றைவிடத் தொண்டூளியர்களாகவும், பார்வையாளராகவும் மட்டக்களப்பில் வாழ்ந்த பல்வேறு சாதியினரும் தான்தோன்றீச்சரத்தில் கௌரவிக்கப்பட்டனர். இவற்றை இங்கு சுட்டிக்காட்டுவது ஆய்வாளருக்கு வசதியளிப்பதற்கேயன்றி செத்துக் கொண்டிருக்கும் சாதிமுறைமையில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுத்தி புத்துயிர் செய்வதற்காக அல்லவென்பதை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவது அவசியமாகிறது.

## காலத்துக்குக் காலம் மாறிவந்த வழிபாட்டு முறைகள்.

தான்தோன்றீச்சரப் பூசைகளிலும், விழாக்களிலும் தாக்கத்தை ஏற்படுத்திய மற்றுமோர் அம்சம் இங்கு காலத்துக்குக் காலம் மாறிவந்த வழிபாட்டு முறைகளாகும். பண்டைய நாளில் இந்நாட்டில் வாழ்ந்த ஆதிக் குடியகளாகிய வேடர் மட்டக்களப்பு மாநிலத்தைத் தமக்குப் பாதுகாப்புத் தரக்கூடிய ஒதுக்கிடமாகக் கொண்டனர். இம்மாநிலத்திலுள்ள பழமை வாய்ந்த கோயில்களெல்லாம் இவர்களால் தோற்றிவிக்கப்பட்டமை, அல்லது பராமரிக்கப்பட்டு கப்புகனார் வழிபாட்டுமுறை ஆதித் திராவிடரின் வழிபாட்டு முறையென ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இம்முறை கதிர்காமம், மண்டூர் என்னும் கோயில்களில் இன்றும் இருந்துவருகின்றது. வேடரால் வழிபாடு ஆரம்பிக்கப்பட்ட இத் தான்தோன்றீச்சரத்தில் ஆரம்பத்தில் கப்புகனார் வழிபாட்டுமுறையே இருந்திருக்க வேண்டும். பூசைவேளையில் வாய்ச்சீலை கட்டுதல், தலைப்பாகை கட்டி நிற்றல் முதலியன கப்புகனார் வழிபாட்டு முறையில் ஒருசில அம்சங்களாகும்.

இவற்றை இக்கோயில் இன்றும் பேணிவருகின்றது. கப்புகனார் முறையைத் தொடர்ந்து இம்மாநிலத்தில் தேசிய வழிபாட்டு முறைகளாக வளர்ந்தவை பூசாரி, கட்டாடி முறைகளாகிய சிறு தெய்வ வழிபாட்டு முறைகளாகும். இம்முறைகளும் தான்தோன்றீச்சர வழிபாட்டு முறையில் தாக்கத்தை ஏற்படுத்தி வந்துள்ளன. இக்கோயிலில் பூசை செய்த சங்கமக் குருமார் அத்தியாவசிய தேவைகளுக்கு பூசாரிமாரின் மந்திரங்களைப் பயன்படுத்தி வந்துள்ளனர். 19ம் நூற்றாண்டில் இக்கோயிலில் பூசை செய்த கங்காதரர் என்னும் வீர சைவக் குருக்கள் அவரது மந்திர ஆற்றலால் நான்கு மூலைகளிலும் எலுமிச்சம்பழம் கட்டப்பட்ட சால்வை மேற்கட்டியாக பறந்து நிழல்தர அதன் கீழ் செல்வார் என முன்னோர் கூறுவர். இன்றும் இங்குள்ள வைரவர் கோயிலில் நூல் கட்டுதல், திருநீறு போடுதல், தண்ணீர் ஓதி எறிதல் முதலிய சிறு தெய்வ வழிபாட்டு அம்சங்கள் பேணப்பட்டு வருவதைக் கவனிக்கலாம்.

கடந்த 16ம் நூற்றாண்டில் பிற்பகுதியில் இக்கோயிலில் அந்தணர்கள் பூசை செய்ததாக மட்டக்களப்பு மான்மிய திருப்படைக் களஞ்சியத்தால் அறியக்கிடக்கின்றது. இதில் கண்டியை ஆட்சி செய்த விமலதர்மசூரிய மன்னன் காலத்தில் தான்தோன்றீச்சரத்தில் தோன்றிய பிராமண எதிர்ப்பியக்கம் பற்றிக் கூறப்படுகின்றது. இவ்வெதிர்ப்புக் காரணமாக இங்கு நடைமுறையில் இருந்த பிராமண வழிபாட்டுமுறை ஒழிக்கப்பட்டு, வீர சைவ வழிபாட்டு முறை புகுத்தப்பட்டதா? அல்லது முன்னும் பின்னும் வீர சைவ வழிபாட்டு முறை இருக்க, இடை நடுவில் ஏதோ காரணத்தால் பிராமணிய முறை புகுத்தப்பட்டதா என்பது தெளிவாக விடை காணமுடியாத வினாவாக உள்ளது.

எது எவ்வாறாக இருந்தாலும் பல நூற்றாண்டுகள் வீரசைவ வழிபாட்டுமுறை இக்கோயிலில் தொடர்ந்து பேணப்பட்டு வந்ததென்பதை எவரும் ஏற்பர். இங்கு சங்கம குருமார் இருபாகை முறையில் மாறி, மாறி பூசை செய்து வந்துள்ளனர். இவ் இருபாகை என்பது என்னவென்று தெரியவில்லை. இதுபற்றி கீழ்க் குறிப்பிடும் சில சந்தேகங்கள் உள்ளன.

01. குருக்கள் பரம்பரை குடியிருந்த இடத்தைப் பொறுத்துக் களுவாஞ்சிக்குடிப் பாகை, வந்தாறுமூலைப் பாகை என்பது.

02. பரம்பரைப் பூசை செய்த கோயில்களைப் பொறுத்து, தேசத்துக் கோயில் பரம்பரை, ஊர்க்கோயில் பரம்பரை என்பது.

03. இவர்கள் இருந்துவந்த இடத்தைப் பொறுத்து, யாழ்ப்பாணம், திருகோணமலை அல்லது கர்நாடகம், தமிழ்நாடு என்பது.

04. இலங்கைக்கு இந்தியாவில் இருந்து ஒன்றுபட்டு வந்த வீரசைவப் பிரிவு, காஸ்மீர சைவப் பிரிவு என்பன.

20ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் இருந்து இவ்வாலயத்தில் வீரசைவ வழிபாட்டுமுறை ஆகம வழிபாட்டு முறைக்கு அடிபணியத் தொடங்கியது. இதற்கு பின்வருவனவற்றை முக்கிய காரணங்களாகக் கூறலாம்.

01. இங்கு பூசை செய்யவந்த வீர சைவ அல்லது சங்கம குருமார் தாய் வழிப் பிறப்புரிமையாக குருக்களாக வந்தார்களேயன்றி லிங்க தீட்சை, லிங்கதாரணம், இட்டலிங்கபூசை செய்தல், வீரசைவ ஆசாரம் பேணுதல் முதலிய வீர சைவக் குருமாருக்குரிய தகுதியுடையவர்களாக இருக்கின்றார்களா என்பது கவனத்தில் கொள்ளவில்லை.

02. சம்பிரதாய முறைகளை இவர்கள் பேணினார்களே அன்றி அவை பற்றிய அறிவு இவர்களுக்கு இருக்கவில்லை. தமிழ் மொழியில் இயற்றப்பட்டிருந்த வீர ஆகமத்தைக்கூட இவர்கள் அறியாதவர்களாக இருந்தார்கள்.

03. பொதுமக்களிடம் வீர சைவம் பற்றிய அறிவும், ஈடுபாடும் படிப்படியாகக் குறைந்து அற்றுப்போன நிலை தோன்றியது.

04. மறுபுறத்தில் பிராமணீய முறையில் ஈடுபாடு கொண்டு சைவக்குருக்கள்மார் மட்டக்களப்பில் பல பாகங்களிலும் தோன்றியமையும், இவர்கள் ஆகம, கிரியை முறைகளை நன்கு அறிந்தவர்களாக இருந்தமையும்.

05. வீரசைவம் குருவில்லாத வித்தையாகப் போக, இக்கோயில் பூசைக்கு வந்த சங்கமக் குருமார், சைவக் குருமாரைக் குருவாக ஏற்றுக் கொள்ளும் நிலமை தோன்றியமை.

06. இவற்றால் வருடாந்த உற்சவம் மற்றும் ஏனைய விசேட பூசை விழாக்களை சைவக் குருக்கள்மாரே தலமைதாங்கி நடாத்த வேண்டிய நிலமை தோன்றியமை.

07. வீரசைவக் கருவறைமுறை அறியாமை காரணமாக விளக்கம் கூறமுடியாத நிலையில்கூடியளவு இத்தகைய சூழ்நிலையில் பிறப்புரிமையால் சங்கமர் என்போர் இங்கு பூசை செய்ததாலும், சைவக் குருமாரால் பிராமணியப் பூசை முறையை படிப்படியாகப் புகுத்துவது அவசியமாயிற்று. 19ம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இங்கு வீரசைவ முறையில் இருந்த கோயில் அமைப்பும் படிப்படியாக மாற்றம் பெற்று வந்தது. முன்புறத்தில் ஒரு பிள்ளையார் கோயிலோடு தனித்திருந்த சிவாலயத்தைச் சுற்றிப் பல சுற்றுப்பிரகாரக் கோயில்கள் மக்களின் தேவைகருதியும், நேர்த்திக்கடனாகவும் ஒவ்வொன்றாக உருவாகத் தொடங்கின. தற்போது புதிதாக அமைக்கப்பட்ட கோயிலில் எல்லாச் சுற்றுப்பிரகாரக் கோயில்களும் விதிமுறைப்படி ஒழுங்கு படுத்தி அமைக்கப்பட்டுள்ளன. கொடித்தம்பம் கூட வீரசைவ முறையை விடுத்து ஆகம முறைப்படி தற்போது மாற்றியமைக்கப்பட்டது.

1947ம் ஆண்டு இவ்வாலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்ற போது வீரசைவ ஆச்சாரியராகிய திருகோணமலை வைத்தீஸ்வரக் குருக்கள் அதற்குத் தலைமைதாங்கினார் என அறியக்கிடக்கின்றது. தற்போது நடைபெற்று முடிந்த கும்பாபிஷேகத்திற்குப் பொருத்தமான வீரசைவக் குருமாரை இந்நாட்டில் தேடியும் தக்கபலன் கிடைக்கவில்லை. மட்டக்களப்பில் சிலரிடம் சங்கமர் என்னும் சாதியில் பிறந்து விட்டால் அவர் வீரசைவர்தான் என்று கருத்து நிலவுகின்றது. இது முற்றிலும் தவறானது. ஒவ்வொரு வீரசைவனும் லிங்க தீட்சை பெற்றிருப்பதும், லிங்கத்தை மார்பில் அணிந்திருப்பதும், நோப் தவறாது இட்டலிங்க பூசை செய்வதும், வீரசைவ ஆசாரப்படி வாழ்வதும் அவசியமானது. இத்தகைய ஆச்சாரியர்களை கண்டெடுப்பது இன்றைய நிலையில் மிகவும் கடினம். எனவே தற்போது நடைபெற்ற கும்பாபிஷேகத்தைப் பொருத்தமானதோர் அந்தண ஆச்சாரியரின் தலைமையில் நடத்த வேண்டிய நிலை வீரசைவத்தைத் தழுவிய இக்கோயிலுக்கு ஏற்பட்டது. எனினும் இக்கோயிலில் நடைமுறையில் இருந்த வீரசைவ வழிபாட்டு முறைகள் இக்கும்பாபிஷேகத்தால் மாற்றமடைந்த தென்பதற்கில்லை. கோயில் கருவறையிலும் பூசை நிகழ்ச்சித் திட்டத்திலும் வீரசைவம் தொடர்ந்து பேணப்பட்டு வர ஆவன செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய நிலைகளால் இவ்வாலயத்தில் வேடரின் கப்புகன் வழிபாட்டு முறையும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்ட சிறுதெய்வ வழிபாட்டு முறையும், தலைகாட்டுகின்ற வீரசைவ முறையும் ஆகம வழிபாட்டு முறையும் கலந்து அனுபவம் மிக்க ஒரு வழிபாட்டு முறையில் இங்கு பூசையும் விழாக்களும் நடைபெற்று வருகின்றன எனலாம்.

## தொண்டுழிய முறை

சாதி முறையை வெறுக்கின்ற வீரசைவத்தைப் பேணிவந்த இவ்வாலயத்தில் சாதி முறையில் பரிபாலனமும், தொண்டுளியமும் செய்யப்பட்டு வந்தது விந்தையானது. இம்முரண் பாடுகளுக்கெல்லாம் காரணம் இவ்வாலயம் புதியதை ஏற்றுக்கொண்டாலும், பழையதைக் கைவிடவில்லையென்ற வரலாற்று அனுபவமாகும். இங்கு சாதி முறை பேணப்பட்டாலும் ஏற்றத் தாழ்வினைக் காட்டி எவரையும் புறக்கணிக்கின்ற துர்ப்பாக்கிய நிலை உட்புகவில்லை. இவ்வாலயத்தில் தொண்டுழியம் செய்துவந்த சாதியினர் இறையடிமைகொண்ட ஊழியரேயன்றி மனித ஊழியரல்லர். இவர்கள் புனிதர்களாகவும் இறைவனுக்கு நெருக்கமானவர்களாகவும் கருதப்பட்டனர்.

இங்குவேளாளர், கோயிலார், பண்டாரிகள் என்னும் மூன்று சாதியினர் கோயில் தொண்டுளியத்தோடு தொடர்புபட்டவர்களாக வாழ்ந்து வந்திருக்கின்றனர். இவர்களுள் கோயிலாரும், பண்டாரிகளும் முற்றிலும் இறைதொண்டையே தங்கள் வாழ்க்கையாகக் கொண்டமையால் இறைவனின் பிள்ளைகளாக சமூகத்தில் மதிக்கப்பட்டனர். இதனால் இவர்கள் சாதிப் பெயர்களை கோயில் பிள்ளைகள், பண்டாரப்பிள்ளைகள் என அழைக்கும் மரபு மட்டக்களப்பில் தோற்றம் பெற்று வளர்ந்தது.

மட்டக்களப்புக்கு ஆரம்பகாலத்தில் வேளாளர் திருக்கோயில்களின் தொண்டுளியத்திற்காகவே கொண்டுவரப்பட்டவர்கள் என்பதை வரலாற்றால் அறிய முடிகின்றது. எனினும் இவர்கள் கோயிலின் முழு நேர தொண்டுளியர்களாக இருந்தார்களா? என்பது தெளிவாகத் தெரியவில்லை. பண்டைய மட்டக்களப்பு திருப்படைக் கோயில்களில் வேளாளரில் எப்பிரிவினர் இக்கோயிலுக்கு தொண்டு செய்ய வேண்டுமென்பது. திட்டம் செய்யப்பட்டிருந்தது. இவ்வகையில் தான்தோன்றீச்சரத்தில் தொண்டுளியத்திற்கு அத்தியா குடியாரும், வைத்தியா குடியாரும் உருத்துடையவராகப் பேணப்பட்டு வந்தனர். இவ்வாலயத்தில் இவர்கள் செய்து வந்த தொண்டுளியத்திற்காக அத்தியா குடியாருக்கு அத்தியா முன்மாரிக் காணியும், வைத்தியா குடியார்க்கு அக்கரை மேட்டுக்காணியும் பண்டைய மன்னர்களால் மானியமாகக் கொடுக்கப்பட்டிருந்தன. என மரபு வழிச் செய்திகளால் அறியலாம்.

தான்தோன்றீச்சரத்தில் வேளாளர் திருவிழாக் காலங்களில் சுவாமி சுமக்கும் சேவையில் மாத்திரமே ஈடுபடுத்தப்பட்டனர். முற்பட்டகாலத்தில் களஞ்சிய வீட்டுப் பொறுப்பும் வேளாளரிடம் இருந்ததென்றும் பின்னர் அது கோயிலாரிடம் மாறிக்கொடுக்கப்பட்டதென்றும் முன்னோர் கூறுவர். பண்டாரப்பிள்ளைகளால் இக்கோயிலில் செய்யப்பட வேண்டிய பணிகள் பற்றி கூறப்பட்ட போதிலும் சுமார் ஒரு நூற்றாண்டுகாலமாக இவர்கள் இப்பணிகளைப் பின்பு செய்ததாகத் தெரியவில்லை. எனினும் பழுகாமத்து துரோபதையம்மன் ஆலயத்தோடு தான்தோன்றீச்சரத்திற்கு இருந்து வந்த நெருக்கமான உறவு இங்கு பண்டாரப்பிள்ளைகளுக்கு இருந்த உறவை எடுத்துக் காட்டுகிறதெனலாம்.

தற்போதைய சூழ்நிலையில் தான்தோன்றீச்சரத்தில் தொண்டுளியங்களையும் கோயிலாரே செய்து வருகின்றனர். பண்டை மட்டக்களப்பின் தேசத்துக் கோயில்கள் எல்லாம் இச்சாதியினரே கோயில் தொண்டுளியர்களாக இருந்து வந்திருக்கின்றனர். கோயில் ஆள் என்ற ஒருமை பன்மை விகுதியேற்று கோவிலாராயிற்று. இவர்கள் மானிய கால சமூக அமைப்போடொட்டி முற்றிலும் கோயிலுக்குரியவர்களாக வாழ்ந்து வந்தவர்கள். கோணேசர் கல்வெட்டை எடுத்துக் காட்டி இவர்கள் தங்களை மருங்கூரில் இருந்து வந்த வேளாளர் என்றும் வாதிட்டு வருகின்றனர். எது எவ்வாறாக இருந்தாலும் இன்று இவர்களுள் மிகச் சிறு பகுதியினர் மாத்திரமே கோயில் தொண்டுழியத்தில் ஈடுபட்டு வருகின்றனர். முன்னொரு காலத்தில் தம்முதாதையர் கையேற்ற சிவப்பணியை கைவிட்டால் தெய்வப்பழிவரும் என்பதில் இவர்கள் பூரண நம்பிக்கை கொண்டுள்ளனர். பொன்னாச்சி வகுத்துவார், வேடகத்தறை, கங்காணி கூட்டம், மம்மாலி கூட்டமென இவர்களுள் நான்கு உட்பிரிவுகள் உள்ளனர். கோயிலில் செய்யும் தொண்டுயிழியங்களுக்கு ஆட்களைத் தெரிவு செய்யும் போது இக்குடி முறையைப் பின்பற்றித் தெரிவதை அவதானிக்கலாம். கோயிலில் நிரந்தரமாகச் செய்யும் திருப்பணியை தொண்டுழியம் என்றும் உற்சவகாலத்தில் செய்யும் ஊழியத்தை தொழும்பறை ஊழியம் என்றும் வகுத்துச் செய்வது இங்கு வழக்கம். இவ்வாலயத்தில் நித்திய பூசைகளிலும் விழாக்களிலும் இத்தொண்டுழியர்களின் பங்களிப்பு முக்கியமானதாகும்.

### பெருமாற்றம் காணாத வரலாறு

பொதுவாக பண்டைய மட்டக்களப்பு வரலாறு பெரிய மாற்றங்களைக் காணாத வரலாறாக வந்தது. அதிலும் குறிப்பாகப் படுவான்கரைப் பகுதியில் வரலாறு மாறும் தன்மை குறைந்ததாக இருந்து வந்தமையை அவதானிக்கலாம். இலங்கையின் திருக்கேதீச்சரம், திருக்கோணஸ்வரம் முதலிய திருத்தலங்கள் பெரும் அழிபாடுகளால் தொடர்ச்சியான வரலாறு துண்டிக்கப்பட்டவையாக காணப்படுகின்றன. மட்டக்களப்பில் கூட மண்முனை, நாதனை ஆகிய இடங்களில் இருந்த பெரிய கோயில்கள் யாராலோ அழிக்கப்பட்டு புத்துயிர்ப்புப் பெறாது மறைந்து போயின. இத்தகைய நிலையில் தான்தோன்றீச்சரம் இடையீடு இல்லாத வரலாற்றினைக் கொண்ட பழம்பெரும் கோயிலாகத் திகழ்ந்து வந்திருக்கின்றது. இவ்வாறு இவ்வாலயத்திற்குத் தொடர் வரலாறு இருந்தாலும் அதனை அறியக்கூடிய ஆதாரங்கள் கிடைக்காமை பெரும் குறைபாடாகும். இவ்வாலயத்தில் அன்னியரால் ஏற்பட இருந்த பேரழிவை இறையற்புத நிகழ்ச்சி ஒன்று இல்லாமல் செய்தது என்பது உலகறிந்த விடயம். இத்தோடு இங்கு வாழ்ந்த மக்களின் சுதேச உணர்வு, இயற்கை அமைவும் இவ்வாலயத்தில் தொடர்ச்சியான வரலாற்றைக் காப்பாற்றி வந்ததெனலாம். இவற்றால் இங்கு நடைபெற்று வந்த பூசை விழாக்கள் தொடர்ச்சியாகவும், பெருமாறுதல் இல்லாமலும் நிகழ்ந்து வந்தன.

### அறிவுத்துறையில் புரட்சிகர மாறுதல் ஏற்படாமை

சமய அறிவுத் துறையால் ஏற்பட்ட கிளர்ச்சிகள் சில கோயில்களின் வரலாற்றில் பெருமாற்றங்களைத் தோற்றுவித்துள்ளன. யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலர் ஏற்படுத்திய ஆகம மயமாக்கம் அங்கிருந்த சுதேச வழிபாட்டு முறைகளையெல்லாம் அழித்தொழித்தது. 12ம் நூற்றாண்டில் கருநாடகத்தில் பசவேசர் நிகழ்த்திய சமய அறிவுப் புரட்சி அங்கு பிராமணிய முறையை அதிரச் செய்தது. மட்டக்களப்பில் சமய அறிவுத் துறையில் இத்தகைய பெரிய மாறுதல்கள் எதுவும் ஏற்படவில்லை. ஆறுமுக நாவலர் போன்றோர் இங்கு தோன்றி இருந்தாலும், சுதேச வழிபாட்டு முறைகளைக் கைவிட இங்கு வாழ்ந்தோர் ஒருப்பட்டிருக்க மாட்டார்கள். உள்ளதை உள்ளபடி வைத்துக் காப்பாற்றுவது மட்டக்களப்பின் சமய நம்பிக்கையாகும். "செய்யாதது செய்யக் கெடும், செய்தது விடக் கெடும்" என்பது இங்குள்ளோரின் பாரம்பரிய சமயக் கோட்பாடு. அதிலும் தான்தோன்றீச்சரத்தில் பாரம்பரிய நிருவாக அமைப்பு முறையில் மாற்றங்களைப் புகுத்துவது கடினம். இத்தைகய சூழ்நிலையில் தான்தோன்றீச்சரத்திலும், பொதுவாக மட்டக்களப்புத் திருப்படைக் கோயில்களிலும் வீர சைவம் எவ்வாறு வந்து புகுந்து கொண்டது

என்பது ஒரு விந்தையானது. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் அதிகாரம் செலுத்திய ஓர் அரசரின் ஆணையே வீர சைவம் இங்கெல்லாம் தலையெடுக்கக் காரணமாக இருந்திருக்கவேண்டும் எனக் கருத இடமுண்டு. இத்தகைய சமய நம்பிக்கைகள் தான்தோன்றீச்சரத்தின் பூசைகளையும், விழாக்களையும் தீர்மானிப்பதில் பங்கு கொண்டவையாக அமைந்திருப்பதும் அவதானிக்கத்தக்கது.

இவற்றால் உருப்பெற்று தொடர்ந்து நிகழ்த்தப்பட்டு வரும் இவ்வாலயத்தின் பூசை விழாக்களைப் பின்வரும் ஆறு உப தலைப்புகளின் கீழ் சுருக்கமாக அவதானிப்போம்

01) நித்திய பூசையும், நடைமுறைகளும்,

02) வருடாந்த பூசையும், நடைமுறைகளும்,

03) விசேட பூசைகள்

04) தனித்துவமான சிறப்புப் பூசைகள்,

05) விரதங்கள்

06) ஏனைய கோயில் விழாக்களுக்கு உதவுதல்.

## (01) நித்திய பூசையும், நிகழ்ச்சிகளும்

தினசரி பூசை நிகழ்ச்சிகள் மார்கழி மாதம் தவிர ஏனைய மாதங்களில் அதிகாலை 4.00 மணிக்கும், மார்கழி மாதத்தில் அதிகாலை 2.00 மணிக்கும் இவ்வாலயத்தில் ஆரம்பமாகும். அதிகாலை 4.00 மணிக்கு அரட்டு மேளம் அடிக்கப்படும். இம்மேளத்தினதும், மணியினதும் ஒலி 5 மைல் சுற்றாடலுக்குக் கேட்கக் கூடியதாக இருப்பது ஒரு சிறப்பம்சமாகும். அரட்டு மேளத்தோடு பிரசாதத்துக்குரிய அமுது தயாரிக்கும் வேலை ஆரம்பமாகும். இதை அடுத்து காலை 5.00 மணிக்கு குருக்களுக்காக மேளம் அடிக்கப்படும். இம் மேளத்தோடு குருக்கள் இட்டலிங்க பூசையிலும், தியானக் கடமையிலும் ஈடுபடுவர். இதையடுத்து காலை 6.00 மணிக்கு பூசைக்காக மேளம் அடிக்கப்படும். தனது இட்டலிங்க பூசையை நிறைவேற்றிய குருக்கள் முதலாவதாக இடபத்திற்குப் பின் பக்கமாக மகா மண்டபத்து வாசலை அடுத்து அமைந்துள்ள வீர சைவ பஞ்சகர்த்தாக்களின் அடையாளங்களில் அவர்களைத் தரிசித்துத் தியானம் செய்வார். இங்கு பஞ்ச கர்த்தாக்கள் என்பது வீர சைவ பஞ்சாச்சாரியர்களாகும். இவர்கள் (1) ரேணுகாசாரியர் (2) தாருகாசாரியர், (3) ஏகோராமத்யர், (4) பண்டிதாராத்யர், (5) விஸ்வராத்திரியர் ஆகிய இவர்களே வீர சைவ ஸ்தாபகராவர். இவர்களை வழிபட்டபின் அங்கு அமைந்துள்ள சூரிய கல்லில் சூரிய வழிபாட்டினை குருக்கள் நிகழ்த்துவார். இக்கல்லின் அருகாமையில் வைக்கப்பட்டுள்ள மணி, கலசம், தீபம் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு இடப தேவரை அணுகுவார். இந்நந்தியெம் பெருமானிடம் சிவனை வழிபடுவதற்கு அனுமதி பெற்ற பின், அர்த்தமண்டபத்துள் செல்வதற்கு படி கடக்கும் நிகழ்ச்சி நடைபெறும். இப்படியில் ஐந்து பூக்களோ, சிறு மடைகளோ வைத்து வழிபாடு செய்யப்படும். இவ்வழிபாடு பஞ்ச பூதங்களைக் குறித்தோ அல்லது வீர சைவ பஞ்சரெத்தினங்களாகிய (1) பசவேசர், (2) சென்னபசவர் (3) அல்லமாப்பிரபுதேவர், (4) சித்திராமேசர், (5) அக்மாதேவி ஆகியோரைக் குறித்தோ செய்யப்படுகின்றது என்பது தெளிவாகத் தெரியவில்லை. இதையடுத்து அர்த்த மண்டபத்துள் செல்லும் குருக்கள் அம்மண்டபத்துள் வலது புறமாக அமர்த்தப்பட்டிருக்கும் விநாயகர் உற்சவ மூர்த்தியை வழிபட்டுக் கொண்டு லிங்கத்தை அபிசேகித்து, அலங்காரம் செய்வர். இதைத் தொடர்ந்து பரிவாரக் கோயில்களிலெல்லாம் அபிசேகம் நடாத்தி பின் பூசை ஆரம்பாகும். சுற்றுப் பிரகாரப் பூசை விநாயகரில் தொடங்கி, பார்வதி அம்மன் கோயிலில் நிறைவுறும். இதைத் தொடர்ந்து பெரிய கோயில் பூசையாரம்பமாகும். அதில் அட்டதிக்குப் பாலகர்களுக்கு பூசை நிகழ்ந்த பின் பலியலடிப்பூசை நடைபெறும். இப்பலியலடி என்பது நிர்த்த மண்டபத்தின் முன்புறமாக அமைக்கப்பட்டிருக்கும் மேடையாகும். இவ்விடத்தில் சப்தகோடி வைரவர்கள் உறைந்திருப்பதாக நம்பப்படுகின்றது. இங்கு பெரிய பூசைகள் நடைபெறும் காலத்தில் வேள்வி போல மா உறட்டிகளும், பழவகைகளும் படையல் செய்யப்படும். இதன் பின்பே மூலவர்க்குரிய பூசை நடைபெறும். இறுதியில் கம்பத்தடிப் பூசையும், ஞானவயிரவர் பூசையும், சண்டேசுவரர் பூசையும் நிகழ்ந்து பூசை நிகழ்ச்சிகள் நிறைவுறும். இவ்வாறு இரண்டு மணித்தியாலம் பின்னேற்பாட்டோடு மதிய பூசை 12.00 மணிக்கும், மாலைப் பூசை 6.00 மணிக்கும் நிகழும். மார்கழி மாதத்தில் காலைப் பூசை அதிகாலை 4.00 மணிக்கு என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாலயத்தில் ஒவ்வொரு வேளையும் 2 படி அல்லது இரண்டு கொத்து அரிசி பிரசாதமாகத் தயாரிக்கப்படும். இதில் மூலவருக்கு படையல் செய்வதற்காகப் பழமை வாய்ந்த தாம்பாளம் ஒன்றுள்ளது. இத்தாம்பாளத்துள் பிரசாதம் குவித்து வைக்க வேண்டும், என்பது அவசியமாகும். இதில் குறைவு ஏற்பட்டால் நாட்டைப் பஞ்சம் பீடிக்கும் என அஞ்சுவர். இவ்வாலயத்தில் வீர சைவ முறைப்படி பிரசாதம் முக்கியம் பெறுகின்றது. ஒவ்வொரு நாளும் பிரசாதத்திற்காக மூன்று மரைக்கால் நெல் குத்தப்படுவது வழக்கமாகும். இவ்வகையில் ஆண்டொன்றுக்கு சாதாரண பூசைகளுக்கு மாத்திரம் நாற்பது அவணம் நெல் குத்துவிக்கப்படுகின்றது.

இவ்வாலய நித்திய பூசைக் கடமைகளில் குருக்கள், கொடா வீட்டுக்காரன், அமுது வைக்கும் பையன், பூப்பறிக்கும் சிறுவன், தொண்டூழியகாரர் என்போர் சம்பந்தப்படுகின்றனர்.

தொண்டூழியகாரர் நால்வர். வெள்ளிக் கிழமைகளிலும், விசேட பூசைக்காலங்களிலும் இந்த நால்வரும் சேவை செய்வர். ஏனைய நாட்களில் ஒருவர் அல்லது இருவர் கடமையில் ஈடுபட்டிருப்பர். இரவு வேளைகளில் தொண்டூழியகாரரில் குறைந்தது இருவராகுதல் கோயிலில் தங்கியிருப்பது அவசியமாகும்.

(02) வருடாந்த உற்சவமும் நிகழ்ச்சிகளும்

தான்தோன்றீச்சரத்தில் வருடாந்த உற்சவம் பங்குனி உத்தரத்தைத் தீர்த்தோற்சவ நாளாகக் கொண்டு முன்னைய காலங்களில் நடைபெற்று வந்ததாக அறியக் கிடக்கின்றது. பிற்பட்ட காலத்தில் மக்களின் வசதி கருதி தேசத்து வன்னிமையால் ஆவணி மாதத்திற்கு இவ்விழா மாற்றப்பட்டதென்பர். ஆவணி உத்தரத்தில் கொடியேற்றப்பட்டு, பூரணையை அடுத்த ஞாயிறு தேரோட்டமும், மறுநாள் திங்கள் தீர்த்தோற்வசமும் நடத்துவது இன்றைய நடைமுறையாகும். 1916ம் ஆண்டு இவ்வாலயத்தின் திருவிழா வைப்புமுறை பின்வருமாறு அமைந்திருந்ததாக அறிய முடிகின்றது.

1 தொடக்கம் 3ம் நாள் வரை கோயில் திருவிழா

| | | |
|---|---|---|
| 4ம் | நாள் | கோயிலார் |
| 5ம் | நாள் | தேசத்து வன்னிமை, |
| 6ம் | நாள் | வேளாளர், |
| 7ம் | நாள் | பெத்தாங்குடியார், |
| 8ம் | நாள் | கோப்பி குடியார் |
| 9ம் | நாள் | கச்சிலா குடியார் |
| 10ம் | நாள் | பணிக்கனா குடியார், |
| 11ம் | நாள் | படையாண்ட குடியார் |
| 12ம் | நாள் | காலிங்கா குடியார், |
| 13ம் | நாள் | உலகிப்போடி குடியார், |
| 14ம் | நாள் | செட்டிமார், |
| 15ம் | நாள் | தேரோட்டம், |
| 16ம் | நாள் | தீர்த்தோற்சவம், |

இதற்கு முந்திய காலங்களில் தனஞ்சனா குடியாருக்கும் இவ்வாலயத்தில் திருவிழா இருந்தது என சிலர் கூறுவர். 1918ம் ஆண்டு பணிக்கனா குடியார் ஆட்கள் குறைவு காரணமாகத் திருவிழாவைக் கைவிடவேண்டியதாயிற்று. செட்டிமார் நடாத்தி வந்த இறுதித் திருவிழாவிற்கு இதே நிலையேற்பட, இத்திருவிழாவை 1927ம் ஆண்டில் இருந்து பழுகாமத்து வேளாளருள் செட்டிகுடியார் கையேற்று நடாத்திவரத் தொடங்கினர். கலிங்க வேளாள குலத்தைச் சேர்ந்த கோயிலுக்குரிய தேசத்து வன்னிமை பதவியை இறுதியாக வகித்தவர் மட்டக்களப்பில் வாழ்ந்த வேலுப்பிள்ளை நொத்தாரிசி என்பார். இவரோடு இச்சந்ததியற்றுப் போகவே இப்பதவி தொடர்பான சில சர்ச்சைகள் ஏற்பட்டு 1932 முதல் பழுகாமத்தைச் சேர்ந்த அத்தியாகுடி வேளாளர் இப்பதவிக்கு உருத்துடையவராக்கப்பட்டனர். இதனால் தேசத்து வன்னிமைக்கு உரிய திருவிழாவும், வேளாளருக்கு உரிய திருவிழாவும் ஒன்றாக்கப்பட்டன. 1962ம் ஆண்டு முதல் வேளாளர் இக்கோயிலை விட்டு பிரிந்து சென்றமையால் இவர்களால் நடாத்தப்பட்டு வந்த இரு திருவிழாக்களும் கைவிடப்பட்டன. 1968ம் ஆண்டு முற்குகருள் ஒரு பிரிவினராக இருந்த சட்டிகுடியாருக்கு திருவிழா வழங்கப்பட்டது. இத்தகைய மாறுதல்களால் இவ்வாலயத்தில் தற்போதைய திருவிழா வைப்பு முறை பின்வருமாறு அமையும்.

1 - 6 நாட்கள் கோயில் திருவிழா.

| | | |
|---|---|---|
| 7ம் | நாள் | கோயில் தொண்டூழியருக்குரிய திருவிழா. |
| 8ம் | நாள் | சட்டிகுடியார். |
| 9ம் | நாள் | பெத்தாங்குடியார். |
| 10ம் | நாள் | கோப்பிகுடியார். |
| 11ம் | நாள் | கச்சிலாகுடியார். |
| 12ம் | நாள் | படையாண்டகுடியார். |
| 13ம் | நாள் | காலிங்காகுடியார். |
| 14ம் | நாள் | உலகிப்போடி குடியார். |
| 15ம் | நாள் | தேரோட்டம். |
| 16ம் | நாள் | தீர்த்தோற்சவம். |

சில ஆண்டுகளில் திருவிழா நாட்களை அதிகரிக்க வேண்டி வந்தால் அந்நாட்கள் கோயில் திருவிழாவில் சேர்த்துக் கொள்ளப்படும்.

இவ்வாலயத்தில் திருவிழா நடத்துபவர்கள் பிரசாதத்திற்காக இருபது மரைக்கால் நெல்லும் திருவிழா ஊழியத்துக்குரிய நெல்லாக எண்பது மரைக்கால் நெல்லும் முதலில் செலுத்த வேண்டும். திருவிழா நாள் அன்று காலையிலேயே தொண்டூழியருக்குரிய படிகள் பின் வருமாறு கொடுக்கப்படும்.

| | |
|---|---|
| குருக்கள் மூவர் | - 9 மரைக்கால். |
| கௌடா வீட்டுக்காரர் | - 2 மரைக்கால். |
| அயிலாந்தி அமுது வைப்பவர் | - 2 மரைக்கால். |
| தொண்டூழியகாரர் நால்வர் | - 8 மரைக்கால். |
| நெல்லுக்குத்தும் பெண்கள் ஐவர் | - 5 மரைக்கால் |
| தொழும்பறை ஊழியகாரர் ஐவர் | - 5 மரைக்கால். |
| கங்காணி | - 2 மரைக்கால். |
| பட்டிக்காரன் | - 1 மரைக்கால். |
| அன்னக் கொடி பின்னுபவர் | - 2 மரைக்கால். |
| கொடிமரத்தில் ஏறுபவர் | - 1 மரைக்கால். |
| உள்விளக்கு | - 1 மரைக்கால். |
| வெளி விளக்கு | - 1 மரைக்கால் |
| திருநீற்றயர் | - 1 மரைக்கால். |
| அமுது வைக்கும் இரண்டு பையன் | - 2 மரைக்கால். |

| | |
|---|---|
| விளக்கு பார்க்கும் பையன்கள் | – 1 மரைக்கால் |
| மணிக்காரன் | – 1 மரைக்கால். |
| அயலாந்தி தவில் | – 1 மரைக்கால். |
| அயலாந்தி குழல் | – 1 மரைக்கால். |
| பெரிய தேருக்காக | – 4 மரைக்கால். |
| வீதி அதிகாரி | – 1 மரைக்கால். |
| கோயில் வண்ணான் | – 1 மரைக்கால். |
| பரிவட்ட வண்ணான் | – 1 மரைக்கால். |
| அம்பிளாந்துறை வண்ணான் | – 1 மரைக்கால். |
| மாலை கட்டுபவர் | – 1 மரைக்கால். |
| நாற்காலி தூக்குபவர் | – 1 மரைக்கால். |
| தம்பட்டம் | – 3 கொத்து. |
| ஆலாத்தி பெண் | – 3 கொத்து. |
| சந்திரப்பிறை, சூரியப்பிறை, முகக்களை | – $1\frac{1}{2}$ கொத்து. |
| கொடி | – 3 கொத்து. |
| சூல விளக்கு – 4 | – 2 மரைக்கால். |

இப்படிகளோடு வண்ணக்குமாரின் கணக்கில் 15 மரைக்கால் ஒவ்வொரு திருவிழாக்காரரும் கொடுப்பர். இத்தொகை தேர்கள் கோர்த்து கழட்டிவைப்பதற்குக் கூலியாக பயன்படுத்தப்படும். சாமி தூக்குவதற்காகப் பழுகாமத்தில் இருந்து வரும் வேளாளருக்கு ஒவ்வொரு திருவிழா நாளிலும் உணவுக்காக 16 கொத்து அரிசியும் காய்கறியும் கொடுக்க வேண்டும், என்ற நியதியும் இருந்தது.

இவ்வாலய வருடாந்த உற்சவ திருவிழாக்களில் மூசிகத்தில் வினாயகரும், மயூரத்தில் சுப்பிரமணியரும், சப்புறத்தில் சோமஸ்கந்தரும், ரிசபத்தில் சந்திரசேகரும், எழுந்தருழுவர். இங்குள்ள சந்திரசேகர உற்சவமூர்த்தி மிகப்பழமையானது இதனை சண்டேஸ்வரர் விக்கிரகம் என்றும் சிலர் கூறுவர்.

இங்கு நடைபெறும் இரதோற்சவத்தை மட்டக்களப்பு மக்களெல்லம தேரோட்டம் என்று அழைப்பர். இதில் இரண்டு தேர்கள் வீதிவலம் வரும். சிறிய தேரில் விநாயகரும், முருகனும், பெரிய தேரில் சோமஸ்கந்தரும் எழுந்தருளி அருள்பாலிப்பர். மதிய பூசையோடு ஆரம்பாகும் இரதோற்சவ நிகழ்ச்சி பிற்பகல் 5 மணிஅளவில் நிறைவுறுவது வழக்கம். மறுநாள் அதிகாலையில் திருவேட்டை நிகழ்ச்சி நடைபெறும். இந்நிகழ்ச்சிக்காக ஆலயத்திற்கு வடகிழக்கில் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள வீரபத்திரர் ஆலய வீதிக்கு சோமஸ்கந்தர், விநாயகர் சகிதம் எழுந்தருளுவார். அங்கு விதிமுறைப்படி சூகர வேட்டை நிகழ்த்தப்படும். அச்சந்தர்பத்தில்

*"சீராரும் செங்கமலக் கண்ணினானும்*
*திசை முகனும் இந்திரனும் தேவர்தாமும்*
*பாராரும் கமலபதம் மிறைஞ்சியேற்ற*
*இலங்கு சிலை திருக்கரத்திலேந்தி யென்றும்*
*பாரேனும் வாழ்க மறைநான்கும் வாழ்க*
*பல்லுயிரும் வாழ்க மிகப் பவுகண்டாக*
*ஆராரும் போற்று திருக்கோயில் வாழும்*
*அரனாரும் திருவேட்டை ஆடினாரே."*

எனத் தொடங்கும் பதிகம் பாடப்படும். திருவேட்டையை அடுத்து அதேயிடத்தில் திருக்குடுக்கை கூறுதல் என்னும் வரலாற்று பெருமை மிக்க நிகழ்ச்சி நடைபெறும். இந்நிகழ்ச்சியில் மட்டக்களப்புத் தேசத்தில் வாழ்ந்த 140 வரையிலான சாதிப்பிரிவினரும் திருக்குடுக்கை கொடுத்துக் கௌரவிக்கப்படுவர். இத்திருக்குடுக்கை கூறுதற்கான பந்தல் திருவேட்டை நடைபெற்ற இடத்திற்குத் தென்புறமாக வடக்கு நோக்கி அமைக்கப்பட்டிருக்கும்.

இதையடுத்து அன்று காலை 10.00 மணியளவில் தீர்த்தோற்சவம் நடைபெறும் கோணேஸ்வரத்திலுள்ள பாவநாச கிணறு போல இவ்வாலயத்திலும் பழமைமிக்க ஓர் தீர்த்தக் கிணறு ஆலயத்தில் முன்புறமாக அமைந்துள்ளது. இதில் நடைபெறும் தீர்த்தோற்சவத்தில் குருக்கள் அச்சர தேவரோடு கிணற்றில் இறங்கி அட்சர தேவரை தீர்த்தமாட்டி அந்நீரை புனிதப்படுத்திய பின் பக்தர்கள் அனைவரும் அந்நீரைத் தெளித்து தீர்த்தோற்சவத்தை நிறைவு செய்வர். இதையடுத்து ஆலயத்தில் நடைபெறும் விசேட பூசையில் வரலாற்றோடு தொடர்புடைய சில சம்பிரதாய நிகழ்ச்சிகளும் நடைபெறும். தீர்த்தோற்சவம் நடைபெறும் அன்றிரவு சண்டேஸ்வரருக்கான பூசையும், காவற்தெய்வங்களுக்கான வேள்வியும் நிகழ்த்தப்படும். இதைத்தொடர்ந்து நள்ளிரவில் எவரும் அறியாத முறையில் குருக்கள் இரகசியமாகச் செய்யும் சம்பிரதாய கிரியை முறைகளோடு கொடியிறக்கி விழா முற்றுவிக்கப்படும்.

தான்தோன்றீச்சரத்தின் வருடாந்த உற்சவ காலம் இறைவனுக்கு இப்பிரதேச மக்கள் கலையை படையல் செய்யும் காலமென்றும் கூறலாம். ஆனந்தக் கூத்தும், காவடியாட்டமும் இவ்வாலயத்திருவிழாக்களில் முக்கியம்சமாக இடம் பெறும். இத்தோடு கொடியேற்றம் முதல் கொடியிறக்கும் வரை எல்லாத்தினங்களிலும் வடமோடி, தென்மோடி நாட்டுக் கூத்துக்கள் இரவு முழுவதும் நடைபெறுவது குறிப்பிடத்தக்க கலைச் சிறப்பாகும்.

## விசேட பூசை

தான்தோன்றீச்சரத்தில் வருடாந்த உற்சவம் தவிர பல விசேட பூசைகளும் நடைபெற்று வருகின்றன. இவற்றுள் குறிப்பிடத்தக்கவொன்று கார்த்திகை மாத கார்த்திகைத் திருவிழாவாகும். இன்றைய தினத்தில் விநாயகப் பெருமான் இவ்வாலயத்தின் வெளி வீதி சுற்றி வலம் வருவார். மேலும் ஆலயத்தின் முன் புறமாக 9 முளம் உயரமான ஒரு மரம் நாட்டப்படும். இவ்வாறு நாட்டப்படும் மரத்திற்கு பனிச்ச மரமே தெரிந்தெடுக்கப்படும். இம்மரத்தின் மேல் மத்தியில் ஒரு பெரிய தீபமும், நான்கு பக்கங்களும் நான்கு சிறிய தீபங்களும் ஏற்றப்படும். இவ்வாறு நான்கு பக்கங்களும் ஏற்றப்படும் தீபங்கள் பின்வரும்

தேவைகளுக்கருளுமாறு வேண்டுதல் செய்து ஏற்றப்படும். கிழக்கு :- தேவாலம், குமாராலயம், சர்வாலயமும் சிறப்புற வேண்டும். வடக்கு :- தேசம், தேசத்திலுள்ள மாடு, கன்றுகள், ஆளடிமை நல்லா நடக்க வேண்டும். மேற்கு :- அரசரது செங்கோல் நீதி சரிவர நடக்க வேண்டும். தெற்கு :- தான்தோன்றீஸ்வரருடைய மாடு கன்று, ஆளடிமை சரிவர நடக்க வேண்டும்.

இக்கார்த்திகைத் திருவிழாவை சேவகப்பற்றுக் கண்டத்துப் போடிமார் அன்று முதல் இன்று வரை நடாத்தி வருகின்றனர். பண்டைய நாளில் கார்த்திகைத் திருவிழா நடாத்துவதற்காகவும், பெரும் போக பஞ்சகாலத்தில் இவ்வாலயத்திற்கு நெல் வழங்குவதற்காகவும் சேவகப்பற்று கண்டத்து வயல்கள் 5 குடியாருக்கு மானியமாகக் கொடுக்கப்பட்டிருந்தன. அவ்வைந்து குடியாருமே கார்த்திகைத் திருவிழாவில் திருவிழா மாலைக்குரியவர்களாக கௌரவிக்கப்பட்டனர். அவர்கள் பின்வருமாறு.

1. சந்திரன் வயல் படையாண்ட குடியார்.
2. தொட்டத்து வயல் உலகிப்போடிகுடியார்.
3. பெரிய கீத்து காலிங்கா குடியார்.
4. தில்லம் வயல் – தனஞ்சனா குடியார்.
5. கரச்சைவெளி – பணிக்கனாகுடியார்.

இதையடுத்து மாசி மகம், மகாமகம் ஆகிய தீர்த்தோற்சவங்கள் இவ்வாலயத்தில் சிறப்பாக நிகழ்த்தப்பட்டமை பற்றியறியக் கிடக்கின்றது. மகாமகத்தன்று கடலாடும் நோக்கத்தோடு இக்கோயிலில் இருந்து மண்முனைத் துறைக்குச் செல்வது வழக்கமாகும். இவ்வாலயத்தில் நடைபெற்று வந்த விசேட பூசைகளெல்லாம் தொடர்ந்து நல்லபடி நடத்தப்பட்டு வரவில்லை. பல பரம்பரையினர் பூசைகளை நடத்தாது விட்டனர். இதனால் பூசையுரிமைகளில் காலத்துக்குக் காலம் மாறுதல் ஏற்பட்டு வந்தன. இன்று கோயிலில் நடாத்தப்படும் விசேட பூசைகளும் அவற்றை நடத்துவோரும் பின்வருமாறு.

| | |
|---|---|
| 01. தைப்பொங்கல் | – இலுப்படிச்சேனை திரு. கு. கனகசபை (கோட்டையார் பரம்பரை) |
| 02. தைப்பூசம் | – காலிங்கா குடியார், |
| 03. மாசி மகம் | – தற்பொழுது பனிச்சையடிமுன்மாரி, திரு.ஞா. பேரின்பம், |
| 04. பங்குனி உத்தரம் | – அம்பிலாந்துறை கந்தப்போடி வண்ணக்கர் பரம்பரையினர், |
| 05.சித்திரை வருடப்பிறப்பு | – கொக் கட்டிச்சோலை திரு.ஏரம்பமூர்த்தி பரம்பரையினர். |
| 06. சித்திரைக்கதை | – கொக்கட்டிச்சோலை திரு.சிசீனித்தம்பி குடும்பத்தினர். |
| 07. ஆனி உத்திரம் | – கொக்கட்டிச்சோலை திரு.ஏ.புவநேசசிங்கம் பரம்பரையினர். |
| 08. ஆடி அமாவாசை | – முனைக்காடு, திரு. க. நல்லையா குடும்பம் |
| 09. திருக்கார்த்திகை | – சேவகப்பற்றுப் போடிமார். |
| 10. பெருங்கதைப் பூசை | – கொக்கட்டிச்சோலை திரு.க. குமரகுரு குடும்பத்தினர். |
| 11. திருவாதிரை | – படையாண்ட குடியார். |

## தனித்துவமான சிறப்புப் பூசைகள்

தான்தோன்றீச்சரத்தில் சிறப்புரிமையான பூசைகளாக இப்பிரதேச நெற்பயிர்ச் செய்கைகளோடு சம்பந்தப்பட்ட பூசைகளைக் குறிப்பிடலாம். பெரும்போக விளைவையடுத்து இங்கு புதிதெடுக்கும் வைபவம் நடைபெறும். கோயில் வயலில் இருந்து நெற்கதிர்கள் கொய்து கொண்டுவந்து, குருக்களும், கௌடாவீட்டுக்காரரும் புதிதெடுக்கும் பெட்டியைத் தலையில் ஏந்திய வண்ணம் மேளதாளத்தோடு புறவீதி சுற்றி கோயிலுள் புதிதெடுத்துச் செல்வர். சுவாமி புதிதெடுக்கின்ற இத்தினத்தில்தான் அக்கிராமத்தில் வாழும் எல்லா மக்களும் புதிதெடுப்பர். என்பது குறிப்பிடத்தக்கது. இதையடுத்து ஒரு நாளில் கோயிலில் புதிர் கொடுக்கும் நிகழ்ச்சி நடைபெறும். அன்றைய தினம் கன்னங்குடாவிலும், ஏனைய இடங்களிலிருந்தும் கொண்டுவரப்பட்ட புது நெல்லை புதிதுண்பதற்காகத் தொண்டூழிய காரருக்கும், வறியவருக்கும் கோயிலில் வழங்குவர். இவ்வாறு புதிர் கொடுப்பதற்கு குறைந்தது நான்கு அவணம் நெல் இவ்வாலயத்திற்கு தேவைப்படும். இதையடுத்து ஒரு சுப முகூர்த்தத்தில் புதிதுண்ணல் நடைபெறும். புதிதுண்ணலுக்கு மாத்திரமே இவ்வாலயத்தில் கறியமுது படையல் செய்வது வழக்கமாகும். தான்தோன்றியப்பருடைய இக் கறியமுதைப் பெற்று புதிதுண்பதற்காகவும் பலர் காத்துக் கிடப்பர்.

மாரி குறைந்து பயிர் வாடும்போது மழையைப் பெய்விப்பதற்காகத் தனித்தன்மையான வழிபாட்டு முறைகள் இவ்வாலயத்தில் பேணப்பட்டு வருகின்றன. இவ்வழிபாட்டு முறையில் முக்கியமானதொன்று கட்டை நேருதல். ஒரு குறித்த

தினத்தில் ஆலயத்தில் விசேட பூசை நடாத்தி கோயில் குருக்களும், பரிபாலனரும் ஒரு மைல் தொலைவில் உள்ள தெம்மத்தன் கிணற்றடியை நோக்கி மேளதாளத்தோடு புறப்பட்டுச் செல்வர். போகும் வழியில் இடையில் உள்ள காட்டில் நாவல் மரக் கட்டை ஒன்று தறித்துப் புனிதமான முறையில் எடுத்துச் செல்வர். அங்கு அக்கட்டையைத் தெம்மத்தன் கிணற்றடிப் பிள்ளையாருக்கு முன்பதாக வைக்கப்படும். இதன் எதிர்பார்க்கை, இக் கட்டையை உருட்டக்கூடிய அளவு மழை பெய்ய வேண்டமென்பதாகும். இவ்வாறு மழை பெய்து, வயல் விளைந்ததும், சேவகப்பற்றுப் போடிமார் இணைந்து தெம்மத்தன் கிணற்றடியில் பெரிய அன்னதானம் செய்வர். இது "தெம்மத்தன் கிணற்றடி அமுது" என்று அழைக்கப்படும்.

மழையைப் பெய்விப்பதற்கு இங்கு பேணப்பட்ட மற்றுமொரு வழிபாட்டுமுறை தாந்தா மலைக்குச் சென்று பொங்கல் செய்வது. குறித்த ஒரு நாளில் தான்தோன்றீச்சரக் குருக்களும், பரிபாலனரும் ஆலயத்தில் இருந்து புறப்பட்டு ஆலயச் சின்னங்களோடும், சிவ சின்னங்களோடும். தாந்தாமலையில் ஏறி பொங்கல் செய்வர். அங்கு பால் பொங்க, மழையும் பெய்யும். என்பர். இவற்றைவிடப்பட்டு நேர்ந்து வைத்து மழை பெய்ததும், விசேட அபிசேக பூசை நடாத்தும் நேர்த்திக்கடன் முறையும் இருந்து வந்தது.

## விரதங்கள்

இவ்வாலயத்தில் மிகப் பழங்காலத்திலிருந்து அனுசரிக்கப்பட்டு வரும் விரதம் சிவராத்திரியாகும். இவ்விரத பூசையை மிகப் பழங்காலம் முதல் இவ்வாலயத்தோடு தொடர்புடையவர்களாகிய உலகிப்போடி குடியார் நடாத்தி வருகின்றனர். சிவராத்திரி காலப்பகுதி பெரும்போக வேளாண்மைச் செய்கையின் அறுவடை காலம். ஆகையால் மிகப் பெருந்தொகையான மக்கள் அவ்விரதத்தை இங்கு அனுசரிக்காமை பெருங்குறையேயாகும். மேலும் சிவராத்திரி விதி பற்றி ஆகமங்கள் கூறுகின்ற பூசை முறைகளில் இங்கு சில அனுபவ வேறுபாடுகளை அவதானிக்கலாம். குறிப்பாக நாலு சாமங்களும் படையல் செய்யப்படும் பிரசாதத்தில் அன்னமும், இப்பிரதேசத்தில் விளையும் கிழங்கு வகைகள், சோழம், பூசணிக்காய் முதலியனவும் முக்கியம் பெறுதல் குறிப்பிடத் தக்கது.

கந்தசஷ்டி விரதம் இங்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் அனுஷ்டிக்கும் விரதமாக இருந்து வருகின்றது. மார்கழிமாத விநாயகர் சஷ்டிவிரதம் இங்குள்ள பிள்ளையார் கோயிலில் அனுஷ்டிக்கப்பட்டாலும், பெரும் முக்கியம் பெறுவதில்லை. மார்கழித் திருவெம்பாவை விரதம் கேதார கௌரி விரதம் என்பனவும் இங்கு பேணப்பட்டு வருகின்றது. அண்மைக்காலத்தில் இருந்து நவராத்திரி பூசைகளும், நவராத்திரி விரதத்திற்கும் இங்கு இடமளிக்கப்பட்டுள்ளது. மேற்குறித்த பலநாள் விரதங்களுக்கெல்லாம் ஒவ்வொரு நாளும் பூசைக்குரியவர்களை யார் என அண்மைக் காலத்தில் திட்டம் செய்யப்பட்டுள்ளது. மேலும் ஆவணி ஞாயிறு புரட்டாதிச்சனி, ஐப்பசி வெள்ளி, கார்த்திகைத் திங்கள் ஆகிய மாத விரத நாட்கள் இவ்வாலயத்தில் பெருந்தொகையான மக்கள் கூடும் நாட்களாக இருந்து வருகின்றன.

## பிற கோயில் விழாக்களுக்கு உதவுதல்

முன்முனைப் பிரதேசத்தில் பெரிய கோயில் எனப் போற்றும் தகுதிக்குரிய தான்தோன்றீச்சரம் அக்கம் பக்கங்களிலுள்ள கிராமக் கோயில் விழாக்களுக்கு பல வழிகளில் உதவி வருகின்றது. தாந்தாமலையில் முருகன் ஆலயம் தோற்றம் பெறுவதற்கும் திருவிழாக்கள் நடை பெறுவதற்கும் இடைவிடாத பங்களிப்பை இவ்வாலயம் வழங்கி வருகின்றது. இத்தோடு பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயத்தில் வருடாந்த பொங்கல் விழாவை தொன்றுதொட்டு தான்தோன்றீச்சரர் ஆலயமே முன்னின்று நடாத்தி வந்தது. ஆரையம்பதி முருகன் ஆலயம், பழுகாமம் திரௌபதி அம்மன் ஆலயம், ஏறாவூர் விரபத்திரர் ஆலயம், ஆகிய கோயில்களில் வருடாந்த உற்சவங்களுக்கு இவ்வாலயம் குறிப்பிடத் தக்க பங்களிப்பைச் செய்து வந்தமை பலரும் அறிவர். மேலும் காத்தான்குடி கவுறடியில்கூட ஆண்டுதோறும் நடைபெறும் விழாவிற்கும் தான்தோன்றீச்சரம் பங்களிப்புச் செய்து வந்தது. இவையெல்லாம் பற்றி விரித்தாராயப்படுதல் அவசியம்

*– முற்றும் –*

# வைரவர் வழிபாடு

வித்யா கலாபமணி, சைவப்புலவர், எஸ். தில்லைநாதன்
*பிரதேச பிரதிக்கல்விப் பணிப்பாளர், பட்டிப்பளை*

*"பரமனை மதித்திடாப் பங்கையாசனன்*
*ஒருதலை கிள்ளியே உயர்ந்த வானவர்*
*குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமும்*
*புரிதரு வடுகனைப் போற்றி செய்குவோம்*

கிராமியத் தெய்வங்களின் வழிபாடுகளில் ஒன்றாகக் காணப்படும் வைரவக் கடவுள் வழிபாடானது சிவவழிபாட்டின் முக்கிய இடத்தை வகிக்கின்றது. வைரவருக்கு வடுகன், சரபூதன், சட்டை நாதர், கஞ்சுகன், காரி, சேத்திர பாலர் எனப்பல திருநாமங்கள் உள்ளன.

வைரவக் கடவுளைப் பற்றி இருக்கு வேதம், அதர்வ வேதம், புராண இதிகாசங்கள் பன்னிரு திருமுறைகள் முதலியவற்றில் கூறப்பட்டுள்ளன.

பன்னிரு திருமுறைகளில் ஒன்றாகிய திருமந்திரத்தின் நான்காம் தந்திரத்தில் பதின்மூன்று பகுதிகள் உள்ளன. அவற்றில் ஒரு பகுதியாக வைரவ சக்கரம் காணப்படுகிறது. இதில் சக்கரத்தை அமைக்க வேண்டிய குறிப்பு, உருவ வழிபாடு, வழிபாட்டில் பெறப்படும் பயன் முதலியன கூறப்பட்டுள்ளன. வைரவக் கடவுளுடைய திருமேனியைக் கூறப் போந்த திருமந்திர நூலாசிரியர்;

"மெய்யது செம்மை விளங்கு வைரவன் " எனக் கூறியுள்ளார். திருநாவுக்கரசு சுவாமிகள்,

*"சிவனெனும் நாமம் தனக்கே*
*உரிய செம் மேனி அம்மான்"*

எனப்பகர்ந்துள்ளார். இதனால் சிவபெருமானும் வைரவரும் ஒருவரே எனத் தெளிவாகத் தெரிய வருகிறது. சிவபெருமானின் அறுபத்து நான்கு மூர்த்தங்களில் முப்பத்தெட்டாவது மூர்த்தமாக வைரவர் மூர்த்தம் கொள்ளப்படுகிறது.

சிவன் அம்மையாருடன் கூடிய இன்ப நிலையிலும், சிவன் அம்மையாரின்றி வீர நிலையிலும், யோக நிலையிலும், ஆன்மாக்களுக்கு அருள் புரிகின்றார். இவற்றை முறையே போக, கோர, யோக மூர்த்தங்களாக நூல்கள் கூறுகின்றன. இம்மை, மறுமை இன்பங்களை அனுபவிக்க விரும்புகின்றவர்களும் உலகத்தில் புகழ்ச்சியைப் பெற விரும்புகின்றவர்களும் போக மூர்த்தியையும், உலகில் பகையை வெல்ல விரும்புகின்றவர்களும், கர்ம வினையை ஒழிக்க முயல்பவர்களும் கோர மூர்த்தியையும், பேரின்பமாகிய வீடுபேற்றை அடைய விரும்புபவர்கள் யோக மூர்த்தியையும் வழிபடுதல் வேண்டும் என்பது ஆப்த வாக்கியம். கோர மூர்த்தியாக வைரவர் மூர்த்தம் கொள்ளப்படுகின்றது. வைரவ மூர்த்தியை வழிபடுவதால் தீராத நோய்கள், தோஷங்கள், சாபங்கள், கன்ம வினைகள் முதலியன நீங்குவதாக நூல்கள் கூறுகின்றன.

பெருந்தொந்தியும், கபால மாலையும், பயங்கரப் பற்களும், செஞ்சடையும், முக்கண்ணும், நீலத்திரு மேனியும், சூலம், மண்டையோடு, பாசம் ஆகியவைகளைக் கொண்ட திருக்கரங்களும் கோபச்சிரிப்பும் கொண்ட கோர வடிவமாக வைரவக் கடவுள் சித்தரிக்கப்படுகின்றார்.

வைரவக் கடவுள் காவற் தெய்வமாகவும் விளங்குகின்றார். கிராம சாந்தியின் போது அட்டதிக்குப் பாலகருடன் வைரவருக்கு வழிபாடு செய்யப்படுகிறது. இது மட்டுமன்றி வாஸ்து சாந்தியின் போதும், கோயில் வீடு இவைகளுக்கு அத்திவாரம் இடப்படும் போதும், குடிபுகும் போதும், கோயில் பூசைகளின் போதும், காவற் தெய்வமாக வைரவக் கடவுள் வழிபடப்படுகின்றார்.

வைரவர் வழிபாடு ஆகம நெறி சார்ந்தும் ஆகம நெறி சாராதும் நடைபெறுகின்றது. இலங்கையில் போர்த்துக்கீசரின் ஆட்சிக் காலத்தில் சைவக் கோயில்களும், வழிபாடுகளும் அழித்தொழிக்கப்பட்ட காலகட்டத்தில் இந்துசமய மக்களால் விநாயகரையும் வைரவரையும் வீடுகள் தோறும் இரகசியமாக வழிபாடு செய்யப் பெற்றதாக வரலாறுகள் சான்று கூறுகின்றன.

வைரவக் கோட்பாடானது கி.பி. 6ஆம் நூற்றாண்டுகளில் காணப்பட்ட "காபாலிக பிரிவுடன் மிகவும் நெருங்கிய தொடர்பு உடையதாக காணப்படுகிறது. தாந்திர மதத்திலும் இது முக்கிய இடத்தைக் கொண்டுள்ளது. சைவசமயப்பிரிவுகளான "காபாலிகம்," "பைரவம்" என்பன வைரவக் கடவுளை முக்கியத்துவப்படுத்துகின்றன.

முன்னொரு யுகத்திலே, பிரமனுக்கு ஐந்து தலைகள் இருந்த காரணத்தினால் அனைத்துக்கும் முதற்பொருள் தானே என பிரமன் அகந்தையுற்று முழுமுதற் பெருமானாகிய சிவபெருமானையும் தன்கீழ்ப்பட்டவனாகக் கருதிய வேளையில் அவனது அகந்தையை நீக்குமுகமாக சிவ பெருமானிடம் இருந்து அகோர சக்தியொன்று தோன்றி, பிரமனது ஐந்து தலைகளில் ஒன்றைத் தனது இடக்கையினால் கிள்ளி எறிந்து அவனது அகந்தையை அழித்தது என்றும் அந்த அகோர சக்தியே வைரவக் கடவுள் எனவும் நூல்கள் தெரிவிக்கின்றன.

திருமந்திரத்தின் இரண்டாம் தந்திரத்தில் பதிவலியில் அட்டவீரட்டத்தைப் பற்றிச் சொல்லும் போது பின்வரும் வரலாறு சொல்லப்படுகிறது. "இரணியாட்சன்" என்பவனுக்கு "அந்தகாசூரன்" எனப் பெயர் கொண்ட மகன் இருந்தான். இறைவனிடம் பெற்ற வரங்களின் தன்மையினாலே தேவர்களுக்குத் துன்பம் பல செய்தான். இவனது தீமையினால் வருந்திய தேவர்களும், முனிவர்களும் சிவனிடம் முறையிட்டனர். இதன் காரணமாக சிவன் வைரவனாகத் தோன்றி சூலம் கைக் கொண்டு அவனைக் கொன்றார் எனக் கூறப்பட்டுள்ளது.

வைரவக் கடவுளின் மூர்த்தங்கள் எட்டாகக் கூறப்படுகின்றன. இதனை "பராக்கியம்" என்னும் நூல் கால வைரவர், கபால வைரவர், கல்பாந்த வைரவர், சங்கார வைரவர், சண்ட வைரவர், உக்கிர வைரவர், உன்மத்த வைரவர், உக்குரோத வைரவர் எனக் கூறுகிறது. சிவமூர்த்தம் என்னும் நூல் ஆதி வைரவர் (மகா வைரவர்) விறுவைரவர், நிர்மாண வைரவர், பாதாள வைரவர், சுடலை வைரவர், கல்யாண வைரவர், கங்காள வைரவர் எனக் கூறுகிறது.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் வீடுகள் தோறும் ஆதி வைரவர் வழிபாடு பெரும்பான்மையாகவும், கல்யாண வைரவர் வழிபாடு சிறுபான்மையாகவும் கைக்கொள்ளப்பட்டு வருகின்றன. வீட்டு முற்றத்தில் பந்தலிட்டோ, மேடை அமைத்தோ, வழிபாடு செய்யும் வழக்கு, ஆதிவைரவருக்கும், வீட்டு அறை ஒன்றினுள் வழிபாடு செய்யும் வழக்கு கல்யாண வைரவருக்கும் வழக்கமாக இருந்து வருகிறது.

வைரவக் கடவுளே எஞ்சிய யுகங்கள் தோறும் எஞ்சி நிற்பவராகப் புகழப்படுகின்றார். ஊழிக்காலத்தில் சங்காரத் தொழிலைச் செய்பவரும் இவரே என வருணிக்கப்படுகின்றார். இவரது வாகனமாக "நாய்" கருதப்படுகிறது. நான்கு வேதங்களும் நாய் வடிவில் அமைந்து இவ்மூர்த்தமாகிய வைரவரைத் தாங்குவதாக கொள்ளப்படுகிறது.

வைரவக் கடவுளுக்கு, இளநீர், கரும்பு, ரொட்டி, வடை, பொங்கல் படையல், முறுக்கு, அப்பம், வாழைப்பழம் (விஷேசமாக மொத்தன் பழம்), எலுமிச்சம்பழம், சாம்பிராணித் தூபம் முதலியவற்றால் வழிபாடு செய்யப் பெறுகின்றது.

சிவமூர்த்தமாகிய வைரவக் கடவுள் மட்டக்களப்பு தமிழகத்தில் குலதெய்வமாக, பரிவாரத் தெய்வமாக, பெருந் தெய்வமாக வைத்து வழிபடப்படுகின்றார்.

வேண்டு வோருக்கு வேண்டுவன ஈயும் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீவரர் பெருமானின் கும்பாபிஷேகம் நடைபெறும். இப்புனித நாட்களில் அவரின் மூர்த்தமாகிய வைரவப் பெருமானை நினைந்து அவர் அடி வணங்குவோமாக.

*"கிஞ்சுகந்தரு வாய்க் கலக்கின்ராயான்*
*அஞ்சுகம்பி லொன்றற்றிடக் கிள்ளியே*
*மிஞ்சுகத் தொறும் மிக்க றுங் கார் நிறக்*
*கஞ்சுகன் பொற்கழலடி போற்றுவோம்.*

# கிழக்கு மாகாணத்தைப் புரிந்து கொள்ள.....

## கிழக்கு மாகாணத்தில் ஆய்வுக்குரிய விடயங்கள்,

### - சுட்டிக் காட்டுதலுக்கான ஒரு முயற்சி-

கலாநிதி சி. மௌனகுரு

கிழக்கு மாகாணம் குறிப்பாக மட்டக்களப்புப் பிரதேசம் மானிட வியலாளர்களின் சொர்க்கம் (Anthropologists' Paradise) எனலாம். அந்நிய கலாசாரங்களுக்குள் அதிகம்அமிழ்ந்து விடாத பண்டைய கலாசார வாழ்க்கை முறைமைகளும், புராதன குழு வாழ்க்கை முறைமைகளும் காணப்படும் பிரதேசம் கிழக்கு மாகாணமாகும். இவ்வகையிலேதான் இதனை மானிடவியலாளர்களின் சொர்க்கம் எனக் குறிப்பிட்டேன்.

புராதன இனக்குழுமங்களையும், அடிக்கடி ஏற்பட்ட குடியேற்றங்களினால் புதிய இனக்குழுமங்களையும், வரலாற்றுப் போக்கினூடு ஏற்பட்ட வளர்ச்சியில் முஸ்லீம், சிங்கள, பறங்கி இனத்தவரையும் கொண்ட பல்லின சமூகத்தைக் கொண்டதாகவும் பன்முகக் கலாசாரத் தன்மை கொண்டதாகவும் கிழக்கு மாகாணம் விளங்குகின்றது.

இப்பிரதேசம் பற்றி வந்த ஆய்வுகள் மிகக் குறைவே. மானிட வியலிற் பயிற்சி பெற்ற கணநாத் அபயசேகர, மக்கில்வ்றே போன்றோர் இங்குள்ள சில வழிபாடுகளையும், குடிமுறைகளையும் பற்றி ஆராய்ந்துள்ளனர். தமிழ், முஸ்லீம் அறிஞர்கள் இங்கு வாழும் தமிழர் முஸ்லீம்கள் பற்றிச்சில நூல்களை எழுதியுள்ளனர். எனினும் இச்சமூகத்தை முழுமையாகப் புரிந்து கொள்ளும் முயற்சிகள் மேற் கொள்ளப்படவில்லை.

சரியான தரவுகள் பெறப்பட்ட பின்னரேயே இச் சமூகம் பற்றிய கணிப்பிற்கு வரமுடியும். மானிடவியல், சமூகவியல், தொல்பொருளியல், சரித்திரவியல், மொழியியல் போன்ற வளர்ச்சி பெற்ற துறைசார் நிபுணர்களின் வழி காட்டலில் செய்யப்படும் ஆய்வுகள் இச் சமூகம் பற்றிய பிரிவினை ஏற்படுத்தும்.

எவ்வெத்துறைகளில் ஆய்வுகளை மேற் கொள்ளலாம் என்பதைச் சுட்டிக்காட்டும் ஒரு அட்டவணையே இங்கு தரப்படுகிறது. இது ஓர் முழுமையான அட்டவணை அன்று. இது மேலும் செம்மைப்படுத்தப்பட வேண்டும். இது பற்றிச் சிந்திப்போருக்கு உதவும் முகமாகவே இது தரப்படுகிறது.

#### வரலாறு

பொதுவாக மட்டக்களப்பினதும் சிறப்பாகக் கிழக்கு மாகாணத்தினதும் வரலாறு இன்னும் முழுமையானதாக எழுதப்படவில்லை. வெளி வந்த ஓரிரு வரலாற்று நூல்களும் ஒன்றில் ஓர் இனம் சார்ந்ததாகவோ அன்றிக் குறிப்பிட்ட சாதியினை அல்லது மன்னர்களை முதன்மைப் படுத்துவதாகவோ தான் அமைந்துள்ளன. எமக்குக்கிடைக்கும் ஒரேயொரு நூல் மட்டக்களப்பு மான்மியமாகும். அது கூட தனிப்பட்ட மன்னர் வம்சத்தினது வரலாறே தவிர மக்களது வரலாறு கூறுவதாயில்லை. எனவே மட்டக்களப்பு மான்மியத்துடன் இப்பகுதியிற் கிடைக்கும் புதைபொருள் ஆய்வுகள், கல் வெட்டு ஆய்வுகள் கட்டிட இடிபாடுகள், இலக்கியங்கள், ஏனையோர் குறிப்புகள் கர்ணபரமபரைக் கதைகள், மொழி இலக்கியங்கள், வழிபாட்டு முறைகள் என்பவற்றின் துணை கொண்டு இப்பகுதி வரலாற்றை முழுமையாக எழுதும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

#### நிலப்பிரிவுகளும், குடியேற்றங்களும்

கிழக்கு மாகாணத்தின் புவியியல் பிரிவுகள், வளங்கள் இங்கு நடைமுறையில் உள்ள தொழில்கள் என்பன ஆராயப்பட வேண்டும். இதனைப் புவியியல், விவசாய விஞ்ஞானம், விஞ்ஞானத்துறைகளின் உதவியுடன் செய்யலாம். மட்டக்களப்பில் காலத்திற்குக் காலம் குடியேறிய மக்கள். குடிப்பரம்பல் என்பன பற்றிய தகவல்களை இவை தரும். விவசாயப் பிரதேசமாகவும், தனி ஒரு கலாசார வலயமாகவும் படுவான் கரைப்பிரதேசம் அமைந்தமைக்கும், மீன்பிடி வணிகப் பிரதேசமாக, ஐரோப்பிய நாகரிகத்திற்குட்பட்ட பிரதேசமாக இன்னொருவித கலாசாரம் கொண்ட வலயமாக எழுவான்கரைப் பிரதேசம் அமைந்தமைக்குமான பின்னணிகளை இதன் மூலம் புரிந்து கொள்ள முடியும்.

#### சமூக அமைப்பு

மட்டக்களப்புச் சமூக அமைப்பு சில தனித்துவங்களைக் கொண்டுள்ளது. காலத்திற்குக் காலம் இங்கு குடியேறிய மக்கள் மட்டக்களப்புச் சமூகமாக மாற ஆரம்பித்த போது அதற்கென்ற ஒரு சமூக அமைப்பும் உருவானதும், சாதி அமைப்பு, குடிமுறைகள் என்பன குறிப்பிட்ட சாதியினரிடம் உருவானது. இவை மானிடவியல், சமூகவியல் பின்னணியில் ஆராயப்படவேண்டும். முஸ்லீம் மக்கள், அவர்களிடையே காணப்படும் குடிமுறைகள், இங்கு வாழும் பறங்கியினரின் சமூக அமைப்பு என்பன ஆராய்விற்குரியவை. சமூகப் பிரிவுகள், சமூகப் பிரிவுகளின்

அதிகார அடைவு. அது சமூகத்தில் இயங்கும் முறை என்பன தெளிவாகையில் மட்டக்களப்பின் இயல்பும் புரியத்தொடங்கும்.

### சட்டமுறைகள், சம்பிரதாயங்கள்:

ஒரு சமூகம் கட்டுக்கோப்புடன் வாழச்சட்டமும் சம்பிரதாயங்களும் உதவும் சட்டத்தின் தன்மையும், சம்பிரதாயங்களின் பண்பும் அச்சமூகத்தின் இயல்பை விளக்கும். மட்டக்களப்பில் ஒரு காலத்தில் முற்குகச் சட்டம் முக்கிய மாயிருந்தது. இலங்கையின் சட்டக் கோவையைத் திருத்திய டச்சுக்காரர் மட்டக்களப்புக்கு முக்குவச் சட்டத்தையும், யாழ்ப்பாணத்திற்குத் தேசவழமைச் சட்டத்தையும் கொணர்ந்தனர். சொத்து, சொத்துரிமை, சொத்து மக்களுக்கு அல்லது ஏனையோருக்குப் பகிரப்படும் விடயம் என்பனவற்றைச் சட்டம் வரையறுக்கும். மட்டக்களப்பில் இன்று முக்குவச் சட்டத்துடன், தேசவழமை, றோமன் டச்சுச்சட்டம் என்பனவும் வழக்கிலுள்ளன. இவை சரியாக சமூகப் பின்னணியுடன் ஆராயப்படுகையில் மட்டக்களப்பின் சமூகமும் விளக்கப்படும்.

### பண்பாடு, பழக்கவழக்கங்கள்

மட்டக்களப்புக்கென்று சில தனிப்பட்ட பண்பாடுகள் பழக்கவழக்கங்கள் உள்ளன என்பர். உடை, உணவு, செய்து கொள்ளும் ஒப்பனை, கிராமப் புறங்களில் வீடு கட்டும் முறை இவைபற்றிய ஆய்வுகள் நடைபெறவேண்டும். இவை சில இடங்களில் குழுமத்திற்குக் குழுமம் மாறுபட்டுள்ளது. முஸ்லீம் மக்களின் உடை, உணவு, பழக்க வழக்கங்கள் வித்தியாசமானவை. பறங்கியரிடையேயும் வேறுபட்ட பண்பாடுகள் உள்ளன. எனவே மட்டக்களப்புக்குரிய பண்பாடு ஒன்றா, பலவா அல்லது இணைப்பா என்பது கண்டறியப்படுமிடத்து மட்டக்களப்பின் சமூகத்தின் இயல்பும் புரியப்படும்.

### வாழ்க்கை முறை

ஒரு சமூகம் வரலாற்றுப் போக்கில் தன்வாழ் முறையை அமைத்துக் கொள்கிறது. பொதுவான ஒரு வாழ் முறை இருப்பினும் கிராமத்திற்குக் கிராமம் அவ்வக் கிராமத்தின் இயற்கைச் சூழல், வரலாறு, சமூக அமைப்பு என்பனவற்றிற்குத்தக்க அச்சமூகத்தின் வாழ்க்கைமுறைகளும் வேறுபடும். இவை கிராம ரீதியாகக் கணக்கெடுக்கப்பட்டு தொகுத்து வகுத்து ஆராயப்பட வேண்டும்.

### வாழ்க்கை முறையில் இடம்பெறும் சடங்குகள்

மட்டக்களப்பு மக்கள் வாழ்க்கையில் இடம்பெறும் பிள்ளைப்பேற்றுச் சடங்கு, பூப்பு நீராட்டுச் சடங்கு, திருமணச் சடங்கு, மரண வீட்டுச் சடங்கு, கடலையிற் செய்யும் சடங்கு, வயல், கடல், காடு, ஆறு, வீடு, கடை ஆகிய் தொழில் செய்யும் இடங்களில் நடத்தும் தொழில்சார் சடங்குகள், இவை தவிர்ந்த ஏனைய சடங்குகள் யாவும் தொகுக்கப்படுவதுடன் மானிடவியல் ரீதியான ஆய்வும் நடத்தப்படவேண்டும். முஸ்லீம் மக்கள் மத்தியிலும், பறங்கியர் மத்தியிலும் சில சடங்கு முறைகள் உள்ளன. இவையும் இதனுடன் இணைக்கப்பட வேண்டும்.

### கோயில்கள், வழிபாடுகள்

மட்டக்களப்பு மக்களின் வாழ்வுடன் கோயில் வழிபாடு பின்னிப் பிணைந்துள்ளது. இந்துக் கோயில்களும், இஸ்லாமியப் பள்ளிவாசல்களும், கிறிஸ்தவத் தேவாலயங்களும் இங்கு அதிகம். இந்துக்களிடமுள்ள கோயில்களை சமூகத்திற்குரிய கோயில்கள் (சாதி), தேசத்துக்குரிய கோயில்கள், பொதுக்கோயில்கள் என மூன்றாகப் பிரிக்கலாம். கிறிஸ்தவக் கோயில்களை கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்தம், ஏனைய கிறிஸ்தவ பிரிவுக் கோயில்கள் என வகுத்து ஆராயலாம். இஸ்லாமியப் பள்ளிவாசல்களை பெரிய பள்ளி வாசல்கள், பெரியவர்களின் சமாதிகள் எனப் பிரித்து ஆராயலாம். பௌத்த விகாரைகளும் இங்குள்ளன, அவையும் ஆராயப்பட வேண்டும்.

இந்துக் கோயில்களின் வழிபாட்டு முறைமைகள் முக்கியமானவை. இந்துக் கோயில்களின் வழிபாட்டு முறைகள் ஆகமமுறையில் அமைந்துள்ளன. இது தவிர ஆகம முறையில் அமையாத பத்ததி முறையில் அமைந்த வருடா வருடம் நடைபெறும் வழிபாட்டு முறைகளும் உள்ளன. மன்றாட்டு முறையில் அமைந்த வழிபாடுகளுமுள்ளன. இவற்றுள் முதலிரண்டும் கலந்ததும் அல்லது மூன்றும் கலந்ததுமான வழிபாட்டு முறைகளும் உள்ளன. சில குழுமங்களிடம் ஏனைய வழிபாடுகளுமுள்ளன. உதாரணமாக வதனமார் வழிபாடு, மாடு பிடித்தலை அபிநயிக்கும் வழிபாடாக உள்ளது. குமர வழிபாடு தேன் எடுத்தல், யானை பிடித்தலை அபிநயிக்கும் வழிபாடாயுள்ளது.

இதேபோல் கிறிஸ்தவக் கோயில்கள், பள்ளிவாசல்கள், விகாரைகளில் நடைபெறும் வழிபாட்டு முறைகள் அவ்வவற்றின் சமூகப் பின்னணியில் ஆராயப்பட வேண்டும். கிழக்கு மாகாணத்திற்கென ஏதாவது தனியான விசேட அம்சங்கள் வழிபாட்டு முறையிலுண்டா என இனம் காணப்படல் வேண்டும்.

### கோயில் திருவிழாக்கள்

கோயில் திருவிழாக்களுக்கும், சமூக அமைப்பிற்கு மிடையே நிறையத் தொடர்புகள் உள்ளன. ஒவ்வொரு சமூகமும் விழாவிற் பங்கு கொள்ளும் முறைமை கொண்டு சமூக அமைப்பின் அதிகார அடைவைக் கண்டு கொள்ள முடியும்.

இந்துக் கோயில்களின் திருவிழா, தீர்த்தம், தேர், கும்பம் சொரிவு, தீப்பாய்தல், பலிகொடுத்தல், பள்ளயம் ஏனைய வழிபாடுகள் என்பனவும் கிறிஸ்தவக் கோயில்களில், பள்ளிவாசல்களில், விகாரைகளில் நடைபெறும் விழாக்கள் என்பனவும் அதன் விசேட அம்சங்களும் தொகுக்கப்பட்டு ஆராயப்பட வேண்டும்.

### குடியேற்றங்கள்

மட்டக்களப்புச் சமூகம் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட குடியேற்றங்களினால் உருவான சமூகமாகும். இலங்கையில் ஏனைய பகுதிகளில் இருந்து மாத்திரமல்ல – இந்தியாவில் – குறிப்பாகத் தென்னிந்தியாவின் பல பாகங்களிலுமிருந்தும் இங்கு குடியேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. வந்த குடிகளை இருந்த குடிகளுடன் இணைக்கின்ற செயல்கள் நடந்துள்ளன. குடிமுறைகளுக்குள் காணப்படும் வேட வெள்ளாளர், சிங்களக்குடி, வீரமாணிக்கத் தேவன்குடி என்பன இதற்கு உதாரணங்களாகும். இஸ்லாமிய மக்களிடம் மட்டக்களப்புப் பகுதியில் மாத்திரமே குடிமுறைகளுள்ளன, இவை தனித்து ஆராயப்பட வேண்டும். குடிமுறைகளின் ஆய்வும், குடியேற்றங்களை விளக்க உதவும். குடியேற்றங்களின் ஆய்வு மட்டக்களப்புச் சமூகத்தின் பண்பாட்டு உருவாக்கத்தைப் புரிந்து கொள்ள உதவும்.

### கல்வி முறைமைகள்

மட்டக்களப்பில் வழக்கில் உள்ள கல்வி முறைமையை பண்டையகல்வி, இடைக்காலக் கல்வி, இன்றைய கல்வி எனப்பிரித்து ஆராயலாம். கிராமங்களில் தொழில் முறைக்கல்வி பாரம்பரியமாகக் கையளிக்கப்படுகிறது. சாதிக்குரிய தொழில்கள் நிர்ணயிக்கப்பட்டு, பெற்றோரால் பிள்ளைகட்கு கையளிக்கப்படுகின்றன. முன்னாளில் திண்ணைப் பள்ளிக்கூட மரபு இருந்துள்ளது. ஐரோப்பிய வருகையின் பின் பாடசாலைக் கல்வி மரபு ஏற்பட்டது. சுதேச அரசாங்கத்தின் பின்வந்த இலவசக்கல்வி, சுதேசிய பாஷைக் கல்வி மரபுகள் என்பன மட்டக்களப்புச் சமூக அமைப்பின் சிந்தனைகளை மாற்றிய கல்வி அமைப்புகளாகும். இவையாவும் வரலாற்று ரீதியாக ஆராயப்பட வேண்டும்.

### கிழக்கின் பண்டைய விஞ்ஞானம்

கிழக்கிலங்கையின் பண்டைய விஞ்ஞானங்களான சோதிடம், வைத்தியம், மந்திரம் (கழிப்பு, சூனியம், பில்லி, வசியம்) முக்கியமாக விஷவைத்தியம் என்பன பற்றிய ஆய்வுகள் இச்சமூகத்தின் சிந்தனைகளைப் புரிந்து கொள்ள உதவும்.

### தொழில் முறைகள்

மட்டக்களப்பின் பிரதான தொழில்களாயுள்ளவை விவசாயம், மீன்பிடி, மந்தைமேய்ப்பு என்பனவாம். இவை தவிர தனித்தனி சாதிக்குரிய தொழில்களும் உள்ளன. இவை அனைத்தும் சமூக இயக்கத்திற்கு அத்தியாவசியமானவை.

விவசாயம் சம்பந்தமாக நிலத்தெரிவு, நிலத்தைப் பண்படுத்தும் முறை, நீர்ப்பாசனம், விதைப்பு, அறுப்பு, சூடடிப்பு முதலியனவும்.

மீன்பிடி சம்பந்தமாக இடத்தெரிவு, ஆற்றுத்தொழில், கடற்தொழில், கரவலை இழுத்தல், தோணி அமைத்தல், வலை பின்னுதல், கரப்புக்குத்துதல் போன்றனவும்.

மந்தைமேய்ப்பு சம்பந்தமாக இடத்தெரிவு, குறிசுடல், என்பனவும், ஆய்வு செய்யப்படல் வேண்டும்.

இவற்றைவிட பாயிழைப்பு, களகு, கடகம் செய்தல், மண்பாத்திரம், வெங்கல, இரும்புப் பாத்திரங்கள் செய்தல், நகை வேலை, சீலைவெளுப்பு, கள்ளிறக்கும் முறைமை என்பனவெல்லாம் தொகுக்கப்பட்டு ஆய்வு செய்யப்படவேண்டும்.

### இலக்கியங்கள், இலக்கணங்கள்

மட்டக்களப்பின் பண்டைய இலக்கியங்கள், புலவர்கள், இன்றைய இலக்கியங்கள், எழுத்தாளர்கள் அதேபோல் பண்டைய இலக்கணங்கள் என்பன தொகுக்கப்பட்டு ஆராயப்பட வேண்டும்.

### அவைக் காற்றுக் கலைகள்
### நடனம்

மட்டக்களப்பில் வழக்கிலுள்ள கலைகளைப் பின்வருமாறு பிரித்து நோக்கித் தொகுக்கலாம், ஆராயலாம்.

I. நடனம் II. இசை III. நாடகம் IV. கட்புலக் கலைகள் V. கைவினைகள்

நடனத்தின்கீழ் தெய்வமாடல், வசந்தனாட்டம், பறைமேள ஆட்டம், வடமோடி ஆட்டம், தென்மோடி ஆட்டம், காவடி ஆட்டம், மகிடி ஆட்டம், கரக ஆட்டம், கழிக்கம்பு, பரத நாட்டியம், பைலா ஏனைய நடனங்கள் எனத்தொகுக்கலாம்.

### இசை

இசையின் கீழ் கர்னாடக இசை, பண்ணிசை, நாட்டாரிசை, எனத் தொகுக்கலாம். நாட்டாரிசை தனிக்கவனிப்பிற்குரியது. மட்டக்களப்பின் தனித்துவத்தைக் கூறுவது, எனவே நாட்டாரிசை

மேலும் தாலாட்டுப் பாடல்கள், வேடிக்கைப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், திருமணப் பாடல்கள், பூப்பு நீராட்டுப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், அம்மானைப் பாடல்கள், கவி, சிறுதெய்வப் பாடல்கள் (தாலாட்டு, காவியம், ஊஞ்சல், காவடி, வழிநடைச் சிந்து) எனப்பிரிக்கப்படலாம்.

இவை தவிர கிறிஸ்தவ கீதங்களும், இஸ்லாமியர் மத்தியில் உள்ள பக்கீர் பாவா பாடல்களும் தொகுக்கப்பட வேண்டும்.

இவற்றோடு மத்தளம், உடுக்கு, பறை, சவணிக்கை, சங்கு, சேகண்டி போன்ற வாத்தியக் கருவிகளின் ஆய்வும் அவசியம். இதன்மூலம் கிழக்கு மாகாணத்தின்இசை வெளிவரும்.

நாடகம்

மட்டக்களப்பு மரபு வழி நாடகத்துறைக்குப் பிரசித்தமான இடமாகும். மரபு வழி நாடகங்களான மகிடிக்கூத்து, வசந்தன் கூத்து, தென்மோடிக் கூத்து, வடமோடிக் கூத்து, விலாசம், கோடுகச்சேரி, பாசுக்க நாடகம் என்பனவும், நவீன நாடகங்களும் தொகுக்கப்பட்டு ஆராயப்பட வேண்டும். கிராமத்து மக்களுக்கும் சமூக அமைப்புக்கும் இந்நாடகங்களுக்கும் இடையேயுள்ள ஈடாட்டம் ஆராயப்பட வேண்டும்.

கட்புலக்கலைகள்
சிற்பம், ஓவியம், கட்டிடம்

மட்டக்களப்பில் கோயில்களை ஒட்டியே இவை பெரும்பாலும் எழுந்துள்ளன. கோயில் சாரா சிற்ப ஓவியக் கட்டிடங்களுமுள்ளன.

இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ, சிங்கள மரபு என இவற்றைப் பிரித்துத் தொகுக்கலாம்.

மட்டக்களப்பின் பண்டைய இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ, பௌத்த சமய வழிபாட்டுத் தலங்களில் இவற்றைக்காண முடியும். இவை தேடி இனம் காணப்பட்டுத் தொகுக்கப்பட வேண்டும். அவற்றின் மரபுகள், தனித்துவங்கள் ஆராயப்பட வேண்டும்.

அத்தோடு முன்னர் வாழ்ந்த, இன்று வாழும் சிற்பாசிரியர்கள், ஓவியர்கள், கட்டிடக் கலைஞர்கள் அவர்களின் வாழ்வு, அவர்கள் இவற்றை உருவாக்கும் முறை என்பன ஆராயப்பட வேண்டும்.

கைவினைகள்

மட்டக்களப்பின் கைவினைகள் தனித்துவமானவை. தமிழ், முஸ்லீம், பறங்கிய மக்களிடையே தனித்துவமான கைவினைகள் உள்ளன. பாயிழைப்பு, ஆபரணம் செய்தல், குருத்தோலைச் சோடனை, பிரம்பு வேலை, உலோகத்திலான பொருட்கள், ஓலையிலான பொருட்கள் (பெரிய பெட்டி, சிறியபெட்டி, கட்டுப் பெட்டி, ஆடுக்குப் பெட்டி) வலை, பறி, ஓராக்கூடு, அத்தாங்கு, நண்டுக் கூடு, றேந்தை பின்னுதல், மரவேலையிலான அலங்காரமான கதவுகள், யன்னல்கள், கைப்பிடிகள் என்பனயாவும் தொகுக்கப்பட்டு ஆராயப்படவேண்டும்.

நாட்டாரியல்

மட்டக்களப்பு நாட்டாரியல் சம்பந்தமாக இன்னும் விஞ்ஞான பூர்வமான முழுமையான ஆய்வுகள் வெளிவரவில்லை. நாட்டாரியல் ஆய்வாளருக்குரிய தங்கச்சுரங்கம் மட்டக்களப்பு, இங்கு வழக்கிலுள்ள பழமொழிகள், பட்டப் பெயர்கள், விடுகதைகள், இடப்பெயர்கள், நாட்டார்கதைகள், நாட்டார் பாடல்கள், நாட்டார் சிற்பம், சித்திரம், நாட்டுப்புற விளையாட்டுக்கள், நாட்டுப்புற உணவு, உடை, ஒப்பனை அனைத்தும் தொகுக்கப்பட்டு ஆராயப்பட வேண்டும். இன்று நாட்டாரியலின் அர்த்தம் மிகமிக அகன்று விட்டது. நாட்டார் பாடல்களை நாட்டாரியலாகப் பார்த்த நிலையிலிருந்து இன்று நாட்டுப் புற மக்களின் முழு வாழ்க்கையையுமே நாட்டாரியலாகப் பார்க்கும் நிலைக்கு நாட்டாரியல் வளர்ந்துள்ளது. எனவே நாட்டாரியல் சம்பந்தமான முழுமையானதோர் ஆய்வு மட்டக்களப்பைப் புரிந்து கொள்ள மிகுந்த உதவி புரியும்.

பேச்சுத் தமிழ்

மட்டக்களப்பின் பேச்சுத் தமிழில் சில தனித்துவமான அம்சங்கள் உண்டு என்பர். மொழியின் அடிப்படையில் இப்பேச்சுத் தமிழின் இயல்பு இனம் காணப்படவேண்டும். மட்டக்களப்பிற்குள்ளேயே சில கிராமத்திற்குக் கிராமம் பேச்சோசை முறையில் வேறுபாடுகளுண்டு. இஸ்லாமியர் பேசும் முறைமைக்கும் தமிழ் மக்கள் பேசும் முறைமைக்கும் பாவிக்கும் சிலசில சொற்களுக்குமிடையே சிற்சில வேறுபாடுகளுண்டு. இவையாவும் தொகுக்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் நடத்தப்படும் சேகரிப்புகள், தொகுப்புகள், ஆய்வுகள் என்பன மட்டக்களப்பைப் புரிந்துகொள்ள உதவும். ஆனால் இவை தனி ஒருவரின் முயற்சியினால் ஆகக்கூடிய ஒன்றன்று. பல்வேறு துறை சார்ந்த அறிஞர்களின் கூட்டுமுயற்சியினால் ஆகக்கூடியது. இத்துறைகளில் சிற்சில ஆய்வுகள் ஆங்காங்கே நடந்திருப்பினும் மட்டக்களப்பை முழுமையாகத் தரிசிக்காமல் அவை அமையவில்லை.

துறை நிபுணத்துவமிக்க அறிஞர்களை இனம்கண்டு அவர்களின் உதவியுடன் ஒரு பெரிய ஸ்தாபனம் இம்முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பல்கலைக் கழகங்களின் பங்கு இதில் மிக முக்கியமானது. கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு இப்பணியைச் செய்ய வேண்டிய பாரிய வரலாற்றுக் கடமையுமுண்டு.

*நன்றி:* கலைச்செல்வி 1996.

# அரும் கலைகளின் சிறப்பும் பண்பாட்டுப் பாரம்பரியமும்

எஸ். எதிர் மன்னசிங்கம் B.A. (Cey)
பண்பாட்டு அலுவல்கள் உதவிப்பணிப்பாளர் வடக்குகிழக்கு மாகாணம்

ஈழவள நாட்டின் கிழக்குக் கரையிலே உள்ள காரைதீவில் பிறந்தவரான தவத்திரு விபுலானந்தர் இயல், இசை, நாடகத்துறைகள் மறுமலர்ச்சி அடைவதற்கு அரும்பணி புரிவதற்கு அவரின் ஆர்வத்தை வளர்த்த கலைகள் அவர் வாழ்ந்த சூழலில் பாடப்பட்ட நாட்டுக்கூத்துப் பாடல்கள், கொம்பு விளையாட்டுப் பாடல்கள், வசந்தன் பாடல்கள், கண்ணகி வழக்குரைப்பாடல்கள் ஆகியவையேயாகும். இதனை அவரால் இயற்றப்பட்ட மதங்க சூளாமணியுள்ளே எடுத்துக் காட்டியுள்ளார். இவற்றுள் நாட்டுக்கூத்து, வசந்தன் கூத்து, கொம்பு விளையாட்டு குரவை ஆகிய கலையம்சங்களின் சிறப்பியல்புகளையும் நம் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் ஆய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முதற்கண் இக்கலைகள் பற்றி எமது ஈழத்தறிஞர் பெருமக்கள் கூறிய கூற்றுக்களை நோக்கலாம். கிராமியக் கலைகள் மூலம் மக்களது உண்மையான உளப்பாங்கினையும், நடைமுறைப்பண்புகளையும் அறியக் கூடியதாகவுள்ளது. இக்கிராமியக் கலைகள் எவ்வாறு அப்பகுதி மக்களின் வாழ்க்கையுடன் பிணைக்கப்படுகின்றன என்பதனை இக்கலையம்சங்களை எடுத்து நோக்குதல் மூலம் கண்டு கொள்ள முடிகின்றது. இயற்கையோடு ஒட்டி வாழும் உள்ளத்தினையும், பண்பினையும் உடைய நாட்டு மக்களின் உணர்ச்சியை இவை பிரதிபலிக்கின்றன. பழந் தமிழ் இலக்கியங்களில் கூத்துப்பற்றிக் கூறியவற்றைச் சற்று நோக்குதல் பொருத்தமுடையதாகும்.

## நாட்டுக்கூத்து

நம்நாட்டுப் பாரம்பரியக் கலைகளில் சிறப்பிடம் பெறுவது நாட்டுக்கூத்து ஆகும். "இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து" என்ற அடிக்கு உரையாசிரியரும், அடியார்க்கு நல்லாரும் இருவகைப்பட்ட அகக்கூத்தென்று உரையெழுதினர். உரை ஆசிரியர் மேலும் 'தேசி,' 'மார்க்கம்' என்றனர். அடியார்க்கு நல்லாரோ பல மாதிரியான இருவகைக் கூத்துக்களையும் கூறியுள்ளார்.

வசைக்கூத்து – புகழ்கூத்து
வேத்தியல் – பொதுவியல்
வரிக்கூத்து – வரிசாந்திக்கூத்து
சாந்திக்கூத்து – விநோதக்கூத்து
ஆரியம் – தமிழ்
இயல்புக்கூத்து– தேசியக்கூத்து
அகக்கூத்து – புறக்கூத்து

இவற்றுள் ஆரியம், தமிழ் என்ற இருவகைக் கூத்துக்கள் தான் தற்காலத்து வடமோடி, தென்மோடி என அழைக்கப்படலாயின, வடமோடி, தென்மோடி என்னும் கூத்து வகைகளில் வரும் 'மோடி' என்னும் சொல் பகுப்பு, வகை, விதம் என்ற கருத்தில் மட்டக்களப்பு தமிழ் மக்களது பேச்சு வழக்கில் வழங்குகிறது. மோடி என்பதற்குப் பாணி (Style) என்றும் பொருள் கொள்ளவாம். யாழ்ப்பாணத்தில் இவை கருநாடகம், நாடகம் எனவும், மன்னாரில் வடபாங்கு, தென்பாங்கு எனவும் கூறப்படுகிறது. நாகரிக வளர்ச்சியால் அதிகம் பாதிக்கப்படாத மட்டக்களப்பு மாநில கிராமப்புற பொதுமக்கள் கலையாகி இக்கூத்து மரபு இங்கு நிலைத்து விட்டதில் ஒரு வியப்பும் இல்லை. ஆடலும் பாடலும் சேர்ந்து பார்ப்போருக்கும் கேட்போருக்கும் இன்பமூட்டவல்லதான இக்கூத்துக்கள் கிராமங்கள் தோறும் ஆடப்பட்டு வருபவையாகும். இக்கூத்தானது புத்தகம் படிக்க நேரமில்லாத வேளாண்மை செய்யும் மக்களுக்கும் ஏனைய தொழிலாளர்களுக்கும், படிப்பு வாசனையற்ற பாமர மக்களுக்கும் நல்லறிவு புகட்டுகின்றது. "நாட்டுக்கூத்துக்கள் நாட்டு வளத்தின் சின்னங்களாகும். ஒய்வு நேரங்களில் மக்கள் பாட்டிலும் கூத்திலும் பொழுதுபோக்கி இன்பம் காண்கின்றனர். இதனோடு கலையும் உடன் வாழ்கிறது. கலைஞர்களும் தோன்றுகின்றார்கள். நாடகங்களும் பல தோன்றுகின்றன. 'விலாசம்' என்னும் ஒரு வடிவக் கூத்தும் சிறு வழக்காகக் காணப்பட்டது. வடமோடியும் தென்மோடியும் கலந்த கூத்தும் அல்லாது டிறாமாவும் அல்லாது இரண்டிற்கும் இடைப்பட்டதாக ஆடப்படுவதே விலாசமாகும். எடுத்துக்காட்டாக பூதத்தம்பி விலாசம், அரிச்சந்திர விலாசம், சஷ்டிராசன் விலாசம் என்பன குறிப்பிடத்தக்கன. "கூத்து" என்பது ஆடலும் இசையும் சேர்ந்தது. இது மக்கள் நிலையில் வைத்துப் பயிலப்படும் ஒரு கலை. சமயச் சடங்குகளினடியாகத் தோன்றிய இக்கூத்து பூர்வீக சமூக அமைப்பு மாறுங்காலத்து பொழுதுபோக்குதற்குரிய ஒரு சாதனமாக மாறியது. துணங்கைக் கூத்து குரவைக் கூத்து முதலியவற்றின் வளர்ச்சியை அறிந்தோர். இவ்வுண்மையை அறிவர். "நாட்டுக்கூத்து மக்கள் கலையாகும் இயற்கையோடு ஒட்டிவாழும் உள்ளத்தினையும் பண்பினையும் உடைய நாட்டு மக்களின் உணர்ச்சியை இவை பிரதிபலிக்கின்றன.

மட்டக்களப்பு மாநில கிராமங்கள் தோறும் பழகி ஆடப்பட்டு வரும் வடமோடி, தென்மோடி நாட்டுக்கூத்துக்கள் விவசாயிகளினதும், தொழிலாளிகளினதும் ஓய்வு நேரங்களில் பழக்கப்பட்டு அரங்கேற்றம் செய்யப்படுபவை. "இக்கூத்துக்கள் அரங்கேறும் சந்தர்ப்பங்களில் பல திருமணச் சடங்குகளும் நடைபெறும். திறமையாகக் கூத்தாடிப் புகழைப்பெறும் காளையரைக் கண்டு கன்னியர் காதல்கொண்டு பின்னர் அது திருமணத்தில் போய்முடிவுறும்". அத்தோடு தமக்குக் கொடுக்கப்பட்ட பாத்திரத்திற்கேற்றவாறு ஆடல், பாடல், நடிப்பு ஆகிய முக்கிய அம்சங்களில் திறமை முழுவதையும் வெளிப்படுத்தி புகழைப்பெறுபவர்கள் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பாத்திரத்தின் பெயராலே பின்னர் அழைக்கப்படுவதும் உண்டு. எடுத்துக்காட்டாக, தருமர் வையாபுரி, அருச்சுனன் சீனி, வால்மீகன் போன்ற பெயர்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

### அண்ணாவியார்

இவரே ஒரு நாட்டுக் கூத்தின் முக்கிய இயக்குனர். சல்லரி என்னும் இசைக் கருவியின் துணையுடன் கூத்தைப் பழக்குவார். வடமோடிக் கூத்தோ, தென்மோடிக் கூத்தோ எதுவாகினும் சிறப்பாக அரங்கேற்றம் பெறுவதற்கு முக்கிய காரணகர்த்தா அண்ணாவியாரே. இவர் பல கூத்துக்கள் ஆடி அனுபவமுள்ளவராகவும், அல்லது பல கூத்துக்களைப் பழக்கிய அனுபவசாலியாகவும், நன்கு பாடக்கூடியவராகவும், கூத்துக்களை இயற்றுபவராகவும் விளங்குவார். முதலில் ஒரு கூத்தினைத் தெரிவு செய்து கிராமத்திலுள்ள கூத்தாட விருப்பமுள்ளவர்களைக் கொண்டு பாத்திரப் பொருத்தத்திற்கமைய முதல் நிகழ்ச்சியாக 'சட்டம்' கொடுக்கும் நிகழ்ச்சி இடம்பெறும். சட்டம் என்பது ஓலைச்சட்டம். ஓலைகளில் உள்ள பாடல்களை பாத்திரங்களுக்கு எழுதிக் கொடுத்தல். பெண் வேடங்களுக்கும் ஆண்களையே தெரிவு செய்வர். இங்கு குரல் வளம் கருத்திற் கொள்ளப்படும்.

கூத்துப் பழக்கத் தொடங்குதல் ஒரு சமய நிகழ்ச்சிபோல் ஆரம்பமாகும். கூத்தாடுவதற்கு அமைக்கப்பட்ட களரியில் (அரங்கு) வெற்றிலை, பாக்கு, பழம், மலர், குடம், சூடம், தேங்காய் முதலியவற்றைக் கொண்டு மடைவைத்து, நிறைகுடத்தோடு, கற்பூரம் கொழுத்தி தேவாரம் பாடிய பின்னரே சட்டம் கொடுக்கும் நிகழ்ச்சி இடம்பெறும். அண்ணாவியாரைக் கூத்து நடிகர்கள் தம்குருவாக மதித்து அவர் சொற்படி கேட்டு நடப்பர். அண்ணாவியார் கூத்தைப் பழக்கி அரங்கேற்றம் செய்யும்வரை அவருக்குரிய வேதனம் எவ்வளவெனப் பொருந்தித் தவணை முறையில் அதனைக் கொடுப்பர். அத்தோடு ஒவ்வொரு களரி பழகும் போதும் குடிப்பதற்கு கள்ளுமுதலானவையும் நடிகர்களது செலவில் வாங்கிக் கொடுக்கப்படும். அத்துடன் அண்ணாவியாரைச் சந்தோஷப்படுத்துவதற்காக வேட்டி, சால்வை என்பன வெகுமதியாகக் கொடுப்பர்.

### மத்தள அடிகாரர் (மத்தள அண்ணாவி)

அடுத்து மத்தள அடிகாரர் முக்கியமாகக் கருதப்படுவார். கூத்து தாளக்கட்டு வரிசைகள் மத்தளத்தில் நன்றாக ஒலிக்கும். மத்தளத்தினின்றும் எழும் ஓசை பார்ப்போருக்கும், கேட்போருக்கும் இனியவிருந்தாக அமையும். போர் முதலான காட்சிகளின் போது மத்தளத்தின் ஒலி வேகமும், தாளம் பிறளாமையும் மத்தளம் அடிப்பவரின் திறமையைப் பொறுத்தே அமையும். அப்போது பார்த்து ரசித்துக் கொண்டிருப்பவர்கள், அனுபவசாலிகள் மத்தளம் நன்றாகப் பேசுகின்றது என்று தமக்குள் கூறிக்கொள்வதை அவதானிக்கலாம். மாலை தொடக்கம் விடியும்வரை நடைபெறும் கூத்து நிகழ்ச்சியில் இரண்டு மூன்று பேர் மாறி மாறி மத்தளம் அடிப்பதைக் காணக்கூடியதாகவிருக்கும்.

அடுத்தபடியாக ஏடு படிப்பவர் குறிப்பிடத்தக்கவர். நடைபெறும் கூத்தின் பிரதி ஓலைச்சுவடியில் (பனையோலையால் ஆனது) அமைந்திருக்கும். தற்போது அதனைக் கொப்பிகளில் பிரதிபண்ணிக் கூத்துக் கொப்பி என்றழைப்பர். கூத்துக் கொப்பியினை வைத்திருப்பவருக்கு அனேகமாக எல்லா விருத்தங்கள், பாடல்கள் யாவும் மனப்பாடமாகவிருக்கும். ஒரு கூத்து நடிகர் ஒரு பாடலைத் தவறுதலாகக் கூறும் பொழுது உடனே ஏடு படிப்பவர் அந்த அடியினை எடுத்துக் கொடுத்து நிலைமையைச் சமாளித்து விடுவார். அடுத்துப் பக்கப் பாட்டுப் பாடுவோரைக் குறிப்பிடலாம். நன்றாகப் பாடக்கூடிய இருவர் அல்லது மூவர் களரியில் இடம் பெறுவர். இவர்கள் பாட்டை இரட்டித்துத் தாளத்தை முடித்து வைப்பதற்கு அண்ணாவியாருக்கு உதவியாகச் செயற்படுவர். எல்லோரையும் சேர்த்து 'சபையோர்' என்று அழைப்பது கூத்து மரபாகும்.

இனி நடைமுறை அமைப்பு களரி முதலானவற்றின் சிறப்பு என்பவற்றைப் பார்க்கலாம்; ஒரு கூத்து, நடிகர்களைக் கொண்டு நான்கு, ஐந்து, களரி பழக்கிய பின்னர் சதங்கை அணியும் விழா இடம்பெறும் (சலங்கை கட்டு) இதில் நடிகர்கள் ஒவ்வொருவருக்கும் காலில் சதங்கை கட்டப்படும். இதனை ஒரு விழாவாகக் கொண்டாடுவர். உறவினர்கள், நண்பர்கள் என்று எல்லோருக்கும் அழைப்புவிடுத்து சலங்கை அணிவிழா நடைபெறும். உறவினரும், நண்பர்களும் சென்று நடிகர்களை உற்சாகப்படுத்தி, வெடி கொழுத்தி, மாலை போட்டு, சால்வைகட்டி, சன்மானம் வழங்கிக் கௌரவிப்பர். இதனைத் தொடர்ந்து இரண்டு மூன்று களரி பழகிய பின்னர் அடுக்குப்பார்த்தல் (ஒத்திகை) நிகழ்ச்சி நடைபெறும். அரங்கேற்றத்திற்கு முன்னோடியான நிகழ்ச்சியே அடுக்குப்பார்த்தல். பின்னர், நல்லதொரு நாளில் ஊர்க்கோயில் முன்றலில் அல்லது பொதுவானதொரு இடத்தில் அரங்கேற்று விழாவினைச் செய்வர். கூத்தாடும் களரியை வட்டவடிவமாக அமைத்து கட்டாடியைக் கொண்டு (டோபி) வர்ணச் சேலைகளைக்கட்டி, சருகைக்

கடதாசிகளைக் கொண்டு, கலரியை அலங்கரித்துத் தூண்கள் தோறும் எண்ணெய் விளக்குகளை ஏற்றி, கூத்துக் கலரியின் ஆடும்பகுதியினை புற்கற்றைகளைக் கொண்டு நன்றாக அமைத்து பெருவிழாவாகக் கொண்டாடுவர். அரங்கேற்றம் முடிந்த அடுத்த நாள் ஊருக்குள் வீடுவீடாகச் சென்று ஆடுவர். அத்தருணத்தில் சேகரிக்கப்படும் (அன்பளிப்பு) பணத்தை அண்ணாவியாருக்கு வழங்குவர்.

இனி வடமோடி, தென்மோடி ஆகிய இருவகைக் கூத்துக்களினதும் முக்கிய வேறுபாடுகளை ஆராயலாம். ஆடல், பாடல், தாளம், ஒப்பனை (உடையணியும் முறை) ஆகியவற்றிலேயே முக்கிய வேறுபாடுகளைக் காணலாம்.

## ஆட்டம் :-

வடமோடிக் கூத்தர்களுக்குரியது இலகுவானதாகவிருக்கும். ஆனால் தென்மோடி கூத்து ஆடுபவர்களுக்கு மிகவும் கடினமான ஆட்டம் உண்டு. வடமோடியில் வரவுப்பாடலை நடிகர்கள் தாமே பாடிக் களரியில் வருவார். தென்மோடியில் சபையோர் அதனைக் படிப்பர். இதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. தென்மோடி ஆட்டம் மிகவும் கஷ்டமானதால் வரவுத் தாளம் இடம்பெறும்போது தென்மோடி நடிகர்கள் நன்றாகக் களைத்து விடுவர் அதன் காரணமாக சபையோர் வரவுப் பாடலைப் பாடுவர். வடமோடி ஆட்டம் இலகுவானதாகவிருக்கும். நடிகர்களே பாடலையும் பாடுவர். அத்தோடு தென்மோடி தமிழ் நாட்டிற்குரிய கூத்துவகை என்றும், வடிமோடி வடநாட்டாருக்குரியதென்றும் கருதப்படுவதோடு, தமிழர் தங்களைத் தாங்களே புகழ்வதை விரும்பமாட்டார்கள். ஆகவே தான் சபையோர் அதனைப் பாடுகின்றனர், என்றும் கூறுவர். வடமோடியில் தருப்பாடுதல் இல்லை. தாளமும் தென்மோடியில் இருந்து அதிகம் வேறுபாடு கொண்டது. ஒவ்வொரு பாத்திரத்திற்கேற்றவாறு மாறுபாட்டையும் எடுத்துக் காட்டாக எட்டடி, நாலடி, வீசாணம் போன்றவற்றைக் கூறலாம். எட்டடித் தாளம் என்பது எட்டு என்னும் இலக்கத்தைப் போல் வளைந்தாடுதல் நாலடித்தாளம் வீர ஆட்டமாகும். வீரம்தொனிக்கும் குதிநடை கொண்டு கால்களைத் தனித்தனி முன்னும் பின்னும் நீட்டித் துரிதமாய் நான்கு விதமாக மிதித்துத்துள்ளி ஆடுதலே நாலடித்தாளமாகும். வீசாணம் போடுதல், ஒருவர் பின் ஒருவராகப் பாம்புபோல் வளைந்தாடும் ஆட்டமாகும். பாத்திரங்களுக்கேற்ற வகையில் தாளங்களும் மாறும். பெண் பாத்திரங்களுக்கு மென்மையான ஆட்டம் அமையும். வடிமோடிக் கூத்தில் அரசர் கொலுவரும் போது,

*"தக திகதா தெய்யாத் தெய் தெய்ய*
தாத்தெய்யத் தோம் – தகதிகதா " என்று தொடங்கித் தகததிங்கணதோம் எனக் கடைசித்தாளம் இரண்டு அல்லது மூன்று தரம் இறக்கி அடிக்கப்பட்டவுடன் முடிவடையும். பெண்களுக்குரிய தாளம்;

*"தத்தமித் திமி தெய்ய திமித் திமி*
தாகிட சுந்தரி தோம் ததிங்கின" என்று ஆரம்பித்து பின்னர் "திந்தாரத் தில்லாணா என்பது வரைக்கும் அதிக மாற்றமில்லை. நாலடி போடு தலுக்குப் பதிலாகப் பெண்களுக்குக் குந்துதல் என்ற நடனநிலை சேர்க்கப்படுகின்றது. பின்னர்;

*"தாதிந்தத்தோ தீந்தத்தோ தீந்தோம்*
தந்தகதா திந்தகதெய் தந்தகதா திந்தகதெய்" என்று தாளந் தீர்ந்து முடிக்கப்படும். இதேபோன்று ஒவ்வொரு பாத்திரத்திற்கும் ஏற்ற வகையில் தாளங்கள் நுணுக்கமாகவும், கடினமாகவும் இடம்பெறும்.

*தென்மோடிக் கூத்து வரவுத் தாளம்;*
"ததித்தளாதக ததெய்ய திமிதக தாதித்திக் – தெய்யெ
ததித்தளதக ததெய்ய திமிதக தாதிமிதத் திதெய்யே.

எனத் தொடங்கிய இம்முதற் பகுதி சுமார் 8 –12 முறை திரும்பத் திரும்பப் படிக்கப்படும்போது வரவுக் கூத்தர் களரி முகப்பில் நின்றவாறே ஏற்றபடி ஆடுதல் நியதி. அப்பால் அரங்கினுள் இறங்கி ஆடும்போது;

*"தச்சோந்திமி தந்தரிகிட திமிதக*
தாதெய்யதா தளங்கு ததிங்கின" எனத் தொடர்ந்து சென்று. "தகதக, தகதக தகதக, தகதக (முன்னடை) தாதெய்யதா தளங்கு ததிங்கின என்பதுடன் முடிவடையும். கட்டியகாரன், தலையாரி, சேவகன், தோழி, குமாரத்தி, முனிவர் ஆகியோருக்கு வேறுபட்ட தாளங்களையும் ஆட்டங்களையும் கொண்டு அமையும், அரச கன்னியர் முதலான பெண்களுடைய வரவின்போது 'ததித்தளாதக' என்ற பொதுத் தாளக்கட்டு பெரும்பாலும் அப்படியே இடம்பெறுமாயின் அவற்றோடு அவர்கள் ஆடவேண்டிய நுணுக்கமான ஆடல்களுக்குரிய தாளக்கட்டுகளும், சில மேலதிகமாகச் சேர்க்கப்படுகின்றன. வீரர்களுக்குரிய துரிதமான ஆட்டங்கள் பிரட்டிமிதித்தல், துள்ளிமிதித்தல், குத்திமிதித்தல், முதலானவை பொதுத் தாளக்கட்டுக்குரிய ஆட்டங்களின் போதும் கொச்சக முடிவிலும், தருக்கள் (பாட்டு) படிக்கும்போது பொருத்தம் நோக்கி இடம்பெறும். இவ்வாறான தென்மோடிக்குரிய பலவகை நுணுக்கம் வாய்ந்த தாளக் கட்டுக்களும் ஆட்டங்களும் ஆட்டக்காரர்களைக் களைப்படையச் செய்கின்றன. தென் மோடி வடிமோடி இருவகைக் கூத்துக்களிலும் படிக்கப்படும் பாடல்களின் மெட்டு (ராகம்) வேறுபாடு கொண்டவையாகக் காணப்படுகின்றன. வடமோடியில் விருத்தங்களை அதிகம் நீட்டி இசைக்காது படிப்பதும்; தென்மோடியில் அவற்றை நீண்ட ஓசை புறப்பட இழுத்துப் பாடுவதும் வழக்கம். வசனங்களும் அவ்வாறே. முத்திரைப் பல்லவம் வடமோடியில் சிலருக்குண்டு. இது வரவுப்பாட்டின் பல்லவியை இரட்டித்துப் படிக்கும் பொழுது முத்திரை பிடித்து ஆடும் துரித ஆட்டமாகும்.

ஒப்பனையை பார்க்கும்போது தென்மோடிக்கூத்து ஆடும் நடிகர்கள் அணியும் உடையினைக் 'கரப்பு' உடுப்பு என்று வழங்குவர். இது மிகவும் பாரமானது. கண்ணாடி (கணோதா), சருகை, மணிகள் முதலியன பதிக்கப்பட்டுப் பார்ப்பதற்கு மிக அழகாகவிருக்கும். தலையில் ஆடும் முடியைக் 'கெருடம்' என்பர். கிரீடம் என்பது கெருடமாயிற்று. முடி மரத்தில் செதுக்கப்பட்டுக் கண்ணாடிகள் பதிக்கப்பட்டிருக்கும். வெகு அகலமும் பாரமும் கொண்டது. பாத்திரங்களின் இருகையிலும் ஆயுதம் இருக்கும். ஒரு கையில் கட்டாரி அல்லது அம்பு, மறுகையில் வாள் அல்லது வில் கொண்டு ஆடுவர். கட்டாரியில் கிளி அல்லது சிங்கத்தின் தலை பொறிக்கப்பட்டிருக்கும். வில்லின் இருபக்கமும் சிங்கத்தலை அல்லது பாம்புத்தலை அமைந்திருக்கும். கதாயுதமும் (கெதை) சில நடிகர்கள் கையில் இடம்பெறும் (பீமன், துச்சாதனன்) போர் நிகழ்வின்போது தேர், குதிரை ஆகியவற்றில் நடிகர்கள் வந்து ஆடுவர்.

வடமோடிக் கூத்தரின் உடை மிக இலோசான தாகவிருக்கும், மணிகள், மாலைகள், பூக்கள் பொருந்தியவை. முடி பூமுடியாகும். பாரமற்றது. இவ்வித ஒப்பனைகளை சோடனை என்பர். வரவுப் பாடல் சபையோரால் படிக்கப்படும். பாடலுக்குமுன் 'தருப்பாடப்படும் சந்தத்துக்கிசையப் பாடப்படும் இசைவரியே 'தரு' எனப்படும். எடுத்துக்காட்டாக அனுவுருத்திரன் வரவுத்தருவினை நோக்கலாம்.

*"தந்தன்ன தந்தன்னத் தானா – தன*
*தந்தன்ன தந்தன்னத் தானா*
*தந்தன்ன தந்தன்னத் தானா – தன*
*தந்தன்ன தந்தன்னத் தன்னா" எனவாகும்.*

தென்மோடியில் கூத்தர்கள் இடம்புறமாகச் சுற்றி ஆடுவர். வடமோடியில் வலப்புறமாக ஆடுவர். 'காலமேற்றுதல் தென்மோடிக்கூத்தில் இல்லை. களரியை விட்டுப் போகும்போது ஆடப்படும் துரித ஆட்டத்திற்கே காலமேற்றுதல் எனப்படும். வடமோடி தென்மோடி நாட்டுக்கூத்துக்களில் இழையோடி நிற்கும் திம்தக திமிதக என்ற தாளக்கட்டுக்கள் தாம் இன்றைய புகழ்வாய்ந்த பரத நாட்டியக் கலைக்கான உரம்மிக்க பண்டைய அடிப்படைத் தாளங்களாய் அமைந்து மட்டக்களப்புக்கலை கலாச்சாரத்தின் ஆணிவேராகத் திகழ்கின்றன. மட்டக்களப்பு மாநிலமெங்கணும் ஆடப்பட்டுவரும் வடமோடி, தென்மோடி நாட்டுக்கூத்துக்களுக்கும், மன்னார், சிலாபம், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் ஆடப்படும் நாட்டுக்கூத்துக்களுக்கும் இடையே சில வேறுபாடுகள் தாளம், இராகம், பாட்டு, ஆட்டம் என்பவற்றிடையே காணப்படுகின்றன.

எமக்குக் கிடைத்துள்ள நாட்டுக்கூத்துக்களுள் அநுருத்திர நாடகம், இணுவிற் சின்னத்தம்பிப் புலவராலும், இராமநாடகம், தருமபுத்திர நாடகம் என்பன மானிப்பாய் நாடக சுவாமிநாதன் என்பவராலும், வாளபிமன் நாடகம், அலங்கார ரூபன் நாடகம் என்பன கணபதி ஐயர் என்பவராலும் எழுதப்பெற்றன. ஏனையவை பலவும் நாட்டின் வேறுவேறு கிராமங்களைச் சேர்ந்த அண்ணாவிமாரால் பாடப்பட்டவையாகும். இவ்வகைத்தான அரும்பெரும் மக்கள் கலையான நாட்டுக்கூத்துக்களைக் கட்டிக் காத்து வளர்த்துப் பெருக்குவதோடு, பிறநாட்டினரும் அவற்றின் அருமை பெருமைகளை உணரச் செய்வதற்கான வழிவகைளை மேற்கொள்ள வேண்டும். இந்த வகையில் 1962, 63, 64 களில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராகவிருந்தவரும், பின்னர் யாழ் – பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகக் கடமையாற்றிச் சிவபதமடைந்த சு. வித்தியானந்தன் அவர்கள் கூத்திற்குப் புத்துயிர் அளித்தார் என்றே கூற வேண்டும். பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு மரபு வழுவாது புதிய உத்திகளைக் கையாண்டு 'கர்ணன் போர்' (வடமோடி) நொண்டி நாடகம் (தென்மோடி) 'இராவணேசன்' (வடமோடி) வாலி வதை (வடமோடி) ஆகிய கூத்துக்களைப் பழக்கி நாட்டின் பல பகுதிகளிலும் மேடையேற்றுதற்கு அரும் முயற்சிகள் மேற்கொண்டார். வடமோடி கூத்துப் பாடல் ஒன்று

*"ராஜ ராஜ மகன் ராஜன் சல்லிய மகாராஜன்*
*கொலுவில் வந்தான் இதோ",*

## கொம்புமுறி விளையாட்டு

கண்ணகி வழிபாடு மட்டக்களப்பு மாநிலமெங்கணும் மிகவும் பிரபல்யம் வாய்ந்து காணப்படுகின்றது. கண்ணகி அம்மன் கோயில்கள் இல்லாத கிராமங்களே இல்லை என்று சொல்லுமளவிற்குக் கோயில்கள் காணப்படுகின்றன. கண்ணகி அம்மன் சடங்குகள் நடைபெறும் காலப்பகுதியில் இவ்விளையாட்டு (கலையாடல்) இடம் பெறும். இக்கொம்பு விளையாட்டு ஏன் எழுந்தது என்பதற்கு நீதி தவறி கோவலனைக் கொலை செய்வித்த பாண்டிய மன்னனைப் பழிவாங்கியும், மதுரை மாநகரினை எரியூட்டியும் கோபம் தணியாத கற்புக்கரசி கண்ணகியின் சினத்தைத் தணிவித்து அவளைக் குளிர்விப்பதற்கு (சாந்தப்படுத்த) மாக இடையர் குல இளைஞர் ஒரு காதல் கலந்த விளையாட்டாக இக்கொம்பு விளையாட்டினைச் செய்தனர் எனக் கூறப்படுகின்றது. மட்டக்களப்பு மாநிலத்தில் தேத்தாத்தீவு, மண்டூர், களுதாவளை, தம்பிலுவில், காரைதீவு, வந்தாறுமூலை போன்ற கிராமங்களில் இக்கலையாடல் பெரிதும் காணப்பட்டது.

கொம்பு விளையாட்டு ஒரு கிராமத்தில் தொடங்குவதற்கு முன்னர் அக்கிராம மக்கள் இரு பிரிவுகளாகப் பிரிவர். இதனை வடசேரி, தென்சேரி என அழைப்பர். வடசேரியைக் கோவலனுடைய கட்சி (சுவாமி கட்சி) என்றும், தென்சேரியைக் கண்ணகியுடைய கட்சி (அம்மன் கட்சி) என்றும் கூறுவர். கிராமத்தில் உள்ள மக்களுக்கு அம்மை, சின்னமுத்து, வைசூரி, கண்நோய் முதலான கொடிய நோய் நொடியிலிருந்து

சகவாழ்க்கை ஏற்பட்டு மழைவளமும், செல்வமும் ஏற்பட வேண்டுமென்பதற்காகவே இக்கலையாடலை மக்கள் கண்ணகி வழிபாட்டுடன் சேர்த்துச் செய்கின்றனர். கொம்பு விளையாட்டின் சிறப்பம்சங்களாகப் போர்த் தேங்காய் உடைத்தல், கொம்பு முறித்தல், கொம்புக் கட்டு எடுத்தல், தேர்க் கல்யாணம், குளித்திபாடுதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

கொம்பு விளையாட்டில் முதலில் முறிக்கப்படும் கொம்பு கொழுகொம்பு அல்லது விளையாட்டுக் கொம்பு என்று கூறப்படும். இதனைத் தொடர்ந்து கூடாராக் கொம்பு என்ற நால்வகை நிகழ்ச்சிகள் நடைபெறும். இக்கொம்புகள் நன்கு உறுதியான கரையாக்கு மரத்தினால் ஆனவையாக இருக்கும். 'கருவீரம்' என்றும்: வெட்சி என்றும் இம்மரம் இலக்கியப் பெயர் பெறும். வடசேரிக் கொம்பு 90' பாகை வளைவுடையதாகவும், தென்சேரி அதிலும் சற்று ஒடுங்கியதாகவும் இருக்க வேண்டியது பொது விதியாகும். இரு சேரிக் கொம்புகளையும் அணைத்துக்கட்டும் இரு கம்புகளும் 'பில்லி' எனப்படும். பில்லி கட்டப்பட்ட கொம்பே விளையாட்டுக்குத் தகுதியான கொம்பாகக் கணிக்கப்படும். ஒரு மரத்திற் பூட்டிய அரிப்பு (சிறு வட்டம்) எனப்படுவதான கயிற்றில் தென்சேரியான் கொம்பு கொடுக்கப்படும். அக்கொம்பிற்கொழுவிய வடசேரிக் கொம்பிலே இன்னுமோர் அரிப்பினைப் பிணைத்து அதிலே பெரிய வடமொன்றை மாட்டுவர். அவ்விடத்தைப் பிடித்துப் பலர் இழுக்கும்போது இருசேரியையும் சேர்ந்த திறமையாளர் சிலர் தத்தம் கொம்புகளிற் பல்வாய் (கொம்பின் தலைப்பகுதி) குச்சி (கொம்பின் வளைந்த இடத்து நடு ஆணி) முதுகுமரம் (கொம்பின் தலைப்பகுதி) பில்லி (கொம்பின் இருபுறமும் அணையக் கட்டிய தடிகள்) என்னும் உறுப்புக்களையெல்லாம் முறைப்படி பிடித்துக் கொள்வர். அரிப்பிற் பிணைந்த பெருவடத்தினை இருசேரிப் பொது மக்களும் இழுப்பர். அப்பலருடைய இழுவைப் பொறுப்பினால் இரண்டிலொரு கொம்பு முறியும், உடனே வெற்றியீட்டிய பிரிவினர் தமது வாரத்தின் பெயரைச் சொல்லி அதற்கு வெற்றி என்று கூவி ஆடிப்பாடி மகிழ்வர்.

கொம்பு முறிக்கப்பட்ட பின்னரே மிகவும் சிறப்பான முறையில் பல நிகழ்ச்சிகள் நடைபெறும். வடசேரி, தென்சேரி ஆகிய இரு கட்சியாரும் அலங்கரிக்கப்பட்ட பூப்பந்தர்களில் தத்தம் கொம்புகளை வைத்து ஊர்வலமாக எடுத்துச் செல்வர். இதனோடு நன்கு அலங்கரிக்கப்பட்ட 'கண்ணகி அம்மன்' சிலையையும் (விக்கிரகம்) எடுத்துச் செல்வர். அவ்வேளையில் வெற்றியடைந்த கட்சியினரின் மகிழ்ச்சிப் பாடல்கள், உடுகுச்சிந்து, ஊர்சுற்றுக் காவியம் என்பன படிக்கப்படும். சந்திகள் தோறும் கொம்பைத் தாங்கிச் செல்லும் பூப்பந்தரை நிறுத்தி வசந்தன் கூத்து, கும்மி முதலான ஆடல்களைச் செய்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்வர். இதிற் கோலம் புனைவோர் வேடன், குறவர், போர்வீரர், முடிமன்னர், முனிவர், ஆண்டி, விகடன் ஆகிய தோற்றங்களில் நடிகர்கள் வந்து மக்களைப் பெரு மகிழ்ச்சிக் கடலிலாழ்த்துவர். இளைஞர்கள் வசந்தன் ஆட்டத்திலும், நாட்டுக்கூத்திலும் ஈடுபட இள மங்கையர் குரவை அயர்தலிலும், கும்மி அடித்தலிலும் தத்தம் திறமையினைக் காட்டுவர். கொம்புகள் ஊர்வலம் கொண்டு செல்லும் போது நிறுத்தி வைக்கப்படும் சந்திகள் இன்றும் மட்டக்களப்பின் சில கிராமங்களில் அப்பெயரால் வழங்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாகக் களுதாவளைக் கொம்புச் சந்தி, காரைதீவு கொம்புச் சந்தி, மண்டூர் கொம்பு வம்மியடி என்பன குறிப்பிடத்தக்கன. இக்கொம்பு விளையாட்டு போன்ற கலையம்சம் சிங்கள மக்களிடையேயும் உண்டு. போர்த் தேங்காய் அடித்தலை அவர்கள் 'பொல்கெலிய' என்றும் கொம்பு முறித்தலை 'அங்கெலிய' எனவும் வழங்குவர். குருநாகல் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ள ஏட்டுப் பிரதியின் மூலமும், சிங்களத்தில் எழுதப்பட்டுள்ள பத்தினித் தெய்வம் சம்பந்தமான இலக்கியங்களாலும் இதனை நன்கு அறியமுடிகின்றது. கண்ணகி வழிபாடு கடல் சூழ் இலங்கைக் கஜவாகு மன்னன் என்னும் சிங்கள அரசனுடைய காலப்பகுதியிலிருந்து கைக்கொள்ளப்பட்டு வருகின்றது. இத்தொடர்புகளே சிங்கள மக்களுடைய சமய வழிபாட்டுக் கலைகளுடன் கலப்பதற்கு வழிவகுத்திருக்க வேண்டும். கொம்பு விளையாட்டு நடை பெறும் சந்தர்ப்பங்களில் இரு கட்சியினராலும் படிக்கப்படும் பாடல்கள் மிகவும் ஓசை நயமும், பொருட்சுவையும் கொண்டவையாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக இரு பாடல்களைப் பார்க்கலாம்.

*"வடசேரியான் கொம்பு எங்கே யெங்கே*
*மணமுள்ள தாழையின் மேலே மேலே*
*தென்சேரியான் கொம்பு எங்கே யெங்கே*
*செம்பரப் பற்றைக்குக் கீழே கீழே"*
*"வடசேரியான் கொம்பு எங்கே யெங்கே*
*வண்ணாண்ட சாடிக்குள்ளே உள்ளே*
*தென்சேரியான் கொம்பு எங்கே யெங்கே*
*சித்திரத் தேருக்கு மேலே மேலே"*

இப்பாடல்கள் இரவு பகலாகப் பாடப்பெற்று இறுதியாக குளுத்தியும், வாழியும் பாடப்படுவதோடு நிறைவு பெறும்.

## வசந்தன் ஆடல்

'வசந்தன்' அல்லது வசந்தன் கூத்து என்னும் கலையாடல் கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புள்ளவொன்றாகக் காணப்படுகின்றது. 'வசந்தன்' என்ற சொல்லுக்கு நிறைந்த இன்பம் என்னும் கருத்து மட்டக்களப்பின்சில கிராமங்களில் வழங்கிவருகின்றது. வசந்த காலப்பகுதியில் இவ்வாடல் ஆடப்படுவதால் வசந்தன் கூத்து எனப்பட்டது எனவும் கூறுவர். கண்ணகி அம்மன் சடங்குகள் வருடந்தொறும் வைகாசி மாதத்தில் தொடங்கி பௌர்ணமி தினத்தன்று முடிவு பெறும். அம்மன் குளுத்தியுடன் நிறைவு பெறும் அச்சமயம் கோயில் முன்றலில் வசந்தன் கூத்து ஆடப்பட்டு வந்திருக்க வேண்டும்.

வசந்தன் ஆடல் பன்னிருவர் வட்டமாக நின்று கோல் (தடி) கொண்டு தாள அமைதி பிசகாது பாடலுக்கேற்றவாறு ஆடப்படும். மத்தளம், சல்லரி ஆகிய வாத்தியங்கள் இசைக்கேற்றவாறு அடிக்கப்படும். வெவ்வேறான சத்தங்கொண்ட பாடல்கள் வெவ்வேறு பெயருடன் படிக்கப்படுகின்றன. ஆடல்களின் செயலால் அப்பாடல்கள் பெயர் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, பிள்ளையார் வசந்தன், குயில் வசந்தன், அனுமான் வசந்தன், அறுவடை வசந்தன், ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அதிகமான வசந்தன் பாடல்கள் வேளாண்மைச் செய்கையினைச் சித்தரிப்பனவாகவுள்ளன. உதாரணத்திற்கு விதைப்பு வசந்தன், உப்பட்டிகட்டு வசந்தன், வேளாண்மை வெட்டு வசந்தனைக் காட்டலாம். 'வசந்தன் கவிகளைப்பற்றி விபுலானந்த அடிகள் குறிப்பிடும் போது, சங்க காலத்து ஒழுக்கங்களும், ஆடலும், பாடலும் ஈழ நாட்டிலே இன்னும் நிலவுகின்றன என கூறியுள்ளார். இசை, நாடகத் தமிழ் நூல்கள் மறுமலர்ச்சியடைவதற்கு விபுலானந்த அடிகளார் அரும்பணியாற்றுவதற்கு அவருக்கு ஆர்வத்தைத் தூண்டியவை அவர் சூழலில் பாடப்பட்ட வசந்தன் பாடல்களும், கொம்பு முறிப் பாடல்களும், கண்ணகி வழக்குரையும், கூத்துப் பாடல்களுமேயாகும்.

வசந்தன் கூத்துக்களில் இடம்பெறுகின்ற தருக்கள் அல்லது பாட்டுக்கள், உடையணியும் முறை காலில் சதங்கை அணிதல் போன்றவற்றைப் பார்க்குமிடத்து தென்மோடி நாட்டுக்கூத்து வகையினைச் சார்ந்து இருப்பதனைக் கண்டுகொள்ள முடிகின்றது. தற்காலத்தில் அதனை மக்கள் ஒரு கோலாட்டம் போன்று கருதினாலும் பண்டைய வழிப்படி இதனை நாம் ஒரு கூத்து என்றே கொள்ளுதல் வேண்டும். வசந்தன் கவிகள் பாடப்படுமுன் படிக்கப்படும் 'தரு' என்பது பள்ளுப்பாடப்பட வேண்டிய சந்தத்தைத் தந்து நிற்கின்றன. அது அளிக்கின்ற ஓசைப்படியே கவிகள் அமைந்து செல்கின்றன என்று வசந்தன் இலக்கியம் பற்றிய கட்டுரை ஒன்றில் திரு. வ. ஞானமாணிக்கம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். வசந்தன் இலக்கியத்தில் இடம்பெறுகின்ற கவிகள் மிகவும் படித்து இன்ப மடையத்தக்கனவாகவுள்ளன.

பெரும்பாலான வசந்தன் பாடல்களைப் பாடிய புலவர்கள் காரைதீவிலும், தம்பிலுவில் போன்ற கிராமங்களிலும் வாழ்ந்தவர்களேயாகும். உதாரணமாகச் சின்னவப்புலவர், சின்னவி அண்ணாவியார், வசந்தராயப்பிள்ளை என்ற பெயர்கள் இவ்வூர்களில் பரவலாக வழங்குகின்றன. காரைதீவு, தம்பிலுவில், மண்டூர், வந்தாறுமூலை ஆகிய கிராமங்களில் வசந்தன் ஏடுகள் இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. கூவாய் குயில் போன்ற வசந்தன் பாடல்களில் வரலாறு மட்டுமன்றி கண்ணகி வழிபாட்டின் சிறப்பம்சங்களையும் கண்டுகொள்ள முடிகின்றது. வசந்தன் பாடல்களுள் நரேந்திரசிங்கன் பள்ளு இராசசிங்கன் பள்ளு என்ற தலைப்பிலுள்ளவை தாம் எழுந்த காலத்தை ஒருவாறு காட்டுவனவாகவுள்ளன. கி.பி. 1706 முதல் 1739 வரை கண்டியை ஆட்சிசெய்த நரேந்திரசிங்கன் என்னும் அரசன் மீது பாடப்பட்டதே 'கண்டிராசன் பள்ளு' 'இராசசிங்கன் பள்ளு' 1739 ஆம் ஆண்டு தொடக்கம் 1747 வரையான காலப்பகுதியைப் பற்றியதாகவிருக்கின்றது. எமக்கு கிடைக்கின்ற வசந்தன் கவிகள் யாவும் 1940 இல் திரு.தி. சதாசிவம் ஐயர் அவர்களால் தொகுக்கப்பட்டு 'வசந்தன் கவித்திரட்டு' என்னும் நூலாக வெளியிடப்பட்டது. இதில் ஆறுபிரிவுகளாக வசந்தன் கவிகள் பிரிக்கப்பட்டுள்ளன. முதற்பாகம் நூலுக்குத் தோற்றுவாயாகிய கட்டியம் 2ம் பாகம் தோத்திரப் பாடல்கள் 3ம் பாகம் வரலாறு சம்பந்தமானது. 4ம் பாகம் தொழில் பற்றியது. 5ம் பாகம் விநோத சித்திரக் கவிகளும், நகைச்சுவை கவிகளும் அடங்கியதாகவும், 6ம் பாகம் கும்மி, ஊஞ்சல் முதலானவற்றை உள்ளடக்கியதாகவும் தொகுக்கப்பட்டுள்ளது. 1925ம் ஆண்டு இலங்கை வந்திருந்த பிரிட்டிஷ் மகாதேசாதிபதி 'உலில்லியம் மனிங்ஸ்' என்பவர் இந்த வசந்தன் கவிகளின் சிறப்பையும், இனிமையையும் நேரிற்கண்டு ஆங்கில நாட்டிற்குப் பல கட்டுரைகள் மூலம் எடுத்துக் காட்டியுள்ளார். அக்காலத்தில் இவ்வசந்தன் கவிகளைப் பாடுவதில் காரைதீவு கயிலாயப்பிள்ளை அண்ணாவியார் மிகவும் சிறந்து விளங்கினார். மட்டக்களப்பு மாநிலம் தோறும் விதைக்கப்பட்ட நெல்லினங்கள் பற்றிய தகவல்களையும் இவ்வசந்தன் கவிகளைப் படிப்பதன் மூலம் நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. எடுத்துக்காட்டாக;

*'பச்சைப் பெருமாள் கறுப்பன் பாணைமுகன் – செழும்*
*பன்றிக் கூதன், வெள்ளை வாலன், பச்சைச் சம்பா*
*மெச்சியே பலரும் விரும்பும் வெள்ளை வாணன் – இந்த*
*மேதினி எல்லாம் புகழும் முத்துச்சம்பா'*

*'முத்துச்சம்பா நெல்விளைய முன்னே விதைப்போம் – நல்ல*
*முருங்கன் கறுப்பன்களை மேட்டில் விதைப்போம்*
*சித்தியுடன் நெல்வயல் முற்றும் விதைப்போம் – பயிர்*
*செழித்த பின்பு வேலி காவல் செய்பனிடுவோம்'*

போன்ற கவிகள் படித்துச் சுவைக்கக் கூடியனவாகவுள்ளன. மட்டக்களப்பு பிரதேசத்திலுள்ள இவ்வசந்தன் ஆடல் அருகிப் போகா வண்ணம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் பொருத்தமானது. கிராமிய நடனங்கள் என்ற வகையில் இன்றும் முனைக்காடு, மகிழடித்தீவு, கொக்கட்டிச் சோலை, களுதாவளை, தேற்றாத்தீவு போன்ற கிராமங்களில் நிலைத்து நிற்கின்றது. இப்பாடல்களை இனிமையாகப் பாடவல்ல அண்ணாவிமார் இன்று இல்லாது போய்விட்டனர்.

வசந்தன் ஆடல்களைச் செய்து காட்டுகின்றவர்கள் புனைகின்ற ஒப்பனைகள் மிகவும் அழகாகவிருக்கும். முஸ்லிம் மக்களிடையே காணப்படும் 'களிகம்பு' (கோலாட்டம்) ஒருவகை ஆட்டமும் இதனை ஒத்துள்ளது. கோல் கொண்டு தாளத்திற்கும், ஓசைக்கும் ஏற்ப அடிக்கும் முறைகள் இரண்டு கலைகளிலும் ஒத்துக் காணப்படுகின்றன. களிகம்பினைப் பழக்குபவரையும் முஸ்லிம் மக்கள் அண்ணாவியார் என்றே அழைக்கின்றனர். சாய்ந்தமருது, காத்தான்குடி, மாஞ்சோலைக் கிராமம், ஓட்டமாவடி

கிண்ணியா போன்ற பகுதிகளில் களிகம்பு இன்றும் நிலைத்து நிற்கின்றது. வசந்தன் ஆட்டத்திற்கும் தமிழ் மக்களிடையே காணப்படும் இன்னுமொரு வகையான கோலாட்டதிற்கும் இடையே அதிக வித்தியாசங்களை நாம் காணலாம்.

குரவை

மட்டக்களப்பு மாநிலம் தோறும் உள்ள கிராமங்களில் இடம்பெறும் சமய விழாக்கள், கல்யாண வீடுகள், பூப்புநீராட்டு விழா, காதுகுத்துக் கல்யாணம், பல்லுக்கொழுக்கட்டை சொரிதல் போன்ற சம்பவங்களின் போது குரவை ஒலி எழுப்பும் நிகழ்ச்சி இடம்பெறுகின்றது. குரவை, குலவை என மட்டக்களப்புப் பேச்சு மொழியில் காணப்படுகின்றது. சங்க இலக்கியங்களில் குரவை பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. அக்காலத்தில் இதுவொரு கூத்துவகையினைச் சார்ந்ததாக இருந்துள்ளது. துணங்கைக் கூத்து, குரவைக் கூத்து என்பன பழந்தமிழ் மக்களின் சமய வாழ்வில் இடம்பெற்ற கலையம்சங்களாகும். சங்க இலக்கியங்களில் காணப்படும் குரவை வேறுபட்ட தன்மையுடையதாகவுள்ளது.

*'வாங்கமைப் பழுறிய நறவுண்டு*
*வேங்கை முன்றிற் குரவையுங் கண்டே '*

– நற்றிணை – 276.

இது ஒரு கூத்து வகையைச் சார்ந்ததாக அப்போது இருந்ததென்பதை உணர்த்துகின்றது. அதேபோன்றுதான் மலைபடுகடாம், புறநானூறு, திருமுருகாற்றுப்படை, மதுரைக்காஞ்சி போன்ற இலக்கியங்களிலும் குரவை பற்றிய செய்திகள் வந்துள்ளன. தமிழ் அகராதி குரவை பற்றிக் கூறும் போது குரவையானது முல்லை அல்லது குறிஞ்சி நில மகளிர் தம்முட்கை கோத்தாடும் கூத்து வகை என்றும், பெண்டிர் விசேட காலங்களிற் நாவாற் குளறி எழுப்பும் மகிழ்ச்சி ஒலியே குரவையொலியாகும் என்றும் விளக்குகின்றது. ஆனால் இன்று கைகோத்தாடுதல் , பாடுதல் முதலியவை மங்கி மறைந்து இன்னொலி மட்டுமே மட்டக்களப்பு பகுதியில் வழங்கும் குரவையில் இடம்பெறுகின்றது.

சங்க இலக்கியங்களிற் காணப்படுவதையும் விடச் சிலப்பதிகாரத்திலேயே அதிகம் குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

*'குரவையென்ப எழுவர் மங்கையர்*
*செந்நிலை மண்டிலக் கடகக் கைகோத்து*
*அந்நிலக்கொப்ப நின்றாடலாகும்'*

எனவரும் அடிகள் புலப்படுத்துகின்றன. ஆச்சியர் குரவை, குன்றக் குரவை என்னும் பகுதிகளும் சிலம்பில் இடம்பெறுகின்றன. வைகாசி மாதத்தில் கண்ணகி அம்மன் சடங்கும், குளுத்தியும் மட்டக்களப்பின் கிராமங்கள் தோறும் நடைபெறும் போது குரவை போடுதல் முக்கிய இடம்பெறுகின்றது. நோய், துன்பங்களிலிருந்து விடுபடல், நல்ல கருமங்களைச் செய்தல் முதலானவற்றிற்காகத் தம் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும் பொருட்டுப் பெண்கள் கண்ணகியம்மன் சடங்குகள் நடைபெறும் போது குரவைபோடுவார்கள். கண்ணகி வழிபாட்டின் திருக்கல்யாணநிகழ்ச்சியன்று குரவை போடுதல் மிகவும் சிறப்பு நிகழ்ச்சியாக நடைபெறும். மண்டூர் என்னும் கிராமத்தில் எழுந்தருளியுள்ள கந்தசுவாமி கோயிலிற் கந்தசட்டி விரதம் தொடங்கி மூன்று நாளில் வள்ளியம்மை திருமணம் நடத்துகிறார்கள். அச்சமயம் இதனைக் 'கல்யாணப் படிப்பு' என்றும், 'குரவைத் திருநாள்' என்றும் மக்கள் அழைக்கின்றனர். அன்றிரவு முழுவதும் முருகப்பெருமானுக்கும், வள்ளியம்மை யாருக்குமான திருமண நிகழ்ச்சியும் அதற்குரியதெனக் கருதப்படும் குரவையிடும் வழிபாடும் நிகழும்.

குரவையிடும்போது பெண்கள் வலக்கையினை முன் மடித்து, உயர்த்தி, தம்மேல் உதட்டிற்கும், மூக்கிற்கும் இடையில் வலது உள்ளங்கையை வளைத்துப் பிடித்துக்கொள்வர். இடது கையினை மடித்து வயிற்றோடு வைத்துக்கொண்டு மேலே உயர்ந்து இருக்கும் வலக்கையின் முழங்கையினைத் தாங்கிப் பிடிதது்க் கொள்வர். சிலவேளைகளில் இடக்கையால் அருகே நிற்கும் பெண்ணின் தோளைப் பிடித்துக் கொள்வதும் உண்டு. வாயிதழ்கள் இரண்டையும் குவித்து நாவிளிம்புகளை மேல்நோக்கி வளைத்து நாநுனியினால் நுனி அண்ணத்தையும் குவிந்திருக்கும் இதழ்களின் உட்புறத்தையும் வாயின் உள்ளிருந்துவரும் காற்றின் வேகத்தோடு இணைய வருடும்போது ஒருவகையான 'ஒலி' தோன்றுகின்றது. இவ்வோசையே குரவையொலி என்று கூறப்படுகின்றது.

தமிழ் மக்களிடையே காணப்படும் இக்குரவை போடும் கலையானது மட்டக்களப்பின் ஆங்காங்கேயுள்ள முஸ்லிம் கிராமங்களிலும், அம்மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. மட்டக்களப்பு காட்டுப் பிரதேசங்களில் வாழும் குறவர்கள் கள் குடித்து மகிழ்ச்சி கொண்டாடும்போது குரவையிடு தலைக் காணலாம். அவர்கள் தலையில் கலசம், வில், அம்புகள் என்பவற்றை வைத்து ஆடுவர். இச்சமயத்தில் இருபாலரும் சேர்ந்து குரவை ஒலி எழுப்பி ஆடுவர்.

ஈழத்தின் கிழக்கில் நீர்வளமும், நிலவளமும் பெற்றுச் சிறந்த நெற்களஞ்சியமாய் திகழும் சிறப்புடைய பிரதேசத்தின் பண்பாட்டுப் பாரம்பரியத்தை நோக்குவோம். இது அண்மைக்காலம் வரை கிழக்குப் பிராந்தியம் என அழைக்கப்பட்டு திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாய் இருந்து வந்தது. ஆனால் இன்று திருகோணமலைப் பிரதேசம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களே மட்டக்களப்புத் தமிழகம் என அழைக்கப்பட்டு வருகின்றது. இந்நாடு மட்டக்களப்பு மாவட்டம், அம்பாறை மாவட்டம் என்ற இரு மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக இன்று திகழ்கின்றது.

மகாவலிகங்கையின் ஒரு கிளையான வெருகல் கங்கை பேரியாறு தொடக்கம் தெற்கே குமுக்கன் ஆறு வரையும் பரந்து நீண்டு கிடக்கும் இந்நாட்டின் தனிப்பட்ட பண்பாட்டுப் பாரம்பரியம், தனித்துவம் பொருந்தியதாகக் காணப்பட்டபோதும், அவை முறையாகவும், தெளிவாகவும் எழுதிவைக்கப்படவில்லை. சுமார் 130 மைல் நீண்டு கிழக்கு மேற்காய் முறையே நெய்தலும், மருதமும், முல்லையும், குறிஞ்சியும் அணிபெற அமைந்து ஏறக்குறைய 70 மைல் அகன்று கிடக்கும் இந்நாட்டின் பண்பாட்டுப் பாரம்பரியம் தொகுத்து வெளியிடப்பட வேண்டியதன் அவசியம் இன்று நமது நாட்டின் அறிஞர் மத்தியில் சுடர்விடத் தொடங்கியுள்ளது.

மட்டக்களப்பு – சேரநாட்டுப் பண்பாடு, இந்துசமயப் பண்பாடு, சமயசமரசப் பண்பாடு, சாதிப்பண்பாடு, தொழிற் பண்பாடு, ஒழுக்கமுறைப் பண்பாடு, நாட்டுப்பாடல் பண்பாடு, வடசேரிப் பண்பாடு, சமூகப் பொருளாதாரப் பண்பாடு, சட்ட திட்டப் பண்பாடு, கலை கலாசாரப் பண்பாடு, மொழி இலக்கியப் பண்பாடு என்று பல்வேறு கோணங்களில் பல்துறை நிபுணர்களாலும் நமது நாட்டின் பண்பாட்டுப் பாரம்பரியம் ஆராயப்பட்டு நமக்கென்று உள்ள தனிப்பட்ட பண்பாடு தெளிவாக்கப்படல் வேண்டும். பிறநாட்டாரும் அதன் பெருமை சிறப்பு கண்டு போற்றிப் புகழ வேண்டும்.

மட்டக்களப்புத் தமிழரின் வரலாற்றுப் பண்பாட்டுக்குத் தமிழ் நாட்டுத் தமிழர், யாழ்ப்பாணத் தமிழர் தொடர்புகளும், இஸ்லாமியர், சிங்களவர் தொடர்புகளும், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் தொடர்புகளும் முறையாக ஆராயப்படல் வேண்டும். இதன்மூலம் எமது பண்பாட்டுப் பாரம்பரியத்தில் ஏற்பட்ட தாக்கத்தினை கண்டுகொள்ள வேண்டும். இதுவரை காலமும் மட்டக்களப்பு பற்றி ஒருசில நூல்களே வெளிவந்துள்ளன. மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்புத் தமிழகம், மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு, மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள், மட்டக்களப்பு மாநில உபகதைகள், மட்டக்களப்பு மக்கள் வளமும், வாழ்வும், மட்டக்களப்பு மான்மியம் ஓராய்வு முதலிய நூல்களும், நாடுகாட்டுப் பரவணிக் கல்வெட்டு, முக்குவர் ஏற்பாடு முதலியனவுமே வெளிவந்துள்ளன. இதனைத் தொடர்ந்து மாகோன் ஏற்பாடு, கண்டியரசன் ஏற்பாடு என்பனவும் தேசவழமைப் பந்திகளும் வெளிவரவேண்டும். அவ்வாறு வெளிவந்தால்தான் நமது வரலாற்றுப் பண்பாட்டின் பாரம் பரியத்தை தெளிவாக அறிந்துகொள்ள நமக்கு வாய்ப்புண்டாகும்.

சமூகப் பண்பாட்டிலே பிறப்புத் தொடக்கம் மரணம் வரை நாம் பல தனித்துவமான பண்பாட்டினை கொண்டுள்ளோம். இங்கு வருடந்தோறும் படிக்கப்பட்டு வரும் என்னெய்ச்சிந்து, கண்ணகை இலக்கியங்கள் முதலியவற்றில் இதுபற்றிக் குறிப்புக்கள் நிறைய உண்டு. தென்சேரி, வடசேரிப் பண்பாடு கண்ணகை இலக்கியங்களாலும், கொம்பு விளையாட்டு, போர்த்தேங்காய் அடித்தல் முதலான விளையாட்டுக்களாலும் கொள்ளப்பட்டு வந்தாலும், சிங்கள மக்களிடையே உடபில, யடபில என்னும் பத்தினி வழிபாட்டுப் பண்பாட்டுடன் தொடர்புபடுத்தி ஆராயப்படுதல் வேண்டும். வடசேரி, தென்சேரி முறை போன்றே நமது நாட்டுக்கூத்திலும் வடமோடி, தென்மோடி என்ற பிரிவுகளும் உண்டு.

சாதிப் பண்பாட்டுப் பாரம்பரியத்தினைப் பூரணமாக அறிந்து கொள்ள குளிக்கல்வெட்டு, பெரியகல்வெட்டு, பங்குகூறும் கல்வெட்டு, நாதன் கல்வெட்டு, போடிகல்வெட்டு, சீர்பாதகுல வரலாறு, முக்குவர் வன்னிமை, திருப்படைக் களஞ்சியம் முதலானவை எமக்குத்துணையாகுகின்றன. இதனோடு குளக்கோட்டன் கல்வெட்டு, கோணேசர் கல்வெட்டு ஆகியனவும் சேர்த்து ஆராயப்படல் வேண்டும்.

சமயப்பண்பாடு தொடர்பாக சமயாசாரங்களை நாம் அணுகும் போது கண்ணகை வழிபாடு, வதனமார் வழிபாடு, முருக வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு என்பவற்றுடன் நமது சமயச் சடங்குகளான சர்க்கரை அமுது கொடுத்தல், தண்ணீர்ச் சோற்றுப்பள்ளயம், வயிரவர் மடை என்பனவும் விரிவாக ஆராயப்படல் வேண்டும். அத்தோடு இஸ்லாமிய கிறிஸ்தவ பொதுமத வழிபாடுகளிலும் நமது பண்பாட்டுப் பாரம்பரியம் எந்தளவு பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது என்பதையும் அறிந்துகொள்ள வேண்டும். நாம் இந்துக்களாகவும், ஏனையோர் தத்தம் சமயத்தில் நம்பிக்கை உள்ளவர்களாகவும் இருந்தபோதும், பொதுவாக நாமெல்லாம் சமய சமரச மனப்பான்மை மிக்கவர்களாய் இருக்கின்றோம். இதற்கு வேதாந்த வழிமுறைகளைக் கொண்ட ஸ்ரீ இராமகிருஷ்ண போதனை காரணமாய் இருக்குமெனக் கருதலாம்.

ஒழுக்க முறைப்பண்பாட்டிலே நாம் சாதி, சமய ஒழுக்கம், சில தனித்துவ அனுட்டானங்கள், நடையுடைபாவனைகள் என்பவற்றைக் கடைப்பிடிப்பவர்களாய் இருக்கிறோம். சகுனம் பார்த்தல், சாத்திரம் கேட்டல், கண்ணூறு கழித்தல் முதலானவையெல்லாம் எம்மிடம் உண்டு. சட்டதிட்டப் பண்பாடுகளுக்கு முக்குவச்சட்ட வழமைகளும், மருமக்கள் வழி உரிமைகளும், சீதனமுறை வழக்கங்களும் நிறைய எம்மிடமுண்டு. உரோமன் டச்சுச் சட்டமும் எமக்குப் பல வழிகளிலும் உதவுகின்றன. சோதிடம், மாந்திரீகம், வசியம், வைத்தியம், மனையடி சாஸ்திரம் முதலானவை நமது பண்பாட்டுப் பாரம்பரியங்களுக்கென்று சில வரையறைகளைத் தருகின்றன. இவை நமது கலை, கலாசாரப் பண்பாட்டிற்குப் போதுமானது. நாட்டுக்கூத்து வகைகளும், நாட்டுப்பாடல் முறைகளும், குரவை போடுதல், வசந்தன், அம்மன் காவியம், பிள்ளையார் கட்டை, கிட்டிப்புள்ளு விளையாட்டு, மகுடி எடுத்தல் முதலானவையும் நமக்கே சிறந்த கலாசாரப் பண்பாட்டுப் பாரம்பரியங்களாகும்.

வாய்மொழி இலக்கியங்களைத் தாராளமாகக் கொண்ட நாம் மொழி இலக்கியப் பண்பாட்டிலும் தனிச்சிறப்புடையவர்களாய் விளங்குகின்றோம். நமது நாட்டிற்கே உரித்தான கண்ணகை

அம்மன் காவியம், எண்ணெய்ச்சிந்து, குளுத்திப் பாடல்கள், தோத்திரம், பிரார்த்தனை என்பனவெல்லாம் பண்பாட்டுப் பாரம்பரியங்களை நாம் பாதுகாத்துப் பேண வேண்டிய அதிமுக்கியத்துவம் உடைய கருவூலங்களாகும்.

திருமண வீட்டிலே மாப்பிள்ளைக்குக் கொடுக்கும் சீதனமுறைகள் ஏனைய நாட்டுப் பாரம்பரியங்களில் இருந்து முற்றும் வேறானது. பெண்ணுக்குத் தனியாக அன்றி மாப்பிள்ளைக்கும் சேர்த்தே சீதனம் கொடுக்கப்படுகின்றது. பிள்ளைகள் இல்லாமல் மனைவி இறந்தால் சீதனம் முழுவதும் மாப்பிள்ளைக்கும், பிள்ளைகளைப் பெற்று மனைவி இறந்தால் சீதனச் சொத்துப் பிள்ளைகளுக்கும் சேரும். மனைவியும், கணவனும் திருமண முறிவு ஏற்படுத்தும்போது சீதனச் சொத்து இரண்டாகப் பிரிக்கப்படுகின்றது. இது யாழ்ப்பாணச் சீதன முறைகளிலிருந்து முற்றிலும் வேறானது. ஒரு திருமணத்தை நடாத்தி முடித்தால் பெண் வீட்டாரே மகளுக்கு வீடு, வளவு முதலியவற்றைக் கொடுத்து உதவுவதோடு மாப்பிள்ளையைச் சீதன வீட்டிலேயே வைத்துக்கொண்டு ஆறுமாதம் சோறு கொடுக்கும் வழக்கமும், முதற் பிரசவம் (கருமாரி செய்தல்) பார்த்தலும், சீதனக் காணியை முதன் முதல் விதைத்து வெட்டிக் கொடுத்தலும் இங்குள்ள தனிப்பட்ட பண்பாட்டுப் பாரம் பரியமே. இது முக்குவ வழமைகளில் மிகவும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இப்பாரம்பரியம் இங்குள்ள இஸ்லாமிய சகோதரர்களிடமும் பரவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மருமகள் கர்ப்பிணியாக இருக்கும் போது மாமியார் வீட்டார், மச்சாள்மார் கர்ப்பிணிக்கு கொழுக்கட்டை கொண்டுபோகும் மரபு வழிப் பாரம்பரியத்தையும், ஆண்குழந்தை பிறந்தால் வீட்டுக்கு மேலால் உலக்கை எறிதலும், பெண்குழந்தை பிறந்தால் ஈர்க்கு கட்டு எறிதலும் முதலான பாரம்பரியத்தினையும் கொண்டதாகவும் விளங்குகின்றது. மேற்கூறிய சில பாரம்பரியம் இன்றைய நமது சமூக வழக்க மாற்றத்தால் மாறிக்கொண்டு போனாலும், கிராமப்புறங்களில் இன்றும் இதனைக் காணலாம். பல குழந்தைகள் அரசினர் வைத்தியசாலைகளில் பிறப்பதாலும், பல வீடுகள் உயரமாகவும், ஓடு கொண்டு அல்லது அஸ்பெஸ்ரோ சீற் கொண்டு வேயப்பட்டிருப்பதாலும் உலக்கை எறிவதிலும் சில சங்கடங்கள் ஏற்படுவதுண்டு. சிலவேளை அடுத்த வீட்டாரின் வீட்டிலோ, வீட்டாரிலோ விழுந்து விட்டால் என்ன செய்வது இதனால் ஒரு சில நமது பாரம்பரியத்தைக் கைவிட வேண்டியதாய் விட்டது.

கண்ணூறு, நாவூறு, காற்றணவு பார்க்கும் மரபுவழிப் பாரம்பரியம் இன்றும் நமது தாய்மாரிடம் உண்டு. குழந்தைகளை மாலை நேரத்தில் வெளியில் கொண்டு செல்லமாட்டார்கள். பட்சிகள் எச்சம் படலாமென்றும், பேய் பிசாசுகளின் பார்வை ஏற்படலாமென்றும் கூறுவர். குழந்தைகளுக்கு காற்றணவு ஏற்பட்டால் குதிரைலாடம் போன்ற இரும்பை நெருப்பில் காய்ச்சி நீரினில் அதனைத் தோய்க்கும் போது அந்நீர் குழந்தையின் முகத்தில் சீறியடிக்கும் போது ஏற்படும் உணர்வு அல்லது ஒலியினால் அந்த நோய் மாறும் என்று நம்புகின்றார்கள். இதற்காக இரும்பினை அடுப்பிற்குள் போடும் போது அங்கே கண்சிரட்டை, செங்கல் துண்டு, மண், அல்லது முச்சந்தி மண், முக்கூரை வைக்கோல், காய்ந்த மிளகாய், உப்பு என்பனவற்றை அடுப்பிற்குள் போடுகின்றார்கள்.

கண்ணூறு, நாவூறு ஏற்படாமல் இருக்க குழந்தையின் முகத்தில் சிறியதொரு கறுத்தப்பொட்டு இடுவார்கள். அதற்கும் மிஞ்சிக் கண்ணூறு ஏற்பட்டுவிட்டால் திருநீறு (துண்ணூறு) ஓதிக் கொடுப்பார்கள். அல்லது தண்ணீர் ஓதி மந்திரித்துக் கொடுப்பார்கள்.

பெண்குழந்தை (முக்குவ மரபில்) பிறந்ததும் தாய்க்கு ஒத்தாசை புரிய முறை மச்சாளே வருவாள். குழந்தையைக் குளிப்பாட்டி, சாணைச்சீலை (சாணை கூறை) போடும் போது இதுக்கு எனது சின்னமகன்தான் மாப்பிள்ளை எனக்கூறி 'சாணைக்குறி' போடுவாள். பிள்ளை வளர்ந்து பூப்படைந்ததும் முதன் முதல் முறை மச்சாளுக்கே சொல்லி அனுப்பப்படும். அவரும், தாயும் ஆலோசித்து உறவினர்க்குச் சொல்லி அனுப்புவார்கள். தண்ணீர் வார்க்கும்போது முதலாவது குடம் தண்ணீர் ஊற்றும் உரிமை முறைமச்சாளுக்கே உண்டு. பாளை வெட்ட குறிப்பிட்ட மாப்பிள்ளைக்கே உரிமை உண்டு. இதேபோல் மட்டக்களப்புத் தமிழகத்தில் நடக்கும் மரணச் சடங்குகளிலும் முக்குவ மரபு வழமைகள் அதிகமாக கலந்து உள்ளன. மணநாளிலோ அல்லது பெண் பிள்ளையின் பூப்பு நாளிலோ கூரை மூடி கட்டும் முறையும், குரவை போடுதலும் நாட்டுப் புறங்களிலேதான் உண்டு. மாப்பிள்ளையை முழுக வார்க்கும் உரிமையும், கால் கழுவும் உரிமையும் முறை மச்சானுக்கும், மணப்பெண்ணைக் குளிப்பாட்டும் உரிமை முறை மச்சாளுக்குமே உண்டு. திருமணம் முடிந்ததும் மாப்பிள்ளை பெண் வீட்டிலே தங்குதல் எமக்குள்ள சிறப்பான பண்பாட்டுப் பாரம்பரியமே. மரணித்த உடலை எரிக்கும் வழக்கம் அன்றிப் புதைக்கும் வழக்கமே எம்மிடம் அதிகமாக உண்டு. இது எமது நாட்டுச் சூழலுக்கும் வசதிக்குமாக அமைந்திருக்கலாம் போலத் தெரிகின்றது.

இவ்வாறு எமது நாட்டிலே தனிப்பட்ட பண்பாட்டு பாரம் பரியங்கள் நிறைய உண்டு. இவை அனைத்தும் குழந்தை பிறப்பு தொட்டு திருமணம், குடும்ப வாழ்வு, மரணம் வரை ஒவ்வொரு நிகழ்ச்சியாக முறையாக ஆராயப்பட வேண்டியதாகும். குறிப்பாக மருங்கை கொடுத்தல், இரும்புக்காப்பு, அரைஞாண் பூட்டுதல், முறுக்கு நூல் போடுதல், பிட்டுக்கழி கொடுத்தல் என்பன தொடர்பாக எல்லாவற்றையும் இங்கே அமைத்துக்காட்ட முடியாதென்றும் விரிவஞ்சியும் இத்துடன் விடுகின்றோம். காலத்தின் போக்கிற்கேற்ப பாரம்பரிய மரபுமுறைகளில் சில மாற்றங்கள் புகுதல் தவிர்க்க முடியாததாகி விட்டது. இருந்தபோதும் மற்றையவற்றை நாம் இறுக்கமாகப் பேணுவதன்மூலமே பண்பாட்டுப் பாரம்பரியத்தினைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். அத்தோடு மிக முக்கியமானவற்றையும் அற்புதமானவற்றையும் ஆவணப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

# இந்து சமயத்தில் சக்தி வழிபாடு

திருமதி. இ. கருணாநிதி
B.A. Dip. in.Ed

உலகில் நிலவிவரும் பல்வேறு மதங்களில் மிகவும் பழமையும், பெருமையும் வாய்ந்த சனாதன தர்மம் இந்துமதமாகும். சார்வாகம், சமணம், பௌத்தம, சைவம் வைணவம், சாக்தம், சீக்கியம் முதலிய சமயங்களும் கேவலாத்துவிதம் விசிட்டாத்துவிதம், துவிதம் சுத்தாத்துவிதம் முதலிய எத்தனையோ பற்பல தத்துவக் கொள்கைகளையும் தனக்குள் ஏற்றுத் தழுவிக் கொண்டு விழுங்கிவரும் சிறந்த பொதுமைப் பெரு நெறியே இந்துசமயம் ஆகும். "ஓர் உயிர் எந்தக் காரணத்தினாலாவது வருந்துவதாக இருந்தால் அதற்காக மிகவும் துக்கித்து அவ்வுயிர்க்கு நேர்ந்த துன்பத்தைத் தனக்கு வந்ததாகக் கருதி அதனை அகற்றுவதற்கு எவன் ஒருவன் பணிபுரிகின்றானோ அவனே இந்து ஆவன். அவனது சமயமே இந்து சமயம்" (இம் – இம்சையில், து–துக்கின்றவன்) எனக் கூறுவர்

## சாக்தத்தில் சக்தியின் பெருமை:-

இத்தகைய தொன்மை வாய்ந்த இந்துமதம் சைவம், வைஷ்ணவம், சாக்தம் காணபத்தியம், கௌமாரம், சௌரம் என்னும் அறுவகை வழிபாட்டு முறைகளைக் கொண்டது தாய்மைக்கே தனியுரிமை கொடுத்துப் பேணும் சமயம் இந்து சமயம். இதையொட்டியே இந்து சமயத்தில் சாக்தம் என்ற ஒரு பிரிவு ஏற்பட்டது. சைவம் அம்மை அப்பனாகப் பேசிநிற்க, சாக்தம் எல்லாம் அம்மையின் உறவாகவே இணைந்து விடுகின்றது.

உயிர்களைப் பக்குவப்படுத்தி முத்தியை வழங்கும் நிலையில் இறைவன் முதலில் எடுக்கும் வடிவம் தாய் வடிவமாகும். இறைவனின் ஐந்தொழில் இயக்கத்தை ஏற்படுத்துவது திருக்கூத்து. இதனை ஆடுபவன் நடராஜன் தாளம் போடுபவள் பராசக்தி. அம்மையின் தாள லயம் குன்றினால் அப்பனின் தாண்டவம் பிழைத்துவிடும் தாண்டவம் பிழைத்தால் உலக இயக்கமே தாறுமாறாகிவிடும் இதனால் எம் பெருமான் அம்மையின் பக்கம் நோக்கி அமைதியாக ஆடுகிறான். அவனது பிரபஞ்ச இயக்கத்திற்குச் சக்தியின் துணை அவசியமாகும். எனவேதான் சைவ சமயத்திலே "சக்தியின்றிச் சிவமில்லை" என்ற கருத்து வலியுறுத்தப்படும். சங்கராச்சாரியார் சௌந்தர்யலஹரியில் இக் கருத்தினைச் "சக்தியின்றிச் சிவம் அசையவும் முடியாது" என மேலும் வலியுறுத்தியுள்ளார். சுருங்கக் கூறின் இறைவனை ஆணாக உருவகிக்கும் போது சிவனாகவும், பெண்ணாக உருவகிக்கும் போது சக்தியாகவும் ஞானிகள் அழைப்பர்.

## சிந்து வெளி நாகரிக காலத்தில் சக்தி வழிபாடு

வரலாற்று ரீதியாக நோக்கும் போது இந்தியாவிலே சிந்து வெளி நாகரீகத்திற்கு முற்பட்ட கிராமிய நாகரீகங்களிலே தாய்த் தெய்வ வழிபாடு நிலவியதற்குச் சான்றுகள் உண்டு. அக்காலந் தொடக்கம் இன்றுவரை சக்தி வழிபாடு பிரதான வழிபாடாக இந்தியாவில் நிலவி வருதலைக் காணலாம். சிந்து சமவெளி நாகரீகச் சின்னங்களிலே தாய்த் தெய்வ வழிபாட்டினைக் காட்டும் சிலைகள் முத்திரைகள் குறிப்பிடற்பாலன.

## வேதகாலத்தில் சக்தி வழிபாடு

இதனைத் தொடர்ந்து வேதகாலத்திலே பெண் தெய்வ வழிபாடு நிலவியதற்கான சான்றுகள் உள்ளன. இருக்கு வேதத்தில் ஆண் தெய்வ வழிபாடு [illegible]ல்யமாகக் காணப்படினும் உஷா, ராத்திரி, அதிதி, பிருதுவி, முதலிய பெண் தெய்வங்கள் பற்றி சூக்தங்கள் கவனிக்கக் கூடியன. இதில் தேவி சூக்தம், துர்க்கா சூக்தம், ஸ்ரீ சூக்தம் ஆகியன குறிப்பிடக் கூடியன பிந்திய வேதங்கள் பிரமாணங்கள் ஆரண்யங்கள் உபநிடதங்களிலே தாய்த் தெய்வ வழிபாடு நன்கு நிலவிற்று.

## இதிகாச புராணகாலத்தில் சக்தி வழிபாடு:-

வேதகாலத்தினைத் தொடர்ந்து தாய்த் தெய்வ வழிபாட்டில் ஏற்பட்ட வளர்ச்சிகளையும், மாற்றங்களையும் இதிகாசங்கள், புராணங்கள், ஆகமங்கள் குறிப்பாகத் தந்திரங்கள் முதலியவற்றிலும் அறிய முடிகின்றது. இராமாயணத்திலும் மகாபாரதத்திலும் இவ் வழிபாடு பற்றிய சான்றுகள் உள்ளன. புராணங்களிலே குறிப்பாக மார்க்கண்டேய புராணத்திலே வரும் தேவிமகாத்மியம் குறிப்பிடத்தக்கது. தேவியின் வீரதீரச் செயல்களும், பெரும் சிறப்பும் இதிலே நன்கு கூறப்பட்டுள்ளன.

எல்லாத் தெய்வங்களுக்கும் மேலாக சக்தி பராசக்தி எனச் சிறப்பிக்கப்படுகின்றாள், இறைவனின் பல்வேறு அம்சங்களையும் சிறப்புக்களையும் அன்பர்கள் பல திருப்பெயர்கள் மூலம் புலப்படுத்தியுள்ளனர். அதே போன்று இறைவனைப் பெண்ணாக வணங்குவதற்குப் பல பெயர்கள் தோன்றியுள்ளன. இவற்றுள் அம்பாள், அம்மன், அம்மை, அம்பிகை போன்ற பதங்கள் இறைவியின் தாய்த் தன்மையினைக் குறிப்பன. உமா என்ற சொல்லும் அம்மா என்ற சொல்லுடன் நெருங்கிய தொடர்புடையதாகும்.

புராதன காலந்தொட்டு மனிதன் ஒளியுள்ள பொருட்களைக் குறிப்பாக இயற்கை அம்சங்களைத் தெய்வமாகக் கருதி வழிபட்டு வந்துள்ளான். சமயத் தத்துவக் கருத்துக்கள் வளர்ச்சி அடைய இறைவனே பேரொளியாக விளங்குகின்றான் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் தீ, முதலியவற்றாலே புறவிருள் நீங்கி வெளிச்சம் உண்டாகின்றது. கடவுள் எனும் பேரொளியால் அஞ்ஞான இருள் நீங்கி மெய்ஞான வெளிச்சம் உண்டாகின்றது. எனவே இறைவனை ஒளியுள்ளவராகக் கூறும் முறை உலகிலுள்ள சமயங்கள் அனைத்திலும் நிலவுதல் தெளிவு, பராசக்தி பேரொளியாக விளங்குவதாலே தேவி ஆகின்றாள். உலகில் உள்ள பொருட்கள் அனைத்திலும் சிறந்த அழகியாகிய அம்பாள் லலிதா எனவும் மூவுலகிலும் சிறந்த பேரழகியாகிய அம்பாள் லலிதா மகாதிரிபுரசுந்தரி எனவும் அழைக்கப்படுகிறாள் பிரபஞ்சம் அனைத்திற்கும் தலைவியாகத் திகழும் அம்பாள் இந்நிலையில் ஈஸ்வரி என வருணிக்கப்படுகின்றாள்.

இறைவனைப் போலவே இறைவியும் பல்வேறு திருவிளையாடல்களையும் கடமைகளையும் புரியும்போது பலவாறு அழைக்கப்படுகின்றாள் வீரத்திற்குரிய தெய்வமாகத் துர்க்கை எனவும் செல்வத்திற்குத் தலைவியாக லக்ஷ்மி எனவும் கலைகளின் தெய்வமாக சரஸ்வதி எனவும் வணங்கப்படுகின்றாள். நவராத்திரி விழா சிறப்பாக இம்மூவர்க்குமுரியதாகும். மார்கழித் திருவெம்பாவைக் காலத்திலும் மனோன்மணி முதலிய நவசக்திகள் ஒருவரை ஒருவர் துயிலெழுப்புவதாகக் கூறப்படுகின்றது. பலவிதமாக நோய் பிணிகளை நீக்குபவனாகவும், மழையினை வழங்குபவளாகவும் அம்பாள், மாரி, மகமாரி, கருமாரி என அழைக்கப்படுகின்றாள் சக்தி வழிபாட்டு வளர்ச்சிக் கட்டங்களிலே ஒன்றாக பத்தினி அல்லது கண்ணகி வழிபாடும் விளங்குகின்றது.

## சங்ககாலத்தில் சக்திவழிபாடு

தமிழகத்திலே சக்தி வழிபாடு தொன்று தொட்டு நிலவி வருகின்றது. சங்ககாலத்திற்கு மிக முற்பட்ட காலத்தில் இது தோன்றி விட்டது. சங்ககாலத்திலே மிகப்பிரபல்யமான தாய்த் தெய்வமாகக் கொற்றவை விளங்கினாள். காலம் செல்ல மதுரை மீனாஷி காஞ்சி காமாட்ஷி எனத் தலங்களுடன் சிறப்பாகத் தொடர்புபடுத்தி அம்மனை மக்கள் வணங்கி வந்தனர். சைவத் திருமுறைகளிலும் வைஷ்ணவ நாலாயிரத்திவ்விய பிரபந்தத்திலும் அம்மன் வழிபாடு பற்றிய குறிப்புகள் உண்டு பிற்காலத்திலே தான் அம்பாளின் தனிச் சிறப்பினைக் கூறும் சிறப்பான தமிழ்ப பிரபந்தங்கள் தோன்றின.

மேலும் அம்பாள் கவின் கலைகளின் வடிவமாகவும் அவற்றினை நன்கு ரசித்து மகிழ்பவளாகவும் விளங்குகின்றாள். தேவி வழிபாட்டிலே இசை, நடனம் ஆகியனவும் முக்கியமான ஓர் இடம் பெறும் இந்தவகையில் பெருந் தொகையான தேவித் தோத்திரங்கள் இயற்றப்பட்டுள்ளன. அவற்றுள் சங்கரரின் சௌந்தர்ய லஹரி பிரசித்தி பெற்றதாகும்.

## இலங்கையில் சக்தி வழிபாடு

இலங்கையிலே சக்தி வழிபாடு மிகப் பழமை வாய்ந்தது. இங்கு குறிப்பாகத் தென் இந்திய மரபையொட்டிய வழிபாட்டு முறைகளே சிறப்பிடம் பெறுகின்றன. இங்குள்ள பௌத்த மரபிலும் பெண் தெய்வ வழிபாடு நிலவுகின்றது. ஆயினும் புராதன இலங்கையிலே பௌத்தம் பரவுமுன் இந்து சமயமே நிலவிற்று என்பதற்கு அனுராதபுரத்திலே தேவி வழிபாடு நிலவியதற்கான சான்றுகள் உண்டு.

இலங்கையின் புராதன ஐந்து ஈஸ்வரங்களிலே சிவத் தலங்களிலே சிவனுடன் சக்தியும் வெவ்வேறு திருநாமங்களுடன் வணங்கப்பட்டு வருகிறாள். திருகோணமலையிலே கோணைநாதருடன் மாதுமையாகவும், திருக்கேதீஸ்சரத்திலே கேதீசநாதனுடன் கௌரியம்மையாகவும், நகுலேஸ்வரத்திலே நகுலேஸ்வரருடன் நகுலாம்பிகையாகவும் முன்னேஸ்வரத்திலே முன்னை நாதருடன் வடிவாம்பிகையாகவும் அம்பாள் விளங்குகின்றாள். இலங்கையிலே சக்தி வழிபாடு சக்தியின் பல்வேறு வடிவங்களுக்குரிய தனிப்பட்ட கோயில்களிலும், சிவன் கோயில்களிலும், பிள்ளையார், முருகன் விஷ்ணு ஆலயங்களிலும் நடைபெற்று வருகின்றது. இச் சக்தி வழிபாட்டில் கண்ணகி, நாகேஸ்வரி, காளியம்மன், மாரியம்மன், ராஜராஜேஸ்வரி அம்பாள், புவனேஸ்வரி அம்பாள் காமாட்ஷி அம்பாள் மீனாட்ஷி அம்பாள், சிவகாமியம்மை, சிவசக்தியம்மை மனோன்மணி அம்பாள், பராசக்தியம்மை, ஸ்ரீ முதலியம்மை சல்லியம்மை, வராகியம்மை, இலங்கை நாயகியம்மை போன்ற பல்வேறு வடிவங்களுக்கும். இலங்கையின் பல பாகங்களிலும் ஆலயங்கள் அமைக்கப்பட்டு வழிபாடுகள் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில் சக்தி வழிபாடு

இலங்கையிலே சக்தி வழிபாடு தனிவழிபாடாக அன்றிச் சைவத்தில் ஒன்றிணைந்த வழிபாடாகவே நிலவி வருகின்றது. இவ்வகையில் சக்தி வழிபாடானது மட்டக்களப்புப் பிரதேசத்திலும் பிரசித்தி பெற்று விளங்குகின்றது. மட்டக்களப்பு மாநிலம் பண்டைய நாள் முதல் தொடர்ந்து தாய்வழி உரிமையைப் பேணி வருவது யாவரும் அறிந்ததே. இதனாலேயே அன்னை வழிபாடு முக்கிய இடம் பெறுகின்றது. மட்டக்களப்புப் பிரதேசத்தில் அம்மன் கோயில்கள் இல்லாத ஊர்களே இல்லை. அதனை விட மட்டகளப்பு வாழ் மக்கள் வீடுகளிலும் அம்மனுக்கு வழிபாடு செய்கின்றனர்.

கண்ணகியம்மன் வழிபாடு, மாரியம்மன் வழிபாடு, திரௌபதையம்மன் வழிபாடு. பேச்சியம்மன் வழிபாடு, கடல் நாச்சியம்மன் வழிபாடு, காளியம்மன் வழிபாடு என்பன மட்டக்களப்புப் பிரதேசத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன.

## மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் சக்தி வழிபாடு

மட்டக்களப்பு வாவிக்குத் தென்மேற்கே உள்ள கிராமங்கள் அனைத்தும் கொக்கட்டிச் சோலைத் தானதோன்றீச்சரத்துடன் மிக நெருங்கிய தொடர்புடையதாக இருப்பினும் சக்தி வழிபாட்டிலும் மேம்பட்டதாகவே காணப்படுகின்றது. இவ்வகையில் கண்ணகை அம்மன் வழிபாடு, மாரியம்மன் வழிபாடு, காளியம்மன் வழிபாடு என்பன சிறப்புடையதாகக் காணப்படினும் கண்ணகி அம்மன் வழிபாடு மாரியம்மன் வழிபாடும் முக்கியமானதாகக் கூறப்படுகின்றன.

## கண்ணகை அம்மன் வழிபாடு

இந்தியாவிலிருந்து கயபாகு மன்னனால் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட கண்ணகி வழிபாடு முதன் முதலில் யாழ்ப்பாணம் மாதகலுக்கு அண்மையில் உள்ள "அங்கணாமைக் கடவை" என்ற இடத்தில் ஆரம்பமானது என்பது வரலாற்றுரீதியான கருத்தாகும். இதன்பின்னர் யாழ்ப்பாணம் ஒத்துக்குடாவிலிருந்து ஏழு கண்ணகி சிலைகளை நாடாரும் நம்பிகளும் மட்டக்களப்பு பகுதிகளுக்குத் கொண்டு வந்து கண்டி அரசனின் கட்டளைப்படி ஏழு கிராமங்களில் வைக்கப்பட்டதாக "மட்டக்களப்பு மான்மியம்" கூறுகின்றது. இவற்றை விட வெருகலம் பதிக்குக் கிழக்கேயுள்ள இலங்கைத் துறைமுகம் வழியாக ஒரு பெண் செம்பகநாச்சி அம்மன், பத்திரகாளி அம்மன், கண்ணகை அம்மன் ஆகிய தெய்வங்களின் சிலைகளைக் கொண்டு வந்து ஈச்சலம்பத்தையில் செம்பக நாச்சியம்மன் சிலையையும், சம்பூர்க் கடற்கரையில் பத்திரகாளியம்மன் சிலையையும் வைத்துவிட்டு, மட்டக்களப்புக்குத் தெற்கேயுள்ள ஒரு ஊரில் கண்ணகையம்மன் சிலையை வைத்து வழிபட்டதாகவும் செவி வழிச் செய்திகள் கூறுகின்றன.

கி.பி. 1807ம் ஆண்டுக்கு முன் தனது மகளை இடுப்பிலும் தலையில் கடடுப் பெட்டியுடனும் மண்முனை ஆறுகடந்து இக்கரைக்கு ஒரு பெண் தனிமையாக வந்தாள் என்றும் சேவகப்பற்றுப் பகுதியில் ஒரு மடு இருந்ததாகவும் அம்மடுவில் படுத்திருந்த எருமை தன் கன்றுகள் கத்தும் சத்தம் கேட்டு கோபத்துடன் கன்றை நோக்கி ஓடிவரும் போது அப்பெண்ணைக் கண்டு அவளை நெருங்கி முட்டி வீச எத்தனித்த தருணம் பிள்ளையை உடனே இறக்கி தலையிருந்த பெட்டியுடன் எருமையின் இரு கொம்புகளையும் தனது இரு கைகளாலும் இறுகப் பிடித்ததாகவும் அந்த எருமை அசையாது நிற்பதைக் கண்டு இருவர் வந்து அம்மாட்டின் கால்களைக் கட்டி ஆச்சரியமடைந்து "அம்மா பெட்டியில் என்ன இருக்கின்றது எனக் கேட்ட போது அதனுள் கண்ணகை அம்மன் சிலை உள்ள தென்று கூறியதாகவும், அச்சிலையின் சக்தியே எருமையின் கொம்பைப் பிடிக்கத் துணை புரிந்த தெனவும் கருதி அச்சிலையைத் தங்களுக்குத் தரும்படி கேட்டுப் பெற்று தற்போது மகிழடித்தீவு கண்ணகை அம்மன் ஆலயம் இருக்கும் இடத்தில் வைத்து ஓலையால் சிறுகுடில் கட்டி இச்சிலையை வழிபட்டு வந்தார்களென்று அறிய முடிகின்றது.

இவ்வரலாற்றினை நோக்குமிடத்து ம.தெ. மேற்குப் பிரதேசத்தில் மகிழடித்தீவிலேயே சக்தி வழிபாடு தோற்றம் பெற்றுள்ளதை அறிந்து கொள்ளலாம். இப் பகுதியில் மகிழடித்தீவு மக்கள் கண்ணகி வழிபாட்டில் மிகவும் ஈடுபாடும் பக்தியும் நிரம்பியவர்கள் கிடைத்தற்கரிய பாக்கியங்களும் விரும்பிய சொத்துக்கள் சேர்த்தலும், தீராத நோய்கள் தீர்தலும் அம்மன் அருளால் கிடைப்பன என்ற நம்பிக்கை கொண்டவர்கள் நோய்கள் வந்தால் நேர்த்திக் கடன் வைத்துக் கொடுப்பதும் வழக்கமாகும். இவ்வாலயத்தில் பூசைகள் பத்ததி முறைப்படி இடம் பெறும் வண்ணக்க முறைப்படி கோயில் நிர்வாகம் நடைபெறும்.

இவ்வம்மனுக்கான ஆலய வழிபாடு இதனைத் தொடர்ந்து குறிஞ்சாத்தீவு, முதலைக்குடா, முனைக்காடு, கொக்கட்டிச் சோலை ஆகிய கிராமங்களிலும் நடைபெற்று வருவதைக் காணலாம் இவ்வம்மனை வழிபடுவதால் நோய்கள் வருவதிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையும் செல்வச் செழிப்புடன் வாழ முடியும் என்ற நம்பிக்கையும் இக்கிராம மக்களிடையே காணப்பட்டமையால் மகிழடித்தீவை அண்டிய இக்கிராமங்கள் ஆலயம் அமைத்து அம்மனை வழிபாடு செய்யத் தொடங்கினர்.

## இவ்வம்மனுக்கான சடங்கு முறைகள்

இப்பிரதேசத்தில் காணப்படும் கண்ணகை அம்மன் ஆலயம் அனைத்திலும் ஒரேமாதிரியான முறையிலேயே இடம் பெறும். ஆனால் சில கோயில்களில் ஏழு நாட்களும் சில கோயில்களில் ஐந்து நாட்களும் சில கோயில்களில் மூன்று நாட்களும் சடங்கு நடைபெறும்.

சடங்கு தொடங்கும் முதல் நாள் வைபவத்தினை கதவு திறத்தல் என்று கூறப்படும் கதவு திறந்து குளிர்த்தியாடி கதவு அடைக்கும் வரை மச்சம், மாமிசம் புசித்தல் மதுபானம் அருந்துதல் அகத்தமானவர்கள் ஊரினுள் இருத்தல் என்பன தடை செய்யப்பட்டு விடும் ஆலயமும் ஊரும் புனிதமாக இருக்கும்.

"வைகாசித் திங்களில் வருவேன்" என்று கண்ணகி கூறியதாக வரலாறு கூறுகின்றது. ஆதலால் வைகாசிப் பூரணையைத்தான் குளிர்த்தி நாளாக ஏற்றுச் சடங்கு நடைபெறுகின்றது.

முதலைக்குடா, குறிஞ்சாத்தீவு, கொக்கட்டிச் சோலை போன்றன தினப்பூசை இடம் பெறாத கோயில்கள் ஆண்டுக்கொரு முறை உற்சவம் இடம் பெறும். ஏனையவைகளில் தினப்பூசை இடம் பெற்றாலும் இக்காலத்திலே உற்சவம் இடம் பெறும் சடங்குகள் யாவற்றையும் மக்கள் குடிரீதியாகவும் தெருரீதியாகவும் ஒன்றுபட்டுச் செய்வர்.

சடங்குகள் பத்ததி முறைப்படி இடம் பெறும் பழவகைகளே நிவேதனமாகப் படைக்கப்படும் இது மடை எனப்படும். வேப்பிலை கமுகம்பாளை தாமரைப்பூ என்பன கொண்டு மடையை அலங்கரிப்பர். மடை அலங்கரிக்கப்பட்டதும் கர்ப்பூரதீபம் ஏற்றிக் கதவினைத் திறப்பர் பூசகர் உருவேறி ஆடிக் கொண்டே பூசை செய்வார் அரோகராச் சத்தம் உடுக்கு அடித்து உடுக்குச் சிந்து பாடுதல் சிலம்பு அம்மன் காய்கிறுக்குதல். என்பன பேரொலியாக ஒலிக்கப் பூசை நடைபெறும். கதவு திறந்தது முதல் திருக்குளிர்த்தி வரையுள்ள ஏழு நாட்களும் கும்பம் வைத்தல் கலியாணக்கால் வெட்டல், கலியாணப்படிப்பு பச்சை கட்டு, தோரணம் – பூம்பந்தல் எடுத்தல் விநாயகப் பானை வைத்தல், குளிர்த்திச் சடங்கு என்பன இடம் பெறும்.

## கும்பம் வைத்தல்

ஆலயத்தில் முன் மண்டபத்திலே கால்கள் நாட்டி அழகாக அலங்கரிக்கப்படும். இங்கு நாட்டப்பட்ட காலில் அழகான கொய்தகம் வைத்து சேலை உடுத்தப்படும் இது பெண் உருப்போன்று காணப்படும். இக் காலங்களிலே கமுகம் பாளை, வேப்பிலை வைத்து அலங்கரிக்கப்படும் மண்டபத்தின் நடுவே பூரண கும்பம் எனப்படும் கும்பத்தில் நெல் கொட்டப்பட்டு நெல்குவியலில் அழகான கும்பம் ஒன்று வைக்கப்படும்.

## கலியாணக்கால் வெட்டுதல்

பெரும்பாலான கோயில்களில் கலியாணக்கால் வெட்டு நிகழ்வு குளிர்த்திக்கு முதல் நாளே இடம் பெறும் பூசகர் பெண் போல சேலை உடுத்தி முக்காடிட்டு தவில் சத்தம் ஒலிக்க பெண்களின் குரவை ஒலிக்க அரோகரா சத்தத்துடன் கலியாணக்கால் வெட்டும் இடத்திற்குச் செல்வர் முன்பே பார்த்து தீர்மானித்த மரத்தடியிலே மடை வைத்து பூசை செய்யப்படும் பின்பு அம்மரம் பூசகரால் வெட்டப்படும். அம்மரம் பூவரசம் மரம் அல்லது வேப்பம் மாமாக இருக்கும். மரத்தை வெட்டிக் கொண்டு ஆலயத்திற்குத் திரும்பும் போது பூசகர் உருவேறிய நிலையில் காணப்படுவார்.

## கலியாணப் படிப்பு

வெட்டப்பட்டுக் கொண்டு வரப்பட்ட கலியாணக்கால் ஏற்கனவே அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் நடுவிலே நடப்பட்டு அலங்கரிகப்படும். அழகான சரிகைச் சேலையினால் அக்கலியணக்கால் அலங்கரிக்கப்படும். இது பெண் போன்ற தோற்றத்தினைக் கொடுக்கும்.

கலியாணக்காலுக்கு முன் பூரணகும்பம் வைக்கப்படும் கலியாணக்காலைச் சுற்றி மடைகளும் வைக்கப்படும். பூரணகும்பம் வெற்றிலை, பாக்கு கமுகம்பாளை தாமரைப்பூ, வாழைப்பழம், வேப்பிலை கொண்டு அலங்கரிக்கப்படும். பின்னர் கலியாணச் சடங்கிற்கான கலியாணப் பலகாரங்களை குறிக்கப்பட்ட தெருவிலிருந்து அல்லது குடியினரிடமிருந்து எடுத்து வரப்படும். பூசைகள் இரவு வேளைகளில் இடம் பெறும் பகலில் பூசை நடைபெறும் கோயில்களும் உண்டு பூசை நேரத்தில் உடுக்கு ஒலி, தவில்ஒலி சிலம்பு ஒலி, அம்மன் காய் ஒலி, பூசகரின் மணி ஒலி பேரோலியாகக் கேட்கும். அவ்வேளை சிறு பிள்ளைகள் நேர்த்திக்கடனை முன்னிட்டு கலியாணக் கால்களை மூன்று தடவை சுற்றி வலம் வருவர். இவ்வேளை பூசகர் பெண் உருவில் அம்மனாகவும் ஊர்ப் பெரியவர்களும் அச்சிறு பிள்ளைகளோடு சேர்ந்து உடுக்கு அடித்து உடுக்குச் சிந்து பாடி வலம் வருவது கண கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

## தோரணம் ஏற்றுதல்

தோரணம் கட்டுவதற்கு ஒரு தெருவினரிடம் அல்லது குடியினரிடம் கொடுக்கப்பட்டிருக்கும் இவர்கள் மிக அழகாக பல வர்ணப் பொருட்களால் சோடனை செய்து மிகவும் பெரியதாக இருப்பார்கள். அதனை அவர்கள் கட்டிய இடத்திலிருந்து பூசகரும், ஏனையோரும் தவில் வாத்தியங்களுடன் சென்று அழைத்து வந்து அம்மன் கோயில் வாயிலில் கட்டி விடுவர்.

## விநாயகப் பானை எழுந்தருளப் பண்ணல்

குளிர்த்திச் சடங்கு இடம் பெறுவதற்கு முன்னர் முதல் நாள் ஊர்மக்கள் அனைவரும் நெல், பால், பழம் என்பவற்றைக் கோயிலுக்கு கொண்டு கொடுப்பர். அன்றைய தினம் பின்னேரம் பெண்கள் கூடி நெல்குற்றி புடைத்து அரிசியைக் கொடுப்பர். இந்நிகழ்ச்சியும் மடைவைத்து பூசை வைத்தே ஆரம்பிக்கப்படும். இந்த அரிசியையே விநாயகப் பானை பொங்கும் போது சேர்த்துக் கொள்வர்.

விநாயகப் பானை எழுந்தருளப் பண்ணல் என்பது குற்றி எடுக்கப்பட்ட அரிசியினை அம்மனுக்காகப் பொங்கும் நிகழ்வாகும். இது குளிர்த்திச் சடங்கிற்கு முன்னர் நடைபெறும் ஒரு முக்கிய வைபவமாகும். புதிதாக வாங்கிய மண்பானையிலே ஆலய முன்றலிலே புதிதாக அடுப்பு மூட்டி மடை வைத்து தீபாராதனை செய்து மூன்று பானைகளை வைப்பர். பானையில் பால் பொங்கும் வேளையில் நடுவில் உள்ள பானைப்பாலை மூலஸ்தானத்திற்குக் கொண்டு போய் அம்மனுடைய மடையில் பக்குவமாக வைப்பர். ஆண்டு விநாயகப் பானைக்கென புதிய பானை வாங்கப்படுவது வழக்கம்.

## பூம்பந்தல் கொண்டு வருதல்

தெருமுறையில் சடங்கு நடைபெறுவதாயின் ஒரு தெருவினரிடம் பூம்பந்தல் கொண்டு வரும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கும் அல்லது குடிமுறையில் செய்வதாயின் ஒருகுடியினர் இதனைச் செய்வர். இப் பூம்பந்தலில் கீழ் அமர்ந்தே அம்மன் குளிர்த்தி ஆடுவார் பல வகையான அலங்காரப் பொருட்கள் கொண்டு மிக அழகாக அப்பூம்பந்தல்

கட்டப்பட்டிருக்கும் நான்கு கால்களையும நால்வர் தாங்கிவா நடுவிலே பூசகர் கும்பத்துடன் வருவார். நடு இரவிலே தான் கொண்டு வருவார்கள்.

## திருக்குளிர்த்தி ஆடல்

"வருடம் ஒரு முறை வைகாசித் திங்களில் வருவேன்" என்று கண்ணகை அம்மன் வாக்குக் கொடுத்ததின்படி வைகாசிப் பூரணையில் திருக்குளிர்த்தி ஆடல் இடம் பெறும் பூம்பந்தலின் கீழ் உரலின் மேல் பெரிய பானை வைத்து பாணக்கம் கரைக்கப்படும். பூசகர் பெண் வேடமுற்று முக்காடிட்டு அம்மனைக் கொண்டு வந்து பூம்பந்தலின் கீழ் நிற்பார் குளிர்த்தி ஏடு படிக்கப்படும். குடியுடைய இருவர் மாறி மாறி குளிர்த்தி பாடலைப் பாடுவர்.

*"தட்டான் பொடியாகத் தார் வேந்தன் நீறாக*
*சுட்டெரித்துப் போட்ட தொரு தோகாய் குளிர்ந்தருள்வாய்"*

தீர்த்தம் முதல் தடவையாக அம்மனுக்குத் தெளித்து பின் மக்களுக்குத் தெளிக்கப்படும். இறுதியில் வாழி பாடி குளிர்த்தி முடிவுறும்.

ம.தெ. மேற்குப் பிரதேசத்தில் கண்ணகை அம்மன் சடங்கு நடைபெறும் முறைகளில் மகிழடித்தீவுக் கோயிலில் ஒரு நாள் இரவு "பச்சை கட்டுச் சடங்கு" என்று நடைபெறும். இது ஏனைய கோயில்களில் நடைபெறுவதில்லை.

## பச்சை கட்டு:-

அன்றையதினம் சடங்கில் ஏட்டில் குறிப்பிட்டதன் படி நெய்க்குடம் பால்க்குடம், தேன்குடம் என்பவற்றுடன் கறிக்குரிய பொருட்கள் யாவும் காய்வகையாகவும் பெண் உருவில் இருக்கும் பூசகரிடம் ஒருவர் கொடுப்பார். கண்ணகையும் கோவலனும் திருமணம் செய்து தனிக்குடித்தனம் நடாத்தச் செல்வதாகவும் அவர்களுக்கு இது வழங்கப்படுவதாகவும் கூறப்படும். இத்தகைய ஒரு சடங்கு மகிழடித்தீவில் மட்டும் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

கதவு திறக்கப்பட்ட நாளிலிருந்து திருக்குளிர்த்தி ஆடும்வரை பூசை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் ஏடு படித்தல் முக்கியமானதாகும். இது அம்மனின் வரலாறு கூறும் ஏடு, கலியாண ஏடு, குளிர்த்தி ஏடு என மூவகைப்படும். இந்நாட்களில் கோயில்களில் கூத்து, கும்மி, கரகம் வசந்தன் ஆட்டம், கொம்பு விளையாட்டு, கலைவிழாக்கள் என்பன இடம் பெறும். இவ்வம்மன் வழிபாடு இலக்கியத்தோடு தொடர்புடையதாகக் கூறப்படுகின்றது. இவ்வம்மன் சடங்கில் தேவாதிகள் ஆடும் வழக்கம் இடம் பெறுவதில்லை.

## மாரியம்மன் வழிபாடு

இவ்வம்மன் வழிபாடு தமிழ்நாட்டிலேயே தோற்றம் பெற்றுள்ளது. கலிங்க நாட்டிலிருந்து மட்டக்களப்புக்கு வந்த சக்திவழிபாட்டுக்காரரான சகோதரிகள் மூவர் மாமாங்க நதியில் நீராடி வழிபாடாற்றியபின் புளியந்தீவின் வடமேல் புறவாவி எல்லையில தங்கி விட்டனர். அவர்களில் ஒருவரே இவ்வம்மன் என்று கூறுகின்றனர். இவ்வம்மன் வழிபாடு கண்ணகை அம்மன் வழிபாட்டுடன் தொடர்புடையதாகவே இருந்தது. மக்கள் நோய் வராமல் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதன் நோக்கத்தோடு இவ்வம்மன் வழிபாட்டை ம.தெ.மேற்குப் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தினர். அம்பிளாந்துறையிலே மாரியம்மன் வழிபாடு முதன்முதலில் பண்டாரியவெளி, முனைக்காடு போன்ற இடங்களிலும் இவ்வம்மனை வழிபடத் தொடங்கினர்.

அம்பிளாந்துறை, பண்டாரியாவெளி ஆகிய இரண்டு கோயில்களும் ஆடி – பூரணையை இறுதிநாளாகக் கொண்டு சடங்கினைச் செய்வர். கடுக்காமுனை, அரசடித்தீவு, முனைக்காடு ஆகிய கிராமங்களிலுள்ள கோயில்கள் ஆனிப்பூரணையை இறுதிநாளாகக் கொண்டு சடங்கினைச் செய்வர்.

## மாரியம்மனுக்கான சடங்குமுறைகள்:-

சடங்கு நடைபெறுவதற்கு முன்னர் ஊர்மக்கள் கூடிச் சடங்கு சம்பந்தமான நடைமுறை விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுவர். பின்னர் சடங்கு நடைபெறுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் 'வண்ணான் கூய்' அறிவிப்பு, கும்பம் வைத்தல், சோடனைச் சடங்கு, ஊர் காவல்பண்ணுதல், கம்பத்தில் ஏறுதல், தீ மிதித்தல் போன்ற நிகழ்வுகள் இடம் பெறும். இந்நிகழ்வுகளின் போது தேவாதிகள் ஆடுவது வழக்கம்.

## 'வண்ணான் கூய்' அறிவிப்பு:-

கதவு திறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு இரவில் 'வண்ணான் கூய்' போடுதல் இடம் பெறும். இதில் அசுத்தமானவர்கள், பூப்படைந்தோர் ஊரைவிட்டு வெளியேற வேண்டும் என்றும் புலால் உண்ணல் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்படும். இதன் மூலம் ஊர் பூரணமாகச் சுத்தமடையும் என்ற நம்பிக்கை உணர்வு ஏற்படும்.

## கதவு திறத்தல்:-

கதவு திறத்தல் வைபவம் முதல்நாள் கும்பம் வைத்தலுடன் ஆரம்பமாகும். கும்பத்துடன் அம்மன் முகத்தை மட்டும் வைத்து விடுவர். இது வெண்கலத்திலானதாக இருக்கும். கதவு திறக்கும் வைபவத்துடனே தேவாதிகளும் ஆடத் தொடங்குவர். மாரியம்மன், காத்தான், காவல்காரன் என மூன்று தேவாதிகள் ஆடுவர்.

ஆலயம் அழகாக அலங்கரிக்கப்பட்டு நடாத்தப்படும் சடங்கு சோடனைச் சடங்கு எனப்படும். முக்கிய பொருளாக வேப்பு

இலை பயன்படுத்தப்படும். இது ஓர் தொற்று நீக்கியாக இருப்பதால் சடங்கு வழிபாடுகளில் பயன்படுத்தப்படுவது வழக்கம்.

அடுத்து ஊர்சுற்றும் வைபவம் இடம் பெறும். தேவாதிகள் ஊர்காவல் பண்ணுதல் போன்ற ஒரு நிகழ்வாக இது இடம் பெறும்.

## கம்பத்தில் ஏறுதல்:- (தவநிலை)

மாரியம்மன தவநிலையிருப்பதற்காக ஆலயத்தில் நடப்பட்டிருக்கும் கம்பத்தில் ஏறும் வைபவம் இடம் பெறும். மாரியம்மன் தவநிலையிலிருக்கும் போது மாரியம்மன் தாலாட்டுப் பாடப்படும். இது பாடி முடிந்த பின்னரே மாரியம்மன் கம்பத்திலிருந்து இறங்கும்.

*"அரியோன் தங்கை மகமாரி அரனாரிடத்திலே அமர்ந்து*
*பரிவாய் முத்துவரம் வேண்ட பாரில் தவசுபுரிய வென்று*
*சரியாய் தவசுதான் வருந்தி தக்க குடும்பந்தான் இருத்தி*
*விரிவாய் மனதை ஒன்றாக்கி மிகுந்த தவசு செய்யலுற்றார்*

## தீ மிதிப்பு:-

தீ மீதித்தல் வைபவம் இறுதிநாள் இடம் பெறும். இதற்காகத் தீக்கட்டை எழுந்தருளப் பண்ணல் வைபவம் முதல் பகல் 2 மணிக்கே தொடங்கி விடும். சிறிய ஆண்பிள்ளைகள் 5 பேரை எடுத்து வெள்ளை வேட்டி உடுத்தி, கட்டைகளுக்குத் திருநீறுபூசி முத்துலிங்கப் பிள்ளையார் கோயிலிலிருந்து எடுத்துவரப்படும். இதற்கெனப் பயன்படுத்தப்படும் விறகு, வேம்பு, வீரை எனப்படும். தீக் கட்டை எடுத்து வரும்போது அதற்கு முன்னால் காவடியாட்டம், கரகாட்டம் என்பன இடம் பெறும். பெண்கள் மாவிளக்கு, கற்பூரவிளக்கு என்பன எடுத்து வருவர்.

தீக்குழி 10 அடி நீளமும் 3 அடி அகலமும், 2 அடி ஆழமும கொண்டதாக அம்மன் கோயில் முன்னால் அமைக்கப்பட்டிருக்கும். இரவு 9 மணியளவில் தீக்கட்டை மூட்டப்பட்டிருக்கும். அதிகாலை 5 அல்லது 6 மணியளவில் தீ மிதிப்பு இடம் பெறும். தீ மிதிக்கலாம் என்பதற்கு அறிகுறியாக பூசாரியார் தாமரைப்பூவைத் தீக்குழியினுள் போட்டு அது வாடாத பட்சத்தில் அல்லது நெருப்பில் எரியாத பட்சத்தில் தீ மிதிக்கத் தொடங்குவர். முதலில் தேவாதிகள், பூசகர் தீ மிதிப்பர். பின்பு மக்கள் தீ மிதிப்பர். இந்த வேளையில் மந்திரவித்தைகள் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதைக் காணக் கூடியதாக இருக்கும். தேவாதிகளை ஆடாமல் நிறுத்தவும், ஆட்டவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு இரவிலும சடங்கு நிறைவுற்றதும் தேவாதிகள் சடங்கு திருப்பதியாக இடம் பெற்றது. அல்லது திருப்பதியாக இடம் பெறவில்லை என்றும் மக்களுக்கு எந்த விதமான நோய் நொடியும் வராது என்றும் கூறுவர். இதனைக் 'கட்டுச் சொல்லுதல்' என்று கூறுவர். இதன் மூலம் மக்கள் சந்தோஷமடைவர்.

தீ மிதிப்பு முடிந்தபின்னர் தேவாதிகளும், பூசாரியும் தீப்பாய்ந்த சகலரும் அக்கினிச் சூட்டை நீக்கும் பொருட்டு கடல்குளிக்கச் செல்வர். அவர்கள் அங்கு செல்ல முன் விநாயகப்பானை எழுந்தருளப் பண்ணல் இடம் பெறும். கடல்குளித்து விட்டு பின்னர் குளிர்த்திப்பாட்டுப் பாடிச் சடங்கினைநிறைவு செய்வர்.

*"மேகம் மழை பொழிய மேதினியெல்லாம் விளைய*
*தாக பிணி மாற்றியருள் தாயே குளிர்ந்தருள்வாய்"*

இச்சடங்கு வேளையின்போது தவில் வாத்தியத்தோடு உடுக்கை அடித்தல் முக்கியமானதாகும். காற்சிலம்பு, கைச்சிலம்பு, அம்மன்காய் என்பனவும் ஒலிக்கப்படும். கூத்து, கரகம், கலைவிழாக்கள் என்பன இடம் பெறும்.

இவற்றினைவிட காளியம்மன் வழிபாடும் ம.தெ. மேற்குப் பிரதேசத்தில் பின்பற்றப்படுகின்றது குறிப்பிடத்தக்கது.

## காளியம்மன் வழிபாடு:-

இவ்வம்மன் வழிபாடு மிக அண்மைக்காலமாகவே ம.தெ. மேற்குப் பிரதேசத்தில் முக்கியமானதாகும். முதலைக்குடா, மகிழடித்தீவு, கடுக்காமுனை போன்ற இடங்களில் இவ்வழிபாட்டினை நடைமுறைப்படுத்துகின்றனர். இது 3 நாள் விழாவாக இடம் பெறும். இவ்வாலயத்திலும் தேவாதிகள் ஆடுவர்.

இதனைவிட கலைமகள், திருமகள், மலைமகள் ஆகிய சக்திகளுக்கும் நவராத்திரிவிழா மிகவும் சிறப்பாக ஆலயங்களிலும், பாடசாலைகளிலும், தொழில் நிறுவனங்களிலும் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது.

இவற்றினை நோக்குமிடத்து சக்திவழிபாடு ம.தெ.மேற்குப் பிரதேசத்தில் மிகவும் பிரசித்தி பெற்று விளங்குவதனையும், மக்கள் சக்தி வழிபாட்டில் எத்துணை ஈடுபாடுடையவர்களாக உள்ளனர் என்பதையும் அறிய முடிகின்றது.

# மட்டக்களப்பில் வதனமார் : அதன் பூர்வீகம் தொடர்பான நோக்கு

சு. சிவரெத்தினம்

மட்டக்களப்பு வரலாறு இதுவரையும் சரியான புறநிலையான சான்றுகள் கொண்டு எழுதப்படவில்லை. இந்நிலையில் இங்கு வழிபாட்டிலுள்ள வதனமார் தெய்வம் பற்றிய கதைகளும், வழிபாட்டுமுறையும் மட்டக்களப்பு வரலாற்றை எழுதமுற்படுவோருக்கு ஓரளவு வலுவான சான்றாக இருக்க முடியும்.

மட்டக்களப்பில் காலத்துக்குக்காலம் தமிழ் குடியேற்றங்கள் இடம் பெற்றுள்ளதை மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்புத் தமிழகம் என்பன காட்டுகின்றன.

> *"ஆரம்பத்தில் சேனன், கூத்திகன், காலத்தில் சேரநாட்டு தமிழ் குடியேற்றமும், எல்லாளன் தலைமையில் வந்த படை எழுச்சியைத் தொடர்ந்து வந்த தமிழ் குடியேற்றமும் வாலகம்பாகு ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட பாண்டிய நாட்டுக் குடியேற்றமும் கயபாகுவின் தமிழ்க் குடியேற்றமும், தென்னிந்தியச் சோழர் ஆட்சிக் காலத்துடன் 2ஆம் பாண்டியவம்ச ஆட்சிக் காலத்துடனும் இடம்பெற்ற குடியேற்றங்கள்"*

என்பவற்றை முக்கியமான குடியேற்றங்களாகக் குறிப்பிடலாம். இவ்வாறு குடியேறியவர்களின் வாழ்விடங்கள் பற்றி வி.சி. கந்தையா குறிப்பிடும் போது,

> *" இந்தியாவிலிருந்து இலங்கையின் வடக்கு வாயில்களால் அனுராதபுரியை அடைந்த வெளிநாட்டாருக்கு மலைப்பிரதேசங்களிற் கூடாக தெற்கு நோக்கிச் செல்வதிலும் பார்க்க சமவெளிகளின் வழியாகப் பரந்த சமவெளிகளாகக் கிடந்த கிழக்குப்பகுதிகளுக்குச் செல்லுதல் இலகுவானதாய் இருந்தது. அப்படி ஈழத்தின் கிழக்கு, தென்கிழக்குப் பாகங்களிலுள்ள நதிக்கரைகளில் குடிபுகுந்த மக்கள் அங்கு பல கிராமங்களை அமைத்து வயல்நிலங்களை வகுத்து ஒழுங்குற வாழத் தலைப்பட்டனர் எனலாம்."*

மட்டக்களப்பு நகரிலிருந்து தெற்கே சுமார் 30 கி.மீ தூரத்தில் உள்ள வெல்லாவெளி எனும் இடமும் இவ்வாறு குடியேறிவாழ்ந்தவர்களுக்குப் பொருத்தமான இடமாக அமைந்திருக்கலாம். ஏனெனில் வெல்லாவெளியின் புவியியல் அமைப்பானது நதியையும், வயல் வெளிகளையும் கொண்டமைந்த வளம் பொருந்திய உழைப்புச் சாதனமாக இப்பிரதேசம் விளங்கியது. ஆகையால் புராதன குடிகளும் அல்லது குடியேறியவர்களும் தமது வாழ் மனைகளை அமைத்துக் கொள்வதற்குப் பொருத்தமான இடங்களில் இதுவும் ஒன்றாக இருந்திருக்கலாம்.

வெல்லாவெளி கிராமசேவையாளர் பிரிவு, ஓட்டடி முன்மாரி, நாதனைக் கண்டம், பிலாலி வேம்பு, வெல்லாவெளி, ஆனைக்காரன்வெளி, ஏத்தாலை, புத்தடிமேடு, பீலியாறு, எனும் சிறுசிறு பகுதிகளை உள்ளடக்கிய ஒன்றாகும். இதில் நாதனைக் கண்டமே 'நாதனை', 'நாதனாவெளி' என அழைக்கப் படுவதுமாகும்.

## வதனமார் ஊர் சுற்றுக் காவியத்தில்;

"வதனமாரும் கன்னிமாரும் மதுரையிலிருந்து கும்பகோணம், இராமேஸ்வரம், திருகோணமலை, கந்தளாய், கொட்டியார நகர், கிளிவெட்டி, தம்பன்கடவை, தம்பலகாமம், கந்தைமலை, பாணமை, நாலூர், நாகமுனை, அறுகாமம், என்பவற்றினூடாகவந்து சிலர் வதனவெளி எனும் இடத்தில் இருக்க இன்னும் சிலர் திருக்கோயில், பட்டிநகர், தளவைக்குடா, காரைநகர், கல்முனை ஆகிய இடங்களில் வாழ்ந்து, பின்பு நாதனையில் கனிகள், தேன்கூடு, மாடு ஆகியவற்றைக் கண்டு நாதனையில் வாழத்தொடங்கினர். இங்கு குழுமாடு கட்டியும், மதயானைகளை அடக்கியும், தேனெடுத்தும் வாழ்ந்து வரும்போது தங்களுடைய மாடுகள் அனைத்தும் காணாமல்போக வதனமாரும், மற்றையோரும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீசரைத் தொழுது மாடுகள் தேடி மணல்பிட்டியால் வரும்போது காட்டெருமைகளை வெள்ளைக்கிடா ஒன்று வெட்டியழிக்க வதனமாரும் வீரர்களும் வெள்ளைக் கிடாவைக் கட்டவர அனைவரையும் வெள்ளைக் கிடா வெட்டிக் கொன்றதும், காக்கா வதனன் கைலாயம் சென்று சுவாதியம்மையிடம் கூற சுவாதியம்மை பூலோகம் வந்து அனைவரையும் உயிர்ப்பித்து எச்சில்பட்ட நீங்கள் இனி என்னுடன் வரவேண்டாம் இங்கிருந்து பூசை பொங்கல் ஏற்று பட்டிக்குப்பட்டி பாலமிர்தம் உண்டு மகிழ்ச்சியாய் இருங்கோ என்று கயிலாயம் செல்கின்றார்." எனக் கூறுகின்றது.

"சோழராட்சி தென்னிந்தியாவில் வலுவடைந்திருந்த காலத்திலும், முதலாம், இரண்டாம் பாண்டிய வம்ச ஆட்சிக்காலத்திலும் இலங்கை சிங்கள அரசருக்கும் இந்திய தமிழ் மன்னர்களுக்கும் இடையில் நட்பும் பகையும் காலத்துக்கு காலம் வளர்ந்திருக்கின்றன. போரும் வியாபாரமுமாகிய தொடர்பு களினால் தமிழகமும், ஈழநாடும் மேலும் அதிகம் நெருக்கம்

உற்றன. கடல் வாணிகமும், கடல்போக்குகளும், ஈழத்துக் கடல்துறைகளுக்கு முதன்மை கொடுத்தன. இவை காரணமாக கப்பல் போக்குவரத்துக்கு மிகுந்த வசதியாய் இருந்த கிழக்கிலங்கைத்துறைகள் மிகுந்த செல்வாக்கடையலாயின. அதனால் திருகோணமலை, இலாம்பித்துறை எனப்படும் ஈழத்துறை, கல்குடா, மட்டக்களப்பு, கண்டபாணந்துறை, கோமாரி என்னும் துறைமுகங்களை அடுத்து மக்கள் குடியேற்றமும் தொடர்ந்து நடைபெற்றுவந்தது." என வி. சி. கந்தையா குறிப்பிடுவதனையும், வதனமார் ஊர்சுற்றுக் காவியத்தினையும் ஒப்பிட்டு நோக்க வேண்டும். அவ்வாறு பார்க்கின்றபோது வதனமார் சோழராட்சிக் காலத்தில் துறைமுகங்கள் பயன்படுத்தப்பட்ட காலப்பகுதியில் வந்தவராக இருக்க வேண்டும். அதனால் தான் இராமேஸ்வரமும், திருகோணமலையும் இங்கு தொடர்பு படுத்தப்படுகின்றது. அத்துடன்

> *"கந்தளாய்ப் பகுதியில் தமிழர் குடியேற்றமும் சிறப்புற்றிருந்தமைக்குச் சான்றாக பல தொல்லியல் தடயங்கள் உள்ளன. கந்தளாய் கல்வெட்டு, பழமோட்டை கல்வெட்டு போன்றவை இத்தொடர்பில் குறிப்பிடத்தக்கன."*

எனவே இதே சமகாலத்துடன் தொடர்புபட்ட ஒன்றாகவே நாதனையில் வதனமார் வரவையும் கருத வேண்டும்.

> *" கண்ணகியம்மன், மாரியம்மன், கங்கையம்மன், கம்பகாமாட்சி, காளி, வடபத்திரகாளி, மாநீலி, வீரவர், இந்துமாநாச்சி, நாமனாச்சி, கடனாச்சி, பேச்சியம்மன், வீரபத்தினி, வைரவர், ஐயனார், விறுமவைரவர், வீரபத்திரர், காத்தான், பெரியதம்பிரான், நிலாசோதையன், நாசிங்கவைரவர், திரிசூலவைரவர், அனுமார், ஆகிய தெய்வங்கள் தென்னிந்தியாவிலின்றும் இங்குவந்த தெய்வங்களாம்" என கலாநிதி. சி. மௌனகுரு குறிப்பிடுகின்றார்.*

இதுவரை கூறிய ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்றபோது வதனமார் தெய்வமும் தென்னிந்தியாவில் இருந்துதான் வந்ததாக இருக்க வேண்டும் என்ற ஒரு எண்ணப்பதிவைத் தருகின்றது.

இவ்வாறான நிலையில் ஈழத்து பூர்வீககுடிகளின் தெய்வம் எது என அடையாளம் காணலும் முக்கியமான ஒன்றாக உள்ளது.

"மட்டக்களப்புப் பகுதியிலே வாழும் வேடவெள்ளாளர் எனப்படும் சாதியினர் மத்தியில் காணப்படும் குமார தெய்வச்சடங்கு நமக்கு புராதன தெய்வ வழிபாட்டினையும் ஆட்ட முறையையும் காட்டுகின்றது. இத்தெய்வத்துக்கென தனிப்பட கட்டப்பட்ட கோயில் கிடையாது. கிராமத்தின் அல்லது காட்டின் மத்தியிலுள்ள குறிப்பிட்ட மரம் ஒன்றே கோயிலுக்குரிய நிலையமாகும்................. கோயில் குமார தெய்வத்தின் பெயரில் அமைந்திருப்பினும் வேறு பல தெய்வ வணக்கமுறைகளும் இக்கோயிலில் நடைபெறும். ............ மட்டக்களப்பில் ஏனைய சிறு தெய்வக் கோயில்களில் சொல்லப்படும் மந்திரம் இங்கு சொல்லப்படுவதில்லை. வேட பாசையில் பாட்டுக்கள் பாடப்படுகின்றன. பாட்டுடன் கொட்டு எனப்படும் பறையும் அடிக்கப்படுகிறது. ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொருவிதமான கொட்டு ஒலியுண்டு."

"மாடுகட்டும் தெய்வம் வதனமாறா என அழைக்கப்படுகின்றது. கோயில் விழாக் காண வந்த சிறுவர்களை மாடுகளாகப் பாவித்து அவர்களை ஒரு கயிற்றின் நுனியில் பிடிக்கச் சொல்லி மறு நுனியிலே தான் பிடித்தவண்ணம் வதனமாருக்கு அபிநயிக்கும் பூசகர் ஓடிவருவார். கோயிலைச் சுற்றி வந்து நின்றதும் மாடுகளுக்குக் கொடுப்பதுபோல சிறுவர்களுக்கு வாழைப்பழமும் தண்ணீரும் வதனமாருக்கு ஆடுபவர் கொடுத்து கலைத்து விடுவார். மாறா எனும் தெய்வ வணக்கம் வதனமார் என்ற பெயருடன் முல்லைத்தீவு, வவுனியா, மூதூர், பகுதிகளில் உள்ளமை குறிப்பிடத்தக்கது" என கலாநிதி சி. மௌனகுரு அவர்களினால் குறிப்பிடப்படும் குமாரதெய்வ கோயில் இடம்பெறும் வதனமாறாவுக்கும், வெல்லாவெளி கோயில் வழிபாட்டினுள்ள வதனமாருக்கும், (தென்னிந்தியாவில் இருந்து வந்தவர்) தொடர்பிருப்பதாக தெரியவில்லை.

வெல்லாவெளியில் நடக்கும் வதனமார் சடங்கினை நோக்கும்போது கல்லடிப்பிள்ளையார் எனும் இடத்திலுள்ள மலை மேல் அம்மனுக்கு ஆடுபவர், பூசாரியார், பாலாவதனனுக்கு ஆடுபவர், மற்றும் சில வேண்டப்பட்டவர்களுமாக மலையில் ஏறி அங்கு ஒரு மடை வைத்து பாலாவதனன் ஆடத் தொடங்குவார். அவருக்கு அம்மன் தண்டு, இருபொல்களைக் கொடுத்து மாடுமேய்த்து வரச்சொல்லி அனுப்புவார். அவர் மாடுசாய்ப்பதுபோல் மாடுகளைச் சாய்த்துக் கொண்டு மலையை வலம்வரும்போது கூ...... ஆ...... என மாட்டைக் கலைத்து வந்து மலையின் கீழ் இருக்கும் பார்வையாளர்களுக்கு தெரியும் வண்ணம் இருந்து மாட்டை மேய விட்டுவிட்டு நித்திரை செய்பவர்போல் அபிநயிப்பார். அப்போது அவரை வெள்ளக்கிடா வெட்ட அவர் இறப்பது போல் அபிநயிப்பார். அப்போது அம்மன் வந்து அவரை எழுப்பி மடை இருக்கும் இடத்துக்குக் கூட்டிச் சென்று தேன் வெட்டி வரும்படி கோடரியைக் கொடுத்து அனுப்புவார். அவர் மலைமேலுள்ள மரத்தை அண்ணாந்து பார்த்து தேன் எங்கு இருக்கிறது என தேடித் திரிந்து ஒரு இடத்தை தெரிவு செய்து அதற்கு பூவை எடுத்து வைத்து விட்டு கோடரியால் அந்த இடத்தை வெட்டுவது போல் அபிநயிப்பார். அப்போது தேன் பூச்சி குத்துவது போல் ஊதி, ஊதி, தேன் பூச்சிகளை துரத்துவதுபோல் கையை ஆட்டி ஆட்டி தேன் எடுப்பார். பின்பு அம்மன் வேட்டையாடி வரும்படி வில் அம்புகளை எடுத்துக் கொடுப்பார். அவர் அவற்றை எடுத்துக் கொண்டு வேட்டையாடுவது போல் அபிநயிப்பார். அதன் பின் அம்மன் கயிற்றை எடுத்துக் கொடுத்து குழுமாடு பிடிக்க அனுப்புவார். அவர் கயிற்றுடன் மலையை வளைத்து வந்து பதுங்கிப் பதுங்கி வர அம்மனும் அவருடன் பதுங்கி வந்து ஒரு வாழைப்பழத்தையும் கமுகம் பூவையும் சேர்த்து மாட்டைக் கட்டுவது

போல் கட்டிவிட்டு சந்தோசத்தில் கத்தி தூக்கி பார்வையாளரிடம் காட்டுவார். பின் அவருக்கு, அம்மனுக்கு ஆடுபவரும், பூசாரியுமாக சேர்ந்து பாலால் முழுக வார்ப்பர். இது அவர் குழு மாட்டைக் கட்டி பால் கறந்ததற்கான அடையாளமாக கருதப்படுகின்றது.

இச்சடங்கில் நிகழ்த்தப்படுகின்ற வேட்டையாடல் தேன் எடுத்தல், தேன்பூச்சி குத்துதல், மாடுமேய்த்தல், குழுமாடு பிடித்தல், போன்றவை தென்னிந்தியாவிலிருந்து வந்த வதனமாரின் வாழ்க்கையினை அபிநயித்துக்காட்டப்படுகின்றதா அல்லது புராதன இனக்குழு வாழ்க்கைமுறையின் நினைவுகள் அபிநயிக்கப்படுகின்றதா என்பது சிக்கலான விடயமாகும்.

குமார தெய்வ சடங்கினை அடிப்படையாகக் கொண்டு கலாநிதி. சி. மௌனகுரு அவாகள் கூறும்போது

*"புராதன காலத்தில் வாழ்க்கையோடும் இணைந்திருந்த இவ் ஆட்டம் அவ்வமைப்பு சிதைந்த பிறகும் கூட பாரம்பரியம் பேணும் எண்ணத்தினால் மீண்டும் நாடகத் தன்மையுடன் நிகழ்த்தப்படுவதனைக் காண்கின்றோம்"*

என்பார். இவ்விடயத்தினை வெல்லாவெளி வதனமார் சடங்கிற்கும் பொருத்திப் பார்க்க முடியும். இவ்வாறு பார்க்கின்ற போது வதனமாரை ஈழத்துக்குரிய தெய்வமாக கொள்ள முடியும். இவ்வாறு கொள்ளுகின்றபோது வதனமார் ஊர் சுற்றும் காவியத்தில் கூறப்படும் தென்னிந்தியாவிலிருந்து வந்தவர் வதனமார் எனும் கருத்தில் முரண்பாடு ஏற்படுகிறது. வதனமார் ஊர்கற்றுக்காவியம் மிக அண்மைக்காலத்தில் இயற்றபட்டதாக இருக்க வேண்டும். ஏனெனில் அக்காவியத்தில் வரும் "நாதனைக் குடாவில் நாச்சிமார் கல்லடி" எனும் அடிகளில் நாதனை என்பது நாதன் அணை திரிபடைந்தது என திருமதி. தனபாக்கியம் குணபாலசிங்கம் குறிப்பிடுகின்றார். அதாவது "மட்டக்களப்பை ஆண்ட மதிசுதன் எனும் அரசன் சித்திரவேல் ஆலயத்திற்கு ஆயிரம் அவுணக்களனிகள் திருத்தி செந்நெல் குறைவின்றி விளையும்படி மேட்டுநீரை தகைய ஒரு அணையைக் கட்டினான். அவ்வணைக்கு தன் மகன் நாதன் பெயரால் நாதன் அணை என்றும், கோயிலுக்கு வழங்கப்பட்ட வயல்வெளிக்கு வேலாயுதர் வெளி என்றும் நாமம் சூட்டினான்.

இன்று வேலாயுதர் வெளி வெல்லாவெளி என்றும் நாதன் அணை நாதனாவெளி, போர்முனைநாடு, போராமுனை என்றும் திரிபு பெற்றுக் காணப்படுகின்றன" எனக் குறிப்பிடுகின்றார்.

இதனை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்றபோது சோழர் ஆட்சிக்காலத்தில் மிகத்திறமை வாய்ந்த இடையர் கூட்டமொன்று திருகோணமலையிலிருந்து ஏற்கனவே குறிப்பிட்ட ஊர்களினூடாக நாதனையில் வந்து வசித்திருக்க வேண்டும். அவர்களின் வரலாற்று இருப்பு வாய்மொழி ரீதியாகக் கூறப்பட்டு அது திரிபடைந்து ஏற்கனவே அவர்களால் அறியப்பட்ட வதனமாராக அவ் இடையர் கூட்டத்தினை ஆக்கி விட்டனர். நடைமுறையிலிருக்கின்ற ஐதீகங்கள் பற்றிய நம்பிக்கையும், வரலாற்றுத் தேவையும், உண்மையான வரலாறுகள் ஐதீகங்களாக பார்க்கப்பட்டு வரலாற்று நாயகர்கள் கடவுள் அந்தஸ்த்துப் பெறுவது எமது மரபுக்கு புதிய விடயமல்ல. பறையர்குலத்தில் பிறந்த காத்தவராயன் காத்தவராய சுவாமியாகவும், சக்கிலியர் குலத்தில் பிறந்த மதுரை வீரன் மதுரை வீர சுவாமியாகவும் மாறியிருக்கின்றபோது இந்தியாவிலிருந்து வந்த இடையர் கூட்டம் வதனமாராக மாறக் கூடிய சாத்தியப்பாட்டையும் நாம் மறுத்தலாகாது. அதாவது ஏற்கனவே ஐதிகத்தில் இருந்த வதனமாருடன் புதிய இடையர் கூட்டத்தினை அடையாளம் கண்ட பிற்காலப் புலவர்கள் வதனமார் ஊர்சுற்றுக்காவியத்தில் வதனமார் தென்னிந்தியாவில் இருந்து வந்தவராகப் படைத்து விட்டனர் என எண்ணவும் சாத்தியப்பாடுகள் இருக்கின்றன. இவ்விடயம் மேலும் மானிடவியல், சமூகவியல் ரீதியாக ஆய்வுகள் மேற் கொள்ளப்படின் இதில் இருக்கின்ற சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள வழியேற்படும். எவ்வாறாயினும் மட்டக்களப்புப் பற்றிய ஒரு உண்மையான சமூக வரலாறு வதனமார் சடங்கில் மறைந்திருக்கிறது என்பதில் தவறில்லை.

## உசாத்துணை நூல்கள்

01. கணபதிப்பிள்ளை. சி. (பதி) மகமாரி திவ்வியகரணி, யாழ்ப்பாணம் – 1971.

02. கந்தையா. வி.சி. மட்டக்களப்பு தமிழகம், யாழ்ப்பாணம். 1964.

03. தங்கேஸ்வரி. க. குளக்கோட்டன் தரிசனம், மட்டக்களப்பு – 1993

04. தனபாக்கியம் குணபாலசிங்கம் மட்டக்களப்பு மான்மியம் (ஓர் ஆராய்ச்சி), மட்டக்களப்பு – 1993

05. மௌனகுரு. சி. சடங்கிலிருந்து நாடகம் வரை, யாழ்ப்பாணம் – 1988

06. மௌனகுரு. சி. மட்டக்களப்பு மரபு வழி நாடகங்கள், கலாநிதிப்பட்ட ஆய்வுக்கட்டுரை, (பதிப்பிக்கப்படவில்லை) யாழ்ப்பாணம் – 1983

# கும்பாபிஷேக கிரியைகளும் அதன் விளக்கமும்

சிவஸ்ரீ வீ. கு. கணபதீஸ்வரக் குருக்கள்

*ஸ்வஸ்தி ப்ரசாப்பியாகா பரிபாலி யந்தா*
*நியாயே நாமார்க் கேண மகிம மகீஸாகா சுப மஸ்தோ*
*வீரஸைவ சுக்கினோ பவது*
*ஸமஸ்த ஜன் மங்களானி பவந்து.*

ஆலயம் என்பது இறைவன் தங்குமிடம். இறைவனை நாம் நேர்நேராகக் காண முடியாது. ஆகவே மேதாவிகள் உருவ வழிபாட்டிலே இறைவனை வழிபடலாம் என ஆகமங்கள் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவை கருங்கல்லினாலும், உலோகங்களினாலும் செய்யப்பட்ட விக்கிரகங்களை ஆதிமூலத்தில் வைத்து வழிபடலாம் என்பது ஆகம மரபு. இதிலும் கருங்கல் விக்கிரகங்களே விசேடமானது. ஏனெனில் சிவாச்சாரிமார் செய்யும் அபிஷேகங்கள் எல்லாம் கருங்கல்லிலே ஊறி விக்கிரகத்தின் அடியிலுள்ள இயந்திரத்தில் சேர்கின்றன. அத்துடன் கருங்கல்லில் ஆகர்ண சக்தியும் கூடுதலாகவுள்ளது. (ஈர்ப்புச் சக்தி) அதிலிருந்து இறைவன் குளிர்ச்சியடைந்து மக்களுக்கு வேண்டிய வேண்டியபடி அனுக்கிரகம் செய்கின்றார். மேலும் சிவாச்சாரியார்கள் சொல்லுகின்ற வேத மந்திரங்கள் யாவும் கருங்கல் அவ்வோசையை இழுத்துக் கிரகித்து இயந்திரத்துக்குக் கொடுக்கிறது. இதன்படி அந்த இயந்திரம் இறைவடிவாகி கருங்கல் மூலம் மக்களுக்கு அனுக்கிரகம் செய்கின்றது. ஆகவே கருங்கல் விக்கிரகத்தை ஆதி மூலத்தில் வைத்து பிரதிஸ்டை செய்ய வேண்டும் என்பது விதி.

உலோகங்களால் செய்யப்பட்ட விக்கிரகங்களுக்கு அபிஷேக நீரை இழுக்கவோ மந்திர ஒலியைக் கிரகிக்கவோ கூடிய சக்தி குறைவு. ஆனால் அந்த விக்கிரகங்களை மக்கள் வெளிப்பார்வையாகப் பார்த்து வழிபடுவதற்கு சிவாச்சாரிமார் மூலமூர்த்தியின் பிரதிமை சொரூபமாக மந்திரங்கள் மூலம் ஆக்கிக் கொள்ளுகின்றார்கள். ஆகவே அதையும் வழிபடலாம் என்பது விதி.

## கும்பாபிஷேகம்

இதனை கும்பாபிஷேகம், குடமுழுக்கு, குடநன்னீராட்டு, பெருஞ்சாந்தி என்று சொல்லப்படும். கும்பாபிஷேகம் ஆவர்த்தனப் பிரதிஸ்டை, அனாவர்த்தனப் பிரதிஸ்டை, புனராவர்த்தனப் பிரதிஸ்டை, அந்தரீகப் பிரதிஸ்டை என நான்கு வகையாக பிரிக்கப்பட்டுள்ளது.

1. *ஆவர்த்தனப் பிரதிஸ்டை* – கோயில் இல்லாத கிராமத்தில் புதிதாகக் கோயில் கட்டி பிரதிஸ்டிப்பது.

2. *அனாவர்த்தனப் பிரதிஸ்டை* – கோயில் இருந்தும் பூசை செய்தும் அனேக நாட்களுக்குப் பூசையில்லாமல் மூடப்பட்டிருந்து பின் கோயிலைத் துப்பரவு செய்து பிரதிஸ்டிப்பது.

3. *புனராவர்த்தனப் பிரதிஸ்டை* – கோயிலில் பூசை நடந்து கொண்டிருக்கும் போது கட்டிடத்தில் வெடிப்பு, உடைவு, அஷ்டபந்தனம் பழுதடைதல் இவைகள் ஏற்பட்டால் அவைகளைத் திருத்தி பிரதிஸ்டிப்பது.

4. *அந்தரீகப் பிரதிஸ்டை* – தேவாலயத்தில் மரணம் ஏற்பட்டால் ஆசௌனமுடையவர்கள் உட்பிரவேசித்தால், நாய் உட்சென்றால் உடனுக்குடன் செய்யவேண்டிய கிரியை இது. இதற்கு நாள் பார்க்க வேண்டியதில்லை. மற்றைய பிரதிஸ்டைகளுக்கு நல்ல நாள் பார்த்து செய்யவேண்டும். இதுதான் கும்பாபிஷேகம் செய்ய வேண்டிய முறை.

இதைத் தவிர்த்து பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்தால் பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் செய்யப்பட வேண்டியது ஆகமங்களில் கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது.

அதுவும் நடைபெறாவிட்டால் விக்கிரகத்தி லிருக்கின்ற இறையருள் ஆலயத்தினுள் இருக்கும் தலவிருட்சத்திலிருந்து மக்களுக்கு மூன்று வருட காலம் அனுக்கிரகம் செய்யும். அதிலும் கும்பாபிஷேகம் நடைபெறாவிட்டால் ஆகாயத்தில் கிச்சிலி பட்சியாக இருந்து மக்களுக்கு அனுக்கிரகம் செய்யும். அதிலும் கும்பாபிசேகம் நடைபெறாவிட்டால் சோதி வடிவாக ஆகாயத்திற்கு மேலாகச் சென்றுவிடும் என்று ஆகமங்கள் வலியுறுத்திக் கூறுகின்றன. ஆகவே பன்னிரண்டு வருடங்களுக் கொருமுறை கும்பாபிசேகம் நடைபெற வேண்டும்.

இறைவனை உருவ வழிபாட்டிலும் வணங்கலாம், உருவமில்லாமலும் வணங்கலாம். ஆனால் உருவமில்லாமல் வணங்குவது கிருகஸ்தர்களுக்குப் பொருந்தாது, யோகிகளுக்குத் தான் பொருந்தும், ஏனெனில் கிருகஸ்தர்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு பாதங்களில் கிரியை நெறியில் நிற்பவர்கள் யோகிகள் உலகப்பற்றை வெறுத்து தியானத்தில் ஈடுபடுபவர்கள் அவர்கள் பத்மாசனத்தில் இருந்து சின்முத்திரையோடு தாங்கள் வழிபடும் தெய்வத்தின் உருவத்தை மூக்கு நுனியைப் பார்த்த வண்ணம் கண்ணுக்கு முன்னே நிலைநிறுத்தி மூலத்தைப் பார்க்கவும் ஆகவே இச்செயல் வழிபடுவர். கிரகஸ்தர்களுக்குப் பொருந்தாது. ஆகவே கிருகஸ்தர்கள் ஆலயத்தில் வணக்கம் செய்வதே நல்லது.

உருவ வழிபாட்டில் கும்பிடுவதானால் சிவாச் சாரியார்கள் வேத மந்திரங்களால் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் எனப்படும் பஞ்ச பூதங்களையும் அக்கினிகுண்டத்தில் ஒன்று சேர்த்து அதை கும்பத்தில் ஒடுக்கி பின் அந்தச் சக்தியை மூலத்திலிருக்கின்ற கல் விக்கிரகத்தில் தொண்ணூற்றாறு தத்துவங்கள் மூலம் கும்ப ஜலத்தை சொரிந்து இறையருளாக உருவாக்க வேண்டும். இதுவே கும்பாபிஷேகமாகும்.

கும்பாபிசேகம் அறுபத்துநான்கு அம்சங்களைக் கொண்டுள்ளது. இவைகளுக்கு முற்றாக விளக்கமளிப்பதானால் காலதாமதமாகும் என்பதனால் சிலமுக்கியமான அம்சங்களுக்கு மாத்திரம் விளக்கமளிக்கின்றேன்.

1. கர்மாரம்பம் - கும்பாபிசேகக் கிரியைகளைத் தொடங்குவதற்கு ஆயத்தம் செய்தல்.

2. ஆசாரியாவர்ணம் - நிர்வாகஸ்தர் கும்பாபிசேகம் செய்வதற்கு தகுதியான ஒரு குருவை தேர்ந்தெடுத்தல்.

3. அனுக்ஞை - குருவானவர் உரிய தேவர்களிடம் செய்யப்போகும் கிரியைகள் குறைவின்றி நடைபெறுவதற்கு அனுக்கிரகிக்குமாறு அனுமதி பெறுவதுடன், கிராமத்திற்கும் எவ்வித இடையூறுகளும் வராமல் பாதுகாக்க வேண்டும் என்று வணங்கி வரம் பெறுதல்.

4. கிராம ஸாந்தி - கோயிலுக்குப் பின் புறமாகவுள்ள வீதியில் பந்தல் போட்டு அசுரர், இராஷதர், பிரமராஷதர், பசாசு ஆகியவர்களைக் கும்பாபிசேகத்திற்கு இடையூறு விளைவிக்காமல் அகன்று நிற்கும்படி செய்தல்.

5. பிரவேச பலி - ஒன்பது சந்திகளிலுமுள்ள திக்குப் பாலகரை துஷ்ட தேவதைகள் தேவாலயத்திற்கு அப்புறமாக நிற்கும்படி காவல் வைத்தல்.

6. கணபதி ஹோமம் - எந்தக் காரியங்கள் செய்யும் போதும் பிள்ளையாரை வணங்கிச் செய்வது வழக்கம். அதுபோல் கும்பாபிசேகத்திற்கு இடையூறு வராமல் பாதுகாக்கும்படி வணங்குதல்.

7. ரக்ஷோக்ந ஹோமம் - ஆலய வைரவரை முன்னிறுத்திச் செய்யப்படும் கிரியை.

8. வாஸ்துஸாந்தி - அசத்பாவமுள்ள பூமியை வாஸ்து பிரம்மாவின் மூச்சினால் சத்பாவம் உண்டாகும்படி செய்தல்.

9. நவக்கிரகமகம் - நாட்டில் அதிக மழை, வைசூரி, யுத்தம் இவைகளுண்டாகாமல் செய்தல்.

10. திஸா ஹோமம் - திக்குப் பாலகரை ஒன்பது திசைகளிலும் நின்று யாகக்கிரியைகளைப் பாதுகாக்கும் படி செய்தல்.

11. ஸாந்தி ஹோமம் - சிற்பாசாரி, பல வேலைக்காரர்களின் குற்றம் குறைகளை நீக்கும்படி செய்தல்.

12. ஸங்கிதா ஹோமம் - ஆலய ஆதிமூலத்தை சுத்தம் செய்தல்.

13. ஸலாதி வாசம் - விக்கிரகங்களை நாட்டில் நல்ல மழை பெய்வதற்காக நீரில் அமிழ்த்துதல்.

14. தானியாதி வாசம் - நாட்டில் விளைவு பெருகுவதற்காக செய்யப்படுதல்.

15. நயனோன் மீலனம் - விக்கிரகங்களுக்கு பளிம ரேகை தங்க ஊசியால் கீறுதல் (கண் திறத்தல்).

16. கிராமப் பிரிதசணம் - மக்கள் விக்கிரக ரூபத்தைப் பார்த்து பக்தி ஏற்படச் செய்தல்.

17. கலாகர்ஸணம் - பாலஸ்தாபனம் செய்திருக்கும் மூர்த்தியிலிருந்து இறை சக்தியை கும்பத்தில் சேர்த்தல்.

18. கடஸ்தாபனம் - சிவகலசம் பதினாறு படி கொள்ளக்கூடிய கங்கை முதலிய புண்ணிய நதிகளிலிருந்து நீர் நிறையச் செய்து மந்திர பூர்வமாக ஆயத்தம் செய்தல்.

19. யாகசாலை பிரவேசம் - பிரதான கும்பங்களையும், அட்டவித்தியேஸ்வர கும்பங்களையும், பரிவார மூர்த்திகள் கும்பங்களையும் யாகசாலையில் சேர்த்தல்.

20. மிருத் ஸங்கிரகணம் - விளைவு பூமியில் மண் எடுத்து வந்து முளைக்கக்கூடிய நவதானியங்களை பசுப்பாலில் கழுவி மண்ணோடு சேர்த்து முளைக்கும்படி செய்தல். இந்த முளையின் படி கும்பாபிசேக விளைவுகளை அறிய முடியும்.

21. இயந்திர பூசை - பிம்பத்தின்கீழ் வைக்கப்படும் இயந்திரத்தை அபிஷேகம் செய்து வில்வப் பத்திரத்தினால் சகஸ்ரநாமார்ச்சனை செய்தல். (1008).

22. விசேட சந்தி - குருமார் எல்லோரும் ஒருமித்து தேவர்கள் மகிழும்படியாக சந்தியாவந்தனம் செய்தல்.

23. பேரிதாடனம் - தேவர்களை யாகசாலையில் இருக்கும் கும்பங்களில் அமரும்படி வாத்திய கோசமெழுப்புதல்.

இவை போன்ற இன்னும் பல கிரியைகள் இருக்கின்றன. இவைகளைக் கும்பாபிசேஷக காலங்களில் நேரில் கண்டு அறிந்து கொள்ளவும்.

சுபம்.

## தோப்புக்கரணம் போடுவது ஏன்?

பொதுவாக நாம் எல்லாத் தெய்வங்களையும் இரு கரம் கூப்பியும், சாஷ்டாங்கமாக விழுந்தும் வணங்குகிறோம்.

ஆனால் விநாயகப் பெருமானை மட்டுமே நமது தலையிலும், முன் நெற்றியிலும் இரண்டு கைகளின் முட்டியினால் குட்டி, இரண்டு கைகளாலும் மாறு காதுகளைப் பிடித்துக்கொண்டு தோப்புக்கரணம் போட்டு வணங்குகிறோம். இதுவே விநாயகப் பெருமானுக்குப் பிடித்த வழிபடும் முறையாகும்.

தோப்புக்கரணம் போடுவதும், நெற்றியில் குட்டிக்கொள்வதும் மூலாதாரத்தில் பாம்பு போன்று சுருண்டு கிடக்கும் குண்டலினி சக்தியைத் தட்டி எழுப்புகிறது. இதனல் சுஷும்னா நாடி திறந்து கொள்கிறது.

நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்வதால் அங்கே உள்ள அமிர்த கலசம் மேலே எழும்பி, அந்த அமிர்தம் நம் உடல் முழுவதும் பரவுகிறது. இதனால் உடம்பில் சுறுசுறுப்பும், மனதில் எழுச்சியும், தியானத்திற்கு ஏற்ற மன ஒருமைப்பாடும் கிடைக்கின்றன.

நெற்றிப் பொட்டில் உடலின் சகல நரம்புகளும் ஒன்று சேருகின்றன. எனவே அங்கு குட்டுவது உடலில் நல்ல விதமான பலவித மாறுதல்களை உண்டாக்கும்.

அகந்தையும், ஆணவமும் அழிந்ததைக் காட்டுவதே தோப்புக்கரணம் போடுவதாகும். கரணம் என்றால் மனம், புத்தி,சித்தம், அகங்காரம் என்ற நான்கும் சேர்ந்ததாகும். இதை 'அந்தக்கரணம்' என்று சொல்லுவார்கள். கை, கால், கண், மூக்கு, போன்றவை புறக்கரணம் எனப்படும். இந்த இரண்டு கரணங்களை அடக்கியாள்வதைச் சொல்வதே யோகம் ஆகும்.

"அகம், புறம் என்றும் இந்த இரண்டு கரணங்களும் செயலற்றுப்போய் இறைவனிடம் லயமடைகிறது" என்று பொருள்படுவதே தோப்புக்கரணம் என்பதாகும்.

நன்றி "ஸ்ரீ ராம கிருஷ்ண விஜயம்", ஆவணி 98

# இந்து சமய தத்துவம்

சுவாமி அஜராத்மானந்தா
ராமகிருஷ்ண மிஷன், மட்டக்களப்பு

"புலன்களின் வரையறையைக் கடந்து செல்வதற்கான போராட்டமே சமயத்துக்கு வித்து" என்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார். ஞானிகள், ரிஷிகள் போன்றோர் புலன்களின் வரையறையைக் கடந்த நிலையில் கண்ட உயர் ஆன்மீக உண்மைகளே சமய தத்துவத்துக்கு அடிப்படையாகும். புலனறிவுக்கு அப்பாற் பட்ட மெய்யறிவு பெற்றவர்களே ரிஷிகள். இவர்கள் மெய்யறிவில் கண்ட உண்மைகளே வேதங்கள். "வேதங்கள் எல்லோருக்கும், எந்த நாட்டினருக்கும், எந்தக் காலத்திலும் பொருந்துவன. அதாவது அவை ஒரு குறிப்பிட்ட சமுதாயத்துக்கோ, நாட்டிற்கோ காலத்துக்கோ மட்டும் உரியவை அல்ல. "பிரபஞ்சம் தழுவிய மதத்தை அறிவுறுத்துபவை வேதங்கள் மட்டுமே" என்கிறார் சுவாமி விவேகானந்தர். பௌதிக விஞ்ஞானத்துறையில் எப்படி நியூட்டனும், கலிலியோவும், தீர்க்கதரிசிகளோ, அப்படியே ஆன்மீகத் துறையில், உண்மைகளை இந்த ரிஷிகள் கண்டார்கள். இந்த உண்மைகளிடம் இவர்கள் தனியுரிமை பாராட்ட இயலாது. இவை இயற்கை அனைத்திற்கும் பொதுவான செல்வமாகும். இணையற்ற பெருமை வாய்ந்த இந்து மதத்தின் சிறப்பான அம்சம் அதன் பரந்த மனப்பான்மையாகும். குறுகிய மனப்பான்மைதான் கொள்கை வெறிக்கும் ரத்தம் சிந்தலுக்கும் காரணமாய் உள்ளது. இந்து மதம் இந்த உண்மையை உணர்ந்து மக்களுக்கு வழிபாட்டு முறையிலும் கொள்கையைக் கடைப்பிடிப்பதிலும் அதிகளவு சுதந்திரம் கொடுத்திருக்கிறது. இந்து மதக் கோட்பாடுகள் முடிவில்லா வேறுபாடுகளை உடையனவாக விளங்குகின்றன. இதுவும் இந்து மதத்தின் ஒரு தனிச்சிறப்பாகும். மனதுக்கு மனம் கொள்கை வேறுபடுவது இயல்பு. எத்தனை மனம் உண்டோ அத்தனை கருத்தும் உண்டு. மனத்தின் எண்ணிக்கையோடு கருத்தின் எண்ணிக்கையும் வளரும் என்பதே இந்து மதத்தின் அடிப்படைக் கொள்கையாகும். "ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி" "உண்மை ஒன்று அதை ஞானிகள் பல பெயரால் அழைப்பார்கள்" என்பது இருக்கு வேதத்தின் பிரபலமான சுலோகமாகும். "பல நிறப் பசுக்கள் வெண்மையான பாலையே தருவது போல பல வழிகளும் ஒரே லட்சியத்தை நோக்கி நம்மை அழைத்துச் செல்லும்" என உபநிடதங்கள் கூறுகின்றன. மனிதர்கள் என்னை எம்முறையில் அணுகினாலும் அம்முறையில் நான் அவர்களை ஏற்கிறேன். அவர்கள் கொள்ளும் எவ்வழியும் என் வழியே என்று பகவான் கிருஷ்ணர் கீதையிலே கூறுகிறார்.

## பரந்த நோக்கு

ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்வே ஒரு ஆன்மீக சோதனைக் கூடமாக விளங்குகிறது. அவர் கடவுளைப் பல வழிகளில் உணர்ந்தார். அதன்பின் தம் அனுபவத்தின் சாரமாக பல்வேறு சமயங்களும் ஒரே கடலை நோக்கிப் பாயும் ஆறுகளைப் போன்றவை எனப் போதித்தார். இந்து சமயம் சமய அனுபவத்தைப் பல நிலைகளாகப் பிரித்து அவற்றின் உயர்வுச் சிறப்புக்கு ஏற்ப அவற்றை வரிசைப்படுத்தி அமைத்திருக்கிறது. உண்மையான மாற்றம் என்பது கீழிருந்து மேலாக செங்குத்தாக இருக்க வேண்டும். ஒரு பக்கம் இருந்து மறு பக்கம் போகின்ற பக்கவாட்டான மாற்றம் அன்று அது. அதாவது, உண்மையான இறைவனைப் பற்றிய கருத்தில் தாழ்வான நிலையிலிருந்து உயர்வான கருத்து நிலைக்கு வளர்கின்ற நிலைமாற்றமே உண்மையான மாற்றம். பண்படாத இறை வழிபாட்டு முறையிலிருந்து இறைவனைப் பற்றி மிக உயர்வான முறையில் சிந்திக்கும் அளவுக்கு வளர்வதே ஆன்மீக வளர்ச்சியாகும்.

இந்து மத தத்துவத்தின் சிறப்பு அழகு, உயர்வு இவையாவும் அது எத்தகைய கருத்துக்களையும் ஏற்றுக் கொள்ளும் தன்மையில் அடங்கியுள்ளன. இப்படிச் சொல்வதால் அது ஒரு பொதுவான லட்சியமற்றதும் ஏதோ முறையற்ற வகையில் ஒன்று சேர்க்கப்பட்ட பல கோட்பாடுகளைக் கொண்டதுமான ஒரு கதம்பத் தத்துவம் என்று எண்ணக் கூடாது. இந்து மதத்தின் சரித்திரத்தில் ஏற்பட்ட குழப்பங்களுக்கிடையிற் கூட இந்து மதம் இந்நாள் வரை நிலைத்திருக்கிறது. அது எவ்வித வீழ்ச்சியும் அடையவில்லை என்ற உண்மையே அதன் கிளைகள் யாவற்றையும் ஒன்று சேர்க்கக்கூடிய ஏதோ ஓர் உயிர்த்தன்மை அதனுள் நிலவுகிறது என்பதை நிரூபித்துக் காட்டுகிறது. ஏனைய மதங்களில் ஏற்படுவது போன்று காலப்போக்கில் சில வேண்டாத சுமைகளும் அவசியமில்லாத சடங்குகளும் இந்து சமயத்தில் வந்து சேர்ந்து விடுவதுண்டு. அத்தகைய காலகட்டங்களில் ஒரு அவதார புருஷரோ அல்லது இறையருள் பெற்ற மகானோ தோன்றி மக்களை சரியான முறையில் நெறிப்படுத்துவார்கள்.

"யதா யதா ஹிதர்மஸ்ய க்லானிர்பவதி பாரத
அப்யுத்தான மதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம்
பாரதா" எப்பொழுதெல்லாம் அறம் அழிந்து மறம்

மேலெழுகிறதோ அப்பொழுதெல்லாம் என்னை நான் பிறப்பித்துக் கொள்கிறேன் என்று கீதையில் ஸ்ரீகிருஷ்ணர் கூறுகிறார்.

## இறைதத்துவம்

இந்து மதத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று எல்லாப் பொருள்களுக்கும் ஆதாரமும் மூலமுமாய் அமைந்த எங்கும் நிறைந்த எல்லாம் கடந்த பரம்பொருள் ஒன்று மூல உட்பொருளாய் இருக்கிறது என்பதாகும். இதனையே கடவுள்–ஈஸ்வரன் என்று மக்கள் பொதுவாக குறிப்பிடுவார்கள். ஞானிகள் இதனை குணங்குறிகளையும், நாமரூபங்களையும் கடந்த பிரம்மம் (பரம்பொருள்) எனக் கூறுவார்கள். கடவுள் என்று சொல்லப்படும் இந்த உட்பொருளானது பிரபஞ்சத்தின் முழுக் காரணப் பொருளும் ஒரே காரணப் பொருளாய் இருக்கிறது. இப்பிரபஞ்சமானது இறைவனிடமிருந்து தோன்றுகிறது. இறுதியில் இறைவனிடமே நிலைத்திருக்கிறது. இறுதியில் இறைவனிடமே ஒடுங்கிறது. இறைவன் வெறுமையிலிருந்து இவ்வுலகைப் படைக்கவில்லை. அவனுக்குப் புறம்பான எந்தப் பொருளிலிருந்தும் இதைத் தோற்றுவிக்கவும் இல்லை. இறைவனை ஆண்பாலாய் வழங்குவது ஒரு மரபாகிவிட்டது. ஆனால் "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே" என்று பக்திமார்க்கங்கள் பரம்பொருளை அழைக்கின்றன. பரம்பொருளை எந்த உறவு முலமும் வழிபடலாம் என்கிறது இந்து மதம். உபநிடதங்கள் பரம்பொருளை 'அது'என்றே குறிப்பிடுகிறது. ஸ்வேதாஸ்வரத உபநிடதத்தில் ஓர் அழகான பகுதி இறைவனைப் பின்வருமாறு விளக்குகின்றது. "நீயே பெண், நீயே ஆண்; நம்பி நீ; கையில் ஊன்று கோலுடன் தடுமாறும் கிழவன் நீ; பிறந்துள்ள குழந்தை நீ; நீ எல்லாத் திக்குகளையும் பார்த்த வண்ணம் நிற்கிறாய்."

நாம் பார்க்கின்ற வடிவங்களெல்லாம் கடவுள் எடுக்கின்ற வடிவங்களே. கடோபநிடதத்தில் இக்கருத்தை விளக்கும் சுலோகம் ஒன்று இடம் பெற்றுள்ளது. "ஒரே நெருப்பு அல்லது ஒரே காற்றானது, பல்வேறு வடிவங்களிலும் அளவிலும் காணப்படுகிறது போல் எத்தனை வடிவங்கள் எடுத்தாலும் அவ்வடிவங்களால் முடிவு பெறாது". கடவுளை எல்லாப் பொருள்களிலும் காண்பது சிரமமான காரியம். பரமாத்மாவை எல்லாப் பொருள்களிலும் காண்பது என்பது உயர்ந்த ஆன்மீக அனுபவம். எனவே, எவ்வெப் பொருள்களிலெல்லாம் வீரமும் புனிதமும் தெய்வீகமும் நேர்மையும் உள்ளனவோ அவற்றிலெல்லாம் இறைவனது அம்சத்தைக் காணுமாறு சொல்லப்படுகின்றது. இதுவே ஆன்மீக லட்சியத்தை இயல்பாக அடைய ஒரு வழியாகும். பகவத் கீதையில் பத்தாவது அத்தியாயத்தில் இதனை விளக்கும் வகையில் ஸ்ரீகிருஷ்ணர் தம்மை சிறந்த ஒவ்வொரு பொருளோடும் இணைத்துக் கொள்கிறார் – மலைகளுள் இமயத்தோடும், நதிகளுள் கங்கையோடும், பாண்டவர்களுள் அர்ச்சுனனோடும் தன்னை இணைத்துப் பேசுகிறார். ஆதித்தியர்களுள் விஷ்ணு, ஒளிர்பவைகளுள் சூரியன், நட்சத்திரங்களுள் சந்திரன், ருத்திரர்களுள் சங்கரன், சேனைத் தலைவர்களுள் முருகன், நீர் நிலைகளுள் கடல் , இவ்வாறு ஸ்ரீகிருஷ்ண பகவான் தம்மை உயர்ந்தவைகள், உன்னதனமான அனைத்துடனும் தன்னை இணைத்துக் கொள்கிறார். ஓர் இந்து இறைவனை பல பெயரிட்டு வழிபடும்போதும் அல்லது பல விக்கிரகங்களை வழிபடும் போதும் அவன் அவைகள் மூலம் உண்மையில் எல்லாம் வல்ல பரம்பொருளையே வழிபடுகிறான். இந்து மதம் இறைவனுக்கு மாற்றமில்லாத நிலையான ஒரு குறிப்பிட்ட வடிவத்தையோ, அல்லது பெயரையோ வழங்குவது என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவேதான் இந்து சமயத்தில் நாம் கடவுளின் பல வடிவங்களையும், பல பெயர்களையும் காண்கிறோம். எல்லா இந்துக்களும் கடவுளை எந்த வடிவத்தில், என்ன பெயரில் வணங்கினாலும், அது ஒரே பரம்பொருளான கடவுளையே வணங்குகிறோம் என்ற உண்மையை உணர்ந்தே செய்கிறார்கள்.

## சமயத் திருநூல்கள்

இந்துக்களின் இலக்கியங்கள் பெரும்பாலும் சமயச்சார்புடையனவாகவே அமைந்துள்ளன. அனைத்தையும் சமயக்கருத்துட்பட நோக்குதலே வாழ்வின் எல்லா செயல்களிலும் மேலோங்கி விளங்குகிறது. சமய உண்மைகளை அறிந்து கொள்வதற்காக ஆற்றல்கள் அனைத்தையும் ஒன்று திரட்டி உபயோகித்த ஒரே இனம் இந்துக்களே ஆகும் என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார்.

## வேதங்கள்

இந்துக்களின் சமயத்திற்கு ஆதாரமாய் அமைந்த சமயத் திருநூல்கள் வேதங்களே. வேதங்களைச் சுருதி என்றும் அழைப்பர். ஏனைய சமயத் திருநூல்கள் யாவும் பொதுவாக 'ஸ்மிருதி' என்னும் பெயரால் வழங்கப்படுகின்றன. சுருதி என்பதற்கு காதால் கேட்கப்படுவது என்றும் ஸ்மிருதி என்பதற்கு நினைவிற் கொள்ளப்படுவது என்றும், பொருள் கொள்வர். சுருதி இறைவனால் வெளிப்படுத்தப்பட்டது. ஸ்மிருதி வழிவழியாக வரும் மரபைச் சேர்ந்தது. இவை இரண்டினுள் சுருதி முதன்மையானது. ஏனெனில், அது நேரடியான இறையனுபவத்தின் மூலம் கிடைத்தது. ஆனால், ஸ்மிருதி இரண்டாந்தரமானது. காரணம், அது அனுபவத்தை நினைத்துச் செய்யப்பட்டது.

இந்துக்கள் சுருதி என்னும் வேதங்கள் மனித சிந்தனையினால் எழுதப்பட்டவை அல்ல என்று நம்புகிறார்கள். வேதங்கள் என்றும் நிலைத்திருப்பவை (நித்தியம்); தனிமனிதச் சார்பற்றவை (அபௌருஷேயம்). அவை இறைவனின் மூச்சு. இங்கு 'ரிஷி' என்ற சொல் பொருள் பொதிந்த சொல்லாகும். இச்சொல் "பார்" என்னும் பொருள் கொண்ட 'திருஷ்' என்ற வடமொழிச் சொல்லிருந்து தோன்றியது. இதன் பொருள் 'காண்பவன்' என்பதாகும். ரிஷிகள் ஆன்மீக உண்மைகளைக் கண்டு கேட்டு உணர்பவர்கள். ஆகவே வேத உண்மைகள் ரிஷிகளால் காணப்பட்டவைகளாகும். இந்து மதம் எந்த ஒரு தனிப்பட்ட சமய குரவராலும் தொடங்கப்பட்டதன்று. நியூட்டன் ஈர்க்கும் சக்தி பற்றிய விதியினை எப்படிப் படைக்கவில்லையோ, அப்படி வேதத்தையும் ஞானி படைக்கவில்லை. வேத உண்மைகள் யாவும் கண்டு கொள்ளப்பட்டவைகளே தவிர, உண்டாக்கப்பட்டவை அல்ல. 'வேதம்' என்ற சொல்லுக்கு அறிவு அல்லது ஞானம் என்பது பொருள்.

## வேதங்களின் பிரிவு

வேதங்கள் நான்கு. அவை இருக்கு வேதம், யசுர் வேதம், சாமவேதம், அதர்வ வேதம் என்பன. ஒவ்வொரு வேதமும் நான்கு பகுதிகளையுடையது. அந்நான்கு பகுதிகள் மந்திரங்கள், பிராமணங்கள், ஆரண்யங்கள், உபநிடதங்கள் என்பவை ஆகும். மந்திரங்கள் என்பவை வேதத்தில் கூறப்பட்டுள்ள தெய்வங்களுக்கென்று அமைக்கப்பட்ட துதிப்பாடல்கள். இம்மையிலும் மறுமையிலும் சுபிட்சம் பெறுவதற்கென்று தெய்வங்களிடம் செய்யப்படும் பிரார்த்தனைகள் அவை. பிராமணங்கள் என்பவை யாகங்களைச் செய்வதற்கு அனுஷ்டிக்க வேண்டிய சடங்குகள் பற்றிக் கூறும் உதவி நூல்கள். யாகங்களைச் செய்தலே தெய்வங்களைத் திருப்தி செய்யக் கூடிய சிறந்த வழி என்று கருதப்பட்டது. ஆரண்யங்கள் அல்லது 'வனநூல்கள்' மதச் சடங்குகள் பற்றிய தத்துவ விளக்கங்களைத் தொடர் கதைகளாகச் சொல்கின்றன. வேதத்தின் இறதிப் பகுதியான உபநிடதங்கள் தத்துவ ஆராய்ச்சிகள் ஆகும். இப்பகுதி வேதாந்தம் என்றும் கூறப்படும். மிக ஆழமான ஆன்மீக உண்மைகளை விளக்கும் பகுதிகளாக இவைகள் அமைந்துள்ளன. இவைகளே உண்மையில் இந்து மதத்திற்கு அடிப்படையானவைகளாகும்.

உபநிடதங்கள் கூறும் உன்னதமான சிந்தனைகளைக் கண்டு மேல்நாட்டு அறிஞர்களும் வியந்து பாராட்டுகிறார்கள். உபநிடதம் என்ற பெயர் தாங்கிய நூல்கள் பல உள்ளன. அவற்றுள் பன்னிரெண்டு சிறப்பானவைகளாகும். அவை, ஈசோபநிடதம், கேனோபநிடதம், கடோபநிட்தம், பிரச்சினோபநிடதம், முண்டகோபநிடதம், மாண்டுக்கியோபநிடதம், தைத்திரியோபநிடதம், சாந்தோக்யோப நிடதம், பிரகதாரண்யக உபநிடதம், கௌசீடகி உபநிடதம், ஸ்வேதேஸ்வதர உபநிடதம் என்பவையாகும்.

வேதத்தில் அடங்கியுள்ளவற்றை வேறு ஒரு வகையாகவும் பிரிக்கலாம்.

1. கர்மகாண்டங்கள் அல்லது மத ஆசாரங்கள் பற்றிய பகுதி, 2. உபாசனைக் காண்டம் அல்லது தியானத்திற்குரிய பகுதி, 3. ஞான காண்டம் அல்லது அறிவு பூர்வமான ஆராய்ச்சிப் பகுதி. மந்திரங்களும் பிராமணங்களும் கர்மகாண்டத்தைச் சேர்ந்தவை. ஆரண்யங்கள் உபாசனைக் காண்டத்தைச் சேர்ந்தவை. உபநிடதங்கள் ஞானகாண்டத்தைச் சேர்ந்தவை.

## ஸ்மிருதிகள்

சுருதிக்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் வாய்ந்தவைகள் ஸ்மிருதிகளாகும். இவை பெரும்பாலும் கருமத்தைப் பற்றிக் கூறும். 'ஸ்மிருதி' என்னும் சொல் கடமைகளைப் பற்றியும் தத்துவங்களைப் பற்றியும் அமைந்த பலதரப்பட்ட நூல்களைக் குறிக்கும் விசாலமான பொருள் கொண்ட சொல். ஸ்மிருதிகள் என்று குறிப்பிட்டுப் பேசப்படும் நூல்கள் தவிர இதிகாசங்கள், புராணங்கள், ஆகமங்கள், தரிசன இலக்கியம் மற்றும் சிறந்த மொழியில் எழுதப்பட்ட மூல நூல்களும், பாடல்களும் ஸ்மிருதியில் அடங்கியுள்ளன. இவை எல்லாவற்றையும் ஸ்மிருதிகள் என்று வழங்கலாம். காரணம், இவை அத்தனையும் வேதத்தையே மூல ஆதாரமாகக் கொள்வதோடு வேதங்களிலிருந்தே ஆக்கத்தையும் ஊக்கத்தையும் பெறுகின்றன. ஸ்மிருதி என்று அழைக்கப்படும் நூல்கள் விதி நூல்கள் என்னும் தர்ம சாஸ்திரங்களாகும். தனி மனிதர்களுக்கும், சமூகங்களுக்கும் அன்றாட வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளையும், அறநெறிகளையும் கூறுவதோடு, வேதத்தின் என்றுமுள்ள உண்மைகளை காலத்திற்கேற்பவும், சூழ்நிலை மாற்றத்திற்கேற்பவும் எடுத்துக் கூறுவதும், ஸ்மிருதிகளின் தலையாய நோக்கமாகும். தூய ஆன்மீக நெறியைப் பாதுகாத்து இந்து சமயத்தை முன்னேற்றுவது ஸ்மிருதிகளின் சிறப்பான அம்சமாகும்.

## இதிகாசங்கள்

'இதிகாசங்கள்' என்றால் பெரிய வீரகாவியங்களான இராமாயணத்தையும் மகாபாரதத்தையும் குறிக்கும். 'இதிகாசம்' என்றால் 'இவ்வாறு நடந்தது' என்று அர்த்தமாகும்.

ஸ்மிருதிகளில் சொல்லப்பட்ட விதிகளை வாழ்வில் கடைப்பிடித்த வீரப் பெருமக்களின் வீரதீரச் செயல்களைக் கூறும் காவியங்களே இதிகாசங்களாகும். விதிகள் வெறும் வெற்று விதிகளாய் இருப்பின் சாதாரண மக்களுக்கு விளங்காது. மக்களை நல்வழிப்படுத்துதற்கென்று ஏற்பட்ட விதிகளின் உயர்வைப் புரிந்து கொள்ள வேண்டுமென்பதே இம்மகா புருஷர்களின் கதைகளைப் படிப்பதில் மறைந்து நிற்கும் நோக்கம் ஆகும். வால்மீகி ராமாயணம் இலட்சிய புருஷனாகிய இராமனது சரிதையைச் சொல்கிறது. வியாசர் எழுதிய மகாபாரதம் அரும்பெரும் மனித அறநெறிகளை எடுத்துக் கூறுகிறது. நல்லொழுக்கம் மற்றும் தத்துவம் பற்றிய விதிகளைச் சொல்லும் உரையாடல்கள், உவமைகள் ஆகியவை மகாபாரதத்தில் நிறைய வருகின்றன. அத்தகைய உரையாடல்களுள் ஒன்றுதான் புகழ்பெற்ற பகவத்கீதை எனப்படுவது. ஒரு சுலோகம், உபநிடதங்களைப் பசுக்களுக்கும், ஸ்ரீகிருஷ்ண பகவானை பசுக்களை மேய்ப்பவனுக்கும், அர்ச்சுனனை பசுவின் கன்றுக்கும், கீதையைப் பாலுக்கும், அறிஞர்களை அப்பாலினைப் பருகுவோருக்கும் ஒப்பிட்டுப் பேசுகிறது.

### புராணங்கள்

புராணங்களும் இதிகாசங்களின் வகைகளைச் சேர்ந்தவைகளே. இவை இரண்டையும் ஐந்தாவது வேதமாகப் போற்றுவார்கள். நாட்டில் நிகழ்ந்த பெரிய நிகழ்ச்சிகள், பழங்கதைகள், பரம்பரைக் கதைகள் இவற்றின் மூலமாகச் சமய உணர்வைப் பரவச் செய்வது புராணங்களின் நோக்கமாகும். புராணங்கள் இன்றும் பொதுமக்கள் மத்தியில் பிரபலம் பெற்றுள்ளன. மரபின்படி பதினெட்டு புராணங்களும், பல உப புராணங்களும் உள்ளன பிரமபுரானம், பதுமபுராணம், விஷ்ணுபுராணம், மார்க்கண்டேய புராணம், அக்கினி புராணம், பவிஷ்ய புராணம், பிரமவைவர்த்த புராணம், இலிங்க புராணம், வராக புராணம், கந்தபுராணம், வாமனபுராணம், கூர்மபுராணம், மச்சபுராணம், கருடபுராணம், பிரமாண்டபுராணம் என்பவை முக்கிய புராணங்களாகும். இவற்றுட் மிகப் புகழ்பெற்றது பாகவத புராணமாகும். விஷ்ணு பகவானின் பல அவதாரங்கள் பற்றிய செய்திகளை இது முறைப்படுத்திக் கூறுகிறது.

### ஆகமங்கள்

ஆகமங்கள் வழிபாட்டு முறைகள் பற்றியும் சமயக் கொள்கைகள் பற்றியும் விளக்கும் நூல்களாகும். இந்து மதத்தின் முப்பெரும் பிரிவுகளாகிய சைவம், சாக்தம், வைஷ்ணவம் ஆகியவைகள் தம் கோட்பாடுகளையும் வழிபாட்டு முறைகளையும் விளக்கும் ஆகமங்களைக் கொண்டுள்ளன. சைவசமயம் இருபத்தெட்டு ஆகமங்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் மிக முக்கியமானது காமிகாகமம். சக்தி வழிபாட்டு முறைகள் தந்திரங்கள் என்று வழங்கப்படுகின்றன. இருபத்தேழு ஆகமங்கள் உள்ளன. வைஷ்ணவர்களுடைய ஆகமங்கள் பாஞ்சராத்திரம் எனப்படும். சைவர்கள், சாக்தர்கள் மற்றும் வைஷ்ணவர்களும் தங்கள் ஆகமங்கள் இறைவனால் அருளப்பட்டவைகளாகவே மதித்துப் போற்றுகிறார்கள்.

### தரிசன இலக்கியம்

ஆகமங்கள் சமயக் கொள்கைகளை விளக்கும் நூல்கள் என்றால், தரிசன இலக்கியம் தத்துவங்களை விளக்குவனவாகும். தரிசனம் என்பதன் பொருள் 'பார்வை' அல்லது மனக்காட்சி என்பதாகும். ஆறு தரிசனங்களாவன 1. நியாயம், 2. வைசேடிகம், 3. சாங்கியம், 4. யோகம், 5. மீமாம்ஸை, 6. வேதாந்தம். இவ் ஆறு தரிசனங்களில் தத்துவங்களும், கொள்கைகளும் முறைப்படுத்தப்பட்டு சிறு சிறு சூத்திரங்களாக அமைத்துள்ளன. இச்சூத்திரங்களை அமைத்தவர்களை சூத்திரகாரர் என்பார்கள். கௌதமர் என்பவர் நியாயத்தத்துவங்களை முறைப்படுத்தி அமைத்தார். வைசேடிக சூத்திரங்களை அமைத்தவர் கன்னடர் என்பவர். கபிலர் சாங்கியத்தை முறைப்படுத்தியவர். யோகமுறையை முறைப்படுத்தியவர் பதஞ்சலி முனிவராவர். அவருடைய யோகசூத்திரமே யோக முறையின் மூல நூல் ஆகும். வேதத்தின் சமயச் சடங்குகள் பற்றிய பகுதியை அடிப்படையாகக் கொண்ட மீமாம்ஸை என்ற தர்சனத்தின் சூத்திரங்களை எழுதியவர் ஜைமினி என்பவர். உபநிடதங்களின் போதனைகள் யாவும் வாதராயனார் என்பவரால் வேதாந்த சூத்திரங்களில் தொகுக்கப்பட்டுள்ளன. இச் சூத்திரங்களை ஆதாரமாகக் கொண்டே வேதாந்த தத்துவக் கோட்பாட்டுக் கிளைகள் அமைக்கப்பட்டுள்ளன.

### மக்கள் இலக்கியம்

பாமர மக்கள் சமய உண்மைகளைப் புரிந்து கொள்ளத் தக்க வகையில் அவர்களின் மொழியில் ஏராளமான பக்தி இலக்கியங்கள் உருவாகியுள்ளன. தென்னகத்தில் ஆழ்வார்கள், நாயன்மார்களின் பிரபந்தங்கள், திருமுறைகள், மகாராஷ்டிர சமயப் பெரியார்களின் அபங்கங்களும், சைதன்னியரின் பக்தி இயக்கத்தின் நாம சங்கீர்த்தனமும், கபீர், மீராபாய் இன்னும் பல பக்தப் பெருமக்களின் பக்திச்சுவை ததும்பும் பாடல்கள் அனைத்தும் பிராந்திய மொழிகளில் உருவாக்கப்பட்ட பக்தி இலக்கியங்களாகும். இவ்விலக்கியங்களையும் 'வேதம்' என்றே அழைக்கலாம். காரணம், வேதங்கள், அனேகம், முடிவற்றவை (அனந்தா வை வேதா;) என்று வேதங்களே கூறுகின்றன.

# கொக்கட்டிச்சோலை தான்தோன்றி லிங்கமும் லிங்க வழிபாடும்

மா. செல்வராஜா B, Ed (Hons)
M.Ed, M.Phil. (Cey) M.Ed. (mgt & Admin) (UK) SLEAS, PGDEM
பணிப்பாளர், கல்வி முகாமைத்துவ அபிவிருத்தித்துறை தேசிய கல்வி நிறுவகம் மகரகம

சிவபூமி என வழங்கப்படும் ஈழத்திரு நாட்டில் அமைந்துள்ள புராதன சிவாலயங்களில் கொக்கட்டிச் சோலைத் தான்தோன்றீச்சரமும் ஒன்று. கிழக்கிலங்கையில் திருப்படைக் கோயில்கள் அல்லது தேசத்துக் கோயில்கள் என வழங்கப்படும் கோயில்களில் இது முதன்மையானது. மட்டக்களப்புப் பட்டினத்திலிருந்து தெற்கே 5 மைல்களுக்கப்பால் மண்முனையூடாக 3 மைல்கள் மேற்கே சென்றால் மருதநிலமும், சோலையும் மருவப் பெற்ற கொக்கட்டிச் சோலை எனும் பழம்பெரும் பதியை அடையலாம். இத்திருத்தலத்தில் இறைவன் ஆன்மாக்கள் மேலுள்ள கருணையால் சுயம்பு லிங்கமாகத் தோன்றி அருள் பாலித்து வருகின்றார். மட்டக்களப்புத் தமிழகத்திலுள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரே ஒரு சிவன் கோயில் இதுவே. பலநூற்றாண்டுகளாக இவ்வாலயத்தில் நித்திய, நைமித்திய பூசைகள் கிரமமாக நடைபெற்று வருகின்றமை இவ்வாலயத்திலுள்ள சிறப்புக்களில் ஒன்று. இந்நாட்டைக் கைப்பற்றி ஆட்சி செய்த மேலைநாட்டினர்களான போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகியோரால் சிதைக்கப்படாமலும், வழிபாடுகள் தடைப்படாமலும் நடைபெற்று வருவதை இங்கு காணலாம். கிழக்கிழங்கையில் தேரோடும் திருத்தலம் இதுவொன்றே. காலத்திற்குக் காலம் அரசர்களும், வன்னியங்களும் இவ்வாலயத்திற்குத் திருத்தொண்டுகள் செய்து வந்துள்ளதுடன் மானியங்களையும் வழங்கியுள்ளனர். இவ்வாலயத்தில் இடம் பெறும் பூசைகள், திருவிழாக்கள் என்பன வீரசைவ பாரம்பரியத்தைச் சார்ந்தவை[1]. இங்கு பூசைகளை மேற்கொண்டு வருபவர்களும் வீரசைவ மரபிலான சங்கமக் குருமார்களேயாவர். இத்திருத்தலத்தில் தோன்றி அருள்பாலிக்கும் சிவனைத் தான்தோன்றிலிங்கம், தான்தோன்றியப்பர், தான்தோன்றீஸ்வரர் எனும் நாமங்களால் மக்கள் அழைப்பர்.

## சிவலிங்கமும் வழிபாட்டின் பரவலும்

சிவம் என்பது மங்களத்தையும், லிங்கம் என்பது அடையாளத்தையும் குறிக்கும் என்பர். ஆகவே சிவலிங்கம் என்பது உலக நாயகனாகிய சிவனைக்குறிக்கும். சிவமே அனைத்தின் தோற்றம் ஒடுக்கம் என்பனவற்றுக்குக் காரணமாக உள்ளது[2]. சைவ வழிபாட்டில் லிங்கத்திற்குப் பிரதான இடமுண்டு. பாரத நாட்டிலும், இலங்கையிலும் சிவனுக்குக் கோயில் அமைந்துள்ள இடங்களில் எல்லாம் லிங்கம் பிரதானமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளது. இலங்கையில் நான்கு திசையிலும் சிவன் கோயில்கள் உள. அது போன்று இந்தியாவின் தென்கோடியாகிய கன்னியா குமரி தொட்டு, காஷ்மீரம் வரையும் லிங்க வழிபாடு பரவியுள்ளது. வட நாட்டில் வழிபாடு இடம் பெறும் இடங்களிலெல்லாம் சைவர் லிங்கத்தை மட்டுமே வழிபடுகின்றனர். சிவனின் பல்வேறு மூர்த்தங்களை வழிபடுதல் அங்கு குறைவாகவே காணப்படுகின்றது. தென்னாட்டிலும், இலங்கையிலும் சிவனின் பல்வேறு மூர்த்தங்களை வழிபடும் வழக்கம் இருப்பினும், லிங்கத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இவை லிங்கவழிபாட்டின் தனிச் சிறப்பையும், அதற்குள்ள முக்கியத்துவத்தையும் சுட்டிக் காட்டுகின்றன.[3]

## சிவலிங்க தத்துவம்

லிங்கத்திருவுருவம் எதைக் குறிக்கின்றது? லிங்க வழிபாட்டின் தத்துவம் யாது? என்பன போன்ற கேள்விகளுக்குப் பலர் பலவாறாக விளக்கம் கூறியுள்ளார்கள். சிவனுக்கென அமைந்துள்ள திருமேனிகள் மூன்று எனக் கூறப்படும். ஒன்று அருவத்திருமேனி. இதனை ஊனக் கண்கொண்டு பார்க்க முடியாதென்றும், யோகியர்களது அகக் கண்களுக்கு மட்டுமே எட்டுவது எனவும் கூறப்படும்.

மற்றையது உறுப்புக்களையுடைய உருவத்திருமேனி. மூன்றாவது உருவமும் அருவமும் கலந்த தனி நிலையில் உள்ள புது உருவம். இது உருவத்திற்குத் தேவையான கைகால் முதலிய உறுப்புக்கள் இல்லாமையால் அருவமாகியும் கண்ணால் பார்க்கும் போதும், கையால் தொடும் போதும் உணரமுடிவதால் உருவமாகியும் உள்ள இரு நிலைகளைக் கொண்ட அருவுருவம் சிவனுக்கு மட்டுமே சிறப்பாயமைந்தது. சிவனுக்கெனச் சிறப்பாக அமைந்துள்ளதால் சிவலிங்கம் எனப்படுகின்றது.

உபநிடதங்கள் இறைவன் பெருமையைப் பலவாறு எடுத்தோதுகின்றன. அவன் மக்களது சிற்றறிவுக்கு எட்டாதவன் என்றும், அவர்களது இந்திரியங்களுக்கு அவனைக் கிரகிக்கும் ஆற்றல் இல்லை என்றும் சுவேதாசுவதார உபநிடதம் குறிப்பிடுகின்றது.

> ந சந்த்ருஷேதிஷ்தி ரூபம் அஸ்ய, ந ச சூக்ஷா
> பஸ்யதி கஸ்சனைனம் |
> ஹ்ருதா ஹ்ருதிஸ்தம் மனசாய ஏனம்
> ஏவம் விதுர் அம்ருதாஸ்தே பவந்தி ||

எனவே கையால் தொடமுடியாதவனும், கண்ணால் பார்க்க முடியாதவனுமாகிய இறைவனை வாழ்த்தி வணங்கும் பொழுதும், நினைக்கும் பொழுதும் அவனைக் கிரகிக்க முற்படுவோருக்கு லிங்கம் சிவனைக் குறிக்கும் அடையாளமாக விளங்குகின்றது.

### யாகத்தீயும் லிங்கமும்

வேதகாலவழிபாடு யாகத்தீயினை மையமாகக் கொண்டும் இடம் பெற்றது. தெய்வங்கள் அனைத்திற்கும் யாகாக்கினியில் அவிசொரிந்து வழிபாடு மேற்கொள்ளப்பட்டது. அக்கினி மூலமாகவே தேவர்களை வழிபடுவது வேதகால மரபு. வேதகால வழிபாட்டிற்கு அக்கினி இன்றியமையாத தொன்றாக விளங்கியது. இந்த யாகாக்கினி குளிர்ந்து இறுகித் திரண்டு உருவங் கொண்டதையே லிங்கம் குறிப்பிடுகின்றது. தீ குளிரும் போது கருமை நிறத்தைக் கொள்ளும். இவ்வாறு யாகாக்கினி கொண்ட நிலையையே லிங்கம் என அழைக்கப்பட்டது.

மேலும் பிரமனும், விஷ்ணுவும் அடிமுடிதேடும் வண்ணம் இறைவன் ஒளி வீசும் தீப்பிளம்பாய்த் தோன்றிய நிலையினை நினைவூட்டுவது லிங்கம். தேவர்கள் வேண்டிக் கொண்டதற்கு ஏற்ப இறைவன் தீப்பிழம்பு வடிவம் நீங்கி லிங்க வடிவாயினன் எனச் சமய நூல்கள் கூறும்.[5]

### நாயன்மார்களும் இறைவனது தீப்பிழம்பு வடிவமும்

நாயன் மார்கள் சிவனைத் தீப்பிழம்பு வடிவினன் எனத் தம்பக்திப் பாடல்களில் கூறியுள்ளனர். திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் சிவனைப் பொங்கு அழல் உருவன் எனக் குறிப்பிடுவதை பின்வரும் தேவாரப்பாடலில் காணலாம்.

*"மங்கையர்க்கரசி வளவர்கோன்பாவை*
*வரிவளைக் கைமடமானி*
*பங்கயச் செல்வி பாண்டி மாதேவி*
*பணிசெய்து நாடொறும் பரவப்*
*பொங்கு அழல் உருவன் பூதநாயகனால்*
*வேதமும் பொருள்களும் அருளி*
*அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த*
*ஆலவாயாவது மிதுவே"*

இவ்வாறே திரு நாவுக்கரசு நாயனார் தீயை இறைவனது உருவம் என்பதை

*"எரிபெருக்குவர் அவ்வெரி ஈசனது*
*உருவருக்கமாவது உணர்கிலர்"*

எனும் தேவார அடிகளில் குறிப்பிடுவார்.

சுந்தரமூர்த்தி நாயனார் இறைவன் தீயுருவமாய் உள்ளதை

"காற்றுத் தீப்புனலாகி நின்றானைக்
கடவுளைக் கொடுமால் விடையானை
நீற்றுத் தீயுருவாய் நிமிர்ந்தானை"

எனவரும் தேவார அடிகளில் குறிப்பிடுகின்றார்.

மணிக்கவாசகப் பெருமான் "சுடர் கின்ற கோலந்தீயென மன்னும்" என இறைவனது தீவடிவைக் குறிப்பிடுகின்றார். இவைகளிலிருந்து தீப்பிழம்பே எல்லாம் வல்ல சிவனை அறிந்து வழிபடுவதற்குச் சிறந்த லிங்கம் அல்லது அடையாளம் என உணரலாம். தீப்பிழம்பே இறைவனைக் காட்டும் உண்மை அடையாளமாக இருப்பதாலேயே தீப்பிழம்பு சிவலிங்கம் எனப்பட்டது. இதன் காரணமாகவே உலகம் எங்கும் உள்ள சகல வகையான மக்கட் கூட்டத்தாரும் பண்டு தொட்டே இத்தீப்பிழம்பினையும், இத்தீப்பிழம்பினையொப்ப நீண்டு குவிந்த கல்வடிவினையும் இறைவன்தன் உண்மை அடையாளமாக ஆங்காங்கு நிறுவி வழிபட்டுவருவாராயினர்.

### சிவலிங்கமும் பரவெளியும்

சிவம் என்பது மங்கலப் பொருள் என்பதும், அதன்வடிவம் பரவெளியென்பதுமாகக் கூறப்படும் தத்துவமும் ஒன்றுண்டு. எல்லாப் பொருள்களுடனும் சேர்ந்தும், அவற்றினின்றும் பிரிந்தும் அப்பொருட்களில் பற்றின்றியும் இருக்கும் பொருளானது அண்டவெளியாய் இருக்க வேண்டுமேயன்றி உருவமாகவும், அருவமாகவும் இருக்க முடியாது. இது ஆகாயம் போன்றது. ஆகாயம் மண்முதலிய நான்கு பூதங்களுடன் சேர்ந்தும், பிரிந்தும் பற்று இல்லாதும் நிற்கும். எனவே சிவத்தின் வடிவம், பரவெளியாகும் என்பது பெரியோர் முடிவாகும். ஆகாயம் என்பது பூதவெளி. அது ஓர் அறிவற்ற சடம். ஆனால் சிவம் பரவெளி. அது அறிவுள்ள சித்து. ஆகையால் பூதவெளி பரவெளியன்று. பரவெளி அறிவுள்ளதாயிருப்பதால் "சிதாகாயம்" எனவும் "ஞானாகாயம்" எனவும் கூறப்படும்.

*"பூதங்களல்ல பொறியல்ல வேறு புலனல்லவுள்ள மதியின்*
*பேதங்களல்ல விவையின்றி நின்றபிறிதல்ல வென்று பெரு நூல்*
*வேதங்கிடந்து தடுமாறும் வஞ்ச வெளியென்ப"*

எனவும்.

"சிற்பரவெளிக்குள் வளர்வதற்கான பரதேவதையை" எனவும் வரும் திருவாக்குகளால் அறியலாம். எனவே பரவெளியாகிய சிவப் பொருளை வழிபட்டு உய்வதற்கு அவருடைய தோற்றம் வேண்டும். தோன்றாத பொருளிடத்து வழிபாடு செல்லாது. எனவே உலக மக்கள் கடவுளை வழிபடுவதற்குப் பார்த்த மாத்திரத்தே பொதுவான அறிவுடையார்க்கு கடவுள் என்ற எண்ணமும், சிறப்பான அறிவுடையார்க்குப் பரவெளியாகிய "சிவம்" எனும் எண்ணமும் ஏற்படும் பொருட்டு அப்பரசிவமே சிவலிங்கமாகிய அருவுருவத் திருமேனியைக் கொண்டுள்ளார் எனப்பெரியோர் கூறுவர்.[6]

நாம் பூதவெளியாகிய ஆகாயத்தை உற்று நோக்கில் அது உயர்ந்தும், பரந்தும் காணப்படுதலை அவதானிக்கலாம். உயர்ந்த தோற்றம் 'அதீதம்' என்பதையும், அகன்ற தோற்றமானது எல்லாம் தன்னுள்ளும், தான் எல்லாவற்றுள்ளும் இருக்கின்ற நிலையையும் உணர்த்தும். இது போன்றே ஞானவெளியாகிய சிவப் பொருளும்

விளங்கும் என்பதை உணர்த்தவே அச்சிவப் பொருளின் திருமேனியாகிய சிவலிங்கம் உயர்ந்தும், வட்டமாக அகன்றும் அமைந்துள்ளது என்பர் பெரியோர். இக்கருத்தையே திருமூலர் பின்வரும் திருமந்திரச் செய்யுளில் குறிப்பிடுகின்றார்.

*"குரைக்கின்ற வாரிக் குவலய நீரும்*
*பரக்கின்ற காற்றும் பயில்கின்றதீயும்*
*நரைக்கின்ற வாறிவை நீண்டகன்றானை*
*வரைத்து வலஞ் செயுமாறறியேனே"*

எனவே சிவலிங்கம் அனைத்துமாய் நின்ற சிவப் பொருளையும், அச்சிவப் பொருளின் உண்மைச் சொரூபமாகிய பரவெளியையும் உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது என அறியலாம். மேலும் லிங்கம் எனும் சொல்" எல்லாம் தோன்றி மறையும் மூலம் " என்று பொருள்படும் லிங் – லயம்கம் தோன்றுதல் எனும் கருத்தைச் சுப்பிரபேதாகமம் கூறும்.[7]

## லிங்க வகைகளும் சுயம்பு லிங்கமும்

சமய நூல்கள் லிங்க வகைகளைப் பலவாறாகக் கூறுகின்றன. அவை பலவகையாக அமைக்கப்படுவனவாயும் தானே தோன்றுவனவாகவும் உள்ளன. நூல்கள் லிங்கங்களை இருபெரும் பிரிவுகளாகப் பிரித்துக் கூறும். அவை

சல லிங்கம்
அசல லிங்கம்

சல லிங்கங்கள் மண், கல், உலோகம், மரம் என்பனவற்றால் அமைக்கப்படுபவை. எவ்வாறு அமைக்க வேண்டும், எந்த எந்த வஸ்துக்களை உபயோகிக்க வேண்டும் என்ற விளக்கங்களை ஆகமங்கள் விபரிக்கின்றன.

அசலலிங்கம் தாவரலிங்கம் எனவும் அழைக்கப்படும். இவ்வினத்தைச் சார்ந்த லிங்கங்கள் ஒன்பது வகையின. அவை சுவாயம்புவம், தைவிகம், காணபத்தியம், அசுரம், சுரம், ஆர்ஷம், ராக்ஷசம், மானுசம், பாணம் என்பன. இவை அனைத்துள்ளும் சுயம்புலிங்கமே தலை சிறந்ததாகக் கொள்ளப்படும்.[8]

## சுயம்புலிங்கம்

இறைவன் ஆன்மாக்கள் மீதுள்ள கருணைகாரணமாகத் தானாகவே தோற்றமளிக்கும் நிலையையே சுயம்பு லிங்கம் குறிப்பிடுகின்றது. ஆன்மாக்களது ஈடேற்றத்திற்காக இறைவன் கொள்ளும் கருணைவடிவே சுயம்பு லிங்கம் எனக் கொள்ளப்படும். இதற்குத் தொடக்கம் இல்லை; அனாதியானது. அது கண்டறியப்பட்ட காலம் முதல் வழிபாடு இடம் பெற்றிருக்கின்றது. கொக்கட்டிச் சோலைத் தான்தோன்றி லிங்கத்தை ஒரு வேடன் கண்டறிந்தான் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலம் முதற் கொண்டே வழிபாடும் இடம் பெற்று வந்ததாக வரலாறு. ஆனால் அது எப்பொழுது தோற்றிற்று என்பது எவராலும் கூறமுடியாததொன்று அதற்குத் தொடக்கம் இல்லை.

இத்தகைய சுயம்பு லிங்கம் பல வகைப்பட்ட நிகழ்வுகளால் சிதைவுறினும் கூட பிரதிஷ்டை முதலிய கிரியைகள் இன்றியே மீண்டும் வழிபடத் தக்கபெருமை வாய்ந்தது. இந்தியாவில் அறுபத்தெட்டு இடங்களில் சுயம்புலிங்கங்கள் உள்ளன என அறியப்படுகின்றது. இலங்கையில் கொக்கட்டிச் சோலையிலும், முல்லைத்தீவில் ஒட்டு சுட்டான் எனும் இடத்திலும் சுயம்பு லிங்கங்கள் உள்ளன. சிவ பூமியாகிய இலங்கையில் உள்ள கேதீஸ்வரம், கோணேஸ்வரம், முன்னீஸ்வரம், நகுலேஸ்வரம் முதலிய புராதன சிவத்தலங்களுடன் சுயம்புலிங்கம் உள்ள இவ்விரு திருத்தலங்களும் சேர்ந்து இந்நாட்டிற்கு மேலும் புனிதத் தன்மையை கொடுக்கின்றன எனலாம். அந்நியர்களால் சிதைக்கப்படாமலும், அவர்களது தலையீடுகளால் வழிபாடுகள் தடைப்படாமலும், அழிவு செய்ய வந்த அந்நிய நாட்டார்க்கு அற்புதம் காட்டியும் விளங்கும் லிங்கம் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றி லிங்கமாகும்.

## சுயம்புலிங்கத்தின் மூலம் காசிவரை

தனிச் சிறப்பு மிக்க சுயம்புலிங்கம் ஒப்பற்ற கருணைக்கு உதாரணமாக விளங்குவது. பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் ராக பக்தி, மற்றும் சுயம்பு லிங்கம் பற்றி ஒரு நாள் பக்தர்களுக்கு உப தேசம் செய்து கொண்டிருந்தார். ராக பக்தி தானாகத் தோன்றுவது. அத்தகைய அன்புக்கும் பக்திக்கும் காரணம் இராது. அது சுயம்புலிங்கம் போன்றது. இவ்வாறு கூறும்போது "சுயம்புலிங்கத்தின் மூலம் காசி வரை காணப்படும்" என்றும் குறிப்பிடுகின்றார்.[9] காசி, இந்துக்கள் அனைவருக்கும் மிகவும் புனிதத்தலம். அங்கு விசுவநாதர் லிங்க வடிவமாக எழுந்தருளி ஆன்மாக்களைக் கடைத்தேற்றுகின்றார் என்பது இந்துக்களின் நம்பிக்கை. அத்தகைய பெருமை பெற்ற காசியுடன் இச் சுயம்பு லிங்கத்தலமும் தொடர்பு படுத்தப்படுவதை நோக்கும் போது அதன் பெருமையை நாம் உய்த்துணரலாம். இத்தொடர்பில் இத்தலம் 'ஈழத்துக் காசி' எனக் கருதப்படலாம்.

## சிவலிங்க வழிபாட்டின் மேன்மை

இறைவனை விக்கிரகத்தில் வழிபாடு செய்வதிலும் லிங்கத்தில் வழிபாடு செய்தல் மேலானதும், உயர்வானதுமாகும் என ஆகமங்கள் கூறும். மகா பாரதத்தில் இடம் பெறும் நிகழ்ச்சி யொன்றின் மூலமும் இதனை அறியலாம். பாரத யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது துரியோதனனது பக்கத்தில் நின்று போர் புரிந்த அசுவத்தாமன் அக்கினி அஸ்திரத்தை கிருஷ்ண, அர்ச்சுனர்கள் மீது பிரயோகித்தான். அது பாண்டவர்களது சேனையில் அழிவை ஏற்படுத்தியதாயினும் அவ்விருவருக்கும் தீங்கு செய்ய முடியாமல் போயிற்று. இதனால் மனமுடைந்த அசுவத்தாமன் போரை நிறுத்திக் களத்தை விட்டோடினான். வியாசமுனிவர் அசுவத்தாமன் முன் எதிர்ப்பட்டு

"நீ என்ன காரணத்திற்காகப் போரை விட்டு ஓடுகின்றாய் எனக் கேட்டார். அதற்கு அவன் "நான் பிரயோகித்த அக்கினி அஸ்திரத்திற்கு எவரும் தப்ப முடியாது. கிருஷ்ண அர்ச்சுனர்களைச் செயிக்க முடியாது போனதற்குரிய காரணத்தை அறியப்போகின்றேன்" என்றான். அதற்கு வியாசர் "கேசவ அர்ச்சுனர்களைப் போல் நீ தவத்தில் சிறந்தனையாயினும் அவ்விருவரும் யுகந்தோறும் சிவபிரானை லிங்கத்திலே வழிபடுகின்றார்கள். ஆதலால் அவர்களது தவவலிமை உனது தவ வலிமையிலும் சிறந்தது என்று விடையிறுத்தார். எனவே மகேசுர வடிவங்களுக்கும் மேலானது சிவ லிங்கம் என்பதும், சிவலிங்க வழிபாடு மிக்க சிறப்புடையது என்பதும் சிவாகம நூல்களின் முடிவாகும்." இதிலும் சுயம்புலிங்க வழிபாடு இன்னும் மேலான சிறப்புடையது என்பதைக் கூறத் தேவையில்லை.

### பிரஹ்மகத்தி தோச நீக்கமும் லிங்கவழிபாடும்

அந்தணரைக் கொல்வதால் ஏற்படும் பாவம் பிரஹ்மகத்தி தோஷம் எனப்படும். இது பாவங்களிலெல்லாம் மிகவும் கொடியது. அதை நீக்குவதாயின் தனியாக எந்த மூர்த்தியை வழிபட்டும் நீக்கிக் கொள்ள முடியாது என்பதும் சிவலிங்க பூசையே செய்தாக வேண்டும் என்பதும் வேதாகம விதி. சிவபக்தனான இராவணனைக் கொன்ற தோஷம் நீங்க இராமர் இராமேஸ்வரத்திலே சிவனை லிங்கத்தில் பிரதிஷ்டை செய்து வழிபட்டதை இராமாயணம் குறிப்பிடுகின்றது." சிவலிங்க வடிவம் பிரம்ம, விஷ்ணு, சிவன் மூன்றையும் குறிப்பதாக வேதாகமங் கூறுகின்றது.

சிவலிங்க வடிவத்தில் விஷ்ணு சக்தியாக ஆவுடையார் எனப்படும் பகுதியில் உறைகின்றார் எனவும், மேலுள்ள பாகம் சிவனையும், அடிப்பாகம் பிரம்மாவையும் குறிப்பிடுவதாகவும் வேதாகமங்கள் கூறுவதாக மக்கள் கூறுகின்றனர். எனவே சிவலிங்கத்தை வழிபட்டால் பிரம்மாவை வழிபட்ட பலனும், மகாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களை வழிபட்ட பலனும், சிவபெருமானின் இருபத்தைந்து மூர்த்தங்களை வழிபட்ட பலனும் ஒருங்கே கிடைக்கும் என வேதாகமங்கள் வலியுறுத்துகின்றன. இதிலும் சுயம்புலிங்க வழிபாடு இன்னும் ஒரு படிமேலான பயனளிப்பது எனக் கொள்ளலாம். இத்தகைய பெருமை வாய்ந்த சுயம்பு லிங்கம் ஒன்று நாம் வாழும் பிரதேசத்தில் அமைந்தமை எமது பெரும் பேறே. இப்பெருமானின் பெருமையை அறிய முயல்கின்ற அளவுக்கு நாமும் உயர்வு பெறலாம்.

---

## துணைநூல்கள்


1. பேராசிரியர் சி. பத்மநாதன் (பதிப்பு) (1994)
   *இலங்கையின் இந்துக் கோயில்கள்*
   *இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்.*
   *கொழும்பு.*

2. **Swami Nityananada (1993)**
   *Symbolism in Hinduism*
   *Central Chinmaya Mission Trust,*
   *Bomby.*

3. கா. கைலாச நாதக்குருக்கள் (1963)
   *சைவத்திருக் கோயிற் கிரியை நெறி*
   *இந்து இலக்கிய சங்கம், மெய்கண்டான் அச்சகம்,*
   *கொழும்பு.*

4. **Radhakrishnan. S. (1968)**
   *The Primcpal Upanisads*
   *George Allen & Unwin Ltd.*
   *London.*

5. மறைமலையடிகள் (1959)
   சைவ சித்தாந்த ஞான போதம்,
   திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
   திருநெல்வேலி.

6. திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபை (1976)
   *திருக்கேதீச்சரம் திருக்குடத்திரு மஞ்ஞனமலர் -*
   *மெய்கண்டான் அச்சகம் லிமிடெட்*
   *கொழும்பு – 13.*

7. மேற்படி.

8. மேற்படி. - கா. கைலாசநாத் குருக்கள் (1963)

9. மகேந்திர நாத்குப்தா (வங்கமூலம்)
   சுவாமி தன்மயானந்தர் (தமிழில்) (1987)
   *இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்*
   *பக் – 526 – 527 பாகம் II*
   *ஸ்ரீ இராம கிருஷ்ண மடம்*
   *மைலாப்பூர், சென்னை.*

10. மேற்படி - சிவ ஸ்ரீ காளஹஸ்தீஸ் வரக்குருக்கள்

11. திருக்கோணேசர் ஆலயப் புனருத்தாரண கும்பாபிஷேக சபை (1963)
    திருக்கோணசர் ஆலய கும்பாபிஷேக மலர்
    *திருகோணமலை. பக் 13.*

12. மேற்படி - 6 இல் எடுத்துக்காட்டப்பட்டவாறு.

# ஈழத்தில் இந்துசமய வரலாறும் சிவவழிபாடும்

பேராசிரியர் சி.க. சிற்றம்பலம்
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

## வரலாற்றுப் பின்னணி

தென்னாசியாவில் பல்லாயிரமாண்டுகளாகப் பல்வகைப்பட்ட இனங்கள் மத்தியிலே வழங்கி வந்த பல வழிபாட்டு முறைகளும் தத்துவங்களும் காலப்போக்கில இணைந்து இன்று இந்து சமயம் என்னும் பொதுப் பெயரைப் பெற்றுள்ளன. எனவே இந்துசமயத்தின் வரலாறு பிற மதங்களின் வரலாறு போன்று குறிப்பிட்ட ஒரு காலத்திலிருந்து குறிப்பிட்ட ஒரு வழியிலே சென்ற வரலாறாகாது (இந்திரபாலா, கா. 1978). இத்தகைய கருத்தினையே வடமொழி வல்லுனரான தண்டேகாரும் சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளார். ஆரியரது சமய நம்பிக்கைகள் இந்தியாவிற்குள் புகுந்தபோது ஆரியருக்கு முற்பட்ட சமய நம்பிக்கைகள் இந்தியா எங்கணும் வியாபித்திருந்தனவென்றும், அவை நன்கு ஆழமாக வேரூன்றி இருந்தனவென்றும் பின்னர் வந்த ஆரிய நம்பிக்கைகளால் இவற்றை அழிக்க முடியவில்லை என்றும், இந்நம்பிக்கைகள் பலவற்றை ஆரிய சமயம் உள்வாங்குவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது என்றும் எடுத்துக் காட்டியுள்ளார் (Dandekar, R. N. 1979 264) அவர் மேலும் இது பற்றிக் கூறுகையில் இந்த மக்கள் சார்ந்த மதங்களின் கடவுளரும், பெண் தெய்வங்களும் வேதகாலத் தெய்வங்களிலிருந்து வேறுபட்டிருந்தனவென்றும், அதன் பல்வேறு வகைப்பட்ட தெய்வங்களும் சமய வழிபாட்டு முறைகளும் இறுக்கமற்ற முறையில் வேதங்களோடு மெல்லிய இழையின் மூலம் ஒரு தொகுதியாக இணைந்தன எனவும் எடுத்துக் காட்டியுள்ளார். (Dandekar, R. N. 1979 13-27)

நாம் ஏற்கனவே எடுத்துக் காட்டியவாறு ஆரியர் வருகைக்கு முற்பட்ட சமய நம்பிக்கைகளில் யக்ஷ, நாக வழிபாடுகள், திராவிட வழிபாட்டு நெறிகள் ஆகியன அடங்கும். சிந்துவெளி நாகரிகத்தின் சிறப்பை வெளியுலகிற்கு எடுத்துக் காட்டிய சேர் ஜோன் மார்ஷல் இற்றைக்கு 5000 ஆண்டுகட்கு முன்னர் திராவிட வழிபாட்டு நெறிகளே அங்கிருந்ததாகக் குறிப்பிட்டார். இக்கருத்தினையே தண்டேகாரும் ஏற்றுள்ளார். இந்நம்பிக்கைகளைத் தொடர்ந்து காணப்படும் நம்பிக்கைகள் தான் ஆரிய சமய நம்பிக்கைகளாகும். இந்நம்பிக்கைகளை ஆரியரின் வேதங்கள், பிராமணங்கள், உபநிடதங்கள் ஆகியன எடுத்துக்காட்டியுள்ளன. ஆரம்பத்தில் ஆரியரின் மத்தியில் பெரு வழக்காக இருந்த அக்கினி வழிபாடும் அதனுடன் இணைந்த யாக வழிபாடும், பின்னர் திராவிட சமய நம்பிக்கைகளின் தாக்கத்தினால் உருவ வழிபாடு, பூசை வழிபாடாக எழுச்சி பெற்றன. இத்தகைய வழிபாட்டு முறையில் ஆரியக் கடவுளர், திராவிடக் கடவுளரின் செல்வாக்குக்கும் உட்பட்டனர். இருக்கு வேதக் கடவுளான உருத்திரன் பின்னர் சிவனின் பண்புகளைப் பெற்ற கடவுளாக விளிக்கப்பட்டுள்ளமை இதற்கோர் உதாரணமாகும்.

'சிவன்' என்ற சொல் ஒரு திராவிடச் சொல் எனக் கூறும் அறிஞர்கள் சிவப்பு நிறக் கடவுளையே இப்பதம் குறித்து நின்றது என்ற விளக்கத்தினைத் தந்தள்ளனர். (Majumdar R.C 1957 : 165) அத்துடன் இச்சிவனே சிந்துவெளி நாகரிகத்திலிருந்து அகில இந்திய ரீதியில் செல்வாக்குள்ள கடவுளாக விளங்கினான் எனவும் எடுத்துக் காட்டியுள்ளனர். இவ்வாறேதான் விஷ்ணு பற்றியும் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. வேதங்கள் கூறும் விஷ்ணு பிராகிருத வடிவத்தில் 'விண்கு' அல்லது 'வெண்கு' ஆகக் காணப்படுவதைச் சுட்டிக் காட்டும் அறிஞர், இச் சொல்லுக்கும் தமிழிலுள்ள 'விண்' (நீலநிற வானம்) என்ற சொல்லுக்கும் இடையிலுள்ள ஒற்றுமையை இனங் கண்டுள்ளனர் (Majumdar R.C. 1957 : 165) இது பற்றித் தண்டேகாரும் கூறியுள்ளமை ஈண்டு அவதானிக்கத்தக்கது. (Dandekar, R.N. 1979; 250)

> *'செழிப்பு, விருத்தி ஆகியவற்றின் தெய்வமாக விஷ்ணு ஆரம்பத்திலே மக்களாற் கருதப்பட்டுப் பண்டைக் காலத்து ஜதீகங்கள் பலவற்றுள் காணப்படுவதுபோல் பறவை வடிவத்திலே உருவகிக்கப்பட்டார். எனினும் மக்கள் மத்தியில் செல்வாக்குடன் விளங்கிய இதன் அழுத்தத்தின் மூலம் விஷ்ணுவையும் வேதக் கடவுளர் வரிசையிற் சேர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஒன்று உருவாகிச் செயற்கையாக இந்திரனுடன் தொடர்புபடுத்தப்பட்டுச் சூரியத் தெய்வமாக உருமாறியது'.*

விஷ்ணு வழிபாட்டோடு தொடர்புடைய கிருஷ்ண வாசுதேவ வழிபாடுகள் வேதநெறி சாராத வழிபாட்டு நெறிகள் என்றும், நாளடைவில் குறிப்பாக இதிகாச புராணங்களின் காலத்திலே தான் ஆரிய தெய்வங்களுடன் அவை இணைந்தன என்றும் கூறப்படுகின்றது.

இவ்வாறேதான் முருக வழிபாட்டின் அம்சங்கள் பலவும் இதிகாச புராணங்களின் காலத்தில் மேன்மை பெற்றிருந்தன. முருக வழிபாடு தமிழகத்திற்கே சிறப்பான வழிபாடாகக் காணப்பட்டாலும் கூட இதிகாச காலத்தில் கார்த்திகேய, சுப்பிரமணிய, ஸ்கந்த, குமார, விசாக, மகாசேன வழிபாடுகளுடன் வளர்ச்சி கண்டது.

தாய்த் தெய்வ வழிபாடுபற்றி விளக்கமளித்த வேத விற்பன்னரான மக்டொனல்ட் வேதகால நம்பிக்கைகள், வழிபாட்டு

நெறிகள் ஆகியவற்றுள் பெண் தெய்வங்கள் முக்கியம் பெற்றிருக்கவில்லை எனக் கூறியுள்ளார் (Banerjee. J.N. 1966 : 113) இருக்கு வேதத்தில் குறிப்பிடப்படும் பெண் தெய்வங்களான உஷஸ். அதிதி, பிருதுவி, சரஸ்வதி, வாக் போன்ற தெய்வங்கள் பிற்காலத்தில் செல்வாக்குடைய தெய்வங்களாக எழுச்சி பெறவில்லை. பிற்பட்ட வேதகாலத்திற்றான் அம்பிகா. உமா. துர்க்கை, காளி போன்ற தெய்வங்கள் எழுச்சி பெறுகின்றன (Banerjee. J.N 1966 113-114) அம்பிகா என்ற பெயர் கூட வேதகாலத்தை அடுத்து வந்த பெயராகும். உமா, பார்வதி போன்ற சிவனின் தேவியினது பெயர்கள் முதன்முதலாகத் தைத்திரிய ஆரண்யத்திலும், கேன உபநிடதத்திலும் காணப்படுகின்றன (ஞானசம்பந்தன் அ.ச. 1987– 23–24) எவ்வாறாயினும் சிவன். விஷ்ணு வழிபாடுகள் போன்று தாய்த்தெய்வ வழிபாடும் ஆரிய சமய நம்பிக்கையுட் புகுந்து ஆரியமயமாக்கப்பட்ட ஒரு நிகழ்வையே இவை எடுத்துக் காட்டுகின்றன எனலாம். அத்துடன் சிவனின் மனைவியாகப் பார்வதி (அம்பிகா) இணைக்கப்பட, விஷ்ணுவின் மனைவிகளாகச் ஸ்ரீ. லஷ்மி ஆகியோர் இணைக்கப்பட்டு இவை பற்றிய ஐதீகங்கள் காலப்போக்கில் எழுச்சி பெற்றன. அத்துடன் விநாயகர், முருகன் ஆகியோர் சிவன், பார்வதி ஆகியோருடைய பிள்ளைகளாகவும். பார்வதியும், விஷ்ணுவும் உடன் பிறப்புக்களாகவும் உறவுமுறைகள் கற்பிக்கப்பட்டன.

மேற்கூறிய வழிபாட்டு நெறிகள் யாவும் இதிகாச, புராணகாலம் (கி.மு. 500 – கி. பி. 500) வரை அகில இந்திய ரீதியில் ஆரிய வழிபாட்டு நெறிகள், ஆரிய வழிபாட்டு நெறிகள் அல்லாதவை என்று நுணுக்கமாக நாம் இனங்காண முடியாத அளவுக்கு ஒன்றோடொன்று உறவு முறையைக் கற்பிக்கும் வகையில் பல ஐதீகங்களுடன் வளர்ச்சி பெற்றன. இவ் ஐதீகங்களில் யக்ஷ – நாக வழிபாடுகளும் இணைந்தன. வேதம் அங்கீகரிக்கப்பட, இந்து சமயம் கோயிலை மையமாக வைத்த ஆகம வழிபாட்டு நெறியாகி அகில இந்திய வழிபாட்டு முறையாகியது. இத்தோடு கிரியைகள். தத்துவ விளக்கங்கள் என்பன வளர்ந்தன. இத்தகைய வளர்ச்சியே செம்பாங்கான இந்து சமய வளர்ச்சிக்கு இக்கால இறுதியில் வழி வகுத்தது. மேற்கூறிய வளர்ச்சியை எடுத்துக் காட்டும் விதத்தில் இந்துக் கடவுளருக்கு உருவங்களும் அமைந்தன. இத்தகைய பழைய உருவங்கள் கி. மு 3 ஆம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கும் நாணயங்கள் பலவற்றிலும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (Banerjea J.N 1966)

மேற்கூறிய பின்னணியிற்றான் ஈழத்து இந்து சமய வளர்ச்சி பற்றி ஆராய வேண்டியுள்ளது. ஈழத்தைப் பொறுத்தமட்டில் இலக்கிய ஆதாரங்கள் மிகமிக அருகியே காணப்படுகின்றன. இலக்கிய ஆதாரங்களில் பிரதான மானவையாகப் பாளி நூல்கள் விளக்குகின்றன. அதுவும் பாளி நூலோரின் விளக்கத்திற்கேற்பக் கொடுக்கப்பட்ட வியாக்கியானத்தின் தன்மையிலிருந்தே இந்துசமயம் பற்றி அறியமுடிகின்றது. இதனால் யக்ஷ – நாக வழிபாடுகள் இந்துக் கடவுளர் ஆகியன பற்றி அங்கும் இங்கும் சிதறிக் கிடக்கும் சான்றுகளே ஈழத்திற்குரிய சான்றுகளாக விளங்குகின்றன. தமிழ் நூல்களோ இவற்றைவிடக் காலத்தாற் பிற்பட்டுக் காணப்படுகின்றமை மட்டுமன்றி அவையும் மிகமிகக் குறைந்தளவு சான்றுகளையே தருகின்றன. இந்தியாவைப் போன்று சிற்பங்களிலோ அன்றி நாணயங்களிலோ ஈழத்து இந்து சமய வரலாற்றைத் தெளிவாக விளங்கிக் கொள்ளும் அளவுக்கு இந்துக் கடவுளர் சித்தரிக்கப்படவில்லை. எனினும். கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலிருந்து கிறிஸ்தாப்த காலம் வரையிலுள்ள காலப்பகுதிக்குரிய பிராமிக் கல்வெட்டுகளிற் காணப்படும் மனிதர்களைக் குறிக்கும் பெயர்கள் இடப்பெயர்கள் ஆகியன இந்து சமய வரலாற்றில் முக்கிய இடத்தினை வகிக்கின்றன என்றால் மிகையாகாது.

இத்தகைய பெயர்கள் இந்துக்கள் பௌத்தர்களாக மதம் மாற முன்னர் சூடியிருந்த இந்துப் பெயர்களை எடுத்துக் காட்டி அதன் மூலம் அவர்களின் வழிபாட்டு நெறிகளையும் கூறுகின்றன. எனினும் வெறும் பெயர்களைக் கொண்டு வழிபாட்டு நெறிகள் பற்றி விரிவாகக் கூறுவது கஷ்டமாக உள்ளது. இதனால் இக்கால இந்துசமய வரலாற்றை சமகாலத்தில் இந்தியாவில் வளர்ச்சி பெற்ற இந்து சமயத்தின் வரலாற்றுப் பின்னணியின் அடிப்படையில் நோக்குவது அவசியமாகின்றது. இந்தியாவுடன் ஈழம் இறுக்கமான தொடர்புகளைப் பண்டு தொட்டுக் கொண்டிருந்தது. இத் தொடர்புகளில் ஈழத்தின் ஆதிக்குடியேற்றத்தில் இந்தியாவின், குறிப்பாகத் தென்னிந்தியாவின் பங்களிப்புப் பிரதானமானது. வரலாற்றுக் காலத்தில் வாணிகத்தின் மூலம் ஈழம் வடநாட்டுடன் தொடர்பு கொண்டிருந்தாலும் கூடத் தமிழகத்தோடுதான் இறுக்கமான அரசியல், வாணிகத் தொடர்புகள் இருந்தமைக்கான இலக்கிய, தொல்லியற் சான்றுகள் காணப்படுகின்றன. இத்தகைய தொடர்புகள் இக்காலத்தில் அகில இந்திய ரீதியில் வளர்ச்சி பெற்ற இந்து சமய வழிபாட்டு நெறிகள், கிரியைகள் ஆகியனவற்றை ஈழத்திற்குப் பரப்புவதில் பெரும் பங்களித்தன என்று கொண்டால் மிகையாகாது. இதனால் இக்கால இந்து சமய வரலாற்றம்சங்களை, ஈழத்திற் கிடைக்கும் தரவுகளின் அடிப்படையில் – இந்தியப் பின்னணியிலும் தமிழகப் பின்னணியிலும் ஆராய்வது அவசியமாகியும், தவிர்க்க முடியாத தொன்றாகியும் விடுகின்றது.

## சிவன்

இந்து சமய வழிபாட்டு நெறிகளிற் சிவவழிபாடு பிரதான இடத்தினைப் பெறுகின்றது. சிந்துவெளியிற் காணப்பட்ட சிவன். இருக்குவேதத்தில் உருத்திரனாக உருமாறினாலும், பிற்பட்ட இலக்கியங்களிற் குறிப்பாக ஸ்வேதாரண்ய உபநிடதத்தில் சிவன், உருத்திரன் ஆகியோரின் பண்புகள் இணைய, இதிகாச–புராண காலத்தில் சிவன் மேன்மைப்படுத்தப்படுகின்றான். மகாபாரதம் கிருஷ்ணனின் முதன்மையைக் கூறும் நூலாகக் காணப்பட்டாலும் கூடக் கிருஷ்ணன், அர்ச்சுனன் ஆகியோர் சிவனின் ஆதரவைப் பெற்றவர்களாக உள்ளமை இந்நூலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளமையும், சிவவழிபாட்டின் மேன்மையை விளக்குகின்றது. சிவனின் உருவத் தோற்றம் பற்றிய இக்காலத்திற்குரிய இலக்கியங்களில் சிவன் பலவாறு சித்தரிக்கப்பட்டுள்ளான். தாழ்ந்த சடையவன், பிறை, கங்கை

ஆகியவற்றைச் சூடியவன், முக்கண்ணன், கழுத்தில் விஷக் கறை உடையவன், கையில் மழுப்படையுடையவன், புலித்தோலன், உமையொருபாகன், விடையை ஊர்தியாக உடையவன், விடைக்கொடியோன், அருந்தவஞ் செய்பவன், ஆலமரத்தின் அடியில் இருப்பவன், இமயத்தில் வாழ்பவன், உயிர்களின் பாதுகாவலன், அழித்தற்கடவுள், வைத்தியநாதன், திரிபுரமெரித்தவன் போன்றன இவற்றில் சில அம்சங்களாகும்.

சிவனின் மேற்கூறிய அம்சங்கள் தமிழகத்திலும் சிவவழிபாட்டிற் காணப்பட்டதைச் சங்க நூல்களாகிய எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியனவற்றிற் காணலாம். இதே செய்திகள் இவற்றுக்குப் பிற்பட்ட சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களிலும் காணப்படுகின்றன. இதனால், கிறிஸ்தாப்த காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இந்திய இலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும் இடம் பெற்ற சிவன் என்ற சொல் ஏன் சங்க நூல்களில் இடம் பெறவில்லை என்பது புதிராகவே உள்ளது. இதற்குப் பலவாறு விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. சங்க நூல்களின் 'கடவுள் கோட்பாடு பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் இவற்றில் 'தெய்வம்', 'கடவுள்' என்ற இருவெவ்வேறு அம்சங்கள் காணப்படுகின்றன எனக் கூறித் 'தெய்வம்' என்பது ஒரு நிலத்திற்குரிய தெய்வமாக மதிக்கப்பட, கடவுள் இதற்கப்பால் முழுமுதல் நிலையில் மதிக்கப்பட்டது என விளக்கம் அளித்துள்ளனர் (ஞானசம்பந்தன், அ.ச. 1987 59–73).

மாயோன், சேயோன், கொற்றவை ஆகியோர் ஒரு நிலத்திற்குரிய தெயவங்களாக விளங்கியதாற்றான் இந்நூல்களில் இவை இடம் பெற்றன. 'சிவன்' முழுமுதற் கடவுள் நிலையிற் பேணப்பட்டதால் இவ்வாறு சிவன் இவற்றில் குறிப்பிடப்படவில்லை என்பது இவர்களது வாதமாகும். இக்கருத்தினை முற்று முழுதாக நிராகரிப்பதற்கு வாய்ப்பில்லை. காரணம் வரலாற்றடிப்படையில் நோக்கும் போது சிவன் இக்காலத்தில் அகில இந்தியாவிலும் முதன்மை பெற்ற தெய்வமாகப் பேணப்பட்டான். சிவன் பற்றிச் சங்க நூல்களிற் காணப்படும் வர்ணனைகள் இதனை உறுதி செய்கின்றன. மேற்கூறிய கருத்திற்கு மெருகூட்டுவதாகச் சிவன் முழுமுதற் கடவுளாக, மதிக்கப்பட்டதற்கான தடயங்கள் சங்க இலக்கியங்களிலேயே காணப்படுகின்றன. அவை பின்வருமாறு அமைந்துள்ளன.

*'தொன் முதுகடவுள்' (மதுரைக்காஞ்சி. 41)*

*'கடவுணிலை இய கல்லோங்கு நெடுவரை'*

*(பதிற்றுப்பத்து. 43:6)*

*'காரியுண்டிக் கடவுள்' (மலைபடுகடாம். 83)*

*'மழுவா ணெடியோன்றலைவனாக' (மதுரைக் காஞ்சி, 455)*

*'ஆல் கெழு கடவுள்' (திருமுருகாற்றுப்படை, 256)*

எனினும், சிவன் என்ற பெயர் இவ்வாறு சங்க இலக்கியங்களில் இடம் பெறாமைக்கு இன்னுமொரு காரணத்தினையும் எடுத்துக் காட்டலாம். அதாவது முழுமுதற் கடவுளை அவரின் பெயர் கொண்டு அழைப்பதைச் சங்க இலக்கிய கர்த்தாக்கள் விரும்பாமலும் இருந்திருக்கலாம். இவ்வாறு அழைப்பதும் அவரின் தரத்தினைக் குறைப்பதாக அமையும் என அவர்கள் எண்ணியிருந்தமையும் அதற்கொரு காரணமாக விளங்கியிருக்கக் கூடும். இதனை விளக்குவதற்கு ஓர் உதாரணத்தைக் கூறலாம். பௌத்தம் வளர்ச்சி அடைந்த ஆரம்பகால கட்டத்தில் புத்தருக்குச் சிலை வடிப்பது என்பதானது அவரின் புனிதத்தன்மையை, முதன்மையை மட்டுப்படுத்தி, மாசுபடுத்திவிடும் எனக் கருதிய பௌத்த மதத்தினர் சிலைக்குப் பதிலாகப் புத்தரின் பாதங்களைச் சிற்பமாகக் கற்களில் வடித்து வணங்கினர். பின்னர், கிறிஸ்தாப்த காலத்தின் ஆரம்பத்திற்றான் புத்தருக்கான சிலை வடிக்கப்பட்டது. சங்க இலக்கிய கர்த்தாக்கள் 'சிவன்' பற்றிய வர்ணனைகளைத் தாம் படைத்த இலக்கியங்களிற் குறிப்பிட்டாலும் கூட, அவரின் பெயரைத் தமது இலக்கியங்களிற் கையாளாமைக்கு இத்தகைய ஒரு மனப்பாங்கே காரணமாக இருந்திருக்க வேண்டும்.

ஆயினும்,கிறிஸ்தாப்த காலத்திற்கு முன்பிருந்தே தமிழகத்துடன் அரசியல், வாணிபத் தொடர்புகளில் ஈழம் இறுக்கமாகப் பிணைந்திருந்தது. எனினும், ஈழத்து இலக்கியங்களிலும், பிராமிக் கல்வெட்டுகளிலும் 'சிவன்' என்ற நாமம் குறிப்பிடப்படத் தமிழகத்தில் மட்டும் இவ்வாறு குறிப்பிடப்படாதிருப்பது துலக்க முடியாத மர்மமாக இருக்கின்றது. 'சிவன்' என்ற வடிவம் தமிழகம் தவிர்ந்த இந்தியப் பிராந்தியங்களிலுள்ள கல்வெட்டுகளில் இடம்பெற்றிருக்கின்றது. இவ்வாறே ஈழத்துக் கல்வெட்டுக்களிலும் இது காணப்படுவது அவதானிக்கத்தக்கது.

நிற்க, நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளவாறு சிவன் பற்றிய குறிப்பு ஈழத்தின் பழைய இலக்கியங்களாகிய பாளி நூல்களிலும் பிராமிக் கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றது. இலக்கியங்களில் சிவன் (சிவ) என்ற வடிவம் மட்டும் காணப்படப் பிராமிக் கல்வெட்டுகளில் 'சிவ' என்ற வடிவத்தோடு சிவனாற் பாதுகாக்கப்படுவன் எனப் பொருள்படும் 'சிவபூதிய', 'சிவகுட்டக' 'சிவரக்கித' போன்ற வடிவங்கள் உள. எனினும் பாளி நூல்களிலும் தமிழ் நூல்களிலும் சிவவழிபாட்டுத் தலங்கள் பற்றிக் காணப்படும் குறிப்புகள் சிவன் தமிழகத்தைப் போல பல்வேறு மூர்த்தங்களில் இங்கும் வழிபடப்பட்டான் என ஊகிக்க வைக்கின்றன. ஈழத்தில் இக்காலத்திற்குரிய தமிழ் இலக்கியங்களோ அல்லது பிற இந்து இலக்கியங்களோ காணப்பட்டிருந்தால் இவை பற்றி அவை விரிவாக எடுத்துக் காட்டியிருக்கும்.

கலித்தொகையில் வரும் கடவுள் வாழ்த்தில் (கலித்தொகை 1–4) சிவனின் பொலிவு எவ்வாறு அமைந்திருந்தது என்பது பின்வருமாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

*'ஆறறியந்தணர்க் கருமறை பல பகர்ந்து*
*தேறு நீர் சடைக்கரந்து திருபுரந் தீமடுத்துக்*
*கூறாமற் குறித்ததன்மேற் செல்லுங் கடுங்கூளி*
*மாறாப் போர் மணிமிடற்றெண்கையாய் கேளினி*

அந்தணர்க்கு வேதங்களை அருளிச் செய்து, கங்கையைத் தன் தலைச் சடையின் ஒரு பக்கத்திலே அடக்கி, முப்புரம் எரிசெய்து, எப்பொருளுக்குமப்பால் நின்று, நீலநிறக் கழுத்தையும், எட்டுக்கைகளையும் உடையானாய்க் கண்களுக்குப் புலனாகின்றவன் என்பதே இதன் பொருளாகும். மேலும் சிவனின் தோற்றம் பற்றிய குறிப்புக்கள் சில பின்வரும் சங்கப்பாடல்களிற் காணப்படுவதும் அவதானிக்கத்தக்கது.

*'.......................... வெள்ளேறு*
*வலவயினுயரிய பலர் புகழ் திணிதோ*
*ளுமை யமர்ந்து விளங்கு மிமையா முக்கண்*
*மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வன்'*
*(திருமுருகாற்றுப்படை 151–154)*

*'முக்கட் செல்வர் நகர்' (புறநானூறு 6.18)*
*'பிறை நுதல் வளங்குமொருகண்' (புறநானூறு 55.5)*

மேலும் இந்தியாவின் பழைய நாணயங்களிற் சிவன் பற்றிக் காணப்படும் குறியீடுகளும் அவதானிக்கத்தக்கவை. இந்நாணயங்களில் சிவன், லிங்கம், எருது, திரிசூலம் ஆகியன மூலமும், தன் திருமேனி மூலமாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளான். கி.மு. 3 ஆம் நூற்றாண்டிற்குரிய அச்சுக்குத்திய நாணயங்களில் இரு கரங்களுடன் சிவன் சித்தரிக்கப்படுகையில் சிலசமயம் இவற்றில் தண்டு, கொடி ஆகியனவும், இன்னும் சிலவற்றில் திரிசூலம், மழு ஆகியனவும் காணப்படுகின்றன. வடமேற்கே தக்ஷசீலத்திற்கு அருகிலுள்ள சிர்காப் என்ற இடத்திற் கிடைத்த கி.மு. 2ஆம் / 1ஆம் நூற்றாண்டிற்குரிய வெண்கல முத்திரையில் சிவன் திரிசூலம், மழு ஆகியனவற்றுடன் காட்சியளிப்பதோடு இம் முத்திரையின் வாசகர் 'சிவரக்ஷித' அதாவது 'சிவனால் பாதுகாக்கப்படுவன்' என்ற பொருளில் அமைந்துள்ளது. இக்காலத்திற்குரிய பழைய செம்பு நாணயங்களில் விருட்ஷமும் அதன் கீழ் லிங்கமும் சித்தரிக்கப்பட்டுள்ளன. ஆந்திர மாநிலத்திலுள்ள குடிமல்லத்திற் கிடைத்த கி.மு. 2ஆம் நூற்றாண்டிற்குரிய லிங்கத்தில் சிவனது உருவம் காணப்படுகின்றது. இவ்லிங்கத்தின் உயரம் 5 அடியாகும். அகலம் 1 அடியாகும். சிவனின் வலது கரத்தில் ஆட்டுக்கடாவும், இடது கரத்தில் கெண்டியும், மழுவும் காணப்படுகின்றன. சிவன் யக்ஷனின் மேல் (அபஸ்மார – புருஷன்) நிற்பது போன்று இச்சிற்பம் அமைந்துள்ளது. மேலும் ஐந்து முகங்களையுடைய சிவனது உருவம், இவ்லிங்கங்களிற் சித்தரிக்கப்பட்டுள்ளமையும் அவதானிக்கத்தக்கது 4 ஆம் நூற்றாண்டளவில் சிவனது சிலைகளை மௌரியர் ஆக்கி விற்பனை செய்ததாகப் பதஞ்சலி குறிப்பிடுவதும் ஈண்டு அவதானிக்கத்தக்கது (Dandekar. R.N. 1979. 296)

## சிவலிங்க வழிபாடு

சங்க இலக்கியங்களில் லிங்கவழிபாடு பற்றிய குறிப்புகள் காணப்படாவிட்டாலும் இவ்விலக்கியங்கள் குறிக்கும் 'கந்து' என்ற பதம் லிங்க வணக்கத்தையே குறித்து நின்றது எனலாம் (ஞானசம்பந்தன், அ.ச. 1987; 59–73). அகநானூறு (287: 4–7) அகன்ற ஆலமரத்தின் கீழ் பாழடைந்து கிடக்கின்ற கந்துவை ஆலயமென்று மான்கள் தம் தினவு தீர முதுகை உராயும் இடமாகவும், விடியற்காலையில் நாட்பலி கொடுத்து வழிபாடு இயற்றலைக் கைவிட்ட இடமாகவும், இவை செங்கல்லினாலான மேடையையும் மதிலையும் உடையதாக விளங்கியதாகவும் கூறுகின்றது. கந்து வழிபாடே லிங்க வழிபாடாக மாறியதை மேற்கூறிய செய்யுள் எடுத்துக் காட்டுகின்றது. 'கந்து' பொதுவாகப் 'பொதியில்' என விளிக்கப்படும் மரத்தின் கீழ்த்தான் அமைந்திருந்தது என்பதைப் பட்டினப்பாலை (246) குறிக்கின்றது. இந்நூல் பெண்கள் நீராடிவந்து, நிலத்தினை மெழுகி, மலர் மாலை சாத்தி, நந்தா விளக்கேற்றும் 'கந்துடைப் பொதியில்' பற்றிப் பேசுகின்றது.

ஈழத்தில் சிவவழிபாட்டோடு தொடர்புடைய சின்னங்கள் பல வழிபடப்பட்டதற்கான சான்றுகள் உள. திரிசூலக் குறியீடுகள் பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய பானை ஓடுகளிலும், பிராமிக் கல்வெட்டுக்களிலும் உள. நந்தியின் உருவம் நாணயங்களில் உள. சிவலிங்க வணக்கம் பற்றிய பாளி நூல்களிலும் குறிப்புண்டு. பண்டுகாபயனின் காலத்தில் கி.மு. நான்காம் நூற்றாண்டில் அநுராதபுரத்திற் காணப்பட்ட 'சிவிகாசாலா' என்ற சிவலிங்க வணக்கத்திற்குரிய தலம் பற்றி மகாவம்சம் (M. V. X: 29) கூறுகின்றது. சிவ வணக்கத்துக்குரிய தலங்களான திருக்கோணேஸ்வரம், பிராமணன் கலந்தன் ஊரிலுள்ள ஆலயம், ஏரகாவில்லவில் உள்ள ஆலயம் ஆகியனவற்றை மகாசேனன் அழித்தது பற்றி மகாவம்சத்தின் உரை நூலாகிய வம்சத்தப்பகாசினியில் தகவல் உண்டு (Mahavamsa - Tika / Vamsatthappajasini : 1935 : 287 ) அத்துடன் சுடு மண்ணினாலமைந்த லிங்க உருவங்கள் ஈழத்தின் புராதன தொல்லியல் மையங்களில் கிடைத்துள்ளன. இவற்றைத் தெரணியாகல (Deraniyagala. P. E. P. 1960 : 1961) யோனி எனக் கொண்டாலும் கூட. இவை கந்துடை நிலையிற் காணப்படும் லிங்க வழிபாட்டையே எடுத்துக் காட்டுகின்றன எனலாம்.

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது இந்தியாவைப் போல் சிவ, லிங்க வழிபாடு ஈழத்திலும் பரந்திருந்தது எனலாம். இவ்வழிபாடு பற்றி ஈழத்துப் பாளிநூல்கள், தமிழ் நூல்கள், பிராமிக் கல்வெட்டுகள், பழைய நாணயங்கள் ஆகியவற்றிற் காணப்படும் குறிப்புகளையும் குறியீடுகளையும் இந்தியப் பின்னணியில் நோக்கும்போது அங்கு வழக்கிலிருந்த இவ்வழிபாட்டு மரபுகள் பல இங்கும் காணப்பட்டன எனலாம். இதனாற்போலும் கி.பி. முதலாம் நூற்றாண்டுக்குரிய பிளினியின் நூலில் ஈழத்தவர்கள் வணங்கும் தெய்வம் 'கெரக்கிள்ஸ்' என்ற குறிப்புக் காணப்படுகின்றது. இக்கெரகிள்ஸ் என்ற தெய்வம் சிவனென இனங்காணப்பட்டுள்ளது (Maloney. C. T. 1968: 59-69).

## முருகன்/ குமாரன்/ ஸ்கந்தன்/ விசாகன்/ கார்த்திகேயன்/ சுப்பிரமணியம்/ குகன்/ மகாசேனன்.

வங்களாத்திற்குக் காளி வழிபாடும், குஜராத்திற்கு கிருஷ்ண வழிபாடும், மகாராஷ்டிரத்திற்குக் கணேச வழிபாடும் போன்று தமிழகத்தின் தனித்துவ வழிபாடாக முருக வழிபாடு காணப்படுகின்றது. எனினும் அகில இந்திய ரீதியில் இவ்வழிபாட்டுடன் வேறு பல அம்சங்களும் புகுந்ததை வட இந்தியச் சமயப் பின்னணி எடுத்துக் காட்டுகின்றது.

*(நன்றி. ஈழத்து இந்து சமய வரலாறு.)*

# சிவநெறி என்னும் செந்நெறி

குமாரசாமி சோமசுந்தரம்
B.A. (London) M.A. (Cey)

"பேறான வேதா கமமே பிறத்தலான்
மாறாத தென்திசை வையகஞ் சுத்தமே" – திருமந்திரம் (2755) இறைவனால் அருளப் பெற்ற வேத ஆகமங்கள் தோன்றிய இடம் தென்னாடு என்றும்; அதனால் அந்நாடு என்றும் புனிதமானது என்றும் திருமந்திரம் கூறுகின்றது.

இத் "தென்னாடுடையவன்" சிவன் என்பதையும்; "எந்நாட்டவர்க்கும் இறைவன்" சிவனே, என்பதையும் திருவாசகம் நமக்கு அறிவிக்கிறது.

இலங்கை, தென்னாட்டின் பிரதான பாகம் என்பதால் திருமூலர், அதனைச் "சிவ பூமி" என்று சிறப்பிக்கிறார்.

சரித்திர காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும், இலங்கையில் சிவ வழிபாடு இருந்து வந்துள்ளமைக்குச் சான்றுகள் உண்டு. சூரபன்மன், இராவணேஸ்வரன் ஆகிய பெரும் மன்னர்கள், சரித்திர காலத்திற்கு முற்பட்ட இலங்கை மன்னர்களாகக் குறிப்பிடப்படுவர்கள். அவர்கள் பெருஞ் சிவபக்தர்கள். சிவவழிபாட்டினை உலகெலாம் விளங்கச் செய்தவர்கள். சிவ ஈச்சரங்களை இலங்கையிலும், உலகின் ஏனைய பாகங்களிலும் ஸ்தாபித்து சிவநெறி பரப்பியவர்கள். "இராவணன் மேலது நீறு" என்று சைவநெறி வளர்த்த ஞானசம்பந்தப் பெருமான் குறிப்பிடுவதிலிருந்து, இராவணன் எத்துணை சிவபக்தி கொண்டவன் என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

இந்நாட்டின் பூர்வீகக் குடிகளான நாகர்கள், இயக்கர்கள் என்போர் சிவநெறியாளர்கள்.

மிகப் பழைய காலத்திலேயே இலங்கையின் நான்கு திசைகளிலும் ஈஸ்வரங்கள் எனப் புகழ்பெற்ற சிவத்தலங்கள் பல இருந்திருக்கின்றன. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், முன்னேஸ்வரம். சந்திரசேகரீஸ்வரம், தான்தோன்றீஸ்வரம் என்பன குறிப்பிடத்தக்கவை. சந்திரசேகரீஸ்வரத்தைத் தவிர ஏனைய ஈஸ்வரங்கள் இன்றும் உள்ளன.

தான்தோன்றீஸ்வரங்களுள் ஒன்று, மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையிலும் மற்றையது ஒட்டி சுட்டானிலும் அமைந்துள்ளன.

அருள்மிகு கொக்கட்டிச் சோலை தான் தோன்றீச்சரம் புனரமைக்கப் பெற்று புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நிகழ்வதால், மக்கள் புன்நெறியில் செல்லும் போக்கினை மாற்றி நன்நெறியில் ஒழுக வழிபிறக்கும் என்பது உறுதி. இத்தருணத்தில், திருமந்திரம் காட்டும் செந்நெறியாம் சிவநெறி பற்றி சிந்திப்போம், வாரீர்.

திருமந்திரம் என்பது திருமூலரால் பாடப்பெற்ற மூவாயிரம் பாடல்களைக் கொண்ட நூல்.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த மறைமொழி"யை மந்திரம் என்பர். திருமூலர் பாடல்கள் அனைத்தும் மறைமொழிகள் என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

திருநந்திதேவரின் அருள்நோக்கினைப் பெற்றவர் திருமூலர். "சைவப் பெருமைத் தனிநாயகன் நந்தி" என்று தமது குருமூர்த்தியை திருமூலர் போற்றுகிறார். சிவமே குரு மூர்த்தியாகவும் அமர்ந்தவர்.

"நந்தி வழிகாட்ட நானிருந்தேன்", என்று திருமூலர் கூறுவதிலிருந்து, நந்தி வகுத்த குருநெறியில் அவர்நின்றமையும் அதிலிருந்து வந்தமையும் புலனாகின்றது.

குருநெறி என்பது சிவம் ஆகின்றநெறி. குருவே சிவம் என்று திருநந்திதேவர், திருமூலருக்குக் கூறியுள்ளார்.

சிவம் – அது உரையற்றது; ஆனந்தமானது; அத்துடன் மௌனமானது. குருநெறி என்பது சிவநெறி, சைவநெறி, அன்பு நெறி ஆகும். சன்மார்க்க நெறி என்றும் கூறப்படுகிறது.

சைவத்தின் தனிநாயகன் திருநந்திதேவர், உலகில் வாழுகின்ற மனிதர்கள் உய்யும் வகையிலே வகுத்துத்தந்துள்ள குருநெறியாம் சைவநெறியை, அன்பு நெறியை, ஆகமமாய் அமைந்த நெறியைத் திருமூலர் மூவாயிரம் மந்திரங்களில், தமிழில் தந்துள்ளார். திருமந்திரம் இவ்வாறுதான் தோன்றிற்று.

சைவத்தின் மறைநூலாகவும், சாத்திரநூலாகவும், தோத்திரநூலாகவும் விளங்குகின்ற பெருமை திருமந்திரத்திற்குரியது. தமிழரின் சமயம் சைவம். சைவத்தின்

வேதமும் ஆகமமும் திருமந்திரம் ஆகும். தமிழ்ச் சைவத்தின் முதற்குரவர் திருமூலர் ஆவர்.

*"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்*
*தன்னை நன்றாகத் தமிழ் செய்யு மாறே."*
*"சீலாங்க வேதத்தைச் செப்பவந்தேனே."*
*"அந்திமதி புனை அரன் அடி நாள்தொறும்*
*சிந்தை செய்து ஆகமம் செப்பல் உற்றேனே"*

சிவத்தை நன்றாகச் சிந்தை செய்து, சிவ ஆகமங்களையே தமிழில் திருமந்திரங்களாகத் திருமூலர் செய்தமையை உணரக் கூடியதாக உள்ளது.

நம்பிரான் திருமூலர், திருவாய் மலர்ந்தருளிய திருமந்திர மாலை ஒன்பது தந்திரங்களைக் கொண்டு விளங்குகின்றது. காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரம், மகுடம் ஆகிய ஒன்பது ஆகமங்கள், ஒன்பது தந்திரங்களின் உள்ளடக்கம் ஆக உள்ளன. இந்நூல், சைவர்கள் அனைவராலும் ஓதப்படுதற்கும், உணரப்படுவதற்கும் உரிய நூல். அதுமட்டுமன்றி, ஓதி உணர்ந்தவற்றை வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகுதலும் அவசியம். சைவ சமயியாக வாழ்வதற்கு இந்நூல் நெறியமைத்துத் தருகிறது.

சிவநெறியும் செந்தமிழும் பிரிக்க முடியாதன; ஒன்றோடொன்று இயைந்தே இயங்குவன என்ற உண்மையைத் திருமந்திரம் தெளிவாக்குகின்றது. மனிதகுல உலகியல் சார்ந்த செம்மை வாழ்க்கைக்கும், ஆன்மிக ஈடேற்றத்திற்கும் இந்நூல் நமக்கு வழிகாட்டுகின்றது. அந்த வகையில்,

"மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவ ரன்றே."

என்னும் திருமந்திரப் பாடல், நூற்பயனைத் தெளிவாகக் கூறுகின்றது.

இறைவனின் கருத்தை விசாரித்தறிந்து, அதன்படி வாழ்க்கையை நடத்த வேண்டும் என்று பெரியோர் கூறுவர். இறைவனின் கருத்தும் திருக்குறிப்பும் திருமந்திரத்தில் தமிழ் செய்யப்பட்டுள்ளன. அவற்றைக் கண்டுணர்ந்தவர்களே திருமந்திரத்தைக் கற்றதன் பயனைப் பெற்றுக் கொள்வர். வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவர்களாயும், நல்ல வண்ணம் வாழ்பவர்களாயும் விளங்கும் வாய்ப்பினை அவர்கள் பெற்றுக் கொள்கின்றனர்.

இறைவனின் கருத்துத்தான் ஆகமம் – "சீலாங்க வேதம்" – திருமந்திரம். ஆகமத்தின் உட்பொருள் ஆக விளங்குபவை, அறம், அருள், அன்பு, கருணை, ஞானம் முதலிய விழுமியங்கள். அவை மனிதத் தன்மையும், தெய்வீகத் தன்மையும் வாய்ந்தவை. அவற்றை வாழ்வில் மேற்கொண்டால் கிடைப்பது இன்பம்; அலட்சியம் செய்தால் பெறுவது துன்பம்.

*"அண்ணல் அறைந்த அறிவு அறியா விடில்*
*எண் இலி கோடியும் நீர்மேல் எழுத்தே."* என்பது திருமந்திரம்.

அன்பையும், அறத்தையும் வாழ்க்கையின் பண்பும் பயனுமாகத் திருமந்திரம் அறிவிக்கின்றது.

*"அன்பு சிவம் இரண் டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்"*

அன்பு வேறு சிவம் வேறு என்று கொள்வது அறியாமை. அன்பும் சிவமும் ஒன்று எனக் கொள்வது அறிவுடைமை, அன்புடைமை, அறிவுடைமை, அருளுடைமை, பண்புடைமை முதலியன எவரினதும் தனி உடைமைகள் அல்ல. அவை எல்லோருக்குமுரிய பொதுவுடைமைகள் ஆகும். உலகியல் வாழ்வும் ஆன்மிகமும் வெவ்வேறு சாரார்களுக்கென்று கருதுதல் ஆகாது. உண்மையில் அவையிரண்டும் இணைந்தே இருக்க வேண்டியன; பிரிக்கப்படக் கூடாதன. அவை பிரிந்து தனித்தனியாகச் செயற்படும் போது தான் மனித வாழ்வில் கேடுகளும் கெடுதிகளும் எதிர்ப்படுகின்றன. இரண்டும் ஒன்றித்து நிற்கும் போது வாழ்வு வளமும் வண்மையும் பெறுகின்றது. ஒன்றின் வளர்ச்சிக்கு மற்றையது ஆதாரம் என்று கொண்டு இரண்டையும் இணைத்தே நோக்குகிறது திருமந்திரம்.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்னும் திருமந்திரப் பாடலடி ஆன்மிக ஒருமைப் பாட்டினை உணர்த்தி நிற்கிறது. அதன்வழி உலக ஒருமைப்பாட்டினை வற்புறுத்துகிறது. உலக ஒருமைப்பாட்டுணர்வே சமாதானத்திற்கு வழிவகுக்கிறது. இப் பெருந்தத்துவம் சைவ வாழ்க்கை நெறியின் உயிர்நாடி. அன்பு நெறியே சைவ வாழ்க்கைநெறி என்பது கருத்திற் கொள்ளத்தக்கது.

மனிதகுலம் ஒன்று என்ற விழுமிய கருத்து எம்மிடம் நிலை கொள்ளும் போது, அன்பு எல்லோர் மாட்டும் பிரவாகிக்கிறது. அன்பு வெளிப்பாடாகும் போது உலகில் பிரச்சினைகளுக்கோ முரண்பாடுகளுக்கோ இடம் தரப்படமாட்டாது. உலக சமாதானம், சாந்தி, அமைதி நிலவுவதற்குத் திருமந்திரம் காட்டும் நடைமுறைச் சாத்தியமான அன்புவழி நிகரற்றது.

அன்பின் வெளிப்பாடாகச் சேவை, இன்னா செய்யாமை, பிறர்நலம் பேணுதல், பிறர்மீது கரிசனை கொள்ளல், இரக்கம் போன்றன காணப்படுகின்றன. அன்பு உள்ள இடத்தில் அகந்தை, மமதை, கர்வம், பொறாமை, ஆசை, கோபம், காம இச்சை, பொய்மை முதலிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் மன உணர்ச்சிகள் மறைந்து விடுகின்றன. அதுவரை அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த அறிவு விடுதலை பெற்று அதன் பணியைத் தொடங்குகிறது.

உலகம் ஒன்று, இறைவன் ஒன்று, மனிதகுலம் ஒன்று என்னும் திருமந்திரச் சிந்தனைகள், மனிதர்கள், குறுகிய வட்டங்களுக்குள் தம்மைச் சிறைப்படுத்தாமல், சர்வதேசியத்துடன் இணைத்துக் கொள்ளவும், உலகக் குடிமகனாக வளர்ச்சி பெறவும், உலக நோக்கினை விருத்தி செய்து கொள்ளவும், அவர்களுக்கு உறுதுணையாகின்றன.

எமது பண்டைய புராண, இதிகாச நூல்கள், தர்மம், நீதி என்பவற்றை உலகில் நிலைநாட்டவும், அதர்மம், அநீதி என்பவற்றை அழிக்கவும் அகற்றவும் போர் வழியைக் கையாள்வதைக் காணலாம். கிருஷ்ணன் தூது, வீரவாகு தேவர் தூது, அநுமான் தூது, அங்கதன் தூது என்பன சமாதானத் தூதுகள் தான். ஆனால் அவை வெற்றியளிக்காமல், புராண இதிகாசக் கொள்கை தடுத்து விட்டது. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உகந்த வழி போர் வழியே என்பதை நிலைநாட்டுவதற்காக, தூதுக்கள் வெறும் கண்துடைப்பாகவே எடுத்துக் கொள்ளப்பட்டன.

ஆனால் திருமந்திரம் இக்கொள்கைக்கு முற்றிலும் மாறான கருத்தைக் கொண்டுள்ளது. திருமந்திரம் கூறுவது அன்பு வழி; போர் வழியன்று. எவர்க்கும் தீங்கிழைக்காமலும், எவற்றையும் அழித்தொழிக்காமலும் நீதியைப் பேணவும் தர்மத்தை நிலைநாட்டவும் அன்பு வழியே சிறந்தது என்பது திருமந்திரத்தின் நிலைப்பாடு ஆகும்.

அன்பினால் ஆகாதது ஒன்றில்லை அன்பு உரையற்றது; பேத உணர்வற்றது; எல்லையற்றது; எங்கும் நிறைந்துள்ளது; நிகரற்றது. அது உலகமகா சத்தியாகவுள்ளது. அதனால், "அன்பே சிவம்" என்கின்றது, திருமந்திரம்.

திருமந்திரம் காட்டும் மனிதநேயச் சிந்தனைகள் அது கொண்டுள்ள சமூக நோக்கினை வெளிப்படுத்துவதாக உள்ளன. சைவம், சமயநோக்குடன் மாத்திரம் நின்று விடவில்லை; பரந்த சமூக நோக்கையும் கொண்டுள்ளமையைத் திருமந்திரம் எடுத்துக் காட்டுகிறது.

*"படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்*
*நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா*
*நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்*
*படமாடக் கோயில் பகவற்க தாமே."*

மக்களுக்குச் செய்கின்ற தொண்டு மகேஸ்வரனுக்குச் செய்யப்படும் தொண்டாகக் கருதப்படும் என்னும் சிந்தனையை மேற்கண்ட திருமந்திரப் பாடல் உணர்த்துகிறது. திருக்கோயிலில் அமர்ந்திருக்கும் இறைவற்கு ஒரு பொருளைத் தந்தால், நடமாடும் கோயில்களாக விளங்கும் மனிதர்களில் உள்ள இறைவற்கு அது சென்று சேருவதில்லை. நடமாடும் மனிதர்களிடத்திலுள்ள இறைவற்கு ஒன்று ஈய்ந்தால், அது கோயிலில் உள்ள கடவுளுக்கும் போய்ச் சேரும். சாதாரண மக்களையும் சைவத்துடன் இணைக்கும் முயற்சியில், மனிதநேயச் சிந்தனைகளும் திருமந்திரத்தில் இடம் பெற்றுள்ளன. திருமந்திரம் இத்தகைய மனித விழுமியங்களை எடுத்துரைப்பதன் மூலம் சமூக வழிகாட்டியாகவும்; ஆன்மிகத்தை சமூக வயமாக்கும் முறைமையினை முன்வைப்பதாகவும் விளங்குகின்றது. மனிதர்கள் தம்மிடம் இயல்பாகவே ஆழ்ந்து கிடக்கும் ஆன்மீகத்தை மனிதக் கடமைகளிலும், குடும்பக் கடமைகளிலும், சமுதாயக் கடமைகளிலும், தொழிற் கடமைகளிலும் வெளிப்படுத்த வேண்டும் என்னும் நிலைப் பாட்டினைத் திருமந்திரம் கொண்டுள்ளது. ஆன்மீகம் தத்துவமாக மாத்திரம் அமைந்து விடாமல் நடைமுறை வாழ்விலும் மலர வேண்டும். அதனால் மனிதப் பெறுமானமும், வாழ்க்கைத் தரமும் உயரும்.

மானுடத்தைப் பேணவும், தெய்வீகத்தை எய்தவும், எல்லா வகைக் கட்டுக்கள், தீயபிணைப்புக்கள் என்பவற்றிலிருந்து மீளவும், சுதந்திரர்களாக வாழவும் திருமந்திரம் மனிதர்களுக்கு வழிகாட்டியாக உள்ளது. இந்த வகையில் திருமந்திரம் ஒரு வாழ்வியல் நூலாகின்றது.

திருமந்திரம் சைவசித்தாந்தம் தொடர்பான பல விடயங்களைக் கூறுகின்றது. சைவசித்தாந்தத்தின் மூல நூல் என்றும் கூறலாம். பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களின் உண்மை பற்றிக் குறிப்பிடப்படுகிறது. அவை அனாதியானவை.

*"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்*
*பதியினைப் போற்பசு பாசம் அனாதி*
*பதியினைச் சென்றணு காப்பசு பாசம்*
*பதியணு கிற்பசு பாசம் நிலாவே.* (115)

பதி என்பது சிவம். "சிவமாதல் வேதாந்த சித்தாந்தமாகும்" என்பதால் சைவசித்தாந்தத்தில் குறிக்கோள் தெளிவாகிறது. பசு என்பது உயிர். அதற்குப் பிறப்புண்டு. பிறப்புக்குக் காரணம் வினை – கன்மம். பிறப்பிருந்தால் இறப்பும் உண்டு. வினைக்கு ஏற்ப உயிர் உடம்பை எடுக்கிறது. அது பிறப்பு. ஆன்மாவைச் சூழ்ச் "களிம்பு" உண்டு. ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் தான் "களிம்பு" என்கின்றது திருமந்திரம். பதியாகிய இறைவன் ஆன்மாவை அணுகும் போது, பாசம் முற்றாக நீங்கி விடும்.

" .................................................கோன் நந்தி
*தாயினும் மும்மலம் மாற்றித் தயா என்னும்*
*தோயம தாய் எழும் சூரியன் ஆமே."* (116)

மிகுந்த கருணையுள்ள எம் பெருமானார் மும்மலங்களையும் முற்றாக நீக்கியருள்பவர்.

மும்மலங்களும் அகற்றப்பட்ட பின், பசு, பதிபோன்று அருள் நிறைந்ததாகி விடுகிறது. "சிவமாதல்" என்பது இதுவேயாகும்.

"மலம் களைந்து தாம் என மாற்றி அருளித்
தலம் களைந்தான் நல் சதாசிவம்................"

என்னும் பாடலடிகள் இதனை விளக்குகின்றது. வேறெந்தத் தவறான மார்க்கங்களையும் தவிர்த்து இறையைப் பதியைச் சாருங்கள் என்று வற்புறுத்தி, அதற்குரிய ஒன்பது யோகங்களையும் திருமந்திரம் வழங்கியுள்ளது.

உலகம், மற்றும் அண்டங்கள் ஆகியவற்றிற்கு அழிவில்லை. ஆனால் ஒருகால், அவை சுருங்கி, ஒடுங்கி இருக்குமே தவிர, அழியப் போவதில்லை என்னும் கருத்து திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

"அண்டம் சுருங்கில் அதற்கோர் அழிவில்லை
பிண்டம் சுருங்கில் பிராணன் நிலைபெறும்."

என்பது திருமந்திரப் பாடல்.

சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்னும் மூவகை உயிர்கள் பற்றியும் திருமந்திரம் கூறுகிறது. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் சைவநாற்பாதங்கள்; முப்பத்தாறு தத்துவங்கள், திருநீறு முதலிய சைவசமய உண்மைகள் பற்றிய விளக்கம் திருமந்திரத்தில் உள்ளது. எனவே, திருமந்திரம், பொருள் நூல் என்ற வகையிலும் போற்றுதற்குரியது. பொருள் நூலைச் சாத்திரநூல் என்றும் கூறுவர்; மறைநூலும் ஆகும்.

திருமந்திரம் தமிழ்மறையாக விளங்கும் அதேவேளை சைவத் தமிழ்த்திருமுறைகள் பன்னிரண்டினுள் பத்தாந் திருமுறையாகவும் திகழ்கின்றது. மூவர் தேவாரங்களுக்கும் முற்பட்ட காலத்தில் தோன்றிய திருமந்திர நூல், பல காலங்களாகத் திருவாவடுதுறைக் கோயிலின் பலிபீடத்தின் அடியிலே மக்களின் கண்களுக்குப் புலப்படாதவாறு மறைத்து வைக்கப்பட்டிருந்தது. கி.பி. ஏழாம் நூற்றாண்டில், சைவத்தை உலகில் விளங்க வைக்க வந்த சிவஞானச் செல்வர் திருஞானசம்பந்தப் பிள்ளையார், திருவாவடுதுறைக்கு எழுந்தருளித் திருக்கோயிலின் பலிபீடத்தை அண்மித்தபோது, அங்கு தெய்வத்தமிழ் மணம் கமழ்ந்ததை உணர்ந்தார். தமிழ் வேதமும் தமிழ் ஆகமும் ஆன திருமந்திரத்தில் இருந்து எழுந்த அருள் வாசனையே அது என்பதை அறிந்து கொண்ட ஞானசம்பந்த சுவாமிகள், எம்பெருமானுடைய திருவருட்சிறப்பினை வியந்து, அடியார்களின் துணை கொண்டு, பலிபீடத்தின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த திருமந்திரத்தை வெளிப்படுத்தி, உலகிற்கு ஈய்ந்தருளினார் என்பது வரலாறு.

திருமந்திரத்தை இன்றும் தேடுவார், நாடுவார், பயிற்சி செய்வார் மக்களிடையே மிக மிகக் குறைவாகவே உள்ளனர். அதற்குக் காரணம் உண்மையை உளங்கொள்ள மக்களில் பெரும்பாலோர் தயங்குவதும், பொய்ம்மையைப் போற்ற விழைவதுமே எனலாம். மக்கள்படும் பாடுகளுக்கும் துன்பங்களுக்கும் உண்மையை மறந்தமையே காரணம். சாந்தி, சமாதானம் ஓங்க வேண்டுமானால் உலக மாந்தர்கள் உண்மை நெறியில் நின்று, வாழ்க்கையை நடத்த வேண்டும். உண்மை நெறியை அறியத் திருமந்திரம் படித்தல் அவசியமாகும். திருமந்திர நெறி வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நெறி என்பதை உணர்ந்து கொள்வோமாக.

*"திருக்கோவில் செல்வார் திருமந் திரநூல்*
*உருக்கமுடன் கொண்டுசென் றோதின் – பெருக்க*
*அறமுதலாம் நான்கும் அருள்முதலாம் ஐந்தும்*
*உறவருள்வன் முக்கணிறை ஓது."*

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினையும், பேறு, பேற்று வழி, வழிபாடு, வழிபாட்டுறுதி, வாழ்வு என்னும் ஐந்தினையும் கூறும் நூல் திருமந்திரம்.

திருமந்திரம் உணர்ந்தோர் நன்னெறியில் ஒழுகி வாழ்வின் பயன்களை அடைவர்.

*" செந்தமிழின் வைப்பாம் திருமூலர் மந்திர நூல்*
*முந்துமறை ஐந்தெழுத்தின் முற்றுமுறை – தந்த தமிழ்*
*ஆகமமாம் பேறுவழி அவ்வழிபா டாமுறுதி*
*போகம் சிவயசிவ போற்று"*

# கொக்கட்டிச் சோலை தான்தோன்றீச்சரர் ஆலயம்

செல்வி. வ. விஜயலட்சுமி B.A. Dip. in. Ed
சமயக் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம் மகரகம.

மட்டக்களப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள பழமையும், சிறப்பும் வாய்ந்த சிவாலயமாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரர் ஆலயம் விளங்குகின்றது. அத்துடன் இப்பிரதேசத்தில் தேரோட்டம் இடம் பெறும் ஒரே ஒரு ஆலயமும் இதுவேயாகும். இவ்வாலயத்தின் பல்வேறு அம்சங்களை நோக்குவதன் மூலம் ஆலயம் பற்றிய மேலதிக விடங்களை அறிந்து கொள்ள முடியும்.

## ஆலயத்தின் அமைவிடம்

கொக்கட்டிச் சோலை தான்தோன்றீச்சர ஆலயம் மட்டக்களப்பிலிருந்து தெற்கே 15 கி.மீ தொலைவில் வயலும் வயல் சார்ந்த பிரதேசமான மருதநில மத்தியில் அமைந்துள்ளது.

## தலவரலாறு

ஆலயத்தின் தலவரலாற்றினை நோக்கும் போது பண்டைக்காலத்தில் இவ்விடத்தில் கொக்கட்டி மரங்கள் நிறைந்திருந்தபடியால் கொக்கட்டிச்சோலை என வழங்கலாயிற்று. அத்துடன் இவ்வாலயத்து சிவலிங்கம் தானே கொக்கட்டி மரத்தினடியிலே தோன்றியமையாலும் கொக்கட்டிச் சோலை என இவ்விடம் வழங்கப்படுகிறது. ஆலயத்தின் பெயரால் தலம் விசேடம் பெறும் பண்பினை கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரர் ஆலயத்தில் காணலாம்.

இவ்வாலயத்துடன் தொடர்புடையதாக பல்வேறு செவி வழிக்கதைகள் உள்ளன.

ஒரிசாவிலிருந்து (கலிங்கதேசம்) வந்து மண்முனைப் பிரதேசத்தை ஆட்சி செய்தவள் கலிங்க அரசி உலகநாச்சியார். இவரது ஆட்சிக் காலத்தில் திடகன் என்னும் வேடர்குலத்தலைவன் கொக்கட்டிமரப் பொந்தொன்றில் தேன்கூடு இருப்பதைக் கண்டு, அதில் தேன் எடுக்கும் பொருட்டு மரத்தைவெட்ட, அதிலிருந்து உதிரம் பாய்ந்தது. அதனைத் தன் உடைத் துணியால் கட்டிவைத்துவிட்டு அரசியிடம் அறிவித்தான். அவள் வந்து பார்க்கும் போது அம்மரத்தடியில் ஒரு லிங்கம் இருந்தது. அது சிவலிங்கம் என உறுதி செய்து, ஆலயம் அமைத்து, அதற்கு பூசை செய்ய வடநாட்டிலிருந்து பூசகர்களை வரவழைத்தார். இக்கதை வேடர்காலத்துடன் தொடர்புபடுத்திக் கூறப்படுவதால் தான் தோன்றீஸ்சரர் ஆலயம் கி.பி. 370 காலத்தைச் சேர்ந்ததெனலாம்.

மேலும், கதிர்காம யாத்திரைக்கு வந்த கொக்கட்டியார் என்னும் இந்தியத் துறவி ஒருவர் இங்கு சமாதி இருந்ததாகவும் கூறப்படுகின்றது. இச்சமாதி கோயிலின் மேற்கு எல்லைக்கு அப்பால் அமைந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இவ்விதம் தோன்றிய சுயம்பு இலிங்கத்திற்கு நிலையான ஆலய அமைப்பு ஏற்பட்டது தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

1. உலகநாச்சி என்னும் சிற்றரசியால் கோயில் கட்டப்பட்டது.
2. இந்தியாவிலிருந்து வந்த செட்டி ஒருவரால் கட்டப்பட்டது.
3. பொலனறுவை அரசனாக இருந்த சேனன் என்பவனால் பாண்டிய நாட்டுக்கு அனுப்பப்பட்ட தளபதியும், மட்டக்களப்பு நிதியதிபனுமாகிய தருமசிங்கன் என்பவனால் கட்டப்பட்டது.
4. குளக்கோட்டு மன்னனால் கட்டப்பட்டது.

மேற்கூறிய பல தகவல்கள் காணப்பட்டாலும், குளக்கோட்டனால் இந்த ஆலயம் கட்டப்பட்டது என்பதற்கு கல்வெட்டுப் பாடல் ஒன்று ஆதாரமாக உள்ளது. "சீர்மேவு........." எனவரும் பாடலில் இடம் பெறும் "மேன்மை தான் தோன்று லிங்கம்' எனவரும் பாடலடி மூலம் குளக்கோட்டன் இவ்வாலயத்திற்குத் திருப்பணி புரிந்ததை அறிய முடிகின்றது.

மேலும் ஆலயத்தின் பல்வேறு அம்சங்களையும் நோக்கும் போது இது கி.பி. 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததெனக் கூறலாம்.

இலங்கையை ஆண்ட போர்த்துக்கேயர் இவ்வாலயத்தின் மகிமையை அறிந்தனர். அழிக்கமுற்பட்டு வந்த வேளை ஆலயப் பூசகர் தடுத்து நிறுத்தியும் கேட்கவில்லை. போர்த்துக்கேய தளபதி ஒருவன், அங்கு பிரதிட்டை செய்யப்பட்ட நந்தியானது புல் தின்னுமா? எனக் கேட்க பூசகரும் இறையருளில் நம்பிக்கை வைத்து "நந்தி புல் தின்னும்" எனக் கூறினார். நந்தி உயிர் பெற்றெழுந்து பூசகர் இட்ட அறுகம் புல்லை உண்டு சாணமும் இட்டு பழையபடி கல்லாக மாறியது. இதனைக் கண்டு பயந்து அவர்கள் ஆலயத்தை இடித்தழிக்காது சென்று விட்டனர்.

மேலும், இவ்வாலயம் பற்றிய இலக்கியச் சான்றுகளும் உள்ளன. "இலங்கையில் இந்து சமயம்" என்னும் ஆங்கில நூலின்

ஆசிரியரான வண. ஜேம்ஸ் காட்மன் அவர்கள், தனது நூலில் இவ்வாலயம் பற்றிக் கூறுமிடத்து இவ்வாலய இலிங்கம் மிக்க சக்தி வாய்ந்தது எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

### மூர்த்தி விசேடம்

இவ்வாலயத்தில் கோயில் கொண்டிருக்கும் சுயம்பு நாதர் பார்வதியுடன் வீற்றிருந்து அடியார்க்கு அருள் புரிந்து வருகின்றார்.

### பூசை முறை

இவ்வாலயத்தில் நித்திய, நைமித்தியக் கிரியைகள் முறையாக நடைபெறுகின்றன. நித்திய பூசை மூன்று நேரப் பூசையாகவும், நைமித்திய பூசையாக – தைப்பொங்கல், தைப்பூசம், சித்திரை புதுவருடப்பிறப்பு, சித்திரை சித்திரை, திருக்கார்த்திகை, பார்கழித் திருவாதிரை முதலியனவும் இடம் பெறுகின்றன. அத்துடன் சிவராத்திரி விரதம், கந்தசஷ்டி விரதம், விநாயகர் சஷ்டி விரதம் என்பனவும் இத்தலத்தில் அனுட்டிக்கப்படுகின்றன.

### மகோற்சவம்

இவ்வாலய மகோற்சவம் ஆவணி மாதத்தில் பதினாறு நாட்கள் நடைபெறும். ஆவணி மாத முதற்பிறையன்று கொடியேற்றமும் அதனை அடுத்துவரும் பூரணைக்கடுத்த திங்கட்கிழமை தீர்த்தமும், தீர்த்தத்திற்கு முதல் நாளில் தேர்த் திருவிழாவும் இடம்பெறும். இற்றைக்கு பல்லாண்டுகளுக்கு முன்னர் இந்தியச் சிற்பிகளினால் வடிவமைக்கப்பட்ட தேர்களிலே தான் பெருமான் பரிவாரமூர்த்திகளுடன் பவனி வருகின்றார்.

தீர்த்தத் திருவிழாவன்று அதிகாலை திருவேட்டைத் திருவிழா இடம் பெறும். இது இறைவன் மும்மலங்களை அழிக்கும் பாவனையில் அமைந்ததாகும். வேட்டைத் திருவிழாவைத் தொடர்ந்து கோயிற் தொழும்புகளில் ஈடுபட்டோரையும் விழாப் பொறுப்பாளராய் இருந்த பெருமக்களையும் கௌரவிக்கும் சீர்வரிசையாக, ஆண்டவனால் அருளப்பெறும் திருவருட் பிரசாதம் கொண்டு திருமுட்டி வழங்கப்படும். இது "குடுக்கை கூறல்" என வழங்கப்படும்.

### பூசகர் பரம்பரை

கோயிலில் பூசை செய்வோர் சைவக் குருக்கள் பரம்பரையினர். இவர்கள் சங்கமர் குலத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் லிங்கத்தை அணிந்தவர்கள், லிங்காயுதர்களைப் போன்றவர்கள். இந்தியாவிலுள்ள கர்னாடக பிரதேசத்திலிருந்து குளக்கோட்டமன்னனால் கோயில் பூசைக்கென வரவழைக்கப்பட்டவர்கள். இன்று சங்கமர் பூசை செய்யும் ஒரே ஒரு ஆலயமும் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்சரர் ஆலயம் மட்டுமேயாகும்.

### கோயில் நிர்வாகம்

கோயிலின் பரிபாலனம் மூன்று வண்ணக்குமாரின் கீழ் உள்ளது. இவர்கள் கலிங்காகுடி, உலகிப்போடி குடி, படையாண்டகுடி என்பவற்றைச் சேர்ந்தவர்கள். இவ்வண்ணக்குமார் முறையே,

| | | |
|---|---|---|
| காலிங்காகுடி | – | தலைமைப் பதவி |
| உலகிப் போடிகுடி | – | பொருளாதார அலுவல்கள் |
| படையாண்டகுடி | – | நிருவாக நடைமுறை |

என்பவற்றைக் கவனிப்பர்.

### இவ்வாலயத்தின் மீது பாடப்பட்டநூல்கள்

திருக்கோணேச்சரம், திருக்கேதீஸ்சரம் போன்று கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சர ஆலயம் பாடல் பெற்றதலமன்று. நாட்டார் இலக்கியங்களான நாட்டுக் கூத்து என்பற்றில் காப்புச் செய்யுளில் இத்தலமும், ஈஸ்வரரும் போற்றப்பட்டுள்ளனர். இவற்றைவிட புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை, சின்னவப்புலவர் என்போரால் இவ்வாலயத்தின் மீது இரு பதிகங்கள் பாடப்பட்டுள்ளன.

### சிறப்பு

பண்டைக்கால அரசர்களின், மானியமும், சீர்வரிசையும் பெற்ற கோயில்கள் திருப்படைக் கோயில்கள், அல்லது தேசத்துக் கோயில்கள் எனப்பட்டன. அத்துடன் இத்தகைய கோயில்களில் பல்வேறு சாதிமக்களுக்கும் உரிமை இருக்கும். இத்தகைய கோயில்களுள் ஒன்றாகக் கொக்கட்டிச்சோலை தான் தோன்றீச்சரம் விளங்குகின்றது.

மேலும், குளக்கோட்டன், கலிங்கமாகன், விமலதர்ம சூரியன், விக்கிரமசிங்கன் என்னும் மன்னர்களால் மானியங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதலமுமாகும்.

இந்நாட்டு தமிழ் மக்களது பழமையான சைவ சமயத்தினோடும், சைவக் கோயில்களோடும் சைவப் பழக்க வழக்கங்களோடும் பின்னிப் பிணைந்த பல்வேறு அம்சங்கள் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீச்சர ஆலயத்தில் வழக்கிலிருப்பது கண்கூடாகும்.

# உயிர்க்கு உயிராம் ஒளி

பூ. சுப்பிரமணியம் B.A (Cey) Dip-in-Ed
*பதிப்பாசிரியர் – தமிழ் மொழித்துறை – தேசிய கல்வி நிறுவனம்*

*உலகநிலை முழுதாகி ஆங்காங்குள்ள*
*உயிராகி உயிர்க்குயிராம் ஒளிதானாகிக்*
*கலக நிலை அறியாத காட்சியாகிக்*
*கதியாகி மெய்ஞானக் கண்ணதாகி*
*இலகுதிதா காசமதாய்ப் பரமாகாச*
*இயல்பாகி இணையொன்றும் இல்லாதாகி*
*அலகில் அறிவானந்த மாகிச் சச்சி*
*தானந்த மயமாகி அமர்ந்த தேவே.*

இறைவன் சோதி வடிவானவன், ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருச்சோதி எனச் சிவனை அடியார்கள் போற்றுகின்றனர். சோதி என்பது ஓர் ஒளிப்பிழம்பு; அதன் வடிவமே இலிங்கம் என்பர். எனவே சோதியின் தத்துவம் இலிங்க தத்துவம் எனலாம்– இறைவன் ஞானவடிவினன். அதுவே ஞான ஒளி – உலகின் தோற்றத்திற்கும் இயக்கத்திற்கும் இந்த ஒளியே மூல சக்தியாகும்.

*"தழைக்கும் உயிர்கட் கெல்லாம்*
*துணைக் கரம் கொடுப்பாய் சோதி"*

சங்கரன் இறையோன் சம்பு சதாசிவன் பேயோடாடி பொங்கர வணிந்த மூர்த்தி புராந்தகன் பூதநாதன் ......" என இறைவனைப் பல பெயர் கொண்டழைத்தாலும், பல வடிவில் கண்டாலும் இறைவனின் மூலவடிவம் ஒன்றே. அதுதான் சோதி வடிவம். சோதியைச் சோதிவடிவமாகக் காணமுடியாதவர்கள் அதனை இலிங்க வடிவமாகக் கண்டனர். சோதியைக் கண்டு வழிபடமுடியாதவர்கள் இலிங்க வடிவத்தை வணங்கிச் சோதியைக் காண முற்பட்டனர். சோதி தானகத் தோன்றும்; தானாக மறையும். மனிதர் யாரும் அதனைத் தோற்றுவிக்க முடியாது. ஆனால் அதனைக் கண்டு வணங்கிப் பேறடைய முடியும். சோதியின் வடிவமான இலிங்கமும், சோதியின் சக்தியால் தானாகத் தோன்றக் கூடியது. அவ்வாறு தானானகத் தோன்றும் இலிங்கமே 'சுயம்பு லிங்கம்' எனப்படும். அதனையே தான்தோன்றீசுவரர் என அழைப்பர்.

இறைவன் தானாகவே இலிங்கமாகத் தோற்றமளித்து அருள்பாலிக்கும் தலங்கள், தான்தோன்றீஸ்சுவரர் ஆலயம் எனப்படும். அவ்வாறான இலிங்கம் தோன்றி ஆலயம் அமையப் பெற்ற திருத்தலங்களில் ஒன்றுதான் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீசுவரர் ஆலயமாகும். இறைவனின் மூலவடிவமான ஒளிக்கு ஆதியும் அந்தமும் இல்லாதது போலவே, தானாகத் தோன்றும் இலிங்கத்திற்கும் ஆதியும் அந்தமும் கிடையாது. கொக்கட்டிச்சோலையிலே கோயில் கொண்டருளிய தான்தோன்றீசுவரர் எப்போது இலிங்க வடிவமாக அங்கு தோற்றமளித்தார் என்பது கூறமுடியா;' தொன்றாகும்.

*"திக்கெல்லாம் அருள் சுரக்கத் திருவுளம் கொண்டதனால்*
*கொக்கட்டிச் சோலையிலே கோயில் கொண்டமர்ந்தாரே"*

என்று மட்டும் கூறமுடியும்.

கோயிலும் குளமும் சோலையும் நிறைந்தது கொக்கட்டிச்சோலை. அங்கு தோன்றிய லிங்கம் பல நூறுவருடங்களுக்கு முன் தானாகவே தோன்றியது. சோழராட்சிக்கு முற்பட்ட காலத்தில் குறுநிலமன்னர்கள் நாட்டை ஆண்ட காலத்தில் அந்த லிங்கம் காணப்பட்டதாக, மரபுவழிக் கதைகள் மூலம் அறியப்படுகின்றது. உலகநாச்சி என்ற சிற்றரசி ஒருவர் ஆட்சி புரிந்த காலத்தில், விவசாயத்திற்காக அப்பிரதேசக் காட்டை அழித்தபோது ஒருவன் கொக்கட்டி மரத்தில் அந்த இலிங்கத்தைக் கண்டதாகவும், அவனே முதலில் அதற்குத் தடிகளாலும், இலைகளாலும் கோயில் அமைத்து வழிபட்டதாகவும் கூறப்படுகின்றது. அதன் பின்பு அரசர்கள் அக்கோயிலை நிர்மாணித்து மக்கள் வழிபாட்டுக்கு உதவினர். சோழமன்னர் ஆட்சிக் காலத்தில் இத்தலம் சீரும சிறப்பும் பெற்றுத் திகழ்ந்ததாகவும், அங்கு சென்று வழிபட்டோர் பல பேறுகள் பெற்றதாகவும் அறியக்கிடக்கின்றது. கலிங்க மாகோன் காலத்தில் இதற்குத் தொண்டுழிய விதிகள் அமைக்கப்பட்டன.

*'கானகத்து வேடனுக்குக் காட்சிதந்த லிங்கமதாய்*
*நானிலத்து மக்களுமே நாடிவந்து வழிபட்டுய்யத்*
*தேனகத்துச் சோலைதனில் தேடிவந்து அமர்ந்தவருட்*
*தானகத்தை வணங்கியவர் தாரணியிற் சிறப்புற்றாரே'*

எனஅவனருளாலே அவன்தாள் வணங்க அருள்பாலித்த ஒரு தன்னிகரில்லாத் தலம்தான் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்சுவரர் ஆலயம் எனலாம்.

15ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே இலங்கையை ஆக்கிரமித்த போத்துக்கேயர், தமது மதத்தைப் பரப்புவதற்காகச் சைவக்கோயில்கள் சிலவற்றை இடித்தனர். அதே ஐசங்கரியத்திற்காகக் கொக்கட்டிச்சோலைக்கும் சென்றனர். ஆனால் அங்கு போத்துக்கேயத் தளபதியே பயந்து நடுங்கி ஓடும்படியான ஓர் அற்புதம் நிகழ்ந்தமை தான்தோன்றீஸ்சுவரரின் மகிமையையும் கருணையையும் உணர்த்துவதாகும். கோயில் பக்கம் வந்த தளபதி அங்கு அமைந்த நந்தியைக் கண்டு, ஏளனமாகப் பல வார்த்தைகள் கூறி "இந்த மாடு புல்லுத் தின்னுமா" எனக் கேட்டுப் பூசகரைக் கேலி செய்தானாம். பூசகர் மனம் நொந்து தான்தோன்றீஸ்சுவரரை வணங்கினார். அவ்வளவுதான், நந்தி காளையாக எழுந்தது; ஐயர் கொடுத்த புல்லைத்தின்றது; சாணி போட்டது; எக்காளமிட்டுக் கத்தி வெகுண்டது. இதனைக் கண்ட பறங்கித் தளபதி நடுநடுங்கி, விழிபிதுங்கக் குடல் கலங்கித் "தப்பினேன் பிழைத்தேன்" என ஓட்டம்பிடித்தாராம். இதுமட்டுமல்ல உள்ளூர்க் கள்வனொருவன் தங்கப்பொருட்களைக் கவர்ந்து செல்லத் தெய்வத்தைத் துச்சமென மதித்து இக்கோயிலுட் புகுந்தானாம். சென்றவனுக்குக் கண்கள் பார்வை இழந்தது. எங்கும் ஒரே இருள்; திக்குத் திசைகள் தெரியவில்லை. தப்பியோட முனைந்தான். எங்கே ஓடுவது? ஒரு வழியுமே தென்படவில்லை. சுவர்களில் மோதி மோதித் தத்தளித்தான். இந்தச் சம்பவம் பூசகருக்குக் கனவாகத் தோன்றியது. அதிகாலையில் வழமைப்படி பூசகர் கோயிலுக்குச் சென்றார். என்ன அதிசயம் கள்வன் திக்குத் திசை தெரியாமல் அங்குமிங்கும் ஓடிச் சுவர்களில் மோதிக் கொண்டிருந்தார். பூசகர் மிகஅமைதியாக "யாரப்பா நீ? இங்கு ஏன் வந்தாய்?" என்று கேட்டார். திருடன் பார்வை பெற்றான். பூசகரைக்கண்டு நடுநடுங்கி, ஒன்றும் பேசமுடியாமல் விழுந்து வணங்கினான். அன்று தொட்டு அவன் களவு எடுப்பதையே நிறுத்தி விட்டானாம். இவ்வாறு பல அற்புதங்களை நிகழ்த்தி மக்களுக்குக் கருணை பொழிந்த இடம் தான் தான்தோன்றீசுவரர் ஆலயம்.

பல வருடங்களுக்குப் பின், அவனருளால் ஏற்பட்ட திருப்பணி வேலைகளைத் தொடர்ந்து, கலைகள் பல கொண்டு நிலை மிகவுயர்ந்து புதுப்பொலிவுடன் காட்சிதந்து இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவதும், தான்தோன்றீஸ்சுவரர் மக்கள் மீது அருள்பாலிக்கத் திருவுளம் கொண்ட கருணையே எனலாம்.

*"வித்தாகி முளையாகி விளைவதாகி*
*விளைவிக்கும் பொருளாகி மேலுமாகிக்*
*கொத்தாகிப் பயனாகிக் கொள்வோனாகிக்*
*குறைவாகி நிறைவாக்கிக் குறைவிலாத*
*சத்தாகிச் சித்தாகி இன்பமாகிச்*
*சதாநிலையாய் எவ்வுயிர்க்குஞ் சாட்சியாகி*
*முத்தாகி, மாணிக்க மாகித் தெய்வ*
*முழுவயிரத் தனிமணியாய் முளைத்த தேவே*



# வீரசைவ மரபும் யாழ்ப்பாணத்து வீர சைவரும்

வ. மகேஸ்வரன்
*விரிவுரையாளர் தமிழ்த்துறை பேராதனைப் பல்கலைக்கழகம்.*

சைவசமயம் தொன்மையான மரபுகளை உடையதாக விளங்குகிறது. அம்மரபில் காலத்துக்குக் காலம் பல்வேறு உபபிரிவுகள் தோன்றி, வளர்ந்து, மறைந்து போயுள்ளன. பாசுபதம், வாமம், பைரவம், மகாவர்த்தம், காளாமுகம் ஆகியவற்றை இங்கு குறிப்பிடலாம். இவற்றைப்போலவே வீரசைவமும் சைவசமய மரபில் தோன்றிய ஒரு பிரிவாகக் கருதப்படுகின்றது. மேற்குறித்த ஐந்து பிரிவுகளுடைய கூட்டிணைப்பே வீரசைவம் என்றும் அறிஞர் குறிப்பிடுவர்.[1] சைவம் என்ற சொல்லுக்கு வீர என்ற அடைமொழி இணைத்து வீர சைவம் என வழங்கப்படுகின்றது. அதற்குரிய காரணங்களை அறிஞர்கள் பல்வேறு விதமாக விளக்குகின்றார்கள். பேராசிரியர் சாக்கோர் வீரம் நிறைந்த சைவக் கொள்கை என விளக்குகின்றார். ஆரியக் கருத்துக்களை மறுத்தவர்கள் வீரசைவர்கள் என்று மறைமலையடிகள் கூறுவார்.

வி – விகற்பம் ர–ரகிதம் – விகற்ப ரகிதமான சமயம். அதாவது மாறுபாடுகளை நீக்கிய சமயம் என்றும், சிவபக்தியில் வீரர் வீரசைவர்கள். வி – ஞானம், ர – ரமிப்பவன் சிவ ஜீவர்களின் இணைப்பைத் தெரிவிக்கும் ஞானத்தில் தன்னை மகிழ்வித்துக் கொண்டவன். சிவஜீவ ஞானமுள்ள சிவபக்தன் என்றும் பலவாறாக விளக்கம் கூறப்படுகின்றது. மேலும் சாதிக் கொடுமைகள் மூடப்பழக்கவழக்கங்களை உணர்ச்சியால் உந்தப்பட்டு எதிர்த்து அழிக்க முற்படுகின்றவர்களையும் வீரசைவர் என்று கூறுவதுண்டு. கோயிலில் எழுந்தருளச் செய்துள்ள இலிங்கங்களை வீரசைவர்கள் வழிபடக்கூடாது. எனினும் கோயிலில் உள்ள இலிங்கங்களுக்கு ஊறு நிகழுமாயின் வீரசைவன் தனக்கோ தன் உயிருக்கோ தீமை வருமெனக் கருதாமல் வன்முறையை உபயோகித்தேனும் அதைத்தவிர்த்தல் வேண்டும் என்று சித்தாந்த சிகாமணி குறிப்பிடுகின்றது.

மேற்குறித்த கூற்றுகளை மறுத்த பேராசிரியர் இரத்தின சபாபதி

> *"நெறியாலும் வீரத்தோடு இயைபுடையது;*
> *சென்றடையக் கூடிய முடிவிடத்தாலும்*
> *வீரத்தோடு இயைபுடையது (சாதன சாத்யம்);*
> *ஆதலின் வீரசைவம் எனப்பெற்றது.*

எனக் கூறுகின்றார்.[2]

வீரசைவத் தோற்றத்தைக் கூறும் மரபுவழிபட்ட வரலாறு ஒன்றுண்டு. இரேவணாராத்யா, மருளாராத்யா, பண்டித ராத்யா, ஏகோராம ராத்யா, விசுவ ராத்யா என்ற ஐந்து ஆசாரியர்கள் பரமசிவனின் ஐந்து முகங்களில் இருந்து வெளிவந்தார்கள். அவர்களால் தோற்றுவிக்கப்பட்டதே வீரசைவம் ஆகும்.[3] இந்த மரபு தவிர கன்னட நாட்டில் பசவ மரபு என்ற ஒன்றும் உள்ளது. "கி.பி பன்னிரண்டாம் நூற்றாண்டில் சமணமும், வைணவமும் உயர்நிலைக்கு வந்தன. சைவம் வீழ்ச்சியடைந்தது. அப்போது ஒரு தலைமகனார் தோன்றி குறைந்த கால அளவிலேயே சைவக் கருத்துக்களை புரட்சிகரமானதாக்கினார். அவருடைய முயற்சியானது வீரம் வாய்ந்தது, அடைந்த பயனும் விளக்கமானது. சைவம் வருணாச்சிரம முறைகளினால் உண்டாக்கிய கேடுகளைத் தகர்த்து வெற்றி கொண்டு எழுந்தது. வீரசைவத்தைத் தோற்றுவித்த அத்தலைமகனார் யாரெனில், அப்போது கன்னட மாநிலத்து அரசனின் முதலமைச்சராவார்" என்று பேராசிரியர் சாக்கோர் குறிப்பிடுகின்றார்.[4]

வீரசைவம் பற்றிக் கூறவந்த கிருஷ்ணசாமி ஐயங்கார் சமூக மறுமலர்ச்சியே இதன் அடிப்படை என்று குறிப்பிடுகின்றார். எனினும் அவர் இவ்வீரசைவ மரபு இரண்டு தன்மைகளைக் கொண்டதென்று கூறுகின்றார்.

முதலாவது பழமைவாதம் சார்ந்தது. இது பெரும்பாலும் பிராமணர் இயக்கமாகவே காணப்பட்டது. வேதம், கிரியைகள் முதலியவற்றை ஆதாரமாகக் கொண்டது. தனிமனிதபக்திதான் இங்கு முக்கியம் பெறும். சுய சரணாகதியே இது போதித்தது. வேதக் கொள்கைகளை நம்பும் இது "ஆராதியர்" Aradhyas) எனப்பட்டது. தெலுங்கு தேசத்திலும், கன்னட நாட்டிலும் இது காணப்பட்டது.

இரண்டாவது அமைப்பு இலிங்காயத்துக்கள் எனப்பட்டது. இது பசவர் போதித்த கொள்கைகளையே ஆதாரமாகக் கொண்டது. இதனைப் பசவரே ஸ்தாபித்தவர்களாவர். பசவ புராணம் அவர் பற்றிய தகவல்களைத் தருகின்றது. தென் மகாராஷ்டத்திலுள்ள விஜாப்பூர் என்னும் கிராமத்தில் பிராமண குலத்தில் பிறந்தவர் பசவர். பிஜ்ஜால அரசனின் அமைச்சராக அவர் இருந்தவர். அமைச்சுப் பதவியை தனது நெறியை வளர்க்கப் பயன்படுத்திக் கொண்டதால் அவரது பக்தர்கள் பெருகினர். இதனால் சமண சமயத்தவரான அரசனுக்கும் பசவருக்குமிடையே முரண்பாடுகள் தோன்றின. அவரது சீடர்கள் இருவர் அரசரைக் கொலை செய்தனர். பசவர் கூடலி சங்கமேஸ்வரர் என்ற இடத்திலிருந்து தமது சமயத்தைப் போதித்து சிவனுடன் கலந்தார் எனக்கூறப்படுகிறது. பின்பு பசவருடைய தங்கை மகனான சின்னப்பசவர் என்பவரால் இந்நெறி தொடர்ந்து வளர்த்தெடுக்கப்பட்டதென்று பசவபுராணம் கூறுகின்றது.

கி.பி 1336 இல் தோற்றங் கொண்ட விஜயநகரப் பேரரசில் இம்மரபு மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்தது என்பர்.[5] "அவர்கள் மிகவும் தீவிரமான சைவப் பற்றுறுதி உடையவர்கள், எப்போதும் லிங்கதாரிகளாகக் காட்சியளிப்பர்; வேதத்தின் மேலாண்மையை அவர்கள் நிராகரித்தனர். மறுபிறவிபற்றிய கொள்கையில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. பால்ய விவாகத்தை எதிர்த்தனர், விதவை விவாகத்துக்கு ஆதரவளித்தனர். பிராமணர்கள் மீதான தீவிரமான பகைமை கொண்டிருந்தனர். இவர்கள் கர்நாடக மாநிலத்தில் விசேடமாக வணிகக் குழுமங்களுள் மிகவும் செல்வாக்குப் பெற்றவர்களாக விளங்கினர்" என ரி. வி. மகாலிங்கம் குறிப்பிடுகின்றார்.[6]

வீரசைவ நெறியில் ஐவகை ஒழுக்கம், எண்வகைக் காப்பு, சடுத்தலம் என்ற மூவகை நெறிகள் உள்ளன. ஐவகை ஒழுக்கமானது இலிங்க ஒழுக்கம், தன்னிறுத்தலொழுக்கம், சிவவொழுக்கம், தாழ்வெனும் சைவ ஒழுக்கம், கூட்டமைப்பு ஒழுக்கம் எனப்படும். இதையே வடமொழியில் இலிங்காசாரம், சதாசாரம், சிவாசாரம், பிருத்யா சாரம், கணாசாரம் எனக் குறிப்பிடுவதுண்டு. இந்த ஒழுக்கங்களை ஒழுங்குடன் கடைப்பிடித்தவன் இறையின்பத்தின் உயர்நிலையை அடைய முடியாது. சமய ஒழுக்கம் என்பது பொதுவாகத் தனிமனிதனின் ஒழுக்கம் என்பதாகும். தனி மனித ஒழுக்கத்தை வலியுறுத்த வேண்டி வீரசைவம் அவனை ஒரு உலகப் பொதுமையாளனாக ஒருமைப் பண்பாளனாக ஆக்குவதற்குரிய பயிற்சியை இந்த ஐவகை ஒழுக்கத்தில் வலியுறுத்துகின்றது.[7] குரு, இலிங்கம், சங்கமம், பாதோதகம் (திருவடி நன்னீர்), பிரசாதம், திருநீறு, உருத்திராக்கம், திருமந்திரம் எனபவையே எண்வகைக் காப்புகளாகும். வீரசைவத்துறையில் ஐவகை ஒழுக்கம் (பஞ்சாசாரம்) என்ற முதற்படியில் நின்று வெற்றி எய்தியமையால் ஜீவன், ஆத்மன் ஆகின்றான். எண்வகைக் காப்பினால் (அஷ்டா வரண) ஆத்மன் அங்கனாக மாறுகின்றான். ஐவகை ஒழுக்கத்தில் கிரியை மட்டும் மூலமாக நிற்கின்றது. இங்கே கிரியையும், ஞானமும் இணைகின்றன. ஐவகை ஒழுக்கம் யாவருக்கும் பொதுவாகலாம். எண்வகைக் காப்புத்தான் வீரசைவன் என்னும் தனித்தன்மை நல்கக் கூடிய சிறப்பு ஒழுக்கங்களாகும்.[8]

ஜீவாத்மா சிவபரம் பொருளுடன் இணைவது சடுத்தலம் எனப்படும். இதனை வீர சைவநெறி எனப் பொதுவாகக் கூறுவதும் உண்டு. வீரசைவர்களது தலைசிறந்த குறிக்கோள் இலிங்காங்க சம்பன்னராய்ச் சிவைக்கியமாதல் ஆகும். அதனை அடையும் முறையே சடுத்தலம் என்று கூறுவர். இந்நிலையில் சாதகர்கள் ஆறு மனோதத்துவ நிலைகளைப் படிமுறையிலே ஒன்றன் பின் ஒன்றாகக் கடந்து சென்றால் மோட்சநிலை எய்துவர் என்பது கோட்பாடு. வீரசைவர் தமது வாழ்வில் ஐவகை ஒழுக்கங்களால் வெற்றியீட்டி எண்வகைக் காப்புக்களால் தூய்மைபெற்று இறைவனோடு இணைவதற்கு உதவுவதே சடுத்தல நெறியாகும்.[9]

வீரசைவமரபினது புனித இலக்கியங்களாக பசவ புராணம், சின்னப் பசவபுராணம், பிரபுலிங்க லீலை, பண்டிதாராத்யா சரிதம் முதலியவற்றைக் குறிப்பிடுவர். பசவ புராணம் கன்னட மொழியில் எழுதப்பட்டது. பிரபுலிங்க லீலை தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டுள்ளது. இவற்றுள் தமிழ் மொழி மூலமானது பிற்காலத்திலேயே எழுதப்பட்டுள்ளது. கி.பி 1620 இல் தமிழகத்தைச் சேர்ந்த சிவப்பிரகாசர் என்பவரினால் பாடப்பட்டுள்ளது. இது பெரும்பாலும் கன்னட மொழிவழியான பிரபுலிங்கலீலையின் தழுவலாகவே காணப்படுகின்றது. பண்டிதாராத்யா சரிதம் முதலில் தெலுங்கிலேயே எழுதப்பட்டது. காகதீய ருத்ரன் காலத்தவரான சோமநாதர் என்ற ஆராதிய பிராமணராலேயே இது எழுதபபட்டது. மேலும் சிவப்பிரகாசரது சித்தாந்த சிகாமணி, அக்கமாதேவியின் அனுபவ சூத்திரம். அத்துடன் லிங்கோ பரிஷதம் என்பவையும் குறிப்பிடக்கூடிய நூல்களாகும்.

தமிழ் நாட்டில் வீரசைவத்தின் பரம்பலை துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளது இலக்கிய முயற்சிகளினூடாக இனங்காண முடியும். சாந்தலிங்க சுவாமிகள், ஸ்ரீ குமாரதேவர், திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் ஆகியோரும் இந்நெறி தமிழகத்தில் தழைக்க அயராது உழைத்தவர்களாவர். திருக்கோவலூர் ஞானியர்மடம், கும்பகோணம் பெரிய மடமும் தமிழகத்தின் சிறப்புமிக்க வீரசைவ மடங்களாகும்.

வீரசைவ மரபின் பரம்பல் ஈழத்திலும் காணப்படுவது முக்கியமானதோர் விடயமாகும். தத்துவத்திலும், இலக்கியத்திலும் குறிப்பிடப்படும் மரபுகளைத் தீவிரமாகப் பின்பற்றாது சமூக இசைவாக்கத்துடன் தம்மை இணைத்துக் கொண்ட குழுவினராகவே ஈழத்து வீரசைவர்கள் காணப்படுகின்றனர். வீரசைவம் என்பது யாவர்க்கும் உரிய பொதுநெறி என்ற மரபு மாறி ஒரு குழுமத்தினருக்கேயுரிய நெறியாக மாறிவிட்ட தன்மையினையும் இங்கு காணலாம். ஈழத்தில் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் இவர்கள் வாழ்கின்றார்கள். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அளவெட்டி, இணுவில், பண்ணாகம், வரணி முதலிய இடங்களிலும்; மட்டக்களப்பில் கொக்கட்டிச்சோலை, அக்கரைப்பற்று, பழுகாமம், களுவாஞ்சிக்குடி, தம்பிலுவில், தம்பட்டை ஆகிய ஊர்களிலும் வாழ்ந்து வருகின்றார்கள்.

யாழ்ப்பாணத்து வீரசைவ மரபினர் விஜயநகர நாயக்கப் பேரரசுக் காலத்தில் தமிழகத்தில் இருந்து இடம்பெயர்ந்திருக்கலாம் என்று த. சண்முக சுந்தரம் குறிப்பிடுகின்றார்.[10] யாழ்ப்பாணத்து வீரசைவர்கள் பிராமணருக்கு அடுத்தபடியான மதிப்பைப் பெற்றிருந்தனர். இவர்களும் பொதுவாக 'ஐயர்' அல்லது குருக்கள் என்றே அழைக்கப்பட்டனர். இவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் இயற்றிய கடமைகளைப் பின்வருமாறு பட்டியல் படுத்தலாம்.

(1) ஆலயங்களில் குருக்களாகக் கடமைபுரிதல்:– ஆரம்ப காலத்தில் பெரும்பாலான சிவன் கோயில்களில் இவர்களே பூசை நிகழ்த்தும் குருக்கள்மாராகக் கடமைபுரிந்துள்ளனர். இணுவில் காரைக்கால் சிவன் கோயிலில் அண்மைக் காலம்வரை வீரசைவர் ஒருவரே பூசகராகக் கடமைபுரிந்து வந்துள்ளார். ஆயின்

பெருமரபான ஆகம மரபு மேற்குறித்த ஆலயங்களில் நுழையத்தொடங்க பிராமண குருக்கள்மார் பூசகர்களாக இடம்பிடித்துக் கொண்டனர்.

(2) அபரக் கிரியைகளை நிறைவேற்றுதல்:- மரணச் சடங்குகளில் பிராமணர்களது ஆதிக்கம் இல்லை. எனவே வீடுகளில் நடைபெறும் அபரக்கிரியைகளையும், பெரும்பாலான தீர்த்தக்கரைகளில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளையும் இவர்களே முன்னின்று நடத்தினர்.

(3) வீடுகளில் பூசை நிகழ்த்துதல்:-
கதிர்காமம் முதலிய தூரத்திலுள்ள தலங்களுக்கு யாத்திரை செல்வோர் யாத்திரை முடிவடைந்த பின்னர், வீடுகளில் மாகேசுவர பூசை நடத்துவர். அந்தப் பூசையை நிறைவேற்றுபவர்கள் வீரசைவர்களே.

(4) ஆலயங்களில் சேவையாளராகக் கடமைபுரிதல்:-
ஆலயங்களில் பூசைக்குத் தேவையான மலர் பறித்துக் கொடுத்தல், மாலைகட்டிக் கொடுத்தல், அக்கினி காரியத்துக்கான "சமித்து" எனும் விறகு சேகரித்துக் கொடுத்தல், பூசைகளின் போதும் திருச்சுற்றுப்பலியின் போதும் சங்கு ஊதுதல், எழுந்தருளிகள் வீதியுலா வரும்போது எழுந்தருளிகளுக்கான "சாத்துப்படி" அமைத்தல் (இது நுண்தேர்ச்சி பெற்ற கைவினைக் கலையாகும்) அலங்காரம் செய்தல், எழுந்தருளிகளைத் தாங்கிச் செல்லும் தண்டிகை, பூந்தண்டிகை, சப்பறம் முதலியன அமைத்தல் (இது தொழில் முறையிலும் பின் நாட்களில் செழித்து வளர்ந்தது), காவடி ஆட்டக் காரர்களுக்கு காவடி கட்டிக் கொடுத்தல், காவடியாட்டத்தைச் சமயச் சடங்காக நடத்திக் கொடுத்தல் முதலிய பணிகளில் ஈடுபட்டனர்.

(5) சமூகத்துடனான வேறு தொடர்புகள்:-
திருமணச் சடங்குகள் நடைபெறும் போது மணமாலை கட்டுதல், மணவறை அமைத்தல், பந்தல் அலங்காரம் செய்தல், அல்லி அரசாணி நாட்டுதல் முதலிய பணிகளை இவர்களே நிறைவேற்றி வந்தனர்.

மேலும் மார்கழிமாதத் திருவெம்பாவைக் காலங்களில் அதிகாலையில் எழுந்து சங்கு, மேசமக்கலம் முதலிய வாத்தியங்களுடன் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி பாடிக் கொண்டு ஊரை வலம்வருதலிலும் ஈடுபட்டனர். இதற்கு மேலாக திறமையான முறையில் சமையல் நிகழ்த்தக் கூடியவர்களாகவும் இவர்களிற் சிலர் விளங்கினர். வீடுகளில் இடம்பெறும் விசேட வைபவங்களில் இவர்கள் சமையற்காரர்களாக அமர்த்தப்பட்டனர். அளவெட்டி மாணிக்கத்தின் "சொதி" யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரபலமான ஒரு பதார்த்தமாக எண்பது வரையிற் பேசப்பட்டது

யாழ்ப்பாண மாவட்டத்தின் சமூக அசைவியத்துக்கேற்பத் தம்மை இசைவாக்கிக் கொண்டபோதும் தமக்கென உரிமையான சமய, சமூகப் பேணுகைகளை அவர்கள் கைவிடல்லை. அவர்கள் சகலரும் பூநூல் தரித்திருந்தனர். (இது பின் நாட்களில் அற்றுப் போய்விட்டது) ஆயின் அபரக் கிரியைகளை நிகழ்த்துவோரும், ஆலயத்தில் பூசகர்களாகக் கடமைபுரிவோரும் இன்றும் பூநூல் தரித்துள்ளனர். அவர்களது திருமணச் சடங்குகள், மரணச்சடங்குகள் என்பவை, இறந்தவரை அடக்கம் செய்யும் முறைமைகள் முதலியவற்றை அவர்கள் இன்னும் இழக்கவில்லை. மாறிவரும் சமூக அமைப்புகளும், பொருளாதார நடவடிக்கைகளும், கல்வியறிவும் மற்றெல்லாச் சமூகத்தினரைப் போலவே இவர்களையும் பாதித்தபோது இவர்களும் பெருநீரோட்டத்தில் கலக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதால் இவ்வாறான மரபுகளைச் சிறுகச் சிறுக இழந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

நிறைவாக இச்சமூகம் தொடர்பான ஆய்வுகள் சமூகவியல் அடிப்படையில் ஆராயப்பட வேண்டியது அவசியமானதாகும். ஏனெனில் அவர்கள் பிராமணியத்தின் எதிர்வினையாகச் செயற்பட்ட முறைமை ஒன்றுண்டு.

"யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வரும் வீரசைவக்குருமார் சாதிவேறுபாடு பாராது சகல சைவமக்களுக்கும் கிரியைக் கடன்கள் செய்ய உதவி வந்துள்ளமை ஒரு முக்கியபணியாகும்." என்று பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிடுவது இவ்விடத்தில் மனங்கொள்ளத்தக்கது." அத்துடன் இந்த வீரசைவ முறைமை பிராமணியத்தினால் சிறுகச்சிறுக வெற்றி கொள்ளப்பட்டு அவர்களை இரண்டாந்தரத்திற்கு தள்ளிவைத்த மேலாதிக்கமும் இடம் பெற்றுள்ளது. அத்துடன் யாழ்ப்பாணத்துச் சமூகத்துடனான இவர்களது ஊடாட்டம் தனித்துவமான அதேவேளையில் பொதுமையானதாகவும் இருந்து வந்துள்ளது. இவைகுறித்த சமூகவியல் சார்ந்த ஆய்வு அவசியமாக வேண்டப்படுகின்றது.

## அடிக்குறிப்புகள்


1. Krishnasvami Aiyangar . S (1942) Some contribution of South India to Indian culture. University of Calcutta. P. 247
2. இரத்தின சபாபதி – வை. (1977) வீரசைவம், சென்னைப் பல்கலைக்கழகம். ப – 1
3. கருணாநிதி – (பதிப்பாசிரியர்) மு. (1996) சடத்தலம் (வீரசைவ தத்துவம்) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை. ப. 32
4. மேலது ப. 2
5. Krishnasvami Aiyangar - S, op cit, P.P - 258, 259
6. Mahalingam T.V. (1940)Administration and social Life under vijaya nagar; University of Madras. P. 308
7. கருணாநிதி – மு. முற்குறித்த நூல் ப. 37
8. மேலது ப. 39
9. பரமசாமி. தமிழ் மறைக்கழகம், இணுவில். ப. 24, 25
10. மேலது ப. 30
11. சிவத்தம்பி – கா (1995) வீரசைவம். ஒரு சிறு குறிப்பு, நினைவு கொள்வ், க. பொ. அருணாசலம் நினைவுமலர். கொழும்பு ப. 23

# விநாயகர் வழிபாடு

வே. ச. சுப்பையா
*சிவநெறிச் செல்வர், அறநெறி அன்பர்*

*அகர மென அறிவாகி உலகமெங்கும்*
*அமர்ந்தகர உகரமக ரங்கடம்மால்*
*பகருமொரு முதலாகி ஞானமாகிப்*
*பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு*
*புகரில் பொருள் நான்கினையும் இடர்தீர்த்தெய்தப்*
*போற்று நருக் கருட்கருணை புரிந்தல்லார்க்கு*
*நிகரில் மறக் கருணை புரிந் தாண்டு கொள்ளும்*
*நின்மலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்.*

இந்துக்கள் எந்தக் காரியத்தைத் தொடங்கும் போதும் முதலில் பிரணவப் பொருளான விநாயகரை வழிபட்டே ஆரம்பிப்பர். விநாயகர் என்றால் தனக்குமேல் ஒருதலைவன் இல்லாதவர், என்று பொருள். ஏகநாயகன் சிவகணங்களுக்கெல்லாம் முதல்வன் கணநாதன். அப்படியாயின் சிவபெருமானுக்கும் உமையம்மைக்கும் மேலானவரா என்னும் கேள்வி எழும். சிவன் உமை கலியாணம் நடந்தபோது பிரணவப்பொருளான விநாயகர் சாட்சியாக இருந்தார் என வேதங்கள் கூறுகின்றன. அகார, உகார, மகாரங்களின் வரிவடிவமே "ஓம்" என்னும் பிரணவம். சிவத்திலிருந்த நாதமும் சத்தியிலிருந்து விந்துவும் சேர்ந்ததே விநாயகர் வடிவம், நாதம் நீண்ட வடிவம், விந்து வட்டவடிவம் இவை இரண்டும் சேர்ந்தே பிள்ளையார் சுழியாக அமைந்தது (உ) இதை அருணகிரிநாதரும் திருப்புகழில்

*"நாத விந்துகளாதி நமோ நம*
*வேத மந்ர சொரூபா நமோ நம"*

என்று உலக உற்பத்திக்கு மூலகாரணமான பிரணவத்தைக் குறிப்பிட்டார். விநாயகரின் வடிவம் ஆணும் பெண்ணும் சேர்ந்ததே. கொம்பு இல்லாத வலப்பக்கம் பெண்ணாகவும், கொம்புள்ள இடப்பக்கம் ஆணாகவும் கொள்ளப்படுகின்றது. விநாயகர் நம் உடம்பிலுள்ள ஆறு ஆதாரத்தலங்களில் மூலாதாரமான ஆனந்தமயகோசத்தில் அமர்ந்திருப்பதாக நூல்கள் கூறுகின்றன. சிவன், உமை, முருகன், விஷ்ணு இவர்களை வணங்கினால் வினை நீங்கும். விநாயகரை வணங்கினால் வினை வேரோடு அறும்.

*"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்*
*விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே*
*விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாந்தன் மையினால்*
*கண்ணிற் பணிமின் கனிந்து.*

எனவே நாம் விநாயகரை வழிபட்டால் வினை வேரோடு அறும். விநாயகர் மிக நுண்ணறிவும் புத்திக்கூர்மையும் தரவல்ல தெய்வம்; கல்விக்கு முதல்வர்.

*"நற்குஞ்சரக்கன்று நண்ணிற் கலைஞானம்*
*கற்குஞ்சரக்கன்று காண்", என்று*

உமாபதி சிவாசாரியாரே திருவருட் பயன் என்னும் நூலில் கூறியிருக்கின்றார்.

விநாயகர் தம்மை வழிபடும் அடியார்களுக்கு வரும் துன்பங்களை நீக்கி அருள் புரிபவர். ஆதியில் கயமுகாசுரன் என்பவன் சிவபெருமானைநோக்கி கடும் தவம் புரிந்து, தன்னை எவரும் எந்த ஆயுதத்தினாலும் கொல்ல முடியாத வரத்தைப் பெற்றான்; தேவர்களை வருத்தினான். அவர்கள் காலை, மதியம், மாலை மூன்று நேரமும் ஒவ்வொருவரும் தனித்தனி ஆயிரத்தெட்டுத்தோப்புக்கரணம் போட வேண்டுமென்று பணித்தான். ஒருவர் மூவாயிரத்து இருபத்து நான்கு முறை தினமும் போடுவதென்றால் இலகுவான காரியமல்ல எனவே தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர். அவர் விநாயகரைத் தோற்றுவித்தார்.

*"பிடியதனுருவுமை கொளமிகு கரியது*
*வடிகொடு தனதடி வழிபடுமவரிடர்*
*கடிகணபதிவர அருளினன் மிகுகொடை*
*வடிவினர் பயில்வலி வலமுறையிறையே"*

என்னும் தேவாரத்தாலறியலாம்.

விநாயகர் கஜமுகாசுரனை எதிர்த்தார். எந்த ஆயுதங்களும் அவனைக் கொல்ல வில்லை. கடைசியாகத் தனது வலது பக்கத் தந்தத்தை ஒடித்து ஏவினார். கஜமுகாசுரன் பயந்து

ஓர் சிறு எலி "மூஷிகம்" ஆனான், விநாகப் பெருமான் அந்த எலியின் மேல் அமர்ந்து அதனை அடக்கினார். அவரும் மூஷிகவாகனர் எனப் பெயர் பெற்றார்.

*"மூஷிக வாகன மோதக ஹஸ்த*
*சாமர கர்ண விளம்பித சூத்திர*
*வாமன ரூப மகேஸ்வர புத்திர*
*விக்கின விநாயக பாதம் நமஸ்தே"*

என்று தேவர்கள் வணங்கினர். விநாயகர் மகிழ்ந்தார். கஜமுகாசூரனுக்குப் போட்ட தோப்புகரணத்தை விநாயகருக்குப் போடப் போவதாகக்கூறினர். ஆனால் விநாயகர் அவர் மூன்று தோப்புக்கரணம் மாத்திரம் போட்டால் போதும் எனக்கூறினார். அவர்களும் அப்படியே செய்து அருள் பெற்றனர். நாமும் மூன்று முறை தோப்புக்கரணம்போட்டு விநாயகரை வணங்கினால் அருள்கிடைக்கும் என்பது திண்ணம்.

இவ்வாறு விநாயகப் பெருமான் தம்மை வழிபட்டவர்களுக்கு இன்னல் தீர்த்து அருள்புரிந்துள்ளார். இந்திரன் ஏற்படுத்திய நந்தவனம் மழையின்றி வாடிவதங்கியது. இந்திரன் விநாயகரை வணங்கித்தன் குறையை முறையிட்டான். விநாயகப் பெருமானும் தனது ஞானதிருஷ்டியால் யோசித்தார். அக்காலத்தில்தான் அகத்தியமுனிவர் வடநாட்டிலிருந்து கங்கை நீரைத் தமது கமண்டலத்தில் எடுத்துக் கொண்டு தென்னாடு நோக்கி வந்து கொண்டிருந்தார். அகத்தியமுனிவரும் இந்திரனின் நந்தவனத்திற்குச் சமீபமாக வந்து ஓரிடத்தில் இளைப்பாறினார். இத்தருணத்தை விநாயகப் பெருமான் அறிந்து ஒரு காக்கை வடிவாக அங்கு சென்று அகத்திய முனிவரின் கமண்டலத்திலிருந்த கங்கை நீரைத் தனது கால்களினால் கவிழ்த்து விட்டார். அது "காவிரி" நதியாக உருவெடுத்து பரந்து பாய்ந்து இந்திரனின் நந்தவனத்தைச் செழிக்கச் செய்தது. இதை

*"வரகுலாதியன் தூய்மலர் நந்தனம்*
*பெருகுவார் கடல் பெய்த வயிற்றினோன்*
*காக நீரைக் கவிழ்த்த மதகரி*
*சான நாளும் தலைக்கணியாக்குவோம்"*

என்னும் பாவால் அறியலாம். சிவபெருமானிடம் ஆத்மலிங்கத்தைப் பெற்றுக் கொண்ட இராவணனிடம் இடைப்பையன் வடிவத்தில் சென்று அதை திருகோணமலையில் நிலைபெறச் செய்த விநாயகரை இராவணன் தலையிற்குட்டினான். அவர்தன் சுய ரூபத்தைக் காட்டினார். அவன் வணங்கினான். தங்கள் தலையிற் குட்டிக் கும்பிடுபவர்களுக்கு விநாயகர் அருள் புரிகின்றார்.

பராசரமுனிவருடைய மகன் வியாச முனிவர் கூறிய பாரதக்கதையை விநாயகப்பெருமான்(வேறு ஆயுதங்கள் விரைவாகத்தேய்ந்துவிடுமென்பதால்) தன் வலது பக்கத் தந்தத்தை ஒடித்து மகாமேருமலையில் எழுதினார். இதை வில்லி புத்தூர் ஆழ்வாரும் தாம் இயற்றிய பாரத காவியத்தின் காப்புச் செய்யுளில்,

*"நீடாழி யுலகத்து மறை நாலோடைந்தென்று நிலைநிற்கவே*
*வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதஞ் சொன்னநாள்*
*ஏடாகமாமேருவெற்பாக வெங்கூரெழுத்தாணி தன்*
*கோடாகஎழுதும்பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ."*

என்று போற்றி வணங்குகிறார். சுந்தரமூர்த்தி நாயனாரும், சேரமான் பெருமானாரும் முறையே குதிரையிலும் யானையிலும் ஏறிக்கைலாயம் சென்றனர். ஔவையாரும் வருவதாகக் கூறியிருந்தும் அவரைவிட்டு விட்டுப்போயினர். விநாயகப் பெருமான்மேல், பேரன்பு கொண்டு பூசை செய்த ஔவையாரை; விநாயகர்; சேரமானும், சுந்தரமூர்த்தியும் கைலாயம் போய்ச் சேர்வதற்கு முன் கைலாயத்திற்கு அனுப்பிவிட்டார். இதைக்கண்டு சுந்தரமூர்த்தியும் சேரமானும் ஆச்சரியப்பட்டனர் அதற்கு ஔவையார்,

*"மதுர மொழி நல்லுமையாள் மைந்தன் மலர்ப்பதத்தை*
*முதிர நினைந்தவர்க்கரிதோ முகில்போல் முழங்கி*
*அதிர நடந்திடும் யானையுந்தேரும்அதன் பின்னே வரும்*
*குதிரையுங் காதம் கிழவியுங்காதம் குலமன்னனே."*

என்று கூறி விநாயகப் பெருமானின் அருளை விளக்கினார்.

முப்புரத்தை எரிக்கச் சிவபெருமான் பூமித்தேரிலேறிப் புறப்பட்ட போது விநாயகரை நினைக்காத படியினால் அவர் ஏறியதேரின் அச்சை முறித்தார். இதை அருணகிரியாரின் திருப்புகழும் கூறுகின்றது.

*"முப்புரமெரிசெய்த அச்சிவனுறை ரதம்*
*அச்சது பொடி செய்த அதிதீரா"*

என்பது அப்பாடல். எனவே நாம் அன்போடு வழிபட்டால் விநாயகப் பெருமான் சகல விக்கினங்களையும் தீர்த்து அருள் பாலிப்பார்; நாமும் அவரை வழிபட்டு உய்வோமாக.

*மண்ணுல கத்தினிற் பிறவி மாசற*
*எண்ணிய பொருளௌா லௌிதின் முற்றுறக்*
*கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்*
*பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்"*

| | | |
|---|---|---|
| 1. யானை முகம் | :- | ஓம் என்னும் பிரணவ வடிவம் |
| 2. அங்குசம் | :- | மதயானையை அடக்கும் ஆயுதம் ஆணவம் மிக்க ஆன்மாக்களை அடக்குபவர் |
| 3. பாசம் | :- | உயிர்களைக் கட்டிக் காப்பவர் |
| 4. தந்தம் அபயம் | :- | தியாகத்தின் சின்னம் அடியார்களைக் காத்தருளல் |
| 5. வாதம் | :- | உயிர்களுக்கு அனுக்கிரகம் செய்பவர் |
| 6. மோதகம் | :- | பஞ்ச பூதங்களின் வடிவிலான உலகத்திற்கு தாமே ஆதாரம் என உணர்த்துதல். |
| 7. பருத்த தொந்தி | :- | பிரபஞ்சம் முழுவதும் தனக்குள் அடக்கும் என ஆன்மாக்களுக்கு அறிவூட்டல். |
| 8. எலிவாகனம் | :- | ஞானம் பெற்ற ஆன்மாக்களைத் தாமே ஆட்கொள்பவர் என்னும் தத்துவம். பெரிதுக்குப் பெரிதாகவும், சிறியதற்குச் சிறியதாகவும் விளங்கும் தனிப் பெருந்தன்மை |
| 9. இரத்தினக்கலசம் | :- | பொன்போன்ற அருட் செல்வத்தை தருவேன் என்பது. |

## விநாயகப் பெருமானுக்குகந்த பத்திரங்கள்

அறுகு, ஆத்தி, ஊமத்தை, கத்தரி, மந்தாரை, மாசிபத்திரம் வில்வம், வெள்ளெருக்கு, வன்னி, மாதுளை, கையாந்தகரை, மாவிலை, நொச்சி.

## ஆலயங்களில் தீபாராதனையின் பலன்கள்

| | | |
|---|---|---|
| ஐந்தடுக்கு தீபம் | :- | பஞ்சகலைகளையும் தரும். |
| மூன்றடுக்கு தீபம் | :- | முத் தத்துவங்களைக் குறிக்கும் ஷ ஆராதனைகள் ஆன்ம சுத்தியை உண்டாக்கும் |
| நாகதீபம் | :- | புத்திவிருத்தி |
| இடப தீபம் | :- | பசு விருத்தி |
| புருஷ தீபம் | :- | சர்வ சித்திகள் |
| நட்சத்திர தீபம் | :- | ரோக நிவர்த்தி |
| கும்ப தீபம் | :- | மல நிவாரணம் |
| ஐந்து தட்டுகள் | :- | ஐங்குணங்களும் பதிதற் பொருட்டு |
| தூபம் | :- | சாருபமுத்தி |
| வீபூதி | :- | ரட்சை |
| பஞ்சாலாத்தி | :- | சர்வ ஜெயம் |
| கற்பூரப் பசாலாத்தி | :- | இறைவன் ஆன்மாக்களுக்கு அருள் செய்வதைக் குறிக்கும். |

## மாறுபட்ட அர்த்த நாரீசுவரர் வடிவங்கள்

*திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த வாசுதேவ நல்லூரில் சிந்தாமணி நாதர் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் மூலவர் அர்த்த நாரீசுவரர் வடிவத்தில்காட்சி அளிக்கிறார். இங்கு மூலவருடன் காளை வாகனம் இல்லை.*

*திருச்செங்கோடு திருத்தலத்தில் காட்சியளிக்கும் அர்த்தநாரீசுவரர் ஆண்பாதியில் கோலை ஏந்திஇருக்கிறார். இத்தகைய அமைப்பு வேறெங்கும் காணப்படவில்லை. திருக்கண்டியூரில் உட்கார்ந்த நிலையில் இருந்தது. திருமழபாடியில் வழக்கத்திற்கு மாறாக வலப்பாதியில் பெண்ணுருவமும் இடப்பாதியில் ஆண்உருவமும் தாங்கி சிவபெருமான் காட்சி தருகிறார்.*

*காஞ்சி கைலாச நாதர் கோயிலில் அபயமுத்திரையின்றி அர்த்த நாரீசுரர் அருள்பாலிக்கிறார்.*

*நன்றி:- இராமர் சீதா விஜயம் 1990 ஜனவரி. (ஜெ.இராமன்)*

# வைரவ மூர்த்தமும் வழிபாடும்

செல்வி. பத்மாஜனி கனகசூரியம்
(B.A. Dip. in Ed.)

வைரவர் என்பது வட மொழியில் பைரவர் என்று உச்சரிக்கப்படுகிறது. சிவபெருமானின் மூர்த்தி பேதங்கள் அறுபத்தினான்கு. இவை தனித்தனியே இறைவன் நிகழ்த்திய பெருஞ் செயல்களைக் குறிக்கின்றன. உருவமற்ற பரமன் கொண்ட இக்கோலங்களை எல்லாம் விக்கிரக வடிவங் கொடுத்து கோவில்களில் நிறுவி வழிபடும் வழக்கம் எம்மவரிடையே காணப்படுகின்றது. இவ்வுருவங்களை வழிபடுந்தோறும் இவற்றுடன் தொடர்பு பூண்ட நிகழ்ச்சிகளை நினைவு கூருகின்றோம். ஆன்மாக்கள் ஈடேற வேண்டி அவன் திருவிளையாட்டாக நிகழ்த்திய இச்சம்பவங்கள் இறைவன் பெருமையினை நினைவுறுத்துகின்றன. இவை இறைவன் பெருமையினையும், எங்கள் சிறுமையினையும் ஒருங்கே ஒரு பொழுதில் உணர வைக்கின்றன.

இந்த வகையில் வைரவ மூர்த்தத்தை நோக்கினால் பெரும் பயங்கரமான தோற்றம் வாய்ந்த உருவம் இது என்பதைப் பெயரே குறிக்கின்றது. பிரமனை ஒறுக்கும் வேளை தோற்றிய தோற்றமே இது. பிரமன் ஐந்து முகங்களுடன் விளங்கிய காலத்தில் பரமன் போன்று தானும் ஒரே தோற்றத்தினன் எனத் தன்னை அவனுடன் சம நிலையில் வைத்து இறுமாந்தனன். இவனது இறுமாப்பை அடக்க சிவன் உக்கிரத்தோற்றம் கொண்டு தன் நகத்தினால் உச்சியில் உள்ள தலையினைக் கொய்த பொழுது பிரமன் நான்முகனாயினான். பிரமனின் மண்டையோட்டை ஏந்தி நிற்கும் இவனுக்கு இதனால் கபாலி என்னுஞ் சிறப்புப் பெயர் உண்டாயிற்று.

இறைவன் பிரமனிடம் கோபம் கொண்ட பொழுது அவன் தலையினைக் கொய்யும் வண்ணம் பைரவரைப் பணித்ததான வரலாறும் உண்டு.

பைரவரையும், வீரபத்திரரையும் சிவனின் மூர்த்தி பேதங்களாக நூல்கள் கூறுவன. எனினும் இவ்விரு வரையும் இறைவனது மைந்தர்களாகக் கொள்ளும் மரபும் நிலவுகின்றது.

பெருந்தொந்தி, உருண்ட கண்கள், இரு கடைவாய்களிலும் கோரப்பற்கள், அகன்ற மூக்குத் துவாரங்கள், கபாலமாலை, பாம்பினாலான அணிகலன்கள், யானைத் தோலாடை ஆகியன பைரவ மூர்த்தியில் நாம் காணும் சிறந்த அம்சங்கள். ஆடை எதுவுமற்ற நிலையிலேயே இவர் பெரும்பாலும் சித்தரிக்கப்படுவர்.

அறுபத்துநான்கு வேறுபட்ட நிலைகளில் பைரவரை உருவாக்குவார்கள். இவ்வறுபத்து நான்கு வேறுபாடுகளும் பைரவரின் எட்டு அடிப்படையான தோற்றங்களின் விரிவு. இவ்வெட்டு வகை மூல பைரவர்கள் அசிதாங்கபைரவர், குரு பைரவர், கபால பைரவர், பீஷண பைரவர், சம்ஹாரபைரவர் என்பவர்களாம்.

இவரது தோற்றத்தில் வடுகபைரவர், ஸ்வர்ணாகர்ஷண பைரவர் என இரு நிலைகள் உண்டு. வடுக பைரவர் எட்டுக் கையினர் மாம்சம், அபயம், கட்வாங்கம், பாசம், சூலம், டமரு, கபாலம், பாம்பு ஆகியவற்றை இவரது எட்டுக்கரங்களிலும் காணலாம். இவரின் பக்கத்தில் நாய் இடம் பெறும். ஸ்வர்ணாகர்ஷண பைரவர், மஞ்சள் உடலினராயும், முக்கண்ணினராயும் நான்கு கரங்களுடனும் நிறுவி வழிபடுவர்.

*"எளியரை வலியர் வாட்டின்*
*வலிய ரையிருநீர் வைப்பி*
*னளியறத் தெய்வம் வாட்டுமெனு*
*முரைக்கமைய வன்றே*
*தெளியுமா வலியைச் சொற்றோற்*
*செகுத்துரிக் கவயம்*
*வளியுளர் கச்சி காவல்*
*வயிரவர்க் கன்பு செய்வாம்"*

என்று போற்றுகின்றது?

போர்த்துக்கேயர் ஆண்ட காலப்பகுதியில் வழிபாட்டுச் சுதந்திரம் முற்றாக மறுக்கப்பட்ட வேளையில் வைரவ சூலத்தை

வைத்து இல்லங்கள் தோறும் இரகசியமாக வழிபாடு நடைபெற்றது. அன்று எங்கள் தெய்வ உணர்வினைக் காத்து நின்ற இவ்வழிபாடு இன்று பண்பாட்டின் நிலைக்களனாய் எங்கள் வாழ்வுக்கு உறுதுணையாகின்றது. சைவ ஆலயங்கள் தோறும் பரிவார மூர்த்திகளுள் ஒருவராக வைரவர் காட்சி தருகின்றார்.

சௌந்தர்ய லஹரியில் 41வது சுலோகத்தில் உலகத் தோற்றத்திற்காக அம்பிகை ஆனந்த பைரவியாகவும் பரமசிவன் ஆனந்த பைரவராகவும் தாண்டவமாடுவதாகக் கூறப்படுகிறது. லலிதா ஸஹஸ்ரநாமம் "பைரவி" என்று அம்பாளை அழைக்கின்றது. துக்கத்தை அல்லது துக்கத்திற்குக் காரணமான பாவத்தைப் போக்குவதால் ருத்ரன் என்றும் பைரவர் என்றும் சிவன் அழைக்கப்படுகின்றார்.

புராணங்களில் மஹாவயிரவர், காலவயிரவர், உக்கிர வயிரவர், வடுகநாதர், சட்டை நாதர் என குறிப்பிடப்படுகின்றது.

வைரவ வழிபாடு ஆலயங்களில் விசேட கிரியைகள் ஆரம்பமாகும் போது சிறப்பாகச் செய்யப்படுகின்றது. கிராம சாந்தியின் போது அட்ட திக்குப் பாலகர்களையும், வைரவரையும் சாந்திப்படுத்த மந்திர பூர்வமாக பூசைகளுடன் நீற்றுப் பூசணி வெட்டுதல், வடை மாலை சாத்துதல், சாதம் வெற்றிலை, பாக்கு, பழம், எலுமிச்சம் பழம் போன்றவை படைத்து வழிபாடு செய்யப்படுகின்றது. இதே போன்று கோவிற் கட்டட அத்திவாரம் உற்சவ ஆரம்பம். புதிய தேர் அமைப்பு. தேர்த்திருவிழா உற்சவ முடிவு, புதிய வீடு கட்ட அத்திவாரம் போடுதல், வீடு கட்டுதல் போன்ற பல்வேறு காலங்களிலும் வைரவரைப் பூசிக்கின்றோம்.

வைரவக் கடவுளுக்கு காலை, மாலை, அர்த்த ஜாமம், அதிகாலை ஆகிய காலங்களில் பூசைகள் நிகழ்கின்றன. இவ்வாறே ஆலயங்கள் பூட்டப்படும் போதும் திறக்கப்படும் போதும் நைவேத்யம் செய்யப்படுகின்றது.

வைரவருக்குரிய விரத நாட்கள் சித்திரைப் பரணி, ஐப்பசிப் பரணி, தை முதல் செவ்வாய் ஒவ்வொரு செவ்வாயும் வைரவசுவாமிக்கான விரத நாட்களாகும். இக்காலங்களில் முறைப்படி விரதமிருந்து சிவப்புப்பட்டு, சிவப்புமாலை, வடைமாலை என்பவற்றைச் சாத்தி வழிபாடு செய்வர் என்றும் எல்லோருக்கும் காவல் செய்து அருள் பாலிக்கும். வைரவ சுவாமியை நாம் விரத அனுட்டானங்களுடன் வழிபட்டு இஷ்ட சித்திகளைப் பெறுவோமாக.

*தளம் பொரிமலரோ னாதி வானவர்*

*தாழ்ந்து போற்ற*

*உளம் பொலிகாசி மேவுமுயிர்கள்*

*செய்பாவமெல்லாம்*

*களம் பொலியாது தண்டங்கண்டற*

*–லொழிந்து முத்தி*

*வளம் பொரிவகை செய்கால*

*வயிரவற்கன்பு செய்வோம்.*



# இலிங்க வழிபாடும் வீரசைவமும்

சிவ ஸ்ரீ. முத்துலிங்கம் சச்சிதானந்தக் குருக்கள்

இலங்கையிற் பல சிவாலயங்கள் உண்டு அவற்றிற் புராதன ஆலயங்கள் மிகச்சிலவே. சிவாலயம் என்னும் பொழுது அவ்வாலயக் கருவறையில் மூலமூர்த்தியாக இலிங்கமே ஸ்தாபிக்கப்பட்டிக்கும்.

சைவம் முதலிய அறுவகைச் சமயங்களுள் சைவத்தின் முழுமுதற் கடவுள் "சிவம்" சிவம் என்ற பதத்திற்கு "அன்பு" என்று பொருள்படும், இதை,

*"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவ மாவ தாருமறிகிலார்*
*அன்பே சிவ மாவ தாருமறிந்து பின்*
*அன்பே சிவ மாயமர்ந் திருப்பாரே"* என்று

திருமூலநாயனாரின் திருவாக்கினால் நன்குணரக் கூடியதாயிக்கின்றது. "லிங்கம்" என்ற சம்ஸ்கிருதச் சொல்லுக்கு "அடையாளம்" என்ற பொருள் விளங்கும். "சிவ" வழிபாட்டில் சிவலிங்க வழிபாடே முதன்மைத்துவம் பெறுகின்றது. எங்கும் வியாபகமாக விளங்கும் பரம்பொருள் எமக்கு மூவகைத் திருமேனிகள் மூலம் காட்சி தருகிறார். அவை, அருவம், உருவம், அருவுருவம் ஆகியன.

அருவம் : அகக்கண்ணுக்குப் புலப்படாது தெய்வரூபகமாக யோகத்தில் ஞானம் என்ற நிலையிற் கண்டுணர்தல்.

உருவம் : இது எமது மனோ நிலைக் கேற்ப குணங்குறி விளங்க உருவகப்படுத்தி வழிபடல்.

அருவுருவம் : உருவமாயும் உருவமல்லாததாயும் உள்ள நிலை. உருவமும் உருவமல்லாத நிலையும் ஒருங்கே அமையப் பெற்றதால் இவ்வுருவத்திற்கு அருவுருவம் என்ற பெயர் வரப் பெற்றது. இது "லிங்கம்" என்ற நிலையை உடையது. "சிவ" த்துக்கென இது சிறப்பாய் அமையப் பெற்றதனால் சிவலிங்கமெனப் பெற்றது. சிவ + லிங்கம் என்று இப்பதப் பிரிவின் பொருளை ஆராயும் போது சி = சிவன் என்றும், வ = சக்தி என்றும், சிவசக்தியின் அடையாளம் என்றும், லிங்கம் சிவன் என்றும், ஆவுடையார் சக்தியென்றும். மேலும் பீடம் (கீழ்ப்பகுதி) = பிரம்மபாகமென்றும் நாளம் (நடுப்பகுதி) - விஷ்ணுபாகமென்றும்

லிங்கம் (மேற்பகுதி), உருத்திரபாகமென்றும் மூன்று பாகங்களிலும் மும்மூர்த்திகளை உள்ளடக்கிய ஓர் தத்துவ உருவகமாகக் கணிக்கப்படுகின்றது. இத்தகு பெருமை வாய்ந்த லிங்கம், சலலிங்கம், அசலலிங்கம் என இருவகைப்படும். இதை சலலிங்கம், சலனலிங்கம், சலாசல லிங்கம், அசலசலலிங்கம் என்றும் விரித்தும் ஆகமங்கள் கூறுகின்றன. இவை மேற்கூறப்பட்ட லிங்கங்களுக்குள் அடங்கிய லிங்கங்களே. மேற்கூறப்பட்ட சல, அசல, லிங்கங்களாவன மண், உலோகம், இரத்தினம், மரம் ஆகியவற்றால் அமைக்கப் பெறலாம். இவைகள் சுருக்கமாக தரப்படுகின்றது.

1. மண்ணாலான லிங்கம் :- சுத்தமான இடத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட புற்று மண்ணுடன் பசுப்பால், தயிர், பசுநெய், அரிசிமா ஆகியவற்றைச் சேர்த்து, ஆல், அரசு, மா, நாவல், அத்தி ஆகியவற்றின் பட்டைகளும் சேர்த்து சந்தனம், பாதரசம் ஆகியவற்றையும் கலந்து குறிப்பிட்ட காலம் வரை வைத்துப் பண்படுத்தி ஆகமத்தில் குறிப்பிட்ட அளவுக்கேற்ப அமைத்து நெருப்பில் சுட்டு வழிபாட்டுக்குப் பயன்படுத்தலாம்.

2. உலோக ஜ லிங்கம்:- பொன், வெள்ளி, செம்பு, வெண்கலம் இரும்பு, ஈயம், பித்தளை, துத்தநாகம், ஆகிய உலோகங்களாலான லிங்கங்கள்.

3. இரத்தின ஜலிங்கம் :- மரகதம், பத்மராகம், வைடூரியம், படிகம், புஷ்பராகம், பவளம், வச்சிரம், மாணிக்கம், இந்திரநீலம் ஆகிய இரத்தினங்களாலான லிங்கம்.

4. தாருஜ லிங்கம்:- வன்னி, மதூகம், கர்ணிகாரம், திந்துகம், அர்தனம், பிம்பலம், உதும்பரம், கருங்காலி, சந்தனம், வில்வம், இலந்தை, தேவதாரு, சால ஆகிய மரங்களாலான லிங்கங்கள்.

5. க்ஷணிகலிங்கம்:- மணல், அரிசி, அன்னம் (சோறு) சாணகம், வெண்ணெய், உருத்திராக்கம், சந்தனக் குழம்பு, தர்ப்பைக் கூர்ச்சம், பூமாலை, விபூதி, நதிமண் ஆகியவற்றாலான லிங்கங்கள்.

6. அசலலிங்கம் : (தாவரலிங்கம்) :- சுவாயம்புவம் (சுயம்பு) தைவிகம், காணபத்தியம், அசுரம், சுரம், ஆர்ஷம், ராக்ஷசம், மனுஷம், பாணம், ஆகியவற்றாலான லிங்கங்கள் இவைகளில் க்ஷணிகலிங்கமே இஷ்டலிங்க பூஜைக்கு மிக எளிதாகப் பெறக் கூடியது. ஆதலால் அநேகமான குருமார் க்ஷணிகலிங்க பூஜையையே கைக் கொள்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதில் பூஜை

ஆரம்பமிருந்து முடியும் வரை சிவபிரான் சாந்நித்தியமாக இருப்பார். பூஜை முடிய இவ்விலிங்கங்களை நதியில் சங்கமிக்க வேண்டும். அல்லது சேகரித்துக் குறிப்பிட்ட ஓர் தினத்தில் நதியில் விடலாம். உருத்திராக்ஷம் நீரால் கழுவி மீண்டும் உபயோகிக்கச் சக்தி வாய்ந்தது. தத்தகு லிங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி பூஜா பலன்கள் உண்டு.

| | | |
|---|---|---|
| புற்றுமண் | : | மோட்சத்தையும் |
| நதிமண் | : | பூமிலாபத்தையும் |
| அரிசி | : | செல்வத்தையும் |
| அரிசிமா | : | சரீர புஷ்டியையும் |
| அன்னம் (சோறு) | : | அன்னாதிபதியாதலையும் |
| கோமஜம் | : | ரோகசாந்தி (நோய் நீக்கம்) யையும் |
| வெண்ணெய் | : | இஷ்டசித்தியையும் |
| ருத்திராக்ஷம் | : | ஞான விருத்தியையும் |
| சந்தணக் குழம்பு | : | போகத்தையும் |
| கூர்ச்சம் | : | புத்திக் கூர்மையையும் |
| புஷ்பமாலை | : | ஆயுள் விருத்தியையும் |

விபூதி : மும்மல நீக்கத்தையும் கொடுக்கும் என அம்சுமான் ஆகமம் கூறுவதாக "சிவபூஜை விளக்க"த்தில் கூறப்பட்டிருக்கின்றது. ஏனைய லிங்க பூஜா பலன்களும் தனித்தனியுண்டு. இதன் விரிவஞ்சி இங்கு விடப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட, உலோக, ரத்ன, தாருஜ, க்ஷணிக, அசல லிங்கங்களுள், அசலலிங்கம் சிறப்பானது. அசலலிங்கங்களுள், சுாயம்புவ லிங்கம் மேலானது. இது தனக் குகந்த இடத்தை தானே தேர்ந் தெடுத்து, தானே தோன்றி; "தான்தோன்றி" (சுயம்பு) என்ற சிறப்புப்பெயரை தன்னத்தே கொண்டு தனிப்பெரும் தன்மையாய்த்திகழ்வது. இதுவே "தான்தோன்றிலிங்கம்". இது தோன்றிய ஸ்தானத்திலே இதற்குரியபடி ஆலயம் அமைத்துப் பூசிக்க வேண்டியது. மற்றையது ஆலயம் அமைத்து ஆலயத்திற்கு தகுந்தபடி மூர்த்தியை ஸ்த்தாபிப்பது. சுயம்பு லிங்கத்திற்கு ஏனையலிங்க ஸ்த்தாபனத்திற்கு செய்ய வேண்டிய கிரியைகளாகிய, பதவிந்நியாசம், ரத்னநியாசம், நயனோன் மீலனம், கிராமப் பிரதக்ஷணம், ஜலாதிவாசம், தான்யாதிவாசம் சயனாரோஹணம், பிம்பஸ்த்தாபனம், அஷ்டபந்தனம், பிம்பசுத்தி, ஸ்பர்சாகுதி, ந்யாசாதிகள் போன்ற கிரியைகள் செய்ய வேண்டியதில்லை. இவைகட்கு அப்பாற்பட்டது அச்சுயம்பு லிங்கம். சுவாயம்புவம் அல்லாத லிங்கங்கள் பிரதிஷ்டை செய்யும் போதே மேற்குறிப்பிட்ட கிரியைகள் அவசியம் செய்ய வேண்டியது.

இம்மூர்த்தியில் ஏதாவது சிதைவு ஏற்பட்டால் கூட அதன்மகிமை குறையாது. அப்படியேற்பட்டால் தங்கம், பொன், வெள்ளி போன்ற உலோகங்களால் மருவிப் பூஜிக்கலாமென ஆகமங்கள் கூறுகின்றன. இத்தனிப் பெரும் தன்மையை தன்னகத்தே முழுமையாகக் கொண்ட ஆலயங்கள் இலங்கையில் இரண்டு உள்ளன. அவை கிழக்கில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர், வடக்கில் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயங்கள். இவ்விரு ஆலயங்களும் மிக மிகப் புனிதமானவை; மகிமை வாய்ந்தவை. இவ்வாலயங்கட்கு வரலாற்றுச் சிறப்புமிக்க உண்மைக்கதைகளும், அவ்வப் பிரதேசங்களிலும், பாரந்தும், புத்தக வாயிலாகவும் கல்வெட்டுக்கள் மூலமாகவும், கர்ணபரம் பரைக் கதைகள் மூலமாகவும் அறியலாம்.

குறிப்பாக, கொக்கட்டிச் சோலைத் தான் தோன்றீஸ்வரர் ஆலயத்தில் ஒல்லாந்தர் காலத்தில் நந்தி புல்தின்றதும், சாணம் போட்டதும், போர்த்துக்கீச தளபதி தன் குதிரையுடன் வடக்கு வாசலால் ஓடியதும், மதில் இடிந்து விழுந்ததும், எமது மூதாதையர் வாயிலாகக் கேட்கக் கூடியதாக இருக்கின்றது. அம்மதில் எமது பிரிவறிந்த அண்மைக் காலத்திலே கட்டி முடிந்தது. இலங்கையிலே போர்த்துக்கேயரால் இடிக்கப்படாத ஆலயம், மிக உயர்ந்த ஸ்தம்பம், மிகப்பழமை வாய்ந்த சித்திரத் தேர் என்று இப்படிப் பலப்பல. இவைகள் போற்றிப் பேணிப்பாதுகாக்க வேண்டிய புனித சின்னங்கள். ஆடக சௌந்தரி, குளக் கோட்டான் மாகோன் ஆகிய மன்னர்களால் பரிபாலிக்கப்பட்டு, மானியமும் வழங்கப்பட்டு கண்ணெனக் கண்காணிக்கப்பட்ட கருப் பொருளுக்குப் பூசைக்காக வீரசைவக் குருமாரையும், தொண்டூழியத்திற்கு வேளாளர் பரிபாலிப்புக்கு முற்குகரையும் அமர்த்தி முன்னீடு, முன்னுரிமை, மானியம் முறையே வகுத்தும் கொடுத்ததும் கையளித்துச் சிறப்பித்தமை கல்வெட்டுக்கள் மூலம் அறியலாம். அவை மெய்சிலிர்க்கும் நிகழ்வுகள். இத்தனை சிறப்பு வாய்ந்த மூலலிங்கப் பெருமான் மகிமை திருமூலநாயனாரின் பாடல் ஒன்றின் மூலம் உணரலாம். சுயம்பு லிங்கத்திற்கு "தாபர லிங்கம்" என்றும் பெயருண்டு. அப்பெயர்படும் பாடல் வருமாறு:

*"தாவர லிங்கம் பறித்தொன்றில் தாபித்தால்*
*ஆவதன் முன்னே அரசு நிலைகெடுஞ்*
*சாவதன் முன்னே பெருநோய் அடுத்திடும்*
*காவலன் பேர்நந்தி கட்டுரைத் தானே"*

என்ற பாடல் இவ்விலிங்கத்தின் பெருமையை உணர்த்துகின்றது. இதைக் கருத்தில் கொண்டே பூசை வழிபாடுகள் முட்டற நடக்க முற்கூட்டியே அதற்குத் தகுந்தவர்களை அதற்கு நியமித்துப் பணித்ததைச் செப்பேடுகள் செப்புகின்றன. அதை நடைமுறைப்படுத்தாது பூசைகள் இடர்படின் அதனால் ஏற்படும் விளைவுகளையும் தமிழ் வேதம் கூறுகின்றது.

*"முன்ன வனார் பூசைகள் முட்டி டின்*
*மன்னர்க்குத் தீங்குள வாரி வளங் குன்றுங்*
*கன்னங் களவு மிகுந்திடுங் காசினி*
*என்னரு நந்தி எடுத்து ரைத் தானே"*

என்ற பாடலின்படி பூசையின் பெறு பேற்றின்படி தற்போதயநிலையில் நமது நாட்டில் மேற் குறிப்பிட்ட அனைத்தும் நடக்கின்றது. ஆகவே, முன்னவனார் பூசைமுட்டியிருக்கின்றது. இலங்கையில் எங்கணும் பல ஆலயங்கள் இருந்தாலும் இவ்வாலயத்திற்கும் மூர்த்திக்கும் ஈடாகா என்பது முற்கூட்டியே விளக்கப்பட்டது. எனவே, இங்கு நிகழும் நெறிப்படுத்தப்பட்ட வழிபாட்டைப் பொறுத்தே எமது நாட்டின் தலைவிதியமைந் திருக்கின்றது. இத்தலப்பெருமை மேற்குறிப்பிட்ட நிகழ்வுகள் மூலம் பரந்திருப்பதைக் உள்ளங்கை நெல்லிக்கனிபோன்று காண்கின்றோம்.

இப்பரம் பொருளுக்கு பூசை வழிபாடு செய்ய அமர்த்தப்பட்ட அந்தணர் தனித்தன்மை வாய்ந்தவர்கள். ஷண் மதங்களில் சைவத்தின் முழுமுதற் கடவுள் "சிவன்" என்றும் சிவத்தை வழிபடுவோர் "சைவர்" என்றும் சிறப்புற அழைக்கப்படுவர். "சிவ" வழிபாட்டில் லிங்கத்தின் பங்கும் தொன்மையும் முன்பு கூறப்பட்டது. இச்சிவலிங்க பூஜை செய்ய லிங்காசாரமுள்ள சைவர்கள் அனைவர்க்கும் உரிமையுண்டு.

சைவர்கள் ஏழுவகைப்படுவர். அவர்கள் அநாதிசைவர், ஆதிசைவர், மகாசைவர், அநுசைவர், அவாந்தர சைவர், பிரவரசைவர், அந்நியசைவர் எனப்படுவர்.

இவர்களின் உற்பவம் வருமாறு:

| | |
|---|---|
| அநாதி சைவர் | : சதாசிவமூர்த்தி |
| ஆதிசைவர் | : சத்யோஜாதம், முதலிய பஞ்ச வக்திரங்களி லிருந்து தோன்றிய, கௌசிகர், காசிபர், பரத்துவாசர், கௌதமர் அகத்தியர் ஆகிய பஞ்சரிஷி கோத்திரத்தில் பிறந்த சிவப் பிராமணர். |
| மகாசைவர் | : பிரம்மா முகத்தில் தோன்றிய வைதிகப் பிராமணருள்ளே சிவதீக்ஷை பெற்றவர். |
| அநுசைவர் | : சிவதீக்ஷை பெற்ற வைசியரும், சூத்திரரும். |
| அவாந்தரசைவர் | : சிவதீக்ஷை பெற்ற சூத்திரர். |
| பிரவரசைவர் | : சிவதீக்ஷை பெற்ற அநுலோமர். |
| அந்நிய சைவர் | : சிவதீக்ஷை பெற்ற ஏனையோர். |

இச்சந்தர்ப்பத்தில் அந்தணர் என்றால் யார்? அவர் குணநல மென்ன? தொழிலென்ன என்பதைச் சற்று ஆராய்ந்து மிகுதியைத் தொடர வேண்டியதவசியமாகின்றது. இது பற்றித் தமிழ்மறை *''அந்தணராவோர் அறுதொழில் பூண்டுளோர்*
*செந்தழல் ஓம்பி முப்போதும் நியம*
*தந்தவ நற்கரு மத்த நின் றாங்கிட்டுச்*
*சந்தியும் ஓம்பிச் சடங்கறுப் போர்களே"* என்றும்

*"சத்தியம் இன்றித் தனி ஞானந் தானின்றி*
*ஒத்து விடயம் விட்டோரும் உணர்வின்றிப்*
*பத்தியும் இன்றி பரன் உண்மை யின்றிப்*
*பித்தேறும் மூடர் பிராமணர் தாமன்றே"* என்றும்

அந்தணர் பெருமையும் அறு தொழிலும், இவை இல்லாதார் அந்தணர் அல்ல என்றும் அறிதியிட்டுக் கூறுகின்றார் திருமூலர். இங்கே குறிப்பிட்ட அறுதொழிலாவன; ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஈவித்தல் ஆகியன. பிறப்பால் ஒருக்காலும் உயர்ந்தோராக முடியாதென்பதையும் ஒவ்வொரு மனிதருடைய நல்லொழுக்கமும் செயல்பாடுமே அவரவர் உயர்வுக்குரியவையென்று பகவக் கீதை கச்சிதமாகக் கூறுவதைக் காணலாம். இக்கோட்பாட்டுக் கமைவாக இயம, நியம கொள்கைகளைச் சரிவரச் செய்வதில் சிரத்தை காட்டி மேன்மை யடைந்தவர்கள் வீரசைவர். மேற்குறிப்பிட்ட அறுவகைச் சைவர்களும் உள்ளடக்கும் பெருமை பெற்றது வீரசைவம். வீரசைவம் குறிப்பிட்ட சமூகம் சாதியினரைச் சேர்ந்ததல்ல. மனிதர்களை உள்ளடக்கியது. மனிதர்களை என்னும் போது, மனிதப் பண்புகளையே அங்கு குறிப்பிடுகின்றது.

## வீரசைவம்

வீரசைவத்தை ஆராயுமுன் ஆகமத்தைச் சற்று ஆராய்ந்து அப்பால் செல்வது சிறந்ததாகத் தெரிகின்றது.

ஆகமங்கள் இருபத்தெட்டு, இவைகளுள் மறைந்தவை போக எஞ்சியவை ஒன்பது ஆகமங்கள் என்றும். அதை சதா சிவமூர்த்தியிடமிருந்து சீகண்ட ருத்திரராகிய "நந்தியம் பெருமான்" உபதேசம் பெற்று, நந்தியம் பெருமான் திருமூலருக்கு உபதேசித்தாரென்றும் தமிழ் மூவாயிரத்தின் மூலம் அறியலாம். இவ்வாகமங்கள்.

*"பெற்றநல் லாகமங் காரணங் காமிகங்*
*உற்ற நல் வீரம் உயர் சித்தம் வாதுளம்*
*மற்றவவ் வியாமளம் ஆகுங் காலோத்தரம்*
*துற்ற நற் சுப்பிரம் சொல்லும் மகுடமே"* என்று ஒன்பது அகமங்களையும் கூறுகின்றார்.

வீரசைவம் வீராகமத்தையும், மகுடாகமத்தையும் அடிப்படையாகக் கொண்டது.

வீராகமம் : இது, அட்டாங்க நிலை பற்றியும், அதன் தன்மை அதனால் ஏற்படும் நன்மைபற்றியும் விபரிக்ககின்றது.

மகுடாகமம் : இது, குரு லிங்க சங்கம வழிபாடு, மடங்கள் அமைத்தல், தானதர்மம் செய்தல், ஜப, தப முறை பஞ்சாட்சர மகிமை, வாழ்க்கை நிலையாமை, சமாதி நிலை, வீடுபேறு போன்ற தன்மைகளையும், அறங்களையும், யோக நிலையையும் ஞான மார்க்கத்தையும் புகட்டுகின்றது. எனவே இவ்வாகமங்கள் இரண்டும் சைவநாற் பாதங்களுள் யோகத்திற் சரியை, யோகத்தில் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம். ஞானத்தில் சரியை, ஞானத்தில் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் (சமாதி நிலை). இக்கொள்கையை முற்று முழுதாக ஏற்று வழிநடப்பது வீரசைவம். இக்கொள்கை சதா சிவநிலையில் இருக்கின்றது. சதா + சிவம் = சதா எப்போதும் சிவம் = அன்பு. எப்போதும் அன்பு நிலை.

அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய் எல்லா ஜீவராசிகளினுள்ளேயும் வெளியேயும் காணப்படும் முதற் பொருளின் ஓரடையாளமாகத் திகழ்வதே லிங்கமாகும். இதை இஷ்ட லிங்கதாரணம் செய்திருப்பவர்கள் வீரசைவர். இவர்களை "நெற்றியிற் திருநீறும் முகத்தில் ஒளியும், கருணை நிறைந்த கண்களும், உதடுகளில் குற்றமற்ற புன்னகையும், சிவலிங்கதாரணம் செய்யப்பட்ட செஜ்ஜை மார்பிலும், செபத்துக்கான ருத்திராக்க மாலையும், விபூதிப்பை கரத்திலும் உடையவரைக் கண்டால் லேசாக வீரசைவர் என எவரும் கணிப்பிடுவர். இவர்கள் போலிவேசதாரிகளன்று; போலிவேசத்தை முற்றாக எதிர்ப்பவர்கள். ஆண், பெண், இன மொழி, உணர்வு, தாழ்வு, சாதி, மத வேறுபாடற்று லிங்காசாரமுள்ள அனைவரும் உயர் குலத்தவர் என்ற உயர் பண்பைத் தாரக மந்திரமாகக் கொண்டவர்கள், காலை, மாலை, மதியமாகிய முப்போதும் சிவலிங்க பூசை தவறாது செய்து "சந்தியும் ஓம்பிச் சடங்கறுப்போர்" என்ற சொல்லுக் கிலக்கணமாகி உழைப்பு, இரக்கம், சகோதரத்துவம், சமத்துவம் பேணிக் காப்பவர், நடமாடும் தெய்வம் போன்றவர். சுருக்கச் சொல்லில் சதாசிவ நிலையை யெட்டிய ஜீவாத்மா வெனக் கூறலாம்.

சங்கமர் : இவர் வீரசைவர்களின் குருபீடத்திற்குரியவர். வீரசைவத்துக்கே தங்களை முழுமையாக அர்ப்பணித்துப் பொது மக்களின் நம்பிக்கைக்கும், நன்மதிப்புக்கும் பாத்திரமாகி அவர்கள் நலம் பேணி, வீரசைவம்வேறு, லிங்கம் வேறு, தாம் வேறென்றில்லாது இம்மூன்று நிலைகட்குள் சங்கமித்து "சங்கமர்" என்ற மேலான நிலையை அடைந்தவர்கள். இவர்களே சைவ ஆலயங்களில் குருமாராக நியமிக்கப்பட்டனர். குருமட பீடாதிபதியாகவும் திகழ்ந்தனர். இத்துறையில் தீவீரமாகச் செயல் பட்டவர்களில் பெம்மான் பசவர் குறிப்பிடத்தகவர். இவர் கி.பி. 1131 ஆம் ஆண்டிலிருந்து 1167 ஆம் ஆண்டுவரை வாழ்ந்ததாக 'பெம்மான் பசவர் வரலாறு", "வீரசைவ நெறியும் அதன்வரலாறும்" என்ற நூல்கள் மூலமும் அறியக் கூடியதாகயிருக்கின்றது. இவர் காலத்திற்முன் இந்நெறியை "பஞ்சாரியர்" (ஐந்துறவிகள்) அதாவது, இரேவணராத்யர், மருளாத்யர், பண்டிதராத்யர், ஏகோராத்யர், என்னும் சங்குகன்னர், விசுவராத்யர். இவர்கள் மிகப் புரட்சிகரமாக செயல்பட்டிருக்கின்றனர். அவரவர் பேசும் தாய் மொழியிலே "பூசை" வழிபாடுகள் நடைபெற்றிருக்கின்றன. இதே பாணியிலே தமிழ் பிரதேசங்களில் தமிழில் வழிபாடு தனித்தன்மையுடன் நடை பெற்றிருக்கின்றது. இதை எமது பாட்டனார். ஆ. கு. சின்னத்தம்பிக் குருக்களுக்கு முன்பிருந்த எமது கொள்ளுப்பாட்டனார் தம்பியையக் குருக்கள் காலத்தில் நடைமுறையிலிருந்து வந்ததாக எமது முன்னோர் வாயிலாக அறியக் கூடியதாக இருக்கின்றது. இது தற்போது குறுகிய காலத்திற்குப் பிறகு அருகி வைதிகப் பூஜா முறைகளும் கலந்து நடை பெறுகின்றது. திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், முனீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற ஆலயங்களில் இருந்து வந்த வீர சைவக் கிரியை, பூஜை முறைகளும் மாறி வைதீக முறையுடன் கலந்து நடைபெறுவதை நடை முறையிற் காணலாம். இது தற்காலம் எங்கும் பரந்திருக்கின்றது. கிழக்கிலங்கையைப் பொறுத்தவரையில் வீரசைவக் கோட்பாட்டை அனுசரிக்கும் ஆலயங்களை ஆங்காங்கு காணலாம் எது எப்படியிருப்பினும். இறைவன் சகல ஆன்மாக்களையும் படைத்து அவைகள் நெறியுடன் வாழவே வேதங்கள், ஆகமங்கள், புராண இதிகாசங்களைத் தந்தார். ஆகவே, சகலதும் இறைவன் கைவசமே. இதில் ஒன்றையொன்று ஒதிக்கித்தள்ள இடமில்லை. ஆகமங்களின் உண்மைக் கருத்தையறிந்து திரிகரண சுத்தியோடு செய்யும் கர்மம் மேன்மையடையும் என்பது வேதாந்த சித்தாந்த முடிவு. எனவே, அனைத்து ஜீவாத்மாக்களும் இறைவனின் குழந்தைகள் என்ற நிலையில் சமயாசார நெறி நின்று ஓர் குடும்பமாக மாறி வழிபாடு செய்து, எல்லாம் வல்ல தான் தோன்றிலிங்கப் பெருமான் திருப்பாதாரவிந்தம் சரண்புகுந்து பிறவிப் பெருங் கடல் நீங்குவோமாக.

*வணக்கம்*

சிவ ஸ்ரீ. மு. கு. சச்சிதானந்தக் குருக்கள்
*களுதாவளைப் பிள்ளையார்,*
*ஒந்தாச்சிமடம் கற்பகப் பிள்ளையார்,*
*ஆலயங்களின் பிரதம குரு.*

# முக்கதைகள்

திரு. மா. அமர சிங்கம் J.P

**1. பக்தனுக்குக் காட்சியளித்த சுயம்புலிங்கம்**

இயற்கை வளம் நிறைந்த எழில் கொஞ்சி விளையாடும் புகழ் பூத்த மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பு பிரதேசத்தின் கண் மட்டுநகர் மாதாவின் ஒரேஒரு பழைமைமிக்க செல்வக்குழந்தை எனச் சொல்லும் வண்ணம் தனித்துவமாய் விளங்குவதும் தேரோட்டம் நிகழ்வதுமான ஆலயம் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயமாகும்.

கலிபிறந்த மூவாயிரத்தைந்நூறாம் வருடகாலத்தில் கலிங்க ஒரிசாதேசத்தரசன் புத்திரி உலகநாச்சி அரசியாக மட்டக்களப்பை ஆட்சி செய்து வாழும் காலம் களப்பு முனைக்குத் தென்பாகமாகவுள்ள காட்டை அழித்துக் கழனியாக்கும் பொருட்டுத் திடகனெனும் வேடுவனுடன் வேறுபலரையும் அனுப்பிவைத்தாள் இக்கட்டளையை நிறைவேற்றும் பொருட்டு செயற்பட்டுக்கொண்டிருக்கும் வேளை திடகன் என்பவன் கொக்கட்டிமரமொன்றை வெட்ட அதிலிருந்து உதிரம் பெருக்கெடுத்தோடியது. அதைக் கண்ட திடகன் உலகநாச்சியிடம் கூறினான். உலகநாச்சியும் அவ்விடம் சென்று பார்த்த போது சிவலிங்கம் கண் நிறைந்த ஒளிப்பிளம்பாய் இருப்பதைக்கண்டு அவ்வனத்தை அழிப்பித்து ஆலயமியற்றி வடநாட்டுக் கொல்லிடத்திலிருந்து பட்டர் மூவரை எடுப்பித்துப் பூசை புரியும்படி செய்து, தந்த புரத்திலிருந்து ஆரந்தொடுக்குங் குடியினர் பதின்மரை யழைத்துத் தனது பதியிலிருத்திப் பத்தனென்பனையவர்களுக்குத் தலைவனாய்வைத்து கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரருக்கு பூசை செய்து வழிபட்டு வரலானாள். அன்று அப்பக்தனுக்குக் காட்சி கொடுத்த சுயம்புலிங்கமே இன்று பல்லாயிரக்கணக்கானோருக்குப் பணிவிடையாகும் லிங்கமாக ஈழமெங்கும் புகழ் பரப்புகிறது.

**2. புல் உண்ட கல் நந்தி**

செம்மனச் செல்விக்காக மண்சுமந்து பிரம்படி பட்ட எம்பிரான் தனது திருவிளையாடலை எம்முன்னும் காட்டத் திருவுளம் கொண்டது போல் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரரும் திக்கெட்டும் வியக்கும் அற்புதத்தைக் காட்டினார்.

ஆம் மதவெறிகொண்ட போர்த்துக்கேயர் ஈழத்தைக் கைப்பற்றி ஆண்டுகொண்டிருந்த வேளை ஈழத்து சைவ ஆலயங்களை அழித்து பொருட்களைச் சூறையாடிக் கொண்டிருந்தனர். இவ் அழிவுநிலையை எம் ஆலயத்திற்கும் ஏற்படுத்தும் வகையில் போர்த்துக்கேயத் தளபதி தனது பட்டாளங்களுடன் வந்தடைந்தார். மக்களும் ஆலயக் குருவும் செய்வதறியாது லிங்கத்தை நினைத்து வேண்டிக் கொண்டிருந்தனர். ஆலயத்தை அழிக் ஆவேசத்துடன் வந்ததளபதியின் கண்ணில் உள்ளிருந்த நந்தி தரிசனமாகியது. அதனைச் சுட்டிக்காட்டி இது என்ன? என்றான். கதிகலங்கிநின்ற குரு நந்தி என்றார். அப்படியானால் இது புல் தின்னுமா எனக் கேலியாகக் கேட்டான். பயத்தினால் நடுங்கிக் கொண்டிருந்த குருக்கள் ஆம் என்றார். எங்கே புல்லைக் கொடுபார்ப்போம் என்றான் குருக்களுக்கு விபரிதம் புரிந்து விட்டது. தப்பும் நோக்கில் ஏற்கனவே அது சாப்பிட்டுவிட்டது இனி நாளைக்குத்தான் சாப்பிடும் என்று சமாளித்தார். சரிநாளை வருகிறேன் இந்த கல்மாடு புல் சாப்பிடுவதை நான் பார்க்க வேண்டும் என கூறிவிட்டுச் சென்றுவிட்டான்.

கல்லால் உருவாக்கப்பட்ட மாட்டை புல்தின்னவைப்பது எப்படி? குருக்கள் நிலைகுலைந்து போய் எம் லிங்கத்தின் முன்னிலையில் விழுந்து பழிகிடந்தார். தன்னையும் லிங்கத்தின் ஆலயத்தையும் காக்கும்படி இரந்து மன்றாடினார். காலமெலாம் தனக்குத் தொண்டு செய்யும் தன் அடியானை கைவிடுவானா என்ன? யாவரும் அதிசயக்கும் வண்ணம் அசரீரியாகச் செய்தியை அறவித்தார் லிங்கப்பெருமான். அதன்படி ஆயத்தமாக குருக்கள் இருக்கும்போது ஆணவத்துடன் வந்த தளபதி எங்கே உன் கல்லாலான நந்தி புல் தின்பதைக் காட்டு என்றான். குரு ஏற்கனவே தயார் செய்திருந்த அறுகம்புல்

கற்றையை மஞ்சல் நீரில் கழுவி தன் கரம் ஏந்தி நந்திமுன் கொண்டு சென்று 'இந்தா நந்தா' என்றார். என்னே அதிசயம் கல்லாலான மாடு முன்னம் காலை உதறி நிமிர்ந்து வாலை முறுக்கி கம்பீரமாக எழுந்து குருக்கள் நீட்டிய அறுகம் புல்லை உண்டு, சாணமும் போட்டது. இக்காட்சியைக் கண்ட தளபதி மெய்சிலிர்த்துத் தான் சூறையாடிய பொன், பொருட்களையும் லிங்கத்தின் ஆலய வளர்ச்சிக்காக அளித்து வெட்கத்துடன் திரும்பிச் சென்றான். இத்தகைய பெருமை நிறைந்த லிங்கத்தின் பெருமை திக்கெட்டும் புகழ்பரப்பி நிற்பதை நாம் அறிய முடிகின்றது.

3. ***நோய் தீர்த்தசிவன்***

சிவினின் திவருட் செயல்கள் எண்ணிலடங்காதவை. நரியை பரியாக்கியது, ஆண்பனையை பெண்பனையாக்கியது திருக்கதவு திறந்தமை, பாம்பு தீண்டி இறந்த பாலகனை உயிர்பெறச் செய்தமை என்ற பல அற்புதச் செயகளைப் புராணங்கள் வாயிலாக அறியலாம் இன்றைய காலகட்டத்தில் இத் தான்தோன்றீஸ்வரர் செய்துள்ள, செய்து வருகின்ற அற்புதங்கள் எம்மை பரவச நிலைக்கு உட்படுத்துகின்றது என்றே கூறவேண்டியுள்ளது.

தீராத வியாதியினால் பீடிக்கப்பட்ட ஒருவர் நோய் தாங்க முடியாது தனது கழுத்தைத் தானே அறுத்தபோது குருக்கள் மஞ்கள் நீரில் நனைத்த சீலைத்துண்டைக் கழுத்தில் கட்டி சாத்துப்படி கொடுத்ததும் காயம் சுகப்பட்டது. வாய் பேசாதவர்க்கு பேச வரமளித்தார். இன்றும் பல்வேறு இடங்களிலிருந்தும் பலபக்தர்கள் தமது தீராத நோயைத் தீர்க்க வேண்டிப் பழிகிடந்து தீர்த்துச் செல்வதை நாம் காணமுடிகின்றது 20ம் நூற்றாண்டில் நடந்தவையும், நடந்து வருகின்றவையும் இவை எனின் தான்தோன்றியப்பனின் பேரருள் பற்றித் பேச எத்தனை நாவிருந்தும் போதா.

இத்தகைய பெருமைக்குரிய லிங்கத்தின் ஆலயம் பல ஆண்டுகளின் பின் குடமுழுக்கு கண்டு பல்லாயிரக் கணக்கான பக்தர்களின் தரிசனத்துக்குள்ளாகி அழகும் பொலிவும் பெற்றுத் திகழ்வதைக் காணமுடிகின்றது.

## பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாவா.

எவற்றை நாம் இறைவனுக்கு அர்ப்பணித்து நிவேதிக்கிறோமோ அவை ஒரு போதும் வீணாவதில்லை. இறைவனுக்குச் சிறிதளவேனும் ஈவதன் மூலம் மக்கள் பெரு நன்மைகளைப் பெற முடியும். ஒரு பாத்திரம், ஒரு பழம். ஒரு புஷ்பம் அல்லது தீர்த்தம் உள்ளன்புடனும் பக்தியுடனும் காணிக்கையாகக் கொடுத்தால் அதுவே போதுமானது. ஒரு கலசத்தின் புறப்பகுதியில் ஒட்டிக் கொண்டிருந்த ஒரு இலையின் சிறு பகுதியை மட்டுமே திரௌபதை கிருஷ்ணனுக்கு ஈந்தாள். அதன் பயனாக எல்லையற்ற சௌபாக்கியத்தை இறைவன் அவளுக்கு அருளினார். குசேலர் ஒரு பிடி அவலைக் கொடுத்தார். அதற்குப் பிரதியாக இறைவனின் மகோன்னத மகிமையை உணரும் ஞானம் கைவரப் பெற்றார்.

நமக்கு அதிஷ்டம் வரவேண்டுமானால் நல்ல எண்ணங்கள் நிச்சயம் தேவை. நல்ல எண்ணங்களினால் நல்ல பழக்கங்கள் ஏற்படுகின்றன. நல்ல குணமுடையவர்களே நற் செயல்களில் ஈடுபடுவார்கள். எல்லாச் செயல்களும் இறைவனின் பிரீதிக்காக என்ற பாவனையில் செய்யப்பட வேண்டும். அப்படிச் செய்பவர்களுடைய இதயங்களில் எழுவதும் தூய்மையான எண்ணங்களே. தீய எண்ணங்கள் அவர்களருகில் கூட வரமாட்டா. ஆகையால் தூய்மையான தெய்வீக எண்ணங்களை இதயத்தில் நிரப்பிக் கொண்டு இவ்வுலக வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்த வேண்டும்.

தினமும் நீங்கள் வேலை தொடங்குமுன் ஒரு சில நிமிடங்களாவது கடவுளைத் தியானியுங்கள். நாள் முடியும்போது வேலை முடிந்தபின் கோவில் அல்லது பிரார்த்தனை மண்டபம் போன்ற ஒரு புனிதமான இடத்தில் ஒன்று கூடி இறைவனின் நாமத்தைப்பாடி அவருடைய மகிமையைத் தியானித்து இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள். அது உங்களை உண்மையான கர்ம யோகியாக்கும். கர்ம வழியில் மாவீரர் ஆக்கவும் கூடும்.

# சமூகம் நோக்கிய பணியில் ஆலயங்கள்

சி. குருபரன்
B.A. Dip - in. Ed (NIE) Dip - in Ed (OUSL)

சமூகம் சமுதாயம் என்ற கட்டுப்கோப்புக்குள் வாழக் கற்றுக் கொண்ட மனிதன் நெறி முறையான வாழ்க்கை வாழ்வதற்குத் தோற்றுவித்ததே மதங்களாகும். மதங்களை அடிப்படையாக் கொண்டு ஆலயங்கள் தோற்றம் பெற்றன. காலப்போக்கில் சமூகத்துடன் இரண்டறக் கலந்தன. சமூகம் ஆலயத்தை நாடியது. ஆலயம் சமூகத்தை நாடிச் சென்றது. மக்கள் ஆலயத்தின் புனிதத்துவத்தை உணர்ந்தனர். சமூக வாழ்க்கையின் ஒவ்வொரு அத்தியாயத்தையும் – அம்சத்தையும் ஆலயத்துடன் இணைந்தனர். இதனை அடிப்படையாகக் கொண்டே "ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்....."

"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக......" என்ற மானசீக உணர்வுகள் கோயிலை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெறலாயின.

அப்பர் பெருமானின் பாசுரங்கள் ஆலயத்தின் தூய்மைத் தன்மையை வெளிப்படுத்துவன.

"நிலை பெறுமா றெண்ணுதியேல் நெஞ்செ நீ வா
நீத்தலும் எம் பிரானுடைய கோயில் புக்கு
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி ....." எனப் பாடுவது

ஆலயத்துக்கு நாம் ஆற்றும் பணியை வெளிப்படுத்தி நிற்கின்றது. அதன் புனிதத்துவத்தையும் உணர்த்துகின்றது. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற வாக்கில் கோயிலின் புனிதத் தன்மை மட்டுமன்றி அதன் சமூக முக்கியத்துவமும் இருக்கிறதென்றே கருதத் தோன்றும்....... முற்காலத்தில் கோயிலனாது வழிபாட்டை மட்டுமன்றி வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களையும் தழுவியதாயிருந்தமை வரலாற்றைப் படிக்கும் போது தெளிவாகும்" எனப் பேராசிரியர். க. கையிலாசபதி கூறுவது கோயில் தத்துவத்தின் புதிய பரிமாணத்தை வெளிப்படுத்துவனவாக அமைகின்றது. இத்தகைய பண்பு சோழப் பெருமன்னர் ஆட்சிக் காலத்தில் இருந்து வளர்த்து வந்தது.

சோழர் காலப் பகுதியிலிருந்து கோயில் தொடர்பான கோட்பாடுகள் சமூகத்தில் முக்கியத்துவம் பெறுவதை அவதானிக்கலாம். சமூகத்தில் கோயில் பற்றிய கருத்தும் சிந்தனையும் புது வடிவம் பெற்றன.

1. ஆகம அடிப்படையில் கோயில் அமைத்தல்.
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
3. ஊருக்கொரு கோயில் கட்டல்
4. உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்....
5. கோயில் தத்துவத்துக்கு எதிரான சிந்தனைகள்.
6. கோயில் கட்டுவதற்கான பணத்தை ஏழை எழியவர்களுக்கும் சமூக மேம்பாட்டுக்கும் பயன்படுத்தல் வேண்டும் என்ற வாதம்.
7. சாதி, மதம், குலம், தோத்திரப் பாகுபாட்டுக்கு ஆலயங்கள் பல நிலைக்களமாகியமையும் அதற்கெதிரான சிந்தனையும்.

இவ்வாறு கோயில் தத்துவத்தில் – கோட்பாட்டில் – கருத்தில் – பகுத்தறிவு வா தச் சிந்தனையில் மாற்றங்கள் பல காணப்படுவதை வரலாறுகள் மூலம் கண்டு கொள்ள முடிகின்றது.

ஆகம அடிப்படையில் கோயில் அமைக்கும் கட்டிடக்கலை சோழப் பெருமன்னர் ஆட்சிக் காலப் பகுதியில் இருந்து ஆரம்பமாகி விஜய நகரப் பேரரசு காலத்தில உச்ச நிலை அடைந்தது. கர்ப்பக்கிரகத்தின் அளவுப் பரிமாணங்களுக்கேற்ப கோயில் அமைக்கும் முறை ஆகமச் சார்புடையதாகும்.

நாயன்மார்களும், ஆழ்வார்களும் பக்தி நெறியை வளர்க்கவென எடுத்த முயற்சிகள் இந்துக்களின் மானசீக உணர்வுகளை வென்ற முயற்சியாகும். அன்பே சிவம்' என்பது மனிதத்துவத்தை மதிப்பதாகும். மன்னர்களையும் பாமர மக்ககளையும் பிறமதத்தளைகளில் இரந்து களைந்தெடுத்த செயற்பாடு. எத்தனை இடர்வரினும் தளராது எதிர் கொண்டு பக்தி நெறி வளர்த்த தீரமிகு செயற்பாடு. அல்லறபட்ட மக்களை நாடிச் சென்று உண்டியும் உறையுளும் இறையருளால் உவந்தளித்த பக்தி மிகு செயற்பாடு. அன்று நாயன்மாரும் ஆழ்வார்களும் கோயில் – சமூகம் – சமயம் – பண்பாடு என்ற வகையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்த அற்புதங்கள் பல புரிந்தனர். தல யாத்திரைகள் பல செய்தனர். கோயிலில் மனமுருகி இறைவன் புகழ் பாடி பக்தி இலக்கியத்தை எமக்கு உவந்தளித்தனர்.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம்..." என்ற அப்பரின் திருவாக்கு

அவரின் நெஞ்சுறுதியை வெளிப்படுத்துகின்றது. இறைவன் மீது பக்தி கொண்ட பக்தன் தன்நிலை மறந்து தன் உணர்விழந்து – தன் உள்ளக் கிடக்கையை – தனது குறைகள் – துன்ப துயரங்களை இறைவனிடம் ஒப்புவித்து தொழுது வணங்கும் உயர்ந்த இடமே கோயிலாகும். வர்க்கம், குலம், குடி, கோத்திரம் என்ற வேறுபாடின்றி வழிபடும் ஒரே இடம் ஆலயம். ஆண்டவன்

சந்நிதியில் இத்தகைய வேற்றுமைக்கு இடமில்லை. கும்பிடும் போது வலக்கரமும் இடக்கரமும் ஒன்றிப்பது போல் சமத்துவ உணர்வும், தூய சிந்தனையும் வெளிப்பட வேண்டும். அப்பர் சுவாமிகளின்

"ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங்
கங்கைவார் சடைக்கரத்தார்க் கன்ப ராகில்
அவர் கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே...."

என்ற உண்மையும், இறைவன் குணங்குறிகள் அற்றவன் சாதி, மத பேதங்களுக்கு அப்பாற்பட்டவன் என்பதை உணர்த்தவே பல ரூபபேதங்களைப் பெற்றிருக்கிறான். வாதவூரர் தன்னைக் கடையேன், புலையேன், நாயேன் எனப் பாடுவதும் அப்பர் கழிவிரக்கத்தில் பாடுவதும் இத்தகு உண்மையைப் புலப்படுத்துகின்றது.

"சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமலி நாயேன்..." என்று வாதவூரர் தம்மையே இகழ்ந்து பாடினார்.

"கோயில் முழுதும் கண்டேன்
உயர் கோபுரமேறிக் கண்டேன்
தேவாதி தேவனை யான்
எங்கு தேடினும் கண்டிலனே..." என்ற பாடலடிகள் பக்தியின் உயர்ந்த – மாசற்ற உணர்வலையை வெளிப்படுத்துவன. இவ்வகையான தோற்றப்பாடுகள் இறைவன் – கோயில் – பக்தன் ஆகியவற்றுக்கிடையிலான உயர்ந்த தத்துவத்தை வெளிப்படுத்துவன.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற கூற்றின் உண்மைத்துவத்தைக் கருத்தூன்றி நோக்கின் தனிமனிதனுக்கும் ஆலயத்துக்கும் – ஆலயத்திற்கும் சமூகத்திற்கும் உள்ள இணையற்ற பிணைப்பு வெளிப்படும். இதே போல் 'தாயிற் சிறந்த கோயிலுமில்லை தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" 'குடியிருந்த கோயில்' என்ற கூற்று கோயிலின் மற்று மொரு கருத்தை வெளிப்படுத்துகின்றது.

'ஆலயமே காயம்' 'உள்ளம் பெருங் கோயில் ஊன் உடம்பு ஆலயம்...' என்பது தமிழ்மறை. திருமூலரின் வாக்கில் இத்தத்துவம் இன்னுமொரு உண்மையை வெளிப்படுத்துகின்றது. உடம்பு ஆலயம், சிவன். சிவலிங்கம் என்ற கருத்து சித்தர்களின் அருள்வாக்காக வெளிப்பட கோயிற் தத்துவம் மேலுமொரு பரிமாணம் பெறுகிறது.

பிராமணியமும், அதன் வேதங்களும் சாதி, சமூக, சமய அமைப்பில் பாரிய தாக்கத்தை விளைவித்தன. பிராமணிய அக்ரகாரம் அவர்களை உயர்த்தியும் ஏனையவர்களைத் தாழ்த்தியும் பேச ஆரம்பித்தன. இருக்கு வேதத்தின் புருஷ சூத்மம் எனும் பகுதியில் வர்ண – சாதிபேதம் கூறப்படுகிறது ஆலயங்களில் வேதமும் சாதி குல ஒழுக்க வேறுபாடும் விசுவரூபம் எடுத்த போது சைவ சித்தாந்தக் கோட்பாடுகள் வேரூன்ற ஆரம்பித்தன. சித்தாந்திகளினதும், சித்தர்களினதும் தோற்றமும், பிராமணிய எதிர்ப்பு வாதமும் கோயிலையும் கடவுளையும் மனிதனோடு தொடர்புபடுத்தின. ' ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற கருத்தும்

'யா தொரு தெய்வம் கொண்டீர்
அத்தெய்வமாகி யங்கே
மாதொரு பாகனார் தான் வருவார் "(சிவஞான சித்தியார்) என்ற கருத்தும் வழிபாட்டின் ஒருமைத் துவத்தை வெளிப்படுத்துவன.

ஆலயத்திற்கும் உடலுக்கும் உள்ள தொடர்பை பின்வரும் அட்டவணை வெளிப்படுத்துகின்றன.

| | உடல்உறுப்பு | மண்டபங்கள் | ஆதாரங்கள் | தத்துவம் | தெய்வம் |
|---|---|---|---|---|---|
| 1. | தலை | கர்ப்பக்கிரகம் மூலஸ்தானம் | மூலாதாரம் | அதிதேவதை தத்துவம் | விநாயகர் முருகன் |
| 2. | கழுத்து | அர்த்த மண்டபம் | சுவாதிஸ்டானம் | பிருதுவி தத்துவம் | பிரம்மா சரஸ்வதி |
| 3. | மார்பு | மகாமண்டபம் | மணிபூரகம் | அப்புதத்துவம் | திருமால் லட்சுமி |
| 4. | வயிறு | ஸ்நபனமண்டபம் | அநாகதம் | தேயுதத்துவம் | சிவம், சக்தி |
| 5. | கால்கள் | அலங்காரமண்டபம் | விசுத்தி | வாயு தத்துவம் | மகேஸ்வரன் மகேஸ்வரி |
| 6. | | சபாமண்டபம் உற்வசமண்டபம் | ஆக்ஞை | ஆகாயதத்துவம் | சதாசிவன் மனோன்மணி |
| பாதம் | | கோபுரம் வாசல் | – | பரவெளித்தத்துவம் | – |

நாயன்மார் பலரும், சித்தர்களும் இறைவனை உள்ளத்துள் கண்டனர். பூசலார் உள்ளத்துள் கோயில் கட்டினார்.

'வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்' என்ற உண்மை சித்தர்களால் வெளிப்பட்டபோது அத்தத்துவமே 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்ற கருத்துக்கும் காரணமாகியது.

திருமூலர் 'ஆலய வரிபாடு – உயிர் வழிபாடு' என்றார் 'படமாடும் கோயில் நடமாடும் கோயில்' என்பது கோயில் – சமூகத்தோடு தொடர்பு பட்டன எனற கருத்தை வெளிப் படுத்துவதோடு இயக்க வழிபாட்டையும் மெய்ப்பிக்கின்றது. இயக்க வழிபாடு 'செய்யும் தொழிலே தெய்வம்' என்பதை வலியுறுத்துவன மெய் உணர்வோடு எக்கருமம் ஆற்றினும். அதில் இறைவனைக் காணலாம் என்பதும் உயிர்கள் மீது செலுத்தும் அன்பு இறைவனுக்குச் செய்யும் காணிக்கை என்பதும் மக்கள் சேவை மகேசன் சேவை என்ற கருத்தும் 'படமாடும் கோயில் – நடமாடும் கோயில்' என்பதிலிருந்து பிறந்தனவாகும். 'அன்பே சிவம்' என்பது உயர்ந்த தத்துவப் பொருளை வெளிப்படுத்துவது.

பிராமணர் ஏனைய சாதியினரை ஒதுக்கியதையும் ஆரிய வேதம், இதிகாச புராணங்களைக் கண்மூடித்தனமாகப் போற்றியதையும் பிராமணர்கள் கோயிற் பரிபாலகர்கள் ஆலயங்களில் செய்த ஊழல்களையும் கண்ணுற்ற சித்தர்கள்.

"கொள்ளை வினைக் கூட்டுறவால் கட்டிய
பல் சமயக் கூட்டம்.." என்றும்
"கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும்
"கண்மூடி வழக்க மெல்லாம் மண்மூடிப் போக..." என வள்ளலார்

புராணக் கற்பனைகளைச் சாடுகின்றார். இத்தகைய வெளிப்பாடுகள் பகுத்தறிவாளர்கள் மத்தியில் நாஸ்தீக வாதத்தைத் தோற்றுவித்தது. மத்திய கால ஐரோப்பாவில் மதத்தின் பெயரால் நடந்த ஊழலைக் கண்டிக்க புரட்டஸ்தாந்து மதம் தோன்றியது போல், இந்தியாவிலும் பல சமயப் பிரிவுகள் தோன்றின. அதில் பசவர் செய்த – புரட்சி வீரசைவத்தின் தோற்றத்திற்கு வழிவகுத்தது.

மதவெறி இனம், மத பேதம், சாதி, வர்க்க வேறு பாடுகளை அவதானித்த கால்மார்க்ஸ் "மதம் அபின் போன்றது" என்றார் சித்தர்கள் கோயில் தத்துவம் மதக் கோட்பாடு என்பவற்றுக்கு எதிரான சித்தாந்த – தத்துவக் கருத்துக்களைக் கூறுவதற்கும் இதுவே காரணமாகியது. சித்தர்கள் கோயில் தத்துவத்திற்கு எதிராகக் கொண்டிருந்த கருத்துக்களுக்குச் சித்தர் பாடல்கள் சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும்.

"ஏட்டுச் சுரக்காய் கறிக்கிங் கெய்திடாது போல
எண்திசை திரிந்தும் கதி எய்தல் இல்லையே
நாட்டுக் கொரு கோயில் கட்டி நாளும் பூசித்தே
நாதன் பாதம் காணார்கள் என்று ஆடு பாம்பே"
(பாம்பாட்டிச் சித்தர் – 94)

"கோயிலாவது ஏதடா குளங்கவது ஏதடா
கோயிலும் குளமும் தேடும் குலாமரே
கோயிலும் மனத்துளே குளமும் மனத்துளே
ஆவதும் அழிவதும் இல்லை இல்லையே.

"கோயில் பள்ளி ஏதடா குறித்து நின்றது ஏதடா
வாயினால் தொழுது நின்ற மந்திரங்கள்
ஞானமான பள்ளியில் நன்மையாய் வணங்கினால்
காயமான பள்ளியில் காணலாம் இறைவனை"

சித்தர்களின் வாக்கினை ஒத்த கருத்து கிறிஸ்தவ வேதத்திலும் காணப்படுவதை அவதானிக்கலாம்.

"வானம் எனக்குச் சிங்காசனம்
பூமி எனக்குப் பாதபடி: நீங்கள்
எனக்குக் கட்டும் ஆலயம் எப்படிப்பட்டது
நான் தங்கி இருக்கும் ஸ்தலம் எப்படிப்பட்டது."

"மனிசர்களிடத்திலே தேவனுடைய வாசஸ் தலம் இருக்கிறது. அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்"

சித்தர்களின் பாடல்களும், திருமுறைகளும் உள்ளத்தூய்மையை எடுத்தியம்புவதோடு, தூய்மையான ஒழுக்கத்தையும் வலியுறுத்துகின்றன. சித்தர்களின் பாடல்கள் ஆரம்ப காலத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தாலும், காலப் போக்கில் அதன் தத்துவப்பொருள் கொண்டு ஏத்திக் கூறப்படுகின்றன. சமூக விழுமியங்கள், பண்பாட்டு அம்சங்கள் பேசப்படுகின்றன. மூட நம்பிக்கைகள் எள்ளி நகையாடப்படுகின்றன.

மானசீக உணர்வுகளின் சிகரமான இடமாக கோயில்கள் இருக்க அதன் பரிபாலகர்களும், பூசகர்களும் செய்த ஊழல்களைக் கண்டு மனம் கொதித்த நாவலர் 'சுப்பிரபோதம்' என்ற தனது கட்டுரையில் பின்வருமாறு சாடுகின்றார்.

"பாதிரிகள் சலஞ்சாதித்தல், தாசி, சதுர் சங்கீதம், பரஸ்திரி கூட்டம் வாத்திய முழக்கம், வாண விளையாட்டு முதலிய வேடிக்கைகள் யாவும் திருவிழாவில் உண்டென்றும், அவை கந்தருக்கும், காமுகருக்கம் வாய்ப்பென்றும் இகழ்கின்றார்கள்.

இக்காலத்தில் கோயிலதிகாரிகள் பெரும்பான்மை சைவாகமவுணர்ச்சியும், நல்லொழுக்கமும் சிவபத்தியு மில்லாதவர்களாயும், சித்திர வியாபகாரத்திலும் அக்கோயில்களுக்குப் பொருள் கொடுப்போர்களும், அவ்வாறே புண்ணிய பாவம் பகுப்புணர்ச்சியின்றி, கோயில்களின் வெகு சனங்கள் முன் தாங்கள் பெறும் உபசாரத்தையும்......... வாண வேடிக்கை விளையாட்டு முதலிய வேடிக்கைகளையுமே பொருளென மதித்தலாலும் சில கோயிலதிகாரிகள் பூசை திருவிழாக்களைக் குத்தகை கூறி விற்றலாலும், பொய், களவு, வியபிசாரம், சிசு வதை, வழக்கோரம் பேசல் முதலிய பெரும் பாவங்களைச் செய்யும் பிராமணர்கள் கோயிலதிகாரிகளிடத்திலே பொருள் கொடுத்தல் பூசை திருவிழாக்களையும் அவற்றோடு சிவதிரவியாபகாரமாகிய அதிபாகத்தையும் விலைக்குக் கொள்ளுதலாலும், அதனால் சைவாகமவுணர்ச்சியும் நல்லொழுக்கமும் சிவபக்தியுமுள்ள பிராமணர்கள் விலக்கப்படுதலாலும் நமது தேவாலயங்கள் சைவாகம விதிப்படி நடக்கா தொழிந்தன" என்பது அக்கால நிலைப்பாட்டை வெளிப்படுத்தின. "கோயில் தத்துவம் நாவலரின் வாக்கிலும் நோக்கிலும் புதிய சூழ் நிலையில் புதிய தேவைகளுக்கு முகங் கொடுத்துச் செயற்பட்டது. கல்வி பொருளாதார விழிப்புணர்ச்சி, கலாசார எழுச்சி முதலியவற்றைச் சமுதாயத்தில் பரவலாக உண்டாக்குவதற்குக் கோயில் தத்துவத்தைக் கையாண்டவர் நாவலர் பெருமான்" எனப் பேராசிரியர் க. கைலாசபதி நாவலரின் சமயப்பணிக்குச் சான்று பகர்கின்றார்.

அக்காலத்தில் கோயில்களில் காணப்பட்ட சீரழிவு குறித்து வி. கலியாணசுந்தர முதலியார் "பணிக்கு நிலைக்களமான ஆலயங்கள் கள்ளர், சோம்பர், வேசையர், சோற்றாட்கள் முதலிய தீயர் உலவும் குகைகளாக மாறியிருக்கின்றன. ஆலயங்களில் பணி செய்வோர் கூலிக்காரராகவும், வயிற்றுச் சாமிகளாகவும் மாறியிருக்கின்றனர். ஆலய அர்ச்சகர் உள்ளத்தைப் பணமும் பிரசாதமும் பிற பேய்களுங் கோயில் கொண்டிருக்கின்றன. ஆலய அர்ச்சகர்களுக்கும் கல்விக்குமிடையில் பொருள் மலையும் சோற்றுக் கடலும் நிற்கின்றன. 'எல்லாம் பணி மயம் என்னும் உண்மையையும் மனிதர்பாலுள்ள குற்றங்களைக் களைந்து அவரை அன்பராக்குவதையும் தன்னிடத்தே கொண்டு விளங்கிய ஆலயப் பணியின் குலைவு, நாட்டின் உயர் நிலை ஒடுக்கத்தைக் குறிப்பிடுவதாகும்." எனக் கண்டித்தார். இத்தகைய நிலைமை இன்றுங்கூடப் பல ஆலயங்களில் காணப்படுகின்றன. அவற்றிற்கு நிலைக்களனாகவும் இருக்கின்றன.

கைலாசபதி அவர்கள் கோயில் என்பது 'நவீன சமூக அமைப்பிலே உணர்வுகளை நெறிப்படுத்தும் குறியீடாகும்" எனறும் கோயில் என்பது "உணர்வுகளும் எண்ணங்களும் சம்பிரதாயங்களும் பின்னிப் பிணைந்து ஒன்று சேர்ந்த தத்துவமாகும்" என்றும் "நாகரிக வாழ்க்கையிலும் கலைகளிலும் ஏனைய மனித ஆக்கங்களிலும் உயர்ந்தன வெல்லாம் தன்னைச்

சுற்றி இயங்கப் பெறும் தன்மையைக் கோயில் பெற்றிருந்தது" என அழுத்தம் திருத்தமாகக் கூறுவது கோயிலின் புனிதத் தன்மையை வெளிப்படுத்துவதோடு, கோயிலுக்கும் சமூகத்திற்கும் இடையில் உள்ள பிணைப்பினை எடுத்துக் காட்டுவனவாகவும் அமைகின்றது.

பண்டைய கல்வெட்டுக்களை ஆய்வு செய்த கலாநிதி டி.வி. மகாலிங்கம் "ஒரு தலத்திலுள்ள மக்களின் சமய வாழ்க்கையில் முக்கியத்துவம் பெற்ற உயிர்த்துடிப்புள்ள இடமாக விளங்கியது மட்டுமன்றி கோயிலானது அவ்வூர் மக்களினுடைய அரசியல் சமுதாய, பொருளாதாரத் துறைகளைச் சார்ந்த பல்வேறு இயங்கங்களிலும் பங்கு கொண்ட சமூக நிறுவனமாக விளங்கியது" என்றார். இக்கூற்றுக்கும் பேராசிரியர் க. அருணாசலம் "பல்லவர் காலப் பக்தி இயக்கத்தின் எழுச்சியைத் தொடர்ந்து தமிழகத்தில் மட்டு மன்றி இந்தியா முழுவதிலும் பக்தி இயக்கக் கருத்துக்கள் செல்வாக்குப் பெறலாயின. இடைக்காலத் தமிழத்தின் நாகரிகம் 'கோயில் நாகரிகம்' என்று சிறப்பித்துக் கூறுமளவிற்குச் சமயமும் கோயில்களும் முக்கியத்துவம் பெறலாயின எனக் கூவறுவதற்கும் இடையில் ஓர் ஒற்றுமை இருப்பதை அவதானிக்கலாம். இவை இரண்டு கூற்றுக்களும் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட கோயில் நாகரிகம் ஒன்றினை வலியுறுத்துவதாக அமைகின்றன.

சைவ மக்களின் இதயமாக, உயிர்ப்பாக அமைந்தவை ஆலயங்களாகும். பேராசிரியர் சு. வித்தியானந்தன் "ஈழத்துத் தமிழர்களின் பண்பாட்டிலே சமயஞ்சார்ந்த உணர்வுகளும் நம்பிக்கைகளும் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றன. இவற்றின் நிலைக்களனாகத் திகழ்பவை ஆலயங்கள்" எனக் கூறுவதற்குப் பொருத்தமான நடைமுறைகள் அண்மைக் காலங்களில் பல ஆலயங்களில் பின்பற்றப்படாமையைக் காணலாம். இன்றைய ஆலய முகாமையாளர்களும், அர்ச்சகர்களும் தன்முனைப் போடும் வியாபார நோக்கிலும் செயற்படுகின்றனர். இதுவே பல ஆலயங்களின் சீர் குலைவுக்குக் காரணமாக அமைகின்றன. இத்தகைய தன்மை பகுத்தறிவு வாதத்தின் தோற்றத்திற்கும், நாஸ்திக வாதத்தின் எழுச்சிக்கும் வழிவகுத்தது. சில நாத்திக வாதிகள் விதண்டாவாதப் போக்கில் வாதிடுவதைக் காணலாம். அத்தகையவர்களைப் பார்த்த இரசியத் தலைவர் லெனின் பின்வருமாறு கூறுகின்றார். "அரசியல் சமுதாய இயக்கங்களின் விளைவாகக் கோயில் என்ற நிறுவனம் மாற்றமடைய வேண்டுமே யொழிய வெறுமனே நாத்திக வாதத்தால் நிலைத்த பயன் ஏற்படாது. உண்மையில் நாத்திக வாதம் ஓர் அளவுக்குமேல் பயனளிக்காது" என்பது நாத்திகவாதம் எத்தகையது என்பதை வலியுறுத்துவதாக அமைகின்றது.

உண்மையில் பாரதி கண்ட சமூகமும் கோயிலும், வேறுபட்டவை. கவிதையால் உலகை அளந்தது மாத்திரமன்றி கோயில்கள் கல்விக் கூடங்களாகவும் கல்விக் கூடங்கள் கோயில்களாகவும் மாற வேண்டும். என்றும் "பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்..." என முழங்கினான். அத்துடன் நின்று விடவில்லை.

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறி வித்தல் ..." என்ற அவரது

பகுத்தறிவு வாதம் புதிய சிந்தனை யோட்டத்திற்கு வழி வகுத்து நிற்கின்றது.

கோயிலும் சுனையும், சமூகமும் சமயமும் இரண்டும் இணைந்து பணியாற்ற வேண்டும். இன்றைய சூழ்நிலையில் ஆலயங்கள் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகள் பல உள்ளன. 'பணமயம்' 'பணி மயமாக மாற வேண்டும்' ஆலயம் சமூகத்தை நாட வேண்டும், சமூகம் ஆலயத்தை நாட வேண்டும் இவை இரண்டுக்குமான பிணைப்பு பணம் பொருள், வியாபார நோக்கு தன்முனைப்பு அற்ற வகையில் அமைவதாக இருத்தல் வேண்டும். ஆலயங்களில் அமைதி குறைந்து செல்கிறது. இன்றைய இளைஞர்களில் பலர் ஆலயங்களைப் பக்திக்குரிய நிறுவனங்களாக அன்றி வேடிக்கை, வினோதம், களியாட்டம், சரசம், வெட்டிப் பேச்சு நடத்தும் இடங்களாகவே கருதுகின்றனர். ஆலயங்களின் அமைப்பு முறைகளும் இளைஞர்களின் இத்தகைய நடைமுறைகளுக்குச் சாதகமாக அமைகின்றன.

"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக வாய்மையே தூய்மையாக மனமணி லிங்கமாக...." என்ற உணர்வோடு ஆலயங்களை நோக்குவோம். மக்களை மையமாகக் கொண்டு இயங்கும் நிறுவனங்களாக ஆலயங்களையும் அதன் செயற்பாடுகளையும் மாற்றி அமைப்போம். வேதபாடசாலைகள், சமய வகுப்புக்கள், திருமுறை பாராயண அறிமுகம், முதியோர் கல்வி, சிறார் பராமரிப்பு நிலையம், நடனம், சங்கீதம், சம்பந்தமானஉபதேசங்கள், பாடசாலை, அநாதை நிலையங்கள், உணவு விநியோகம், அறநெறி நிலையங்கள், ஒழுக்க போதனைகள் நூல் நிலையங்கள், ஏழைகள் விதவைகளுக்கு உதவுதல் வைத்திய வசதிகள் அளித்தல் ஆகிய வசதிகளைச் சமூகத்திற்கு வழங்குகின்ற நிறுவனங்களாக மாற்றும் போதுதான் திருமூலர் கூறிய "படமாடும் கோயில் – நடமாடும் கோயில் " என்ற வாக்கு உண்மை பெறும்.

## உசாத்துணை நூல்கள்


1. கைலாசபதி க. (1980) நவீன இலக்கியத்தின் அடிப்படைகள் மக்கள் வெளியீடு, சென்னை.
2. ........ (1966) பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், பாரிய நிலையம் சென்னை.
3. ......... (1996) அடியும் முடியும் (இலக்கியத்திற் கருத்துக்கள்) குமரன் வெளியீடு, சென்னை.
4. ........ (1983) இலக்கியச் சிந்தனைகள் குமரன் பதிப்பகம், சென்னை.
5. அருணாசலம் க. (1992) சுவாமி விபுலாநந்தரின் சமயச் சிந்தனைகள், தமிழ் மன்றம், இலங்கை மதுரை.
6. Mahalingam T.V. South Indian polity pp 372-380
7. கோபுரம் (பங்குனி மார்கழி – 1997) இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்.
8. சிவநெறி (மலர் 6, 2 – 1997) திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வெளியீடு.
9. இந்து ஒளி (தீபம் 1, சுடர் 3 – 1997 சித்திரை, ஆனி). அகில இலங்கை இந்து மாமன்றம்.

# ஆலய அமைப்பும் வழிபாடும்

திரு. வே. மகேசரெத்தினம் B.A. (Cey)

இறைவனை வழிபடுவதற்கு அமைந்த இடம் ஆலயமாகும். இதனை "ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என ஒளவைப் பிராட்டியார் கூறியுள்ளார். ஆலய வழிபாடு என்பது ஒழுக்கத்திற்கு நிறைவு தரும் அங்கமாகும். ஆலயம் என்பது ஆன்மாக்கள் ஒடுங்கும் இடமாகும். ஆலயத்தை கோயில் எனவும் கூறுவர். கோயில் என்பது தலைவனான இறைவன் எழுந்தருளி இருக்கின்ற இடமாகும். உடம்பு வளர்ச்சிக்கு உணவு முக்கியமானதைப் போன்று ஆன்மாவின் வளர்ச்சிக்கு ஆலய வழிபாடு அவசியமாகும்.

ஆலய அமைப்புப் பற்றி நாம் நோக்கும் போது ஆலயமானது நமது உடலின் அமைப்பிலேயே அமைக்கப்பட்டிருப்பது கவனிக்கத் தக்கதாகும். ஆலயம், அதன் கோபுரம், தேர் என்பவை மனித சரீரத்தையும், இப்பிரபஞ்சத்தையும் நினைவூட்டும் வகையில் அமைந்துள்ளன. ஒரு மனிதன் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கின்ற தோற்றத்தில் ஆலயம் அமைந்திருக்கின்றது. மூலஸ்தானம் அல்லது கருவறை சிரசினைக் குறிக்கும். அர்த்த மண்டபம் கழுத்தினையும், மகா மண்டபம் மார்பினையும், தரிசன மண்டபம் வயிற்றையும், அடுத்த மண்டபங்கள் கால்களையும், இராஜ கோபுரம் பாதங்களையும் குறிக்கின்றன.

மனிதன் அப்படியே இருந்த படியே முதுகை நிமிர்த்தி உட்கார்ந்தால் முள்ளந் தண்டு அமையும் வகையைக் கொடித்தம்பம் காட்டுகிறது. எமது உடம்பில் 32 கட்டுக்களோடு கூடியை முதுகந் தண்டே கொடிமரமாகக் காட்சி அளிக்கிறது. கொடி மரத்தில் கொடி ஏறியவுடன் இறைவன் காட்சியளிக்கிறான். இக் கொடித் தம்பத்தின் அடியில் இருக்கும் சிறிய விநாயகர்எமது மூலாதாரத்தில் அரூப சொரூபியாக இருக்கும் விநாயகரைக் குறிக்கிறது. மூலாதார கணபதி என இவர் அழைக்கப்படுகின்றார்.

நமது உடம்பில் உள்ள மூலாதராம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்கின்ற ஆறு ஆதாரங்களும் ஆலய அமைப்பில் மண்டபங்களாக அமைந்துள்ளன. இவை ஆலயத்தின் அமைப்பில் முறையே கொடித்தம்பத்தடி, பலிபீடம், தரிசன மண்டபம் மகா மண்டபம், அர்த்த மண்டபம், கருப்பக் கிருகம் என அமைந்துள்ளன. ஆலயத்தின் அமைப்பு வெளியே அகன்ற பெரிய மண்டபங்களாக அமைந்து உள்ளே போகப் போகச் சிறுத்து ஒடுங்கி மூலஸ்தானத்தில் குவிகிறது. மனம் குவிந்து ஒரு முகப்பட்டு இறைவனை அடையலாம் என்பதையே இது விளக்குகிறது.

ஆலய அமைப்பினை திருமந்திரம் எனும் நூலில் திருமூலர் பின்வருமாறு

*"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்*
*வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்*
*தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்*
*கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"*

என்று பாடியுள்ளார். இங்கு திருமூலர் உள்ளம், கருப்பக்கிருகம் என்றும் ஊனுடம்பு, ஆலயம் என்றும் வாய் (மூலாதாரம்) கோபுர வாயில் என்றும் உயிர், சிவலிங்கம் என்றும் ஞான அறிவு, விளக்கு என்றும் கூறுவர்.

ஆலய அமைப்பில் கோபுரம் பிரபஞ்ச இயக்கத்தை விளக்குகிறது. அடுக்கடுக்காய் அமைந்த தளங்கள் பல்வேறுபட்ட உலகங்களையும், உலக வாழ்க்கையின் பலவித அனுபவங்களையும் குறிப்பன. இறைவனின் பலவிதமான திருவிளையாடல்கள், சாதாரண உலகியல் நடைமுறைகள் என்பன கோபுரத்தில் அமையும் சிற்பங்களால் குறிக்கப்படுகின்றன. தூலலிங்கம் என்று கூறப்படும் இக்கோபுரமானது சூக்குமலிங்கம் என அழைக்கப்படும் மூலமூர்த்தியின் வெளிப்படையான குறியீடாகும். கோபுர வாயில்கள் பொதுவாக ஒற்றைப்படையில் அமைந்திருக்கும். மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று இவ்வாறு அதில் அமைந்துள்ள வாயில்கள் ஒன்றன் மேல் ஒன்றாகப் பெருகிக் கொண்டே போகும். கோபுரத்தின் வாயில்கள்

மூன்று இருப்பின் நனவு, கனவு, மூன்றையும் குறிக்கும். ஐந்து வாயில்கள் இருப்பின் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளையும் குறிக்கும். ஏழு வாயில்கள் இருப்பின் ஐம்பொறிகளுடன் அந்தக்கரணங்களில் மனம், புத்தி ஆகிய இரண்டையும் சேர்த்துக் குறிக்கும்.

ஆலயங்கள் பொதுவாக கிழக்கு நோக்கி அமைவதே முறை. ஆனால் இடம், பொருள், ஏவல்களுக்கேற்றபடி மிகச் சில இடங்களில் வடக்கு, மேற்கு நோக்கியும் ஆலயங்கள் அமைவதும் உண்டு. ஆனால் தெற்கு நோக்கி எந்தவொரு ஆலயமும் அமைவதற்கு விதி இல்லை. எனினும் சில இடங்களில் தனியான நடேசர் கோயில்கள் தெற்கு நோக்கி உள்ளன. பொதுவாகச் சிவாலயங்களில் தென்மேற்கு மூலையில் கிழக்கு நோக்கிப் பிள்ளையாரும், வடமேற்கு மூலையில் கிழக்கு நோக்கி சுப்பிரமணியரும், ஈசான மூலையில் தெற்கு நோக்கி வசந்த மண்டபமும், மேற்கு நோக்கி யாக சாலையும், அருகில் மேற்கு நோக்கி வைரவரும், அதையடுத்து மணிக்கோபுரமும் அமைவது மரபு. மகா மண்டபத்தில் தெற்கு முகமாக அம்பிகை வீற்றிருப்பாள். தரிசன மண்டபத்தில் நடராசர் மற்றும் எழுந்தருளிகள் வைக்கும் வழக்கம் சில இடங்களில் உண்டு. நந்தி, பலிபீடம் இவற்றிற்கு நேர் வடக்கே நவக்கிரகங்கள் அமையும்.

நவக்கிரக மண்டபத்தின் மத்தியில் கிழக்கு நோக்கிச் சூரியனும், தென் கிழக்கில் மேற்கு நோக்கிச் சந்திரனும், தெற்கில் தெற்கு நோக்கிச் செவ்வாயும், வடகிழக்கில் கிழக்கு நோக்கிப் புதனும், வடக்கில் வடக்கு நோக்கிக் குருவும் (வியாழன்), கிழக்கில் கிழக்கு நோக்கி சுக்கிரனும், மேற்கில் மேற்கு நோக்கி சனிஸ்வரனும், தென் மேற்கில் தெற்கு நோக்கி ராகுவும், வடமேற்கில் தெற்கு நோக்கி கேதுவும் காட்சியளிப்பர். அநேகமான கோயில்களில் இந்த முறையே கைக் கொள்ளப்படுகிறது. ஆகமமுறைப்படி அமைந்த கோயில்களில் இது வைதிக முறைப்படி அமைவது ஏன் என்பது அறிஞர்களின் ஆராய்ச்சிக்குரியது.

ஆலய வழிபாடு பற்றி நாம் நோக்கும் போது ஆலயத்திற்குச் செல்லும் போது எவ்வாறு செல்ல வேண்டும் என்பதை நாம் முன்பே அறிந்திருக்க வேண்டும். ஸ்நானம் செய்து தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிந்து சிவசின்னங்களாகிய விபூதி, காவிவஸ்திரம், உருத்திராக்கம் என்பவற்றை அணிந்து ஆசார சீலத்தோடு இயல்புக் கேற்ப கற்பூரம், பழம், தேங்காய், பூ போன்ற பூசனைப் பொருட்களைச் சுத்திசெய்து கொண்டுனை சிவசிந்தனையுடன் ஆலயத்திற்குச் செல்ல வேண்டும்.

ஆலயத்தைச் சென்று அடைந்ததும் கால் கழுவிச் சுத்தம் செய்த பின்பு கோபுரத்தை வணங்க வேண்டும்.

"கோபுரதரிசனம் கோடி புண்ணியம்"

கோபுரத்தினைத் தரிசிப்பதே இறைவனை வணங்குகின்ற பலனைத் தரும் என்பது நம்பிக்கை. கோயிலுக்குள் அமைந்துள்ள கோபுரங்கள் எல்லாவற்றையும் விட ஆலயத்திற்கு முன்பாக அமைந்துள்ள இராஜகோபுரம் உயர்ந்ததாக இருக்கும். வெகு தூரத்தில் உள்ளவர்களும் இறைவனை நினைத்து வழிபடலாம்.

இராஜ கோபுரத்தினைத் தரிசித்தவாறே கொடி மரம், நந்தி, பலிபீடம் இவைகளை சிவரூபமாகப் பாவித்து வணங்கிய பின்பு ஆலயத்தினுள் சென்று பலிபீடத்திற்கு இப்பால் வடக்கே தலை வைத்து விழுந்து வணங்க வேண்டும். இப்படி வணங்கும் போது நமது மனதில் தோன்றுகின்ற கீழ்மையான எண்ணங்களும் கீழான இயல்புகளும் பலி கொடுக்கப்பட வேண்டும். இவை கீழே விழுந்து விட வேண்டும். எழும்பும் போது மேலான எண்ணங்களே மிஞ்சி இருக்கின்றன என்ற நினைவுடன் மேலே எழும்ப வேண்டும். வடக்கு நோக்கிய சந்நிதியாயின், கிழக்கே தலைவைத்து நமஸ்காரம் செய்தல் முறை. வடக்கிலும், கிழக்கிலும் கால் நீட்டி வணங்குதல் தகாது. சந்நிதானங்கள் நிறைய உள்ள கோயில்களில் வீழ்ந்து வணங்குவதைத் தவிர்க்கலாம். சிதம்பரத்தில் உட் பிரகாரத்தில் வீழ்ந்து வணங்குவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும். அட்டாங்க நமஸ்காரம் என்பது ஆண்கள் தலை, கையிரண்டும், செவியிரண்டு, வாய், புயங்கள் இரண்டு ஆகிய எட்டு உறுப்புக்களும் நிலத்திலே படும்படி வழிபடுவதாகும். ஆண்கள் மார்பு நிலத்தில் படும்படி வலக்கையை முன்னும், இடக்கையைப் பின்னும் நேரே நீட்டி பின் அம்முறையே மடக்கி வலப்புயமும் இடப்புயமும் மண்ணிலே பொருந்தக் கைகளை அரையை நோக்கி நீட்டி வலக் காதை முன்னும் இடக் காதைப் பின்னும் நிலத்திலே பொருந்தச் செய்து வணங்குதலே அட்டாங்க நமஸ்காரமாகும். பஞ்சாங்க நமஸ்காரம் என்பது பெண்கள் தலை,

கையிரண்டு, முழந்தாள் இரண்டு ஆகிய ஐந்து உறுப்புக்களும் நிலத்தில் படும்படி வழிபடுவதாகும். ஆனால் தற்காலத்தில் அட்டாங்க, பஞ்சாங்க வழிபாட்டு முறைகள் மேற் கொள்கிறவர்கள் குறைவாக உள்ளதை ஆலயங்களில் கண்கூடாக அவதானிக்கலாம்.

அட்டாங்க, பஞ்சாங்க வணக்க முறையின் பின்பு ஆலயத்தைச் சுற்றி மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும் வலம் வருதல் வேண்டும். வலம் வரும் போது சிரசிலாவது, மார்பிலாவது இரு கரங்களையும் குவித்து சிவநாமங்களை உச்சரித்து மெல்ல அடியெடுத்து வைத்து வலம் வருதல் வேண்டும். வலம் வருதல் என்றால் என்ன? கோயிலைச் சுற்றி நடக்கும் போது பக்தன் உள்ளிருக்கும் தெய்வம் தனது வலப்புறம் இருக்கும் படி பார்த்துக் கொள்கிறான். இதனையே நாம் வலம் வருதல் என்கின்றோம்.

விநாயகரை ஒரு தரமும், சூரியனை இருதரமும், அம்பிகையையும், விஷ்ணுவையும் நான்கு தரமும் வலம் வருதல் முறை. விநாயகரை வணங்கும் போது முஷ்டியாகப் பிடித்து கைகளினால் நெற்றியில் மும்முறை குட்டி வலக்காதை இடக் கையினாலும் இடக்காதை வலக்கையினாலும் மாறிப் பிடித்து மூன்றுமுறை தாழ்ந்து எழுந்து (தோப்புக் கரணம்) வழிபட வேண்டும்.

சண்டேஸ்வரரை வலம் வந்து வணங்குவது கூடாது. ஏனெனில் மூலஸ்தானத்திற்கும் சண்டேஸ்வரருக்கும் இடையே குறுக்கே போகக் கூடாது என்பது விதி. இதே போல நந்திக்கும், மூலஸ்தானத்திற்கும் இடையே குறுக்கே போவதும் தகாது. இறுதியாக வலம் வரும் போது வழிபாட்டின் பலனைத் தரும்படி கேட்டு மும்முறை மெல்லக் கைகொட்டி சண்டேஸ்வரரை வணங்க வேண்டும்.

ஆலய வழிபாட்டின் போது பிறர் வழிபடுவதற்கு நாம் இடைஞ்சலாக இருக்கக் கூடாது. பிறருக்கு இடைஞ்சல் கொடுக்கும் போது நாமே கடவுள் வழிபாட்டுக்கு புறம்பாகப் போய் விடுகிறோம். பிறர் வழிபட உதவும் பக்தன் தானும் அந்த வழிபாட்டின் நலனைப் பெறுகின்றான். பிறருக்குப் பணிவிடை செய்து யாரும் முன்னேறலாம். இதற்கு மனிதன் ஆறு உட்பகைகளை அகற்ற வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் காமம், குரோதம், கோபம், மோகம், மதம், மார்ச்சர்யம் என்னும் ஆறு உட்பகைகள் உண்டு. இந்த ஆறு உட்பகைகளையும் ஆலய வழிபாடு செய்வதன் மூலமாகத்தான் வென்று மன அமைதி பெற முடியும்.

ஆலய வழிபாட்டின் போது ஆலயத்தில் செய்யத் தகாத குற்றங்களையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆசாரமில்லாது ஆலயத்திற்குச் செல்லுதல், அங்கு உயர்ந்த ஆசனங்களில் இருத்தல், கால் நீட்டுதல், தோளிலே உத்தரியமிடுதல், சேட் அணிதல், விக்கிரகங்களைத் தொடுதல் வீண் வார்த்தை பேசுதல், பலிபீடம், விக்கிரகம், தூபி என்பவற்றின் நிழல்களை மிதித்தல் வெற்றிலை போடுதல், பொடி போடுதல், புகைத்தல் முதலியன ஆலயத்தில் செய்யத் தகாத குற்றங்களாகும்.

ஆலய வழிபாட்டின் பயன்கள் பற்றி நாம் நோக்கும் போது தினமும் காலையில் வீதி வலம் வந்து வழிபடுபவர்கள் தீராத நோய் தீரப் பெறுவர். உச்சிக் காலத்தில் வலம் வந்து வழிபடுபவர்கள் இஷ்ட சித்திகளைப் பெறுவர். மாலையில் வலம் வந்து வழிபடுபவர்கள் பாவ நீக்கம் பெறுவர். அர்த்த ஜாமத்தில் வலம் வந்து வழிபடுபவர்கள் முத்தியின்பம் பெறுவர்.

எனவே ஆலய அமைப்பும், வழிபாடும் எம்மை மேல் நிலைக்கு இட்டுச் செல்வதற்காக அமைந்துள்ளன. நமது சைவத்தமிழ்ப் பண்பாட்டுக்கு அமைய ஆலய அமைப்புக்களை பரிபாலித்து ஆலயங்களில் வழிபாடுகளை முறைப்படி மேற்கொண்டு ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்கு நல்வாழ்வு வாழ்வோமாக.

# 'சமய நம்பிக்கையும் ஆன்ம ஈடேற்றமும்'

சிவஞானம் மகேஸ்வரன் B.com. (Hons)

சமயமானது மக்களின் வாழ்வுடன் பின்னிப்பிணைந்து அவர்களை நல்வழியில் இட்டுச் செல்வதாக அமையவேண்டும். இவ்வாறாக காலத்துக்குக் காலம் உலகில் பல்வேறு சமயப் பிரிவுகளும் தோன்றலாயின. அவை வாழ்க்கை நெறிமுறைக்கு இசைந்ததாக இருக்கவேண்டும். எனவேதான் சமயம் மனித வாழ்வு, அவனது ஆன்மாவின் ஒளி எனக் கூறப்படுகின்றது. இந்த வகையில் இந்து சமயத்தின் மிகப்பெரிய ஒரு பிரிவாக சைவசமயம் விளங்குகின்றது. சைவத்தில் முதன்மையானது பக்திக் கொள்கையாகும். இறைவனைப் பக்தி வலையில் வசப்படுத்தலாம் என்ற கொள்கை பல நூற்றாண்டு காலமாகச் சைவ மக்களிடையே வளர்ந்து வந்துள்ளது. இதனாலேயே நாடெங்கும் பல திருக்கோயில்கள் எழுந்தன. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றை முறையாகக் கொண்ட பல கோயில்கள் மக்கள் வழிபாட்டுக்குரிய இடங்களாகக் காட்சியளிக்கின்றன. சைவ வாழ்வின் முக்கிய குறிக்கோள் உள்ளொளி பெருக்கலாகும். புறவாழ்வின் தூய்மையே அகவாழ்வின் தூய்மைக்கு அடியிடுவதாகும். எனவே உள்ளும், புறமும் தூய உணர்ச்சியைப் பெருக்குவதற்கும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு மார்க்கங்களும் உதவுகின்றன.

இவ்வுலகத்தில் இடம் பெறுகின்ற ஒவ்வொரு நிகழ்வுக்கும் நோக்கம் ஒன்று இருக்கவேண்டும் என்பது சிந்திக்கத் தெரிந்தவர்களுக்கு தெளிவாகத் தெரிந்த ஒரு விடயமாகும். எனவே பிறப்பு என்ற நிகழ்வுக்கும் ஒரு நோக்கம் இருக்கவேண்டும். முத்தியடைதல் அதன் நோக்கமாகும். முத்தியடைதல் என்றால் ஆன்மாவானது பிரமத்தை உணர்ந்து கடவுளாகிய பிரமத்தை அடைதல் என சைவசமயத்தில் பொருள்படும். எண்ணற்ற ஆன்மாக்களையும், பிரமாண்டமான சக்தியையும் அறிவையும் ஒன்றாகக் கொண்ட மெய்ப்பொருளையே பிரமம் என்கின்றோம். சைவ சமயிகள் இதனைச் சிவம் என்பர். கடவுள் என்றால் பிரபஞ்சம் அனைத்தையும் கடந்து அவற்றிற்கு துணையாக நிற்றல் என்று பொருள்படும். இவ்வியல்பு பிரமமாகிய சிவனுக்கு உண்டு; பிரமத்தில் காணப்படும் உயிர்களுக்கும் உண்டு. எனவே ஒவ்வொரு ஆன்மாக்களும் கடவுள் என்பதை மறுக்க முடியாது. சிவம் சமுத்திரமும், மழைத்துளியும் நீரையே கொண்டுள்ளது.

இவ்வாறே பிரமமாகிய சிவனும் ஆன்மாவும் கடவுளையே கொண்டுள்ளன. உலகத்தில் காணப்படுவன யாவும் சிவனிடமிருந்தே தோன்றின. இதனையே நாம் சிவமயம் என்கின்றோம். திருவருள் எங்கும் நீக்கமறக் கலந்திருப்பதாலேயே ஆன்மாக்கள் அறிவையும் சக்தியையும் பெற முடிகிறது.

பிரியத்துடன் இரண்டறக் கலந்த ஆன்மாக்கள் பிரமத்தின் சிருஷ்டியைக் கண்டு களிப்பதற்காக உலகிற்கு வருகின்றன. வந்த ஆன்மாக்கள் பிரமத்தின் சிருஷ்டியின் அற்புதத்தில் மயங்கி தாம் கடவுள் என்பதையும் மறந்து பொருட்களிடையிலான அழகு, அவலட்சணம் போன்ற வேறுபாடுகளைக் காண்கின்றன. பொருட்கள் அனைத்தும் முழுமுதற்சக்தியின் தோற்றப்பாடுகள் என்பதை மறந்து அவற்றின் மீது ஆசை கொள்கின்றன. எல்லாம் மாயை என்பதை உணராமல் மலத்தால் கட்டுப்படுகின்றன. அவற்றின் சரீரங்களையே மெய்யென நினைத்து அவற்றின்மீது உறவு, பகை, பாசம், மோகம், வெறுப்பு, குரோதம் என்பவற்றைக் கொள்கின்றன.

இப்பிறப்பில் அனுபவிக்கும் இன்பதுன்பங்கள், முந்திய பிறப்புக்களிற் செய்து வைத்த புண்ணிய பாவ கர்மங்களின் விளைவுகள். இவை பிராரத்தம் எனப்படும். பிராரத்தை ஊட்டுவோன் இறைவன். உயிர்களின் நன்மையின் பொருட்டு அளவறிந்து ஊட்டுபவன் அவன். இன்பத்தை ஊட்டும் போது விருப்பும் துன்பத்தை ஊட்டுங்கால் வெறுப்பும் உண்டாகின்றன. ஊட்டுவோன் கருத்தை விசாரித்தறிபவர்கள், துன்ப அனுபவங்களை பொறுக்க இயலாதிருந்தால் இறைவனை வேண்டுதல் செய்து தவத்தால் அவற்றை நிவர்த்தி செய்வதன்றி துன்ப அனுபவத்தில் வெறுப்புக் கொண்டு இருத்தல் நியாயமன்று. இறைவன் ஒருபோதும் நீதியை அவமதிப்பதில்லை எனவே இறைவன் துன்பத்தை அருளும் நீதியை விசாரித்து உணருவதே உண்மையான பக்தியாகும்.

''இருள்சேர் இருவினை'' என்கிறார் வள்ளுவப் பெருந்தகை உயிர்கள் செய்யும் நல்வினை, தீவினைகள் இருளாகிய அறியாமையின் விளைவுகளே. இங்கு நல்வினை

பொன்விலங்கு போன்றும் தீவினை இரும்பு விலங்கு போன்றும் உள்ளது. ஓர் ஆன்மா மற்றைய ஆன்மாவின் ஈடேற்றத்தைத் தடுக்கும் முகமாக செய்யும் வினைகளை தீவினை எனலாம். தீவினை புரியும் ஆன்மா அதன் கர்மபலன்களை அதாவது உடனே, இப்பிறப்பிலேயே அனுபவிக்கலாம். அல்லது பின்னர் நிகழும் அடுத்த பிறவியிலேனும் அனுபவிக்கலாம். ஓர் ஆன்மாவானது மற்றைய ஆன்மாக்களின் ஈடேற்றத்தை ஊக்குவிக்கும் முகமாக ஆற்றும் வினைகளை நல்வினை எனலாம். இதன்மூலம் இறைவனை அடையும் வழியை எளிதாக்கலாம்.

ஓர் ஆன்மா உடலில் இருக்கும் போது தான் கடவுள் என்பதை மறந்து மற்றைய ஆன்மாக்களும் இறைவன் என்பதை மறந்து தானே பெரியவன் எனவும், தன்னால் எதுவும் முடியும் எனவும் அகங்காரம் கொள்கின்றது. இதனால் அவை ஆணவ மலத்தால் பீடிக்கிறது. நான் கடவுள் என்பதை உணர்ந்து பிரமத்துடன் இரண்டறக் கலக்கும் நிலையினை ஆத்ம ஞானம் என்கின்றோம்.

ஆன்மா தன்னுள் இருக்கின்ற தெய்வீகத்தன்மையை வெளிக்கொணர்வதற்கான நெறி முறைகளை சமய நம்பிக்கைகள் தெளிவுபடுத்துகின்றன. டாக்டர் ராதாகிருஷ்ணன் இது பற்றி குறிப்பிடுகையில் "சமயம் எனப்படுவது நடைமுறைக்கொவ்வாத அனுபவ பூர்வமாகச் சாதிக்க முடியாத எண்ணங்களை ஏற்றுக் கொள்வதும் கிரியைகள், சடங்குகளை நிறைவேற்றுவதும் ஆகி விடாது. சமயம் எனப்படுவது ஒருவித வாழ்க்கைமுறை; அது உணரப்பட வேண்டிய அனுபவமே ஆகும்" என்பார். அதாவது மெய்ப்பொருளினை உணர்ந்து கொள்வதும் சமயம் எனலாம். எனவே சமய நம்பிக்கையானது மக்கள் வாழ்வுடன் பின்னிப் பிணைந்திருந்து அவர்களை நல்வழியில் இட்டுச்சென்று ஆன்ம ஈடேற்றத்துக்கான அடிப்படைநெறிமுறைகளை உணர்த்துபவையாகும். சமயம் என்பது ஒருவித அனுபவத்தில் இருந்து பிறக்கின்றது என மெய்யியலாளரான றுடோல் ஒட்டோ குறிப்பிடுகின்றார். இதனைப் புனித அனுபவம் என கூறுகின்றார். அதாவது புனித பொருள் அல்லது புனித இடத்தோடு தொடர்புடைய புனித சக்தியை இந்த புனித அனுபவம் எடுத்து விளக்குகின்றது. இங்கு புனிதம் தான் முக்கியமானது. இதுவே சமயத்துக்கு அடிப்படையாகும். புனித அனுபவத்தைப் பற்றி அவர் விளக்குகையில் ஒரு புனித உருவம் மனிதனுடைய மனதைக் கவர்ந்து அதனை விளங்கப்படுத்த இயலாதிருக்க வேண்டும். மௌனமாக நின்று ஆச்சரியத்தோடும், பயத்தோடும் உள்ளுணர்வான நடுக்கத்தோடும் அப்பொருளை அஞ்சலி செய்ய வேண்டும். அத்துடன் அது தொடர்புடையவனது மனதைக் கவர வேண்டும். அதனால் அம்மனிதன் ஈர்க்கப்படவும் வேண்டும். அதனால் அவர் பரிசுத்த நிலையடைந்து ஆன்ம ஈடேற்றமும் அடைவான். இவ்வாறு சமய நம்பிக்கை ஏற்படுகிறதென்கிறார் ஒட்டோ.

தத்துவஞானம் எதைப் பேசினாலும் உலகின் இயற்கை நியதி மாறாதிருக்கும் வரை, உலகில் மரணம் என்பது இருக்கும்வரை மனத்திலே பலவீனம் இருக்கும். அந்தப் பலவீனத்தினால் அவனுடைய இதயத்தில் இருந்து அழுகுரல் வரும் போது ஆண்டவனிடத்தில் நம்பிக்கை இருந்தே தீரும். பலவீனத்திலும், பயத்திலும் தான் அனேகருக்கு கடவுள் நம்பிக்கை தோற்றமளிக்கின்றது. மனம் பலவீனமடையும் போது மத தத்துவ ஞானங்களெல்லாம் மெய் என்கின்ற பக்குவமும் மனம் பலமடையும் போது எல்லாமே பொய் என்கின்ற நிலையுமே மனிதனின் மாபெரும் பலவீனம். சாவைத் தவிர்க்க முடியாது. ஆனால் சஞ்சலத்தை தவிர்க்கமுடியும். மனதுக்கு துாபம் தருபவற்றை இறைவனிடம் ஒப்படைத்து பிறருக்குத் தொல்லை தராதபடி வாழ்வது ஓர் ஆத்மீக வாழ்வாகும்.

மானிட சமுதாயம் முழுமையாகவும் வளத்துடனும் வாழ்வாங்கு வாழசமய நம்பிக்கை இன்றியமையாதது. அது தனது செல்வாக்கைத் தொடர்ச்சியாகச் செலுத்த வேண்டும். அது உயர்வான கற்கைப் பெறுமானங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். விஞ்ஞான முடிவுகளைச் சமயம் மறுதலிக்காமலும் சமய உண்மைகளை விஞ்ஞானம் அலட்சியம் செய்யாமலும் இரண்டும் இனணந்திருத்தல் வேண்டும். நவீன வாழ்வின் சிக்கலான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதாக விஞ்ஞானமும், சமயமும் இருக்கவேண்டும்.

உலகியல் வாழ்வும் சமய வாழ்வும் ஒன்றுக்கொன்று முரண்பாடானவை. உலகியல் இன்பங்களை அனுபவிக்கத் துடிப்பவன் சமய வாழ்வினை மேற்கொள்ள முடியாது. உலக வாழ்வின் அநித்தியத்தை உணர்ந்து, பந்த பாசங்களைத் துறந்து நித்தியப் பொருளாம் இறைவனை அடைவதையே குறிக்கோளாகக் கொண்டு செயற்பட வேண்டும். சமயமும் வாழ்வும் இரு வேறு துருவங்களாக அமையின் சமயமும் சீரழியும், வாழ்வும் சீரழியும். சமயமும் வாழ்வும் ஒன்றாக இணையுமிடத்துச் சமயமும், நிலைக்கும், வாழ்வும் சிறக்கும்.

வெறுமனே விஞ்ஞான தொழிநுட்ப பொருளாதார வளர்ச்சி மட்டும் உலகில் அமைதியையும், சுபீட்சத்தையும் உண்டு பண்ணி சிறந்ததொரு சமூகத்தை உருவாக்கமுடியாது என்பதை நடைமுறை உலக வரலாறு நமக்கு நிரூபித்து வருகிறது. எனவே உண்மையாக அமைதிக்கும் சுபீட்சத்துக்கும் சமய நம்பிக்கை அவசியமானது என்பது தற்பொழுது யாவராலும் உணரப்பட்டு வருகின்றது. அதாவது மனிதனது உண்மையான மேம்பாட்டுக்கு பக்கபலமாக சமய நம்பிக்கை உள்ளது என்பதும் உணரப்பட்ட விடயமாகும்.

ஆன்ம ஈடேற்றத்துக்கான வழிகளை இந்து சமய நூல்கள் தெளிவாக எடுத்து இயம்புகின்றன. அவற்றில் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய மார்க்கங்கள் புருடார்த்தங்களான அறம், பொருள், இன்பம், வீடு சிவசின்னங்களை அணிதல், தீட்சை, விரதங்கள், எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல் போன்றன பிரதானமானவையாகும். இவற்றை எந்நேரமும் எமக்கு அறிவுறுத்தி ஆன்ம ஈடேற்றத்துக்கு எம்மை இட்டுச் செல்லக்கூடிய எளிய சாதனம் ஆலய வழிபாடாகும். சைவ சித்தாந்தத்தில் குறிப்பிடப்படும் சரியையும், கிரியையும் ஆலய வழிபாட்டோடு தொடர்புடையவை. யோகம் தொடர்ச்சியான பயிற்சியுடனும் ஞானம் அறிவுடனும் தொடர்புடையது.

புருடார்த்தங்களில் அறம் செய்தல் முதன்மையானது. "அறம் செய்ய விரும்பு" என்பார் ஔவை. அறம் எனப்படுவது தருமம், கடமை, நன்னடத்தை போன்றவைகளைக் குறிக்கும். பொருள் எனப்படுவது இவ்வுலக வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களைக் குறிக்கும். இவ்வாறான ஒரு பொருளினைத் தேடும் போது அறவழியில் அதனைத் தேடவேண்டும் என்கின்றன இந்து மத நூல்கள். இவ்வாறு தேடப்படும் பொருட்களை மற்றவர்களுக்குப் பயன்படும் படியும் உபயோகித்துக் கொள்ளும்போது அது அறமாக மாறுகிறது. இன்பம் என்பது உலக ஆசைகளை அனுபவித்தலைக் குறிக்கும். அறநெறிபட்ட வாழ்க்கை மூலம் ஒருவனுக்கு கிடைக்கும் இன்பமே பேரின்பமாகும். வீடுபேறு என்பது இறைவனோடு இரண்டறக்கலந்து நித்திய பேரானந்தத்தை அனுபவிப்பதனைக் குறிக்கும். இதனையே வள்ளுவர் :

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"* எனக் குறிப்பிடுவார்.

தீட்சை என்பது கடவுள் குருவடிவில் தோன்றி ஆன்மாவின் மீதுள்ள மலத்தை நீக்கி ஞானத்தை கொடுத்தல். தீட்சை கொடுக்கும் போது குருவானவர் குண்டம் அமைத்து ஆகுதிகளை அக்கினியில் வளர்த்து மந்திர உச்சாடனம் செய்து, இறைவனுக்கு அர்ச்சனைகள் செய்து அவர்களை வழிபடச் செய்து தீட்சை அளிக்கப்படுகிறது.

விரதமெனப்படுவது தமக்கு இயலுமானவரை உணவைச்சுருக்கி அல்லது விடுத்தேனும் இறைவனை மெய்யன்போடு உணர்வதனைக் குறிக்கும். இங்கு உணவினை உண்ணாமல் இருப்பதனை விட கடவுளை மெய்யன்போடு வழிபடுவதே மேலானது என கூறுவார் ஆறுமுகநாவலர்.

இவ்வாறாக இந்து சமயத்தில் இறைவனை அடைவதற்காக வகுத்து கூறப்பட்ட நெறிமுறைகளை நாம் சமய மரபுகள் அல்லது சமயக்கருத்துக்கள் எனக் கூறுகின்றோம். ஆகவே சமய நம்பிக்கையே ஆன்ம ஈடேற்றத்துக்கான வழிமுறைகளைத் தெளிவுபடுத்துகின்றது.

உயிர் வகைகளெல்லாம் இறைவனிடமிருந்து தோன்றி அவைஜீவன்களாக இருக்கும்போது எண்ணற்ற பிறவிகளை எடுத்து வாழ்க்கைப் பாடங்களைக் கற்கின்றன. கல்லாய் பிறந்து, புல்லாய் பிறந்து, புல்லினமாகப் பிறந்து, விலங்காகப் பிறந்து, மக்களாகப் பிறந்து அசுரராய், தேவராய், முனிவராய்ப் பிறந்து ஜீவாத்மாக்கள் படிப்படியாக பக்குவமடைந்து வருகின்றன. அத்தனைப் பிறவிகளையெல்லாம் தொகுத்து ஒரு பெரிய பயணமாகக் கருதலாம். அதை அறியாமலே உயிர்களெல்லாம் தங்களுடைய வாழ்க்கையின் மூலம் புறப்பட்ட இடமாகிய இறைவனை நோக்கிப் பயணம் போய்க் கொண்டிருக்கின்றன. அப்பயணத்தின் குறியை அறிகின்ற உயிர்கள் விரைந்து முயல்கினறனர். அப்படி இறைவனுக்குப் பக்கத்தில் வந்திருப்பதை உணருங்கால் சாலோகம், சாமீபம், சாரூபம் என்னும் நிலையினை அடையலாம்.

"எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன், மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்" எனும் நிலையை எட்டும்போது அது சாயுச்யம் என்கிறோம். இப்பெருநிலையை வீடு என்றும் முக்தி என்றும் சச்சிதானந்தம் என்றும் அழைக்கின்றோம்.

# தமிழர் பண்பாட்டில் சைவசமயமும் மட்டக்களப்பில் சிவன் கோயில்களும்

- காசுபதி நடராசா B.A (Cey)

பின்புலம்

ஈழத்திலும் இந்தியாவிலும் தமிழர் பண்பாட்டு மூலங்களை ஆராயமுற்படும் போது, இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டு அழிவுற்றுச் சிதைவடைந்த நிலையில் தற்போது, பாகிஸ்தான் பிரதேசத்தில் காட்சியளிக்கும் மொஹெஞ்சோ - தரோ, ஹரப்பா நாகரிகத்தையே நாட வேண்டியுள்ளது. இதுவே இன்று நமக்குக் கிடைத்த ஓர் அடிப்படை. இதனை வைத்தே முன்னும் பின்னும் செல்ல வேண்டியுள்ளது. இத்துறையில் ஈடுபடும் அறிஞர்கள் பல்வேறு தகவல்களையும் வெளிக் கொணர்ந்த வண்ணம் இருக்கின்றனர்.

இந்தப் பின்னணியில் மட்டக்களப்புப் பிரதேசத்தை இணைத்த ஒரு கண்ணோட்டத்தைச் செலுத்துவதே குறிக்கோள்.

"தமிழர்கள் உலகத்தில் இதுவரையாரும் புரிந்திராத அரியவோர் சாதனையைப் புரிந்துள்ளனர். அதுதான் சமய வாழ்க்கையை ஓர் அறிவியல் துறையாக்கி வளர்த்து அதன் வழி சமயாதீத நிலையை எட்டியதுமாகும். தொல்காப்பியர் கண்டு தனது ஆய்விற்குப் பயன்படுத்திய நூனெறியே தமிழ்மக்களிடையே வளர்ந்து வளர்ந்து சமய வாழ்க்கையையும், நூனெறியாகிய அறிவியற்துறைப் பொருளாக ஆக்கிமையால் தான், அறிவியல் முறையியலிற்கும் சமய வாழ்க்கைக்கும் சைவ சமயத்தில் முரண்பாடில்லை."[1]

ஆயினும்,

'நிறுவன சமயங்களில் ஒரே கடவுளையும் ஒரே நெறியையும் முன்னிறுத்தும் குறிக்கோளாக இருப்பதால் சாதி போன்ற குழுவுணர்வு எதிரிகள் இடம் பெறுதல் எளிதாக இல்லை.

அயற் சமயத்தார் தலையீடு, தமிழரிடையே இருந்து வந்த பிறப்படிப்படையில் இறுகாத தொழிற் பிரிவைச் சாதிப்பிரிவாகவும், வருணாசிரமப்பிரிவாகவும் மாற்றி விட்டது.

மத அடிப்படையிலான பெருநெறி சாதி அடிப்படையிலான குறு நெறியாகி விட்டது. சிறுசிறு குலங்களாகவும், தத்தமக்கு வேறு வேறு குலதெய்வத்தை உடையவராகவும் இருந்து வந்த தமிழரை மேற்கண்ட தலையீடு துண்டு துண்டாகக் கூறுபோட்டது. தமிழர் வழிபாட்டு நெறி நிறுவனச் சமயமாக பரிணாமம் எய்துவதை இப்போக்கு முற்றும் தடுத்து விட்டது."[2]

இந்தப் பின்னணியை விளங்கிக் கொண்டு மேலும் விரிவாக நோக்க மற்றோர் அறிஞர் கூற்று நோக்கத்தக்கது.

"ஓர் இனத்தின் பெருமை அந்த இனம் தோற்றுவிக்கின்ற பண்பாடு, தத்துவம் ஆகியவற்றை வைத்துத்தான் தீர்மானிக்கப்படுகிறது. தமிழினம் பண்டைக்காலத்திலேயே சிறந்த பண்பாட்டை உருவாக்கியதால்தான் அதுபிறரால் பெருமைப் படுத்தப்படுகிறது; போற்றப்படுகிறது..... பழங்காலத்திலேயே தமிழரின் வழிபாட்டு முறைகளே சமயமாகவும், சிறந்த சிந்தனைத் தொகுப்புகளோ தத்துவமாகவும் உருவெடுத்தன. பிற்காலத்தில் இவை இரண்டும் இணைந்து சிவநெறி, மால் நெறி - என்று இரு வடிவங்களைப் பெற்றன. தமிழில் பிற மொழிகள் கலந்து தூய்மையைப் பாதித்தது போலவே மேற்காட்டிய சமய நெறிகளிலும் வேற்றுக் கொள்கைகள் வந்து புகுந்தன. எனினும் எதிலும் உண்மை காணும் இயல்புள்ளவர்கள் தமது சமய நெறிக்குப் புறம்பாக வந்து கலந்த வேற்றுக் கொள்கைகளுக்குப் பலியாகாமல் தூயவடிவிலேயே அந்நெறிகளைக் கண்டும் பேணியும் வந்துள்ளனர்.

செந்தமிழ் நிலத்தெழுந்த இவ்விரு நெறிகளிலும் சிவநெறியே பழந்தமிழர் கொள்கைகளின் நேர்வாரிசாகக் கூறத்தக்கது. மூலத்திராவிட மொழிகளின் பண்புகளை ஏனைய திராவிட மொழிகளைப் பார்க்கிலும் தமிழே பெரும்பான்மையாகக் காட்டும் தகுதியும் உரிமையும் உடையதைப் போல தமிழரின் தொன்மையான தத்துவ வழிபாட்டு முறைகளைக் காட்டும் தகுதியும் உரிமையும் உடையது சிவநெறியே."[3]

சைவநெறி

சிவநெறியை மையமாக வைத்த சைவ நெறியைத் தமிழரின் ஆதிநெறி என ஆராய முற்படும் போது சிந்து வெளியை நாட வேண்டியுள்ளது.

அப்போது சிந்து வெளிக்கும், தமிழகத்திற்கும் இருந்த தொடர்பையும், இவையிரண்டிற்கும், ஈழநாட்டிற்கும் இருந்த நிலத் தொடர்பையும் ஆராய வேண்டியேற்படும்.

இவ்விடத்தில இராமாயண காலத் தொடர்புடைய இராவணேஸ்வரனுடன் திருகோணமலை கோணேஸ்வரம், இராவணன் வெட்டு, மட்டக்களப்பு திருக்கோயில் அண்டிய கடலுள் காட்சியளிப்பதாகக் கூறப்படும் இராவணன் கோட்டை, மற்றும் அமிர்தகழித்தீர்த்தம், மாமாங்கேஸ்வரம் பற்றிய செய்திகளைத் தொடர்புபடுத்தி நோக்க வேண்டியுள்ளது. இவைகள் பற்றிய ஊகங்களும், ஆய்வுகளும், முடிவுகளும் பல்வேறு நிலைகளிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

## புராண காலத் திருக்கோயிலும், அமிர்தகழியும்

"இராவணன் ஈழத்தைக் கட்டியாண்ட காலத்திலே அவனது கோட்டை மன்னாருக்கு அண்மையில் அமைந்திருந்தது. கோட்டை எழுப்பி இராவணன் இலங்காபுரி நகரிலே கொலு விருந்தாலும், அவனது தனித்த வழிபாட்டிற்கென்று கிழக்கிலங்கையிலுள்ள பொத்துவில்லில் தனிக் கோயில் எடுத்திருந்தான். இந்தக் கோயிலின் எல்லை திருக்கோயில் கிராமம் முதல் பொத்துவில் வரை கடலை அண்டி வகுக்கப்பட்டிருந்தது. பொத்துவில்லில் அமைக்கப்பட்ட கோயிலுக்கு இராவணன் நாள்தோறும் வந்து தனிமையிலே பண் இசைத்து வழிபடுவான். இராவணனுக்குச் சிவனிடம் அளவு கடந்த பக்தி......... இராவணனது கோயில் இருந்த இடம், இன்று பொத்துவில்லில் கடலுள் ஆழ்ந்து கிடக்கின்றது. இருந்தும் கடற்கரையிலே கோயில் அமைக்கப்பட்ட கற்களும் அழிவுகளும் காணக் கூடியதாக இருக்கின்றன. ...... அனுமான் இராவணன் இட்ட தீயினால் அவனது நாட்டையே சுட்டுப் பொசுக்கி இறுதியில் மட்டக்களப்புக்கு அண்மையிலுள்ள அமிர்தகழிக்குளத்திலே வாலின் தீயினை அணைத்தான். இதன் நினைவாக ஒவ்வோர் ஆண்டும் ஆடித்திங்கள் அமாவாசைத் தினத்தில் திருவிழா தீர்த்தோற்சவம் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இன்றும் அமிர்தகழி மாமாங்கேஸ்வரன் கோயில் திருவிழா உற்சவம் இராமாயண சம்பவங்களை நினைவு கூரத்தக்கதாக இருப்பது ஒரு வரப்பிரசாதமேயாகும்."[4]

- இத்தகைய செய்திகளை புராண இதிகாசத்தகவல்களாகக் கொண்டு அதன் நம்பகத்தன்மையை உறுதி செய்யும் முழுமையான ஆய்வு எதுவும் நம்மிடம் ஏற்படாத பெருங்குறையுடன் அமைதிகாண வேண்டியுள்ளது.

எனினும் சிவவழிபாடு சிந்து வெளியிலிருந்து ஈழநாடு வரை பரவியுள்ளது என்பதை நிராகரிக்க முடியாது. இதனாலன்றோ ஈழத்திருநாட்டை ஒரு சிவபூமியாகத் திருமூலர் காட்டுகின்றார்.

## சிவபூமி இலங்கை

"ஈஸ்வரங்கள் என்ற பெயரில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலந் தொட்டே நிலவி வந்தவை என்ற பெருமைக்குரிய சிவஸ்தலங்களாக ஐந்தைக் குறிப்பிடுவது வழக்கம். இராமேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம் என்பவையே அந்த ஐந்து சிவஸ்தலங்களுமாகும். இராமேஸ்வரம் தவிர்ந்த ஏனைய நான்கும் இலங்கையில் இடம் பெற்றுள்ள சிறப்பொன்றே இலங்கையில் இந்து சமயத்தின் பழமைக்கும், பெருமைக்கும் போதிய எடுத்துக் காட்டாகும். இவற்றுள் முன்னேஸ்வரம் ஏனைய எல்லாவற்றையும் விட மிகவும் பழையது என்பது அதனுடைய பெயரிலிருந்தே புலப்படுகின்றது என்பது அறிஞர் சிலரது கருத்து.

இந்த நான்கு புராதன சிவஸ்தலங்களுள் நகுலேஸ்வரம் வட இலங்கையிலும், திருக்கேதீஸ்வரமும், முன்னேஸ்வரமும் மேற்கிலங்கையிலும், கோணேஸ்வரம் கிழக்கிலங்கையிலும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவை தவிர வடமத்தியில் தான்தோன்றீஸ்வரமும் தென்கோடியில் தேவந்துறையில் சந்திரசேகரம் என்ற பெயரில் ஒரு சிவஸ்தலமும் குறிப்பிடத்தக்கவை.

தேவந்துறையிலே சந்திரசேகரம் என்ற சிவாலயத்தைக் கட்டு வித்தவன் விஜயன் எனவும் போர்த்துக்கேயரால் அவ்வாலயம் அழிக்கப்பட்டது எனவும் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறு மிகப் பழைய காலத்திலேயே எல்லாத் திசைகளிலும் முக்கியமான சிவஸ்தலங்கள் இருந்த காரணத்தாற் போலும் திருமந்திரத்தை இயற்றிய திருமூலர் தனது திருமந்திரத்திலே நமது இலங்கையைச் 'சிவபூமி' எனக் குறிப்பிட்டுள்ளார்."5

இதே போன்ற ஒரு சிவஸ்தல அமைப்பை மட்டக்களப்புப் பிரதேசத்திலும் நாம் காணக்கூடியதாக உள்ளது. இங்குள்ள சிவஸ்தலங்களின் அமைவிடங்களைக் கூர்ந்து கவனித்தால் அவ்வுண்மை புலனாகும். எனினும் இத்தகைய ஆய்வுகள் இங்கு பெரிதாக மேற் கொள்ளப்படவில்லை என்பதைப் பின்பு நோக்குவோம்.

## சிவன்

"சிவன். . . சிவப்பு . . . செம்மை என்பவற்றிலிருந்தே அப்பெயர் வந்திருப்பதாக அறிஞர்கள் பலரும் கருதுகிறார்கள். அதாவது ஞாயிறு அல்லது சிவந்த சோதி என்பதாக அவர்கள் பொருள் எடுக்கிறார்கள். இறைவன் திருமேனி, திருவாசகத்தில்

'ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதி'

'விரி சுடராய் நின்ற மெய்யன்'

'பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப் பரந்ததோர் படரொளிப் பரப்பே சோதியாய் தோன்றும் திருவே'

'சோதியே சுடரே சூழொளி விளக்கே'

'தணற்பிளம்பன்னமேனி' – என்பதாக சோதிச் சுடரே

இறைவன் மேனி எனப்பாடப்பட்டிருக்கிறது. அந்தச் செஞ்சோதி மேனியனுக்குச் சிவன் என்று பேரும் இட்டார்கள்"[6]

"சோணேசர் இல்லிற் பிறந்த கதையும் கேளோம் பேருலகில் வாழ்ந்துண்டு இறந்த கதையும் கேட்டிலேம்' என்று அருணகிரி அந்தாதி கூறுகிறது.
சிவனுக்குரிய பிறப்பில்லை என்பதால் மற்ற இந்துத் தெய்வங்களுக்குள்ள பிள்ளைத் தமிழ்ப்பிரபந்தம் சிவனைப் பற்றிக் கிடையாது.
சிவனுக்கு அடுத்தபடியான பழைய பொருள் உலகம் என்பர்"[7]

இத்தகு சிறப்புறு சிவபெருமானைப் பற்றிய விரிந்த ஆய்வொன்றைப் பேராசிரியர் அ.ச ஞானசம்பந்தன் அவர்கள் செய்துள்ளார்கள் அவரது பெரியபுராணம் ஓர் ஆய்வு' என்ற நூலில்,

"ருத்திர - சிவ வழிபாடு இந்தியாமுழுவதும் பரவியிருந்த கொள்கையாகும்......
... ஒன்றைத் தெளிவாக அறிய முடியும். இந்தியா முழுவதும் பரவியிருந்ததும், மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்ததுமான ஒரு தெய்வமே வேதத்திலும் புகுந்து உள்ளது என்பதே அக்கருத்து. இந்த ஒரு தெய்வம் இந்தியா முழுவதும் பரவிய தொல்பழங்காலத்தில், பிராந்தியங்கட்கேற்பச் சிறுசிறு மாறுபாடுகளைப் பெற்றிருப்பினும் அடிப்படையில் மாறுதலை அடையவில்லை. இதனுடைய வலுவான செல்வாக்கினால் தாக்கப்பட்ட வேத குருமார்கள் இதற்கும் தம்முடைய வேதத்தில் இடங் கொடுக்க வேண்டிய சூழ் நிலையில், இந்தப் பழந் தெய்வத்தின் இயல்புகளுள் பலவற்றை மூடி மறைத்து விட்டு இடங் கொடுத்தனர். அது வரையில் சாவுக்கு ஒரு தெய்வம் வேத வழியில் வகுக்கப்பட்டாமையின் ருத்திரனுக்கு வேதத்தில் இடங் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டவுடன் இறப்புக்குரிய தெய்வமாக ஆக்கி விட்டனர்.

இத்தொல் பழங்கால மக்களின் தெய்வக் கொள்கையை அறிய வேண்டுமாயின் அதற்குரிய ஆதாரங்கள் அகப்பட வில்லை என்பதைச் சொல்லத்தான் வேண்டும். திராவிடமொழி பேசும் மக்கள் அத்தொல்பழங்காலச் சமயத்தின் பலசின்னங்களை இன்னும் வைத்துள்ளனர். எனவே அங்கேதான் இதுபற்றி ஆராய வேண்டும். இன்னுங் கூற வேண்டுமானால் இன்றுள்ள இந்து மதத்தில் ஆரிய வேதசமயத்தின் செல்வாக்கை விட அத்தொல் பழங்காலச் சமயத்தின் செல்வாக்கே பலமடங்காக உள்ளது. வேதகால மக்கள் பொது இடங்களில் கோயில் போன்றவற்றில் சென்று வழிபட்டதாகத் தெரியவில்லை. இதன் எதிராக திராவிட மக்கள் நாமரூபத்துடன் கூடிய அடையாளங்களை வைத்தே வழிபட்டனர். மரத்தின் கொம்பு (தறி), கல் என்பவற்றை திறந்த வெளிகளிலும், ஊருக்கு ஒதுக்கமான இடங்களிலும் கோயில் போன்று வைத்தே வழிபட்டனர். இறந்து புதைக்கப்பட்டவர்களின் ஆவிகள் தம்மைத்துன்புறுத்தாமல் இருக்கவும் நலங்களைத் தரவும் இத் தெய்வங்களை வழிபட்டனர்."[8] இவ்வாறு கூறி விரித்துச் செல்லுகின்றார். இவைகளிலிருந்து உலகில் இந்தியாவில் மாத்திரமன்றி, ஆரம்ப நாகரிக வரலாற்றுடன் சிவவழிபாடு பின்னிப் பிணைந்துள்ளதை அறிய முடிகிறது.

## சிவலிங்கம்

சிவநெறியின் வழிபாட்டுருவங்களில் மையமாக விளங்குவது சிவலிங்கமாகும். இது சிந்து வெளியில் காணப்பட்டு பரந்து இங்கு வந்து சேர்ந்திருக்கிறது. காலதேச சூழலுக்கேற்ப மக்கள் இடம் பெயரத் தொடங்கியதே இதற்குக் காரணமாகலாம்.

இலிங்கங்கள் அசைபவை, அசையாதவை அசைவும் அசையாதனவுமானவை என்று மூன்றாகவும், நாகரம், திராவிடம், வேசரம் என்று மூன்றாகவும், சமலிங்கம், வர்த்தமாநம், சிவாதிகம், சுவத்திகம் சர்வதோபத்திரம், சர்வதேசிகம், தாராலிங்கம், முகலிங்கம் என எட்டு வகையாகவும் கூறப்படுகிறது. இவ்விடத்தில் 'எண்டிசை சூழ்ந்த இலிங்கம் ஏழுகோடி: என்னும் திருமூலர் திருமந்திரத்தை நோக்கினால் இலிங்கங்களின் கணக்கற்ற தன்மையை உணரலாம்.

## தான்தோன்றி/ சுயம்புலிங்கம்

"கையாற் செய்யப்படாமல் கல்லில் தாமாகவே அமைந்தவை சுயம்புலிங்கங்களாகும். கை புனைந்தியற்றாக்கவின் பெறு வனப்புடைய இவற்றைத் தான்தோன்றி) 'எனத் தமிழர் அழைத்தனர். இவற்றில் சிவபெருமான் என்றும் உறைவதால் இவற்றின் மூலத்தை ஆராய்ந்து பார்க்காமல் பூசிக்க வேண்டும் என்று சிற்பரத்தினம் (2131 - 132) கூறுகிறது. அப்பாடிகள் திரு ஆக்கூரிலும் (6:21), திருவின்னம்பரிலும் (6:89) உள்ள சிவலிங்கத்தை தான்தோன்றி எனப்பாடுவது இங்கு குறிப்பிடத்தக்கது. திருஞான சம்பந்தர் 'ஆக்கூரில் தான் தோன்றி மடமே' என்று பாடுகிறார். திருக்காளத்தி, திருவிற்கோலம் முதலிய கோயில்களிலுள்ள சிவலிங்கத்திருவுருவம் தீண்டாத்திருமேனியாகும்."[9]

## நிலைக்களம்
## பிரதேசம்

"அம்பாறை மாவட்டம் என்ற பகுதி பிரிக்கப்படு முன்னர் வடக்கே வெருகல் முதல் தெற்கே குமுக்கன் ஆறுவரையும் பரந்து கிடந்த நிலப்பரப்பே இதில் மட்டக்களப்பு எனக் கொள்ளப்படுகிறது."[10]

எனினும் வடக்கே வெருகல் முதல் தெற்கே பெரிய கல்லாறு - துறை நீலாவணை வரையும் மேற்கே புல்லுமலை உள்ளிட்டு கிழக்கே கடலை எல்லையாகக் கொண்டு நிருவாக மாவட்டம்

மட்டக்களப்பு என்றும், பெரிய நீலா வணையை வடக்கு எல்லையாகக் கொண்ட மிகுதிப் பிரதேசம், நிருவாக மாவட்டம் அம்பாறை என்றும் வகுக்கப்பட்டு செயற்படுகிறது.

இக்கட்டுரையின் ஆய்வுத்தளமாக மட்டக்களப்பு மாவட்டமும், அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் திருக்கோயில் பிரதேசமும் மட்டுமே எடுத்தாளப்படுகிறது.

### மட்டக்களப்பு

"மட்டக்களப்பின் மகிமை பெருமைகளை எடுத்துக் கூறுவது மட்டக்களப்பு மான்மியம். இந்நூல் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்து கிடக்கின்ற பல கிராமங்களின் பெயர், வரலாறு சரித்திரம், சாதிமக்கள், ஆலயங்கள், கல்வெட்டுக்கள், குடுக்கை கூறும் விபரம் முதலியவற்றை முறைப்படி எடுத்தியம்புகிறது"11

### புவியியல்

"சீரிலங்கும் மட்டமெனும் களப்பு நாட்டை...."12 (மட்டக்களப்பு மான்மியம்)

"மட்டக்களப்பு எனக் குறிப்பிடுகையில் இப்பிரதேசத்தில் வாவியின் முக்கியத்துவம் பின்னிப்பிணைந்திருப்பதை உணராமலே குறிப்பிடுகின்றோம். மட்டக்களப்பு என்பதன் கருத்து மட்டமான ஏரி என்பதாகும். மீனாடு, தேனாடு, பானாடு, நென்னாடு எனப் போற்றப்படுகிறது. 'களப்பு' அதனைச் சார்ந்த நிலங்களும் வழங்கிய சீர்களே.

இலங்கையின் கிழக்குக் கரையோரத்தில் அமைந்துள்ளது மட்டக்களப்பு மாவட்டம். சுமார் 2465.5 சதுரக்கிலோ மீற்றா பரப்பாவைக் கொண்டது. இதில் 168.3 சதுரக்கிலோ மீற்றர் இம்மாவட்டத்திலுள்ள நீர் நிலைகளின் மொத்தப் பரப்பாவாகும்.

மட்டகளப்பு மாவட்டத்தில் மூன்று வாவிகள் உள்ளன.

- பனிச்சங்கேணி வாவி – மாவட்டத்தின் வட பகுதியில் உள்ளது.
- வாழைச் சேனை வாவி
- மட்டக்களப்பு வாவி – இது வளங்கள் புவியியல் அடிப்படையில் மற்றைய இரண்டு வாவிகளை விட முக்கியமானது". 13

இந்த மட்டக்களப்பு வாவி அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களையும் தொடுக்கிறது. மண் முனையை நடுவாக்கி ஆளும் அரச கூறுகள் உருவாகவும், பண்பாட்டு நிகழ்வுகள், பிறழ்வுகள் உருவாகவும் இதுவே காரணமாயிற்று.

மட்டக்களப்பு வாவியின் கிழக்குக்கரை அல்லது எழுவான்கரையை அண்டி நவீன வளர்ச்சி அல்லது அன்னியர் வருகை, படையெடுப்பு முதலியன ஏற்படுத்திய தாக்கம் பாரியளவிலானது. இது வாவியின் மேற்குக் கரைப் பகுதிகளை அல்லது படுவான் கரைப்பிரதேசத்தை அதிகம் பாதிக்கவில்லை. இது நமக்குக் கிடைத்த பண்பாட்டு வரலாற்று அதிர்ஷ்டம். சமுதாய அபிவிருத்தி வளர்ச்சியில் எதிர்மறை விளைவைக் காட்டினாலும், கலாசார மரபு ரீதியான அழிவிலிருந்து காப்பரணாகி விட்டது. இதனாலன்றோ 'மானுடவியலாளரின் சொர்க்கமாக மட்டக்களப்பு திகழ்கிறது' என்ற பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் கூற்றை இவ்விடத்தில் பொருத்திப் பார்க்க வேண்டியுள்ளது.

இத்தகுபின்னணியில் மட்டக்களப்பின் சைவ சமயத்தையும், சிவ வழிபாட்டையும், ஆலயங்களின் தோற்றத்தையும் குறிப்புக்கள் வாரியாக மாத்திரம் நோக்க விளைகின்றேன். இது ஓர் ஆய்வின் அடிப்படை மாத்திரமே.

### ஈச்சரம் இரண்டு

ஈச்சரம் அல்லது ஈஸ்வரம் என்பது, சிவனுக்குரிய ஆலயங்களையே குறிப்பது. மட்டக்களப்பில் அமைந்துள்ள ஆலயங்களைப் பறறி எழுத முற்படும் அறிஞர்கள், மட்டக்களபில் ஈச்சரம் இரண்டு என்றே குறிப்பிடுவர். ஒன்று அமிர்தகழி மாமாங்கேஸ்வரம். மற்றையது, இப்போது குடமுழுக்காடிய கொக்கொட்டிச் சோலைத் தான்தோன்றீஸ்வரம்.

இவ்விரு ஆலயங்களிலும் மூலமூர்த்திகள் சுயம்புலிங்கங்களாக இருப்பது சிறப்புடையது. எனினும் அமிர்தகழி மாமாங்கேஸ்வரம் சுயம்புலிங்கமாக சிவவழிபாடியற்றிய போதிலும், பிள்ளையாருக்குரிய வழிபாடுகளுக்கும் இடமளித்து, மாமாங்கேஸ்வரப்பிள்ளையாராக வணங்கப்படுகிறது. இதே வேளையில் தான்தோன்றீஸ்வரம் தொடர்ந்து சிவ வழிபாட்டுத்தலமாகவே விளங்குகிறது.

### மாமாங்கேஸ்வரம்

"கிழக்கிலங்கையில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கமைந்த தலம் மாமாங்கேஸ்வரமாகும். மூலஸ்தானத்தில் சிவலிங்கம் உள்ளது. எனினும் பெரும்பாலும் விநாயகர் அங்கியுடனே சிவலிங்கம் காட்சியளிப்பதால் மாமாங்கப்பிள்ளையார் எனப் பக்தர்களினால் மூலமூர்த்தி அழைக்கப்படுகிறார். இத்தலத்திலுள்ள சிவலிங்கம் ஸ்ரீராமபிரானால் ஆக்கப்பட்டு பூஜிக்கப்பட்ட தென ஐதிகம் உள்ளது".14

### தான்தோன்றீஸ்வரம்

இலங்கையில் இருதான்தோன்றீஸ்வரர் ஆலயங்கள் உள்ளன. ஒன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் கோயில்.

மூலஸ்தானத்திலுள்ள சுயம்பு லிங்கத்திற்கு ஆவுடையார் இல்லை. அம்பாள் பெயர் பூலோக நாயகி.

மற்றையது, மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொக்கொட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம்.

"இவ்வாலயத்திலுள்ள லிங்கம் சுயம்புலிங்கம் ஆதலின் தான்தோன்றீஸ்வரர் என அழைக்கப்படுகிறார். கொக்கட்டி மரங்களின் நடுவே இவ்வாலயம் அமைந்திருப்பதால் கொக்கட்டிச் சோலைத் தான்தான்தோன்றீஸ்வரர் ஆலயம் என அழைக்கப்படுகிறது. மூலமூர்த்தி வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்குத் தெரியாதபடியால் இங்கு உமாமகேஸ்வரர் விக்கிரகம் பிரதிர்ஷ்டை செய்யப்பட்டள்ளது."[5]

இதுவே மட்டக்களப்புப் பிரதேசத்தில் மரபு வழிச் சிவன் கோயிலாக இன்று வரை தனிச்சிறப்புடன் திகழ்கிறது.

## களுதாவளைப்பிள்ளையார் கோயில் ஓர் ஈச்சரம்?

களுதாவளைப்பிள்ளையாரை சுயம்பு லிங்கப்பிள்ளையார் என்று மக்கள் இன்றும் அழைக்கும் ஒரு மரபு வழக்கம் இவ்விடத்தில் ஊன்றி நோக்கத்தக்கது. திரு. கந்தவனம் தங்கவேலாயுதம் அவர்கள் தனது 'வினை தீர்க்கும் விநாயகன்' என்னும் நூலில் குறிப்பிடும் வரலாறும் எம்மைப் பின்னோக்கிச் சிந்திக்கத் தூண்டுகிறது.

"சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே களுதாவளை என்னும் கிராமத்தில் விநாயகர் வரலாறு தோன்றியிருக்கிறது. களுதாவளைக்கிராமம் பற்றி உள்ள கல்வெட்டுக் குறிப்புகளின் பிரகாரம் களுதாவளையில் மக்கள் குடியேறிய காலம் கி.பி. 0904ம் ஆண்டாகும். அன்றிலிருந்தே விநாயகர் வழிபாடும் ஆரம்பித்துள்ளது."

## கல்வெட்டு

"மணியாள் பூபால வன்னிமை தான் பார்க்கும் போது இஸ்டலிங்கம் என வணங்கி இலங்கை தன்யீசனிட ஆலயங்கள் உண்டுபாரும். மூலசக்தி விநாயகருக்கு ஆலயந்தான் இத்தேசம் இல்லாததாலே 'பிள்ளையார்' கோயில் இது. அதுவாக சிவபிரானே பணியும் என்று இயம்பினார் வன்னிமையும் இயம்பி னாரே"

மேற்குறிப்பிட்ட கல்வெட்டுக் குறிப்பில் இருந்து பார்க்கும் போது களுதாவளையில் விநாயகர் ஆலயம் அமைய வேண்டும் என இறைவனே பணித்துள்ளார் என்பது வெள்ளிடை மலையாகிறது.

மேலும் தற்போது களுதாவளை ஆலயக் கல்வெட்டுக் குறிப்புக்களின்படி களுதேவாலயம் எனக் கூறப்படுகிறது.

'மண் உலகில் மாயபிரான்
உமைபரமன் அருளினாலே
களுதேவ ஆலயத்தை கணேசனெனப்
பெயர் வகுத்து யாரும் வந்து வணங்குவர்'

## ஆலய அமைப்பும் அபிவிருத்தியும்.

"ஆலயம் சுயம்பு லிங்கமாகத் தோற்றம் பெற்ற காலத்தில் சிறிதளவில் கல்லினால் கட்டப்பட்ட மூலஸ்தானம் மேலுக்கு மச்சி விதானமாக அமைக்கப்பட்ட நிலையில், முன்பதாக பலிபீடம் மற்றும் தம்பமண்டபம் "அமைய இந்த அளவில் நெடுங்காலமாக விநாயகப் பெருமான் அருள்பாலித்துக் கொண்டிருந்தார்."[6]

களுதாவளைப்பிள்ளையாராகவே காட்சியளிக்கும் இறைவன் பேசாத குழந்தைகளையும் பேச வைக்கும் பெருஞ்சக்தி கொண்ட பெருமான், லிங்கேஸ்வரராகத் தொடக்கத்தில் வணங்கப்பட்டு வந்துள்ளார் என்பதையும் நிராகரிக்க முடியாதுள்ளது.

கல்வெட்டுக் கூற்றுக்களில் சிவபிரானே பிள்ளையாருக்கு ஆலயம் அமைக்கப் பணித்ததாக கூறப்பட்டுள்ளதையும், "உமை பரமன் அருளினாலே களுதேவ ஆலயத்தை" என்ற வாசகம் உள்ளதையும் கொண்டு, மேலுள்ள முடிவைப் பெற உதவுகிறது போலத் தெரிகிறது. ஆனி உத்தரம் சிவனுக்குரிய தினமாகக் கருதப்படுகிறது. களுதாவளை ஆலய உற்சவம் இக்காலப்பகுதியிலேயே நிகழ்வதும் எம்மைச் சிந்திக்கத்தூண்டுகிறது. அண்மையில் நடைபெற்ற குடமுழுக்கு விழாவின்முன் நடைபெற்ற எண்ணெய்க் காப்புச் சாற்றும் வைபவத்திற்கு நான் சென்றிருந்தேன். அவ்வேளை அங்கிருந்த அன்பர்கள் நிலத்தடியிலிருக்கும் சிவலிங்கப் பெருமானுக்கும் இவ்வெண்ணெய் சேரும் என்று கூறினர். இதனையும் இணைத்து நோக்குதல் தகும்.

ஆகவே இவைகளைத் தொகுத்து நோக்கும் போது இத்திருக்கோயில் ஆரம்பகாலத்தில் சிவலிங்கேஸ்வரரை மூலமூர்த்தியாக்க கொண்டு, காலப்போக்கில் பிள்ளையார் ஆலயமாக மாறியிருக்கலாம் என்னும் முடிவுக்கு வரவேண்டியுள்ளது. இது தொடரப்பட வேண்டிய ஒரு வரலாற்று ஆய்வாகும். எவ்வாறாயினும் இறைவன் பிள்ளையாராக இங்கிருந்து அருள்பாலிக்கின்றார்.

## மட்டக்களப்பில் மூன்று ஈஸ்வரங்கள்?

மட்டக்களப்பு வாவிப்படுக்கையை நோக்கினால் அதன் அமைவை நோக்கி முப்பிரிவுகளாக வகுக்கலாம். அந்த வழியில் முகத்துவாரத்தை அண்டிய வடபகுதியில் அமிர்தகழி

மாமாங்கேஸ்வரமும், மேற்குப் பகுதியில் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரமும், தென்கீழ்ப் பகுதியில் களுதாவளையில் சுயம்புலிங்கத்திருக்கோயிலும் அமைந்து வாவிக்கரையை அண்மித்து வாழ்ந்த பழங்குடி மக்கள் அனைவருக்கும் அருள்பாலித்து வந்துள்ளன என்ற ஒரு சிந்தனையை முன்னிறுத்தலாமென நம்புகின்றேன்.

இவைகள் மூன்றும் சுயம்பு லிங்கங்களாக இருப்பதனால் நிலக்கீழ்த் தொடர்பு ஒன்றும் இருக்க ஏதுவுள்ளது.

வெளிநாட்டார் வருகை

வெளிநாட்டார் வருகையும், மக்கள் இடப்பெயர்வும், அதிகார நிலைநிறுத்தலும் மற்றும் இவை போன்ற கலாசாரக் காரணிகளும் தொடர்புபட்டு பிள்ளையார் வணக்கம் இலங்கைக்கு வந்தவேளையில் இவ்விரு கிழக்குக் கரையோரக் கோயில்களும் அதனைப் பற்றிக் கொள்ள முயன்றிருக்கலாம். அதே வேளையில் தமது பழைய சிவவழிபாட்டு அம்சங்களையும் விட்டுக் கொடுக்க மக்கள் ஆயத்தமாக இருக்கவில்லை எனத் தெரிகிறது. இன்றும் அவை இங்கு பேணப்படுகின்றன.

இதே வேளையில் வாவியின் மேற்குக் கரையின் ஒதுக்குப் புறமாக இருந்த சிவன்கோயில் தனது மூலப் பண்புகளை இழந்து விடாது இன்றும் கட்டிக் காத்து வருகின்றது. இது கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் நமக்களித்த பேறு.

நான்காவது ஈச்சரம் மண்முனைக் காசிலிங்கேஸ்வரம்?

இதுபற்றிய துலங்கிய தகவல்கள் தெளிவில்லை. இன்று ஆரையம்பதியின் தெற்கே இது சிகரம், கோயில் குளம் என்னும் இடங்களில் மண்மேடாகக் காட்சியளிக்கின்றது. வரலாற்றுத் தொடக்கத்தில் மண்முனை மட்டக்களப்பின் இராசதானியாக இருந்ததாகக் கூறப்படுகிறது. இன்றும் மண்முனையை மையமாக வைத்தே வடக்கு, மேற்கு, தெற்கு என்ற நிருவாக அலகுகள் அமைந்து செயற்படுவதை இவ்விடத்தில் தொடர்பு படுத்திக் கொள்ளலாம்.

மண்முனையில் கோபுரத்துடன் கூடிய பெருங்கற் கோயிலும், குளமும் அமைந்திருந்ததாகவும், இது காசியிலிருந்து கொண்டு வரப்பட்ட லிங்கமாக இருந்தது என்பதையும் சிலர் கூறக்கேள்வியுற்றேன். இதுபற்றிய தகவல் ஒன்றினைத் தமிழ்மணி சிவ. விவேகானந்த முதலியார் முன்வைக்கின்றார். இதுபற்றிமாறுபாடான கருத்துக்களும் தெரிவிக்கப்படுகின்றன. ஆயினும் முதலியார் அவர்களின் செய்தியை ஓர் ஆய்வுத் தொடக்கமாகக் கொள்ளலாம்.

"உலகநாச்சி மண்முனைப் பிரதேசத்தில் ஆட்சி செய்த காலத்தில்,
வேடரில் திகடன் என்பவன் கொக்கட்டிச் சோலைக் காட்டை வெட்டும் போது, ஒரு கொக்கட்டி மரத்தை வெட்டினான். அதிலிருந்து இரத்தம் பாய்ந்தது. அதை உலக நாச்சிக்கு அறிவிக்க அவள் ஸ்ரீ காசிலிங்கேஸ்வரர் ஆலயத்திலிருந்து சூலம், மணி, தீபக்கால் மற்றும பூசைப் பொருள்களுடன் திருவோலக்கர் வீர சைவக்குருமாருடன் கொக்கட்டிச் சோலைக்கு வந்து இரத்தம் பாய்ந்த இடத்தைப் பார்த்தபோது அவளது கண்ணுக்கு சிவலிங்கம் ஒன்று காட்சி கொடுத்தது. அவ்விடத்தில் கொத்துப் பந்தல் அமைத்து பூஜை செய்து திரும்பினாள். அவ்விடத்தில் காலப்போக்கில் ஒரு கோயிலை அமைத்தாள். ஒவ்வொருவருடமும் ஸ்ரீ காசிலிங்கேஸ்வரர் ஆலயத்திலிருந்து சூலங் கொண்டு சென்று கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் கோயிலில் திரு விழாவை ஆரம்பித்து வைத்தாள். அவள்காலத்தின் பின்பும் அவ்வழக்கம் இருந்தது.

1627ஆம் ஆண்டில் ஸ்ரீ காசிலிங்கேஸ்வரர் கோயில் போர்த்துக் கேயரால் அழிக்கப்பட்டது. அப்போது அங்கிருந்த மக்கள் குடி பெயர்ந்து ஆரையம்பதிக்குச் சென்றனர். அவர்களின் பிற்சந்ததியினரே தற்போது அங்கு வசிக்கும் மக்கள்.

கோயில்குளம் கோயில் இடிக்கப்பட்டு பல வருடங்களுக்குப் பின், ஸ்ரீ காசிலிங்கேஸ்வரர் கோயிலின் இடிக்கப்பட்ட கற்றூண்களையும், மற்றும் பொருட்களையும் எடுத்தனர். அதில் ஒரு வெள்ளைக் கல்லில் புடைப்புச் சித்திரமாகச் செதுக்கப்பட்ட பிள்ளையார் உருவமும் கிடைத்தது. அதை வைத்தே தற்போதுள்ள கந்தசாமி கோயிலில் ஆராதனைகள் நடைபெற்றன.....

உலகநாச்சி காலத்தில் ஸ்ரீ காசிலிங்கேஸ்வரர் கோயிலிருந்து சூலம் போய் கொக்கட்டிச் சோலைத் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் திருவிழா தொடங்கிய வழக்கம் (ஆரையம்பதி) கந்தசாமி கோயிலிலிருந்து வேல் கொண்டு போகும் வழக்கமாக மாறியது......

கோயில் குளத்தில் கட்டப்பட்ட ஸ்ரீ காசிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் வயதும் 1685 வருடங்கள் எனலாம். காசியிலிருந்து கொண்டு வரப்பட்ட படிகலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டதால் ஸ்ரீ காசிலிங்கேஸ்வரர் ஆலயம் எனப் பெயரிடப்பட்டது...... அண்மையில் படிகலிங்கமும் அதன் ஆவுடையாரும் இன்னும்பல பொருட்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன."[9]

மேலுள்ள தகவல்களும், தரவுகளும் எந்தளவு நிரூபிக்கத்தக்கன என்பது ஆய்வுக்குரியவை. எனினும் ஆரையம்பதி கோயில் குளத்தில் சிகரத்துடன் கூடிய பெருங்கோயிலும், குளமும் உள்ளடங்கிய ஈஸ்வரம் ஒன்று அமைந்திருந்ததையும் அது அழிக்கப்பட்டு விட்டதையும், ஏற்றுக் கொள்ளக் கூடிய அழிபாடுகள் இங்கு சான்று பகர்கின்றன. வரலாறு துலக்கப்படல் வேண்டும்.

## அழிவுற்ற ஈஸ்வரங்கள்.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் அழிவுற்ற ஈஸ்வரங்களாக பொத்துவில் – திருக்கோயில் கடல் கொண்ட சிவன் கோயிலையும், மண்முனை ஸ்ரீ காசிலிங்கேஸ்வரர் ஆலயத்தையும் கொள்ளல் தகும். இதனை ஏற்றுக் கொண்டால் மட்டக்களப்பில் பஞ்ச ஈஸ்வரங்கள் இருந்துள்ளன எனக் கருதலாம். மேலும் ஆய்வு செய்ய வேண்டிய இடங்களாக ஸ்ரீ தாந்தாமலைத் திருத்தலமும், மட்டக்களப்பு திருப் பெருந்துறை மற்றும் பல திருத்தலங்களும் இங்குள்ளன.

## பிற்பட்ட காலச் சிவன் கோயில்கள்

இந்துக் கலாசாரத்திணைக்கள வெளியீடான 'இலங்கைத்திருநாட்டின் இந்துக் கோயில்கள்.' என்னும் நூலிலிருந்தும், மட்டக்களப்பு மாவட்டக் கலாசார உத்தியோகஸ்தர் செல்வி. க. தங்கேஸ்வரி அவர்கள் வழங்கிய தகவல்குறிப்புகளை வைத்தும் இங்குள்ள பிற்பட்ட காலச் சிவன் கோயில்களைப் பற்றி ஒரு சிறிய பட்டியல் தயாரிக்க முடிந்தது.

இன்றையச் சொல்லவொண்ணாத் துயரங்களினாலும், போக்குவரத்துக் கஷ்டங்களினாலும் இந்த ஆலயங்களை நேரில் தரிசித்துத் தகவல் கொள்ளும் பேறுகிடைக்கவில்லை. இப்பட்டியலில் குறிப்பிட்டுள்ளதையும் விட வேறும் பல சிவாலயங்கள் இருக்கலாம். எனினும் அவற்றினைப்பற்றி என்னால் அறிய முடியாத ஒரு குறையையும் இவ்விடத்தில் குறிப்பிடாதிருக்க முடியவில்லை.

## ஆரையம்பதி சிவனேஸ்வரர் ஆலயம்

சிவ சின்னமான சூலாயுத வழிபாட்டுடன் ஆரம்பித்தது இவ்வாலயம். இளைய பெருமாள் கதிர்காமத்தம்பி என்னும் அடியாரே இதனை தோற்றுவித்ததாகக் கூறுவர். தொடர்ந்து இங்கு உருவான செல்வாநகர் குடியேற்றம் மக்களின் பக்தியாலும் செல்வச் சிறப்பினாலும் இன்று சீர்மிகு சிவனேஸ்வரர் ஆலயமாக வளர்ந்து சிறப்புப் பெற்றுள்ளது. நுவரெலியா லங்காதீஸ்வரர் ஆலய காயத்திரி சித்தர் முருகேசு சுவாமி அவர்கள் இதன் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து வைத்தார்கள்.

- ✧ கரடியனாறு கித்துள் வெவ குடியேற்றம் சிவன் கோயில்.
- ✧ வாழைச் சேனை பேத்தாளை சிவன் ஆலயம்
- ✧ கிரான் கோராவெளி சிவன் கோயில்
- ✧ செட்டிபாளையம் சிவன் கோயில்
- ✧ களுதாவளை ஈஸ்வரன் கோயில்
- ✧ 'பெரியதம்பிரான்' கோயில் என்னும் பெயரில் சிவபூஜை நடைபெறும் ஆலயங்களும் உள்ளன. மட்டக்களப்பு அரசடி தக்ஷயாகேஸ்வரன் கோயில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.
- ✧ சிவ வழிபாட்டில் சமய நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன.
  - ☆ ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன் குருதேவரை லிங்கத்தில் எழுந்தருளப்பண்ணித்தினந்தோறும் பிரார்த்தனையும், பூஜை ஆராதனையும் நடத்தி வருகிறது.
  - ☆ செங்கலடி சிவதொண்டன் நிலையம் வழிபாடு செய்கிறது.
  - ☆ ஸ்ரீ சத்தியசாயி சமித்தி போன்ற பக்தி நெறிக் கழகங்களும் சிவவழிபாட்டில் ஈடுபட்டு வருகின்றன.

இத்தகைய நிறுவனங்கள் சமூகப் பணிகளிலும் ஈடுபட்டுத்தொண்டாற்றி வருவது குறிப்பிட வேண்டியது.

## சிவன்கோயில்கள் அருகி விட்டனவா?

மட்டக்களப்பு மாவட்டக் கலாசாரத் துறைப் பதிவேட்டில் சுமார் 450 கோயில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆயினும் சிவன் கோயில்கள் விரல்விட்டு எண்ணக் கூடிய மேலே உள்ளவாறே தனிக்கோயில்களாகப் பதிவாகியுள்ளன. ஆயினும் அநேகமாக எல்லாத்தலங்களிலும் சிவனுக்குரிய உற்சவ கால ஆராதனைகள் நடத்தப்படுகின்றன என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டியது.

இங்கு மரபு வழியாக அம்மன் வழிபாடுகளும், பிள்ளையார், முருக வணக்கங்களுமே மேலோங்கியிருப்பதைக் காண முடிகிறது. கிருஷ்ண வழிபாடும் அதிகம் பரவவில்லை. ஆயினும் புதிய வடிவங்களாக சமய கலாசார நிறுவனங்கள் சிவவழிபாட்டை முன்னெடுத்துச் செல்வதையும் காண முடிகிறது. நாயன்மார் குருபூஜை சிவராத்திரி விரதம் போன்றவற்றை நடத்தி வரும் இந்நிறுவனங்கள் இவற்றினூடாக சைவத்தையும், சிவத்தொண்டையும் பரப்பி வருகின்றன.

## மதமாற்றங்கள்

இங்குள்ள இனமோதல்கள். யுத்த நிகழ்வின் புறத்தாக்கங்களில் ஒன்றாக மதமாற்றம் நிகழுகின்றதா என்பதைச் சைவசமயிகள் கவலையுடன் பார்க்கின்றனர்.

சைவ சமயத்தைப் பின்பற்றியவர்களாயிருந்து தூய சைவப் பெயர்களைக் கொண்டவர்கள் பிறசமயங்களுக்கு மதம் மாறி பெயரையும் அதற்கிசைவாக்கி அறிக்கைகள் விட்டுக் கொண்டிருப்பதை அண்மைக் காலத் தேசியத் தினசரிகள் வாராந்தம் வெளியிட்டு வருகின்றன. இது பரவலாக நாட்டின் பலபாகங்களிலிருந்தும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. வேறு சில சமயக் குழுக்கள் வீடுவீடாகச் சென்று பிரசாரம் செய்கின்றன. இவர்களுக்கும் இந்துக்களின் இல்லங்களே புகலிடங் களாகின்றன.

மத்திய கிழக்கு நாடுகளின் தொழில் வாய்ப்புக்கள், எல்லைக்கிராம வாழ்விடங்கள், உள்ளூர்த் தொழில் வழங்குநர்களின் மேலாதிக்கம், 'வறுமை நிலை, கைதுகளும் பயப்பிராந்தியு,ம் திருமணவாழ்வு நிலை, பிறமதப் பிரச்சார உத்திகள் எதிர் மாறாக இந்துக்களின் பலவீனம் போன்றன இத்தகைய ஒரு நிலைக்கு இந்துக்களை இட்டுச் செல்லுகின்றதா? இதுவும் இந்து நிறுவனங்களினதும் முன்னோடிச் சிந்தனையாளர்களதும் அதிமுன்னுரிமைச் செயல்திட்ட ஆய்வுகளில் ஒன்றாக எடுக்கப்பட வேண்டிய விடயம்.

### புதுக் கோயில்களின் பரம்பல்

சாதிக் குழுக்கள் தமது ஆளுமைக்கும் செயல் திறனுக்கும் ஏற்ப புதுப்புது வடிவங்களில் எழுச்சி பெற்று வருவதைக் காணமுடிகிறது. கல்விப் பரம்பல் இதனை முன்னெடுத்துச் செல்லுகிறது.

வேரைத் தேடும் குழுக்கள் தமது பண்பாட்டு விழுமியங்கள் சிதைவுறுவதைத் தடுக்க முயல்கின்றன. எனினும் இப்போதிருக்கும் சமுதாயக் கட்டமைப்பில் தத்தமது சிறப்புக்களைத் தேடி வெளிக் கொணரவும், நிலைநாட்டவும் இடர்ப்பாடுள்ளதைக் காணமுடிகின்றது.

இந்த நிலையிலிருந்து விடுபட, தத்தமக் கெனப் புதிய கோயில்களை அமைத்து வழிபாடாற்றவும், கலை இலக்கிய முயற்சிகளை மேம்படுத்தவும் நீண்ட காலமாக இக்குழுக்கள் முயன்று வந்திருக்கின்றன. அதில் வெற்றியும் கண்டுள்ளன.

இதே வேளையில் பெருங்கோயில்கள் தத்தமது பிராந்தியத்திலுள்ள அனைத்து மக்களையும் இணைத்துக் கொள்ளும் வழியாக ஆலய உற்சவத் திருவிழாக்களைப் பகிர்ந்தளித்தும் வந்துள்ளன. அத்தோடு சமகாலத்தில் பெருங்கோயில் மகா உற்சவங்கள் நடைபெறாமல் கால இடைவெளியில் அவை நடத்தப்பட்டு வருகின்றன என்பதும் கவனிக்க வேண்டிய ஒன்றாகும். இவைகள் பிராந்திய மக்கள் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளும் ஒரு நிகழ்வாகக் கொள்ள வேண்டியதாகும்.

எனினும் இவைகளையும் மீறி புதிய கோயில்கள் பரவி வருகின்றன. ஒருவகையில் இதனை நோக்கும் போது, மதமாற்றத்தைத் தடுத்து சிவநெறி வழுவாதிருக்க உதவுகின்றன என்பதையும் அலட்சியப்படுத்த முடியாது.

### நிறைவுரை

ஆரம்பகாலத்தில் உலகெங்கும் பரந்திருந்த சிவவழிபாடு ஈழநாட்டிலும் சிறந்து விளங்கியது. ஆயினும் வேதகால, ருத்திர – சிவ வழிபாடின் வளர்ச்சியினாலோ, வேறு காரணங்களினாலோ சிவன் பயப்படத்தக்க ஒரு கடவுளாகச் சித்திரிக்கப்பட்டு அவ்விடங்களிலெல்லாம் ஏனைய கடவுட் கொள்கைகள் இடம் பெறலாயிற்று. இதற்குள்ள மற்றோர் அடிப்படைக் காரணத்தில் சைவ சமயம் நிறுவன மயமாக்கப்படாமையும் ஒன்றெனச் சேர்க்க முடியும்.

> " தமிழினத் தோல்விக்கும், தமிழர் சமயத்தோல்விக்கும் காரணம் எம்சமயம் நிறுவன அமைப்பின்றி இருத்தல்; சமூக உணர்வை ஈட்டாதிருத்தல் ஆகியன மெய்க் காரணங்களாகும். இனி வருங்காலத்தில் எமது சமயம் கடவுளுக்குத் தொண்டு செய்யும் சமயமாக மட்டும் இல்லாமல் மக்களுக்குத் தொண்டு செய்யும் நிறுவனமாக மாற வேண்டும். நாம் மாற்ற வேண்டும். மாறினால் தான், மாற்றினால் தான் வெற்றி." – என்ற பேராசிரியர்.

க.ப. அறவாணன் அவர்களின் கருத்துக்களுடன் சுவாமி – விவேகானந்தரின் அருள் மொழியையும் நினைவிற் கொள்ளல் தகும்.

> " கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் குடிகொண்டிருக்கின்றார். இதைத்தவிர தனியாக வேறு ஒரு கடவுள் இல்லை – இந்த உண்மையை எவ்வளவோ தவங்களுக்குப் பிறகு நான் புரிந்து கொண்டிருக்கின்றேன். மக்களுக்குச் சேவை செய்பவன் உண்மையில் கடவுளுக்குச் சேவை செய்பவனாகின்றான்."

### அடுத்த நூற்றாண்டுக்கான அடியெடுப்பு

மட்டக்களப்பில் சைவப் பண்பாட்டை மேம்படுத்த தேசத்துக் கோயில்களும், திருப்படைக் கோயில்களும் தமது வளங்களைப் பயன்படுத்தி 21ம் நூற்றாண்டை நோக்கிய புதிய அடியெடுப்பிற்குத் தம்மைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். பிணக்குற்று நீதிமன்றங்களை நாடியுள்ள கோயில்களின் அறங்காவலர்கள் சிவசித்தமறிய இறைதியானத்தில் ஈடுபட்டு விடை காண முயல வேண்டும். சிவசிவ என்றிடத் தீவினை அகலும்.

இன்றைய யுத்த சூழலில் பாதிப்புற்ற மக்களுக்கான சேவையில் ஈடுபட்டு உழைப்பதே ஈசன் உவக்கும் மலராயிருக்கும்; பணியாயிருக்கும்.

*– மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் –*

## ஆதார நூல்களும், துணை நூல்களும்


சைவ உலகம் 11 + 12 1, 2, 18
சிவலிங்க வழிபாடு – சி. சத்தியமூர்த்தி. 3, 9
ஈழமும் தமிழரும் – அருள். செல்வநாயகம் 4
அகில உலக இந்து மாநாடு மலர் –இலங்கையில் இந்து சமயம்
கி. லஷ்மண ஐயா 5
உலக மதங்கள் சி.க. ராமசாமி 6
கலைக் களஞ்சியம்– 4. சிவன் 7
பெரியபுராணம் ஓர் ஆய்வு – பேராசியர் அ. ச. ஞானசம்பந்தன்8
மட்டக்களப்பு சைவக் கோயில்கள் – வி. சீ. கந்தையா 10
மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும் F.X.C நடராசா 11
மட்டக்களப்பு மான்மியம் 12
உலக சூழல் தினக் கட்டுரைகள் – 1992, 13
இலங்கைத் திருநாட்டின் இந்துக் கோயில்கள் 14, 15
வினைதீர்க்கும் விநாயகர் – கந்தவனம் தங்கவேலாயுதம் 16
மண்முனைப் பற்று பிரதேச சாகித்திய விழா மலர் –1997 17
– மட்டக்களப்பு கோயில் குளம் (புராதன) – திருமந்திரம்
கொக்கட்டிச் சோலை – தான்தோன்றீஸ்வரம்,
– கவிஞர் வெல்லவூர்க் கோபால்
விவேகானந்தர் பொன் மொழிகள்
இலங்கையின் இந்துக் கோயில்கள் பகுதி – 1,
பதிப்பாசிரியர் சி. பத்மநாதன்.
மட்டக்களப்பு மாவட்ட கலாசாரத்துறைப் பதிவுகள்

# மண்முனை தென்மேற்கு பிரதேசத்திலுள்ள இந்து ஆலயங்கள்

திரு. எஸ். ஜெயராஜா (ஆசிரியர்)

மட்டக்களப்பிற்குத் தெற்கே மண்முனை வாவிக்கு அப்பால் மண்முனையிலிருந்து தாந்தாமலை வரை எல்லையாகவுடைய மருதநிலப்பண்பை ஒருபுறமும் குறிஞ்சி நிலப்பண்பை மறுபுறமும் கொண்டு இருபத்தைந்து கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கும் எவ்வித கலப்புமில்லாத தமிழ் மொழியும் இந்து சமயமும் சிறப்புடன் விளங்கும் பிரதேசமே மண்முனை தென்மேற்குப் பிரதேசமாகும். 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற முதுமொழிக்கு இணங்க தமிழர்கள் இப்பிரதேசத்திற்கு அடியெடுத்து வைத்த போதே ஆலயங்களையும் உருவாக்கிவிட்டார்கள். அவ்வகையான ஆலயங்களின் வகைகள் வருமாறு.

## சிவன் ஆலயம்:

கொக்கட்டிச்சோலை ஸ்ரீதான்தோன்றீச்சரம் மண்முனைப்பற்றில் பிரசித்திபெற்ற ஒரு சிவாலயம் என்பது மட்டுமன்றி கிழக்குமாகாணத்திலே உள்ள ஒரேயொரு தேரோடும் சிவனாலயம் இதுவேயாகும். பழமையும், தொன்மையும், வரலாற்றுச்சிறப்பு மிக்கதுடன் இலங்கை அரசால் அங்கீகாரம் பெற்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒரு பெரும் கோயிலாகும்.

## விநாயகர் ஆலயங்கள்:

மண்முனைப்பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் விநாயகர் ஆலயங்கள் அமைந்திருக்கின்றன. இப்பிரதேச விநாயகர் ஆலயங்கள் எதிலும் விசேட பெருவிழாக்கள் நடைபெறாதபோதும் விரதங்களைச் சிறப்பாக அனுஷ்டிக்கவும், திருவெம்பாவை, திருவாதிரை போன்ற விழாக்கள் விநாயகர் ஆலயங்களில் சிறப்பாக நடைபெறுவதைக் காணமுடிகின்றது. இவ்வாலயங்கள் அமைந்துள்ள இடங்களும் அவ் விநாயகர் பெயரும்.

கொக்கட்டிச்சோலை - முத்துலிங்கப்பிள்ளையார்
முனைக்காடு மேற்கு - கொட்டாம் புலைப்பிள்ளையார்
முனைக்காடு கிழக்கு - ஸ்ரீ சித்தி விநாயகர்
முதலைக்குடா - பாலையடி விநாயகர்
குறிஞ்சிநகர் - சித்தி விநாயகர்
மகிழடித்தீவு - ஸ்ரீ சித்தி விநாயகர்
பண்டாரியாவெளி - வம்மியடிப்பிள்ளையார்
படையாண்டவெளி - பனிச்சையடிப் பிள்ளையார்
அரசடித்தீவு - முத்துலிங்கப்பிள்ளையார், ஸ்ரீவிக்கினேஸ்வரர்
பட்டிப்பளை - விநாயகர்
கடுக்காமுனை - ஸ்ரீ சித்தி விநாயகர்
அம்பிளாந்துறை - அம்பலத்தடிப் பிள்ளையார், மாணிக்கப் பிள்ளையார்
அம்பிளாந்துறை வடக்கு - முத்துலிங்கப்பிள்ளையார், ஸ்ரீ சித்திவிநாயகர்
தாந்தாமலை - பிள்ளையார்

இவற்றுடன் குளுவுனைமடு, மாவடிமுன்மாரி, பனிச்சையடி முன்மாரி, விடுதிக்கல், வாழைக்காடலை, நாற்பதுவட்டை, வட்டியாமடு, வால்கட்டு ஆகிய இடங்களிலும் விநாயகர் ஆலயங்கள் அமைந்துள்ளன.

## முருகன் ஆலயங்கள்:

தாந்தாமலை: கிழக்கு மாகாணத்தில் சின்னக் கதிர்காமம் என அழைக்கப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க பிரசித்தி பெற்ற தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலயம் இப்பிரதேசத்திலுள்ள ஒரேயொரு மலைக் கோயில் எனும் சிறப்புடையது. கதிர்காம யாத்திரை செய்கின்ற மட்டக்களப்பு மக்கள் 1956 ஆம் ஆண்டளவில் யாத்திரை செய்ய முடியாத சூழ்நிலையிலிருந்து தாந்தாமலை முருகன் ஆலயத்தைப் புனரமைப்புச் செய்து வழிபட்டுவருகின்றனர். இப்பிரதேச விவசாயிகள் மழையை வேண்டிப் பொங்கல் படைத்து பூசை செய்து வருவதும், வருடாந்த உற்சவத்தின் போது தீப்பாய்வதும் ஒரு சிறப்பம்சமாகும்.

## குமரக்கோட்டம்:

இந்தியாவில் கந்தக்கோட்டம் போன்று முனைக்காட்டுக் கிராமத்தில் ஒரு குமரக் கோட்டம் அமைந்திருப்பது எமது பிரதேச பெருமையை எடுத்துக்காட்டுகிறது. முதலைக்குடாவைச் சேர்ந்த திரு. வே. முருகமூர்த்தி என்ற முருக பக்தனுக்கு 1988.08.12 ஆம் திகதி மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய தீர்த்தோற்சவத்தின் போது

தீர்த்தக் குளத்தருகே முருகப்பெருமான் தரிசனமளித்து வழங்கப்பட்ட 'வேல்' இவ்வாலய கருவறையில் வைத்து கதிர்காமம், மண்டூர் முருகப்பெருமான் ஆலயங்களில் நடைபெறுவது போன்று கப்புறாளை முறையில் பூசை நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

மேலும் முருகன் ஆலயங்கள் வாழைக்காலைப் பாலத்தடியிலும் மாவடி முன்மாரிச்சந்தியிலும், அம்பிளாந்துறை அம்பலத்தடியிலும் மற்றும் பரிவார மூர்த்திகளாக ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலும், பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயத்திலும் அமைந்துள்ளது.

## மாரியம்மன் ஆலயங்கள்:

எமது பிரதேச மக்கள், உடல் நலம் வேண்டியும், கல்வி, செல்வம் கிடைக்கப்பெறும் பொருட்டும் சக்தி வழிபாடு மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றது வருடாந்த உற்சவ சடங்கின் போது தெய்வமாடுதல் தீமிதித்தல் என்பன சிறப்பு நிகழ்ச்சிகளாகும்.

மாரியம்மன் ஆலயங்கள் உள்ள இடங்கள் முனைக்காடுமேற்கு, பண்டாரியாவெளி, அரசடித்தீவு, கடுக்காமுனை, அருள்நேசபுரம்,அம்பிளாந்துறை, அம்பிளாந்துறை வடக்கு, விடுதிக்கல், கற்சுடாவீரக்காடு, தளவாயக்கிணற்றடி, கச்சகொடி சுவாமிமலை, மக்கிளடியூற்று, நெடியமடு ஆகிய இடங்களில் மாரியம்மன் என்றும், முத்துமாரியம்மன் என்றும் வழிபடுகின்றனர்.

## கண்ணகை அம்மன்:

இலங்கையில் கஜபாகு மன்னனின் காலத்திலிருந்தே பத்தினிதெய்வ வழிபாடு எமது பிரதேசத்திலும் ஏற்படுத்தப்பட்டதாக அறிய முடிகின்றது. கண்ணகை அம்மன் வைகாசிச் சடங்கின் போது கதவுதிறத்தல், கலியாணக்கால் வெட்டுதல், பச்சை கட்டுச் சடங்கு, திருக்குளிர்த்தி என்பன சிறப்பாக நடப்பதுடன் ஏடுபடித்தல் எனும் நிகழ்ச்சியும் சிறப்புடையது. மகிழடித்தீவு, குறிஞ்சிநகர், முதலைக்குடா, முனைக்காடு கிழக்கு, கொக்கட்டிச்சோலை ஆகிய இடங்களில் கண்ணகை அம்மன் ஆலயங்கள் உள்ளன.

## காளியம்மன்:

வீரத்திற்கும், உடல்நலத்திற்குமே முக்கியம் கொடுத்தமக்கள் காளியம்மனை வழிபடத்தொடங்கினர் ஆண்டுக்கொருமுறை மக்கள் வசதிக் கேற்ப சடங்குகள் நடாத்தி தெய்வமாடி கட்டுச் சொல்லுதல் மூலம் பிணிதீர்த்தல் முக்கிய இடம் பெறுகின்றது. இவ்வாலயங்களில் தினப் பூசைகள் இடம்பெறுவதில்லை.

முதலைக்குடா, மகிழடித்தீவு, அருள்நேசபுரம், மிலாத்துச்சேனை ஆகிய இடங்களில் இவ்வாலயங்கள் அமைந்துள்ளன.

## நாகதம்பிரான்:

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற தொன்மைவாய்ந்த ஆலயமாக பண்டாரியாவெளி நாக தம்பிரான் ஆலயம் திகழ்கின்றது. ஆனிமாத உத்தரத்தில் தேசத்துப் பொங்கல் எனும் சிறப்பு நிகழ்ச்சி நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. மேலும் முனைக்காடு, கொக்கட்டிச்சோலை ஆகிய இடங்களிலும் நாகதம்பிரான் ஆலயங்கள் அமைந்துள்ளன.

## வைரவர்:

சிவ மூர்த்தங்களில் ஒன்றான வைரவரை காவல் தெய்வமாக எமது பகுதி மக்கள் வழிபட்டுவருகின்றனர். கொக்கட்டிச்சோலை, பட்டிப்பளை, அரசடித்தீவு, மகிழடித்தீவு, படையாண்டவெளி, முனைக்காடு, நெல்லிக்காடு, சோதையன்கட்டு, கொல்லநுலை, நெடியமடு, வட்டியாமடு, போன்ற இடங்களில் நரசிங்க வைரவர் என்றும், ஆதிவைரவர் என்றும் வழிபடுவதுடன் இல்லங்களில் தற்காலிக பந்தல்களை அமைத்து விசேட பூசை செய்வதும் குறிப்பிடத்தக்கது.

## வீரபத்திரசுவாமி:

சிவ மூர்த்தமாக வழிபடும் வீரபத்திரசுவாமி ஆலயம் முனைக்காட்டில் அமைந்துள்ளது. தான்தோன்றீஸ்வரர் ஆலய சூகரவேட்டை இவ்வீரபத்திரசுவாமி ஆலயத்திலேயே நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. சிவலிங்கவழிபாடு செய்வோர். வீரபத்திர சுவாமியை வழிபடவேண்டுமென்றும் கூறப்படுகின்றது.

## விஷ்ணு:

அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டும் விஷ்ணு வழிபாட்டிலும் எமது பிரதேச மக்கள் வழிபட்டமையை உணரமுடிகின்றது. தனிமையான விஷ்ணு ஆலயம் இல்லாவிட்டாலும் பரிவார தெய்வமாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலும், தாந்தாமலை முருகன் ஆலயத்திலும், பண்டாரியா வெளி நாக தம்பிரான் ஆலயத்திலும் மற்றும் அருள்நேசபுரம், கற்சேனை, மகிழடித்தீவு, சின்னப்பாலத்தடி போன்ற இடங்கிலும் உள்ளன.

## வாலையம்மன்:

மக்கள் எதிர்கால நன்மை, தீமை மணவாழ்வு என்பவற்றை வேண்டி வாலையம்மன் வழிபாட்டிலும் எமது மக்கள் ஈடுபட்டுள்ளனர் அம்பிளாந்துறை, அருள் நேசபுரம் ஆகிய இடங்களில் இவ்வாலயங்கள் உள்ளன.

# "அன்பே சிவம்"

திரு. கோ. துரைராசசிங்கம் **B.Sc.Eng**

*"அன்பும் சிவமுமிரண்டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவதாரு மறிகிலார்*
*அன்பே சிவமாவதாரு மறிந்த பின்*
*அன்பே சிவமா யமர்ந்திருந்தாரே"*

– திருமந்திரம்

திருக்கைலாயத்தில் சிவன் வீற்றிருக்கின்றார். இடது பாகத்தில் அம்பிகை அமர்ந்திருக்கிறாள். அப்பன் அருகில் கணபதியும் அம்மையின் மருங்கில் முருகனும் இருக்கிறார்கள். ஈஸ்வரன் எதிரே காளை படுத்திருக்கின்றது. அம்பிகை அருகில் சிங்கம் இருக்கிறது. மூத்தவன் முன்பு மூஷிகம் விளையாடுகின்றது. முருகன் மருங்கில் மயில் குலாவுகின்றது. சிவனது மேனியில் பாம்பு நெளிந்து, நெளிந்து ஊர்கின்றது.இடையிடையே அது படமெடுத்தாடுகிறது.

இக்காட்சியில் என்ன விநோதமிருக்கின்றது? காளையும் அதனைக் கொன்று தின்னும் சிங்கமும் தோழர்களாய் நெருங்கியிருக்கின்றன. எலியின் மீது பாயும் பாம்பும், பாம்பைக் கொத்திக் கொல்லும் மயிலும் மகிழ்ந்து விளையாடுகின்றன. எலியின் மீது பாம்பு பாயவுமில்லை. பாம்பைக் கொத்த மயில் பறக்கவுமில்லை. கணபதியின் காதை முருகன் கிள்ளவுமில்லை. தம்பியின் தலையில் அண்ணன் குட்டவுமில்லை. இந்த ஒற்றுமையான நிலையை ரசித்த வண்ணம் புன்முறுவல் பூத்தவர்களாய் அப்பனும் அம்மையும்ஆனந்தமாய் இருக்கின்றார்கள். இங்கே நாம் காணும் சந்தோஷமான அமைதியான காட்சியின் ரகசியம் அங்கு அன்பு ஆட்சி புரிகின்றது. சிவன் அன்பே உருவாய் அமர்ந்திருக்கின்றார். அவ்வுயிர்களிடமுள்ள தீய இயல்புகள் அவைகளிடையே நிலவும் வேற்றுமைகள் அன்பினால் அழிக்கப்பட்டுவிட்டன. அன்பு எல்லா உயிரினங்களையும் அணைக்கின்றது, ஆனந்தமூட்டுகிறது.

<u>அன்பு என்றால் என்ன?</u>

அன்பே கடவுள் என்று சமயங்கள் கூறுகின்றன. விஞ்ஞானமோ அன்பு என்பது எம்முடைய ஓர் உணர்வாகும் என்று முன்னர் கூறியது. ஆனால் இன்றோ பலவகைப்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சிகளின் பயனாய் அன்பு ஒரு உணர்வு மட்டுமல்ல அதைவிட மேலான பலம்வாய்ந்த ஓர் சக்தி என்று கண்டுள்ளது. இச் சக்தியை ஒவ்வொருவரும் தொடர்ந்து வெளியிட்டும் பெற்றுக் கொண்டும் இருக்கிறார்கள். எவர் ஒருவர் மீது இச்சக்தி பிரயோகிக்கப்படுகின்றதோ அவரில் இது ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

எங்களுக்கு இது எவ்வாறு தெரிகிறது? ஞானிகளும் சன்னியாசிகளும் பெற்றுள்ள ஒளி வட்டத்தை கிரிலியான் புகைப்படம் என்கின்ற ஒரு புகைப்பட நுட்பத்தின் உதவியோடு பதிய வைத்ததன் மூலம் இதன் தன்மை அறியப்படுகின்றது. விஞ்ஞானிகள் இதனை உயிரியல் காந்த சக்தி கதிர் வீச்சு என அழைக்கின்றனர்.


கிரிலியான் பொறிமுறை இதனை வெளிப்படுத்துகின்றது. இப்பொறிமுறை உயிருள்ளனவற்றிற்கும், உயிரற்றனவற்றிற்கும் இடையிலான வேறுபாடுகளைக் காட்டுகின்றது. உயிருள்ளனவற்றைச் சுற்றியுள்ள சக்தி அளவிலும், நிறத்திலும் வேறுபடுகின்றது. அத்தோடு தனிப்பட்ட ஒருவரின் உணர்வு வேறுபாடுகளையும் பதித்துக் காட்ட வல்லது.

ஒருவர் அன்பைப் பரப்புகின்ற பொழுது ஒளிவட்டம் நீல நிறமாகக் காணப்படுகின்றது. ஒருவர் வெறுப்பையும், விரக்தியையும் பரப்பும் போது ஒளிவட்டம் சிவப்பு நிறமாக மாறுகின்றது. ஒருவர் சுயநலமற்ற அன்பை முழுமையாகப் பரப்பும் போது ஒளிவட்டம் மெல்லிய செந்நிறமாக ( Pink) காணப்படுகின்றது. இவற்றை விட மிகவும் அதிசயமானது யாதெனில் ஒருவரிடமிருந்து வேறொருவருக்கு மாற்றப்படும் சக்தியையும் இந்த கிரிலியான் புகைப்படக் கருவி காட்டக்கூடியது. இப்பதிவுகள் மிருகங்கள், தாவரங்கள், ஆகியவற்றின் இடையேயும் காணக் கூடியதாக இருக்கின்றது.

உலகம் முழுவதும் காணப்படும் எல்லா ஜீவராசிகளிலுள்ளும் அன்பு எனும் சக்தி காணப்படுகின்றது. ஆனால் அளவுகளில் வேறுபடுகின்றன. ஒரு சாதுவில் அன்பை வெளிப்படையாக காண முடிகின்றது. ஆனால் கொலைகாரனில் அன்பு குறைவாக மறைந்து காணப்படுகின்றது. அன்பு எனும் சக்தியை 3 மட்டங்களில் அடையாளம் காணமுடிகின்றது.

## 1. சுயநல அன்பு:- (Get and forget)

அன்பின் கீழ் நிலையில் உள்ள செயற்பாடுகளை இது உணர்த்தும். ஒருவர் தன்னைப் பற்றியும் தனது உடமைகள் பற்றியும் சுயமான சிந்தனையுடன் செயல்படும் நிலையை இது குறிக்கும். பிறரைப் பற்றிய சிந்தனை தோன்றாது. அவ்வாறான சிந்தனையில் அவர் தன் சுயநன்மைக்காக பிறரிடமிருந்து செயல்பாடுகளை எதிர்பார்ப்பார். இதன்படி அன்பு என்னும் சக்தி பெலவீனமடைந்து சுயநல சக்திகள் ஆக்கிரமிக்கப்பட்டுச் செயல்படும்.




1. நானே உலகின் மையம்.
2. சுயநலங்களை நாடுகின்றேன்.
3. பிறரிடமிருந்து பெறும் பொழுது நான் சந்தோஷமடைகிறேன்.
4. எனக்குத் தேவையானவற்றைப் பெறுவதற்கே மற்றவர்கள் இருக்கின்றார்கள்.

## 2. பரஸ்பர அன்பு:- (Give and take)


இது அன்பின் ஓர் உயர்படியாகும். ஒருவர் தன்னைப்பற்றியும், தன்னோடு தொடர்பான தன் உறவினர்கள் பற்றியும் சிந்தித்துச் செயல்படுவர். இவ்வன்பு என்னும் சக்தி முன்னர் கூறப்பட்ட சுயநல அன்பு உடையவரிலும் பார்க்க விரிவடைந்துள்ளதைக் காண முடிகின்றது. கொடுத்து வாங்குமியல்பு ஓரளவு விரிவடைந்திருப்பதையும் காணமுடிகின்றது. ஆனால் அவரிடத்திலுள்ள அன்பு-சக்தி உலகளாவிய நிலையில் பரிமளிக்க மாட்டாது.




1. நான் நேசிப்பவர்களே எனக்குப் பிரதானம்.
2. எனது குடும்பம்/ சிநேகிதர்கள் ஆகியோருக்காகவே நான் வேலை செய்கின்றேன்.
3. நான் நேசிப்பவர்கள் சந்தோஷமடையும் போது நான் சந்தோஷமடைகிறேன்.
4. எனது இலக்குகளை ஆதரிப்போரை நல்லவர்களாகக் கருதுவேன்.

## 3. சுயநலமற்ற அன்பு:- (Give and forgive)

இதுவே அன்பின் மிக, அதி உயர்ந்த படியாகும். தூய அன்பானது 'நான்' என்ற நிலையிலிருந்து 'நாம்' என்ற நிலைக்கு எடுத்துச் செல்கின்றது. இவ்வன்பைக் காட்டுபவர்கள் பிறருக்குக் கொடுப்பார்கள் ,பிறரை மன்னிப்பார்கள், பிறரிடமிருந்து எதையும் எதிர்பார்க்க மாட்டார்கள், இந்நிலையான அன்பில் ஒருவர் தன்னை மற்றவர் நிலையிலிருந்து நோக்குவர் ; பிறரின் தேவைகள் தனது தேவைகளுக்குச் சமமானது எனக் கருதுவர்; பிறரின் நலன்களில் அக்கறை காட்டுவர். இவ்வாறான நிலையில் அவர்கள் உலகளாவிய அன்பான சக்தியைப் பெற்றுத் திடகாத்திரத்துடன் செயற்படுவர். இச்சக்திக்கு ஓர் வரம்பெல்லை கிடையாது. மிகவும் பலம் வாய்ந்தது. அன்பை பிறருடன் பகிர்வதன் மூலம் விருத்தியடைகின்றது.




1. நாம் எல்லோரும் ஒருவரே.
2. மற்றவர்களுக்குச் சரியெனப்படுபவை எனக்கும் சரியாகும்.
3. மற்றவர் சந்தோஷத்தில் நான் சந்தோஷமடைகிறேன்.
4. பிறருக்குத் தீங்கிழைக்கின்ற பொழுது அத்தீங்கு எனக்கு ஏற்பட்ட தீங்கென உணருகின்றேன்.

இவ்வுலகளாவிய சக்தியே எல்லாப் படைப்புகளுக்கும் அடித்தளமாக அமைகின்றது. மனிதன் இயற்கையாகவே தெய்வீகமானவன். இத்தெய்வீகத் தன்மைக்கு ஆதாரமாக இருப்பது அன்பு. அன்பின் வர்ணிப்பே மனச்சாட்சி. இவ்வன்பில் உருவாகும் சிந்தனைகள் யாவும் உண்மையாகின்றன. இதுவே சத்தியம். இச் சிந்னைகள் செயலாகும் போது அவை நற்செயல்களாகின்றன. இதுவே தர்மம். உணர்ச்சிகள் யாவும் அன்பு மயமாகும் போது அவை எமது மனதில் அமைதியை உருவாக்குகின்றன. இதுவே சாந்தி.

அன்பு எம்மால் விளங்கிக் கொள்கின்ற பொழுது இன்னா செய்யாமைக்கு (அகிம்சை) எம்மைப் பணிக்கின்றது. ஆகையினால் மனிதனின் எல்லா நற்பண்புகளுக்கும் உயிரோட்டமாக இருப்பது அன்பு. இவ்வன்பு எனும் தெய்வீக சக்தியே மனிதனின் வாழ்க்கைக்கு மூலாதாரமானது. இவ்வுயர்நிலை அன்பை நாம் பெருக்கப் பெருக்க மனித நற்பண்புகள் அனைத்தும் எம்மை வந்து சேரும். இதனால்தான் எல்லாச் சமயங்களும் அன்பு சார் வாழ்வை வலியுறுத்திக் கூறுகின்றன. ஆகையினால் தான் அன்பு கலந்த மனித சேவையை எல்லாச் சமயங்களும் விரும்புகின்றன.

**Love is God. Live in Love.**

# மண்முனை மேற்குப் பிரதேச இந்து ஆலயங்களும் அவற்றின் அமைவிடங்களும்.

திரு - க. ஆறுமுகம் J.P

மட்டுநகரின் மேற்கே வலையிறவுப் பாலத்திற்கப்பால், மட்டு வாவியிலிருந்து உன்னிச்சைவரை 24 கிராம சேவகர் அலகுகளுடன் பொருள் வளமும், நிலவளமும், கலைவளமும் சிறந்து விளங்கும், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நால்வகை நில அமைப்புக்களைக் கொண்ட இயற்கை எழில் கொஞ்சும் தனித் தமிழர் பிரதேசமே மண்முனை மேற்கு வவுணதீவுப் பிரதேசமாகும். விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண்ட இம் மக்கள் இந்து சமய கலை, கலாசார, பாரம்பரியங்களிலிருந்து இன்னும் வழுவாதிருப்பது சிறப்பம்சமாகும்.

"திருக் கோயிலில்லாத் திருவிலூரும்........." எனும் பாடலிற்கேற்ப இப் பிரதேச இந்துக்கள் கிராமங்கள் தோறும் தமக்கேற்ற வகையான ஆலயங்களை ஆரம்ப காலத்திலிருந்தே அமைத்து வழிபட்டு வருகின்றனர். அவ்வாறான இந்து ஆலயங்களும், அமைவிடங்களும் சுருக்கமாக வருமாறு.

### விநாயகர் ஆலயங்கள்.

விநாயகர் ஆலயங்கள் அமைந்துள்ள இடங்களும் அங்குள்ள விநாயகர் பெயரும்:-

| | | |
|---|---|---|
| கன்னங்குடா | - | ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார், ஸ்ரீ விநாயகர், வெட்டயச் சேனைப் பிள்ளையார். |
| மண்டபத்தடி | - | பிள்ளையார். |
| காயான்மடு | - | ஸ்ரீ சித்தி விநாயகர். |
| கரையாக்கன் தீவு | - | ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார். |
| தாண்டியடி | - | பிள்ளையார். |
| கொத்தியாபுலை | - | முதலைமடுப் பிள்ளையார். |
| வவுணதீவு | - | ஸ்ரீ விநாயகர் |
| சாளம்பைக் கேணி | - | பிள்ளையார். |
| மங்கிக்கட்டு | - | பிள்ளையார். |
| ஈச்சந்தீவு | - | ஸ்ரீ சித்தி விநாயகர். |
| நாவற்காடு | - | ஸ்ரீ சித்தி விநாயகர். |
| விளாவெட்டுவான் | - | பிள்ளையார். |
| தில்லந்தோட்டம் | - | பாழடைந்த பிள்ளையார். |
| கரவெட்டி | - | பிள்ளையார். |
| நரிப்புல்தோட்டம் | - | பிள்ளையார். |
| மகிழவட்டவான் | - | ஸ்ரீ சித்தி விநாயகர். |
| கல்குடா | - | நாச்சிமார் பிள்ளையார். |
| உன்னிச்சை 4 1/2 கட்டை | - | தலைபறந்த பிள்ளையார். |
| ஊத்துமடு | - | பிள்ளையார். |
| பாவற்கொடிச் சேனை | - | விநாயகர். |
| பன்சேனை | - | ஸ்ரீ பால விநாயகர். |
| கெழுத்திமடு | - | பிள்ளையார். |

### முருகன் ஆலயங்கள்.

தாண்டியடி, மகிழவட்டவான், கல்குடா, ஆயித்தியமலை, கன்னங்குடா, கரவெட்டி, ஆகிய இடங்களில் முருகன் ஆலயங்கள் அமைந்துள்ளன.

### மாரியம்மன் ஆலயங்கள்.

கரையாக்கன்தீவு, பருத்திச்சேனை, கொத்தியாபுலை, நாவற்காடு, விளாவெட்டுவான், சொறுவாமுனை, மகிழவட்டவான், நரிப்புல்தோட்டம், நெல்லிக்காடு, கெழுத்திமடு, உன்னிச்சை (6ம் கட்டை), பன்சேனை, நாவல்தோட்டம், காஞ்சிரங்குடா, ஆயித்தியமலை போன்ற இடங்களில் இவ்வாலயங்கள் உள்ளன.

### காளியம்மன் ஆலயங்கள்.

குறிஞ்சாமுனை, மண்டபத்தடி, கரையாக்கன்தீவு, புளியடிமடு, கொத்தியாபுலை, கரவெட்டி, வவுணதீவு, இலுப்படிச் சேனை இக்கிராமங்களில் காளி கோயில்கள் உள்ளன.

### கண்ணகை அம்மன்.

கன்னங்குடாவிலுள்ள கண்ணகை அம்மன் ஆலயம் மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயமாகும். வைகாசி மாதத்தில் வரும் பௌர்ணமியை அடுத்து வரும் திங்கட் கிழமை திருக்குளிர்த்தி இடம்பெறும். இக்கண்ணகை அம்மன் ஆலயக் கதவு திறப்பு விழா முதல் திருக்குளிர்த்தி வரையுள்ள ஏழு நாட்களும் இக்கிராம மக்கள் மிகவும் புனிதத் தன்மையுடன் இருப்பதுடன் ஊரைவிட்டு வெளியிடங்களுக்குச் செல்லாதிருப்பது ஒரு சிறப்பம்சமாகும்.

ஈச்சந்தீவிலுள்ள கண்ணகை அம்மன் ஆலயத்தின் உற்சவ ஒன்பது நாட்களிலும் ஒன்பது அயற்கிராம மக்கள் திருவிழாச் சடங்கு செய்வது இங்கு குறிப்பிடத்தக்கது. மற்றும் உன்னிச்சையிலும் கண்ணகை அம்மன் ஆலயம் உள்ளது.

### மீனாட்சி அம்மன் ஆலயம்.

பருத்திச்சேனையிலும், நாகதம்பிரான் ஆலயம் விளாவெட்டுவானிலும், வைரவர் ஆலயங்கள் எண்ணம் பாலைப்பூவல், வாதக்கல்மடு, விளாத்தியடி முன்மாரி போன்ற இடங்களில் உள்ளன.

# திருப்படைக் களஞ்சியம் முட்டி கூறும் கல்வெட்டு வினாவிடையில் அமைந்துள்ள தர்க்கப்பாடல்கள்

தொகுப்பு : ஞா. சிவசண்முகம். J.P

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் தேரோட்டம் முடிந்து அடுத்தநாள் சுவாமி திருவேட்டை ஆட எழுந்தருளுவார். இச்சம்பவத்தைப் பார்வையிட மட்டக்களப்பு நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் பெருந்தொகையில் கூடியிருப்பர். இவ்வாறு அங்கு சமூகமாய் இருக்கும் பல்வேறு சாதிப்பிரிவினரையும், சில சாதியினரின் உட்பிரிவுகளையும் அவர்கள் கோயிலுக்குச் செய்யும் ஊழியங்கள், தொண்டுகளை நினைவு கூர்ந்து கௌரவிப்பதற்காக கஞ்சிமுட்டி கூறும் நிகழ்வு இடம் பெறும். இங்கு ஊழியங்கள் என்று சொன்னது சம்பளம் வாங்கிக் கொண்டு செய்வோரைக் குறிக்கும். சம்பளம் என்பது நெல்லாக வழங்கப்படுவதே, வழக்கமாகும். சம்பளம் பெறாது செய்யப்படுவதே தொண்டுகளாகும்.

கஞ்சி முட்டியைப் பற்றியும் சிறிது கூறுவது அவசியமாகும். அரிசி, சர்க்கரை, தேங்காய்ப் பால் முதலியவற்றை பெரிய அண்டாவில் இட்டுக் காய்ச்சி பின் இதற்கென வாங்கப்பட்டிருக்கும் சிறு சிறு மண்முட்டிகளில் ஊற்றி வாழை இலைத் துண்டுகளால் வாய்ப்பாகம் மறைத்துக் கட்டப்பட்டு பின் இவை உரிய இடத்திற்கு எடுத்துச் செல்லப்படும். முட்டி கூறும்போது பெரிய திருவாசல் என்று தொடங்கிக் கூறுவதே மரபாகும். முட்டி வாங்குவோர் அதனைப் பெற உருத்துடையவராய் இருக்க வேண்டும். இதையிட்டு ஐயம் எழும் போது சபையோர் அவரைத் தடுப்பர். முட்டி வாங்குபவர் உரிய பாடல் மூலம் தமது உரிமையை வெளிப்படுத்தி வாங்க வேண்டும். அவ்வாறு செய்ய முடியாதவர் திரும்பிச் செல்ல நேரிடும். இவ்வாறாகப் பங்கு தடுப்பதும் வாங்குவதும் பாடல்கள் மூலம் நடைபெறும். இதுவே திருப்படைத் தர்க்கம் எனப்படும்.

1. குலம் கோத்திரம் சைவமதம் பெருமை தாழ்வு
குவலயத்தில் விளங்கிவரக் கொற்றவர்கள் சிவனுடைய
தலங்கள் செழித்தோங்கி வர திருப்படைத்தாவி
வெகு சன்மானம் தழைத்தோங்க இலங்கையெனும்
மட்டமுறு களப்பிலீசர் ஈட்டி கொண்டு
பன்றி குத்துமியல்பைக் காட்டி என்றென்றும்
குடுக்கை வைத்துத் துலகுக் குலவரிசை முட்டி கூறும்போது
சொல்லுவேன் திருச் சபையைத் துதித்துமிப்போ.

பங்கு பெறுதல் பற்றிய தகுதியைக் கூறுவது.

2 வரிசைமுட்டி வாங்குவோரேயுன் குலமுங்கோத்திரமும்,
மங்கை மைத்துனராய் வந்தவாறும்
சரிகையொடு சைவநெறிதந்தார் பேரும்,
சாதிவிட்டுக் கலவாமல் தரிக்குமாறும்
கிரியை முறைப்படி நடந்துல கோர் வாழ்த்த
கொடுமுறைய கற்றியீசரில்லம் வந்து
பரிதி குலக் கலிங்கள் முன்னாள் செய்த
பண்டு முறைதனைக் கூறிப் பங்கு வாங்கே.

3. கூறமுறையறியாதார் எழுந்தால் தோஷம்
குலமறியாதார், தான் தான்செய்த குற்றங் காணார்,
நீறணியும் சைவமுறை நீங்கி வாழ்வோர்
நிலையகன்று பிறர் குலத்தில் மணந்து கொள்வோர்,
ஆறு பணிதாரமென்னுமாலயத்தில்
அனுதினமும் வந்து மலரிட்டுண்ணார்
வேறு குல மக்கள் மனைவிருந்து உண்டோர்
விறல் வரிசை முட்டிபெறவிடேன், நீ கேள்.

4. நீங்கு நீ தேசசங்கமதனிற் கூறும் நின்னையும்
என்னையும் நிலைநிறுத்தி வைத்து
பங்கு குலங்கோத்திரம் சைவமுறை பண்டு பண்டு
குற்றமில்லாத தூயோனானாற் பங்கு
வாங்குமென்று விருதளிப்பாரெனக் குக்குற்றம் வகுத்திடுவர்
உன் தகுதி மங்குமாகில்
தாங்கியென்னை அச்சபையோர் புகழ்வார்,
உன்னைச் சங்கமதால் அகற்றி வைப்பார் தகுதியாரேன்.

5. பாரிலுயர் திருவாசல்,வேதம், நம்பி, திருப்பாட்டு,
சரிகை சன்னாசம், தேசம்,
சீரிலங்கு வன்னிபமும், குருநாதர், பூபாலன்,
திறல் பெரிய கோத்திரமும், பூவின் செட்டி,
ஏர் சிறந்த புன்னாலை, மண்முனையுமிலங்கு
மட்டக்களப்பு, நாடு, நகர், கதிரை, கண்டி,
காரிலங்கு, கந்தளை, மாவலி, அயோத்தி,
கருத்தறிந்து வாங்காதோர் கை நீட்டாதே.

6. கையது நீட்டில் தடைசெய்வேன் பண்டு பண்டு
கலிங்கனிடு கடமைகளைத் தவறாதோர்கள்,
பொய்யுரையார், புகழ்குறையார், தீண்டார் வீட்டில்
புசியாதார் திருப்பணிக்குப் பொன்னே ஈவோர்
வையமதில் பிறர் நிதியம் திருடி வாழார்
மறை நூல் களாராய்வோர் மாமிசத்தால்
உய்ய உடல் வளராதார் திருப்படைக்குள்ளூடு.
சென்று வரிசை சங்கத்துரிமை கொள்ளேன்.

### தேசம்

7. தேசமென்னும் வரிசைமுட்டி வாங்கவந்தீர் உன்திறமையென்ன
செங்கோலோச்சுந்திசை தானெங்கே?
பாசமெறியமன் குலத்தோர் தன்னைக்கொன்று
பசுபதியாய் உலகமதை வைத்ததெங்கே
தூச கற்றி உனது முனளோர் சுகித்ததெங்கே
தொன்றுதொட்டு உன் சுயதிறமை சொல்வீரானால்
கூசாமல் வரிசை முட்டி வாங்கலாகும்
குறியறியார் கரம் நீட்டிற் குலத்துக்கீனம்.

### கலிங்கன்

8. பேர்பெரிய எனது முன்னோரிருந்த தேசம்
பிரம புத்திரா நதி தனக்குப் பக்கமாகும்,
ஆரெதிரியில்லாமல் அயோத்தி வங்கம் அரிபுரம்
காளிகட்டஞ்சேர் ஒரிசா தேசமது,
தேரணிகளூர் முன் பின்படைகள் சூழ சிவகோத்திரந்
திறமையுடன் செங்கோலோச்சி,
நீர் சூழ் இலங்கை முற்றும் இராவணன்பின்
நிலையரசு புரி கலங்கராசன் நானே.

### வன்னிபம்

9. வன்னிபங்கள் குலவரிசை முட்டி கூற மகிழ்ச்சி கொண்டு,
எழுந்தீர் உன் மரபும் நாடுமெந்த
மன்னருன்னை வன்னிபமாய் வகுத்ததென்றும்
மானிலத்திலுங்கள் முன்னோர் வாழ்ந்தவூரும்
துன்பு புகழ் கோத்திரமும் தொன்று தொட்டுத்
துணையரசன் பேருருஞ் சொன்னாலிந்த
பன்னு புகழ் சபையோர்கள் மகிழக்கூறிப்
பங்குபெறும் அறியா யானாற் பாவமாமே.

10. அறியாதானிச்சபைக்கு அகல நிற்பான்,
பரன்றெழும்பேர் பழிப்புரைப்பார் அறைவேனெங்கள்
நெறிதவறார் சுயநாடு காளிகட்டம்,
படையாட்சி உழுனுண்டோன்,
சிறி மகிழும் காலிங்க வரசனெங்கள் திறத்தோரைப்
படைத்துணைக்குத் தலைவனாக்கி,
குறியறிந்து வன்னியர்கள் குலமே என்றும்
குகப்பட்டத்தரசு கொண்டோன் நானே.

### குருநாதர்.

11. குருநாதர் குலகுருவின் வரிசைமுட்டி கூறமுன்னர்
குலங்கோத்திரம் குருகுலத்தின் பெருமைகளும்.
மறை நான்கும் பட்டம் பெற்ற பெரியோரார்
உங்கள் சுயநகரமெங்கே
மருவாரும் மங்களங்கள் பெற்றதேது
மானிலத்தில் யோகமுறை வகுத்ததாரு.
திருவாணை இம்முறைக்குப் பதிலுரைத்துத்
திருப்படையில் பங்குபெறும் அறியாதார் தீண்டில்தீதே.

12. தீதகவப் பூருவத்தில் பிரமபுத்ராத் தீர்த்தமதில்
சிவனுமுமையும் வேடரெனச் சிலையம்பேந்தி
தாதுலவு நீராடவெங்கள் முன்னோர்
சதாசிவமென்றடியைத் தாவிப்போற்ற
மாது பங்கன் மகிழ்ந்தைந்து மந்திரத்தையீந்து
குருநாதனென மறைந்த பின்பு
பூதலத்திலுயர் கலிங்க ராசனுடன்
முதற்குருவாய் இலங்கைதனில் புகுந்தோன் நானே.

### பூபாலகோத்திரம்

13. பூபாலகோத்திரம் புகழைக் கூறப் புரவலன்போல்
எழுந்து வந்தீர் நில்லு நில்லு
பாவலர்கள் கவிபாடி வைத்ததெங்கே
பண்டரசு புரிந்து எந்த மதத்தில் நின்றோன்,
தேவதள தானமெங்கே உங்கள் முன்னோர்
சேர்ந்தவரின் குலமுமெந்தக் கோத்திரந்தான்
தூபமெனப் பிரித்துரைத்து வரிசை வாங்கும்
சொல்லறியான் இச்சபைக்குத் தூர நில்லேன்

14. தூர நில்லேன் பூபாலன் சோழனல்லத்துங்கமுடி
ராமனல்ல வங்கர் கெங்கர் வடுகனல்ல
தூது மாற்றும் கெங்கர் குலத்தரசன் றானும்
செப்பரிய காலிங்க நகர ரசுசெய்யுங்காலம்
நீரகழி சூழ் இலங்கை முற்றும் சைவமோங்க
நிலையரசு புரிந்து பூபாலனென்ன நின்ற எங்கள்
காரகற்றிச் சிவப்பணிக்குக் காவல் வைத்த
காரணத்தால் சிவகோத்திரக்காளை நானே.

### பூவைசியர்

15. மாசகன்ற வைசியரென வரிசை கூற மகிழ்தெழுந்தீர்.
நில்லு நில்லு உன்வழமையென்ன வணிகமெந்தத்தேசம்
அதிலுங்கள் குலமிருந்து சிவப்பணிக்குக்
கோத்திரத்தின் திறமை கொண்டு தேரும் சீரும்
வாசமலர்த் தோப்புக்களும் தாசி நடமாடுதற்கு
மண்டபமும் வகுத்துச் செம்பொன்
நேசமுடன் ஈந்தவிடம் முற்றுங் கூறி
நீழ்சபையோர் வைசியரென வரிசை பெறு நீதிதானே.

16. முக்குலத்து வைசியரிலும் பூவைசியன் முதற்குலமாய்ப்
புவியோர் வாழ்த்த அயன் மால் முன்னோன் தூய
தற்பரனார் பணிகளுக்கு நிதியமீந்து தேருடனே

சத்திரமும் தாசி நடன மண்டபமும் தரித்துக் காசி
விற்பரனார் கிருபையினால் எங்கள் குலம் கலிங்கனோடு
இலங்கை சென்று திருப்பணிகள் மேன்மையாக்கி
கற்பகத்தின் கோத்திரமாயிருந்த மட்டக்களப்பிலுயர்
வைசியக் காளை நானே.

**புன்னாலை**

17. புன்னாலைப் பெருமைதனைப் புவியோர் கேட்க
புகழ்ந்து சங்கச் சபையோர் வரிசை கூற
முன்னேறி வாங்க வந்தீர் நில்லு நில்லுன்
முறைமையென்ன மூதாதையர் மரபு பண்டு ஊர்பேர் மற்றும்
தன்னாடு கோத்திரங்கள் ராசராசர் சந்ததியும்
புன்னாலைத் தகுதிமுற்றும் சரியாய்ச் சொன்னால்
உன்னாணைப் பங்குபெறு அறியா யாகில் உற்ற
திருச்சபையை விட்டு ஓடிப்போமீர்

18. திருச்சபையில் நிறைந்தவரே செப்பக்கேளும்
சீரோங்கும் அசோககிரி புன்னாலையாகும்
மருப்பெரிய சுந்தரனும் அரசுசெய் நாள் மகவுதிக்க
ஆகாததால் மணிப்பேழை தன்னில் வைத்துப் பூட்டி
பொருப்பை விட்டு அப்பிலிட வடைந்தீழ
மனுநேயன்
புத்திரியாய் இலங்கை முற்றும் செங்கோலோச்சும்
கருத்தரிய சௌந்தரியாள் வங்கர்குலம் நானுமந்தக்
குலக்காளை அந்நாட்டுக் கடமை கேட்டேன்.

**மண்முனை**

19. மண்முனையை மாநிலத்தில் மருங்கூரென்றும் மகிழ்ந்து
சங்கச் சபையோர்கள் வரிசை கூற
நண்ணி வந்து கரம் நீட்டி வாங்கமுன் உன்நகரேது
குலமேது கோத்திரத்தின் நாமமேது
பன்னு புகழ் உன்மரபும் மண்முனையின் நாமமது
பகுத்தார் பேரும் பண்டுபண்பும்
திண்ணமுடனிச்சபையில் செப்பாராகில்
திருவேட்டைக்குடுக்கை தீண்டில் தோஷம்.

20 தீண்டாதோர் தீண்டுவரோ ஒறிசாதேசம்.
செங்கோலை யோச்சு குகசேனன் புத்திரி
தூண்டு புத்ததசனமொடு சிறைகள் சூழக்
கருதுகிலுடுத்த பிவியீழ நாட்டுத் துரைத்தனத்தாள்
காண்ட கிரிதன்னாட்டில் மேகவர்ணன் மண்ணேறுமுனை,
கொடுத்துத் தசனம் வேண்ட
மீண்டும் மட்டக்களப்பு வடபகுதிதிருத்திக்
குடியேற்றி விறலரசுபுரிந்த குலசிங்கன் நானே.

**மட்டக்களப்பு**

21. மட்டமுறுங்களப்பதற்குப் புகழேயோங்க
வரிசைச் சங்கச் சபையோர்கள் முட்டி கூற
திட்டமுடனெழுந்து கரம் நீட்ட முதலுன்
குலமும் நேர்சீர் நாட்டின்
பட்டமது வைத்தவரின் பேருமூரும்
பண்டு பண்பும் இச்சபையில் பகர்வீராளால்
பிட்டதனை வேண்டி மண்ணைச் சுமந்தோனாணைக்
குடுக்கை பெறும் புகலறியான் இச்சபைக்குப்புறம்
போவீரே.

22. பண்டுநாள் விஜயனென்போன் ஈழநாட்டைப்
பரிபாலனம் புரிந்து பரமபதமடையுங் காலம்
திண்டிறல் கலிங்கர் குலச்சேனன்னீன்றெடுத்த
சுதத்திகனும் செங்கோலோச்சுங்காலம்
கண்டு கரைநகர் களப்பைமூடி யெங்கள் தமைக்
காளிகட்டம் தனிலிருந்து அழைத்து முன்னாள்
மண்டு சிறைக்கதிகாரப் பட்டந்தந்த
மாபருதி குலன் பதி காவல் புரிந்தோன் நானே.

**நாடு - 01**

23. நாடதிகம் புவிதனிலே புகழிலங்கை
நன்னாட்டின் பெருமைதனை நாடிக்கூற
தேடரிய திருச்சபைக்கு முன்னே வந்து வரிசை முட்டி
தீண்டமுன் உன்பேரும் மரபும் நீங்கள்
வந்த வரலாறு முற்றும் வழுத்து வீரேல்
ஏடலரும் வரிசை முட்டி எடுப்பீரல்லாலிச்
சபையை விட்டு கன்றேகு வீரே.

**நாடு - 02**

24. சபையோரே நானிலத்திலதிகம் நாடு
சங்கை மென்நாடு ராமநாடு.
எவை யோரில் மறவர் குலத் தெழுமாதர்
இலங்கை செல்ல, மணமகளுஞ் சிறைகள் சூழ
அபயமென வெங்கள் குலத்தைந்து குடி
அனைவருக்கும் பூசகராயழைத்து மட்டச்

சுளைகளப்பில் குடியேற்றி யாவருக்கும்
சொன்னமுறை குருக்களெனத் தோன்றும் நானே.

### நகரம்

25. நகரமென்று திருச்சபையோர் வரிசை கூற
நாடியெழுந்தீருனது பேருமூரும்
பகரிய நகரமெது நீர்தானொரு பங்குபெற
வெழுந்தீருன் குலந்தானேது
சிகரமெழு மேருகிரி குடையாய்
பூமி செழித்திலங்கும் நகரநாடு தேசமிச்சம்
மகரமெனக் கடல் புடைசூழ் குகநாட்டார்
வாழ்ந்தவாறு மொழியுரைத்து வரிசை வாங்கே.

26. மொழியுரைப்பேன் ஐந்து பத்தாறு தேசம்
முப்பத்திரண்டு நகர் புரந்தாளெட்டு சுரந்தானேழு,
தளிர் துளியும் நாடு பத்துக் கிரிதாவெட்டு
சாற்றிரிய கடலேழு இளைவக்குள் பூத்த
கிளி மொழியும் தஞ்சைநகர் எங்கள் தேசம்
திருச் சோழன் கண்டனென்னும் துய்யபுகழ்
உழவனென்னத் தோன்றும் நானே.

### கண்டி

27. ஈழமுறுங் கண்டியதன் பெருமைகூற எழுந்துவந்தீர்
நில்லு நில்லுன்னூரும் பேரும்
வாழையடி வாழையென வந்தவாறும்,
மா நிலத்திலிந் நகரையாண்டான் பேரும்
சூழ நகருண்டாக்கி வைத்தார் பேரும்
சொல்லரிய உன்குலமும் தொடர்புங்கூறி
நீயு மெழுந்திச்சபையில் வரிசை பெறு
நிலையறியாயாகிலிங்கே நில்லாதேகேன்.

28. தெரியாதார் இச்சபைக்கு அருகராகர்
சிறிமதியின் வயிற்றுதித்த சிங்கவாகு
பரிவாகவீன்றெடுத்த விஜயராசன்
பாங்காகவுண்டாக்கும் நகர்தானீது
அரியென்னும் கொடியுயர்த்தி அரசு செய்த
அன்னவன்றன் குலம் குலமாய் நிலைமை பூண்டேன்,
வரிசை முட்டி பெறுவதற்கு தடையேதுமுண்டோ,
வங்கர் குலக் கோத்திரத்தான் சிங்கன் நானே.

### கதிரை

29. கதிரை நகர்ப் பெருமைதனைப்புவியோர் கேட்கக்
கனக மறுவரிசை முட்டிபெற எழுந்து வந்தீர்,
மதுரமுறு மொழியதனாலுன் பேருமூரும் நீங்கள்
வந்த முன்னாள் வெற்பதனையாண்டார் பேரும்
எதிரொலிகள் சிறந்தெறிக்கும் கருணையாவும்
இச்சபையிலுரைத்து முட்டி எடுப்பீர் அல்லார்
நதியரவு சூடுமரன்றன் மேலாணை  நவிலறியாதாகில்
நில்லாதகன்று செல்லே.

30. செல்வாரிச் சபைதனக்கு முன்வாரார்கள்
செகமதிலே எமகூடச் சிகரமாகும்,
தொல்லுலகில் சூரர்கரு வறுத்த வேலோன்
சூட்சுமத்தால் கிரியில் நின்றிலங்கு தீபம்
வல்லி யென்னும் வேடர் குல வள்ளிமாதை
வரைதனிலிருத்தி அந்நாள் வாழ்ந்ததாலே
துல்லியமாயெயினர் பதிய ·ரு ்டதாலே
நானுமந்தக் குலமிந்தக் கடமை  கேட்டேன்.

### கந்தளை

31. கந்தளை மகிமைதனைத் தேசசங்கம்
காசினியில் வரிசை தங்க முட்டி கூற
வந்து கரம் நீட்ட முன்னுன் ஊரும் பேரும்
மகாவேரி செய்தவன்றன் நாமந்தானும்
விந்தை யொடு அவர் மணந்த மங்கை பேரும்
விறலரசு புரிந்தாண்ட திசைகள்யாவும்
கொந்தளக சபையோர்கள் மகிழக் கூறி
வரிசை பெறு கூறறியாளிச் சபைக்குப் பின்போவீரே.

32. பின் போவார் பெருமை கொண்டு வருவாருண்டோ
பேசரிய வங்கமகா சேனன்றானும்
தன்செயலை நிலை நாட்ட வெண்ணி முன்னாட்
சதுரங்க சேனையொடு இலங்கை சேர்ந்து
அன்பொடு திரிகோண ஆலயத்தை
அருளெறிக்கச் செய்ததேதான் ஆடகத்தை
இன்பமொடு மணந்த வங்கர் குலம்,
நானுமந்தக் குலந்தானிவ் வரிசை கேட்டேன்.

மாவலி

33. மாவலியின் புகழ்தனை உலகோர் வாழ்த்த
வரிசை முட்டி கூற வந்தீர் நில்லு நில்லு
தாவியதனூற் பத்திதானு மெங்கே தளிர்கிரண
நித்திலங்கள் கலந்தெங்கே
தேவ சிவனடியெங்கே நீர்தானாரு திருச்சபையில்
வரிசையது வாங்கச் சென்றீர்
நாவலிமையோடுரைத்து முட்டி வாங்கு
நவிலறியான் இச்சபையில் நாடாதோடே

34. நாடாதோர் நாடுவரோ பெருமை கூற
நற்சபையில் முன்னேறி வரிசை கொள்ளார்
தேடரிய சிவனடியில் செறிந்தெழுந்த
திருக்கங்கைதனில் வதனர் முன்னாள் வாழ்ந்தார்
மாடேறு மீசனடி துதித்திடை மக்களென்று
பண்டு பண்டு வரிசை பெற்றார்.
வாடாத அக்குலத்து மரபன்யானும்
வரிசை பெற இனியேதுந்தடையதாமோ?

அயோத்தி

35. அயோத்தி நகரதற்குப் புகழேயோங்க
அரிய திருச்சபையோர்கள் வரிசை கூற
மெய் செழிக்கவிச் சபையில் வந்தீருங்கள் விருதுடனே
குலங்கோத்திரம் அரசுரிமை வேந்தர் பேரும்
வையகத்தில் வந்தவாறுடனே எந்த மதவாதியென்றும்
அந்த மன்னவன் வரன் முறையும் வழுத்துவீரால்
பொய்யுரைகள் கூறாமல் வரிசை பெறும் பொருள்
தெரியாதாகிலிந்தச் சபையின் பின் போவீரே.

36. வீரனென்னும் பரிதிகுல இரகுமுன்னாள்
வேட்டைசென்றெங்கள் குலமெல்லிதன்னை
தாது வெறி மயக்கமதாலணைத்து ஈன்ற
சவலையற்கு வரு இரகு நாமென நாமமிட்டு
பூருவத்தில யோத்தியுரிமையீந்து போனபின்னர்
சிறிராமர் துணைவராகி
தீரரென்னும் அரக்கர் குலம் வேரறுத்த சிவ
மறவர்குலம் நானும் மிவ்வரிசை கேட்டேன்.

## ஆதார நூல்கள்.


1. திரு. சி. தட்சிணாமூர்த்தி
*அதிபரின் சிவன்கோயில் பத்ததிக்கட்டுரை*

2. திரு. க. கனகநாயகம்
*இளைப்பாறிய அதிபரிடமிருந்து பெற்ற ஏட்டுப் பிரதி.*

3. மட்டக்களப்பு மான்மியம் குடுக்கை கூறும் கல்வெட்டு.

4. திரு. ஞா. சிவசண்முகம்
*அவர்களிடமிருந்த ஏட்டுப் பிரதி.*


## "எதுவும் நமக்குச் சொந்தமில்லை"

நாம் விலை கொடுத்து நம் பேருக்குப் பதிவு செய்துள்ள நம் வீட்டில் வாழும் பல்லி, எலி, பூனை, எட்டுக்கால் பூச்சி முதலியவை அந்த வீட்டைத் தமக்குச் சொந்தமாகவே நினைக்கின்றன. அதுபோல, எல்லாம் இறைவனின் உடைமையாக இருக்க, அவற்றை நம்முடையவை என்று நினைத்து நாம் மயங்குகிறோமே, என்னே நமது அறியாமை !

-கிருபானந்தவாரியார்-

# கொக்கொட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் திருவூஞ்சல்

மகிழை - மகேசன்

அன்புருவாய் அமர்ந்திருக்கும் எங்கள் ஈசன்
அகிலமெல்லாம் அருள் கொடுக்க வேண்டுமென்று
தன் விருப்பால் தான் தோன்றீ ஆகி வந்த
தரணி புகழ் கொக்கட்டிச் சோலையூரான்
இன்புறவே திருவூஞ்சல் ஏற்றிப் பாட
இணையற்ற அருள் தந்து ஆள்வாய் என்றே
கண்ணுதவான் பெற்றெடுத்த மூத்த பிள்ளை
கணபதி தன் பொற்பாதம் போற்றி செய்வாம்.

1. இருக்கு முதல் நால்வேதம் கால்களாக
இணையில்லா ஆகமங்கள் விட்டமாக
விருப்பமொடு திருமுறைகள் கயிறதாக
விழுமிய நல் சங்கமர்னூல் பலகையாக
உருக்க மிகு ஐந்தெழுத்துப் பீடமாக
ஓங்கு தமிழ் பாமாலை இசையதாக
பெருக்க முறு கொக்கொட்டிச்சோலை மேவு
பெம்மானே யம்மையுடன் ஆடீ ரூஞ்சல்.

2. துலங்குமுயர் தென்னகத்தை உடமை கொண்டு
தூய தமிழ் பாமாலை பலவும் பெற்றோய்,
இலங்கை மணித்திரு நாட்டில் கோடி கோடி
இலிங்கமதால் யமர்ந்திருந்து அருள் சுரப்போய்
உலகு புகழ் இலங்கேசன் இனிது பாட
உளம் மகிழ்ந்து குறை மறந்து உதவி செய்தோய்
வளம் நிறைந்த கொக்கொட்டிச்சோலை வந்தாய்,
வள்ளல் தான் தோன்றீஸ் பரரே ஆடீ ரூஞ்சல்.

3. கண்ணெனவே வேடர் குலம் கண்டு போற்ற
கன காலம் கொத்தகத்தே யமர்ந்த கோவே
மண்முனையை ஆண்டிருந்த உலக நாச்சி
மனமுவந்து கோயில் செய்யக் குடி புகுந்தோய்
கோனுயர்ந்த குளக்கோட்டன் மாகோன் மற்றோர்
கொடையளித்து கோயில் செய்ய ஏற்றிருந்தோய்,
தான் தோன்றீ உலகெல்லா மருள வந்த
தற்பரனே யம்மையுடன் ஆடீ ரூஞ்சல்.

4. பண்டு வந்த இனங்களெல்லாம் பணியைச் செய்ய
பரிவுடனே யமர்ந்திருந்து ஏற்றதா யன்றோ
அன்று வந்த சுவாதி யம்மன் வதன மார்கள்
அன்புடனே வழிபடவே அணைவில் வைத்தாய்
கண்டி மன்னன் வழிவழியாய் தொழுது நிற்க
கடுக வந்த கொடும் பறங்கி குலையச் செய்தோய்
அண்டி வந்து கொக்கட்டிச்சோலை தங்கு
ஐயா நீ அகமகிழ்ந்து ஆடீ ரூஞ்சல்.

5. பசவேசர் ஏற்றி வைத்த பக்தி மார்க்கம்
பண்புயர்ந்த வீர சைவ நெறியை யென்றும்
இசைவாகப் பல நூறு ஆண்டு காலம்
இடையீடு யெதுவுமின்றி யினிது காத்து
நிச மெனவே திருவருளின் சுரங்கமாக
நீண்டுயர்ந்த தான் தோன்று ஈச்சரத்தே
அசைவின்றி யன்பு செய்வோர்க் கருளுமையா
அம்மையுடன் அமர்ந்திருந்து ஆடீ ரூஞ்சல்.

6. சூலமதைக் கையேந்தி அன்பர் தங்கள்
துயர் போக்க எருதேறும் தூய மூர்த்தி
காலமெல்லாம் போடி குலம் செய்த சேவை
கனகுவந்து அருள் சுரந்து வீற்றிருப்போய்
தூலலிங்கத் தோற்றமதாய் மயிலிப்போடி
துலங்கவமைத்த உயர் பெரிய கோபுரத்தோய்
ஆலமுண்டு அமரரிடர் தீர்த்து வைத்த
அப்ப னெங்கள் ஈஸ்பரரே ஆடீ ரூஞ்சல்.

7. குடதிசையில் வாவிதனை வயலும் மேவ
குளிரூட்டும் பெருமரங்கள் நிழலை நல்க
திடம் கொண்ட உழவரினம் ஒன்றி நிற்க
திருவுடனே கலை பலவும் சேர்ந்து வாழ
வடமோடி, தென்மோடி கூத்து எல்லாம்
வகை வகையாய் உன் முன்றில் வளர்ந்து ஓங்க
உடமை யெனக் கொக்கட்டிச்சோலை கொண்ட
உம்பர் தொழு ஈஸ்வரரே ஆடீ ரூஞ்சல்.

8. மான் முதலாய் மிருக யினம் சூழ்ந்து வாழ
மயில் அனைய பறவை யினம் ஆடிப்பாட
காண்டரிய குஞ்சரமும் பக்தி கொண்டே
கை யசைத்து மெய்நெளித்து கோஷம் செய்ய
தேன்எனவே பெண்ணினத்தோர் குரவை செய்ய
சேர்ந் தொன்றித் தவில் மணிகள் சங்கொலிப்ப
மேன்மையுடன் அமர்ந்திருக்கும் ஈஸ்பரரே
மெய் யன்பர் உளம் மகிழ ஆடீ ரூஞ்சல்.

9. நேர்த்தி செய்தும் கோயிலெலாம் சுற்றி வந்தும்
நிறைவேறாக் குறையெல்லாம் நிறையச் செய்வோய்
தீர்வடையா நோ யெல்லாம் தீர்த்து வைக்கும்
திறமை மிகு வைத்திய னார்நீயே யன்றோ,
தேரேறித் திரு வீதி சுற்று மீசா
தெம்புடனே உழவர் தனைக் காத்து நிற்போய்
பார் போற்றும் சோலை யூர் அமர்ந்த சோதி
பரம்பொருளே சிவநாதா ஆடீ ரூஞ்சல்.

10. பக்தியுடன் தொழுகின்ற பக்தர்க் கெல்லாம்
பரிந்தருளைப் பொழிபவரே ஆடீ ரூஞ்சல்
சித்தியுடன் வெற்றியெல்லாம் சேரச் செய்யும்
சிவபுரத்துப் பெருந் தலைவா ஆடீ ரூஞ்சல்
எத்திசையும் போற்று முயர் கோயில் கொண்டு
எங்கள் குலம் வாழ வைப்போய் ஆடீ ரூஞ்சல்
சக்தியுமை பாலருடன் அமர்ந்திருந்து
சகல உயிர் உய்வு பெற ஆடீ ரூஞ்சல்.

தீந் தமிழும் சிவ நெறியும் சிறந்து வாழி
தீய குணம் போயகல மாந்தர் வாழி
வான் பொய்யா மழை பொழிந்து செழித்து வாழி
வளம் பெருக தொழில் நிறைந்து செல்வம் வாழி
கோனுயர நீதிமுறை நிறைந்து வாழி
கொடுமை யிலா அமைதி பெற்று உலகம் வாழி
தான்தோன்று ஈச்சரத்தின் பெருமை வாழி
தக்கதெலாம் நிலைத்துலகு வாழ வாழி.

## அறுகம் புல்

பல்வேறு நறுமண மலர்கள் இருக்கும் போது பெருமானுக்கு மிகவும் உகந்ததாக அறுகம்புல்லே விளங்குகிறது. அதன் சிறப்பு அளவிட முடியாதது. 'அறுகு போல் வேரூன்றி' என்பர் பெரியோர்.

அறுகு ஓரிடத்தில் முளைத்து, ஆறு இடங்களில் வேர் ஊன்றி நீண்டு வளர்ந்துகொண்டே போகும் தன்மையை உடையது.

அதுபோல் விநாயகர் எளிமையான தோற்றத்தில் அபாரமான சக்தியைத் தம்முள் அடக்கி நம்மைக் காப்பவர். குண்டிலினி சக்திக்குரியவராக விளங்கும் பெருமானுக்கு அதே குணம் கொண்ட அறுகம்புல்லைச் சமர்ப்பிப்பது ஏற்புடையதாகும்.

"உயிர்கள் உடலை விட்டுப் பிரிந்ததும், வினைக்கேற்ப வேறு உடலை அடையும் பொருட்டு முதலில் புல் நுனியைப் பொருத்தி பசு வயிற்றில் புகுந்து, எருவின் வழியாக பயிர்களோடு பரவி, புருஷ கர்ப்பத்தில் தங்கும்" என்பது உபநிஷதக் கருத்தாகும்.

அதன்படி உயிர்கள் புல் நுனியில் தங்குவதே முதல் படியாதலால், இறைவன் படைப்பில் முதல் படைப்பாகிய விநாயகப் பெருமானுக்கு அறுகம்புல் அர்ச்சனை உகந்ததாகிறது.

பக்தி நெறி, ஞான நெறி ஆகிய இரண்டிலும் மிகவும் முக்கியமானது மனத் தாழ்மைதான். 'தான்' என்ற அகங்காரம் இல்லாமல் இருக்க வேண்டும். இதைப் பக்தர்களுக்கு உணர்த்தவே விநாயகப் பெருமான் எளிய அறுகம்புல்லை விரும்பி ஏற்கிறார்.

பெருமானுக்கு அர்ப்பணம் செய்யும் அறுகம்புல் ஒரே காம்பில் மூன்று முனைகளையுடையதாக இருக்க வேண்டும். அந்த மூன்று முனைகளும் ஊசி முனையாக இருக்கும்; அடியில் ஒன்று சேர்ந்திருக்கும். இவ்வாறே விக்கினங்களை விலக்கி வாழ்வில் வெற்றிபெற விரும்புபவர்கள் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றையும் கூர்மைப்படுத்த வேண்டும். மூன்றையும் ஒற்றுமைப்படுத்தி ஏகாக்கிர சித்தத்தைப் பெற வேண்டும்.

நன்றி : அ. கோமதிநாயகம்
ஸ்ரீ ராம கிருஷ்ண விஜயம் ஆவணி 98

# ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய
# "காவடிச் சிந்து"

இயற்றியவர் - "அம்பிளாந்துறையூர் அரியரன்"

அ. அப்பாவி எங்களையும் பாருமையா
அல்லலுறும் எமதினத்தைக் காருமையா
அகதிகளாய் வாழ்வதற்கு ஏன் படைத்தாய்
அடிமையுறவா எம்மை வாழ வைத்தாய்
தயங்காமல் உன்னிடத்தில் கூறுகின்றோம்
தயவுடனே எங்களையும் பார்த்திடுவாய்
தமிழ் கமழும் கொக்கட்டியூரில் வாழும்
தான்தோன்றி ஈஸ்வரனே அருள் செய்வாயே.

ஆ. ஆண்டவனே நீயும் எமக்கிரங்கா விட்டால்
யாரிடத்தில் நாங்கள் இனிச் சென்றிடுவோம்
அல்லும் பகல் வேளையெல்லாம் அழுகின்றோமே
அகதிகளாய் நாம் இங்கு சாகின்றோமே
சொல்லியழ யாரிடமும் உதவி இல்லை
சோகம் தான் எங்களுக்கு எந்தநாளும்
சோதியே தான்தோன்றீ ஈஸ்வரனே
நீதியே எங்களுக்குத் தருவாய் நீயே.

இ. இயன்றவரை நாம் இங்கு வாழ்ந்து விட்டோம்
எள்ளளவும் எமதினத்திற் குரிமை யில்லை
முயன்றவரை உங்களையே நம்பி விட்டோம்
முடிவுக்கு அருள் ஒன்று தருவாய் நீயே
விடிவுக்கு காலம்தான் இன்னும் ஏனோ
வீண்தானோ எங்கள் வினையும் தானோ
வீரர் ஊர் கொக்கட்டிச்சோலை வாழும்
வேழமுகன் தந்தையே அருள் செய்வாயே.

ஈ. ஈக்களும் இந் நாட்டில் இன்பம் காணும்
எலிகழுகு பூனைகளும் மகிழ்ச்சி கொள்ளும்
எறும்புகளும் பறவைகளும் அமைதி காணும்
குறும்பு செய்யும் குரங்குகளும் கூடி வாழும்
அன்பு கொண்ட நாங்கள் மட்டும் அடிமைதானா
அகிலத்தில் எம்மினமோ ஏனோ தானோ
அரவணைக்கும் படுவான்கரைப் பதியில் வாழும்
அருள் வீசும் சிவகுருவே ஒளி செய்வாயே.

உ. உண்மைதான் உன்னிடத்தில் சொல்லுகின்றோம்
ஒருபொழுதும் எங்களுக்கு விடிவு இல்லை
உரிமையெல்லாம் இழந்து தவிக்கின்றோமே
ஊமையாய் எந்நாளும் இருக்கின்றோமே
உடமைகளும் எங்களுக்கு இங்கு இல்லை
உள்ளதெல்லாம் பறிகொடுத்து அகதியானோம்
உழவர் ஊர் கொக்கட்டிப்பதியில் வாழும்
உமையம்மை நாயகரே அருள் செய்வாயே.

ஊ. ஊமையாய் இருப்பதற்கு ஏன் படைத்தாய்
ஊதாரி வாழ்வுதான் எமக்களித்தாய்
உள்ளமெலாம் வெறிச்சோடி உடலும் நடுங்குதே
உதவாத கொடுமையால் உயிரே வதையுதே
கள்ளமில்லா மனதாலே சொல்லுகின்றோம்
கைகூப்பி உம்மையே நாளும் வணங்குவோம்
கதிர் விளையும் படுவான்கரைப் பதியில் வாழும்
நடராஜப் பெருமானே அருள் செய்வாயே.

எ. எங்களின் தலைவிதி இப்படித்தானோ
எம்மினம் கொடுமையில் அழிவதுதானோ
இகழ்வுக்குத்தானோ நாங்கள் பிறந்தோம்
இரவுபகல் பாராமல் வதைகளால் மடிந்தோம்
இன்பமே ஒருபொழுதும் கண்டதில்லை
துன்பமே சூழ்ந்து சோகமாய்ப் போனோம்
துணிந்தவூர் கொக்கட்டிச்சோலை வாழும்
துயர் துடைக்கும் ஈஸ்வரனே அருள் செய்வாயே.

ஏ. ஏமாந்தோம் இழந்திட்டோம் எல்லாம் இங்கே
ஏராளம் மக்களையும் பறி கொடுத்தோம்
தாராள வார்த்தைகளால் கெஞ்சிக் கேட்டோம்
தயங்காமல் கூடியும் வாழ்ந்து பார்த்தோம்
தரணியிலே தலை நிமிர காலம் இல்லை
தரம் கெட்டு தமிழ் அன்னை வாடுகின்றாள்
தமிழ்கமழும் கொக்கட்டிச்சோலை வாழும்
தான்தோன்றீ நாயகனே துணை செய்வாயே.

ஐ. ஐயனே எமதினத்தைக் காத்திடையா
ஆதரித்து அன்புடனே அரவணைப்பாய்
கண்ணீரைச் சொரிவதையே நிறுத்திடுவாய்
கலங்கி வாழும் எங்களையே பார்த்திடுவாய்
கடமைகளை நாளும் செய்ய வைப்பாய்
கண்ணியமாய் நாங்கள் வாழச் செய்திடுவாயே
கல்விளார் படுவான்கரையூர் வாழும்
கங்காதரனே கண்திறந்து அருள் செய்வாயே.

ஒ. ஒற்றுமையாய் உன்னையே வணங்குகின்றோம்
ஒருபொழுதும் உன்நினைவை இழக்க மாட்டோம்
ஒழுக்கத்தை ஒருநாளும் விடவும் மாட்டோம்
ஓங்கார மந்திரத்தை நாளும் செவிப்போம்
உறுதியுடன் உழைப்பதிலும் சலிக்க மாட்டோம்
உண்மையுடன் வாழ்வதிலும் அலுக்க மாட்டோம்
உதயவனின் ஒளிவீசும் கொக்கட்டியூரில் வாழும்
உலகாளும் ஈஸ்வரனே அருள் செய்வாயே.

ஓ. ஓடியே ஒழிப்பதற்கு இடமும் இல்லை
நாடியே ஆதரிக்க எமக்கெவரும் இல்லை
நடுவழியில் நாளெல்லாம் தவிக்கின்றோமே
நாங்கள்தான் கண்ணீரும் சொரிகின்றோமே
கொள்கைக்கு எள்ளளவும் மதிப்பு மில்லை
கொடுமைதான் இந்நாட்டில் நடக்குதையா
மாடமுயர் கொக்கட்டிச்சோலை வாழும்
மறை நாத எமக்கு அருள் செய்குவாயே.

ஔ. ஔவைக்கு உபதேசம் செய்துவிட்ட
அருமையாம் உன்மகன் முருகனுமே
அழைத்திட்டு வந்தெம்மை தேற்றிடப்பா
அகிலத்தில் தலைநிமிர வைத்திடப்பா
அடிமையாம் விலங்குகளை உடைத்திடப்பா
அகதிகள் எங்களுக்கு இரங்கிடப்பா
ஆண்ட தமிழ் கொக்கட்டிச்சோலை வாழும்
அகிலாண்ட ஈஸ்வரனே அருள் செய்வாயே.

- சுபம் -

"சைவமும் தமிழும் வையகம் வாழ்க"

## ஆத்ம சாதனை.

*நீ எது செய்தாலும் அது ஆன்மீக சாதனைதான்.*

எங்காவது நீ போகும்போது இறைவனைக் காண்பதற்காக நீ போய் கொண்டிருக்கிறாய் என்று நினைத்துக் கொள்.

உணவு சாப்பிடும் போது, உயிர் வாழ்வதற்காக நீ உணவு உட்கொள்வதாகவும், அப்படி உயிர் வாழ்வதே இறைவனை அடைவதற்காகத்தான் என்றும் கருது.

நம்முடைய ஒவ்வொரு செயலின் மூலமும் இறைவனை அடைய முயற்சி செய்வதுதான் ஆன்மீக சாதனையாகும்.

எந்த ஒரு வேலையாவது இறைவனை அடைவதற்கு உங்களுக்கு உதவி செய்யாமல்ப் போனால் அதை உடனே விட்டு விடுங்கள்.

# தான்தோன்றீசுரர் திருப்பதிகம்

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை
(21.10.70ல் பாடப்பட்டது)

காப்பு
நேரிசை வெண்பா

இரு மதத்தான் மும்மதத்தா னென்னவே காட்டில்
ஒரு மகட்காய்த் தம்பிக்கதவும் – திருமணத்தான்
தந்தைக் கெளியேன் தமிழுமினிய மணம்
தந்தினிக்க வந்தருளுந்தான்

சந்த விருத்தம்

தேசம் வன்னிமை குருச் சங்கமுடன்
சேர்ந்து நின் திருப்பணி புதுக்கி நின்றார்
தேசமை திருவருட் சக்தியுடன்
தெரிசனம் செய்துனைத் தினம் தொழவே
மாசகல் மனத்தன்பு வேண்டி நின்றோம்
வள்ளலே எங்கள் தான்தோன்றியப்பா
ஈசனே வழி வழியுனக் கடிமை
இன்னருள் சுரந்தெமை யாண்டருளே.

மாசமும் மாரியன் திருவருள் போல்
வான் பொழிந்திடவெங்கள் வயல் விளைந்து
தேசமெலாம் செழித்தோங்க வென்றே
சிறப்பொடு பூசைகள் நடக்க வென்றே
வாசப் பூங்கொன்றை பொன்மாலை தூக்கும்
வாசலில் எங்கள் தான்தோன்றியப்பா
பூசனை கண்டு நின் பொன்னடிக்கே
புகுந்தன மெமைப் புரந்தாண்டருளே.

ஒன்பது வாசலோர் குடில் சமைத்தாய்
உயிரினை யுள்வைத்துக் காவல் காப்பாய்
இன்பமும் துன்பமும் இனிதூட்டி
இரு வினைப்பயன்படி எமை வளர்ப்பாய்
அன்புடன் அகம் புகுந்தெமை நிதமும்
ஆட்டிடுமெங்கள் தான்தோன்றியப்பா
உன்பரம் யாமெழு பிறவியினும்
உயிர்க் குயிரே யெமை யாண்டருளே.

அப்பனும் அம்மையு மாகி நின்றே
அல்லல் துடைத்தெமையாள வென்றே
செப்பரும் திருவருட் கயிறு கொண்டெம்
சிந்தை யெனுங் கட்டாக் காலிமாட்டைத்
தப்பறக் கட்டியே படிய வைத்த
சற்குருவான தான்தோன்றியப்பா
எப்பொழுதும் உனை நினைந்துருகும்
இதய மளித்தெமை யாண்டருளே.

பார்முழுது மொரு தேர் செயினும்
பரம் பொருளுனக் கிடம் போதுமோதான்
ஆர்வமுடனெமது சிறு தேரில்
அம்மையுடனமர்ந்த அருளுருவே
ஏர் வளம் செழிக்கவோ இடபமூர்ந்தாய்
எம் பெருமானே தான்தோன்றியப்பா
சீர் வளம் மரகதம் பதித்த பொன்னே
செல்வமே எமைப் புரந்தாண்டருளே.

திருவருள் நிலையென நாத்திகரும்
    தெளிந்துண்மை கண்டுனைத் தொழுதெழவே
திருமுன்னர் நின்றகல் ஆனேறும்
    தின்று புல் அசை போடச் செய்பரனே
ஒரு முதலே எல்லா மதங்களுக்கும்
    ஒளி தரும் எங்கள் தான்தோன்றியப்பா
திரு நிறை தேவியும் நீயுமெங்கள்
    சிறு குடில் தொறு மெழுந்தாண்டருளே.

உண்மையும் ஒளியும் நல் இன்பமுமாய்
    ஓம் எனும் ஒலி வடிவாகி நின்றாய்
பெண்மையும் ஆண்மையுமாயுலகில்
    பேரன்பு நெறியினை விளக்கி நின்றாய்
தன்மையும் மென்மையுஞ் செய்தருளும்
    தந்தையே எங்கள் தான்தோன்றியப்பா
அன்மையுஞ் சேய்மையு மாயகன்ற
    அருட்கடலே யெமை யாண்டருளே.

வில்வமும் கொன்றையும் மணம்பரப்ப
    விரும்பியேன் கொக்கட்டி மரமுவந்தாய்
முல்லையும் மருதமும் வளங்கனிந்தெம்
    வள்ளல்கள் வாழ்ந்த நல் மூதூர்கள்
செல்வமும் கல்வியும் சுக வாழ்வும்
    சிறந்திட அருள்செய் தான்தோன்றியப்பா
கல்லையும் கனிசெய்ய வல்லாயெம்
    கல்மனம் குழைத்தெமை யாண்டருளே.

சந்ததம் புதுமண மலர் சொரிந்து
    தாழ்ந்துகை மலர் குவித்தஞ்சலித்தோம்
சந்தை மலரையுந்தன் அடிமலர்க் கீழ்ச்
    சேர்ந்திடும் திடபுத்தி எமக்கருள்வாய்
கந்தமினிய தெய்வத் தமிழ் வடிவே
    தயாபரா எங்கள் தான்தோன்றியப்பா
எந்தையே எங்குல தெய்வமேயெம்
    இன்பமே எமைப் புரந்தாண்டருளே.

செந்தமிழ் மணமெங்கும் கமழ்க வென்றே
    சிவநெறி யுலகெலாந் திகழ்க வென்றே
சிந்தனைச் செல்வமும் செழிக்க வென்றே
    திருந்தியே புதுவாழ்வு தழைக்க வென்றே
வந்தனை செய்துனைத் தேவியொடும்
    வாழ்த்தினம் எங்கள் தான்தோன்றியப்பா
பந்தனை தீர் மனச் சாந்திநிலை
    பாலித் தெமையினி தாண்டருளே.

தூய விபுலாநந்தக் கலைக்கடலில்
    துளியள வுண்டதனால் இனியதமிழ்த்
தாயின் அருட்கடைக் கண்பெற்று வாழும்
    தாசன் பெரியதம்பி ஆசையினால்
தாயுமெம் தந்தையுமாகி நின்ற
    தான்தோன்றியப்பரைப் பாடுதமிழ்
தேசமெலா மறிஞர் ஆசி சொலத்
    திருவருளாலினிது வாழியவே.



# தான்தோன்றுமீசுரர் பதிகம்

க. உ. சின்னவப் புலவர் - செட்டிபாளையம்

(29-1-50ல் பாடப்பட்டது)

கைலாசம் உறைந்துமணிமேடை மீதில்
காரிகையோடமர்ந்திருக்கும் காலகாலன்
அகிலாண்டமான சிவஒளியாய் நின்றாய்
அரகரா எனும் நாமமான மூர்த்தி
பகலுகின்ற முனிஇருஷி தேவர் சூழப்
பக்கமதில் கணநாதர் மகிழ்ந்து போற்ற
தலமேவு கொக்கட்டிச்சோலை வாழும்
தற்பரனே தான்தோன்றும் ஈசாபோற்றி

கானகத்தில் வாழ்கின்ற வேடனான
கண்ணப்பனார் தனக்கு கண்ணை யீந்தாய்
மாநகரில் மாணிக்கவாசகற்கு
வன நரியை வாகனமாகச் செய்தாய்
மாடேறும் ஆசனாய் பேரெடுத்து
மார்க்கண்டன் தனக்கு வரமும் ஈந்தே
சீரேறு கொக்கட்டிச்சோலை வந்தேன்
செல்வமே தான்தோன்றும் தேவா போற்றி

கிருபைவைத்து உமையவளை யிடமேவைத்து
கெங்கைதனை தலையில் வைத்தரவம் பூண்டு
அருள்மேவும் கொன்றைமலர் மாலை ஆட
அம்பலத்தில் அசைந்தசைந்து ஆடும்தேவே
பெருமைபெற்ற அசுரர்களை அழிக்கவேண்டி
பிள்ளையெனும் வேலவரை ஏவிவிட்டாய்
அருள்மேவும் கொக்கட்டிச்சோலை வாழும்
அப்பனே தான்தோன்றும் தேவா போற்றி

கீழோகம் மேலோகம் எல்லாம் நீயே
கேட்டவரம் யாவருக்கும் கொடுப்பாய் நீயே
சாலோக சாயூசியம் அளிப்பாய் நீயே
தாங்கொணா வறுமை துயர் தீர்ப்பாய் நீயே
நாள்தோறும் உன்கோயில் பழிபடுத்து
நல்லவரம் பெற்றதனால் நாங்கள்தாமும்
தாள்வில்லா கொக்கட்டிச்சோலை வாழும்
சங்கரா தான்தோன்றும் ஈசாபோற்றி

குஞ்சரனை ஈன்றெடுத்தாய் உலகோர் போற்ற
குமரனையும் பயின்றமரர் பகையைத் தீர்த்தாய்
கஞ்சனைக் கொன்றோன் உனைத்தேடிக்
காணவொண்ணாப் பரஞ்சோதியாகி நின்றாய்
செஞ்சரணம் பணியன்பர் முத்தர் முன்பு
ரிஷி முன்பும் தோன்றியே அருளைக்காட்டி
தஞ்சமென்று கொக்கட்டிச்சோலை வந்தேன்
தற்பரனே தான்தோன்றும் ஈசாபோற்றி

சூரிய வேலாயுதனார் வனத்தில் சென்று
குறமாதை தனக்குறவாக்கிக் கொண்டு
வீரியத்தோடேகி வைகை அடைக்கவேபோய்
மீனவன் கை அடிபட்ட வெட்கத்தாலே
பாரியதோர் வில்லதனால் அடிபட்டேங்கி
பாசுபதம் ஈந்தனையோ பார்த்தனுக்கு
காரியமாய் கொக்கட்டிச்சோலை வந்தேன்
கடவுளே தான் தோன்றும் ஈசாபோற்றி

செங்கைதும்பை மணிபூண்டு மதனைச் சுட்டாய்
        கொக்கரித்தாய் முப்புரத்தை தகனம் செய்தாய்
பங்கமுறு சமணரை வெற்றி கொண்டாய்
        பகருகின்ற சுந்தரருக்கு அருளே செய்தாய்
எங்கெங்கும் பரந்த ஒளியாகி நின்றாய்
        இடர் அகற்றி அடியார்க்கு இரங்கும் தேவே
தங்குகின்ற கொக்கட்டிச்சோலை வந்தேன்
        தற்பரா தான்தோன்றும் ஈசாபோற்றி

கேட்டவரம் கொடுப்பதற்கு நீயிருக்க
        கிட்டவந்து பெறுவதற்கு நானிருக்க
வாட்டமுடன் கொக்கட்டிச்சோலை தன்னில்
        மாதேவா உன் சந்நிதியை வலமாய் வந்து
பார்த்தபொழு துமையோடு நீயிருக்க
        பக்கமெலாம் ஆலாத்தி ஏந்திநிற்க
காத்திருந்து கொக்கட்டிச்சோலை வந்தேன்
        கடவுளே தான்தோன்றும் ஈசாபோற்றி

கைதனிலே சூலமொடு மானைக்கண்டேன்
        கருணைபுரி மூன்று திருக்கண்ணைக் கண்டேன்
மெய்யிலே திருநீற்று ஒளியைக் கண்டேன்
        வெண்புலித்தோல்உடைகண்டேன் மேனிகண்டேன்
பையரவும் சடைமுடிமேல் மாலைக்கண்டேன்
        உன்பதிவந்து போற்றும் அடியார்கள் கண்டேன்
உய்யவந்தேன் கோக்கட்டிச்சோலை தன்னில்
        உத்தமனே தான்தோன்றும் ஈசாபோற்றி

கொடிகண்டேன் முடிகண்டேன் கோவில் கண்டேன்
        குலவுதிருக் கோபுரத்தின் அழகைக் கண்டேன்
படியேறி மணி மதில் சூழ் வீதிகண்டேன்
        பக்கமெலாம் அமர்ந்திருக்கும் கோவில் கண்டேன்
வடிவுடைய சித்திரத்தேர் மீதில் ஏறி
        மங்கை சிவகாமியுடன் வரவும் கண்டேன்
கருதரிய கொக்கட்டிச்சோலை வாழும்
        கடவுளே தான்தோன்றும் தேவாபோற்றி

கோடொடித்து மலைதன்னில் வரையச் சொல்லி
        குஞ்சரனை ஈன்றெடுத்தாய் உலகோர் போற்ற
ஆடடித்துப் பலிகொள்ளுங் காளிதன்னை
        அங்கங்கு நிறுத்திவைத்தாய் உன் அருளைக்காண
தேடரிய வீரனைக் கொன்றே
        தக்கன்யாகத்தை அழிக்கச் செய்தாய்
தேடரிய பூஞ்சோலை புகுந் தொளித்தாய்
        சோதியே தான்தோன்றம் ஈசாபோற்றி

கௌவை தமிழ்மொழிமாதர் குரவையார்ப்ப
        கவிவாணர் புகழ் தோற்றிக் கவிகள் பாட
வைவிழிசேர் அரம்பையர்கள் நடனமாட
        மாதவத்தோர் நின்று மலர் சொரிந்துபோற்ற
கைவளையலிடுமாதர் சூலமேந்தி
        கவரியிருபக்கமும் அசைந்து தோற்ற
தேடரிய கொன்றை மலர் மாலை சூடும்
        சிவ சிவா தான்தோன்றும் ஈசாபோற்றி

இக்கணமே உன்பதியில் வீழ்ந்து
        இரவு பகல் அழுத சத்தம் கேளாதோ
தக்க சிறுத் தொண்டருக்கு மகவைக் கொன்றதினால்
        மேலான பதவி தன்னைக் கவரச் செய்தாய்
எக்காலமும் பூசைதவறா வண்ணம்
        இறைஞ்சும் அடியார்களுக்கு இரங்கும் தேவே
பக்குவமாய் உனைவந்து பணிந்து நின்றேன்
        பராபரனே தான்தோன்றும் ஈசாபோற்றி

# தான்தோன்றீஸ்வரர் பதிகம்



க. கணேசமூர்த்தி குருக்கள்,
மகிழடித்தீவு தேவஸ்தானம்.
கொக்கட்டிச் சோலை.

1. அத்தனே கோவே அறிவே மறைப் பொருளே
சுத்தனே யேகச் சுடரே அருட் கடலே
நித்தனே கோவேறு நிர்மலனே நான் அடியேன்
சித்தனே தான் தோன்றுமீசா அடிபோற்றி.

2. நிலமே கோமேதக மணியே நித்திலமே
ஆலமே கண்டத் தமுதே உயிர்க்குயிரே
தூலமே ஞானச் சுடரே அறிவுடையோர்
சீலமே தான் தோன்றுமீசா அடிபோற்றி.

3. பாரே வளியே வெளியே படுகனலே
வாரே கதிரே வச்சிரமே ஈசன் மதியே
காரேறு கண்டக் கனியே சிவக் கடலே
சீரேறு தான் தோன்று மீசா அடி போற்றி.

4. ஒன்றே இரண்டே ஒருமூன்றே யோரைந்தே
நன்றே பிறிதே நயனமே கண் மணியே
குன்றே யலைகடலே கொற்றமே மாடேறும்
தென்றலே தான்தோன்று மீசாஅடி போற்றி.

5. வானாய் நிலனாய் வளியாய் யெமதுயிராய்
காணா விதமாகி நாதாந்தப் பிரமமுமாய்
தானாய்ச் சகலமுமாய் தாபரமாய்ப் பாரனிக்கும்
தேனோடு தான் தோன்று மீசா அடி போற்றி.

6. வாடும் பருவ மருங்குழலாள் கண்டுவப்ப
ஆடும் பிரானே அமரர் பெருமானே
பாடுமிருவர் பயில் செவியோ னிருவர்
தேடு புகழ்தான் தோன்று மீசா அடி போற்றி.

7. பன்றியாய் மாயன் பணிதாளினைத் தேட
அன்று பிரமன் அன்னமாய் முடி தேட
நின்ற நெடுஞ் சுடரே நிலமிடற் றோனே
கொன்றை யணி தான் தோன்றுமீசா அடி போற்றி.

8. காலாந்தகனே கடவுளே தத்துவத்தில்
மேலாம் பொருளே விளக்கே விளக்கொளியே
நாலாம் பதமே நகையாம் படையானே
சேலாலும் தான்தோன்றுமீசா அடி போற்றி.

9. தந்தையே தாயே தமரே அடி போற்றி
எந்தையே கண்ணே யிறையே அடிபோற்றி
முந்தையே ஞானமுதலே அடி போற்றி
சிந்தையே தான்தோன்று மீசா அடி போற்றி.

10. ஆதியே போற்றி அரனே அடிபோற்றி
சோதியே போற்றி சுடரே அடிபோற்றி
பாதியே போற்றி பரனே அடி போற்றி
தீதறுத்தாள் தான் தோன்றுமீசா அடி போற்றி.

# திருத்தான்தோன்றீசுவரர் பதிகம்

ந. நடராஜா - M. A.
*பீடாதிபதி, தேசியகல்விக் கல்லூரி, மட்டக்களப்பு*

கிழக்கிலங்கையிலே உள்ள மிகப்பழமை பெற்ற சிவத்தலம் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீசுவரர் தலம். இயற்கையழகும் பொலிவும் கொண்டமைந்த இத்தலம், ஈழத்துப் பாடல் பெற்ற தலங்களோடு ஒப்பிடக்கூடிய பழமையும், பெருமையும் மிக்கது. கொக்கட்டி மரத்தின் அடியிலே தானாகத் தோன்றிய சுயம்பு இலிங்கத்தினை வைத்து, கலிங்க தேசத்து அரசரால் கட்டப்பட்டது இக்கோயில். அண்மையில் புனருத்தாரண வேலைகள் நடைபெற்று புதிய பொலிவுடன் விளங்குகிறது. அத்தலத்தில் வெளிப்படும் "சிவம்" என்னும் பரம்பொருளை வணங்கி, பல்லாயிரம் மக்கள் கடைத்தேறினர். அத்தகைய மாபெரும் பொருளை, நாமும் மனம், மொழி மெய்களால் வணங்கித் தீவினை அகலப் பதிகம் பாடித் துதித்து நிற்பாம்.

இராகம் - பூபாளம்

01) தளிர்த்திடும் சோலை தனிலுளம் விரும்பித்
தண்டமிழ்ப் பதிதனை மேவி
விளித்திடும் அறிவார் விண்ணவர் காக்க
வீரரைப்புவிதனிற் புரந்தார்
செழித்திடும் வயல்கள் செறிந்திடச் சோளச்
சேனைகள் பல மலிந்தோங்க
கொழித்திடும் செல்வம் குடியோடு வளரக்
கொக்கட்டி மரத்தமர்ந்தாரே.

02) உள்ளுடை உளத்தின் உறுகளிம் பகற்றி
உறுதுணையாகவே இருந்தே
தெள்ளுடை தமிழின் தீஞ்சுவை நுகரத்
திறத்தொடும் கூடலிற் சேர்ந்தார்
முள்ளுடையாலை முழுநிழல் தனிலே
முழுப் பெருங் கருணையுங் கொண்டே
கள்ளுடை மலரின் சோலையின் நாப்பண்
கொக்கட்டி மரத்தமர்ந்தாரே.

03) வறி தெனக்கூறி வகை தெரியாது
வருமவர்க் கருணையையீந்து
செறிவயல் சூழ்ந்து சிறப்பொடு மிளிரச்
சிந்தையை எம்மிடம் வைத்தார்
நெறியொடு நின்ற நிறையுடைமாந்தர்
நித்தமும் தொழுதெழுதேத்தக்
குறியெனும் சூலம் கொண்டவரிங்கே
கொக்கட்டி மரத்தமர்ந்தாரே.

04) எத்திசைதனிலும் இருப்பிடம் கொண்ட
எந்தையர் கருணையங்கடலை
பக்தி கொண்டேத்தும் பல திற மாந்தர்
பணிந்தனர் வணங்கினர் நிதமும்
இத்தலந்தனிலே வேட்டுவரமைத்த
இன்புறு யந்தரின் கீழே
முத்தமிழ்க் கடவுள் கடிமண மலர்சூழ்
கொக்கட்டி மரத்தமர்ந்தாரே.

05) இனித்தசொல் மாந்தர் உடலிடம் கொண்டார்
அருவமாய் அகிலமதானார்
தனித்ததோர் ஓசை ஒளியெலாமானார்
பண்டிதர் பாமரர் அடியார்
பனித்த செஞ்சடையின் தவசிகள் ஏத்த
தான்தோன்றி ஈஸ்வர முவந்தே
குனித்த பேரழகுக் கூடலம்பதியார்
கொக்கட்டி மரத்தமர்ந்தாரே.

06) நித்தமும் அடியார் நிரை நிரை வணங்க
நிலைபெறு மாரியு மளித்தே
முத்தர்கள் பணிந்து முறையொடு தொழவே
முழுப்பெரும் கருணையு மீந்தார்
சித்தர்கள் போற்ற நித்தமும் பொலிந்து
சிறப்பொடு ஈஸ்வர முவந்தே
சத்திகள் வல்லார் தனிப்பெரும் பொருளாய்க்
கொக்கட்டி மரத்தமர்ந்தாரே.

07) தடைகளை நீக்கித் தரணியைப் புரக்கத்
தலைவராயமைந்த வெம்மரனார்
மடைவிரி உணர்வு தன்வயமுடையார்
மதுமலர் பொலிலுறை கடவுள்
முடைகளை நீக்கி முத்தியை யளிக்க
முள்ளலஞ் சோலையு முவந்தே
தடையறு இன்பம் கொண்டவரிங்கே
கொக்கட்டி மரத்தமர்ந்தாரே.

08) பொலிவொடு தோன்றும் பூம்பொழில் விரைசேர்
பொற்புறு ஈஸ்வரந்தனிலே
கலியுகமதனில் கணக்கறு மாந்தர்
கடுவினை ஒழித்தருள் தரவும்
கலிங்கரு முவந்தே கருத்தொடு கோயில்
கட்டிட அதில் உவந்திருந்தே
கொலுவொடு மக்கள் வணங்கிட விரும்பிக்
கொக்கட்டி மரத்தமர்ந்தாரே.

09) தருகிடும் வீணர் செருக்கினை யழித்துத்
தண்ணளி புரிந்த வெங்கடவுள்
பெருகிடும் தாந்தா மலைதனில் உறையும்
பெருந்திரு முரு கரைத்தந்தார்
முருகொடு திகழும் உடம்பினரான
மூத்தவர் பெரியவர் புனிதர்
குறுகிடும் மாந்தர் குறைகளை யகற்றக்
கொக்கட்டி மரத்தமர்ந்தாரே.

10) சிலையெனச் சமைந்த சிறு எருதெழுந்தே
சீருறு மறுகினை மேய்ந்தே
நிலையறு பாசம் நீங்கியோர் புகழை
நீள் நிலத்தோர் களுக்காட்ட
தலை நெறியுடையார் தன்னல மிழந்தார்
தரணியில் முற்றுமே யுணர்ந்தார்
நிலையுடைக் கோயில் நிலத்தவர் வணங்க
கொக்கட்டி மரத்தமர்ந்தாரே.

11) சிறந்திடக்களனி சிலர்த்திட மலர்கள்
செறிந்திடும் மக்களும் சூழ
நிறையுடை செல்வம் நெறியுடை வாழ்வு
நிகரற அருளு மெங்கடவுள்
குறையிரத்தோர்கள் குறைதனையகற்றக்
கொக்கட்டிச் சோலையு முவந்தே
உறைந்தவர் தன்னை உருகியே வணங்க
மறைந்திடும் கொடுவினை யறவே.

## ஐந்து முகம் கொண்ட சிவபெருமான்

ஐந்து முகம் (பஞ்ச முகம்) கொண்ட சிவபெருமான் நேபாளம், காசி, காளஹஸ்தி, திருவானைக்கா, சித்தேஸ்வர்மகாதேவ் ஆகிய இடங்களில் அருள்பாலிக்கிறார்.

### நமது உடல் ஓர் ஆலயம்

| மனித உடலமைப்பு | கோயில் அமைப்பு |
| --- | --- |
| தலை | கர்ப்பக்கிரகம் |
| கழுத்து | அறிகுறி மண்டபம் |
| மார்பு | மகா மண்டபம் |
| வயிறு | ஸ்தம்ப மண்டபம் |
| தொடை | சுப மண்டபம் |
| முழங்கால் | முதல் வாசல் |
| கால்கள் | கலியாண மண்டபம் |
| | உற்சவ மண்டபம் |
| பாதங்கள் | கோபுர வாசல் |

உ
*சிவமயம்*

# கொக்கட்டிச் சோலைத் தான்தோன்றி ஈசுரர் திருவூஞ்சல்

பண்டிதர். செ. சிவப்பிரகாசம்

திருச்சிற்றம்பலம்

காப்பு — ஆசிரிய விருத்தம்

திருவளரும் ஈழத்துக் குணபாலில் சேர்ந்துள்ள
சிறப்பார்ந்த மட்டுநகர் சேர்நல்ல திருப்பதியாம்
மருவளருஞ் சோலை செறி மாண்புமிகு நற்றெய்வ
மணங்கமழுங் கொக்கட்டிச் சோலைதனில் மாண்புடனே
திருவளரும் கோலமுடன் சிவலிங்கப் பெருமானாய்ச்
சிறப்புடனே தான்தோன்றி ஈசுரராய் இருப்பவர் மேல்
மருவளருந் திருவூஞ்சல் மாண்புடனே பாட ஒற்றை
மருப்புடைய விநாயகர்தாள் மனநிறைந்து காப்பாமே.

## திருவூஞ்சல்

சீராரும் வேதங்கள் கால்க ளாகச்
சிறப்பாரும் ஆகமங்கள் விட்ட மாக
பேராகுங் கலைபலவுங் கயிற தாக
பேசரிய பிரணவமே பலகை யாக
ஏராரும் மந்திரங்கம் பலம தாக
எழிலாக அமைந்ததிரு ஊஞ்சல் மேவி
தாராருந் திருக்கோல முடனே தோன்றுந்
தான்தோன்றி ஈசுரரே ! ஆடீ ரூஞ்சல் ! (1)

சந்திரனுஞ் சூரியனுங் குடைகள் தாங்கத்
தகுவாயு தேவர் நல கவரி வீச
சுந்தரஞ்சேர் வருணனவன் துதித்து நல்ல
தூயதிரு ஆலவட்டஞ் சுமந்து நிற்ப
இந்திரனும் தேவர்களும் இனிது மேவி
இன்புடனே புடைசூழ்ந்து வடந்தொட்டாட்ட
சந்ததமும் எமைப்புரக்கத் தரணி மேவும்
தான் தோன்றி ஈசுரரே ! ஆடீரூஞ்சல் ! (2)

திக்கெட்டுந் திகழ்நல்ல தேவர் போற்றச்
சிறப்புடனே கொக்கட்டிச் சோலை மேவி
பக்கமெலாம் வாழ்கின்ற அடியார் போற்றப்
பகர்வரிய திருவருளை அவர்க்கு நல்கி
மிக்கசுத்தம் கருணைபொழி மேன்மை யோடும்
மேதினியார்க் கருளவென மேவி நல்ல
தக்கதிரு வருள்பொழியுந் தகைமை சான்ற
தான்தோற்றி ஈசுரரே ! ஆடீ ரூஞ்சல் ! (3)

ஆன்மாக்கட் கருளவென அவனி மீது
அமைந்தகுரு லிங்கசங் கமங்க ளுள்ளே
வான்போற்றும் லிங்கவுரு வகைகள் தம்முள்
வருகின்ற பரார்த்தமொடு இட்டந் தம்முள்
கான்கொன்றை பாம்பணிந்த கடவுள் தங்கும்
கருதும்ப ரார்த்தத்து முதன்மை சான்ற
தான்மருவு சுயம்புலிங்க ரூபி யாய
தான்தோன்றி ஈசுரரே ! ஆடீ ரூஞ்சல் ! (4)

சொல்கின்ற பரார்த்த – லிங்கம் ஐந்தி னுள்ளே
சுயம்புலிங்க உருவேநன் மேன்மை யாகும்
நல்லதிரு சுயம்புலிங்கம் நானி லத்தே
நாடரிய திருவருளை நன்கு நல்கும்
பல்லருள்சேர் லிங்கமெனப் பலரும் பாடப்
பாங்காய கொக்கட்டிச் சோலை மேவி
நல்லருள்செய் நாயகனே ! நவிலு மெங்கள்
தான்தோன்றி ஈசுரரே ! ஆடீ ரூஞ்சல் ! (5)

நிலனாகி நீராகித் தீயு மாகி
நீள்விசும்பு தானாகிக் காற்று மாகி
பலவாய பொருளாகிப் பரந்து நிற்கும்
பகவானே ! பல்லுயிர்கட் கருளை நல்கப்
பலகோயில் கொண்டுலகு பணிந்து போற்றப்
பாங்குடனே ஆங்காங்கு வாழ்ந்து நிற்பீர்
தலமாய கொக்கட்டி தனிலும் வாழ்வீர்
தான்தோன்றி ஈசுரரே ! ஆடீ ரூஞ்சல் ! (6)

சித்தாந்த சைவத்துள் திளைத்த மேலோர்
சிந்தனைக்கும் எட்டாத சிவனே எங்கள்
பத்தியெலாம் பக்குவமா யோங்க நல்ல
பலமரஞ்சேர் கொக்கட்டிச் சோலை தன்னில்
எத்தினமும் எமையாள என்று எண்ணி
எய்தரிய சுயம்புவுரு எய்தி நின்றீர்
தத்தமது பத்தியினால் தரணி போற்றத்
தான்தோன்றி ஈசுரரே ! ஆடீ ரூஞ்சல் ! (7)

எண்ணுமி டபதேவர் புதுமை தோன்ற
எய்தரிய ஈசுரராம் தன்மை தோன்ற
மண்ணிலுளோர் தாம்வந்து வணங்கல் தோன்ற
மருவினிய மலர்ப்பாத அருளுந் தோன்ற
கண்ணிலுள மணிபோலக் கருதல் தோன்ற

காசினியோர் துதிக்கின்ற துதியுந் தோன்ற
தண்ணிலவு சடைக்கணிந்த தகைமை தோன்ற
தான்தோன்றி ஈசுரரே ! ஆடீ ரூஞ்சல் ! (8)

கற்றைசெறி செய்யசடா மகுடம் ஆட
கண்மூன்று சேருந்திரு வதனம் ஆட
பற்றியயல் பாம்பணிந்த புயமும் ஆட
பகவர்வரிய திருவருள்செய் கரங்கள் ஆட
கற்றவர்கள் போற்றுதிருகண்டம் ஆட
கருதநல திருவடிகள் கலந்தே ஆட
நற்றவர்சேர் கொக்கட்டிச் சோலை நண்ணும்
தான்தோன்றி ஈசுரரே ! ஆடீ ரூஞ்சல் ! (9)

மங்கையொரு பங்கினரே ! ஆடீ ரூஞ்சல்
மாதேவா ! மகா தேவா ! ஆடீ ரூஞ்சல்
கங்கையணி சடையினரே ! ஆடீ ரூஞ்சல்
கலையறியும் புலமையரே ! ஆடீ ரூஞ்சல்
கொங்குலவு கோதையரே ! ஆடீ ரூஞ்சல்
கொக்கட்டிச் சோலையரே ! ஆடீ ரூஞ்சல்
தங்கருணை தான்தோன்ற ஆடீ ரூஞ்சல்
தான்தோன்றி ஈசுரரே ! ஆடீ ரூஞ்சல் ! (10)

## வாழி !

திருவாரும் வேதங்கள் வாழி ! வாழி !!
சிறப்பார்ந்த ஆகமங்கள் வாழி ! வாழி !!
குருவனருஞ் சிவனடியார் வாழி ! வாழி !!
குலவுதிரு ஐந்தெழுத்தும் வாழி ! வாழி !!
கருதினிய ஆனினங்கள் வாழி ! வாழி !!
காக்கின்ற செங்கோன்மை வாழி ! வாழி !!
தருநிறையுங் கொக்கட்டி வாழி ! வாழி !!
தாதோன்றி ஈசுரரே ! வாழி ! வாழி !! (11)

## எச்சரிக்கை

தண்ணென்றிடு சசிசேர்திருச் சடையாய் !
– எச்சரீக்கை !
சாரும்மவர்க் கருளீந்திடு தலைவா !
– எச்சரீக்கை !
எண்ணும்நல அடியாரிடர் களைவாய் !
– எச்சரீக்கை !
ஈசனென எங்கும்நிறை பரனே !
– எச்சரீக்கை !
வானம்புவி பலவுந்தொழ வல்லாய் !
– எச்சரீக்கை !
மருவுந்திரு வருள்தந்திட வல்லாய்!
– எச்சரீக்கை !
ஈனந்தரு பிறப்போடிறப் பில்லாய் !
– எச்சரீக்கை !
எவருந்தொழத் தேரின்மிசை வருவாய் !
– எச்சரீக்கை !
காமன்தனை அழித்தேயருள் கண்ணா !
– எச்சரீக்கை !
கருதும்பல ரிடர்நீக்கருட் கண்ணா !
– எச்சரீக்கை !
மாமனென நின்றோன்தனை மாய்த்தாய் !
– எச்சரீக்கை !
மகிழும்படி அவர்க்குமருள் மலர்ந்தாய் !
– எச்சரீக்கை !
மண்ணோர்தொழு மருந்தேமகா தேவா !
– எச்சரீக்கை !
மாலும்பிர மனுமறி யாதாய் !
– எச்சரீக்கை !
தண்ணார்பொழில் கொக்கட்டிவாழ் தலைவா !
– எச்சரீக்கை !
தான்தோன்றியீ கரரேயருள் தருவீர் !
– எச்சரீக்கை ! (12)

## பராக்கு !

உலகுதொழ வருமுமைசே ரொருவா ! – பராக்கு !
ஓதரிய மெய்ஞ்ஞான ஒளியே ! பராக்கு !
தலமுழுதுந் தொழவருளுந் தலைவா ! பராக்கு !
சங்கர ! சதாசிவ ! சம்பு ! பராக்கு !
இலகுதிரு விளையாடல் புரிவாய் ! பராக்கு !
ஈசனென எவருமறி இறைவா ! பராக்கு !
தலமருவு கொக்கட்டித் தலைவா ! பராக்கு !
தான்தோன்றி ஈசுரரே ! அருள்வீர் ! பராக்கு ! (13)

## லாலி !

மலைமகளின் தலைவனவன் லாலி ! சுபலாலி !
மங்களங்கள் தந்தருள்வன் லாலி ! சுபலாலி !
நிலைபெறுநல் முதல்வனவன் லாலி ! சுபலாலி !
நீலநிற மணிகண்டன் லாலி ! சுபலாலி !
கலையனைத்தும் அருளுபவன் லாலி ! சுபலாலி !
கற்றோர்தம் மனத்துறைவான் லாலி ! சுபலாலி !
தலைவனென உலகுதொழும் லாலி ! சுபலாலி !
தான்தோன்றி ஈசுரரே ! லாலி ! சுபலாலி ! (14)

## மங்களம்

திருவாகு மைங்கரற்கு ஜெய மங்களம் ! – நல்ல
சித்திபுத்தி நாயகர்க்குச் சுப மங்களம் !
சிவனெனவே நிற்பவர்க்குச் சேருமுமை பாகருக்கு
உவமனிலா முருகனுக்கும் ஓதுமைர வர்தமக்கும்
பவமவையே போக்குநல பத்திரைதன் கேள்வருக்கும்
சிவனருள்சேர் தேவர்கட்கும் தெய்வங்கள் யாவருக்கும்
மங்களம் ! ஜெய மங்களம் !! மங்களம் ! சுப மங்களம் !
*மங்களம் !   மங்களம் !!   மங்களம் !!!*

# இராஜ கோபுரம் அமைத்த
# அமரர் திரு. பா. மயிலிப்போடி ஜே.பி

மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் பண்டாரியா வெளிக் கிராமத்தில் பாலிப்போடி நாகாத்தை தம்பதிகளுக்கு 1916ஆம் ஆண்டு ஆனந்த வருடம் வைகாசித் திங்கள் பதினான்காம் நாள் அமரர் முன்னாள் கி.த திரு. பா. மயிலிப்போடி அவர்கள் பிறந்தார். இவருக்கு நான்கு சகோதரர்களும் ஏழு சகோதரிகளும் உடன் பிறப்புக்களாவர். இவர் தம் குடும்பத்திற் கனிஷ்ட புத்திரராவர்.

இவர் தனது ஆரம்பக்கல்வியைப் பண்டாரியாவெளியிற் கற்றுப் பின் காத்தான் குடி மத்திய மகாவித்தியாலத்திலும் தொடர்ந்தார். தம் வாழ்க்கையை நெறிப்படுத்தப் போதிய கல்வியைப் பெற்றுக் கொண்ட அவர் தம் குலத்தொழிலாம் கமத்தொழிலை மனமுவந்து தெரிவு செய்து கொண்டார். செய்யுந் தொழிலே தெய்வமென மதித்து நல்ல செயற்திட்டத்தை வகுத்து கமத் தொழிலைச் செய்து பெருவிளைச்சலைப் பெற்று இப்பிரதேசத்தின் சிறந்த செயல் வீரராக, பொருளாதர வசதிகள் சகலதும் படைத்தவராக வாழ்ந்தார்.

மனிதனை மனிதன் மனிதனாக மதிக்க வேண்டும் என்ற அடிப்படையில் சகலரையும் மதித்து உபசரிப்பதில் அவருக்குநிகர் அவரேதான். எல்லா நற்குணங்களும் நிரம்பப் பெற்ற இவர் தனது இருபத்தேழாவது வயதில் அரசடித்தீவு சின்னவப்போடி தங்கநாச்சி தம்பதிகளின் சிரேஷ்டபுத்திரி சௌபாக்கியம் என்பவரைத் திருமணஞ் செய்தார். இல்வாழ்க்கையின் சிறந்த பயனாக, சிவகாமியம்மை, புவனேஸ்வரி, கோபால ரெத்தினம், யோகேஸ்வரன் என்ற நான்கு பிள்ளைச் செல்வங்கள் கிடைத்தன.

அரசடித்தீவுக் கிராமத்தலைவராக இருந்து ஓய்வு பெற்றபின் சமூகத் தொண்டு செய்வதில் ஈடுபட்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும், தாந்தமலை ஸ்ரீ முருகப் பெருமான் ஆலயப் பரிபாலன சபைத் தலைவராகவும்,பண்டாரியாவெளிநாக தம்பிரான் ஆலய பரிபாலன சபைச் செயலாளராகவும், பொருளாளராகவும், அரசடித்தீவு விக்கினேஸ்வரர் ஆலயத்தின் தலைவராகவும் சேவை செய்தார். அப்போதுதான் 1979 இல் கொக்கட்டிச் சோலை ஸ்ரீ தான் தோன்றீஸ்வரர் ஆலய இராஜ கோபுரத்தைதான் சொந்தச் செலவில் கட்டித் தருவதாகக் கூறி தேசமகாசபைக் கூட்டத்தில் அங்கீகாரம் பெற்றுக் கட்டிடத்தைக் கட்டி முடிவுறும் தறுவாயில் 1993.01.24 ஆந்திகதி இறைவனடி எய்தினார்.

இப்பெரியார் விட்டுச் சென்ற புனிதமான பணியை அவரது குடும்பத்தினர் தொடர்ந்து முடித்துத் தந்திருக்கின்றனர். இவ்வாலயத்தின் பெருஞ் சிறப்பிற்கு இவர்களால் அமைக்கப்பட்ட இராஜ கோபுரம் முக்கிய பங்களிப்புச் செய்கின்றது.

ஆலய பரிபாலன சபை,
ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம்

# ஸ்ரீதான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் பரிவார தெய்வங்களின் ஆலயங்களை புனரமைத்த பேரன்புக்குரிய மெய்யடியார்களின் விபரங்கள்

1. விநாயகர் ஆலயம் :

ஆரம்பகாலத்தில் மட்/முதலை குடாவைச் சேர்ந்த அமரர் பாலிப்போடி அவர்கள் ஆலயத்தை நிர்மாணித்துள்ளார். பின்பு அன்னாரின் மகன் திரு. பா. சின்னத்தம்பியவர்கள் சில திருத்தங்கள் செய்து 1947ம் ஆண்டில் கும்பாபிஷேகம் செய்ய உதவியுள்ளார். மேலும் 1978ம் ஆண்டில் ஏற்பட்ட சூறாவளியை அடுத்து முற்றாக இடித்து அன்னாரின் சந்ததியினர் பெரிதாகவும், அழகாகவும் நிர்மாணித்து ஆலய பரிபாலன சபையிடம் ஒப்படைத்துள்ளனர்.

2. முருகன் ஆலயம் :

இதனைப் படையாண்ட குடி மக்கள் தனிமுருகன் ஆலயமாகக் கட்டி முன்பு அன்பளிப்புச் செய்துள்ளனர். பின்பு 1978ம் ஆண்டு வீசிய சூறாவளியை அடுத்து முற்றாக இடித்து, அவர்களே முன்பை விட அழகாகவும் பெரிதாகவும் புனர்நிர்மானஞ் செய்து வள்ளி, தெய்வானை சமேத முருகப் பெருமானைப் பிரதிஷ்டை செய்து ஆலயத்துக்கு ஒப்படைத்துள்ளனர்.

3. விஷ்ணு ஆலயம் :

இத்திருப்பணியினை 'உலகிப் போடி குடி' மக்களில் ஒரு பிரிவினராகிய "சங்கையன் கூட்டத்தார்" முன்பு தனி ஆலயமாகக் கட்டி பிரதிஷ்டை செய்திருந்தனர். பின்பு 1978ம் ஆண்டு வீசிய சூறாவளியின் போது சேதமடைந்ததை அடுத்து முற்றாக இடித்து அவர்களே முன்பை விட அழகாக புனர்நிர்மாணம் செய்து பூதேவி, இலட்சுமி சமேத நாராயணரைப் பிரதிஷ்டை செய்து ஆலயத்துக்கு ஒப்படைத்துள்ளனர்.

4. நாகதம்பிரான் ஆலயம் :

இவ்வாலயத்தை மட்/முனைக் காட்டைச் சேர்ந்த அமரர் தேவப்போடி சீனித் தம்பி உடையார் நிர்மாணித்து இதனைப் பராமரிப்பதற்கு காலபோட்ட மடுவட்டையிலுள்ள "மாவடிப்பங்கு" என்றழைக்கப்படும் நெற்காணி பதினொரு "ஏக்கரையும், ஆலய பரிபாலன சபைக்கு நன்கொடை செய்துள்ளார். முன்பு இவர் வள்ளியம்மன் ஆலயமாகவே நிர்மாணித்து ஒப்படைத்தவர் தற்போது வள்ளி, தெய்வானை முருகப் பெருமானோடு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

5. வைரவர் ஆலயம் :

காவல் தெய்வமாகிய வைரவர் ஆலயத்தை முதலைக்குடாவைச் சேர்ந்த அமரர் பாலிப்போடி சின்னத்தம்பி அவர்களே ஸ்தாபித்து முன்பு ஆலயத்துக்கு ஒப்படைத்திருந்தார். தற்போது அன்னாரின் மூத்த மகன் அமரர் சி. கனகசூரியம் குடும்பத்தவர்கள் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு அழகிய வைரவர் சிலையினையும் பிரதிஷ்டை செய்துள்ளனர்.

6. நவக்கிரக ஆலயம் :

இவ்வாலயத்தை மட்/இலுப்படிச் சேனையைச் சேர்ந்த அமரர் சின்னத்தம்பி – ஞானமுத்து அவர்கள் நிர்மாணித்து நவக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்து, இதனைப் பராமரிப்பதற்கு கன்னன்குடா காயான்மடு என்னுமிடத்தில் 10 ஏக்கர் நெற்காணியையும் ஆலயபரிபாலன சபைக்கு நன்கொடையாக ஒப்படைத்திருந்தார். தற்போது ஆலய செலவிலேயே நிர்மாணிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இவ்வாலயத்தின் மூலமே இன்றும் கூடிய வருவாய் வருவது குறிப்பிடத்தக்கது.

7. சண்டேஸ்வரர் ஆலயம் :

பூஜைகளின் முடிவில் பூஜையின் பலனைப் பெற்றுத் தருபவர் சண்டேஸ்வரப் பெருமான். இவருக்கு முன்பு ஆலயம் அமைக்கப்படாத குறையினை நிவர்த்தி செய்யுமுகமாகவும், தான்தோன்றீஸ்வரரின் மேற்கொண்ட பக்திகாரணமாகவும் மட்/முதலைக்குடாவைச் சேர்ந்த அமரர் ஆறுமுகம் – சிவஞானம் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்) குடும்பத்தினர் ஆலயம் நிர்மாணித்துச் சண்டேஸ்வரப் பெருமானைப் பிரதிஷ்டை செய்து ஒப்படைத்துள்ளனர்.

8. மணித்தூண் (வடபுறம்) :

இதனை அரசடித்தீவைச் சேர்ந்த திரு. வேலாப்போடி தம்பிராசா (தற்போது இலண்டன்) நிர்மாணித்துள்ளார். இதற்குரிய மணியாக முன்பிருந்த பழைய மணியினையேவிலை கொடுத்து வாங்கிப் பொருத்தியுள்ளார்.

9. மணித்தூண் (தென்புறம்)

இராஜகோபுரத்துக்குத் தெற்புறமாக உள்ள மணிக் கோபுரத்தை மட்/முதலைக்குடாவைச் சேர்ந்த திரு. கதிராமப்போடி. விநாயகமூர்த்தி அவர்கள் தான்தோன்றியப்பரின் மேல் கொண்ட பக்தி காரணமாகத் தனது செலவில் நிர்மாணித்து புதிய மணியும் வாங்கிப் பொருத்தியுள்ளார். தற்போது இராஜகோபுரமும் இருமணித்தூண்களும் ஆலயத்தில் மிகச் சிறப்பாகத் தோற்றமளிக்கின்றன.

# கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வண்ணக்குமாரின் வழிவகைப் பெயர் விபரங்கள்

*(இவை பல பெரியார்களிடம் இருந்து பெறப்பட்டவை. ஆலயத்தில் சரியான விபரங்களைக் கொண்ட ஆவணங்கள் இல்லை).*

அ. காலிங்கா குடி : *(இவை இற்றைக்கு 200 வருடங்களுக்குட்பட்டவை)*

1. வேலாப்போடி – (நிலாமை) திமிலை தீவு.
2. திரு. கதிராமப்போடி – நல்லதம்பி, முதலைக்குடா.
3. திரு. சி. சின்னத்தம்பி , அரசடித்தீவு.
4. திரு. மா. பணிக்கப்போடி – பண்டாரியா வெளி.
5. திரு. க. மயிலிப்போடி – ஏறாவூர்.
6. திரு. பா. வ. வி. கதிராமப்போடி, அரசடித்தீவு.
7. திரு. வே. தம்பிராசா, அரசடித்தீவு.
8. திரு. கு. வேலுப்பிள்ளை, முதலைக்குடா.
9. திரு. அ. இராசதுரை, அரசடித் தீவு.

ஆ. படையாண்டகுடி : *(இவை 80வருடங்களுக்குட்பட்டவை)*

1. திரு. சி. கதிராமத்தம்பிப்போடி, ஏறாவூர்.
2. திரு. செ. வ. வி. பண்டாரிப் போடி, கொக்கட்டிச்சோலை.
3. திரு. அழகையா, அம்பிளாந்துறை.
4. திரு. கந்தப்போடி, அம்பிளாந்துறை.
5. திரு. த. வ. வி. கதிராமப்போடி, அரசடித் தீவு.

இ. உலகிப்போடிகுடி : *(இவை 200 வருடங்களுக்குட்பட்டவை)*

1. திரு. க. கதிராமப்போடி – வேலாப்போடி கன்னங்குடா.
2. திரு. க. கதிராமப்போடி – உமையாத்தை, கன்னங்குடா.
3. திரு. இருபைத்தைந்தாப்போடி – குஞ்சித்தம்பிப்போடி, கன்னங்குடா.
4. திரு. இருபைத்தைந்தாப்போடி – அறுமக்குட்டி, கன்னங்குடா.
5. திரு. இருபைத்தைந்தாப்போடி – மாணிக்கப்போடி கன்னங்குடா.
6. திரு. கதிராமப்போடி – இருபத்தைந்தாப்போடி, கன்னங்குடா.
7. திரு. தம்பிப்போடி – சின்னத்தம்பிப் போடி, கன்னங்குடா.
8. திரு. தம்பிப்போடி – கந்தப்போடி, கன்னங்குடா.
9. திரு. தம்பிப்போடி – கதிராமப்போடி, கன்னங்குடா.
10. திரு. கதிராமப்போடி – உகமுண்டாப்போடி, கன்னங்குடா.
11. திரு. பாலகப்போடி – குஞ்சித்தம்பி, கன்னங்குடா.
12. திரு. பாலகப்போடி – நல்லதம்பி, கன்னங்குடா
13. திரு. கணபதிப்பிள்ளை – ஆறுமுகம், கன்னங்குடா.

உ

சிவமயம்

## ஸ்ரீ தான்தோனறீஸ்வரர் தேவஸ்தானத்தால்
## சிவ ஸ்ரீ சோ. சு. சந்திரசேகர குரு அவர்களுக்கு
## "சிவாகம கிரியாரெத்தினம் "
## எனும் கௌரவப் பட்டம் வழங்கிக் கௌரவித்தல்

*இலங்கை மணித்திருநாட்டின் கிழக்கு மாகாண தலைநகரான மட்டுமாநகருக்குத் தெற்கே கொக்கட்டிச்சோலையில் இறைவன் தானாகவே தனது லிங்கத்திருமேனி தரிசனமளித்து பக்த பரிபாலன செய்யும் பெருமை மிக்க ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் தேவஸ்தானத்தின் புனராவர்த்தன பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேகம் வெகுதானிய வருஷம் வைகாசித் திங்கள் 24 ஆம் நாள் (1998.06.07) ஞாயிற்றுக்கிழமை இனிது நிறைவுற்றது. இவ்விழாவிற்குப் பிரதம குருவாகத் தலைமை தாங்கி நவகுண்டபக்ஷ கும்பாபிஷேகத்தை சுருதி, யுக்தி அனுவபங்களை உபயோகித்து ஆகம முறை வழுவாது மிகச் சிறப்பாக நிறைவேற்றிய*

சிவஸ்ரீ சோ. சந்திரசேகர குரு (பாலவினாயகர் ஆலயம் – கொழும்பு 02)

*அவர்களது நற்பண்பினையும், அறிவு ஆற்றல்களையும் பாராட்டி இப்பெரியாருக்கு*

## "சிவாகம கிரியாரெத்தினம்"

*எனும் கௌரவப் பட்டத்தினை ஸ்ரீ தான்தோன்றீஸவரர் தேவஸ்தான மகா சபையினர் 1998.07.21 ஆம் திகதி மனமுவந்து அளிக்கின்றனர்.*

சுபம்


| | | |
|---|---|---|
| அ. இராசதுரை<br>வண்ணக்கர் | த.வ.வி. கதிராமப்போடி<br>வண்ணக்கர் | க. ஆறுமுகம்<br>வண்ணக்கர் |

தான் தோன்றீஸ்வரர் தேவஸ்தானம்
கொக்கட்டிச்சோலை.
1998. 07.21












# நிர்வாக உறுப்பினர்



திரு. அ. இராசதுரை (தலைவர்), திரு. சி. அகிலேஸ்வரன் அவர்கள், திரு. மாசிலாமணி அவர்கள், திரு. ந. தவபாலன் அவர்கள், திரு. மா. அமரசிங்கம் அவர்கள், திரு. த. திருநாயகம் அவர்கள், திரு. சா. கோணேஸ்வரராசா அவர்கள், திரு. இ. விநாயகமூர்த்தி அவர்கள், திரு. கி. தம்பிப்போடி அவர்கள், திரு. செ. சின்னத்தம்பி அவர்கள், திரு. க. கிருஷ்ணபிள்ளை அவர்கள், திரு. செ. ரவிநாதன் அவர்கள், திரு. வ. அற்புதநாதன் அவர்கள், திரு. சி. மயில்வாகனம் அவர்கள், திரு. செ. சந்தவனம் அவர்கள், திரு. சி. பற்குணம் அவர்கள், திரு. கி. இரத்தினசிங்கம் அவர்கள், திரு செ. ஜவகர்லால் நேரு



திரு. த. வ. வி. கதிராமப் போடி
(செயலாளர்)



திரு. க. ஆறுமுகம்
(பொருளாளர்)



திரு. அ. இராசதுரை
(தலைவர்)

# மலர்க் குழு உறுப்பினர்



திரு. பா. அரியநேத்திரன்,



திரு. க. மகேஸ்வரலிங்கம்,



திரு. க. கனகநாயகம்,



திரு. ஞா. சிவசண்முகம்,



செல்வி. க. தங்கேஸ்வரி,



திரு.க. திருநாவுக்கரசு,



திரு. க. ஆறுமுகம்,



திரு. மா. செல்வராஜா,











திரு. எஸ்வி. கதிராபப்போடி வண்ணக்கர் பிரதம குருவுக்குப் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தல்



தலைமை வண்ணக்கர் திரு. அ. இராசதுரை லிங்கம் பொறித்த தங்கப் பதக்கத்தைப் பிரதம குருவுக்கு அணிவிக்கிறார்.




சங்காபிஷேகம் முடிந்த பின்னர் திரு. பா. செல்வராஜா பிரதம குருவுக்குப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கும் முகமாக ஆரம்ப உரை நிகழ்த்துகின்றார்.



பிரதம குரு ஆசியுரை வழங்குதல்



திரு. க. ஆறுமுகம் வண்ணக்கர் (பொருளாளர்) பிரதம குருவுக்கு வழங்கப்பட்ட பட்டத்தை வாசித்து அளிக்கிறார்.



பட்டத்தை அளித்தல்

# ஆலயத்தின் புதிய தோற்றம்



ஆலயத்தின்முன்பக்கத் தோற்றம்



கர்ப்பக்கிரகம்



ஆலயத்தின் கொடிமரம்



கர்ப்பக்கிரகம்



ஆலயத்தின் முழுத்தோற்றம்



ஆலயத்தின் முழுத்தோற்றம்

# ஆலயத்தின் தோற்றம்




சித்திர வேலைப் பாடுகளால் அலங்கரிக்கப்பட்ட தரிசன மண்டபம்



சித்திர வேலைப் பாடுகளால் அலங்கரிக்கப்பட்ட தரிசன மண்டபம்



சுயம்பு லிங்கம்



புல்லுண்ட நந்தி



கொடிமரமும் பலிபீடமும்

# மலருக்கு நிதியுதவி செய்தோர்

| | |
|---|---|
| திரு. சி. விக்கினேஸ்வரன் | முதலைக்குடா |
| திரு கோ. துரைராசசிங்கம் | முனைக்காடு |
| திரு. இ. ரூபராஜ் | மகிழடித்தீவு |
| திரு. கே. விஜயகுமார் | மட்டக்களப்பு |
| திரு. கே. சிறிகாந்தன் | இலுப்படிச் சேனை |
| திரு. நா. சுந்தரலிங்கம் | அரசடித்தீவு |
| திரு. சி. உமாகரன் | முதலைக்குடா |
| திரு. கோ. அனோஜன் | ஆரையம்பதி |
| திரு. கே. சாந்தசீலன் | தேற்றாத்தீவு |
| திரு. ஆர். மனோகரன் | யாழ்ப்பாணம் |
| திரு. கே. குகதாசன் | பாண்டிருப்பு |
| திரு. கே. கனகரெத்தினம் | துறைநீலாவணை |
| திரு. வி .நித்தியானந்தன் | மட்டக்களப்பு |
| திரு. திருமதி. நமசிவாயம் | மட்டக்களப்பு |
| .திரு. ஜே. அபேரத்தின | கொழும்பு |
| திரு. கே. சுரேஷ் | கொழும்பு |
| திரு. வி. சிறிக்கந்தராசா | யாழ்ப்பாணம் |
| திரு. எம். பவனேந்திரகுமார் | யாழ்ப்பாணம் |
| திரு. ஐ. குணரெததினராஜா | கொழும்பு |
| திரு. எஸ். சுகுமார் | யாழ்ப்பாணம் |
| திரு. எஸ். மனோகரன் | யாழ்ப்பாணம் |
| திரு. எஸ். ரீ. ரவீந்திரன் | திருகோணமலை |
| திரு. ஆர். சத்தியமூர்த்தி | திருகோணமலை |
| திரு. பி. சுரேஷ் | யாழ்ப்பாணம் |
| திரு. எல். பி.டி. நந்தகுமார் | யாழ்ப்பாணம் |
| திரு. எஸ். சந்திர சொரூபன் | திருகோணமலை |
| திரு. எஸ். இந்திரபாலன் | திருகோணமலை |
| திரு. யூ. ஜெயரெத்தினம் | யாழ்ப்பாணம் |
| திரு. ஏ. சுப்பிரமணியம் | செட்டிபாளையம் |
| திருமதி. எஸ். அருணா | யாழ்ப்பாணம் |
| திரு. சுதாகரன் | யாழ்ப்பாணம் |
| திரு. எஸ். வித்தகபண்டிதன் | யாழ்ப்பாணம் |
| திரு. எஸ். நாகரெத்தினம் | கோட்டைக்கல்லாறு |

# நன்றிகளும் வாழ்த்துக்களும்

ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக சிறப்புமலர் அழகான தோற்றமும் ஆழமான நத்தும் கொண்டதாக வெளிவர அருள் பாலித்த ஆண்டவனை இறைஞ்சி இந்நன்றியுரையைத் தொடர்கின்றோம்.

சிறப்பு மலரொன்று வெளிவர வேண்டுமென்ற நன்நோக்குடன் மலர்க் குழுவைத் தேர்ந்து இப்பணியை ஒப்படைத்த தேச மகாசபைக்கும், நிருவாக சபைக்கும் நன்றிக் கடன் உடையவர்களாக இருக்கிறோம்.

இம்மலர் சிறக்க தம் ஆசிகளையும், வாழ்த்துக்களையும் வழங்கிய துறவிகளுக்கும், பெரியோர்களுக்கும் எம் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

ஆக்க பூர்வமான படைப்புக்களை எமக்களித்த பேரறிஞர்களுக்கும், கவிஞர்களுக்கும் நன்றி கூற வேண்டியது எம் பெரும் கடமையாகும்.

மலரை ஆக்குவதில் மலர்க்குழுவுடன் தோளோடு தோள் நின்றுழைத்த திரு. எஸ். நந்தகுமார் ( Ukaaye) திரு. எஸ். அகிலேஸ்வரன், அன்புமணி, திரு. எஸ். ஜெயராஜா ஆகியோருக்கு எமது உளங்கனிந்த நன்றிகள்.

மலருக்கான ஆலோசனைகளை ஆர்வத்தோடு எமக்களித்த பேராசிரியர் கா. சிவத்தம்பி, கலாநிதி சி. மௌனகுரு. இம்மலருக்கான முன்அட்டையை வரைந்து தந்த திருமதி. வாசுகி ஜெயசங்கர் ஆகியோருக்கு எமது நன்றிகள்

இம் மலர் சிறக்க வேண்டு மென்ற நன் நோக்குடன் பணவுதவி நல்கிய நண்பர்களை வாயார வாழ்த்துகின்றோம். அவர்களுக்கு மனமுவந்த நன்றிகள்

இவ்வழகிய மலரைச் சிறப்பாகவும் விரைவாகவும் அச்சிட்டுத் தந்த யுனி ஆர்ட்ஸ் அச்சகத்தாருக்கு நன்றிகளும் வாழ்த்துக்களும்

மற்றும் சகல வழிகளிலும் மலர் சிறக்க உதவிய அனைத்து அன்பர்களுக்கும் எம் இனிய நன்றிகள்.

க. திருநாவுக்கரசு
மலர்க் குழுச் செயலாளர்.

M. ARULAMBALAM
PRINCIPAL

# அன்றும்





# இன்றும்





Printed by Unie Arts (Pvt) Ltd. 48 B, Bloemendhal Road,
Colombo-13. Tele/Fax: 330195